
சப்தமில்லா ஸ்வரங்கள்
இன்னிசையா
பாகம்-2
ஸ்ரீகலா

சப்தமில்லா ஸ்வரங்கள்
இன்னிசையா
பாகம்-1
ஸ்ரீகலா


சப்தமில்லா ஸ்வரங்கள்
இன்னிசையா
பாகம்-2
ஸ்ரீகலா

சப்தமில்லா ஸ்வரங்கள்
இன்னிசையா
பாகம்-1
ஸ்ரீகலா



தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER




தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS




Download

# ஸ்ரீகலாவின் “சப்தமில்லா ஸ்வரங்கள் இன்னிசையாய்…!!!”

## பொருளடக்கம் :

Contents


முன்னுரை :
ஸ்வரம் : 1
ஸ்வரம் : 2
ஸ்வரம் : 3
ஸ்வரம் : 4
ஸ்வரம் : 5
ஸ்வரம் : 6
ஸ்வரம் : 7
ஸ்வரம் : 8
ஸ்வரம் : 9
ஸ்வரம் : 10
ஸ்வரம் : 11
ஸ்வரம் : 12
ஸ்வரம் : 13
ஸ்வரம் : 14
ஸ்வரம் : 15
ஸ்வரம் : 16
ஸ்வரம் : 17
ஸ்வரம் : 18
ஸ்வரம் : 19
ஸ்வரம் : 20

ஸ்வரம் : 21
ஸ்வரம் : 22
ஸ்வரம் : 23
ஸ்வரம் : 24
ஸ்வரம் : 25
ஸ்வரம் : 26
ஸ்வரம் : 27
ஸ்வரம் : 28
ஸ்வரம் : 29
ஸ்வரம் : 30

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

# முன்னுரை :

“சப்தமில்லா ஸ்வரங்கள் இன்னிசையாய்” கதையானது “மெழுகுப்பாவை இவளோ” கதையின் தொடர்ச்சியாக எழுதப்பட்ட கதை... அந்தக் கதையில் வந்த ஜெகவீரபாண்டியன் – ருத்ரஸ்ரீ, செல்வகுமார் – ரம்யா இந்த இரு ஜோடிகளின் வாரிசுகளைச் சுற்றிப் பின்னப்பட்ட காதல் கதை இது... ஜெகவீரபாண்டியன் – ருத்ரஸ்ரீ ஜோடி உங்கள் மனதை கவர்ந்தது போல் இந்தக் கதையின் நாயகன், நாயகியான ஜீவா- சுபிக்ஷா ஜோடியும் உங்கள் மனதை கவர்வார்கள் என்று நம்புகிறேன்... நன்றி...

அன்புடன்,

ஸ்ரீகலா :)

## ஸ்வரம் : 1

"அலைபாயுதே கண்ணா
என்மனம் அலைபாயுதே
ஆனந்த மோகன வேணுகானமதில்
அலைபாயுதே கண்ணா
என்மனம் அலைபாயுதே
உன் ஆனந்தமோகன வேணுகானமதில்
அலைபாயுதே கண்ணா ஆ ஆ..."

சென்னையில் இருந்த அந்தப் புகழ் பெற்ற சங்கீத சபாவின் மேடையில் பாடிக் கொண்டு இருந்த சுபிக்ஷாவின் வசியக் குரலில் கேட்டுக் கொண்டு இருந்தவர்களின் மனம் மகுடிக்கு மயங்கிய பாம்பு போல் மயங்கி இருந்தது... அங்கிருந்த மக்கள் ஒருவித மோனநிலையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்...

கண்களை மூடி லயிப்புடன் பாடிய சுபிக்ஷாவின் மனம் அந்தப் பாடலுக்கு ஏற்றார் போன்று எங்கும் அலைப்பாயவில்லை... ஆழ்க்கடலின் அமைதி போல் அது நிர்மலமான மனநிலையில் நிசப்தமாய் இருந்தது... அவள் தன் மனதில் பிருந்தாவன நாயகன் அந்தக் கோகுலக் கண்ணனை நினைத்து பக்தி பரவசத்துடன் பாடி கொண்டு இருந்தாள்...

ஆனால் அதற்கு நேரெதிரான மனநிலையில் இருந்தான் அங்கு முன் வரிசையில் அமர்ந்து அவளையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அபிமன்யு... அவனின் மனம் அந்தக் கடல் அலை போல் ஆரவாரமாய் ஆர்ப்பரித்துக் கொண்டு இருந்தது...

தன்னவளின் மேல் பொங்கும் நேசம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போவதை உணர்ந்தவனாய்,

PDF தமிழ் .com

'இனியும் தாமதிக்க முடியாது... லட்டும்மாவிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும்...' என்று மனதில் உறுதியாய் நினைத்துக் கொண்டான்...

அதன் பின்னரே அவன் மனம் சற்று அமைதியடைந்தது... மனதில் அமைதி தோன்றியதும் எழுந்த நிம்மதியில் அவன் தன்னவளின் அழகை கண்களால் பருக ஆரம்பித்தான்...

அவனின் சிவந்த நிறத்துடன் ஒப்பிடும் போது அவளின் மாநிறம் சற்று மட்டுப்பட்டுத் தான் காணப்பட்டது... ஆனாலும் அவன் கண்களுக்கு அவள் பேரழகியாகத் தான் தெரிந்தாள்... காதல் வந்தால் காக்கையும் கூட அழகாகத் தான் தெரியும் என்பதற்கேற்ப அவன் அவளிடத்தில் மயங்கி இருந்தான்...

பாடும் போதும், பேசும் போதும், புன்னகைக்கும் போதும் முத்துக்கள் போல் அழகாய் ஒளிரும் அந்தப் பல்வரிசையின் அழகுக்கு ஈடு இணை இந்த உலகில் வேறு எதுவும் உண்டோ...? அதை விடச் சிரிக்கும் போது தோன்றும் அவளின் கன்னக்குழி அழகில் காலம் எல்லாம் வீழ்ந்து கிடப்பதற்கு அவனது காதல் மனம் தவம் கிடந்தது...

அவள் அசையும் போது எல்லாம் வர்ண ஜாலங்களை அள்ளி வீசிய வைர ஜிமிக்கி அவளுக்கு மேலும் அழகு சேர்த்தது... பூச்சூடிய அவளின் நீண்ட கூந்தலை காணும் போதெல்லாம் அதில் முகம் புதைத்து வாழ்நாள் முழுவதும் துயில மாட்டோமா என்று அவனின் நேசம் கொண்ட நெஞ்சம் ஏங்கியது...

மொத்தத்தில் அவளின் அமைதியான குணம், பண்பு எல்லாம் அவனை அப்படியே அவளிடத்தில் அடியோடு வீழ்த்தி சாய்த்துவிட்டது...

"வள்ளிக்கணவன் பேரை வழிப்போக்கன் சொன்னாலும்

உள்ளம் குழையுதடி கிளியே ஊனும் உருகுதடி கிளியே

மாடுமனை போனாலென்ன மக்கள் சுற்றம் போனாலென்ன

கோடிச்செம்பொன் போனாலென்ன கிளியே

குறுநகை போதுமடி முருகன் குறுநகை போதுமடி..."

சுபிக்ஷாவின் கணீர் குரலில் அபிமன்யு தனது யோசனைகளைத் தள்ளி வைத்தவனாய் அவள் பாடுவதை ரசிக்க ஆரம்பித்தான்...

சிறு வயதில் இருந்து அவனது அன்னை பாடுவதைக் கேட்டு வளர்ந்ததினாலோ என்னவோ அவனுக்கு இசை என்றால் உயிர்... அதை விரும்பி ரசிக்கும் கலாரசிகன் அவன்... அவனை விட அவனது கண்மணி இசையை உயிர்மூச்சாக எண்ணி ஆராதித்து வருவது கண்டு அவளை அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது...

கச்சேரி நடுவே சிறு இடைவேளை விட்ட போது அதே முன் வரிசையில் சற்று தள்ளி அமர்ந்திருந்த அவனது அன்னையும், பெரியம்மாவும் அவனது கண்ணில் விழுந்தனர்... பெரியம்மாவை கண்டதும் மகிழ்ச்சியுடன் இருக்கையில் இருந்து எழுந்தவன் முகம் கொள்ளா புன்னகையுடன் அவளை நோக்கி சென்றான்...

"பெரியம்மா... எப்படி இருக்கீங்க...?" அபிமன்யுவின் குதூகலக் குரலில் திரும்பிய ருத்ரஸ்ரீ,

"அபி... இது உனக்கே கொஞ்சம் ஓவரா இல்லை... இன்னைக்குக் காலையில் தானே பார்த்தோம்..." என்று அவனைக் கேலி செய்து சிரிக்க...

"காலையில் பார்த்தது பெரியம்மா..." என்று இழுத்து சொன்னவன், "அதுக்கு இடையில் எத்தனை மணித்துளிகள் கடந்து விட்டது..." என்று பெருமூச்சு விட்டு ஏக்கம் போல் சொல்ல...

PDF தமிழ் .com

"பொல்லாத போக்கிரிடா நீ..." என்று அவனைத் தன் பக்கத்தில் அமர சொன்னவள், அவனது அன்னை சித்தாராவை பார்த்து,

"அபி பேசறதை கேட்டியா...? என் மகன் அருகில் இல்லாத குறையை இவன் தான் தீர்த்து வைக்கிறான்..."

"ருத்ரா... சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அபி உங்க மகன் தான்..." என்றாள் சித்தாரா புன்னகையுடன்...

"அது என்னவோ உண்மை தான்... ஜீவாவை விட அபியிடத்தில் தான் என்னால் இந்தளவுக்கு உரிமையா பேச முடியுது..." என்றவள் முகம் வருத்தத்தைத் தத்தெடுத்தாலும் அதை நொடி பொழுதில் சட்டென்று மாற்றிக் கொண்டாள்... பின் அபிமன்யுவை பார்த்து,

"என்ன அபி... இந்த நேரம் முக்கியமான மீட்டிங் இருக்குன்னு சொன்ன... அப்புறம் எப்படி இங்கே...?"

அதைக் கேட்டதும் அவனின் முகம் சற்று மாறியது...

"அது கேன்சலாகிருச்சு பெரியம்மா..." என்றான் தன்னைச் சமாளித்துக் கொண்டு...

"தானா கேன்சலாச்சா...? இல்லை கேன்சல் பண்ண வச்சாங்களா...?" அழுத்தமாய்க் கேட்ட ருத்ரஸ்ரீயின் விழிகள் அவனைக் கூர்மையாய்த் துளைத்தெடுத்தது...

அதற்குள் இடைவேளை முடியவும், "அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை பெரியம்மா... நீங்க மனசை போட்டு குழப்பிக்காதீங்க..." என்றவன் எழுந்து தனது இருக்கையை நோக்கி சென்றான்...

அதற்கு மேல் அங்கிருந்தால் ருத்ரஸ்ரீயிடம் உண்மையைக் கூற வேண்டி வரும் என்று பயந்து எழுந்து வந்துவிட்டான் ஒரு கோழையைப் போல்...

'உண்மையில் நான் கோழை தானோ...?' அவனையும் அறியாது அவன் மனதில் அந்தக் கேள்வி எழுந்தது...

அதற்குள் சுபிக்ஷாவின் குரல் அவனை மேலே சிந்திக்கவிடாமல் தடை செய்ய, வழக்கம் போல் தன்னவளை கண்டதும் மற்ற விசயங்களை மறந்தவனாய் அவன் அவளிடத்தில் தனது முழுக்கவனத்தையும் குவித்தான்... சில நொடிகளில் அதில் வெற்றியும் கண்டான்...

ஆனால் ருத்ரஸ்ரீ தான் மனதுக்குள் தவித்துக் கொண்டு இருந்தாள்... அவளது மனக்கண்ணில் அபிமன்யுவின் கலங்கிய முகமே வலம் வந்து வதைத்தது...

'ஏன் ஜீவா இப்படிப் பண்ற...?' மனதுக்குள் மகனை பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்டு கொண்டாள்...

மனதில் மட்டுமே மகனிடத்தில் அவள் கேள்வி கேட்க முடியும்... நேரில் அப்படி எல்லாம் அவனைக் கேள்வி கேட்டுவிட முடியாது...

அவனைக் கேள்வி கேட்க ருத்ரஸ்ரீக்குத் தைரியம் இல்லாமல் இல்லை... ஆனால் அதைக் கேட்கும் பொறுமை அவள் மகனிடத்தில் இல்லை... தன்னிச்சையாகச் செயல்படும் அவனைக் கண்டிக்கும் நிலையை அவன் தாண்டி சென்று வெகுவருடங்களாகி விட்டது...

ருத்ரஸ்ரீ மனதுக்குள் போராடி கொண்டு இருக்கும் போதே கச்சேரி முடிந்துவிட்டது...

கூட்டம் கலைந்து செல்ல ஆரம்பித்தது... அபிமன்யு அவர்கள் இருவரின் அருகில் வந்தான்... ருத்ரஸ்ரீ முகம் தெளிவில்லாமல் இருப்பதை உணர்ந்து அவன்,

"ஜீவா யாரு...? என் அண்ணா தானே... என் மேல் அவனுக்கு இல்லாத உரிமையா...?" என்று பெருந்தன்மையுடன்

PDF தமிழ் .com

சொன்னவனைக் கண்டு ருத்ரஸ்ரீயின் கண்கள் பனித்தது...

"நீ அப்படி நினைக்கிற...? ஆனால் அவன்...?"

"ச்சு... விடுங்க பெரியம்மா..." என்று அவன் அவளைத் தேற்ற...

இதை ஒரு சிறு சிரிப்புடன் சித்தாரா பார்த்துக் கொண்டு இருந்தாள்... அவள் இதில் எல்லாம் தலையிட மாட்டாள்...

"பெரியம்மா... லட்டும்மா வந்துவிட்டாள்..." சுபிக்ஷாவை கண்டு முகம் எல்லாம் பிரகாசமாக அபிமன்யு கூறியதை கேட்டு ருத்ரஸ்ரீ சுபிக்ஷா புறம் திரும்பினாள்...

"அத்தை..." பெரியவர்கள் இருவரையும் அழைத்தபடி அங்கே வந்தாள் சுபிக்ஷா...

"ரொம்ப நல்லா பாடின சுபி... நீ என்னோட ஸ்டூடெண்ட்ங்கிறது எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு..." சித்தாரா மனநெகிழ்வுடன் கூற...

"எல்லாம் உங்க ஆசிர்வாதம் தான் அத்தை..." என்றவள் சித்தாராவின் காலில் விழுந்து வணங்கிவிட்டு, ருத்ரஸ்ரீயின் காலிலும் விழுந்து வணங்கினாள்...

இருவரிடமும் ஆசிர்வாதம் வாங்கி விட்டு எழுந்தவளை கண்டு குறும்பு சிரிப்புடன் அபிமன்யு,

"இந்த மாமன் மட்டும் என்ன பாவம் பண்ணினேன்... அப்படியே என் காலிலும் விழுவது..." என்று அவன் தனது காலை சுட்டிக்காட்ட...

அவனது குறும்பு பேச்சு கேட்டுச் சிறுபுன்னகை மட்டுமே பதிலாகத் தந்தாள் சுபிக்ஷா...

"இப்படிச் சிரிச்சே மழுப்பு... என்னைக்கு இருந்தாலும் நீ இந்த மாமன் காலில் விழுந்து தானாக வேண்டும்..." உறுதியான குரலில் கூறியவனைச் சட்டென்று கண்டு கொண்டாள் ருத்ரஸ்ரீ...

அவளுக்கு அது மகிழ்ச்சியாகத் தான் இருந்தது... சுபிக்ஷா மாதிரியான பெண்ணுக்கு அபிமன்யு வெகு பொருத்தம் என்று மகிழ்ச்சியாக எண்ணினாள்...

அதே போல் சித்தாராவுக்கும் மகனின் ஆசை புரியத்தான் செய்தது... சுபிக்ஷா அவள் பார்க்க வளர்ந்த பெண்... அதுவும் சுபிக்ஷா அவளின் சங்கீத வாரிசு... அதனால் அவளுக்கு இதில் சந்தோசம் தான்...

அபியின் வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்தும் புரியாமல் குழம்பி போய் நின்றிருந்தாள் சுபிக்ஷா...

அவளின் குழப்ப முகத்தைக் கண்ட அபிமன்யு நாளையே அவளிடம் தன் மனதினை பற்றி எடுத்துரைக்க வேண்டும் என்று முடிவு செய்தான்...

ருத்ரஸ்ரீ சுபிக்ஷாவை அழைத்துக் கொண்டு தங்கள் வீட்டிற்குச் செல்ல, அபிமன்யு தன் அன்னையுடன் தனது வீட்டிற்குச் சென்றான்...

தனது மாமனாரை போல் தொழில் மீது பெரும் பக்தி கொண்டு அயராது உழைக்கும் இளையமகன் அபிமன்யு மீது சித்தாராவுக்கு மிகுந்த பாசம் உண்டு...

"அபி... சுபியை உனக்குப் பிடிச்சியிருக்கா...?" அன்னையின் இந்தத் திடீர் கேள்வியில் சற்று திகைத்தவன் பின் மெல்ல புன்னகைத்தபடி,

"ம்... ரொம்பம்மா..." என்றான் கண்களில் கனவுடன்...

"அப்படின்னா நான் அவங்க வீட்டில் பேசி முடிக்கவா...?"

PDF தமிழ் .com

"இப்ப வேண்டாம்மா... இன்னும் நான் லட்டும்மாவிடம் என் விருப்பத்தைச் சொல்லவில்லை... அவளின் விருப்பமும் கேட்டுவிட்டு..." என்று இழுத்தவனைக் கண்டு புரிதலுடன் தலையாட்டி சிரித்த சித்தாரா,

"நிச்சயம் அவளுக்கும் விருப்பம் இருக்கும் அபி..." என்றாள் சுபிக்ஷாவை உணர்ந்தவளாய்...

அன்னையின் வார்த்தையில் அபி சிறகில்லாமல் வானில் பறந்தான்...

தனது விருப்பத்தை விடத் தன்னவளின் விருப்பத்தைப் பெரிதும் மதிக்கும் மகனின் குணம் கண்டு அத்தனை பெருமிதமாக இருந்தது அந்த அன்னைக்கு...

காரில் இருந்து அபி இறங்கும் போதே, "சித்து..." என்று ஓடி வந்து அவனது கால்களைக் கட்டி கொண்டான் அர்விந்த், ராகவ் - மீராவின் புதல்வன்...

அபிமன்யு அவனைத் தூக்கி கொண்டதும் அவன் தனது பிஞ்சு கைகளை நீட்டி, "சித்து... சாக்லேட்..." என்று கேட்க...

"என் செல்லக்குட்டிக்குச் சாக்லேட் வாங்கி வர மறப்பேனா..." என்று சின்னவனின் கன்னத்தில் முத்தமிட்ட அபிமன்யு தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து சாக்லேட்டை எடுத்து நீட்ட...

"தேங்க்யூ சித்து..." என்று சித்தப்பாவின் கன்னத்தில் முத்தமிட்ட சின்னவன் சாக்லேட்டை பிரித்து உண்ண ஆரம்பித்தான்...

"டேய்... எத்தனை தடவை சொல்றது இப்படி நிறையச் சாக்லேட் சாப்பிட கூடாதுன்னு..." என்று அதட்டியபடி அங்கு வந்தான் குழந்தை நல மருத்துவனான ராகவ்...

"சித்து... டாடி..." உதடு பிதுக்கி அழத் தயாராகினான் சின்னவன்...

"நீ டாக்டர்ங்கிறதை வீட்டுக்குள் காட்டாதே..." என்று அண்ணனை விரல் நீட்டி மிரட்டியவன், மகனை பாசத்தோடு அணைத்தபடி,

"அர்வி கண்ணா... படுக்கும் போது பிரஸ் பண்ணிட்டு படுக்கணும்..." என்க...

"பிரஸ் பண்ணணுமா...?" என்று அவன் சிணுங்க...

"ம்... பிரஸ் பண்ணினா தான் நாளைக்கு இன்னும் நிறையச் சாக்லேட் வாங்கிட்டு வருவேன்..." என்று சித்தப்பன் பேரம் பேச... சின்னவன் சமத்தாய்த் தலையாட்டினான்...

"அபி... இவர் சைல்ட் ஸ்பெசலிஸ்ட் ஆனதுக்கு... பேசாம நீங்க ஆகியிருக்கலாம்..." கணவனைக் கிண்டலடித்தபடி அங்கு வந்தாள் மீரா... அவள் ஒரு மனநல மருத்துவர்...

"ஆஹா... அப்படிப் பார்த்தா உன் படிப்புக்கும் உனக்கும் சம்பந்தமே இல்லையேம்மா..." என்று பதிலுக்கு மனைவியைக் கிண்டலடித்தான் ராகவ்...

ஏனெனில் அடிக்கடி அவனிடத்தில் அவள் கோபம் கொள்வதைத் தான் அவன் அப்படிச் சொன்னான்...

"உங்களை..." என்று அவள் கணவனை முறைக்க...

"இதைத் தான் நான் சொன்னேன்..." மீண்டும் ராகவ் கிண்டலடிக்க... அதற்கு நெற்றிக்கண்ணைத் திறந்த மீராவை கண்டு அவன் 'விடு ஜூட்' என்று மாயமாய் ஓடி ஒளிந்து விட்டான்...

இவை அனைத்தையும் வரவேற்பறையில் அமர்ந்து புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் கார்த்திக்...

PDF தமிழ் .com

இரு மகன்களை நினைத்து அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... அது அவர்கள் இருவரும் தன்னைப் போல் அரைவேக்காடாக இல்லை என்பதினால்...

அண்ணன், அண்ணி இருவரையும் கண்டு நகைத்தபடி தனது அறைக்கு வந்தான் அபிமன்யு... இது போல் அவனும், அவனது லட்டும்மாவும் மனமொத்து வாழ வேண்டும் என்று அத்தனை ஆசையாக இருந்தது அவனுக்கு...

மேசை இழுப்பறையில் இருந்த தன்னவளின் புகைப்படத்தை எடுத்து ஆசைத்தீர பார்த்துக் கொண்டு இருந்தான் அவன்...

வீட்டிற்கு வந்த சுபிக்ஷா அங்குக் கண்ட காட்சியைக் கண்டு சட்டென்று சிரித்துவிட்டாள்... அவளது அன்னை ரம்யா தந்தையிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டு இருக்க, அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவளது தந்தை செல்வா முழித்துக் கொண்டு இருப்பதைக் கண்டு அவளுக்குச் சிரிப்பாய் வந்தது...

தாய்மாமன் ஜெகன் நமட்டுச் சிரிப்புடன் அதைப் பார்த்துக் கொண்டு இருப்பதைக் கண்டு அவன் அருகில் வந்தமர்ந்தவள்,

"இன்னைக்கு அப்பா என்ன தப்பு செஞ்சாங்க மாமா...?" என்று கிசுகிசுப்பாய் கேட்க...

"சுபிம்மா... அதற்குள் வந்து விட்டியா...? இன்னைக்குக் கச்சேரியில் எப்படிப் பாடினம்மா...? எனக்குத் தான் அங்கே வர முடியாமல் வேறு ஒரு வேலை வந்திருச்சு..." மன்னிப்பு கோரும் பாவனையில் அவன் சொல்ல...

"சூப்பரா பாடினேன்... அதை விடுங்க மாமா... அப்பா என்ன பண்ணினார்...?" கண்ணில் குறும்பு மின்ன கேட்டவளை கண்டு அதே குறும்புடன்,

"வழக்கம் போல் தான்..." என்று மது அருந்துவது போல் ஜெகன் சைகை காட்ட...

"எப்படி மாமா நீங்க மட்டும் இதில் இருந்து தப்பிச்சிர்றீங்க...?"

"நான் குடிப்பது போல் பாவ்லா காட்டுற மாதிரி இவனும் நடிக்க வேண்டியது தானே... ஓசி சரக்கு கிடைக்குதுன்னு மூக்கு முட்ட குடிச்சா இப்படித்தான்..." என்றான் பலத்த சிரிப்புடன்...

அதைக் கேட்டு அவள் களுக்கென்று சிரித்தாள்...

"மாமாவும், மருமகளும் அப்படி என்ன ரகசியம் பேசி சிரிக்கிறீங்க...? சொன்னால் நானும் சிரிப்பேனே..." என்றபடி அங்கு வந்த ருத்ரஸ்ரீயை கண்டதும் ஜெகனின் கண்களில் காதல் பொங்கி வழிந்தது...

"ஜில்லு... ரொம்ப டயர்டா இருக்கிறியே... வேலை அதிகமா...?" மனைவியின் கைப்பிடித்து அவளைத் தன்னருகில் அமர்த்திக் கொண்டு வாஞ்சையுடன் கேட்ட மாமனை கண்டு எப்போதும் போல் சுபிக்ஷாவிற்கு ஆச்சிரியமாக இருந்தது...

அவளுக்கு விவரம் தெரிந்ததில் இருந்து பார்க்கிறாள் இருவரின் அந்நியோன்யத்தை... அவர்களின் காதலை கண்டு அவள் பிரமித்துத் தான் போனாள்... மாமனுக்கும், அத்தைக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாத அளவுக்கு எல்லாவற்றிலும் நிறைய வித்தியாசங்கள் உண்டு... எல்லாவற்றிலும் இருவருமே எதிர் எதிர் துருவங்கள் தான்... ஆனாலும் காதல் என்கிற ஒற்றைப் புள்ளியில் இருவரும் கருத்தொமித்து வாழ்வது கண்டு அவளுக்குப் பெரும் வியப்பாய் தான் இருந்தது...

காதலுக்கு இத்தனை சக்தி இருக்கிறதா என்று மனதுக்குள் வியந்தபடி அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டு

PDF தமிழ் .com

இருந்தாள்...

"எப்போதும் உள்ள வேலை தான்..." என்று கூறிய ருத்ரஸ்ரீயின் கண்கள் ரம்யாவிடம் மாட்டி கொண்டு விழி பிதுங்கி நிற்கும் செல்வாவை கண்டு பாவமாய்ப் பார்த்தது... பின் ரம்யாவிடம்,

"ரம்யா... அண்ணா பாவம் விடுங்க..." என்று சொல்ல...

"அண்ணி... உங்களுக்காகப் போனா போகுதுன்னு இவரை விடறேன்... இல்லைன்னா..." என்று கணவனை முறைத்தபடி அங்கு வந்தவள் அப்போது தான் மகளைக் கண்டவளாய்,

"அச்சோ... ஆரத்தி கரைச்சி உன்னை வரவேற்கணும்ன்னு நினைச்சேன் சுபிம்மா... எல்லாம் உங்கப்பாவால் பாழாகி விட்டது..." என்றவள் மகளின் அருகில் அமர்ந்து அவளை வாஞ்சையுடன் வருடி கொடுத்தாள்...

அவளுக்கோ, அவளது குடும்பத்துக்கோ கர்நாடக சங்கீதம் என்றால் என்னவென்று தெரியாது... ஆனால் அதைக் கரைத்து குடித்து அதில் புகழ் பெற்றுக் கொண்டு வரும் மகளைக் கண்டு அவளுக்கு அத்தனை பெருமையாக இருந்தது...

கழுதைக்குக் கற்பூர வாசனை தெரியாத போதும் அதன் மகத்துவம் தெரிந்து தான் இருந்தது... அதனால் அவளுக்கு மகளை நினைத்து சற்று கர்வமும் உண்டு...

"இருக்கட்டும்மா... நான் கச்சேரி பண்ணுவது என்ன புதுசா...?" என்று கேட்டவள் அங்கு வந்த அண்ணன் மகள் மூன்று வயது வினீதாவை கைகளில் அள்ளி கொண்டாள்...

"அத்தை... அம்மாட்ட இருந்து காப்பாத்து..." என்று கூறியபடி அந்தச் சின்னச்சிட்டு அவளது நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்டது...

"அடிக்கழுதை... நீ இங்கே தான் இருக்கியா... உன்னை..." என்று சத்தம் போட்டுக் கொண்டே வந்தாள் அவளது அண்ணியும், ஜெகன் - ருத்ரஸ்ரீயின் மகளுமான பூஜா... அவள் கையில் வினீதாவிற்கான உணவு அடங்கிய கிண்ணம் இருந்தது...

"குழந்தையைப் போய்க் கழுதைன்னு சொல்லாதே பூஜா..." ருத்ரஸ்ரீ பேத்தியை பாசத்தோடு வருடியபடி கூற...

"ஆமாம் பூஜா..." ஜெகன் மனைவிக்கு ஒத்து ஊத...

"அப்பா... நீங்க அம்மாவுக்கு ஜால்ரா போடணும்னா தனியா போட்டுக்கோங்க... அதுக்காக உங்க பேத்திக்குச் செல்லம் கொடுக்க வேண்டாம்..." என்றாள் பூஜா கண்டிப்புடன்...

"எனக்கு இருக்கிறது ஒரே ஒரு பேரன், ஒரு பேத்தி... அவங்களுக்கு நான் செல்லம் கொடுக்காமலா...?" என்று சிரித்தபடி கூறிய ஜெகனை கண்டு முறைத்த பூஜா,

"அதான் செல்லம் கொடுத்து ஒருத்தனை குட்டிச்சுவராய் ஆக்கியது போதாதா...?" என்று எரிச்சலுடன் மொழிய...

"பூஜா..." என்று எல்லோரின் குரலும் ஒட்டு மொத்தமாய் அவளை அதட்டியது...

அத்தனை குரலிலும் உரத்து தனித்து ஒலித்தது அப்போது தான் அங்கு வந்த அவளது கணவன் கிருஷ்ணாவின் குரல்...

நிலைமை சரியில்லை என்றதும் சுபிக்ஷா, பூஜா கையில் இருந்த உணவு கிண்ணத்தை வாங்கிக் கொண்டு வினீதாவையும் அழைத்துக் கொண்டு தனது அறைக்குச் சென்றாள்...

தமிழ் நாவல்

மாடிப்படியில் ஏறும் போதே வலது கை பக்கம் இருந்த சுவர் மீது தனது பார்வையைப் பதிக்காமல், அதன் அருகில் செல்லவும் பயந்தவளாய் அவள் தலையைக் குனிந்து கொண்டு செல்ல...

"அத்தை..." என்று அவளை அழைத்த சின்னவள் அங்குச் சுவற்றில் பெரியதாய் மாட்டியிருந்த புகைப்படத்தைச் சுட்டிக்காட்டி,

"மாமா..." என்று குதூகலமாய்க் கூறிச் சிரித்தது...

வினீதா கூறியும் அந்தப் புகைப்படத்தை நிமிர்ந்து பார்க்காமல் தலை குனிந்தபடி மாடியேறியவள் அறைக்குள் வந்ததும் தான் தலை நிமிர்ந்தாள்... அதன் பின்னரே அதுவரை அடக்கி வைத்திருந்த மூச்சை சுதந்திரமாக இழுத்து விட்டுத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்...

அவள் பயப்படும்படி அந்தப் புகைப்படத்தில் இருப்பவன் ஒன்றும் அத்தனை பயங்கரமானவனாய் இல்லை... அழகாய், கம்பீரமாய் ஆண்மகனுக்கே உரிய லட்சணங்களுடன் அம்சமாய்க் களையாகப் பேரழகுடன் தான் அவன் இருந்தான்... ஆனால் அதிக அழகும் ஆபத்து தான் அல்லவா... அது போல் அவளைப் பொருத்தவரையில் அவனும் ஆபத்தானவன் தான்...

அவன் வேறு யாருமில்லை அவளின் அருமை மாமன் மகன் ஜீவா தான்...

"வினீ குட்டி சமத்தா சாப்பிடுவீங்களாம்..." என்றபடி மருமகளுக்கு அவள் உணவு ஊட்ட...

"அத்தை பாட்டு பாடு..." என்று சின்னவள் சொல்ல...

பாடுவதற்கு அவளுக்கு என்ன கசக்கவா செய்யும்... தனது வசியக் குரலில் அழகாய் பாட ஆரம்பித்தாள்...

"என்ன தவம் செய்தனை யசோதா
என்ன தவம் செய்தனை
எங்கும் நிறை பரப்பரம்மம் - அம்மா வென்றழைக்க
என்ன தவம் செய்தனை"

அவள் பாடியதை கேட்டபடி சமத்தாய் சின்னவள் உணவு உண்ண ஆரம்பித்தாள்...

அதே நேரம் வரவேற்பறையில் கிருஷ்ணா தனது மனைவி பூஜாவை முறைத்துக் கொண்டு நின்றிருந்தான்...

"மாமா கிட்ட மன்னிப்பு கேளு பூஜா..." என்று கடுமையான குரலில் அவன் சொல்ல...

கண்களில் கண்ணீருடன் அவனை நிமிர்ந்து பார்த்தவள் தந்தையின் முகத்தைப் பார்க்காமல்,

"சாரிப்பா..." என்று மன்னிப்பு கேட்டுவிட்டு அடுத்த நொடி தனது அறைக்குச் சென்றுவிட்டாள்...

"சாரி மாமா... அவள் ஏதோ தெரியாம..." கிருஷ்ணா தயங்கி நின்றான்...

"அவள் சொல்றதும் சரி தானே மாப்ள... நீ போய் அவளைச் சாமாதனப்படுத்துப்பா..." என்ற ஜெகன் தனது அறைக்குச் செல்ல முயல...

"மச்சி..." என்றபடி பேச வந்த செல்வாவை கண்டு புன்னகைத்தவன்,

"பிறகு பேசலாம் மாப்ள..." என்று விட்டு விறுவிறுவென அறையை நோக்கி நடந்தான்...

மகள் பேசியதை கேட்டு அதிர்ந்து நின்ற ருத்ரஸ்ரீயின் அருகில் வந்த ரம்யா,

தமிழ் நாவல்

"அண்ணி..." என்றழைக்க...

"ஆங்... என்ன ரம்யா..." என்றவளுக்கு அப்போது தான் சுற்றுப்புறம் உறைத்தது...

"அண்ணா ரூமுக்கு போயிட்டாரு..." ரம்யா சொன்னதும் ஏதோ யோசனையாய் ருத்ரஸ்ரீ தங்களது அறைக்குச் சென்றாள்...

கிருஷ்ணா கோபமாய் அறைக்குள் நுழைந்தவன் அங்குத் தனது மகன் விக்ரம் வீட்டுப்பாடம் செய்து கொண்டு இருப்பதைக் கண்டு சற்று அமைதியானான்...

மகன் தனது வேலையை முடிக்கும் வரை அமைதியாய் இருந்தவன் அவன் முடித்ததும்,

"அத்தை கிட்ட வினீ இருக்கிறாள்... நீயும் அத்தை கூடப் போய் விளையாடு..." என்று கூறியவுடன் சின்னவன் சிட்டாகப் பறந்தான் தனது அத்தையிடம்...

கட்டிலில் உம்மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அமர்ந்திருந்த மனைவியைக் கண்டதும் அவனது கோபம் எல்லாம் பறந்தோட புன்னகையுடன் அவள் அருகில் வந்தமர்ந்தான்...

"பூஜாக்குட்டி..." என்றபடி அவளது தோள் மேல் அவன் கை போட...

அதைப் பட்டென்று அவள் தட்டிவிட, அவளது கோபம் உணர்ந்தவனாய்,

"நியாயத்துக்கு நான் தான் உன் அண்ணன் மேல் கோபமாய் இருக்கணும்... நானே இவங்க எல்லோருக்காகவும் கோபத்தைக் கட்டுப்படுத்திக்கிட்டு இருக்கேன்... இதில் நீ என்னடான்னா...?" என்றவன்,

"மாமா பாவம்டி பூஜா..."

"அண்ணனாம் அண்ணன்... ஐஞ்சு நிமிசத்துக்கு முந்தி பொறந்தா அவன் எனக்கு அண்ணனா...? அவனை எல்லாம்...?" கோபத்தில் பல்லை கடித்தவள்,

"மண்டைக்கனம் பிடித்தவன்... சரியான கர்வி... தான்ங்கிற அகம்பாவம் பிடித்தவன்..." என்று வரிசையாக அவள் தனது இரட்டையான உடன் பிறந்த சகோதரனை திட்ட துவங்க...

அவள் கூறுவது அனைத்தும் உண்மை தான் என்பதால் கிருஷ்ணா அமைதி காத்தான்... அவனுக்குமே ஜீவாவை பிடிக்காது தான்... ஆனால் குடும்பத்தின் ஒற்றுமைக்காகப் பல்லை கடித்துக் கொண்டு அவனைச் சகித்துக் கொண்டு இருக்கிறான்...

"நீ சொல்றது எல்லாம் சரி தான்... அதுக்கு மாமாவோ, அத்தையோ என்ன பண்ணுவாங்க... நமக்கும் தான் அவங்க செல்லம் கொடுத்து வளர்த்தாங்க... நாம என்ன அப்படியா இருக்கிறோம்... அவன் குணம் அப்படி... அவனை விட்டுத் தள்ளு..." என்றவனைக் கண்கள் கலங்க ஏறிட்டவள்,

"அவன் என்னை அவமானப்படுத்தி இருந்தா நீங்க சொல்ற மாதிரி விட்டுத் தள்ளி இருப்பேன்... ஆனா அவன் அவமானப்படுத்தியது உங்களை அல்லவா... எல்லாம் என்னால் தான்..." என்றவள் கண்ணீருடன் அவனை அணைத்துக் கொண்டு கதற...

எத்தனை வருடமானாலும் அவள் மனதின் காயம் ஆறாது என்பது அவனுக்குப் புரிந்து தான் இருந்தது... அவளுக்கு மட்டுமா அவனுக்குமே தான்...

"உனக்காக இது கூட நான் தாங்கிக்க மாட்டேன்னா..." காதலுடன் கூறியவன் அவளது கண்ணீரை துடைத்து விட...

தமிழ் நாவல்

"இன்னைக்கு நிலையில் இது பொருந்தும்... ஆனால் அன்றைய நிலையில்..." அவள் முகம் வேதனையில் கசங்கியது...

அவனுக்குமே அவளது வேதனை கண்டு மனதுக்கு மிகவும் கஷ்டமாகத் தான் இருந்தது...

"அப்படி எல்லாம் இல்லை பூஜா..." என்றாலும் அன்று பட்ட அவமானத்தின் வலி அவனின் கண்களில் அப்பட்டமாய்த் தெரியத்தான் செய்தது...

இந்த அவமானம் எல்லாம் போக வேண்டும் என்றால் அது அந்த ஜீவாவின் கைகளில் தான் இருக்கிறது... ஆனால் அதற்கு அவன் மனது வைக்க வேண்டுமே...

அதே நேரம் ருத்ரஸ்ரீயும் ஜெகனிடம் புலம்பி கொண்டு இருந்தாள்...

"ஏன் ஜக்கு நான் ஜீவாவுக்கு ரொம்பச் செல்லம் கொடுத்து அவனைக் கெடுத்து விட்டேனோ...?" என்று கவலைக் குரலில் கேட்டாள்...

"ச்சேச்சே... அப்படி எல்லாம் இல்லை ஜில்லு... அவனுக்குக் கொடுத்த செல்லம் தான் நாம் எல்லோருக்கும் கொடுத்தது... ஆனால் அவன் மட்டும் தான் இப்படி..."

"ஏன் அவன் மட்டும் இப்படிப் பாதை மாறிப் போனான் ஜக்கு... மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு... இன்னைக்கு அபி பெரியம்மா, பெரியம்மான்னு ஆசையா பேசும் போது எனக்கு ஜீவா நியாபகம் தான்..." என்றவள் கண்களைத் துடைத்துக் கொண்டு,

"அவன் அபியையும் விட்டு வைக்க மாட்டேங்கிறானே... அபி ரொம்ப நல்ல பையன்... அண்ணா தானேன்னு ரொம்பப் பொறுமையா இருக்கிறான்... அவனின் பொறுமை காற்றில் பறக்கும் போது தான் இருக்கு இந்த ஜீவாவுக்கு..."

"கூடிய சீக்கிரம் ஜீவா எல்லோரையும் புரிந்து கொள்வான்..." என்றான் ஜெகன் பொறுமையாய்...

"அது நடக்காதுன்னு தான் எனக்குத் தோணுது... அவன் சரியான அகம்பாவம் பிடித்தவன்..." என்றாள் சற்று மனம் வெறுத்த குரலில்...

அதைக் கேட்டு துணுக்குற்ற ஜெகன் மனைவியின் மனதை மாற்றும் பொருட்டு, "எங்கம்மா முன்னாடி இப்படிச் சொல்லிடாதே... அப்புறம் 'என் ராசா போல் இந்தச் சீமையில் யாரிருக்கா'ன்னு பேரன் புகழ் பாட ஆரம்பிச்சிரும்..." என்றான் கேலியாய் சிரித்தபடி...

சிரித்த கணவனை வெறுமையாய் பார்த்தவள், "அவன் ஏன் என்னைக் கொண்டு பிறந்திருக்கிறான் ஜெகன்...? ஏன் உங்களை மாதிரி பிறக்காம போயிட்டான்...?" என்றவளின் குரலில் சற்றும் பெருமை இல்லை... மாறாக வருத்தமே இழையோடியது...

"உன்னை மாதிரி அழகு, அறிவுன்னு அவன் இருப்பது கண்டு எனக்குப் பெருமை தான் ஜில்லு... அவனோட ஆளுமை, கம்பீரம், திறமை யாருக்கு வரும் சொல்லு... ஜீவாவோட அப்பா நான்ங்கிறதுல எனக்குப் பெருமை தான்..." என்றான் தந்தையாய் பெருமிதக் குரலில்...

பின்னே உலகம் போற்றும் மகனை கண்டு பெருமை படாமல் எந்தத் தகப்பனால் இருக்க முடியும்...!!!

"ஆனால் அவன்... அவன்..." மேலே பேச முடியாமல் மென்று விழுங்கிய மனைவியை ஆறுதலாய் அணைத்துக் கொண்ட ஜெகன்,

"அவன் நம் மகன்... அவன் உடம்பில் ஓடுறது நம் ரத்தமாக இருந்தால் நிச்சயம் தப்பு பண்ண மாட்டான்..." என்ற ஜெகனை அவள் நம்பாமல் பார்க்க...

"நம்பு ஜில்லு... நம் மகனை நாம் நம்பாமல் வேறு யார் நம்புவார்கள்...? நிச்சயம் அவன் நல்லவன் தான்..."

கணவன் வார்த்தைகளைக் கேட்டு ருத்ரஸ்ரீ பெருமூச்சு ஒன்றை விட்டவள் கணவன் தோளில் ஆறுதலாகச் சாய்ந்து கொண்டாள்...

*********************************

மும்பை மாநகரில் அந்த நட்சத்திர விடுதியில் இருந்த பெரிய ஹாலில் பேசன் ஷோ நடைப்பெற்றுக் கொண்டு இருந்தது... மாடல் நங்கைகள் அனைவரும் பூனை நடந்து விட்டு செல்ல, கடைசியாய் களம் இறங்கினான் அந்தப் பேசன் ஷோவின் ஸ்பான்சரான ஜீவா... விஆர்எஸ், ஜேவிபி மற்றும் ராம் இன்டஸ்ட்ரீஸின் ஏகபோக வாரிசு...

அவனது நடை, உடை, பாவனை, பார்வை அனைத்திலும் பணக்காரத்தனம் மிளிர்ந்தது... பணமும், அழகும் அவனுக்குக் கர்வத்தை அள்ளி கொடுத்திருக்க, அந்தக் கர்வமே 'என்னைப் போல் ஒருவன் வையகத்தில் உண்டா...?' என்கிற அகம்பாவம் அவனிடத்தில் பசை போட்டு ஒட்டி கொண்டு இருந்தது...

அதனாலோ என்னமோ அவனது பார்வை எப்போதுமே அடுத்தவர்களைத் துச்சமாக மதித்து எள்ளி நகையாடும்... எல்லோரிடமும் சிறு புன்னகையுடன் பேசினாலும் அவர்களின் எல்லையைத் தனது ஒற்றைப் பார்வையால் வகுத்து தள்ளி நிறுத்தி விடுவான்... அவ்வளவு எளிதில் யாரிடமும் நட்பு பாராட்டிவிட மாட்டான்...

அப்படிப்பட்ட அவனுடன் இன்று பேசன் ஷோவில் ஜோடி சேரும் அதிர்ஷ்டம் மாடல் நங்கை மணீஷாவிற்குக் கிடைத்து இருந்தது... என்னமோ வாழ்க்கையில் அவனுடன் ஜோடி சேர்ந்தது போல் அவள் அப்படிச் சந்தோசப்பட்டுப் போனாள்...

தனது வலது கரத்தை பேண்ட் பாக்கெட்டில் விட்டுக் கொண்டு, இடது கரத்தை மணீஷாவின் கரத்தோடு கோர்த்தபடி அவன் ஸ்டைலாக நடந்து வந்தது கண்டு அங்கிருந்த இளம் பெண்களின் இதயம் சற்று ஒரு நொடி நின்று மீண்டும் துடித்தது… அவர்களின் கண்கள் இமைக்க மறந்து அவனது கம்பீரமான அழகை பருகி கொண்டு இருந்தது…

அதை உணர்ந்தவன் தனது வழக்கமான பாணியில் கர்வம் கலந்த அலட்சியப் பார்வையில் அதை எல்லாம் வினாடி நேரத்தில் புறம் தள்ளியவனாய் மேடையில் முன்னேறினான்… அப்படி ஒரு மனப்பான்மையைக் கொண்டு இருப்பதினால் தான் வாழ்க்கையிலும் அவன் முன்னேறிக் கொண்டு இருக்கிறானோ…!!!

அந்த நீண்ட மேடையின் நுனி பகுதிக்கு வந்தவன் மணீஷாவின் கரத்தோடு கோர்த்திருந்த தனது கரத்தை பிரித்து எடுத்த அடுத்த நொடி தனது கையை அவளது இடையைத் தழுவினார் போன்று அணைத்துப் பிடித்துக் கொண்டான்…

அவனது செயலில் மணீஷா அப்படியே மகிழ்ந்து போனாள்… தானும் அவனுடன் ஒட்டி இழைந்து கொண்டு புகைப்படத்திற்கு அழகாய் போஸ் கொடுத்தாள்… அவளின் தாராளத்தைக் கண்டு அவனும் மனதுக்குள் சிரித்தபடி அவளுடன் இழைந்து நின்றான்… அதைக் கண்டு அவள் மிகவும் கிறங்கி போனாள்…

அவளது கிறக்கத்தை ஓரக்கண்ணால் பார்த்தவனின் கண்கள் விசமமாய் அவளைப் பார்த்துச் சிரித்தது… அவனது உதடுகள் கேலியாய் அவளைப் பார்த்து நகைத்தது… அது எதையும் உணர்ந்து கொள்ளும் மனநிலையில் அவள் இல்லை… மாறாக ஒருவித மயக்கத்தில் அவள் இருந்தாள் அவன் அருகில்…

தமிழ் நாவல்

ஷோ முடிந்ததும் அவள் தனது சக மாடல் தோழியிடம் இதைச் சொல்லி சந்தோசப்பட்டுக் கொள்ள, அவளோ இவளை எச்சரித்தாள்...

"பார்த்துடி... அவன் சிரித்துப் பேசுவதைக் கண்டு மயங்கி விடாதே... அவன் உன்னை ஏமாற்றி விடுவான்... அவன் கேமிரா முன் காட்டும் முகம் வேறு... அதற்குப் பின் அவன் காட்டும் முகம் வேறு... மொத்தத்தில் அவன் ஒரு புரியாத புதிர்..."

தோழியின் அறிவுரை மணீஷாவின் காதில் ஏறினால் தானே... அதைப் பொறாமை என்று புறம் தள்ளியவள் தனது கனவுலகத்தில் மகிழ்ச்சியோடு மிதந்து கொண்டு இருந்தாள்...

நட்சத்திர விடுதியை விட்டு வெளியில் வந்த ஜீவாவின் அலைப்பேசி இசைத்தது...

"ஆனந்த யாழை மீட்டுகிறாய் - அடி
நெஞ்சில் வண்ணம் தீட்டுகிறாய்
அன்பென்னும் குடையை நீட்டுகிறாய்
அதில் ஆயிரம் மழைத்துளி கூட்டுகிறாய்"

'ரிங் டோனை' வைத்தே அது யாரின் அழைப்பு என்பதை உணர்ந்தவனாய்,

"அம்ரு பேபி..." என்று அவனது உதடுகள் அந்த அழைப்பின் சொந்தக்காரரின் பெயரை மென்மையாய் முணுமுணுத்தது...

அந்தக் கணம் அவனது முகம் இயல்புக்கு மாறாய்க் கனிந்திருந்தது...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 2

ஜீவா நட்சத்திர விடுதியை விட்டு வெளியில் வந்தவுடன் அவனது கார் அங்கு வந்து நிற்க, அவனது மெய்க்காப்பாளர் வேகமாக வந்து கார் கதவை திறந்து விட, அடுத்த நொடி காரிலேறி அமர்ந்த ஜீவா ஆர்வமாய் அலைப்பேசியை எடுத்து உயிர்ப்பித்தான்...

"ஹலோ பேபி..." பாசத்துடன் ஒலித்தது அவனது குரல்...

மறுமுனை என்ன சொன்னதோ, "இப்பவா...? லேட் நைட்டாகி விட்டதே பேபி... மார்னிங் வரவா...?" ஆங்கிலமும், ஹிந்தியும் கலந்து அவன் பதில் சொன்னான்...

"நோ..." மறுமுனையில் ஒலித்த பிடிவாத குரலில் ஒரு கணம் யோசித்தவன்,

"ஓகே பேபி... நீ ரெடியா இரு... நான் வந்து ஃபிக்கப் பண்ணிக்கிறேன்..." என்றவன் தனது அலைப்பேசியை அணைத்து விட்டு வெளியில் வேடிக்கை பார்த்தான்...

அவன் சொல்லாமலேயே ஓட்டுநர் அவன் செல்ல வேண்டிய இடத்துக்குக் காரை ஓட்டி கொண்டு சென்றார்... இது தான் ஜீவாவின் சிறப்பு அம்சம்... தனது கண்ணசைவில் எல்லோரையும் ஆட்டுவிப்பவன் அவன்...

கடற்கரையோரம் இருந்த அந்த ஆடம்பர அடுக்குமாடி குடியிருப்பு முன் அவனது கார் நின்றது... ஒரு தளத்திற்கு ஒரு வீடு என்று மொத்தம் இருபது தளம் அதில் இருந்தது...

ஜீவா இறங்கும் முன் கார் கதவை திறந்து விட்ட மெய்க்காப்பாளர், "சார் நான் வேணும்ன்னா...?" பணிவுடன் கேட்கும் முன், கை மறித்து அவனைத் தடுத்தவன் தானே காரில் இருந்து இறங்கி அந்தக் குடியிருப்பினுள் சென்றான்...

அதனுள்ளும் காவல் காக்க என்று அவனது ஆட்கள் பலர் இருந்தனர்... அதனால் அந்த மெய்க்காப்பாளர் சற்று நிம்மதியுடன் தாங்கள் வந்திருந்த ஜீப் மீது சாய்ந்து நின்று கொண்டு சுற்றுப்புறத்தை நோட்டம் விட ஆரம்பித்தான்...

ஜீவா இந்திய பணக்காரர்கள் வரிசையில் முதல் மூன்று இடங்களுக்குள் இருப்பதால் அவனுக்கு உயிர் அச்சுறுத்தல் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும்... அதனால் அரசாங்கமே அவனுக்குப் பாதுகாப்பு அளித்து இருந்தது... ஆனால் அதற்காகும் செலவுகளை மட்டும் அவன் ஏற்றுக் கொள்ள வேண்டும்...

மின்தூக்கியினுள் சென்ற ஜீவா தான் செல்ல வேண்டிய தளமான பதினைந்தாவது தளத்தின் பொத்தானை அழுத்திவிட்டு கைகளைக் கட்டி கொண்டு யோசனையுடன் நின்றிருந்தான்...

தளம் வந்ததும் வெளியில் வந்தவன் அங்கிருந்த வீட்டின் முன் சென்று நின்று கொண்டு அதன் அழைப்பு மணியை அடித்தான்... அவன் வருவதற்காகவே காத்திருந்தார் போன்று நொடி நேரம் கூடத் தாமதிக்காமல் உடனே கதவு திறந்தது...

"ஜீவி... எப்படி இருக்கே...?" ஆர்வமும், உற்சாகமுமாய்க் கேட்டாள் ஸ்மிருதி...

அவள் நலம் விசாரித்ததைச் சிறிதும் கண்டு கொள்ளாமல், "அம்ரு பேபி எங்கே...? பேபி..." என்று உள்பக்கமாய் அவன் குரல் கொடுக்க...

அவன் கேட்பதை காதில் வாங்கிக் கொள்ளாமல் அவள் அவனைக் காதலோடு பார்த்துக் கொண்டு இருந்தாள்... அளவான உடல்கட்டுடன் கம்பீரமாக இருந்தவனின் அழகு அவளை என்றும் போல் இன்றும் மயக்கியது...

அலை அலையாய் முன் நெற்றியில் புரண்ட கேசத்தை ஜெல் போட்டு படிய வாரியிருந்தவனின் முகம் கடுமையில் இறுகி போயிருந்தது கூட அவனுக்குத் தனி அழகை தந்தது... கறுப்பு நிற சட்டையும், சாம்பல் வண்ண பேண்ட்டும், அதே சாம்பல் நிறத்தில் கழுத்தில் கட்டிய டை என்று பார்ப்பதற்குத் திரைப்பட நாயகனை போன்று ஒரு தோற்றம்...

திரைப்பட நாயகன் போன்று என்ன... அவனும் ஒரு திரைப்படத்தில் நாயகனாய் நடித்தவன் தான்... அதுவும் எல்லா மொழிகளிலும் சூப்பர், டூப்பர் ஹிட்டடித்த படத்தின் கதாநாயகன் அவன்... அந்த ஒரு படத்திற்குப் பின் அவன் வேறு எந்தப் படத்திலும் நடிக்கவில்லை... ஆனாலும் அந்தப் புகழ் இன்றும் குறையாது, அழியாது, மறையாது அப்படியே இருந்தது...

அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு தானே அவளும் அவனிடத்தில் மயங்கினாள்... இன்றும் மயங்கி போய்த்தான் இருக்கிறாள்... அதை அவன் தான் உணர மறுக்கிறான்...

"பேபி எங்கே...?" அவளைப் பார்த்து கடுமையுடன் கேட்டவனைக் கண்டு அவள் சிறிதும் பயப்படவில்லை...

மாறாகத் தலையை ஒயிலாகச் சாய்த்து சிரித்தபடி, "உன் பேபி நான் இங்கே தானே இருக்கிறேன்..." என்றாள் கண்களில் மையலுடன்...

அவளது பேச்சு, பார்வையை வெறுப்புடன் நோக்கியவன், "உனக்கு ஒரு தடவை சொன்னால் புரியாதா...?" என்றான் கண்டிப்புடன்...

"அதையே தான் நானும் சொல்கிறேன்... உனக்குப் பல தடவை சொன்னால் கூடப் புரிய மாட்டேங்குதே..." சலிப்புடன் கூறியவள்,

"ஏன் எனக்கு என்ன குறைன்னு என்னை வேண்டாம்ன்னு சொல்ற...?"

அதற்குப் பதிலளிக்க விரும்பாதவனாய், "அம்ரு பேபியை அனுப்ப போறியா...? இல்லை நானே உள்ளே வந்து கூட்டிட்டு போகவா...?" கொஞ்சமும் கோபம் குறையவில்லை அவனுக்கு...

"மகள் வேண்டும்... ஆனால் அவளைப் பெத்த அம்மா நான் மட்டும் வேண்டாமா...? நான் சொல்லாமல் என் மகள் ரூமை விட்டு வெளியில் வர மாட்டாள்..." ஏறக்குறைய கத்திய ஸ்மிருதியை கண்டு அவனது பொறுமை எல்லை கடந்தது...

சும்மாவே அவன் பொறுமை இல்லாதவன்... பக்கவாட்டில் திரும்பி அங்கே ஏற்கெனவே நின்றிருந்த அவனது ஆளை கண்ணசைவில் அழைக்க, அவன் உடனே விரைந்து வந்தான் அருகில்...

மீண்டும் கண்களால் ஜீவா ஸ்மிருதியை அப்புறப்படுத்த சொல்ல, அந்த ஆள் அவன் சொன்னதைச் செயல்படுத்த முயன்ற போது ஸ்மிருதி தானாக வழியை விட்டு விலகி நின்றாள்...

"இதை விட நீ என்னைக் கேவலமாய் அசிங்கப்படுத்த முடியாது..." என்றாள் சீற்றத்துடன்...

அவளின் சீற்றத்தை அலட்சியப்படுத்தி விட்டு உள்ளே நுழைந்தவன் அங்கிருந்த அறை ஒன்றினுள் வேகமாய் நுழைந்தான்...

"டாடி..." அவனைக் கண்டதும் கூவி கொண்டு அவனது கழுத்தை கட்டி கொண்டாள் அம்ரிதா...

"பேபி..." அவளுக்குச் சற்றும் குறையாத ஆவலுடன் அணைத்துக் கொண்டான் ஜீவா...

அவனது வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை கொண்டு வந்தவள் அல்லவா அவள்...!!!

அம்ரிதாவை தனது கரங்களில் தூக்கி கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தவன் அங்கு நின்றிருந்த ஸ்மிருதியை சிறிதும் கண்டு கொள்ளாமல் வாயிலை நோக்கி நடந்தான்...

அவனது அலட்சியம் அவளுள் பெரும் கோபத்தீயை மூட்டியது... அவனது இந்த அலட்சியம் தானே அவளின் இந்த நிலைக்குக் காரணம்...

"அம்ருவின் பிறப்பை நீ மறக்கலாமா...?" தன்னைத் தாண்டி சென்றவனைக் கண்டு குரூரத்துடன் அவள் கேட்க...

அதைக் கேட்டு அவனின் ஆத்திரம் அதிகரிக்க அவள் முன் ஆவேசமாய் வந்து நின்றவன் ஒற்றை விரல் நீட்டி அவளை எச்சரித்தான்...

"இதுக்கு மேலே ஒரு வார்த்தை பேசின..." என்று நெற்றிக்கண்ணைத் திறந்தபடி கோபமாய் மிரட்டியவனைக் கண்டு அவள் இரண்டடி பின்னே நகர்ந்தாள் பயத்தில்...

"எனக்கு என்றுமே பெண்கள் மேல் பெரிதாய் நல்ல அபிப்ராயம் இருந்தது இல்லை... இப்போது உன்னைப் பார்க்கும் போது அந்த எண்ணம் இன்னும் வலுவாகிறது..."

அவனது வார்த்தையில் அவளின் கண்கள் வெறுப்பை உமிழ்ந்தது...

"உன் கையில் இருப்பதும் ஒரு பெண் தான்..."

"நிச்சயமாய் அதை மறுப்பதற்கு இல்லை..." என்று மனதில் எழுந்த பாசத்தோடு சொன்னவன் அம்ரிதாவின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு,

"இவள் தேவதை... உன்னைப் போல் ராட்சசி இல்லை..." என்று கோபமாய் மொழிந்தவன் அவளைத் திரும்பியும் பாராமல் வீட்டை விட்டு வெளியேறினான்...

*************************

ருத்ரஸ்ரீ உறங்கியதும் அறையை விட்டு வெளியில் வந்த ஜெகன் கீழே வந்தான்... ஏனோ அவன் மனம் நிம்மதி இல்லாமல் தவித்தது... தந்தையிடம் சென்று பேசி கொண்டு இருந்தாலாவது சற்று ஆறுதலாக இருக்கும் என்று எண்ணி அவரது அறைக்கு வந்தான்...

அவன் வந்த நேரம் காளிமுத்து இருமி கொண்டு இருக்க, சுபிக்ஷா அவரது நெஞ்சை நீவி விட்டுக் கொண்டு இருந்தாள்... அருகில் அகிலாண்டம் அமர்ந்து கொண்டு கணவரை கவலையாகப் பார்த்துக் கொண்டு இருந்தார்...

காளிமுத்துவிற்குத் தொண்ணூற்றி மூன்று வயதாகிறது... இந்த வயதிலும் அவர் தனது வேலைகளைத் தானே பார்த்துக் கொண்டு திடமாகத் தான் இருக்கிறார்... அகிலாண்டத்திற்கு எண்பத்தியாறு வயதாகிறது... அவருக்கு வயோதிகம் உடல்நிலையைச் சற்றுப் படுத்தத்தான் செய்தது...

"நைனா... என்ன பண்ணுது...?" வேகமாய் வந்த ஜெகன் அவரது தோள்களை ஆதரவாய் பிடித்துக் கொண்டான்...

"ஒண்ணுமில்லை கண்ணப்பா... வயசாகிருச்சு இல்லையா அதான்..." என்று அவனைப் பார்த்து சிரித்தவர் அவனது முகத்தில் இருந்த கவலையைக் கண்டு கொண்டவராய்,

"கண்ணப்பா... முகம் ஏன் ஒரு மாதிரியாய் இருக்கு..." என்று அவனது முகத்தை வருடியபடி கேட்க...

எத்தனை வயதானாலும் அவனது தந்தைக்கு அவன் மகன் தானே... ஜெகனது கண்கள் பனித்தது தந்தையின்

பாசத்தை எண்ணி... அதே சமயம் தன் மகனிடம் தான் இது போல் பாசமாய் இருக்க முடியாத சூழ்நிலையை எண்ணி வருத்தம் அடைந்தான்...

"ராசா பத்தி கவலைப்படுறியா...?" அவனது மனம் உணர்ந்து கேட்டவரை கண்டு ஆம் என்பது போல் தலையசைத்தான்...

ஜீவா பற்றிப் பேச்சு எழுந்ததும் சுபிக்ஷா அங்கிருந்து செல்ல முயன்றாள்...

"சுபிம்மா... எங்கே போற...?" ஜெகன் கேட்க...

"சுடு தண்ணி கொண்டு வரலாம்ன்னு..." என்று அவள் இழுக்க...

"இங்கே ஃப்ளாஸ்க்கில் இருக்கு ராசாத்தி..." அகிலாண்டம் பேத்தியின் மனம் அறியாதவராய் கூற... அவளோ சங்கடத்துடன் நின்றிருந்தாள்...

"சொல்லு கண்ணப்பா...?" காளிமுத்து கேட்கவும்...

"என்ன சொல்ல நைனா...? அவனை நினைச்சு ஸ்ரீ மனசு கஷ்டப்படுறதை பார்க்கும் போது எனக்கு மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு..."

ஜெகனின் வார்த்தைகளில் இருந்த காதல் சுபிக்ஷாவை என்றும் போல் பிரமிக்க வைத்தது...

"சரியாகிருவான் கண்ணப்பா... அவன் என் பேரனாக்கும்..." பெருமையாய் மீசையை முறுக்கியபடி சொன்னார் காளிமுத்து...

"ராசாவுக்கு என்ன ராசா மாதிரி இருக்கான்... சும்மா சும்மா அவனைக் குறை சொல்லிக்கிட்டு..." பேரனுக்கு ஆதரவாகப் பேசிய அகிலாண்டம்,

"ராசா கல்யாணமும், ராசாத்தி கல்யாணமும் பார்த்துட்டேன்னா நான் நிம்மதியா போய்ச் சேர்ந்துடுவேன்..."

அவர் கூறியதை கேட்டு சுபிக்ஷா உள்ளுக்குள் திடுக்கிட்டு தான் போனாள்... கண்களில் மிரட்சியுடன் அவரைப் பார்த்தாள்...

"கண்ணப்பா... சீக்கிரமா ராசாவுக்கு ஒரு நல்ல பொண்ணைப் பாரேன்..."

அடுத்து அகிலாண்டம் கூறியதை கேட்ட பின்னரே சுபிக்ஷா மனம் நிம்மதி அடைந்தது...

"பார்க்கலாம்மா... முதல்ல சுபிக்கு மாப்பிள்ளை பார்க்கலாம்... அதுக்கு அப்புறம் அவனுக்குப் பார்க்கலாம்..." என்று ஜெகன் சொல்ல...

"முடிஞ்சா ரெண்டு கல்யாணத்தையும் ஒரே மேடையில் நடத்திடலாம் கண்ணப்பா... ரெண்டு பேருக்குமே கல்யாண வயசாகிருச்சு..."

"க்கும்... உன் பேரன் அந்த வயசை தாண்டி பல வருசமாகுது... இன்னும் கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்ல மாட்டேங்கிறான்..." என்று மகனை நினைத்து அலுத்து கொண்டவன்,

"சுபிம்மாவுக்கு இது சரியான வயசு தான்... சீக்கிரம் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்துட வேண்டியது தான்..." தங்கை மகளைப் பாசத்துடன் பார்த்தபடி ஜெகன் கூறினான்...

அதைக் கேட்டு அவள், 'எனக்குக் கல்யாணம் வேண்டாம் மாமா...' என்று மனதுக்குள் முனங்கி கொண்டாள்... ஆனால் அதை வாய்விட்டு சொல்லவில்லை...

அகிலாண்டம் அவளை வாஞ்சையுடன் பார்த்தபடி, "நம்ம சொந்தத்தில் நல்ல பையனா பாருய்யா... அதிர்ந்து கூடப் பேசத் தெரியாத பொண்ணு... மனசுல உள்ளதை எடுத்து சொல்ல கூடத் தெரியாது... நாம தான் அதுக்கு நல்லது பண்ணணும்..."

பாட்டி கூறியது அவளுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் பெரியவர்களை எதிர்த்துப் பேசாமல் அமைதியாய் இருந்தாள்...

தாய் கூறியது அனைத்தும் உண்மை என்று உணர்ந்தவனாய் அதை ஆமோதித்தான் ஜெகன்...

"சுபிம்மா... நீ வேணா உன் ரூமுக்கு போ... நான் இங்கே இருக்கேன்..." ஜெகன் அவளைத் தூங்க போகச் சொல்ல...

"இல்லை மாமா... நான் ஐயாவுக்கும், அம்மாச்சிக்கும் துணையா இங்கேயே இருக்கேன்..." என்று பதிலளித்தவளை மனம் நெகிழ பார்த்தவன் சரி என்றபடி எழுந்தான்...

அறை வாயில் வரை வந்தவன் திடுமெனத் திரும்பி பார்க்க, தனது பெற்றோருடன் சிரித்துப் பேசி கொண்டு இருக்கும் மருமகளைக் கண்டு அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... அவனது மனதுக்குள் வேறு ஒரு எண்ணம் இருந்தது... ஆனால் அதைச் செயல்படுத்த முடியாதபடி அவனது மகனின் குணம் குறுக்கே வந்து நிற்கிறதே...

நினைப்பது எல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் தேவையில்லையே... நாளை என்ன நடக்கும் என்பது அந்த ஆண்டவனின் கையில்... ஒரு பெருமூச்சுடன் அறையை விட்டு வெளியில் வந்தான் ஜெகன்...

மறுநாள் சித்தாரா நடத்தும் அந்தச் சிறிய இசைப்பள்ளியில் வகுப்பு நேரம் முடிந்து வெளியில் வந்தாள் சுபிக்ஷா...

அவளது கல்லூரி நேரம் போக இங்கே வந்து மாணவர்களுக்கு இசை வகுப்புகள் எடுக்கிறாள்...

அவளது உயிர்மூச்சு இசை, இசை, இசை மட்டுமே... அதனால் தான் சும்மா இருக்கும் நேரம் கூட இசையோடு தான் கழிக்கிறாள்...

தனது ஸ்கூட்டியில் அவள் ஏறப் போகும் போது அவளின் முன் திடுமென வந்து நின்றான் அபிமன்யு... அதில் பயந்து போனவளாய் நிமிர்ந்தவள் அங்கு அவனைக் கண்டதும் நிம்மதி அடைந்தவளாய் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்...

"லட்டும்மா... எப்போதும் சிரிப்பு தானா...? வாய் திறந்து பேசினால் தான் என்ன...?" அவன் போலியாய் சலித்துக் கொள்ள...

"சொல்லுங்க..." என்றாள் மொட்டையாக...

அவள் பேசியதும் அண்ணாந்து வானத்தைப் பார்த்தவன், "இன்னைக்கு மழை வரும்ன்னு வானிலை அறிக்கையில் கூடச் சொல்லலையே..." என்று கேலியாய் கூற...

அவன் சொல்ல வந்தது புரிந்த போதும் அவள் அமைதியாய் இருந்தாள்... ஏனோ தெரியவில்லை அவளுக்கு வீட்டு ஆட்களிடம் பேசும் அளவிற்கு மற்றவர்களிடம் சரளமாய்ப் பேச்சு வருவதில்லை...

அதிலும் அபிமன்யுவை அவளுக்குச் சிறு வயதில் இருந்து தெரியும்... அந்த அறியா வயதில் அவனுடன் ஓடி பிடித்து விளையாடி பேசி மகிழ்ந்து இருக்கிறாள் தான்... இல்லை என்பதற்கில்லை... ஆனால் பருவம் வந்ததும் தானாய் ஒரு விலகல் வந்துவிட்டது அவளிடத்தில்... அது பெண்களுக்கே உரிய இயல்பான குணமா இல்லை வேறு எதுவுமா...? என்று அவளுக்கே அது புரியவில்லை...

அவளின் அமைதியை என்றும் போல் ரசித்தவன், "சுபி... உன் கிட்ட கொஞ்சம் தனியா பேசணும்..."

"எதுக்கு...?" கேட்கும் போதே அவளது குரல் நடுங்கியது...

"என் கிட்ட என்ன பயம் லட்டும்மா...?" ஆழ்ந்து ஒலித்த அவனது குரலில் அவளுள் எழுந்த பயம் அப்படியே பனி போல் விலகியது...

எத்தனையோ தடவை அவன் அவளுக்கு ஆறுதலாய் இருந்த சமயங்களில் இப்படித்தான் அவனது குரல் ஆழ்ந்து ஒலிக்கும்... அது இன்னமும் அவளது நியாபகத்தில் இருக்கிறது... அந்தச் சிறுவயது தோழமை உணர்வு அவளுள் இருந்த பயத்தைப் போக்க,

"பேசலாம்..." என்றாள் சம்மதமாய்...

"வா போகலாம்..." என்று அவன் அழைக்க...

"ஸ்கூட்டி..." என்று அவள் தயங்க...

"அதைப் பத்திரமாக உன் வீட்டில் கொண்டு வந்து சேர்க்க வேண்டியது என்னுடைய பொறுப்பு..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு தனது காரை நோக்கி நடந்தான்...

காரில் செல்லும் போது இருவரிடையே பலத்த மௌனம் நிலவியது... அந்த மௌனத்தை அவனே கலைத்தான்...

"இன்னும் சில மாதங்களில் உன் படிப்பு முடிந்துவிடும்... அதுக்கு அப்புறம் என்ன பண்ணுவதாய் உத்தேசம்...?" என்று கேட்டவனை நோக்கி கண்களில் கனவு மின்ன,

"மியூசிக்கில் பிஎச்டி பண்ணணும்..." என்றாள் மகிழ்ச்சியோடு...

"ம்... அதுக்கு அப்புறம்..." விடாமல் அவன் கேட்க...

"அதுக்கு அப்புறம்..." ஆள்காட்டி விரலால் மோவாயை தட்டியபடி யோசித்தவள்,

"மியூசிக்கில் பெருசா ஏதாவது சாதிக்கணும்..." என்று ஆசையோடு சொன்னவளை கண்டு,

"சரி அதுக்கு அப்புறம்..." என்று அவன் கேட்க அதற்கு மௌனத்தையே அவள் பதிலாகக் கொடுத்தாள்...

இசையைத் தவிர்த்து யோசிக்க அவளிடத்தில் வேறு விசயங்கள் இல்லை...

"கல்யாணம்...?" என்று அவன் சொன்னதைக் கேட்டு அவள் திகைத்து போய் அவனைத் திரும்பி பார்த்தாள்...

"உனக்குக் கல்யாணத்தைப் பத்தி நினைப்பு இல்லாமல் இருக்கலாம்... ஆனால் உன் வீட்டில் உன்னை அப்படியே விட்டு விட மாட்டாங்க..."

அது அவளுக்குப் புரிந்து தான் இருந்தது... நேற்று அவளது அம்மாச்சி பேசியது அவள் நினைவில் வந்தது... ஆனால் திருமணம் என்றதும் மனதுக்குள் ஏனோ கலக்கமாக இருந்தது அவளுக்கு... ஏனெனில் அவளது இனத்தில் இசையைப் போற்றி ஆராதிப்பவர்கள் என்று யாரும் கிடையாது... அவளை மணம் முடிக்கப் போகிறவன் இசையைப் பற்றி அறியாமல் அவளது குறிக்கோளிற்குத் தடை சொல்லிவிட்டால் அதன் பின் அவளது வாழ்நாள் லட்சியம் என்னாவது...?

"அதைப் பத்தி நான் யோசிக்கலை..." என்றவளின் குரல் நலிந்து ஒலித்தது...

"லட்டும்மா... நான் சுற்றி வளைத்து பேச விரும்பவில்லை... நேரடியாக விசயத்துக்கு வருகிறேன்..." என்றவன் காரை ஓரமாய் நிறுத்திவிட்டு அவள் புறம் திரும்பி அமர்ந்தவன்,

"ஐ லவ் யூ லட்டும்மா..." என்றான் மனதில் இருந்த அத்தனை காதலையும் ஒட்டு மொத்தமாய் அந்த நான்கு வார்த்தைகளில் தேக்கி...

அதைக் கேட்டு அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்...

"உன்னுடைய படிப்பிற்கு, லட்சியத்திற்கு நான் என்றுமே தடையாக இருக்க மாட்டேன் லட்டும்மா... நீ நினைப்பது போல் இசையில் நிறையச் சாதிக்கலாம்... அதற்கு நான் உறுதுணையாக இருப்பேன்..." என்றவன்,

"இப்போ என்னை உனக்குப் பிடிச்சியிருக்கா...?" மென்மையாய் கேட்டவனைக் கண்டு மிரண்டவள்,

"பிடிக்கலை..." என்றாள் பட்டென்று...

"என்னையவா...?" அவன் முகம் பரிதாபமாய் மாறியது...

"இல்லை இல்லை... இந்தக் காதல் தான்..." அவசரமாய் மறுத்து சொன்னவளை கண்டு நிம்மதி அடைந்தவனாய்,

"உன் பயம் எனக்குப் புரிகிறது..." என்று அவளைப் பார்த்து ஆறுதலாய் கூறியவன்,

"நம்ம ரெண்டு பேர் வீட்டிலும் பேசி நம்ம கல்யாணத்துக்குச் சம்மதம் வாங்குறேன்... அதுக்கு அப்புறம் நீ ஓகே சொல்லுவியா...?"

"எங்க வீட்டில் எல்லோரும் ஒத்துக்கிட்டா பார்க்கலாம்..." பட்டும் படாமல் அவள் பதிலளிக்க...

"சம்மதித்தால் உனக்கு ஓகேவா...?"

விடாப்பிடியாய் கேட்டவனை ஏறிட்டு பார்த்தாள் அவள்... தனது குறிக்கோளுக்குத் தோள் கொடுக்க நினைக்கும்

அவனை இரு வீட்டார் சம்மதத்துடன் கைப்பிடிப்பதில் எந்தத் தவறும் இருப்பதாய் அவளுக்குத் தோன்றவில்லை... அதனால் அவள் அமைதியாய் சரியென்று தலையசைக்க, அவனுள் மகிழ்ச்சி கும்மாளமிட்டது...

"ரொம்பச் சந்தோசம் லட்டும்மா..." என்றவன் தனது சந்தோசத்தை வெளிப்படுத்தும் வகையறியாது, குதியாட்டம் போட்ட மனதினை கட்டுப்படுத்த முடியாமல் காரின் முன்னால் இருந்த கண்ணாடியில் தனது முகத்தைப் பார்த்து புன்னகைத்தபடி முன்னுச்சி முடியை வலது கை விரல்களால் அழுந்த கோதி கொண்டான்...

சுபிக்ஷாவோ அமைதியாய் தனது கை விரல்களை ஆராய்ச்சி செய்து கொண்டு இருந்தாள்...

"லட்டும்மா..."

சில நொடி நேரத்திற்குப் பின் திடுமென ஒலித்த அவனது குரலில் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள் அவள்...

"இப்போ எல்லாம் நீ ஏன் என்னை மாமான்னு கூப்பிடறது இல்லை...?" ஏக்கமான குரலில் கேட்டவனின் வார்த்தைகள் அவளுள் ஆறாத காயமாய் இருந்த ரணத்தை மீண்டும் கீறிவிட்டது...

'என்னை மாமான்னு கூப்பிட்ட உன்னைக் கொன்னுருவேன் கொன்னு... யாருக்கு யாருடி மாமா...?' கர்ஜனையாய் ஒலித்த ஒரு குரல் அவளது காதில் இன்னமும் ஒலித்து அவளை விதிர்க்கச் செய்தது...

அவளது மௌனத்தை அவன் வேறு மாதிரி எடுத்துக் கொண்டான்...

"சின்ன வயசில் அடிக்கடி என்னை மாமா, மாமான்னு கூப்பிடுவ... அது உனக்கு நியாபகம் இருக்கா...?"

அது மட்டுமா அவளுக்கு நியாபகத்தில் இருக்கிறது... வேறு சில வேண்டாத நினைவுகளும் சேர்ந்து அல்லவா அவளது நினைவில் அழியாமல் இருக்கிறது...

அப்போது தான் அவளுக்கு அந்த விசயம் உறைத்தது... அதை மறைக்க எண்ணாமல் அப்படியே கேட்டு விட்டாள்...

"நீங்க எப்படி என்னை...?" மேலே சொல்ல முடியாமல் நிறுத்தியவள்,

"நான் உங்க அழகுக்குச் சற்றும் பொருத்தமில்லையே..." என்றாள் உள்ளடங்கிய குரலில்...

நிச்சயம் அது தாழ்வு மனப்பான்மையினால் அல்ல... அவள் மனதில் இருந்த காயத்தினால் தான் அவள் அப்படிக் கேட்டது...

அபிமன்யுவிற்கும் அவள் அப்படிக் கேட்டதன் காரணம் புரியாமல் இல்லை... அறியாத வயதில் அவள் அடைந்த மனக்காயத்தின் விளைவு இது என்பதை உணர்ந்தவனாய் பொறுமையாய்,

"உன் குணத்தின் முன் இந்த அழகு எல்லாம் இரண்டாம் பட்சம் தான் லட்டும்மா..." என்றவன் தன் முன்னிருந்த கண்ணாடியை அவள் முன் திருப்பி,

"இந்தக் கண்ணாடியில் உன் முகத்தைப் பார்... நீ அழகா இல்லையான்னு அது சொல்லும்...” என்றவனின் குரல் திடீரென்று மென்மையானது...

“என் கண்ணுக்கு நீ எப்போதும் பேரழகி தான்..." என்றான் உளமார, உண்மையாய்...

அதில் அவளது மனச்சுணக்கம் சற்றுக் குறைந்தது...

"இருந்தாலும் ஒரு முறைக்கு இரு முறை யோசிச்சிக்கோங்க... என்றாவது ஒரு நாள் இந்த வித்தியாசம் கண்ணில் படும் போது நம் வாழ்க்கை தான் கேள்விக்குறியாகிவிடும்..."

அவள் கூறிய மற்ற விசயத்தை அப்படியே அம்போவென விட்டு விட்டு அவள் கடைசியாய் கூறிய வார்த்தைகளை மட்டும் கருத்தில் எடுத்துக் கொண்டு,

"அப்போ நம் கல்யணத்திற்கு உனக்குச் சம்மதமா...?" என்று மகிழ்வோடு அவன் கேட்க...

"நான் எப்போது சம்மதம் சொன்னேன்...?" அவள் குழப்பமாக அவனைப் பார்க்க...

"அதான் இப்போது... நம் வாழ்க்கைன்னு சொன்னாயே..."

அவன் சொன்னதைக் கேட்டு முறைக்க முயன்று தோற்றவளாய் அவனைப் பார்த்து புன்னகைத்தாள் அவள்... அதை மனம் நெகிழ பார்த்துக் கொண்டிருந்த அபிமன்யு,

"நீ இப்படியே சிரித்துக் கொண்டு இருந்தால் போதும்... மற்றதை நான் பார்த்துக்கிறேன்..." என்க...

அதைக் கேட்டு அவள் மௌனமாய்த் தலையசைக்க... அவன் சந்தோசத்துடன் விசிலடித்தபடி காரை கிளப்பினான்...

*******************

ஜீவா அம்ரிதாவை அழைத்துக் கொண்டு வெளியில் வந்திருந்தான்... அவளோடு சேர்ந்து தானும் சிறு பிள்ளையாய் மாறி எல்லா இடங்களையும் சுற்றி பார்த்து மகிழ்ந்தவன் கடைசியாய் அவளை அழைத்துக் கொண்டு உணவு உண்பதற்காக நட்சத்திர விடுதிக்கு வந்தான்...

அம்ரிதாவை தனி நாற்காலியில் அமர வைத்து அவளுக்குத் தேவையானதை செய்து விட்டு அவன் நிமிரும் போது அவனது எதிரில் வந்தான் ரிஷ்வந்த்...

ரிஷ்வந்த் ஜீவாவை போல் பெரிய பணக்காரன் தான்... அவனின் தொழில் எதிரியே இந்த ரிஷ்வந் தான்... தொழிலில் எப்போதும் இருவருக்கும் இடையில் பலத்த போட்டி நிலவி கொண்டே இருக்கும்... வெற்றியும், தோல்வியும் இருபக்கமும் சரிசமமாய் இருக்கும்...

"உன் பெண் உன்னைப் போல் அழகாய் இருக்கிறாள்..."

அம்ரிதாவின் தலையை வருடியபடி கூறிய ரிஷ்வந்த், ஜீவாவை கண்டு நக்கலாய் சிரித்தான்...

அவனிடம் இருந்து அம்ரிதாவை தன் பக்கமாய் இழுத்த ஜீவா,

"தேங்க்ஸ்..." என்றபடி மெனு கார்டில் தன் பார்வையைப் பதிக்க...

"இவள் அம்மாவை ஒரு நாள் இரவு என்னிடம் அனுப்பி வைக்கிறாயா...? அதற்கு ஈடாக நீ கேட்பதை எல்லாம் தருகிறேன்..."

விகாரமாக இளித்தபடி அசிங்கமாய்க் கூறியவனைக் கண்டு, "டேய்..." என்று ஆங்காரமாய்க் கத்தியபடி அவனது சட்டையைக் கொத்தாய்ப் பிடித்திருந்தான் ஜீவா...

"டாடி..." அம்ரிதாவின் அழுகை குரலில் தனது கையைத் தளர்த்தியவன் ரிஷ்வந்தை கண்டு கோபமாய் முறைத்தபடி அம்ரிதாவிடம்,

"நாம வேற ஹோட்டல் போகலாம் பேபி..." என்றபடி அவளைத் தூக்கி கொண்டு அங்கிருந்து அகன்றான்...

தொழிலில் தன் கண்ணில் விரல் விட்டு ஆட்டும் ஜீவா, ஸ்மிருதி விசயத்தில் மட்டும் அப்படியே பெட்டி பாம்பாய் அடங்கிப் போவதை கண்டு ரிஷ்வந்த்திற்குச் சிரிப்பாய் வந்தது...

"என்னோட துருப்புச் சீட்டே அவள் தான்டா... அவளை வைத்து உன்னை எப்படி எல்லாம் ஆட்டுவிக்கிறேன் என்று பார்..." என்று சத்தம் போட்டு கத்தியவனின் குரல் காற்றில் கரைந்தே போனது...

இசையாகும்...

## ஸ்வரம் : 3

"டாடி..." என்றழைத்த அம்ரிதாவின் குரலில் அவளைத் திரும்பி பார்த்த ஜீவா புன்னகையுடன்,

"சொல்லு பேபி..." என்க...

"என்னோட ப்ரெண்ட் பேரு என்ன...?" ஆங்கிலத்தில் வினவிய மகளின் புத்தி சாதுர்யத்தை எண்ணி மனதில் வியந்தபடி,

"மினி..." என்றான் சரியாக...

"என்னோட ஃபட்டர்ப்ளை பேரு...?" மீண்டும் அவள் கேள்வி கேட்க...

"மின்னி..." என்றான் புன்னகை மாறாமல்...

"கரெக்ட்..." என்று கைத்தட்டி கலகலவெனச் சிரித்தாள் சின்னவள்...

தந்தை தான் சொல்வதைச் சரிவரக் கவனித்துக் கேட்கிறானா இல்லையா என்கிற சந்தேகத்தை மகள் அவ்வப்போது இப்படிக் கேள்வி கேட்டு நிவர்த்திச் செய்து கொள்வாள்... சரியாகப் பதில் சொல்லிவிட்டான் என்றால் ஜீவா தப்பித்தான்... இல்லை என்றால் பெண்ணரசியின் கடும் கோபத்திற்கு அவன் ஆளாக நேரிடும்... அதனாலேயே அம்ரிதா விசயத்தில் மட்டும் அவன் என்றுமே 'அலர்ட் ஆறுமுகம்' தான்...

ஆம், அவளுடைய எல்லா விசயத்திலும் அவன் 'அலர்ட்டாக'த் தான் இருக்கிறான்... இல்லை என்றால்...? அதைப் பற்றி நினைக்கும் போதே அவனது தாடைகள் கோபத்தில் இறுகியது...

"டாடி..." சின்னவள் அவனது கையைப் பிடித்து உலுக்க...

"யா பேபி..." என்றவன் தனது யோசனைகளைக் கலைந்துவிட்டு மகளின் பேச்சில் கவனத்தைச் செலுத்தினான்...

அவளும் பள்ளியில் நடந்தது, தங்களது குடியிருப்பில் நடந்தது, தனது தோழிகளைப் பற்றி என்று அனைத்தையும் ஒன்று விடாமல் பேசி கொண்டு வர, அவன் சந்தோசமாய் அதைக் கேட்டபடி காரை ஓட்டிக் கொண்டு வந்தான்...

எத்தனை கோடி ரூபாய் கொட்டி கொடுத்தாலும் கிடைக்காத மகிழ்ச்சி, விழிகளை அகல விரித்து ஆர்வம் பொங்க பேசும் மகளின் வார்த்தையில் கொட்டி கிடந்ததை உணர்ந்தவனின் புன்னகை இன்னமும் விரிந்தது...

அதற்குள் குடியிருப்பு வந்துவிடக் காரை நிறுத்தியவன் முதலில் தான் இறங்கினான்... அவன் மறுபக்கம் வந்து கார் கதவை திறக்கும் முன் மெய்க்காப்பாளர் அங்கு வர, ஒரு கண்ணசைவில் அவரைத் தடுத்து நிறுத்தியவன் தானே கார் கதவை திறந்து மகளைக் கைகளில் அள்ளி கொண்டு நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்...

தந்தையின் எண்ணம் புரிந்தவளாய் மகளும் தந்தையுடன் ஒன்றி கொண்டாள்...

மின்தூக்கியில் செல்லும் போது திடுமென அம்ரிதா, "டாடி..." என்க...

'என்ன பேபி...?' என்பது போல் பார்த்த ஜீவாவின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டது அந்தச் சின்னச்சிட்டு...

'மகள்களைப் பெற்ற அப்பாக்களுக்கு மட்டும் தான் தெரியும் முத்தம் காமத்தை சேர்ந்ததல்ல என்று...' மகளுக்கு என்று பிரத்யேகமாக வைத்திருக்கும் 'காலர் ட்யூனின்' ஆரம்ப

வரிகள் எத்தனை சத்தியமான உண்மை என்பதை அக்கணம் உணர்ந்தான்...

அவனது இரும்பு மனம் சற்று நெகிழத் துவங்கியது...

பதிலுக்கு அவனும் அவளது கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான்...

"சோ ஸ்வீட் டாடி..." என்று அவனது கழுத்தை கட்டி கொண்டு அவனது தோள் வளைவில் முகம் புதைத்து கொண்டாள் மகள்...

வீட்டின் முன் நின்று அழைப்புமணி அடித்தவனுக்கு ஸ்மிருதியை சந்திக்க வேண்டும் என்பதே சற்று எரிச்சலாக இருந்தது... ஆனாலும் அம்ரு பேபிக்காக அதைப் பொறுத்துக் கொண்டான்...

அவன் எரிச்சலுற்றது போல் தான் கதவை திறந்த ஸ்மிருதியின் தோற்றம் இருந்தது... உடல் அங்கங்களை அப்பட்டமாய் எடுத்து காட்டும் கையில்லாத அந்த இரவு உடை அத்தனை அபாயகரமாய் இருந்தது...

அதைக் கண்டு முகத்தைச் சுளித்தவன் கண்களில் கடினமேற, "ரா..." என்று அங்கு நின்று கொண்டிருந்த மெய்க்காப்பாளரை அழைக்கும் முன் ஸ்மிருதி அவனை முறைத்துக் கொண்டே சோபாவில் கிடந்த மேலங்கியை எடுத்து வேகமாக அணிந்து கொண்டாள்...

அதைக் கண்டு அவனது கண்களின் கடினம் சற்று குறைந்து நிம்மதி படர்ந்தது... அந்தளவுக்கு அவள் கீழ்த்தரமாய் இறங்கி விடவில்லை என்று...

பின் அவளைக் கண்டு கொள்ளாமல் மகளைக் கீழே இறக்கி விட்டவன் அவள் புறமாய் அவள் உயரத்திற்கு மண்டியிட்டு அமர்ந்தவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு,

"குட்நைட் பேபி..." என்க...

சின்னவளும் அவனை முத்தமிட்டு, "குட்நைட் டாடி..." என்றவள்,

"என்னைத் தூங்க வச்சிட்டு போங்களேன் டாடி..." என்று கெஞ்சும் குரலில் கேட்டவளை கண்டு அவனுக்கு மனம் வலித்தது...

"இல்லை பேபி... நான் உள்ளே வரலை..." என்றவனைப் பார்த்து,

"ஆமாம்... ஆமாம்... உள்ளே வந்தா உன் டாடியோட கற்பு காணாமல் போய்விடும்..." இகழ்ச்சியான குரலில் கூறிய ஸ்மிருதியை முறைத்தவன் ஒன்றும் பேசாது மகளிடம் திரும்பி,

"பேபி சமத்தா போய்த் தூங்குவீங்களாம்... டாடி நெக்ஸ்ட் வீக் வந்து பேபியை கூட்டிட்டு போவேனாம்..." என்று எடுத்து சொல்ல,

"ஓகே டாடி..." சமத்தாய் தலையாட்டினாள் மகள்...

அன்னையிடம் திரும்பிய அம்ரிதா, "ம்மா... சாக்லேட்... ப்ரிஜில் வைங்க..." என்றபடி கையிலிருந்த கவரை அவளிடம் நீட்டினாள்...

ஸ்மிருதி அதை வாங்கியதும் தந்தையிடம் திரும்பியவள், "தினமும் ஒரு சாக்லேட் தான் சாப்பிடுவேன்... ப்ராமிஸ்..." என்று சொல்ல...

அதில் மனம் நெகிழ்ந்தவன், "எனக்கு என் பேபியை பத்தி தெரியும்டா... ஐ ட்ரஸ்ட் யூ பேபி..." என்று அவள் கைப்பற்றி விரலில் முத்தமிட...

"பை டாடி..." என்று கையாட்டியவள் சந்தோசமாய்த் தனது அறைக்குச் செல்ல...

மகள் போவதை பார்த்து கொண்டிருந்தவன் மண்டியிட்ட நிலையில் இருந்து எழுந்து திரும்பி செல்ல எத்தனிக்கும் போது ஸ்மிருதி அவனை அழைத்தாள்...

"ஜீவி..."

அவளைத் திரும்பி பார்க்கவில்லை என்றாலும் அவனது நடை நின்றது...

"நீ ஒரு நல்ல தந்தை ஜீவி... அது போல் எனக்கு ஒரு நல்ல கணவனா எப்போ மாறப் போற...?"

அதைக் கேட்டு அவனது கோபம் தலைக்கேறியது...

"நடக்காத ஒண்ணைப் பத்தி திரும்பத் திரும்பப் பேசாதே..." என்றான் வெடுக்கென்று...

"ஏன் நடக்காது...?" என்றவளின் குரலில் இப்போது ஏனோ கோபம் இல்லை... மாறாக ஆதங்கமே இருந்தது...

"முன்பு எல்லாம் நீ என் மேல எந்தளவுக்குப் பாசமா இருப்ப தெரியுமா...? இப்போ ஏன் ஜீவி இப்படி மாறி போன...? ஏன் இப்படிக் கோபப்படுற...?"

"ஏன்னா... முன்பு மாதிரி இப்போ நீ இல்லையே..." என்றவனின் குரலும் இளகவில்லை... அவனும் இளகவில்லை...

"காதலிக்கிறது தப்பா ஜீவி...?" குரலில் ஏக்கம் இழையோட கேட்டவளை கண்டு விலுக்கென்று அவன் திரும்பினான்...

அரை நொடி தான் என்றாலும் அவனது பார்வையில் தெரிந்த மாற்றத்தில் அவளது உள்ளம் நிம்மதி அடைந்தது...

அதில் அவளது மனம் நிறைந்தது...

"தப்பானவனைக் காதலிக்கிறதும் தப்புத்தான்..." என்றான் தனது உள்ளத்தை மறைத்துக் கொண்டு...

"இல்லை... இல்லை... நான் தப்பானவனைக் காதலிக்கலை... நீ தப்பானவன் கிடையாது..." தலையை இடமும், வலமுமாய் மறுத்து அசைத்து முகம் சிவக்க கத்தியவளின் கண்கள் கண்ணீரை பொழிந்தது...

பெண்ணின் கண்ணீரை கண்டால் பேயும் இரங்குமாம்... ஆனால் அவளின் கண்ணீரை கண்டு அவன் இரங்கவில்லை... அப்படி இரங்கினால் அடுத்த நொடி என்ன நடக்கும் என்று அவனுக்கு நன்கு தெரியும்...

அதனால் இரும்பின் உறுதியோடு விறைத்துக் கொண்டு நின்றவன் அவளைத் தீர்க்கமாகப் பார்த்தபடி,

"இல்லை... நான் தப்பானவன் தான்... உன் வழி வேறு... என் வழி வேறு..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் அங்கிருந்து அகன்றுவிட்டான்...

அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவளின் கண்களில் இருந்த கண்ணீர் அவனின் பிம்பத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் மங்கச் செய்தது...

அவன் அவளை விட்டு மனதளவில் மெல்ல மெல்ல விலகிச் செல்வதைப் போல்...!!!

அவனது வார்த்தைகளில் இருந்த உண்மை அவளது நெஞ்சத்தைச் சுட்டுப் பொசுக்கியது... ஆனால் காதல் கொண்ட பேதை நெஞ்சமோ அந்த உண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்து கசந்து போய் விரக்தியுடன் நின்றது...

"ஜீவி... நீ எனக்குக் கிடைக்காவிட்டால் நான் என் உயிரை விட்டுவிடுவேன்டா..." முணுமுணுத்தவளின் கண்களில்

கண்ணீர் மட்டும் நிற்கவில்லை...

களைத்து போய் வீடு திரும்பிய ஜீவாவை புன்னகை முகத்துடன் வரவேற்றார் ராம்குமார்...

"க்ராண்ட்ப்பா... நீங்க இன்னும் தூங்கலையா...?" அவரிடம் கேட்டுக் கொண்டே அவர் அருகில் அமர்ந்தான் அவன்...

உடல் சோர்வோ, உள்ளத்து சோர்வோ ஏதோ ஒன்று அவனை அலைக்கழிக்கச் சோபாவில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடி கொண்டான்...

"அம்ருவை வீட்டில் விட்டுட்டு வந்துட்டியா...?"

அவரது வார்த்தையில் கண்களைத் திறந்து பக்கவாட்டில் தலையைச் சரித்து அவரைப் பார்த்தவன்,

"ம்... ம்..." என்றான்...

"அடுத்தத் தடவை அவளைக் கூட்டிட்டு வரும் போது கூட இரண்டு நாள் இருக்கிற மாதிரி கூட்டிட்டு வா ஜீவா... அவள் இருந்தால் எனக்குப் பொழுது நல்லா போகுது..." என்றவரை இமைக்காமல் பார்த்தான் அவன்...

அன்றில் இருந்து இன்று வரை அவனுக்குப் பிடித்தது எல்லாம் அவருக்குப் பிடித்ததாய் மாற்றிக் கொண்டு தனக்காக வாழ்ந்து வரும் அவரைக் கண்டு அவனுக்கு எப்போதும் போல் வியப்பாய் இருந்தது...

யாருமே நெருங்க முடியாத முள் மனதோடு இருந்தவனிடம் நேசக்கரம் நீட்டியவர் அவர் மட்டுமே... ஏனோ தெரியவில்லை அவனுக்குமே அவரிடத்தில் அப்படி ஒரு ஒட்டுதல் ஏற்பட்டுவிட்டது...

அவனுக்கு வேண்டிய சுதந்திரம் கொடுத்து அவனை அவனின் விருப்பத்திற்கேற்ப வாழ வழி செய்தவர் அவர்...

அதனால் தான் அவன் தன் இயல்பில் இருந்து மாறாமல் இன்றும் அப்படியே இருக்கிறான்... அது தான் அவனுக்கும் பிடித்திருக்கிறது...

'நான் இப்படித்தான்... என்னைப் புரிந்து கொள்பவர்கள் புரிந்து கொள்ளட்டும்... பிடிக்காதவர்கள் விலகி செல்லட்டும்...' இதைத் தான் தாரகமந்திரமாகக் கொண்டு அவன் வாழ்ந்தான்...

அதைப் புரிந்து கொண்டு அவனது செயல்களை ஊக்குவித்தவர் ராம்குமார்... ஆனால் ஒன்றை மட்டும் அவர் அவனிடத்தில் வலியுறுத்தி கூறினார்...

"எந்த நிலையிலும் என் வளர்ப்புச் சரியில்லாமல் போய்விட்டது என்று யாரும் என்னை நோக்கி குற்றம் சாட்டி கை நீட்டி விடாதபடி நீ நடந்து கொள்ள வேண்டும்..."

இந்த வார்த்தைகளைப் பல வருடங்களாகக் கட்டி காத்துக் கொண்டு வந்தவன் இப்போது சில வருடங்களாக அதைக் காற்றில் பறக்கவிட்டுக் கொண்டிருக்கிறான்... அவனையும் மீறி சில நிகழ்வுகள் அவனின் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்து விட்டது...

இனி இது தான் அவனது வாழ்க்கைப் பாதை... இதிலிருந்து அவனால் மீள முடியாது... அதையும் மீறி மீண்டு விட மாட்டோமா என்கிற நப்பாசை அவனின் மனதின் ஓரத்தில் செல்லரித்துக் கொண்டு இருக்கிறது...

அந்த எண்ணம் அவனை முழுவதும் அரித்துத் தின்றுவிடாமல் இருப்பதற்காக அதைக் காலத்தின் கையில் கொடுத்துவிட்டு அவன் ஓடி கொண்டு இருக்கிறான்... இது தான் அவன்...

"கட்டாயம் க்ராண்ட்ப்பா..." என்றான் புன்னகையுடன்...

"சாப்பிட்டியா...?" தாத்தா கேட்டதும் தான் அவனுக்குத் தான் உண்ணாதது நியாபகத்திற்கு வந்தது...

ரிஷ்வந்த் பேசிய வார்த்தைகளின் தாக்கத்தில் அவனால் உண்ண முடியவில்லை... அதனால் அம்ரிதாவிற்கு மட்டும் உணவு வாங்கிக் கொடுத்து உண்ண வைத்தவன் தான் மட்டும் உண்ணாமல் வந்து விட்டான்...

'ரிஷி... நீ பேசிய பேச்சிற்கு உன்னைச் சும்மா விட மாட்டேன்டா...' மனதில் நினைத்தவன் கோபத்தில் பல்லை கடித்தான்...

கோபத்தில் சிவந்த அவனது முகத்தைச் சிந்தனையுடன் பார்த்த ராம்குமார் அவனின் தோளை தொட்டு, "ஜீவா... ஆர் யு ஆல்ரைட்...?" என்க...

"ஆங்... எஸ்..." என்றவன் நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டான்...

"சாப்பிட்டியான்னு கேட்டேன்..."

"இல்லை..." என்று தலையசைத்தவனை ஆதுரத்துடன் பார்த்தவர் வேலை செய்பவனை அழைத்து,

"சாண்ட்விட்ச் ஏதாவது செய்து ஜீவா ரூமில் கொண்டு போய் வை... அப்படியே சூடாய் பால்..."

அவர் சொன்னதும் வேலையாள் சரியென்று சென்றுவிட... ஜீவா சோபாவில் இருந்து எழுந்தவன்,

"குட்நைட்..." என்று அவரிடம் முணுமுணுத்துவிட்டு தனது அறையை நோக்கி நடந்தான்...

அவன் செல்வதைச் சிந்தனையுடன் பார்த்துக் கொண்டு இருந்தார் அந்தப் பெரியவர்... அவனை நினைத்து பெரும் கவலை எழுந்தது அவருள்...

ஜீவா குளித்து முடித்து வரும் போது வேலையாள் உணவை கொண்டு வைத்து விட்டு போக அதை உண்டு முடித்தவன் உறக்கம் வராமல் வேலையைச் செய்ய எண்ணி மடிகணினியை கையில் எடுத்தான்...

அம்ரிதாவுடன் நேரத்தை செலவழித்ததில் அவனது வேலைகள் மலை போல் குவிந்து கிடந்தது... அந்த மலையளவு வேலையை மடுயளவிற்கு மாற்றும் சக்தி அம்ரிதாவின் புன்னகைக்கு மட்டுமே உண்டு என்பது அவன் மட்டுமே அறிந்த ரகசியம்...

மகளின் நினைவில் உதட்டில் புன்னகை விரிய மடிகணினியில் ஆழ்ந்தவன் தனது வேலையில் மூழ்கிப் போனான்...

விடியற்காலை இரண்டு மணிக்கு தனது வேலைகளை முடித்தவன் அப்போது தான் மணியைப் பார்த்தான்...

'இதற்கு மேல் எங்கு உறங்க...?' என்று நினைத்தவன் மடிகணினியை அணைத்து வைத்து விட்டு ரிலாக்சாகக் கட்டிலில் சாய்ந்தமர்ந்தான்...

அவனது காதில் ரிஷ்வந்த் கூறிய வார்த்தைகளே மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டு இருந்தது...

'ரிஷி... ஆரம்பிக்கிறது வேணும்ன்னா நீயாக இருக்கலாம்... ஆனா அதை முடித்து வைக்கிறது நானாகத் தான் இருப்பேன்... உன் வார்த்தைகளைக் கொண்டு உன்னை நான் அடிக்கலை, என் பெயர் ஜீவா இல்லைடா... நீ சொல்லிக்கிட்டு செய்வ... ஆனா நான் செஞ்சிட்டுத் தான்டா சொல்லுவேன்... நாளைக்குப் பாரு என்னோட ஆட்டத்தை...' மனதில் ஆங்காரமாய் நினைத்துக் கறுவி கொண்டான் அவன்...

தான் திட்டமிட்டதை எப்படிச் செயலாற்றுவது என்று தீர்க்கமாக யோசித்து முடிவு செய்த பின்னரே அவன் மனம்

சற்று நிம்மதி அடைந்தது...

****************************

அந்த நட்சத்திர விடுதியின் உள்ளே இருந்த 'நைட் கிளப்' அரைக் குறை வெளிச்சத்திலும் அழகாய் ஜொலித்தது... பெரிய பெரிய பணக்காரர்கள் மட்டும் வருகை தரும் அந்தக் கிளப்பிற்கு அந்தப் பெண்ணும் வருகை தந்திருந்தாள்...

அனைவரது கையிலும் குடியிருந்த மது பானம் அவளது கையிலும் குடியிருந்தது... அங்கு ஆடி கொண்டிருந்தவர்களை வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தவள் மது பானத்தின் ஒவ்வொரு துளியையும் ரசித்து ருசித்து அனுபவித்துப் பருகி கொண்டிருந்தாள்...

"ஹாய் தீபு டார்லிங்..." என்றபடி அவள் முன்னே வந்தமர்ந்தான் ஜீவா...

தன் முன் வந்தமர்ந்த ஜீவாவை இமைக்க மறந்தவளாய் பார்த்திருந்தவள் தனது விழிகளை அகல விரித்து அதில் அவன் மீதான மயக்கத்தை அப்பட்டமாய்க் காட்டினாள்...

"ஹேய் ஜீவா... நீயா... நீயா என்னிடம் பேசியது..." உற்சாகக் குரலில் கத்தியவள் தனது கையைக் கிள்ளி பார்த்து இது கனவு அல்ல நனவு என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டாள்...

"எதுக்கு இத்தனை சந்தேகம் தீபு...? நானே தான்..." தனது வசீகரப் புன்னகையில் அவளை வசீகரித்தான் அந்த வசீகரன்...

"பின்னே சந்தேகம் வராதா என்ன...? என்னை எல்லாம் ஒரு மனுசியாய் மதித்து நீ பேசுவது அதிசயம் அல்லவா..."

ஏதோ அதிசயம் நிகழ்ந்தது போல் அவள் சிலாகித்துப் பேச, அவனோ ஒருவித மர்மப் புன்னகையுடன் அவளைப்

பார்த்துக் கொண்டு இருந்தான்...

"ஏனோ தெரியலை பேபி... இன்னைக்கு உன் நியாபகமாகவே இருந்தது..." சரளமாய் அவன் அவிழ்த்து விட்ட பொய் அவளிடத்தில் நன்றாக வேலை செய்தது...

"வாட்...? த க்ரேட் ஜீவாவுக்கு என்னைப் பத்தி நினைக்கக் கூட நேரமிருக்கா...?" ஆச்சிரியப்பட்டவள் மீண்டும் விழிகளை அகல விரிக்க...

அவளது விழிகளை இமைக்காது பார்த்தபடி, "கடல் போன்ற உன் விழியில் மூழ்கிவிட என் மனம் துடிக்குது பேபி..." என்றவனின் குரலில் அத்தனை காதல் ரசம் சொட்டியது...

"ஓ ஜீவா... இந்த வார்த்தையைக் கேட்க நான் எத்தனை வருசம் தவம் இருந்தேன் தெரியுமா...?" என்றவள் சட்டென்று அவனது வலது கையைப் பிடித்துக் கொண்டாள்...

அதைத் தனக்குச் சாதகமாக எடுத்து கொண்டவன் தனது கையை வளைத்து அவளது கையைப் பிடித்துக் கொண்டு மென்மையாய் அதை அழுத்தி கொடுத்தான்...

பின்பு மெதுவே, "ஐ நீட் யுவர் கம்பெனி..." என்று கிசுகிசுப்பாய் முணுமுணுத்தவனின் வார்த்தையில் அப்படியே கிறங்கி போனாள் தீபிகா...

மனதின் எண்ணங்களை நாசுக்காக வெளியிடுவதில் ஆங்கில வார்த்தைகளுக்கு நிகர் அவைகள் மட்டும் தான்... வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து கோர்த்துக் கூறினான் அவன்...

"யா ஷ்யூர் ஜீவா... ஐம் ஆல்வேஸ் அட் யுவர் சர்வீஸ்..." என்றவள் அவன் அருகில் வந்து நெருங்கி அமர்ந்தாள்...

அதை அவன் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை... அவளிடம் மேலே பேசியபடி மது பானத்தை அவளுக்கு ஊற்றி கொடுத்து தானும் ஒன்றை கையில் எடுத்துக் கொண்டான்...

அவன் கொடுத்ததை மறுக்காமல் அவள் வாங்கிக் குடிக்க, அவனோ தனது கையில் இருந்த மது பானத்தைக் குடிக்காமல் அதை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்...

நேரம் செல்ல செல்ல மூக்குப் பிடிக்கக் குடித்துவிட்டு தள்ளாடியவளை அணைத்து பிடித்தார் போன்று அழைத்துக் கொண்டு அந்த விடுதியை விட்டு வெளியில் வந்தான் ஜீவா...

தனது காரில் அவளை ஏற்றியவன் அவளை அழைத்துக் கொண்டு நேரே தனது பண்ணை வீட்டிற்குச் சென்றான்...

மறுநாள் விடியற்காலை மூன்று மணியளவில் ரிஷ்வந்த் வீட்டின் வெளிப்புறம் இருந்த இரும்பு கதவின் முன் தனது காரை நிறுத்தினான் ஜீவா...

யார் என்று காருக்குள் எட்டி பார்த்த காவலாளி தனது முதலாளியின் எதிரியான ஜீவாவை அடையாளம் கண்டு திகைத்து போய் விழிக்கும் போது, அந்த ஜீவாவின் அருகில் இருந்த இருக்கையில் போதையில் விழி சொருகி போய் அமர்ந்திருந்த தனது முதலாளியம்மாவை கண்டு இன்னமும் அதிகமாய் அதிர்ந்து போனவன்,

'பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக்கு எதற்கு...?' என்று எண்ணியபடி கதவை அகல திறந்து வைக்க, ஜீவாவின் கார் சுதந்திரமாய் உள்ளே சென்று வீட்டின் போர்ட்டிகோவில் வந்து நின்றது...

உல்லாசமாய்ச் சீட்டிகை அடித்தபடி காரை விட்டு இறங்கிய ஜீவா மறுபக்கம் வந்து தீபிகாவை கீழிறக்கி

கைத்தாங்கலாக அணைத்தபடி வீட்டிற்குள் அழைத்துச் சென்றான்...

வரவேற்பறையில் அமர்ந்திருந்த ரிஷ்வந்த், ஜீவா தனது வீட்டிற்குள் நுழைவதை கண்டு கோபத்துடன் எழுந்தவன் தனது மனைவி ஜீவாவின் தோள் சாய்ந்து தள்ளாடியபடி நடந்து வருவதைக் கண்டு அதிர்ந்து போய் அப்படியே நின்றுவிட்டான்...

'தீபி எப்படி இவனுடன்...?' திகைப்பாய் இருந்தது அவனுக்கு...

ரிஷ்வந்த்தின் அதிர்ச்சியைக் கண்டு நக்கலாய் சிரித்தான் ஜீவா... பின் தீபிகாவின் கன்னம் தட்டி,

"தீபு டார்லிங்... உன் வீட்டுக்கு வந்தாச்சுடா... எதிரில் உன் ஹஸ்பெண்ட் இருக்கிறார் பாரு..." என்று நமட்டுச் சிரிப்புடன் சொல்ல...

"அவன் கிடக்கிறான் வேஸ்ட் ஃபெல்லோ..." போதையில் உளறியவள் மெல்ல கண்களைத் திறந்து பார்த்தாள்...

எதிரில் நின்றிருந்த ரிஷ்வந்த் அவள் கண்களுக்கு மங்கலாகத் தெரிய, கண்களைக் கசக்கி கொண்டு மீண்டும் அவனைப் பார்த்தாள்...

அதிர்வுடன் நின்றிருக்கும் கணவனைக் கண்டு அவளுக்கு மிகுந்த களிப்பாக இருந்தது... தள்ளாடியபடி அவன் முன் வந்து நின்றவள்,

"எதுக்கு இத்தனை அதிர்ச்சி...?" என்றாள் இளக்கார குரலில்...

மனைவியின் இளக்கார குரலில் சுரணை வந்த ரிஷ்வந்த்,

"தீபி... என்ன காரியம் பண்ணிட்டு வந்திருக்க...? நம்ம குடும்ப மானத்தை இப்படிக் காத்தில் பறக்க விட்டிருக்க...?" என்று கத்தினான்...

"இப்போ மட்டும் மானம் காத்தில் பறக்காமலா இருக்கு...?" என்று கேலியாய் கேட்டவள்,

"இதுக்குக் காரணம் நீ... நான் அப்படித்தான்டா இருப்பேன்... உன்னால் என்ன பண்ண முடியுமோ பண்ணிக்கோ..." என்றவள் மேலே நடக்கும் முன் தள்ளாட சட்டென்று அவளைத் தாங்கி பிடிக்க வந்த ரிஷ்வந்த்தை,

“டோன்ட் டச் மீ...” என்று தடுத்து நிறுத்தியவள்,

"ஜீவா..." என்று ஜீவாவை அழைக்க...

வெற்றிக்களிப்புடன் அவள் அருகில் வந்தான் ஜீவா...

"என்னை ரூம் வரை கொண்டு போய் விட முடியுமா...?" கெஞ்சலாய் கொஞ்சி கொண்டு கேட்டவளை கண்டு ஜீவாவிற்குச் சந்தோசமாய் இருந்தது என்றால், ரிஷ்வந்திற்கு ஆத்திரமாய் வந்தது...

அவளைக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு மாடிப்படி வரை சென்றவன் பின் என்ன நினைத்தானோ அப்படியே நின்றுவிட்டான்...

"கமான் மேன்... இவ்வளவு நேரம் நான் உன் ரூமில் உன் கூட இருந்தேன் தானே... அது மாதிரி நீயும் என் ரூமுக்கு வா..." என்று அவள் அழைக்க...

நொடி பொழுது தயங்கியவன் சுற்று முற்றும் பார்த்தான்... அப்போது தான் அங்கு அவள் நின்று கொண்டு இருப்பதைப் பார்த்தான் அவன்...

அவள் பெயர் ஹர்ஷிதா... ரிஷ்வந்த்தின் ஒரே தங்கை...

இரு கைகளையும் கட்டி கொண்டு ஜீவாவை அழுத்தமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்...

அவளை எந்தவித உணர்வும் இல்லாது பார்த்தவன், "உன் அண்ணியை ரூமுக்கு கூட்டிட்டு போ..." என்றான் கட்டளையிடும் விதமாக...

அவனுக்குத் தெரியும் அவள் தனது வார்த்தையை மறுக்க மாட்டாள், மீற மாட்டாள் என்று...

அவன் சொன்னபடி மறுவார்த்தை பேசாமல் அண்ணியை அழைத்துக் கொண்டு மாடியேறினாள் ஹர்ஷிதா...

அவர்கள் போவதை பார்த்துக் கொண்டு இருந்த ரிஷ்வந்த் முன் சொடக்கு போட்டு கூப்பிட்ட ஜீவா,

"இப்போ தெரியுதா நான் யாருன்னு...? நீ சொல்ல மட்டும் தான் செய்வ... ஆனா நான்..." என்று நிறுத்தியவன்,

"செஞ்சிட்டுத்தான் சொல்வேன்..."

ஜீவா சொல்லி முடிக்கும் முன் ரிஷ்வந்த் அவனது சட்டைக் காலரை கொத்தாய் பற்றி இருந்தான்...

"என் மனைவியை நீ எப்படிடா...?" மேலே சொல்ல முடியாது நிறுத்தியவனின் முகம் இயலாமையிலும், கோபத்திலும் சிவந்து போனது...

"எப்படிடா என்றால்...?" நக்கலாய் கேட்ட ஜீவா, "உன் மனைவி விரும்பித்தான்..." என்றான் அலட்சியமாய்...

"உன்னைக் கொன்னாத் தான்டா எனக்கு நிம்மதி..." என்று தனது சட்டையைப் பிடித்து இறுக்கிய ரிஷ்வந்த்தை கண்டு அவன் பயப்படவில்லை...

மாறாகக் கோபத்துடன் ரிஷ்வந்த்தை பார்த்தான்...

"என்னைக் கொல்வதற்குப் பதில் உன் மனைவியைப் போய்க் கொல்லு... நான் இல்லை என்றால் அவளுக்கு வேறு ஒரு ஆள்... என்னமோ நான் ஒருவன் மட்டும் தான் உன் மனைவியுடன் தொடர்பு வைத்திருப்பதாய் நீ சொல்லுவது உனக்கே அபத்தமாய் இல்லை..."

அவனது வார்த்தைகளில் ரிஷ்வந்த்தின் கைகள் தானாகத் தளர்ந்தது... அவனது கைகள் தளர்ந்ததும் தனது சட்டையை நீவி விட்டுக் கொண்ட ஜீவா,

"ஏன் அப்படிக் கொல்வதற்கு உன் குடும்பக் கௌரவம் தடையாக இருக்கிறதா...? இல்லை மானம் காத்தில் போயிவிடும்ன்னு பயப்படுறியா...? ஆனால் இனி நீ இதைச் செய்யவில்லை என்றால் தான் உன் மானம் போகும்..."

ஜீவாவின் ஒவ்வொரு வார்த்தையிலும் இருந்த கிண்டலும், கேலியும் ரிஷ்வந்த்தை குத்தி கிழித்தது... தான் தெரியாமல் விட்ட வார்த்தைகள் இந்தளவிற்கு விபரீதத்தை உண்டாக்கும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை...

"உன் மனைவி ஒரு நாள் இரவு என்னுடன் கழித்துவிட்டாள்... இதற்கு விலையாக நீ என்ன கேட்டாலும் நான் தருகிறேன்..." இறுமாப்புடன் கூறிய ஜீவாவை கொலைவெறியுடன் பார்த்தான் ரிஷ்வந்த்...

"இது நீ பேசிய வார்த்தைகள் தான்..." என்று அதை விடக் கடுமையுடன் அவனைப் பார்த்த ஜீவா,

"வார்த்தைகளை விடுவதற்கு முன்பு யோசித்து விட வேண்டும்... இப்படி யோசிக்காம விட்டால் அதனோட விளைவு இப்படித்தான் இருக்கும்... இனியாவது என்னிடம் பேசும் போது யோசித்துப் பேசு..." என்று சொன்னவன்,

"உன் மனைவி தீபிகா போல் ஸ்மிருதி கிடையாது... அவளது விரல் நகத்தைக் கூட உன்னால் தொட முடியாது..."

என்று அகம்பாவமாய், அழுத்தி சொன்னவனை முறைத்துப் பார்த்தான் ரிஷ்வந்த்...

"தொட்டு தான் பாரேன்... அப்புறம் என்ன நடக்கும் என்பதை நீயே தெரிஞ்சிக்குவ..."

ஜீவா, ஸ்மிருதியை பற்றிச் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளையும் கேட்டுக் கொண்டே மாடிப்படிகளில் இருந்து இறங்கி வந்து கொண்டு இருந்தாள் ஹர்ஷிதா...

அவள் வருவதைக் கண்டு ஜீவா அங்கிருந்து வேகமாய்க் கிளம்பி வெளியில் சென்றான்...

"ஜீவா..." அவன் பின்னோடு கத்தி கொண்டு ஓடினாள் அவள்...

அவள் அழைப்பை கண்டு கொண்டால் தானே அவன் நிற்பான்... ஆனால் அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் அவன் பாட்டிற்குச் சென்று கொண்டு இருந்தான்...

அவன் காரை அடைந்து அதன் கதவை திறக்கும் முன் அங்கு ஓடி வந்தவள் அவனுக்கும், கதவுக்கும் இடையில் வந்து நின்றாள்... அவளது செய்கையில் பிரேக் பிடித்தார் போன்று நின்றவன்,

"ம்ப்ச்..." என்று தனது அதிருப்தியை ஒற்றை வார்த்தையில் காட்டியவன் இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி காலை அகல விரித்து வைத்துக் கொண்டு வேறு பக்கம் பார்த்தபடி நின்றான்...

அவனது அந்தச் செய்கையில் அவளது மனம் அவன்பால் ஈர்த்து மயங்கி நின்றது...

"ஏன் ஜீவா இப்படிச் செய்றீங்க...? நீங்க இப்படி எல்லாம் செய்தா நான் நம்பிவிடுவேனா...?"

அதற்குப் பதில் சொல்ல விருப்பம் இல்லாது அவன் நின்றான்... அதைக் கண்டு அவளது உள்ளம் வலித்தது... அதை விட அவனது மனதில் இருப்பது அவளுக்குத் தெரியுமாதலால் தனது வலியை பொருட்படுத்தாது அவனைக் காதலாய் பார்த்தாள்...

"அண்ணா பேசியது தப்புத்தான்... அதுக்காக அண்ணியைப் போய்..." மேலே பேச முடியாமல் அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

என்ன தான் அவனை அவனுக்காக அப்படியே ஏற்றுக் கொள்ள நினைத்தாலும் நேசம் கொண்ட நெஞ்சம் வேதனையில் துடித்தது... தன்னவன் பெண் மோகம் பிடித்தவன் என்ற விசயம் எந்தவொரு பெண்ணுக்கும் பிடித்தமான விசயம் கிடையாது...

ஆனால் ஜீவா எப்படி இருந்தாலும் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது... அவனின் நிறை குறைகளோடு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தாள் அவள்...

அவளின் கண்ணீரும், தயக்கமும் அவனுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது...

"ம்ப்ச்... இப்ப உனக்கு என்ன வேணும்...?" சலிப்பாய் வந்தது அவனது வார்த்தைகள்...

அதில் விருட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தவள் பட்டென்று அந்த வார்த்தைகளைச் சொன்னாள்...

"நீங்க தான் வேணும்..."

அதில் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தவன் அவளது விழிகளில் வழிந்த காதலில் திகைத்துப் போனான்...

அவன் இன்னமும் மனதால் காதலை உணராதவன் தான்... ஆனால் இந்த நொடி வரை அவளின் காதலை உணர்ந்து

கொண்டு தான் இருக்கிறான்... அதை அனுபவித்துக் கொண்டு தான் இருக்கிறான்...

ஆனால் அதை ஏற்றுக் கொள்ளத்தான் அவனுக்கு மனம் வரவில்லை... அதன் காரணம் அவனது அறிவுக்கு உறைத்த போது அவன் தனக்குள் இறுகி போனான்...

இப்போது அவளைப் பார்த்த அவனின் பார்வையில் திகைப்போ, அதிர்வோ இல்லை... மாறாக ஆத்திரம், வெறுப்பு எல்லாம் கலவையாய் கலந்து இருந்தது... இதையெல்லாம் விட அவனது பார்வை அருவருப்புடன் அவளை நோக்கியது...

'துரோகி...' என்று குற்றம் சாட்டிய அவனது தீப்பார்வையில் பாவையவளின் மனம் எரிந்து சாம்பலாய்ப் போனது என்னவோ நிஜம்...!!!

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 4

ஜீவாவின் கண்களில் தெரிந்த 'துரோகி' என்ற குற்றச்சாட்டில் ஹர்ஷிதா மனதளவில் இறந்து போய்விட்டாள்... அன்றைய நாளின் நினைவுகள் அவள் மனதை போட்டு மிகவும் அலைக்கழித்தது... குற்றவுணர்வில் மனம் தத்தளிக்க, விழிகளில் அலைப்புறுதலுடன் அவனை ஏறிட்டு பார்த்தவளை அவன் இன்னமும் அருவருப்புடன் பார்த்துக் கொண்டு இருந்தான்...

நடந்து முடிந்ததை யாராலும் மாற்ற முடியாது... ஆனால் இனி நடக்க இருப்பதை அவளால் மாற்ற முடியும் அல்லவா... அதனால் மனதில் எழுந்த தைரியத்துடன் கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துவிட்டு அவனைப் பார்த்தாள்...

ஹர்ஷிதா ஒன்றும் பதின்வயது பருவ பெண் அல்ல... அண்ணனுடன் சேர்ந்து பெரிய தொழில் சாம்ராஜ்யத்தை நிர்வகிக்கும் கெட்டிக்கார, புத்திசாலித்தனமான பெண் அவள்...

என்ன புத்திசாலித்தனம் இருந்த போதும் காதல் என்று வந்துவிட்டால் மங்கையவள் மனம் கோழையாக மாறி போவது தான் விந்தையிலும் விந்தை போலும்...

அவளுக்குத் தெரியும் கோழையாக இருந்தால் ஜீவா அவளைப் புழுவாய் நினைத்து தூக்கி எறிந்துவிடுவான் என்று...

"நீங்க எப்படிப் பார்த்தாலும் சரி, எப்படி நடந்து கொண்டாலும் சரி... நான் உங்களை வெறுக்க மாட்டேன் ஜீவா... ஒருவேளை நான் அப்படி வெறுக்கணும்ன்னு நினைச்சு தான் நீங்க..."

அவள் சொல்லி முடிக்கும் முன் கை நீட்டி அவளைத் தடுத்து நிறுத்தியவன்,

"உன் நினைப்பை பற்றி எனக்கு என்ன கவலை... என் மனதுக்குச் சரின்னு பட்டதை நான் செய்வதற்கு எனக்கு என்ன பயம்...?" அலட்சியமாய் வெளி வந்து விழுந்தது அவனது வார்த்தைகள்...

"இப்போ நீங்க செஞ்சது சரின்னு உங்க மனசுக்கு தோணுதா ஜீவா...?"

அவளது வார்த்தைகளில் அவனது உடல் விறைத்தது... மனதில் கனன்ற கோபம் வார்த்தையாய் வடிவம் பெற்றது...

"ஏய்..." என்று ஆள்காட்டி விரல் நீட்டி அவளை எச்சரித்தவன்,

"என்ன விட்டா ஒரேடியா பேசிட்டு போற...? நீ யார் என்னைக் கேள்வி கேட்பதற்கு...?"

"நான் யார்ன்னு உங்களுக்குத் தெரியாதா...? உங்க மனதை நல்லா கேட்டு பாருங்க..." என்றவள் அவனைக் கூர்ந்து நோக்கினாள்...

அவளது பார்வையைச் சளைக்காது தாங்கி நின்றவன்,

"அட... எனக்கே தெரியாம உனக்கும், எனக்கும் இடையில் அப்படி என்ன உறவு இருக்கிறதம்மா...?" நக்கலாய் கேட்டவன் முகத்தில் கடுகளவு கூடச் சிரிப்பு இல்லை...

"ஜீவா..." அதிர்ந்து போய்ப் பார்த்தவளை கண்டு அவனின் மனதில் ஏதோ ஒரு நிம்மதி, மகிழ்ச்சி தோன்றுவதை அவனால் உணர முடிந்தது...

இவளால் அவன் அடைந்த துன்பங்கள் ஒன்றா, இரண்டா...? பாதகத்தி... எங்கிருந்து தான் வந்தாளோ அவனின் உயிரை

எடுப்பதற்கு, அவனின் வாழ்க்கை முறையை மாற்றுவதற்கு...? அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது...

"இப்போது நீயா விலகுகிறாயா...? இல்லை நான் உன்னைப் பிடித்துத் தள்ளிவிடவா...?" பல்லை கடித்துக் கொண்டு கேட்டவன்,

"அப்படிக் கூட உன்னைத் தொடுவதற்கு எனக்கு அருவருப்பாக இருக்கிறது..."

முதலில் அவன் சொல்வதைக் கேட்டு மனதில் காயம் அடைந்தவள், அடுத்து அவன் கூறிய வார்த்தையில் மனம் மலர, கண்கள் பளபளக்க அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"இது தான் ஜீவா நீங்க... வலிய வந்து என் காதலை சொல்லி உங்க காலடியில் வந்து நான் நிற்கும் போதும் என்னை வேண்டாம்ன்னு சொல்றீங்க பாருங்க... இது தான் உங்க உண்மையான குணம்... நீங்க ரொம்ப நல்லவங்க ஜீவா..."

அவளின் ஒவ்வொரு வார்த்தையிலும் அவன் முகம் கடுமையாய் மாறிக் கொண்டு போனது... ஆனாலும் அவளின் வார்த்தைக்கு எல்லாம் அசைந்து கொடுத்தால் அவன் ஜீவா அல்லவே...

"பெண்ணை ரசித்துப் பார்ப்பதற்குப் பெண் பெண்ணாய் இருக்க வேண்டும்... நீ பெண்ணே இல்லையே... அப்படி இருக்கும் போது உன்னை... நான்... எப்படி...?"

ஒற்றைப் புருவம் தூக்கி ஒவ்வொரு வார்த்தையையும் கிண்டலாய் கூறியபடி வினவியவனைக் கண்டு திகைத்துப் போய்ப் பார்த்தவள் தானாக வழி விட்டாள் அவனுக்கு...

அவளின் செயலில் விளைந்த வெற்றி மிதப்பில் கார் கதவை திறந்து அதில் ஏறியமர்ந்தான் அவன்... அவன் காரை கிளப்பும் சத்தத்தில் அவள் தன்னிலை உணர்ந்து

தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் பக்கமாய்க் குனிந்தவள்,

"நான் செய்த தவறை நீங்க மன்னிக்கவே மாட்டீங்களா...?"

அவளைத் திரும்பி பாராது நேர்ப்பார்வையாய் பார்த்தபடி அமர்ந்திருந்தவன், "அப்படி மன்னிக்கும் தவறை நீ செய்யவில்லையே... அன்று நீ செய்த தவறு இப்போது ஒரு பெண் குழந்தையாய் உரு கொண்டு வளர்ந்து நிற்கிறது... அவளின் எதிர்காலத்திற்கு உன்னால் ஒரு நல்ல பதிலை சொல்ல முடியுமா...? அப்படிச் சொன்னால் உன் தவறை நான் மன்னிக்கிறேன்..."

அவனின் வார்த்தையில் செயலிழந்து போய்ப் பேச்சற்று நின்றாள் அவள்... அதைப் பற்றிப் பேசுவதற்கு அவளுக்கு என்ன அருகதை இருக்கிறது...

"உன்னால் பதில் பேசவும் முடியாது... எதுவும் செய்யவும் முடியாது... நீ செய்த பாவத்தின் சுமையை நான் சுமந்து கொண்டு இருக்கிறேன்..." ஏதோ நினைவில் கோபமாய் அந்த வார்த்தைகளைச் சொன்னவன் பின் நாக்கை கடித்துக் கொண்டான் தன் தவறை உணர்ந்து...

அம்ரிதா அவனுக்கு என்றுமே சுமை அல்லவே... அவள் அவனுக்குக் கிடைத்த வரம் அல்லவா...

"ஆனாலும் அந்தச் சுமை எனக்குச் சுகமான சுமை தான்... அதைச் சுமக்க எனக்கும் பிடித்திருக்கிறது..." என்றான் கண்களில் கனிவுடன்...

அவனின் கோபம், கனிவு எல்லாவற்றையும் பார்த்த ஹர்ஷிதாவிற்கு அவனின் மனம் புரிந்தது... அதே சமயம் தனது தவறின் வீரியமும் புரிந்தது...

"நீங்க வேண்டும்ன்னா அந்த ஸ்மிருதியை கல்யாணம் பண்ணிக்கோங்க..." என்றாள் அது ஒன்று தான் அதற்குத்

தீர்வு போல...

அதைச் சொல்லும் போது அவளது மனம் வலிக்கத்தான் செய்தது... துடிக்கத் துடிக்க இதயத்தைப் பிடுங்கி எடுத்தது போல் அவளது உயிரில் வலிக்கத்தான் செய்தது... ஆனால் செய்த தவறுக்குப் பிராயசித்தம் அவளது காதல் தியாகம் தான் என்றால் அதற்கும் அவள் தயாராகத் தான் இருந்தாள்...

"நான் யாரை கல்யாணம் பண்ணிக்கணும்ங்கிறது எனக்குத் தெரியும்... அதில் தலையிட உனக்கு எந்த உரிமையும் இல்லை... உன் எல்லையில் நீ இருந்து கொள்... அதைத் தாண்ட முயற்சிக்காதே..."

அவன் சொன்னதைக் கேட்டு மனம் ஆறுதல் அடைந்தாலும், மனதின் ஒரு ஓரம் வருத்தமாக இருந்தது...

"நான் வேண்டுமானால் ஏதாவது..." என்றவளை நோக்கி இரு கையெடுத்து கும்பிட்டு,

"அம்மா தாயே... நீ இதுவரை பண்ணிய பிரச்சினை எல்லாம் போதும்... இன்னும் எதையாவது செய்து மேலும் மேலும் என் வாழ்க்கையைச் சிக்கலாக்கி விடாதே... இதை நானே பார்த்து கொள்கிறேன்..."

"சாரி ஜீவா..." என்றவளை கண்கள் இடுங்க பார்த்தவன்,

"தவறு செய்த நீங்க எல்லாம் எந்தவித தண்டனையும் இல்லாம சந்தோசமா இருக்கீங்க... ஆனா எந்தத் தவறும் செய்யாத நான் ஏன் இப்படித் தண்டனை அனுபவிக்கணும்...?"

அவனது ஆதங்கமான கேள்விக்கு அவளிடத்தில் இருந்து மௌனமே பதிலாக வந்தது... அதைக் கண்டு அவனது ஆத்திரம் அதிகரிக்க, அதை அப்படியே தன் காரிடத்தில்

காட்டினான்... அது உறுமி கொண்டு காற்றாய்ப் பறந்தது அவனது கைகளில்...

தன்னவனைத் தடுக்கும் வகையறியாது செய்வதறியாது அவள் நின்றிருந்தாள்...

கோபத்தோடு காரை கிளப்பிக் கொண்டு வந்தவனோ எங்குச் செல்வது என்று தெரியாமல் அப்படியே மனம் போன போக்கில் செல்லத் துவங்கினான்... ஊருக்கு வெளியே கடற்கரையோர சாலையில் வேகமாய்ச் சென்றவன் வெகுதூரம் சென்ற பின்னரே காரை நிறுத்திவிட்டு இறங்கினான்...

அவனுக்குக் காவல் காக்க வந்தவர்கள் சற்று தள்ளி வண்டியை நிறுத்திவிட்டு இவன் மீது கண்களைப் பதித்து நின்றிருந்தனர்...

விடிந்தும் விடியாத அந்த அதிகாலை வேளையில் கடலை பார்த்துக் கொண்டு நின்றிருந்தவன் மனம் பழைய நினைவுகளின் தாக்கத்தில் சிக்குண்டு தவித்தது...

பெண்களிடம் பேசி, பழகப் பிடிக்காதவன், அவர்களைச் சிறிதும் கண்டு கொள்ளாதவனை இந்த இரு பெண்களும் அவனின் வாழ்க்கைப் பாதையை மாற்றி அமைத்ததோடு இல்லாமல் அவனையும் சேர்த்து அலைக்கழிப்பதை எண்ணி இப்போதும் அதை ஜீரணிக்க முடியாமல் நின்றிருந்தான்...

எந்த இடத்தில் தவறு நடந்தது என்று இதுவரை அவனுக்குத் தெரியவில்லை... அவன் சுதாரிக்கும் முன் பெரும் சுழல் போல் சூழ்நிலை அவனை முழுதாய் ஆக்கிரமித்துக் கொண்டது...

அவனுக்கு அவனது அன்னையை மிகவும் பிடிக்கும்... அதே போல் தான் அவனது தந்தையைப் பெற்றவளையும்... அப்படியிருந்த போதும் அவன் இதுவரை அவர்கள்

இருவருக்கும் அடங்கிப் போனது கிடையாது... தன் மனதுக்குச் சரியென்று தோன்றியதை தான் இதுநாள் வரை செய்து வந்தான்...

இப்போது என்னவென்றால் இந்த இரு பெண்களும் தான் எங்குப் போனாலும் தன்னைச் சுற்றி வளைத்து இறுக்குவது போல், தனது சுதந்திரத்தை பறிப்பது போல் அவன் உணர்ந்தான்...

அம்ரிதா மட்டும் இல்லையென்றால் இது போல் இருவரிடமும் அமைதியாய் பேசி கொண்டு இருந்திருக்க மாட்டான்... மாறாக அவனது கை பேசியிருக்கும்...

அம்ரிதா பிறப்புக்குப் பின் தான் பெண்களைச் சிறிது மதிக்கக் கற்றிருக்கிறான்... அதனால் வந்த அமைதி தான் இது... இல்லையென்றால்...??? கோபத்தில் அவனது பற்கள் அரைப்பட்டது அவனிடம்...

'செய்வதை எல்லாம் செய்துவிட்டு என்னமாய் வேசம் போடுகிறாள்...?' ஹர்ஷிதாவை நினைத்து மனம் ஆத்திரத்தில் பொங்கியது...

மார்புக்கு குறுக்காகக் கைகளைக் கட்டியபடி, கண்களை மூடி கொண்டு நின்றவன் தனது மனதை சமன்படுத்த முயன்றான்...

முதலில் இருந்த ஜீவாவாக இருந்தால் இது போல் எல்லாம் கலங்கி தவித்தது கிடையாதே... இப்போது ஏன் இப்படி...? மனதுக்குள் கேள்வி எழுந்து அவனை அலைக்கழித்தது...

உடனே அதற்கான விடையாக அம்ரிதா என்னும் தேவதையின் முகமும் நினைவுக்கு வந்தது... அவனையும் அறியாது அவனது உதட்டில் புன்னகையின் சாயல்...

அந்தக் கணம் அவன் மனதில் ஒரு முடிவு எடுத்தான்... தான் முன்பு போல் கடினமாக மாறினால் தான் இந்தப்

பெண்களைச் சமாளிக்க முடியும் என்று...

முன்பு அன்னையிடமும், பாட்டியிடமும் அன்பு கொண்டிருந்த போதும் பெண்களிடத்தில் சற்றுக் கடுமையாகத் தானே நடந்து கொண்டான்... இப்போதும் அதை அப்படியே கடைப்பிடிக்க வேண்டும் என்று உறுதியாகத் தீர்மானம் எடுத்துக் கொண்டான்...

'இவர்களிடம் இனி சிறிதும் இளக்கம் காட்டக் கூடாது...' என்று நினைத்தவனின் மனதில் காரணமே இல்லாமல் அந்தச் சிறு பெண்ணின் முகம் நினைவிலாடியது...

காரணமே இல்லாமல் தான் அவளிடம் கடுமை காட்டியது இப்போது நினைவுக்கு வந்தது... பயத்தில் பட்டாம்பூச்சி போல் இமை படபடத்து நின்றவளின் முகம் அவனையும் அறியாது அவனது நியாபகத்தில் எழுந்தது...

'இப்போது தானே யாருக்கும் இளக்கம் காட்டக்கூடாது என்று முடிவு செய்தாய்... அதற்குள் வேறு எதைப் பற்றியோ யோசிக்கிறாயே...?' என்று தன் மனதை அடக்கியவன் அவளின் நினைவை புறம் தள்ளிவிட்டு வீட்டிற்குக் கிளம்பினான்...

வீட்டினுள் ஜீவா நுழையும் போது ராம்குமார் கையில் செய்தித்தாளுடன் அவனுக்காகக் காத்திருந்தார்... செய்தித்தாளை பார்த்ததுமே அவனுக்குப் புரிந்து போனது... ஆனால் அதைக் கண்டு கொள்ளாமல்,

"குட்மார்னிங் க்ராண்ட்ப்பா..." என்றவன் முன் அவர் பத்திரிக்கையை நீட்டி,

"என்ன இது ஜீவா...? கடைசியில் என் வளர்ப்பு இத்தனை கேவலமாய்ப் போய்விட்டதா...?" தாங்க முடியாத ஆற்றாமையில் கொதிப்புடன் வெளிவந்தது அவரது வார்த்தைகள்...

இதுநாள் வரை எத்தனையோ பெண்களுடன் அவனை இணைத்து கிசுகிசு வந்த போதும் அவனைச் சந்தேகித்து அவர் ஒரு வார்த்தை கேட்டது கிடையாது... இவ்வளவு ஏன் அம்ரிதா பிறப்பு பற்றிக் கூட எந்தக் கேள்வியும் கேட்டது கிடையாது... ஆனால் இன்று இப்படிக் கேட்கும் நிலையில் வைத்துக் கொண்டது அவன் தானே...

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சிறிது நேரம் தலைகுனிந்து அமர்ந்திருந்தான்... பின் நிமிர்ந்து கம்பீரமாக,

"யுத்தம் என்று வரும் போது நியாயம், தர்மம் எல்லாம் பார்க்கக்கூடாது க்ராண்ட்ப்பா..."

"நீ சொல்வது சரியென்று நானும் ஒத்துக் கொள்கிறேன்... ஆனால் இப்படி... அதுவும் திருமணமான பெண்ணுடன்...? அடுத்தவன் மனைவியோடு...? உன்னால் எப்படி...? என்னால் இதை ஜீரணிக்க முடியவில்லை ஜீவா..." கோபத்தில் அவரது உடல் நடுங்கியது...

அவரது கேள்விக்கு இப்போது அவனிடத்தில் விடை இல்லை...

"க்ராண்ட்ப்பா... நீங்க அந்தக் காலத்து ஆள்... அதனால் தான் உங்களால் இப்படிப் பேச முடியுது... ஆனால் இந்தக் காலத்தில்..." என்றவன் மேலே பேசாது அசால்ட்டாய் தோளை குலுக்கி கொண்டான்...

"எந்தக் காலம் என்றாலும் ஒழுக்கம் ஒழுக்கம் தானேப்பா..."

அவரது வார்த்தையில் அவனது முகம் அவமானத்தில் கறுத்துப் போனது... ஊரறிய செய்தித்தாளில் செய்தி வரவழைத்தது அவன் தான்... அப்போது தோன்றாத அவமானம் தாத்தாவின் வார்த்தையில் தோன்றி அவனைக் குன்றச் செய்தது...

"சாரி க்ராண்ட்ப்பா... நான் செய்தது தவறு தான்... என்னை மன்னிச்சிருங்க..." என்றவன் மேலே ஏதோ சொல்ல வாயை திறந்தவன் பின் வேண்டாம் என்று முடிவு செய்து மௌனமானான்...

"என்னிடம் நீ மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமே இல்லை ஜீவா..." என்றவர் அவனின் கன்னத்தை வருடி கொடுத்து,

"நியூசை பார்த்ததும் ஏதோ கோபத்தில் கத்திவிட்டேன்... உன் மேல் நான் நம்பிக்கை வைத்திருக்கணும்... வைக்காதது என் தவறு தான்... நீ தான் என்னை மன்னிக்க வேண்டும்..."

அவன் மன்னிப்பு கேட்டதும் அவரது மனம் இளகிவிட்டது... தவறான ஒன்றை செய்தாலும் ஸ்தீரமாக 'நான் தான் செய்தேன்' என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொல்லும் ஜீவா இப்போது அமைதியாய் மன்னிப்பு கேட்பது அவரை யோசிக்க வைத்தது... இதற்குக் காரணம் ஒன்று அவன் தனது தவறை உணர்ந்து இருக்க வேண்டும்... இரண்டு இதன் பின்னணியைப் பற்றிச் சொல்ல முடியாத சூழ்நிலையில் அவன் இருக்க வேண்டும்... அவனைப் பற்றி மிகச் சரியாகக் கணித்து வைத்திருந்தார் அவர்...

அவரின் வார்த்தையில் அவனது மனம் நெகிழ்ந்து போனது...

"த்ச்சு... என்ன இது க்ராண்ட்ப்பா...?" என்று அவரது கைகளை ஆறுதலாகப் பிடித்துக் கொண்டான்...

அவரது கைகள் இன்னமும் நடுங்கி கொண்டு இருப்பதை உணர்ந்தவனின் முகம் மென்மையானது...

"க்ராண்ட்ப்பா... என் மீது நம்பிக்கை இருக்கிறது அல்லவா..."

அவன் கேட்டதுக்கு அவர் 'ஆம்' என்று தலையசைத்தார்...

"அந்த நம்பிக்கையோடு எப்போதும் இருங்க... கிட்டத்தட்ட ஆறு வருடங்களாக நடக்கும் இந்த யுத்தத்தில் நான் வெற்றியடைய வேண்டுமானால் இது போல் நான் ஏதாவது செய்து தானாக வேண்டும்... இதுக்கு மேல் வேறு எந்த எல்லைக்கும் போக வேண்டுமானாலும் அந்த எல்லைக்கும் நான் போவேன்... இதற்காக எந்தளவுக்குக் கீழிறங்க வேண்டுமோ அந்தளவுக்குக் கீழிறங்கி அடிப்பேன்..." உணர்ச்சி மிகுந்த குரலில் கூறியவனைக் கண்டு கவலையாக இருந்தது அவருக்கு...

தொழிலில் தான் அவனுக்கு மிகுந்த டென்சன் என்றால், சொந்த வாழ்க்கையும் இப்படி அவனைப் போட்டு டென்சனாக்குகிறதே என்று வருந்தினார் அந்த முதியவர்...

"இன்னைக்கு ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கு... நான் போய்க் கிளம்பறேன்..." என்றபடி எழுந்தவனின் கைகளை விடாமல் பற்றிக் கொண்டு இருந்தவரை கேள்வியாய் பார்த்தான் அவன்...

ஏதோ சொல்ல வந்து அவர் தயங்குவதை உணர்ந்து மீண்டும் அவர் அருகில் அமர்ந்தவன்,

"எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்ல என்ன தயக்கம்...? சொல்லுங்க..."

அவன் என்ன சொல்லுவானோ என்று பெரும் தயக்கத்துடன் அவர், "நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன ஜீவா...?"

அதைக் கேட்டு அவன் ஏதோ நகைச்சுவை கேட்டது போல் பெரிதாக வாய்விட்டுச் சிரித்தான்...

"எதுக்கு க்ராண்ட்ப்பா...? இப்போ இருக்கிற நிம்மதி இல்லாமல் போவதற்கா...?" என்றான் சிரித்தபடி...

அதற்கு அவர் அமைதியாக அமர்ந்திருந்தார்...

"ஓகே க்ராண்ட்ப்பா... கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கிறேன்... ஆனால் எனக்கு நிம்மதியை கொடுக்கும் பெண் கிடைத்தால் கண்டுபிடித்துக் கொண்டு வாங்க... நான் மறுக்காமல் கல்யாணம் பண்ணி கொள்கிறேன்..." என்றவனைக் கண்டு அவர் 'ஆ' என்று பார்க்க...

"என்ன தாத்தா... அப்படி ஒரு பெண் உலகில் இல்லைன்னு யோசிக்கிறீங்களா...? அது தான் உண்மையும் கூட... உங்க காலத்திலிருந்து இப்போது வரை அப்படி ஒரு பெண் கிடையாது... அதனால் என் கல்யாணத்தை மறந்துடுங்க... நான் உங்களை மாதிரி கல்யாணம் பண்ணிக்காம நிம்மதியா வாழ போகிறேன்..."

அவன் சொன்னதைக் கேட்டு அவரது மனதில் சுருக்கென்று வலி எழுந்தது... தோழிக்காகத் திருமணம் வேண்டாம் என்று இருந்தவருக்கு அதன் பின் ஏனோ திருமணத்தில் நாட்டம் இல்லாமல் போய்விட்டது... ஆனால் அது தனது பேரனுக்கு இப்படி ஒரு மோசமான உதாரணமாகப் போகும் என்று அவர் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை...

அவரது அமைதி எதனால் என்பதை உணர்ந்தவனாய் அதைக் கலைக்க விரும்பாமல் ஜீவா எழுந்து சென்றுவிட்டான்...

ரிஷ்வந்த் வீட்டில் அவன் தன் மனைவி தீபிகாவிடம் கத்தி கொண்டு இருந்தான்... அன்றைய செய்தித்தாளை அவள் முகத்தில் விட்டெறிந்தவன்,

"உன்னால் என் மானம், மரியாதை எல்லாம் போய்விட்டது... இனி நான் எப்படி வெளியில் தலைக்காட்டுவேன்...? உன்னை நினைத்தாலே கேவலமா இருக்கு..." என்று கத்தியவனின் வார்த்தைகளைப் புறம் தள்ளிய தீபிகா,

"ஆறு வருடங்களாகவே என்னை நினைத்து எனக்கே கேவலமா இருக்கு... இப்போ என்ன புதுசா இந்தப் பேச்சு...?" அலட்சியம் போல் அவள் கூறிய போதும் அவளது முகத்தில் அப்படி ஒரு வலி தெரிந்தது... அதை விட அதிகமாய் அவளது மனதிற்குள் வலித்தது...

"ஏய்... என்னடி ஒரேடியாய் வாய் நீளுது...?" கையை ஓங்கி கொண்டு வந்தவனைத் திமிராய் ஏறிட்டவள்,

"அடிடா... நீ என்னை அடிக்கணும், கொடுமைப்படுத்தணும்ன்னு தான் நானும் காத்திருக்கிறேன்... அப்போ தானே மீடியாவுக்குத் தத்ரூபமா பேட்டி கொடுக்க முடியும்... அத்தோடு உன்னோட யோக்கியமான இமேஜ்க்கும் ஒரு முடிவு கட்ட முடியும்..." என்று பெருங்குரல் எடுத்து கத்தினாள் அவள்...

அதில் அரண்டு போனவன் அமைதியாய் வெளியேறிவிட்டான்...

கையாலாகாத நிலையில் இருக்கும் தன் நிலையை அறவே வெறுத்துப் போயிருந்தான் ரிஷ்வந்த்...

***************************

"என்னங்க...?" ருத்ரஸ்ரீயின் அழைப்பில் கையிலிருந்த கோப்பை கீழே வைத்துவிட்டு அவளைப் பார்த்தான் ஜெகன்...

"நம்ம சுபியை அபி லவ் பண்றானாம்... கார்த்திக், சித்ராவுக்கும் இதில் விருப்பம் தானாம்... அவன் நம்ம வீட்டில் நம்மைப் பேச சொல்லி சொன்னான்ங்க... நீங்க என்ன நினைக்கிறீங்க...?"

இதில் ஜெகன் சொல்வதற்கு ஒன்றுமில்லை... அபிமன்யு சுபிக்ஷாவிற்கு ஏற்ற பையன் தான்... ஆனாலும்...?

"அண்ணா, ரம்யா எதுவும் சொல்ல மாட்டாங்கன்னு நினைக்கிறேன்... ஆனா அத்தை தான் எதுவும் சொல்வாங்களோன்னு பயமாயிருக்கு..." என்ற மனைவியை யோசனையாய் பார்த்தான் அவன்...

"ஜில்லு... நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைக்க மாட்டியே..."

"சொல்லுங்க..." அவனது தயக்கம் அவளுக்கு வித்தியாசமாகப் பட்டது...

"நம்ம ஜீவாவுக்குச் சுபியை... நீ சொன்னா ஜீவா கேட்பான்..."

கணவனுக்குப் பதில் சொல்லாமல் தனது அலைப்பேசியை எடுத்து எதையோ தேடியவள் அது கிடைத்ததும் அவன் கண்முன் காட்டினாள்...

அதைப் படித்துப் பார்த்த ஜெகன் அதிர்ச்சி அடைந்தவனாய் மனைவியைப் பார்க்க...

"இந்த ஒழுக்கம் கெட்டவனையா சுபிக்கு மாப்பிள்ளையா பார்க்க சொல்றீங்க... ஜீவா என் பையன் தான் இல்லைங்கல்ல... அதற்காகச் சுபியை தெரிஞ்சே பாழுங்கிணத்தில் தள்ள என்னால் முடியாது... அவளை அபி தன் கண்ணுக்குள் வைத்துப் பொக்கிசமா பார்த்துக்குவான்... ஆனால் ஜீவா..."

மேலே பேச முடியாமல் வேதனையில் ஆழ்ந்தது அவளது முகம்...

"ஜீவா அப்படிப் பண்ணியிருக்க மாட்டான்..." கூறும் போதே ஜெகனின் குரல் நலிந்து ஒலித்து அது அவனுக்கே கேட்கவில்லை...

"சரி அவன் இதைப் பண்ணலைன்னே வச்சுக்குவோம்... ஆனால் சுபிக்கு அவன் வேண்டாம்..." தீர்மானமாகச் சொன்னவளை கண்டு அவன் பெருமூச்சு விட்டான்...

"சரி உன் இஷ்டம்..." என்றவன்,

"அபி, சுபி கல்யாணத்தைப் பத்தி நீ கவலைப்பட வேண்டியது இல்லை... முடிந்தது என்றே நினைத்து கொள்..."

ஜெகனின் வார்த்தையில் ருத்ராவின் முகம் மலர்ந்தது...

"அபிக்காக நீங்க கட்டாயம் இதைச் செய்யணும்ங்க..."

"அபிக்காக இல்லைடி பெண்ணே... உனக்காக..." மனைவியை இழுத்து அணைத்துக் கொண்ட ஜெகனின் காதல் அன்று போல் இன்றும் குறையாது இருந்தது...

"நான் பெண்ணா...? பேரன், பேத்தி எடுத்த கிழவி..." என்று அவள் சிணுங்கலாய் கூற...

"எத்தனை வயதானால் என்ன... என் கண்ணுக்கு நீ மட்டும் தான்டி அழகி..."

"பாட்டி..." என்று கத்தி கொண்டே அங்கு வினீதா ஓடி வர...

"போச்சுடா... அப்போ உன் மகன்... இப்போ உன் பேத்தி... பார்த்துக்கிட்டே இரு ஜில்லு... ஒரு நாள் இல்லை ஒரு நாள் ஆள் இல்லாத தீவுக்கு உன்னைக் கடத்திட்டுப் போகப் போறேன்..." கண்சிமிட்டி சொன்ன ஜெகனை கண்டு அந்த வயதிலும் நாணினாள் அவன் மனைவி...

வினீதாவை தூக்கி கொண்டு ருத்ரா வெளியில் சென்றதும் ஜெகன் யோசனையில் ஆழ்ந்தான்... மகனை நினைத்து மனதில் பெரும் கவலை சூழ்ந்தது...

மகனின் மனதை பகிர்ந்து கொள்ள, அவனின் பாரத்தைத் தாங்குவதற்குத் தோள் கொடுக்க என்று தந்தை தான் இருக்கும் போது அவன் ஏன் இந்தளவிற்கு இறுக்கமாய் இருக்க வேண்டும் என்று வருத்தமாக இருந்தது அவனுக்கு... அத்தோடு இந்த வேண்டாத சகவாசங்கள்... என்ன செய்வது, எப்படி மகனை திருத்துவது என்று அவனுக்குத் தெரியவில்லை...

ஜெகன் சொன்னது போல் வீட்டினருடன் பேசி அபிமன்யு, சுபிக்ஷா திருமணத்திற்குச் சம்மதம் வாங்கிக் கொடுத்துவிட்டான்... அதைக் கேட்டு அபிமன்யு சந்தோச வானில் பறந்தான்...

சரியாக ஒரு வாரம் கழித்து அபிமன்யு, சுபிக்ஷா இருவருக்கும் நிச்சயம் நடைப்பெற இருந்தது... திருமணம் சுபிக்ஷா படிப்பு முடிந்தபின் என்று முடிவு செய்யப்பட்டது...

திருமணம் கூடி வந்ததுமே அபிமன்யு சுபிக்ஷாவை அலைப்பேசியில் அழைத்தான்...

"லட்டும்மா... இந்த உலகத்தில் ரொம்பச் சந்தோசமானவன் யார்ன்னு கேட்டா நான் என்னைத் தான் சொல்வேன்... அந்தளவுக்குச் சந்தோசமா இருக்கேன்..."

அவனின் அதிகச் சந்தோசத்தை அவள் உணர்ந்தாள் தான்... ஆனால் அது போல் அவளுக்குச் சந்தோசமாக இருந்ததா என்றால் அவளுக்கு அது தெரியவில்லை... அபிமன்யு பெற்றோர் பார்த்த மணமகன் என்ற எண்ணமும், அவன் தனது சிறுவயது தோழன் என்ற எண்ணமும் தான் அவள் மனதில் இருந்தது...

"இன்னும் ஒரு வாரத்தில் நமக்கு நிச்சயம்... எப்போடா ஒரு வாரம் போகும்ன்னு இருக்கு..." ஏக்கமாய்க் கூறியவனுக்கு அவள் என்ன பதில் கூறிவது என்று தெரியாமல் விழிக்கும் போது,

"ப்ச்..." என்று சத்தமாய், அழுத்தமாய் அலைப்பேசி வாயிலாக அவன் தனது முத்தத்தை அனுப்பி வைக்க, அதில் திகைத்து போய் அவள் சிலையாய் சமைந்தாள்...

அவனோ சிரித்துக் கொண்டே அழைப்பை துண்டித்தான்...

ஒரு வாரம் கழித்து நிச்சய நாளும் இனிதாய் விடிந்தது... விழாவிற்கான கோலத்தை அவர்களது வீடு பூண்டிருந்தது... பெரியவர்கள் பரபரப்பாய் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்க, சிறியவர்களும் அவர்களாலான சிறு சிறு வேலைகளைப் பார்த்துக் கொண்டு இருந்தனர்...

"இன்னும் கொஞ்சம் லிப்ஸ்ட்டிக் போட்டுக்கோ சுபி..." என்று பூஜா உதட்டுச்சாயத்தை எடுத்து நீட்ட...

மிதமான அந்த ஒப்பனை மனதுக்குத் திருப்தியாக இருக்க, "வேண்டாம் அண்ணி..." என்று மறுத்தாள் சுபிக்ஷா...

"ஓகே... இதுவும் அழகாத்தான் இருக்கு..." என்று சொன்ன பூஜா தனது நாத்தனார் முகத்தை இங்கும் அங்கும் திருப்பிப் பார்த்து அவளின் அலங்காரத்தில் திருப்தி அடைந்தவளாய்,

"நீ இங்கேயே இரு சுபி... பெரியவங்க கூப்பிட்டதும் வந்தால் போதும்..." என்று சொல்லிவிட்டு வெளியில் சென்றாள்...

பூஜா சென்றதும் சுபிக்ஷாவின் மனதில் இனம் புரியாத ஒரு படபடப்பு எழுந்தது... அன்று அபிமன்யு அலைப்பேசியில் கொடுத்த முத்தம் இன்றும் அவள் மனதில் ஒருவித குறுகுறுப்பை ஏற்படுத்திக் கொண்டு இருந்தது...

சந்தோசமா இல்லை பயமா என்று உணர முடியாத ஒரு தனி மனநிலையில் அவள் இருந்தாள்...

சிறிது நேரத்தில், "அத்தை... உங்களைக் கூப்பிடுறாங்க..." என்று வினீதா அவளை அழைத்தபடி ஓடி வந்தாள்...

மனம் படபடக்கச் சுபிக்ஷா நாற்காலியில் இருந்து எழுந்தாள்... அதற்குள் பூஜா அங்கு வந்துவிட்டாள்...

"ஏய் வாலு நான் வர்றதுக்குள்ள நீ ஓடி வந்துட்டியா..." மகளைச் செல்லமாக வைதவள் நாத்தனாரை அழைத்துக் கொண்டு சென்றாள்...

சுபிக்ஷாவை அழைத்து வந்து அபிமன்யு அருகில் போடப்பட்டு இருந்த நாற்காலியில் அமர வைத்த பூஜா அவள் அருகில் நின்று கொண்டாள்...

கார்த்திக், சித்தாரா, ராகவ், மீரா, அவர்கள் புதல்வன் அர்விந்த் என்று அனைவரும் அங்கே ஆஜராகி இருந்தனர்...

கார்த்திக்கிற்கும், சித்தாராவுக்கும் இந்தத் திருமணம் மூலமாக ருத்ரா குடும்பத்தினருடன் ஒரு நல்லுறவு ஏற்படுவது குறித்து நிரம்ப மகிழ்ச்சி...

அகிலாண்டத்துக்குத் தனது இனத்தில் பேத்திக்கு மாப்பிள்ளை பார்க்காது பெரும் குறையாக இருந்தது... ஆனாலும் தனது பேரன் போல் அன்பு காட்டும் அபிமன்யுவை மறுக்கப் பெரிதாய் காரணம் எதுவும் அவரிடத்தில் இல்லாததால் மனதார இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தார்...

"லட்டும்மா... மாமனை கொஞ்சம் நிமிர்ந்து பாரம்மா..." கிசுகிசுப்பாய் ராகம் போட்டு இழுத்த அபிமன்யுவின் குரலில் திடுக்கிட்டு திரும்பிய சுபிக்ஷா தன்னையும் அறியாது அவனது கண்களைச் சந்தித்தாள்... அதை அறிந்தவனோ மாயக்கண்ணனாய் குறும்பாய் அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான்...

அவனது செய்கையில் விதிர்த்து போனவள் உடனே தலையைக் குனிந்து கொண்டாள்... மனதில் குறுகுறுப்பு அதிகரிக்க, அந்த உணர்ச்சியைத் தாங்க இயலாது தனது கீழுதட்டை கடித்தவள் முகத்தில் மெல்லிய நாணம் வந்து எட்டிப்பார்த்தது...

அவளின் வெட்கம் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"ரிலாக்ஸ் லட்டு..." என்று அவளது கையை ஆறுதலாகப் பிடித்துக் கொண்டான் அவன்...

"அபி இன்னும் கல்யாணம் ஆகவில்லை... அது நினைப்பிருக்கட்டும்..." மீரா அவனைக் கிண்டலடிக்க...

"கல்யாணமானாலும் ஆகவில்லை என்றாலும் லட்டும்மா தான் என் மனைவி..." என்றவனின் ஆழ்ந்த குரல் அவளின் செவியைத் தீண்டி, மனதை தென்றலாய் வருடிச் சென்றது...

லக்னப் பத்திரிக்கை வாசித்து முடித்து இருவரையும் மோதிரம் மாற்றிக் கொள்ள அழைத்தனர் பெரியவர்கள்...

அபிமன்யுவிற்கு என்று வாங்கிய மோதிரத்தை பூஜா எடுத்துச் சுபிக்ஷா கையில் கொடுத்தாள்... குனிந்த தலை நிமிராமல் அதைத் தன் கைகளில் வாங்கியவள் தன்னவனின் புறம் திரும்பினாள்...

சுபிக்ஷா மோதிரம் போடுவதற்கு ஏற்றவாறு தனது வலது கையை நீட்டியபடி புன்னகையுடன் அவளைப் பார்த்திருந்தான் அபிமன்யு...

அப்போது திடுமென வினீதா க்றீச் குரலில் கத்தினாள்...

"ஐய்... மாமா வந்தாச்சு..."

அதில் சபையில் இருந்த எல்லோரும் திடுக்கிட்டு திரும்பி பார்த்தனர்...

அங்கே இடது கையில் கோட்டை பிடித்தபடி, வலது கையைப் பேண்ட் பாக்கெட்டில் விட்டவாறு தனது பிரத்யேக வேக நடையில் விறுவிறுவென ஜீவா கம்பீரமாக உள்ளே வந்து கொண்டிருந்தான்...

எதிர்பாராத விதமாக அங்கு ஜீவாவை கண்டதும் சுபிக்ஷாவின் கைகள் நடுங்க ஆரம்பித்தது... அதில் கை நழுவி அவள் கையிலிருந்த மோதிரம் கீழே விழுந்தது...

கீழே விழுந்த மோதிரம் நிற்காமல் உருண்டோடி சற்று தள்ளி அவளுக்கு நேரெதிரே வந்து நின்ற ஜீவாவின் காலடியில் வந்து தனது ஓட்டத்தை நிறுத்தி கொண்டது...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 5

தனது கால் விரல் தட்டி கீழே விழுந்த மோதிரத்தை பார்த்த ஜீவா யோசனையுடன் அங்குக் குழுமியிருந்தவர்களைப் பார்த்தான்... அப்படிப் பார்க்கும் போது அவனது விழி வட்டத்தில் கார்த்திக், சித்தாரா இருவரும் விழ, அவர்களைக் கண்டதும் அவனது முகம் ஆத்திரத்தில் கல்லாய் இறுகியது...

அதற்குள் விக்ரம் அந்த மோதிரத்தை எடுத்து வந்து தனது அத்தையிடம் கொடுத்தான்... ஜீவா மீதிருந்த விழிகளை அகற்றாமல் அதை வாங்கிக் கொண்டாள் சுபிக்ஷா...

முகம் இறுக, கை முஷ்டி இறுக நின்றிருந்தவனின் கால்களை ஓடி வந்து கட்டி கொண்ட வினீதாவின் ஸ்பரிசத்தில் அவன் கீழே குனிந்து சின்னவளை பார்த்தான்...

"மாமா... தூக்குங்க..." இரு கைகளையும் விரித்து மழலையில் மிழற்றியவளை கண்டு அவனது கண்கள் யோசனையில் ஆழ்ந்தது ஒரு நொடி... மறுநொடி முகம் மலர அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டான் அவன்...

அவனுக்குத் தெரிந்து போனது அவள் தனது சகோதரியின் மகள் என்று... அவளைப் பிறந்ததிலிருந்து பார்க்காதவன் இன்று தான் முதன்முறையாக அவளைப் பார்க்கிறான்...

"ஹாய் பேபி... உன் பெயரென்ன...?" சின்னவளின் கன்னத்தில் முத்தமிட்டபடி புன்னகையுடன் கேட்டவனைக் கண்டு அங்கிருந்த அவன் குடும்பத்தினர் தங்கள் திகைப்பில் இருந்து வெளிவந்து மயக்கம் போடாத குறையாக வியப்புடன் அவனைப் பார்த்திருந்தனர்...

விக்ரமிற்கு ஒரு வயதாக இருக்கும் போது தாய்மாமனான ஜீவாவின் மடியில் வைத்து தான் மொட்டை போட வேண்டும் என்று அகிலாண்டம் திட்டவட்டமாகக் கூறிவிட, அவரது பிடிவாதத்தால் மும்பையில் இருந்து இங்கு வந்தான் ஜீவா...

வந்த இடத்தில் விக்ரமை தூக்கி கூடக் கொஞ்சவில்லை... கேட்டால் சட்டை கசங்கிவிடும் என்றான்... மொட்டை போடுவதற்குக் கோயிலில் கீழே உட்கார்ந்தால் மண்ணாகி அழுக்காகி விடும், விக்ரமை மடியில் வைத்தால் அசுத்தம் செய்துவிடுவான் என்று ஜீவா செய்த அலப்பறையை அவன் வீட்டினர் என்றுமே மறக்க மாட்டார்கள்...

அப்படி நகக்கண்ணில் கூடக் கறைப்படக் கூடாது என்று மிடுக்குடன் வலம் வரும் ஜீவா இப்போது சின்னவளை தூக்கி கொஞ்சுவதை ஏதோ அதிசயம் போல் பார்த்திருந்தனர்...

"வினீ..." என்று தனது பெயரை சொல்லி கிலுக்கி சிரித்தவளின் சிரிப்பு மாமனின் மனதை கொள்ளை கொள்ள,

"ஸ்வீட் பேபி..." என்றபடி வலது கையால் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்...

சகோதரனின் மனமாற்றம் பூஜாவின் கோபத்தைச் சற்றுக் குறைத்தது என்றே சொல்லலாம்... இப்படி எல்லாம் பாசமாகச் சகோதரன் இருக்க மாட்டானா என்று தானே அவளும் ஏங்கியது...

கிருஷ்ணா கூடத் தனது மனஸ்தாபத்தை மறந்து மச்சினனை அன்போடு பார்த்தான்...

பாசமான குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்த அவர்கள் இருவரும் ஜீவாவிடம் இருந்து அன்பை தான்

எதிர்பார்த்தார்கள்... அதைக் கொடுப்பதில் அவன் தான் கஞ்சனாக இருந்தான்...

"நல்ல நேரம் முடிறதுக்குள்ள மோதிரத்தை போடுங்க..." காளிமுத்துவின் குரலில் அத்தனை பேரின் விழிகளும் ஜீவாவிடம் இருந்து விழா நாயகன், நாயகி மீது சென்றது...

அப்போது தான் ஜீவா மாலையும் கழுத்துமாய் இருந்த அந்த ஜோடியை கவனித்துப் பார்த்தான்... ஆண் அபிமன்யு என்று அவனுக்கு நன்கு அடையாளம் தெரிந்தது... அந்தப் பெண்...? கண்கள் இடுங்க அவளைக் கூர்ந்து பார்த்தான்... ம்ஹூம் என்ன யோசித்தும் அடையாளம் தெரியவில்லை...

"நான் அத்தை கிட்ட போறேன்..." வினீதா அவன் கைகளில் இருந்து இறங்க முயற்சிக்க...

'இன்னும் எனக்குக் கல்யாணமாகவில்லை... அதற்குள் அத்தையா...?' மனதுக்குள் சிரித்தபடி சின்னவளை அவன் கீழே இறக்கிவிட்டான்...

வினீதா சிட்டாகப் பறந்து சுபிக்ஷாவிடம் சென்று நின்ற போது தான் ஜீவாவிற்குத் தங்கை மகள் கூறியதன் அர்த்தம் தாமதமாக மூளையில் உறைத்தது...

'அட நம்ம பட்டிக்காடா...' கேலியும், வியப்பும் கலந்து மணமகளான சுபிக்ஷாவை பார்த்தான்...

ஜீவாவின் பார்வை தன்னைப் பார்ப்பதை உணர்ந்த சுபிக்ஷா சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள்...

"லட்டும்மா..." என்றழைத்த அபிமன்யுவின் குரலில் அவனை ஏறிட்டு பார்த்தவளை கண்டு கண்களால் அவன் ஆறுதல் சொல்ல, அதில் சற்று முகம் தெளிந்தாள் அவள்...

அதன் பின் அவள் அவனது கையில் மோதிரம் அணிவிக்க, அதன் பின் அபிமன்யும் மனதில் எழுந்த காதலோடு

தன்னவளின் மெல்லிய, மென்மையான விரல் பற்றி மோதிரம் அணிவித்து அவளைத் தனக்கானவளாய் உறுதி செய்து கொண்டான்...

அடுத்து மணமக்கள் பெரியவர்கள் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க, சிறியவர்கள் அவர்களுக்கு வாழ்த்து கூற என்று சற்று நேரம் நிச்சய நிகழ்வில் நேரம் சென்றது...

இவை எல்லாவற்றையும் ஒட்டாத தன்மையுடன் ஒரு பார்வையாளனாய் பார்த்துக் கொண்டு இருந்த ஜீவா அருகில் வந்து நின்றார் அகிலாண்டம்...

"ராசா இப்பத்தான் என்னைப் பார்க்கணும்ன்னு உனக்குத் தோணுச்சா...?" என்று கண்களில் கண்ணீர் மல்க பாசத்தோடு கேட்டவரின் அன்பு அவனுக்குப் புரியாமல் இல்லை...

இந்த வீட்டில் 'டெர்ம்ஸ் அன்ட் கன்டிசன்ஸ்' இல்லாது அவனிடத்தில் தடையற்ற அன்பு காட்டியவர் அவர் அல்லவா... அதனால் அவரை அவனுக்கு நிரம்பப் பிடிக்கும்...

"க்ரனி... உன்னைப் பார்க்காமல் எனக்கும் தான் கஷ்டமாக இருந்தது..." என்றவன் அவரைத் தனது கைகளால் அணைத்துக் கொண்டான்...

"இதுக்கு எல்லாம் நான் தானே காரணம் ராசா..." என்று குரல் தழுதழுத்தவரின் வார்த்தையில் இருந்த அர்த்தம் அவனைப் பழைய நினைவில் இறுகச் செய்தாலும் சமாளித்துக் கொண்டு,

"இப்போ தான் நான் வந்துட்டேனே... அது உனக்குச் சந்தோசமா இல்லையா...?"

"சந்தோசமா இல்லையாவா...? பத்து வயசு குறைஞ்ச மாதிரி சந்தோசமா இருக்கு ராசா..."

"ம்ஹூம்... சந்தடி சாக்கில் உன் வயசை குறைக்கிறியே க்ரனி..." ஒரு விரல் நீட்டி அவன் கிண்டலடிக்க...

"ராசா... இது என்ன கேணி, கோணின்னு... அழகா 'அப்பத்தா'ன்னு சொல்லு ராசா..."

"ஐய்யே..." என்று முகத்தைச் சுளித்த பேரன், "வேணும்ன்னா கிழவின்னு கூப்பிடவா..." என்று கிண்டலாய் கேட்க...

"ஐயோ வேண்டாம் ராசா... இந்தக் கேணியே இருந்துட்டு போகட்டும்..." என்று அவர் அவசர சமாதான உடன்படிக்கையை உடனே நீட்ட...

"அது..." என்றபடி வசீகரமாய்ச் சிரித்த மகனை கண்களில் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தான் ஜெகன்...

அவனால் மகன் அருகில் சென்று அவனது அன்னையைப் போல் சிரித்துப் பேசி விட முடியாது... அதற்கு அவன் தயார் தான்... ஆனால் அவன் மகன் முகம் கொடுத்து பேச வேண்டுமே...

தனது அழகிற்குச் சற்றும் சம்பந்தம் இல்லாது இருந்த தந்தையுடன் பேசுவது கூடக் கௌரவக் குறைச்சலாகக் கருதுபவன் இந்த ஜீவா... அவனைச் சொல்லிக் குற்றமில்லை... அவனிடம் இருக்கும் அழகு, பணம் அந்தளவுக்கு அவனிடத்தில் கர்வத்தை விதைத்திருந்தது...

ருத்ரஸ்ரீ மனதில் மகன் மீதான பாசம் இருந்தாலும் அதை விட அதிகமாய் அவன் மீது கோபம் இருந்தது... அதனால் அவனைக் கண்டு கொள்ளாது நின்றிருந்தாள்...

அதைக் கவனித்துக் கொண்டு இருந்த ஜீவாவிற்குக் கோபம், வருத்தம், ஆதங்கம் என்று எல்லாம் கலந்த உணர்வுகள் ஒருங்கே எழுந்தது...

'நான் என்ன தப்பு செய்தேன்னு இந்த மாம் முகத்தைத் தூக்கி வச்சிக்கிட்டு இருக்காங்க...' அவனுக்கு மனதில் முணுமுணுவென்று வந்தது...

அந்தக் கோபம் எல்லாம் அபிமன்யு குடும்பம் மீது திரும்பியது... ஆனால் சபை நாகரீகம் கருதி அமைதியாக இருந்தான்...

எல்லோரும் மணமக்களை வாழ்த்திய போதும் ஜீவா ஒப்புக்காகக் கூட அவர்களிடம் சென்று தனது வாழ்த்தை தெரிவிக்கவில்லை...

'நீயெல்லாம் எனக்கு ஈடு, இணையா...?' என்பது போல் மிதப்பான பார்வையோடு அலட்சியமாய் நின்றிருந்தான் அவன்...

ஆனால் அபிமன்யு அவனின் அலட்சியத்தைக் கவனத்தில் கொள்ளவில்லை... வலிய வந்து அவனிடத்தில் பேசினான்...

"எப்படி இருக்க...?"

"நான் எப்படி இருந்தால் உனக்கு என்ன...?" ஜீவாவின் திமிரான பதிலில் முகம் வாடி விடவில்லை அபிமன்யு...

சிறுவயதில் இருந்து அவன் ஜீவாவை பார்த்துக் கொண்டு தானே இருக்கிறான்... அதனால் அவனின் அகந்தையை ஒரு பொருட்டாக எண்ணவில்லை...

"நீ நல்லா இருக்கணும் என்பது தான் என் விருப்பம்..." என்று சிறு புன்னகையுடன் சொன்னான் அவன்...

'போடா...' என்று மனதில் அவன் கூறியதை அலட்சியப்படுத்திய ஜீவா அப்போது தான் அந்த வார்த்தைகளை உதிர்த்தான்...

"ஆனாலும் உன் ரசனை இவ்வளவு மட்டமாக இருக்கும்ன்னு நான் நினைத்து கூடப் பார்க்கவில்லை..." என்றவனின் விழிகள் சுபிக்ஷா மீது கேலியாய்ப் படிந்தது...

அதைக் கண்டு கோபம் வராத அபிமன்யுவிற்குக் கூடக் கோபம் வந்தது...

"என் ரசனை எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியும்... அதைப் பற்றி நீ பேச தேவையில்லை..." என்றான் கடுமையுடன்...

முதல்முறையாக அபிமன்யுவின் கடுமையான பேச்சை கேட்ட ஜீவா அவனை வினோதமாகப் பார்த்துவிட்டு,

"இது தான் நல்லதுக்குக் காலம் இல்லை என்பது... உண்மை சில சமயம் கசக்கத்தான் செய்யும்..." என்று அலட்சியமாய்க் கூறியபடி அங்கிருந்து நகர்ந்து சென்று விட்டான் ஜீவா...

ஜீவா தன்னை என்ன சொன்ன போதும் பொறுத்துக் கொண்ட அபிமன்யுவிற்கு அவன் தன்னவளை பற்றிச் சொன்னதும் அப்படி ஒரு கோபம் வந்துவிட்டது... ஆனாலும் மற்றவர்களுக்காக அதைப் பொறுத்துக் கொண்டான்...

விழா சிறப்பாக முடிந்து அபிமன்யு குடும்பம் விடைப்பெற்று சென்று விட, ஜீவாவின் குடும்பத்தினர் மட்டுமே அங்கு எஞ்சியிருந்தனர்...

"மாம்..." என்றழைத்த ஜீவாவை புறக்கணித்து விட்டு ருத்ரஸ்ரீ உள்ளே செல்ல முயல அவனின் கோபம் எல்லை கடந்தது...

"மாம்..." என்று உரக்க கத்தி அவன் கூப்பிட்ட போதும் அவனைக் கண்டு கொண்டால் அவள் ருத்ரஸ்ரீ அல்லவே...

அவனின் திமிர் அவளிடம் இருந்து வந்தது தானே... பெற்றுக் கொண்ட அவனுக்கே இந்தளவுக்கு அழுத்தம் இருக்கும் போது, கொடுத்த அவளுக்கு எவ்வளவு அழுத்தம் இருக்க வேண்டும்...

மகனின் குரல் உயர்ந்ததில் நிலைமை இன்னும் மோசமாகி விடாமல் தடுப்பதற்காக ஜெகன் தனது மனைவியின் கைப்பிடித்து நிறுத்தினான்... வேறுவழியின்றிக் கணவனுக்காக அங்கே நின்றாள் ருத்ரா... ஆனாலும் மகனை ஏறிட்டு பார்க்கவில்லை...

திடுமென மாமனின் குரல் உயர்ந்ததில் வினீதா பயத்தில் தாயை கட்டி கொண்டாள்... சுபிக்ஷாவோ எப்போதும் போல் ஜீவாவின் குரலில் உடல் நடுங்க நின்றிருந்தாள்... அவனின் ருத்ரதாண்டவம் தான் அவளுக்குப் பரிச்சயமான ஒன்றாயிற்றே...

"கண்டவனை எல்லாம் வீட்டுக்கு கூட்டிட்டு வந்து கொஞ்ச தெரியுது... ஆனா நீங்க பெத்த உங்க மகன் இத்தனை வருசம் கழித்து வந்தும் அவனிடம் பாசத்தோடு பேச தெரியலைல்ல உங்களுக்கு..."

"ஜெகன்... அபி ஒண்ணும் கண்டவன் இல்லை... அபி என் மகன் மாதிரி தான்னு அவனிடம் சொல்லுங்க... அதைக் கேட்க அவனுக்கு எந்த உரிமையும் இல்லைன்னும் சொல்லுங்க..." கணவனிடம் கூறிய ருத்ரா மகனை சிறிதும் கண்டு கொள்ளவில்லை...

"ஓஹோ... அந்தளவுக்கு வந்தாகிவிட்டதா..." என்ற ஜீவாவின் ஆத்திரம் பல மடங்கு அதிகரிக்க,

"எனக்கு உரிமை இல்லையா..." அன்னையின் முன் வந்து ஆவேசமாய்க் கேட்டவன்,

"இந்த வீடு எனக்கு மட்டுமே உரிமையானது... உங்க புருசனுக்குக் கூட இதில் உரிமை இல்லை... ஏன்னா தாத்தா

சொத்து பேரனுக்கு மட்டும் தான் சொந்தம்... அப்படி இருக்கும் போது எனக்கு உரிமையான இந்த வீட்டில் எனக்குப் பிடிக்காதவர்களை அழைத்து வந்து உறவு கொண்டாடினால் நான் கேள்வி கேட்கத்தான் செய்வேன்... அப்படி உங்களுக்கு அவன் உறவு வேணும்ன்னா இதோ இவளை..." சுபிக்ஷாவை சுட்டிக்காட்டியவன்,

"அவங்க வீட்டுக்கு கூட்டிட்டு போய் உறவு கொண்டாடிட்டு வாங்க... அதை விட்டு விட்டு இங்கே அழைத்து வந்து உறவு கொண்டாடுகிற வேலை எல்லாம் வேண்டாம்..." அவன் கத்தியதில் எல்லோருமே வாயடைத்து போய் நின்றனர்...

பூஜாவிற்கும், கிருஷ்ணாவிற்கும் பெருத்த அவமானமாக இருந்தது... ரம்யாவிற்கு முணுக்கென்று கண்ணீர் வர பார்த்தது... செல்வா தான் அவளை ஆறுதல் படுத்தினான்... அவனுக்கு ஜீவாவை பற்றி நன்கு தெரியும்... அதை விடத் தனது நண்பனை பற்றி நன்றாகத் தெரியும்... அதனால் ஜெகனுக்காக அமைதி காத்தான்...

ஜெகனோ என்ன சொல்வது என்று தெரியாமல் மனைவிக்கும், மகனுக்கும் இடையில் நின்றிருந்தான்... தகப்பனுக்கே உரிமை இல்லை என்று கூறிவிட்ட மகனிடத்தில் அவன் பேசுவதற்கு வேறு வார்த்தைகள் இல்லை...

"ஜீவா..." பூஜா அவனைப் பார்த்து குரல் கொடுக்க...

"என்ன...?" என்று சகோதரியை பார்த்து அலட்சியமாய் வினவியவன், "நீ பேசாதே... உன் வேலையைப் பார்த்துக்கிட்டு போ..." என்றான் கோபமாக...

"இது தான் உன் தங்கை மீதான உன் பாசத்தின் அளவு ஜீவா... இந்தப் பாசத்துக்காகவா நீ இவரோட சட்டையைப் பிடித்துச் சண்டை போட்ட..."

அதற்கு எல்லாம் மசிவானா இந்த ஜீவா...

"அட... நான் உனக்காகச் சண்டை போட்டேன்னு யார் சொன்னது...? அது எனக்காக நான் போட்ட சண்டை..." என்றவனின் பார்வை இளக்காரமாய்க் கிருஷ்ணாவை பார்க்க...

அதில் பெருத்த அவமானம் அடைந்த கிருஷ்ணா, "பூஜா, பேசாம இரு..." என்று மனைவியை அடக்கினான்...

ஜீவாவை போல் அவனுக்கு எடுத்து எறிந்து பேச ரொம்ப நேரம் ஆகாது... ஆனால் அவன் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அந்த வீட்டில் உள்ளவர்களின் அன்பு மனதை காயப்படுத்தும் என்பதை அவன் நன்கு அறிந்திருந்ததால் அமைதி காத்தான்...

"நீ கொஞ்சம் கூட மாறலை ஜீவா... நீ வினீயை தூக்கி கொஞ்சியதை பார்த்து நான் கூடக் கொஞ்சம் ஏமாந்து போயிட்டேன்..." என்ற ருத்ரா மகனை திரும்பி பாராது தனது அறைக்குச் சென்றுவிட்டாள்...

அன்னை கூறி சென்ற வார்த்தைகள் ஜீவாவின் நெஞ்சில் சுருக்கென்று தைத்தது... அதில் விளைந்த எரிச்சலுடன் நின்றிருந்தான் அவன்...

எல்லோரும் அவரவர் அறைக்குச் செல்ல வினீதாவை தூக்கி கொண்டு சுபிக்ஷா தோட்டத்துப் பக்கம் சென்றாள்...

ஜீவா பேசிய வார்த்தைகள் அவளது மனதை மிகவும் கஷ்டப்படுத்தியது... அன்றில் இருந்து இன்று வரை சொந்த வீட்டில் அந்நியமாக அவளை உணர வைப்பது அவனின் வார்த்தைகள் தான்...

அவனுக்கு மட்டும் கடவுள் நாக்கை படைத்தாரா இல்லை அதற்குப் பதிலாகச் சாட்டைக் கொண்டு படைத்தாரா என்று அவளுக்குச் சந்தேகமாக இருக்கும்... அந்தளவுக்கு வார்த்தைகளைக் கொண்டு மற்றவர் மனதை அடித்துக்

காயப்படுத்தும் வித்தையை நன்கு அறிந்திருந்தான் அவன்...

"அத்தை... மாமா ரொம்பக் கெட்டவரா...?" வினீதா அவளின் தாடையைப் பற்றிக் கேட்க...

அதில் தன் எண்ணங்களில் இருந்து திடுக்கிட்டு விழித்தவள் சின்னவளின் வார்த்தையில் அதிர்ந்தாள்...

அவளைப் பொருத்தவரை ஜீவா நல்லவனாக இல்லாமல் இருக்கலாம்... ஆனால் வினீதாவிற்கு அவன் தாய்மாமன் அல்லவா... அதிலும் சற்று நேரத்திற்கு முன் வினீயை அவன் தூக்கி கொஞ்சிய பாங்கு நினைவிலாட சின்னவளின் எண்ணத்தை மாற்ற எண்ணினாள்...

"இல்லைடா செல்லம்... மாமா ரொம்ப நல்லவங்க... இவ்வளவு நாள் கழிச்சு வந்தவங்க கிட்ட பாட்டி பேசாதது அவங்களுக்குக் கோபம் வந்திருச்சு..."

"ஏன் பாட்டி பேசலை...?"

"அதை அவங்க கிட்ட தான் கேட்கணும்..." என்று கூறி அவள் புன்னகைக்க...

"பாட்டி... பேட் பாட்டி... மாமா கிட்ட பேசணும் இல்லையா... பாவம் மாமா..." என்று சின்னவள் சட்டென்று தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்...

"பாட்டியும் நல்லவங்க தான்டா... ஏதோ கோபம் அவங்களுக்கு..."

அத்தை கூறியதை கேட்டு சின்னவள் யோசிக்க ஆரம்பிக்க, சின்னவள் வார்த்தைகளைப் பற்றிப் பெரியவள் யோசிக்க ஆரம்பித்தாள்...

தான் வினீதாவிடம் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை தானே... எத்தனையோ வருடங்கள் கழித்து வீடு தேடி வந்திருப்பவனிடம் இந்த அத்தை அன்பாகப் பேசினால் தான் என்ன... இப்போது அவளுக்குமே ஜீவாவை பார்த்தால் பாவமாகத் தான் இருந்தது...

அவன் அவளைக் காயப்படுத்தியதை கூட அவள் மறந்து போனாள்... இது தான் பெண்ணவள் மனம் என்பதோ... அது எப்போதுமே நியாய, அநியாயங்களுக்கு உட்பட்டு தான் வாழ்கிறதோ...

கோபத்தில் குமுறிக் கொண்டு இருந்த ஜீவாவின் அருகில் வந்தமர்ந்தார் காளிமுத்து... அவரின் வரவில் திரும்பி பார்த்தவன்,

"இந்த வீடு எனக்குச் சொந்தமானது தானே தாத்தா..." என்றான் படபடப்பாக...

இதை விடப் பல மடங்கு அதிக மதிப்புமுள்ள சொத்துக்களை அவன் சம்பாதித்து இருக்கிறான்... ஆனாலும் அவனது உரிமையை விட்டு கொடுக்க அவனுக்கு மனம் வரவில்லை...

"நிச்சயம் உனக்கு மட்டுமே சொந்தமானது..."

அவரின் வார்த்தையில் அவனுக்குத் திருப்தியாக இருந்தது...

"ஆனால் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை உண்டு... அதை நீ எப்போதும் உணர்ந்து கொள்ள வேண்டும்... உன் கூடப்பிறந்தவங்க, உன் அப்பா கூடப்பிறந்தவங்க எல்லோரையும் அனுசரித்து வாழ்வதில் தான் வாழ்க்கை இருக்கு... இப்படித் தனியாய் வாழ்வதில் இல்லை..."

முதியவரின் பேச்சை எதிர்த்து வாதாடாமல் அமைதியாக இருந்தான்... இதில் எல்லாம் அவன் நல்லப்பிள்ளை தான்...

அவனுக்குப் பிடிக்காதவர்களுக்கு மட்டும் தான் அவன் கெட்டவன்...

"ஆனாலும் நீ இப்படி எடுத்தெறிந்து பேசியது எனக்கு வருத்தம் தான் ஜீவா... எனக்கு எல்லாப் பேரப்பிள்ளைகளும் ஒரே மாதிரி தான்... அவர்களுக்கு இந்த வீட்டில் இடம் இல்லைன்னு நீ சொன்னது..." என்றவர் மேலே பேசாமல் நிறுத்தி கொள்ள...

"சாரி தாத்தா..." என்று மனதார மன்னிப்பு கேட்டவன்,

"ஆனா அவங்களை ஏன் இங்கே கூட்டிட்டு வரணும் தாத்தா...? எனக்கு அவங்க முகத்தில் முழிக்கவே பிடிக்கலை..."

பேரனின் ஆதங்கம் அவருக்குத் தெரியுமாதலால் அவனின் தோளில் ஆறுதலாகத் தட்டி கொடுத்தவர்,

"உனக்குப் பிடிக்கலைன்னா நீ ஒதுங்கிக்கோ ஜீவா... உனக்குப் பிடிக்காததைச் செய்யச் சொல்லி உன்னை எந்த விதத்திலும், எதற்காகவும் நாங்க வற்புறுத்த மாட்டோம்... நீ உன் விருப்பப்படி இங்கே இருக்கலாம்..." என்றவர்,

"ரொம்ப வருசம் கழிச்சு வந்திருக்க நாம வேறு ஏதாவது பேசலாம்..." என்று அவனிடம் தொழிலை பற்றிப் பேச ஆரம்பித்தார்... அவனும் அதில் தனது கவனத்தைப் பதித்தான்...

இதை எல்லாம் சற்று தள்ளி அமர்ந்து கொண்டு செய்தித்தாள் படிப்பது போல் பார்த்தும் பாராததுமாய் அமர்ந்திருந்தான் ஜெகன்...

சிறிது நேரத்தில் ஜீவா தான் வந்த வேலைக்காக வெளியில் கிளம்பி சென்றுவிட்டான்... அவன் சென்றதும் தான் வீட்டின் இறுக்கம் சற்றுத் தளர்ந்தது...

மதிய உணவிற்கு வராமல் இருந்த ருத்ரஸ்ரீயை சுபிக்ஷா தான் அவளது அறைக்குப் போய் அழைத்தாள்...

"அத்தை சாப்பிட வாங்க..."

"ப்ச்... வேண்டாம் சுபி..." மகனின் நினைவில் கசங்கிய மனதுடனும், முகத்துடனும் சோர்வாய் அமர்ந்திருந்தாள் அவள்...

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படி இருக்கீங்க...?"

"இன்னும் என்ன நடக்கணும் சுபி...?" விரக்தியாய் வந்தது அவளது வார்த்தைகள்...

"அவங்க பக்கமும் நியாயம் இருக்கு தானே அத்தை... வராதவங்க இப்ப வந்திருக்காங்க நீங்க அன்பா ரெண்டு வார்த்தை பேசினா குறைஞ்சா போயிடுவீங்க... அதை விட்டுட்டு நீங்க இப்படிப் பேசாம வந்தா அவங்களுக்குக் கோபம் வரும் தானே... எங்கப்பா என் கூடப் பேசலைன்னா எனக்குக் கூட இப்படித்தான் கோபம் வரும்..."

"நீ என்ன சொல்லுற...?" மருமகளின் வார்த்தையின் அர்த்தம் புரிந்த ருத்ராவின் விழிகள் விரிந்தது...

"ஃபங்க்சன் முடியும் வரை அவங்க அமைதியா இருந்தாங்க தானே... அவங்க மோசமானவங்களா இருந்தா அப்படி அமைதியா இருந்திருப்பாங்களா...? கோபப்பட்டுக் கத்தியிருக்க மாட்டாங்க... அப்படி எல்லாம் அவங்க செய்யலையே... நீங்க பேசாம இருந்ததால் தானே அவங்க அப்படிக் கோபப்பட்டுப் பேசினாங்க..."

சுபிக்ஷாவின் வார்த்தைகள் அத்தனையும் உண்மை தான்...

"அதுக்காக வாய்க்கு வந்ததை அவன் பேசிவிடுவதா...?"

"அத்தை நீங்க இப்படிப் பேசுறது தான் எனக்குச் சிரிப்பு வருது... உங்க மகனோட கோபம் தான் உலகப் பிரசித்தி பெற்றதாயிற்றே... இது கூட உங்களுக்குத் தெரியலையா..."

அதில் ருத்ராவின் இதழ்களில் சிரிப்பு வந்தமர்ந்தது...

"அது என்னவோ உண்மை தான்... கோபப்படுவதில் அவன் என்னைப் போல..." என்றவளின் முகம் இன்னும் தெளியவில்லை...

"நீங்க சமாதானமா பேசுங்க... அவங்களும் கோபம் குறைஞ்சு அமைதியாகிருவாங்க... நீங்க ரெண்டு பேரும் இப்படிக் கோபப்பட்டா எங்க மாமா நிலைமையைக் கொஞ்சம் யோசிச்சு பாருங்க... அவர் பாவம் இல்லையா..."

சுபிக்ஷா சொல்லும் போது உள்ளே நுழைந்த ஜெகன்,

"அதை உங்க அத்தை கிட்ட நல்லா அழுத்தி சொல்லு மருமகளே..." என்றபடி மனைவி அருகில் வந்தமர்ந்தான்...

"மத்தளத்துக்கு ரெண்டு பக்கத்தில் இருந்தும் அடி..." சிரித்துக் கொண்டு கூறிய கணவனை முறைத்து பார்த்தாள் ருத்ரஸ்ரீ...

ஜெகனோ அவளின் முறைப்பை கண்டு கொள்ளாது காதலோடு பார்த்தான்...

"உங்க ரொமான்ஸ் பிலிமை பிறகு ஓட்டலாம்... இப்ப நீங்க ரெண்டு பேரும் சாப்பிட வாங்க..." என்ற சுபிக்ஷா அறையை விட்டு வெளியில் சென்றாள்...

அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த ருத்ரா,

"சுபி ரொம்ப நல்ல பொண்ணு இல்லையாங்க... ஜீவாவை ரொம்ப நல்லா புரிஞ்சு வச்சியிருக்கா... அவன் அவளைப்

படுத்தி எடுத்த போதும் அவனுக்காக என் கிட்ட பரிந்து பேசுறா... இந்த நல்ல மனசு யாருக்கு வரும்..."

அதை ஆமோதித்த ஜெகன், "அதுக்குத் தான் சொன்னேன்... ஜீவாவிற்கு..." என்றவனைத் தடுத்த ருத்ரா,

"சுபி மட்டும் புரிதலுடன் இருந்தால் பத்தாது ஜெகன்... ஜீவாவும் அது போல் இருக்க வேண்டும்..." என்றவள் பெருமூச்சு விட்டவளாய்,

"அதை விடுங்க... ஜீவா பேசிய பேச்சுக்கு எனக்கு அண்ணா, ரம்யா, கிருஷ்ணா முகத்தில் முழிக்கச் சங்கடமா இருக்கு..." என்றாள் வருத்தத்துடன்...

"எதை நினைத்தும் நீ சங்கடப்படத் தேவையில்லை... நான் அவங்க கிட்ட பேசி மன்னிப்புக் கேட்டுட்டேன்... அவங்களும் ஜீவா பேசியதை பெரிதாய் எடுத்து கொள்ளவில்லை... அதனால் நீ அதை விடு..."

இந்த வயதிலும் புரிந்துணர்வோடு செயல்படும் கணவனின் பொறுமை, புரிந்துணர்வு மகனுக்கு இல்லாமல் போனது குறித்து அவளுக்கு அத்தனை வருத்தமாக இருந்தது...

தன்னைப் போல் வாழ்க்கையில் அடிப்பட்டால் தான் நிதர்சன வாழ்க்கை என்றால் என்ன என்பதை ஜீவா புரிந்து கொள்வானோ என்று நினைத்தவள் உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்...

தான் பட்ட வலிகளும், வேதனைகளும் மகன் படக் கூடாது என்று அந்தத் தாயுள்ளம் வேண்டி கொண்டது...

மனைவியின் முகமாறுதலை கவனித்துக் கொண்டிருந்த ஜெகன், "ஜில்லு... யோசிச்சது போதும்... சாப்பிட வா..." என்று அவளை அழைத்துக் கொண்டு சென்றான்...

ஒன்றும் நடவாதது போல் உணவு மேசையில் கூடியிருந்த குடும்ப உறுப்பினர்களைக் கண்ட ருத்ராவிற்குக் கண்கள் பனித்தது... இதில் தன் மகனும் மகிழ்ச்சியாய் கலந்து கொள்ளும் நாள் எந்நாளோ...? மனதின் ஓரம் கவலை அரித்தது அவளை...

தன் முகத்தை வைத்தே தன் மனதை படித்துவிடும் கணவனுக்காகக் கஷ்டப்பட்டு மனதை தேற்றிக் கொண்டு உணவு உண்ண அமர்ந்தாள் அவள்...

தான் வந்த வேலை திருப்தியாக முடிந்த சந்தோசத்தில் சென்னையில் இருந்த அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தான் ஜீவா...

தனது அறைக்கு வந்ததும் முதலில் அவன் அழைத்துப் பேசியது அபிமன்யுவிடம் தான்... அவனின் அழைப்பை எதிர்பார்த்தது போல் உடனே எடுத்தான் அபிமன்யு...

"உன் நிச்சயத்துக்கான என்னோட பரிசு உனக்குக் கிடைத்ததா...?" நக்கலாய் கேட்டவனின் கிண்டல் அபிமன்யுவிற்குப் புரியாமல் இல்லை...

ஆனாலும் அதைக் கண்டு கொள்ளாமல், "ரொம்பத் தேங்க்ஸ்..." என்றவன்,

"அதே சமயம் உனக்கும் வாழ்த்துக்கள் அண்ணா..."

அபிமன்யுவின் வாழ்த்தை புறம் தள்ளியவன் 'அண்ணா' என்ற விளிப்பை மட்டும் கருத்தில் கொண்டு,

"யாருக்கு யார்டா அண்ணா...? உன் அப்பா என் அப்பா கூடப்பிறந்தாரா இல்லை உன் அம்மா என் அம்மா கூடப்பிறந்தாங்களா...? எதை வச்சு என்னை அண்ணான்னு கூப்பிடுற...? இன்னொரு முறை அண்ணான்னு கூப்பிட்டு பாரு... கூப்பிடுற வாயை இல்லாமல் ஆக்குகிறேன்..."

ஜீவாவின் கோபத்தில் இருந்த நியாயம் அபிமன்யுவின் இதயத்தைச் சுட்டது...

"உன் கோபம் நியாயம் தான் ஜீவா... அதனால் தான் நீ செய்வதை எல்லாம் பொறுத்துக் கொண்டு நான் அமைதியாக இருக்கிறேன்..." என்று பொறுமையாகவே பதில் கூறினான் அபிமன்யு...

"ஓஹோ... அப்படி இல்லை என்றால் என்ன செய்துவிடுவாய் என்னை... உன்னால் என்னை ஒண்ணும் செய்ய முடியாது... உன்னால் முடிந்தால் என்னுடன் மோதி பார்... அப்புறம் தெரியும் நான் யார் என்று...?"

கோபத்தில் கர்ஜித்தவனைக் கண்டு என்ன பேசுவது என்று தெரியவில்லை... அதனால் மௌனம் காத்தான் அபிமன்யு...

"உன்னை விட மாட்டேன்டா... உன் அப்பா செய்த துரோகத்துக்கு நீ பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்..." என்று உறுமியபடி அழைப்பை துண்டித்தான் ஜீவா...

ஜீவாவின் வார்த்தைகளைக் கேட்ட அபிமன்யுவிற்கு வருத்தமாக இருந்தது... இதில் யாரை வருந்துவது என்று அவனுக்குத் தெரியவில்லை...

இன்று ஜீவாவால் அவன் அடைந்த நஷ்டம் பல கோடிகள்... ஆனாலும் அவனை இவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை...

அபிமன்யுவிடம் பேசிவிட்டு அழைப்பை துண்டித்த ஜீவாவின் மனமோ கொதிக்கடலாய் கொதித்துக் கொண்டு இருந்தது...

அந்தக் கார்த்திக்கால் அவன் அடைந்த அவமானங்கள் தான் எத்தனை... அதனால் தான் கார்த்திக் செய்த பாவத்தின் நிழலாய் அவன் அபிமன்யுவை துரத்துகிறான்...

இந்தத் தொழில் ஒப்பந்தத்தை அபிமன்யுவிடம் இருந்து கைப்பற்றுவதற்காகவே அத்தனை வேலைகளை வைத்துக் கொண்டு மும்பையில் இருந்து மெனக்கெட்டு இங்கு வந்திருக்கிறான் அவன்...

பொதுவாக அவன் இந்த மாதிரி விசயங்களுக்காகச் சென்னை வரும் ஆள் கிடையாது... யாராக இருந்தாலும் மும்பைக்கு வரவழைத்து தான் பேசுவான்... ஆனால் இந்தத் தொழில் ஒப்பந்தக்காரர் சற்று வயதானவர் என்பதால், அவர் தன்னால் மும்பைக்கு வந்து அலைய முடியாது என்று கூறவும் தான் அவன் இங்குப் பறந்து வந்தான்...

வந்த விசயம் அவனுக்குச் சாதகமாக முடிந்ததில், அந்த அபிமன்யு முகத்தில் கரியை பூசியதில் அவனுக்கு வெகு ஆனந்தமே...

அதே ஆனந்தத்துடன் தனது வேலைகளில் மூழ்கினான் அவன்...

இரவு ஏழு மணியளவில் வீட்டிற்கு வந்த ஜீவாவை புன்னகையுடன் வரவேற்றாள் ருத்ரஸ்ரீ... அதில் அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை...

"மாம்..." என்று ஏக்கத்துடன் அவளை அணைத்துக் கொண்டான்...

எத்தனை உயரத்துக்குச் சென்றாலும், எத்தனை இறுக்கமாய் இருந்தாலும் தாயிடத்தில் மட்டும் அவனது அத்தனை ஈகோவும் பொடி பொடியாய்த் தகர்ந்தது என்னவோ உண்மை...

ருத்ரஸ்ரீயோ சுபிக்ஷாவின் வார்த்தைகளை எண்ணி பார்த்தபடி அமர்ந்திருந்தாள்...

தன் மகன் தன்னைப் போல் அன்புக்கு ஏங்குகிறானோ என்ற தவிப்பு அவள் மனதில் எழுந்தது... இத்தனை நாள்

கோபம் கொண்டு இருந்தது போல் இனியும் இருக்கக் கூடாது என்று உறுதி எடுத்து கொண்டாள்...

"எப்படி இருக்க ஜீவா...?"

வெகு வருடங்கள் கழித்து அன்னை தன்னிடம் பேசிய மகிழ்ச்சியில் அவளை நிமிர்ந்து பார்த்த ஜீவா,

"எனக்கு என்ன நல்லா இருக்கேன் மாம்..." என்றவன், "நீங்க...?" என்றான் பெற்றவளை கண்களால் அளவெடுத்தபடி...

"உங்கப்பா இருக்கும் வரை எனக்கு என்ன கவலை..." என்றவளின் முகத்தில் புன்னகையின் சாயல்...

தந்தையைப் பற்றிப் பேசினால் மட்டும் அன்னையின் முகத்தில் வரும் பெருமித உணர்வுகளைக் கண்டு அவனுக்குப் பெரும் வியப்பாய் இருந்தது... அப்படி என்ன இருக்கிறது என்று அவரிடத்தில் காதல் கொண்டாள் தன் அன்னை... எப்போதும் போல் அவனுக்கு ஆச்சிரியமாய் இருந்தது...

காதலுக்கு அழகு, பணம், படிப்பு, அந்தஸ்து இப்படி எதுவும் தேவையில்லை... மனம் தான் வேண்டும் என்பது அவனுக்கு அந்தக் கணம் தெரியவில்லை...

"எனக்கு அவர் தான் கவலை..." என்ற மகனை செல்லமாய் முறைத்தவள்,

"ஜீவா..." என்றாள் சிறு கண்டிப்புடன்...

"ஓகே ஓகே... ஆனா நமக்கு இடையில் அவரை இழுக்காதீங்க... அப்படி இழுத்தால் நான் அப்படித்தான் பேசுவேன்..." என்றவனை வருத்தமாகப் பார்த்தாள் அவள்...

ஆனால் ஒன்றும் பதில் பேசவில்லை...

"ஓகே மாம்... எய்ட் ஓ க்ளாக் எனக்கு ஒரு பார்ட்டி இருக்கு... நான் அதுக்குக் கிளம்பணும்... பை..." என்றவன் அன்னையிடம் விடைப்பெற்று தனது அறைக்குச் செல்ல, அவனைக் கவலையுடன் பார்த்தாள் அவனது அன்னை...

"அத்தை..." சமையல் கட்டில் அண்ணிக்கு உதவி செய்து கொண்டிருந்த சுபிக்ஷாவை நோக்கி ஓடி வந்தாள் வினீதா...

"அத்தைக்கு என்னடி வைச்சிருக்கப் பட்டு..." என்றபடி சின்னவளை தூக்கி உச்சி முகர்ந்தாள் அவள்...

"பசிக்குது அத்தை..." கண்களை அகல விரித்து, வயிற்றைத் தடவி கொண்டு கேட்ட மருமகளைக் கண்டு சிரிப்பு வந்தது அவளுக்கு...

அவளது குட்டி தொப்பையில் முத்தமிட்டு, "குட்டிக்கு அதுக்குள்ள பசிச்சிருச்சா...?"

அதற்கு வினீதா பாவமாக, "ம்..." என்க...

"நான் ஊட்டவா...?" என்று கேட்ட பூஜாவுக்கு 'நோ' சொன்ன சின்னவள் அத்தையைத் தான் ஊட்ட அழைத்தாள்...

"சப்பாத்தி போடும் வேலை இருக்கே குட்டிம்மா..." என்று சுபிக்ஷா வினீதாவிடம் கூற...

"நீ போய் அவளுக்கு ஊட்டி விடு சுபி... இங்கே நான் பார்த்துக்கிறேன்..." என்று பூஜா அத்தையையும், மருமகளையும் அனுப்பி வைத்தாள்...

உணவு மேசையில் இருந்து இட்லியை எடுத்த அத்தையைக் கண்டு, "அத்தை இட்லி வேணாம்... சப்பாத்தி..." என்று அடம்பிடித்தவளை கண்டு,

"இப்ப இட்லி சாப்பிடலாம்... இது முடிஞ்சதும் சப்பாத்தி ஓகேவா...?"

அதில் சமாதானம் அடைந்த சின்னவள், "அத்தை உங்க ரூமுக்கு போலாமா...?"

"ம்... போலாமே..."

அத்தை அறைக்குச் சென்றால் விருப்பத்திற்கு விளையாடி கொண்டே உணவு உண்ணலாம் என்ற சலுகையில் அத்தையுடன் சென்றாள் சின்னவள்...

வழக்கம் போல் மாடிப்படியில் ஏறும் போது அங்கு இருந்த ஜீவாவின் புகைப்படத்தைத் திரும்பியும் பார்க்காமல் சுபிக்ஷா ஏறினாள்...

அந்நேரம் பார்த்து ஜீவா கிளம்பி மேலிருந்து படியில் இறங்கி வந்து கொண்டு இருந்தான்... அவனைக் கண்டதும் வினீதா உற்சாகமாக,

"மாமா..." என்று குரல் கொடுக்க...

சுபிக்ஷாவோ சின்னவளின் வார்த்தையில் நிமிர்ந்து பார்க்காமல் தலை குனிந்து சென்று கொண்டு இருந்தவள் தன் முன் வந்து நின்ற கால்களைக் கண்டதும் அப்படியே பிரேக் பிடித்தார் போன்று நின்றாள்... பயத்துடன் அந்தக் கால்களுக்கு உரியவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள்...

அவனோ இவளை கண்டு கொள்ளவே இல்லை... அவனின் பார்வை முழுவதும் சகோதரியின் மகள் மீதே இருந்தது...

"ஹாய் பேபி..." என்றபடி சின்னவளின் கன்னத்தில் தட்டினான்...

"மாமா... நானும் வர்றேன்..." என்ற வினீதா அத்தையின் கைகளில் இருந்து மாமனிடத்தில் தாவ முயன்று அவனின்

கழுத்தை சுற்றி வளைக்க முயல, அதில் நிலைத்தடுமாறி முன்பக்கமாய் வளைந்தவன் மாடிப்படி கைப்பிடியை பிடித்துக் கொண்டு சமாளித்து நின்றான்...

சின்னவள் தாவிய வேகத்திற்கு அவன் மட்டும் சமாளிக்கவில்லை என்றால் மூவரும் சேர்ந்து மாடிப்படியில் உருண்டு கீழே விழுந்திருக்க வேண்டும்...

ஒரு கையால் மருமகளைப் பிடித்துக் கொண்டவன், "ஹேய் பேபி... ரொம்பச் சுட்டியாய் இருக்க..." என்று செல்லம் கொஞ்சியவன் அவளின் கன்னத்தில் முத்தமிட...

மருமகளைக் கவனித்துக் கொண்டு இருந்தவன் சுபிக்ஷாவை கவனிக்க மறந்தான்... அவள் முகம் அருகில் அவனது முகம் நெருங்கி நின்றது...

அவனது அருகாமையில் விதிர்த்துப் போய்த் தனது முகத்தை விலக்கி கொண்டாள் சுபிக்ஷா... ஆனால் அவள் பார்வை முழுவதும் அவன் மீதே இருந்தது...

அப்போது தான் ஏதோ தோன்ற அவளைத் திரும்பி பார்த்தான்... தன்னைக் கண்டு பேய் முழி முழிக்கும் அவளைக் கண்டு அவன் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி என்ன என்று கேட்டான் அவளிடத்தில்...

அதில் அவள் இமைகள் படபடக்க, மனம் படபடக்க இன்னமும் பின்னுக்குச் சாய்ந்தாள்...

எப்போதும் அவனைக் கண்டதும் பயத்தைப் பிரதிபலிக்கும் அவளது விழிகள் இன்று புதிதாய் வேறு ஒரு உணர்வை காட்டியதை கண்டு அவனது பார்வை ஒரு நொடி அவளது விழிகளில் தேங்கி நின்றது...

அவளின் செய்கை, அவளின் பார்வை அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது...

"மாமா..." மருமகளின் குரலில் தனது பார்வையைத் திருப்பியவன்,

"சொல்லு பேபி..."

"நானும் வரவா...?" தலை சாய்த்து கேட்ட அந்தச் சின்னச்சிட்டு அவனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள் அழகாய்...

"இப்போ நான் பார்ட்டிக்கு போறேன்டா... சீக்கிரமா வந்து மாமா உன்னை வெளியில் கூட்டிட்டு போறேன்..." என்றவன் சின்னவளிடம் விடைப்பெற்றுப் படியில் இறங்கினான்...

அவனின் தன்மையான பேச்சு கேட்டு சுபிக்ஷா அந்த இடத்திலேயே உறைந்து போய் நின்றிருந்தாள்... இந்த ஜீவா அவளுக்குப் புதிது...

வாயில் வரை சென்ற ஜீவா ஏதோ தோன்ற நின்று பின்னால் திரும்பி பார்த்தான்... அதே நேரம் சுபிக்ஷாவும் அவனைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

இருவரின் பார்வையும் ஒரு நொடி சந்தித்து மீண்டது... இருவருமே ஒருவருக்கு ஒருவர் புதிராகவும், புதிதாகவும் தெரிந்தனர்...

இசையாகும்...

## ஸ்வரம் : 6

மதியம் நடந்த தொழில் பேச்சு வெற்றி அடைந்ததற்காகத் தான் இந்த விருந்தே... அதனால் ஜீவா இதில் கலந்து கொண்டே ஆக வேண்டிய கட்டாயம்...

விருந்தில் கலந்து கொண்டாலும் அவனது சிந்தனையை அவனது செல்ல மருமகளே ஆக்கிரமித்து இருந்தாள்... தலை சாய்த்து கொஞ்சும் குரலில் அவள் பேசிய வார்த்தைகள் 'நானும் வரவா...' அதுவே அவனது காதுகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டு இருந்தது...

சம்பிரதாயத்திற்கு ஒரு அரை மணி நேரம் அங்கு இருந்தவனால் அதற்கு மேல் இருக்க முடியவில்லை... அதனால் அவர்களிடம் விடைப்பெற்று வெளியில் வந்தான்...

கார் ஓட்டுநரை அவசரப்படுத்தி அடுத்த அரை மணி நேரத்தில் வீடு வந்து சேர்ந்தவனின் வேகம் அவனுக்கே புதிது...

எட்டு மணிக்கு 'பார்ட்டி' என்று சென்ற மகன் ஒன்பது மணிக்கு வீடு திரும்பிய அதிசயத்தைக் கண்டு ருத்ரஸ்ரீ அவனை ஆச்சிரியமாகப் பார்த்தாள்...

அப்போது தான் வீட்டில் அனைவரும் உணவு உண்ண அமர்ந்திருந்தனர்... பூஜாவும், சுபிக்ஷாவும் அவர்களுக்கு உணவு பரிமாறிக் கொண்டு இருந்தனர்...

மகனை உணவு உண்ண அழைப்பதா வேண்டாமா என்ற தயக்கத்தில் ருத்ரஸ்ரீ அவனைப் பார்த்துக் கொண்டிருக்க, ஜெகன் தான்,

"ஜீவாவை சாப்பிட கூப்பிடு..." என்றான் மனைவியிடத்தில்...

"ஜீவா சாப்பிடறியா...?" பெரும் தயக்கத்துடன் தான் கேட்டாள் அவள்...

அத்தனை பேர் முன்னிலையில் அவனிடத்தில் அவமானப்படத் தயாராக இல்லை அவள்...

என்னே அதிசயம்... ஜீவா மலர்ந்த முகத்துடன் அன்னையைப் பார்த்து,

"முதலில் வினீ பேபியை அவுட்டிங் கூட்டிட்டு போயிட்டு தான் மத்தது எல்லாம்..." என்க...

அவனின் புன்னகை முகத்தை ஆசைத்தீர பார்த்த அவனது அன்னை மனம் நிறைந்தது வெகு வருடங்களுக்குப் பின்...

"முதலில் சாப்பிட வா ஜீவா..." என்ற அன்னை சொல்லுக்கேற்ப அமைதியாய் அங்கு வந்து அவன் அமர, ருத்ரஸ்ரீ தனது கையால் மகனுக்குப் பரிமாறினாள்...

அவள் தட்டில் வைத்ததை ஒன்றும் பேசாமல் உண்ட மகனின் மாற்றம் அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... அதே சமயம் 'என்னவானது இவனுக்கு...?' என்று குழப்பமாகவும் இருந்தது...

'எந்தக் காரணம் கொண்டும் நீ ஜீவாவை கண்காணிக்கக் கூடாது... அவனை நான் பார்த்துக் கொள்கிறேன்...' என்று ராம்குமார் தீர்மானமாகக் கூறி இருந்ததால் அவள் மகனை பற்றி அதிகம் விசாரிப்பது இல்லை...

மகனின் கோபம் தெரிந்த ஒன்று ஆதலால் அவன் விசயத்தில் அவள் சற்று அடக்கித்தான் வாசித்தாள்... மற்றவர்களிடம் நடந்து கொள்வது போல் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று அவனிடத்தில் அவளால் நடந்து கொள்ள முடியவில்லை...

இந்த இடைப்பட்ட ஆறு வருடங்களில் அவனது வாழ்க்கையில் அப்படி என்ன தான் நடந்திருக்கும் என்று அவளுக்குத் தெரியவில்லை... ஆனாலும் மகனின் இந்தச் சிறு மாற்றமே அந்த அன்னைக்குப் போதுமானதாய் இருந்தது...

அவசரமாய் உண்டு முடித்தவன் அன்னையிடம் திரும்பி,

"பேபி எங்கே...?" என்று கேட்க...

அதைக் கேட்டு அதிருப்தியாய் முகத்தைச் சுளித்தாள் பூஜா... கிருஷ்ணாவின் கண்டிப்பான பார்வையில் உடனே தனது முகபாவனையை மாற்றிக் கொண்டாள் அவள்...

"வினீ அத்தை கூடத்தான் இருப்பாள்... கூட்டிட்டு போ ஜீவா..."

ருத்ரஸ்ரீ சொன்னதும் அவன் தனது வேகநடையுடன் தாத்தா, பாட்டி அறைக்குச் சென்றான்... அவனது வேக நடையைப் பார்த்த ஜெகன்,

"அப்படியே உன்னை மாதிரியே ஓடுகிற ரயிலை பிடிப்பது போல் எத்தனை வேகமாக நடக்கிறான்..." என்றான் சன்னச்சிரிப்புடன்...

"ம்..." என்று கணவனை முறைத்தவள் அது முடியாமல் சிரித்து விட்டாள்... கணவன் உண்மையைத் தானே கூறுகிறான்...

"இப்பவும் என் நடைக்கு ஈடு கொடுத்து உங்களால நடக்க முடியலை... இதில் கேலி வேறு..."

"அந்த வயசிலேயே என்னால் உன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியலை... இப்போ இந்த வயசில்... ம்ஹூம் அதுக்குச் சான்சே இல்லை ஜில்லு..."

கண்சிமிட்டி மனைவியின் காதில் ரகசியம் பேசினான் அந்தக் காதல் கணவன்... அதைக் கேட்டு அவள் முகம் சிவந்தது...

ஜீவா அறைக்குள் நுழையும் போது அகிலாண்டம் அருகில் அமர்ந்து சமத்தாக விளையாடி கொண்டு இருந்தாள் வினீதா... விக்ரம் காளிமுத்துவிடம் கதை பேசி கொண்டு இருந்தான்...

"பேபி..." மாமனின் குரலில் நிமிர்ந்து பார்த்த சின்னச்சிட்டு,

"மாமா..." என்று கூவி கொண்டு அவனிடம் ஓடி வர...

ஆசையுடன் அவளைத் தூக்கி ஒரு சுற்று சுற்றி தன்னுடன் வைத்துக் கொண்டான் அவன்...

"இப்போ ரவுண்ட்ஸ் போகலாமா...?" சின்னவளை போல் கண்களை விரித்து அவன் கேட்க...

"ம்... போலாம்..." என்றவள் பின், "அண்ணா..." என்று தனது அண்ணனை சுட்டிக்காட்ட...

அப்போது தான் ஜீவா விக்ரமை கண்டான்...

"நீயும் வா விக்ரம்..." என்க...

விக்ரம் சற்று விபரம் புரியும் வயது என்பதால் மாமனிடத்தில் திடுமென ஒட்ட முடியாமல் விழித்தான்...

காளிமுத்து தான் அவனிடம், "மாமா கூப்பிடுறாங்கல்ல போப்பா..." என்க...

பெரிய தாத்தா சொன்னதற்காக விக்ரம் மாமனுடன் சென்றான்... ஆனால் அவனிடம் எதுவும் பேசவில்லை...

'அப்பனை போல் மகனும் அழுத்தம் தான்...' விக்ரமை கிருஷ்ணாவுடன் ஒப்பிட்டு பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொண்டான் ஜீவா...

ஜீவா கார் கதவை திறந்து விட்டதும் முன்பக்கமாய் முதலில் ஏறிய விக்ரம் தான் அமர்ந்து கொண்டு தங்கைக்காக மாமனிடம் தனது இரு கைகளையும் நீட்டினான்...

அதைக் கண்டு ஆச்சிரியத்தில் ஜீவாவின் புருவங்கள் உயர்ந்தது... இந்தச் சின்ன வயதில் இப்படி ஒரு பக்குவம், அன்பு எல்லாமா...? வியப்பாய் இருந்தது அவனுக்கு...

'இதிலும் இவன் அப்பனை போல் தான் போலும்...' சிறுவயதில் கிருஷ்ணா தனது தங்கையைப் பாதுகாத்து போற்றியது அவனின் நினைவில் வந்தது...

மறுக்காமல் சின்னவளை அவனிடம் கொடுத்தவன் இருவரும் சரியாக அமர்ந்த பின்னரே காரை கிளப்பினான்... ஓட்டுநர், மெய்க்காப்பாளர்களைத் தவிர்த்துவிட்டு...

இருவரையும் பிரபல ஷாப்பிங் மாலுக்கு அழைத்துச் சென்றவன் மூடுவதற்கு ஆயத்தமான கடைகளைத் திறந்து வைத்திருக்கச் செய்து அவர்கள் கேட்டது, கேட்காதது என்று எல்லாவற்றையும் வாங்கிக் குவித்தான்... அதைக் கண்டு சின்னவர்கள் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியைப் பார்க்கும் போது அவனுக்கும் சந்தோசமாக இருந்தது...

வீட்டுக்கு வரும் வழியில் விக்ரம் மாமனுடன் சிறிது பழக ஆரம்பித்து இருந்தான்...

ஜீவாவின் காரை பற்றி அவன் கேட்ட கேள்விகள் எல்லாம் அவனது அறிவுக் கூர்மையைப் பறைச் சாற்றுவதாய் இருக்க, ஜீவாவும் சின்னவனின் கேள்வியில் உற்சாகமாகி புன்னகையுடன் பதில் கூறினான்... வெகு வருடங்களுக்குப் பிறகு அங்கு அழகிய உறவு புதுபிக்கப்பட்டது அழகாக...

மூவரும் வீட்டிற்கு வரும் போது எல்லோரும் அவரவர் அறைக்கு உறங்கச் சென்று விட்டிருந்தனர்...

விக்ரம் பெற்றோர் அறைக்குச் செல்ல, ஜீவா வினீதாவையும் அவனுடன் செல்வதற்காகக் கீழிறக்கி விட்டான்...

அவளோ தனது சகோதரனுடன் செல்லாமல் மாடிப்படியில் ஏற ஆரம்பித்தாள்... அதைக் கண்டு வேகமாய் அவள் அருகில் வந்தவன் அவளைத் தடுத்து நிறுத்தி,

"பேபி... இப்படி எல்லாம் தனியா படியேற கூடாது..." என்றவன்,

"அண்ணா கூடப் போ..." என்க...

"நான் அத்தை கூடத்தான் தூங்குவேன்..." என்று அடம்பிடித்தது அந்த வாண்டு...

"ஓ..." சின்னவள் கூறியது அவனுக்குப் புரிந்து போனது...

"சரி உங்க அத்தை கிட்ட நான் கூட்டிட்டு போறேன்..." என்றவன் அவளைத் தூக்கி கொண்டு படியேறினான்...

"ஏன் பேபி மட்டும் அத்தை கிட்ட தூங்குறாங்க...?"

அவன் கேட்டதற்குக் கண்களை உருட்டி அங்கும் மிங்கும் பார்த்த சின்னவள் பின் ரகசியமாக,

"அம்மாவுக்குப் பாடத் தெரியாது... ஆனா அத்தை சூப்பரா பாடுவாங்க... அவங்க பாட்டு பாடி என்னைத் தூங்க வைப்பாங்க..."

தங்கை மகளின் ரகசிய சம்பாஷணையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது... முயன்று அடக்கி கொண்டான்...

'உன் அத்தை அந்தளவுக்குப் பாட்டு எல்லாம் பாடுவாளா...?" என்று முதலில் ஆச்சிரியப்பட்டவன் பின், 'ச்சேச்சே... பட்டிக்காடாவது பாட்டு பாடுவதாவது...' தலையைக் குலுக்கி அந்த நினைவை புறம் தள்ளினான் அவன்...

அவனின் நினைவை பொய்யாக்குவது போல் சுபிக்ஷாவின் அறையை நோக்கி அவர்கள் செல்லும் முன் அவளின் இனிமையான குரல் காற்றில் மிதந்து வந்தது...

அதன் இனிமையில் கட்டுண்டு ஜீவா அப்படியே நின்றிருந்தான்... முழுப்பாட்டும் அவனது காதில் விழுந்து உள்ளத்தில் நிறைந்தது...

"நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்
பொன்னை, உயர்வை, புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்ன தகாதென..

நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்
மிடிமையும் அச்சமும் மேவி என் நெஞ்சில்
குடிமை புகுந்தன, கொன்று அவை போக்கின

தன்செய லெண்ணித் தவிப்பது தீர்ந்திங்கு
நின்செயல் செய்து நிறைவு பெறும்வண்ணம்
நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்

நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்
துன்பம் இனி இல்லை, சோர்வில்லை
சோர்வில்லை, தோற்பில்லை

நல்லது தீயது நாமறியோம்
நாமறியோம் நாமறியோம்
அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட
நல்லது நாட்டுக! தீமையை ஓட்டுக

நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்"

சுபிக்ஷா பாட்டை நிறுத்தியதும் தான் அவன் வினீதாவை கீழிறக்கி விட்டான்... அவள் ஓடி சென்று அத்தையின் அறைக் கதவை தட்டினாள்...

அதற்காகக் காத்திருந்தது போல் உடனே கதவை திறந்த சுபிக்ஷாவிடம், "அத்தை..." என்று தாவி கொண்டாள் சின்னவள்...

தனது அறைக்கு முன் நின்றிருந்த ஜீவாவை கண்டதும் சற்று திகைத்துப் பின் சமாளித்து அவனைப் பார்த்தவாறு சின்னவளை தூக்கி கொண்டாள் சுபிக்ஷா...

"குட்நைட் பேபி..." என்ற மாமனிடம்,

"ஐய்யே மக்கு மாமா..." என்று விளையாட்டாய் கையை நெற்றியில் தட்டிய வினீதா அத்தையின் கைகளில் இருந்து இறங்கி நேரே மாமனிடம் வந்து நின்றவள்,

"குனிங்க..." என்க...

அவள் சொன்னது கேட்டு ஜீவா புரியாமல் அவள் புறம் குனிந்தான்... சின்னவள் அவனது நெற்றியில் தனது பிஞ்சு இதழ்களை மென்மையாய் பதித்து,

"குட்நைட்..." என்றவள் பின்,

"இப்படித்தான் குட்நைட் சொல்லணும்..." என்றாள் மிரட்டும் பாவனையில்...

மருமகளின் பேச்சு அவனுக்குச் சிரிப்பை வரவழைக்க வாய்விட்டு சிரித்தவன்,

"ஓகே பேபி... மாமா இனிமேல் இப்படியே 'குட்நைட்' சொல்றேன்..." என்றவன்,

"ஆமாம்... 'குட்நைட்' இப்படித்தான் சொல்லணும்ன்னு உனக்கு யார் சொல்லிக் கொடுத்தது..."

"அத்தை..." சின்னவள் நொடி நேரம் கூடத் தாமதிக்காமல் தனது அத்தையை மாமனிடத்தில் போட்டு கொடுத்தாள்...

அதில் சுபிக்ஷா பேந்த பேந்த விழித்தாள்...

ஜீவா அழுத்தமாய்ச் சுபிக்ஷாவை பார்த்தபடி, "ஓஹோ... இவங்க சொல்லிக் கொடுத்த குட்நைட்டால் உலகம் முழுவதும் வெற்றிகரமாகப் பிசினஸ் செய்யும் உன் மாமன் உனக்கு மக்காகப் போய் விட்டேன் இல்லையா...?"

வார்த்தை சின்னவளிடம் கேட்டாலும் அதன் அர்த்தம் தனக்குத் தான் என்பதை அறியாதவளா சுபிக்ஷா... அவனின் பார்வையைச் சந்திக்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள் அவள்...

"உண்மையில் உன் அத்தை புத்திசாலி தான்..." என்றவனின் குரலில் அத்தனை நக்கல் கலந்து இருந்தது... அது சுபிக்ஷாவுக்குப் புரியாமல் இல்லை...

"இனி எதுவாக இருந்தாலும் உன் அத்தையிடம் இருந்து பாடம் கற்று கொள்கிறேன்..." அவனது வார்த்தையில் சுபிக்ஷா விதிர்த்து போய் அவனை நிமிர்ந்து பார்க்க...

அவனோ அவளைக் கண்டு கொள்ளாது சின்னவள் புறம் திரும்பியவன் மீண்டும் அவள் பக்கம் குனிந்து அவளது நெற்றியில் முத்தமிட்டு, மீண்டும் இரவு வணக்கம் கூறியவன்,

"இது உன் அத்தைக்கு..." என்றபடி கேலியாய் சுபிக்ஷாவை பார்த்தவன்,

"குரு தட்சணை கொடுக்க வேண்டும் அல்லவா..." அழுத்தமான குரலில் கூறியவன் சின்னவளின் கன்னத்தில் தட்டி விட்டு விடைப்பெற்று சென்றுவிட்டான்...

அவன் சென்றும் சுபிக்ஷா அப்படியே நின்றிருந்தாள்... இனி இந்த வார்த்தைகளை வைத்து அவன் ஒரு வருடமானாலும் அவளை வறுத்து எடுத்து விடுவானே என்று பயத்தில் அவள் நின்றிருந்தாள்...

பேசாத பேச்சுக்கு, செய்யாத செயலுக்கு என்று அவனிடம் அவள் வாங்கிக் கட்டி கொண்ட சம்பவங்கள் ஒவ்வொன்றாய் அவளது நியாபகத்திற்கு வந்து அவளைக் கலக்கம் அடையச் செய்தது...

"அத்தை... தூக்கம் வருது..."

கண்களைக் கசக்கி கொண்டு நின்ற வினீதாவை தூக்கி கொண்டு கதவை அடைத்து விட்டு உள்ளே வந்தவள் அவளைப் படுக்கையில் படுக்க வைத்தாள்...

அங்கு அறைக்குள் வந்த ஜீவாவிற்கு ஏனோ கோபம் வரவில்லை... மாறாகச் சிரிப்பு தான் பொங்கி கொண்டு வந்தது...

புத்திசாலியான அவனையும் ஒரு நொடியில் மக்காகி விட்டாளே அவனது தங்கை மகள்... வினீதாவை நினைத்து அவனுக்குச் சிரிப்பு பீறிட்டது...

வெகு நாட்கள் கழித்து மனதுக்குச் சந்தோசமாக இருந்தது... அந்த உற்சாக மனநிலையில் அம்ரிதாவை அழைத்துப் பேச துவங்கினான்... அவளின் 'டாடி' என்றழைப்பில் இன்னமும் மகிழ்ச்சி பொங்க அவளிடம் சிறிது நேரம் பேசிவிட்டு அழைப்பை துண்டித்தான்...

அப்போது தான் அவன் கவனித்தான்... பேசிக் கொண்டே தான் பால்கனியில் வந்து நிற்பதை... அங்கு வீசிய காற்று மனதுக்கு இதமாகத் தோன்ற அங்கிருந்த நாற்காலியில் சாய்ந்தமர்ந்தான் அவன்...

அந்த ஏகாந்த வேளையில், "அத்தை... இன்னொரு பாட்டு..." மெல்லிய குரலில் வினீதா கேட்பது அவனுக்குக் கேட்டது...

'இந்தப் பேபி இன்னமும் தூங்கவில்லையா...?' என்று வினீதாவை நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்டான்...

"இந்த ஒரு பாட்டு தான் அதுக்கு அப்புறம் நீ தூங்குறியோ இல்லையோ நான் தூங்கிருவேன்... ப்ளீஸ்டா குட்டி... அத்தைக்கு நாளைக்குக் காலேஜ் இருக்கு, அப்புறம் ஈவ்னிங் கச்சேரி வேற இருக்குடா..."

சுபிக்ஷாவின் கெஞ்சல் குரல் அவனின் காதில் விழுந்து அவனின் புன்னகையை இன்னமும் அதிகமாக்கியது...

"ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப்போல்

மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ

அவன் வாய் நிறைய மண்ணை உண்டு மண்டலத்தைக் காட்டியதில்

ஓய்வெடுத்துத் தூங்குகின்றான் ஆராரோ

ஓய்வெடுத்துத் தூங்குகின்றான் ஆராரோ"

மெல்லிய குரலில் பாடிய அத்தையின் குரல் இனிமையில் சின்னவள் உறங்கினாளோ இல்லையோ அவளது

மாமனுக்கு நல்ல உறக்கம் வரும் போலிருந்தது...

திடுமெனப் பாடல் நின்று போனது... ஜீவாவின் மயக்கமான சிந்தனையும் கலைந்து போனது... மெல்ல நடப்பிற்கு வந்தான்...

மனதின் இதம் மறைந்து தூரத்தில் தெரிந்த இருண்ட வானை வெறித்துக் கொண்டு அமர்ந்து இருந்தான்... மனதில் ஏதேதோ பழைய நினைவுகள்... அதையும் மீறி மனதில் அம்ரிதா, வினீதா இவர்களின் நினைவில் மகிழ்ச்சியின் சாயல்...

தனது மனதின் துன்பத்தை இப்படிக் குழந்தையின் புன்னகையில் கரைக்கிறோமோ என்ற ஒரு நினைவு தோன்றியது அவனுள்... அது ஓரளவு உண்மை தான் என்றாலும் கூட, அந்தப் புன்னகையை ரசிக்கக் கற்றுக் கொடுத்தது அம்ரிதாவின் வருகை அல்லவா... அவள் பிறப்பிற்குப் பின் தானே அவனும் இந்தளவிற்கு மாறியிருக்கிறான்...

அவனது இந்த மாற்றம் நல்லதிற்கா இல்லை கெட்டதிற்கா என்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் இந்த மாற்றம் அவனுக்குப் பிடித்திருந்தது என்னவோ உண்மை...

கள்ளங்கபடமற்ற குழந்தைகளின் சிரிப்பில் அவன் தனது கவலைகளை மறந்தான் என்றால் அது மிகையில்லை...

அவனது மனதில் மெல்ல பழைய நினைவுகள் எழ ஆரம்பித்தது...

அதே சமயம் சுபிக்ஷாவும் ஜீவாவை பற்றித் தான் சிந்தித்துக் கொண்டு இருந்தாள்... அவனின் மாற்றம் அவளுக்குப் பெரும் வியப்பாய் இருந்தது... முன்பு எப்படி எல்லாம் கோபம் கொள்பவன், இப்போது அதைச் சற்று குறைத்து இருப்பது அவளுக்கு ஆச்சிரியமாக இருந்தது...

அவளுள்ளும் பழைய நினைவுகள் எழுந்தது... அது அவளது மனதின் ரணத்தை மெல்ல கிளறிவிட ஆரம்பித்தது... அது மிகுந்த வலியை கொடுத்தது அவளிடத்தில்...

ஜீவா பத்து வயது வரை மற்ற குழந்தைகள் போல் பெற்றோரிடத்தில் மிகுந்த பாசத்துடன் இருந்தவன் தான்... தாயிடம் நன்கு ஒட்டி கொண்டாலும், தந்தையிடமும் பாசம் காட்ட தவறவில்லை... ஜெகனையும் அவனுக்கு நிரம்பப் பிடிக்கும்... 'அப்பா, அப்பா' என்று தந்தை பின்னால் சுற்றி திரிந்தவன் தான்...

ஜெகனை பற்றிச் சொல்லவே வேண்டாம்... அழகான, அன்பான மனைவி, குழந்தைகள் என்று அருமையான குடும்ப வாழ்க்கை... அவன் தன் மனைவி, குழந்தைகள் மீது உயிரையே வைத்திருந்தான்...

பத்து வயதுக்குப் பின்னர்த் தான் ஜீவாவிற்குச் சில வேறுபாடுகள் பெரிதாய் கண்களை உறுத்தியது... அதிலும் அவனது சக தோழர்கள் கேட்கும் கேள்விகள் அவனுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது...

பள்ளிக்கு வரும் அவனது பெற்றோரை பார்த்த அவனது வகுப்புத் தோழர்கள் ஜெகனை பார்த்துச் சந்தேகமாகக் கேள்வி கேட்க துவங்கினர்...

"நீ, உன் அம்மா இரண்டு பேரும் நல்ல கலரா அழகா இருக்கீங்க... ஆனா உங்கப்பா, உன் தங்கை இரண்டு பேர் மட்டும் ஏன் கறுப்பா இருக்காங்க...?"

அதுவரை இந்த நிற வேற்றுமையைப் பெரிதாகக் கருதாத ஜீவா அப்போது தான் அந்த வித்தியாசத்தைத் தனித்துக் கவனிக்க ஆரம்பித்தான்...

நண்பர்கள் கூறியது போல் அவனும், அவனது அன்னையும் தந்தை, தங்கையிடம் இருந்து தோற்றத்தில் பெரும் வித்தியாசமாய் இருப்பதை உணர்ந்தான்...

ஜீவா உருவத்தில் தந்தையைக் கொண்டு இருந்தாலும் நிறத்தில் தாயை கொண்டு இருந்தான்... அதை விட அவன் இயற்கையாகவே அழகாக இருந்தான்... அது தான் உண்மையும் கூட...

பூஜா தந்தையைப் போல் கறுப்பாக இல்லை என்றாலும் மாநிறமாக, ஜீவாவை விடச் சற்று நிறம் குறைவாகத் தான் இருந்தாள்...

ஜீவா மற்றொரு விசயத்தையும் அந்நேரம் உணர்ந்தான்... அந்த வீட்டு உறுப்பினர்களில் அவனையும், ருத்ரஸ்ரீயை போல் மற்றவர்கள் யாரும் நிறமாய், அழகாய் இல்லை... அது வேறு அவனுக்குச் சற்றுப் பெருமையாக இருந்தது...

நாளடைவில் அது அவனுக்கு அதிகக் கர்வத்தைக் கொடுத்தது...

முதலில் தங்கையைச் சீண்ட ஆரம்பித்தவன் நாளடைவில் தந்தையிடம் வந்து நின்றான்... ஜெகனை அவன் கிண்டல் பண்ணி பேசுவது ருத்ரஸ்ரீக்குக் கோபத்தை உண்டு பண்ண அவள் அவனைக் கண்டிக்க ஆரம்பித்தாள்...

"இது என்ன பேச்சு ஜீவா... நிறத்தில் என்ன இருக்கு... எல்லாம் குணத்தில் தான் இருக்கு..."

அவள் பேசிய பேச்சு சிறுவனுக்கு எங்கே புரிய போகிறது... அதனால் ஜெகன் தான் அவளைச் சமாதானப்படுத்தினான்...

"அவன் சின்னப்பிள்ள தானே ஸ்ரீ... வளர்ந்து வரும் போது சரியாகி விடுவான்..."

ஆனால் ஜெகன் சொன்னது போல் அவன் சரியாகவில்லை... மாறாக அந்த எண்ணம் ஆழமாய் அவன் மனதில் வேரூன்ற ஆரம்பித்தது...

தன்னைப் போலிருக்கும் தாயை மட்டும் அவனுக்கு நிரம்பப் பிடிக்கும்... தானும், தாயும் தனிப்பிறவி என்கிற நினைப்பு அவனுக்கு எப்போதும் உண்டு... அதனால் மற்றவர்களை உதாசீனப்படுத்தினான்... கிருஷ்ணா அவன் குணம் தெரிந்து ஒதுங்கி போய்விடுவான்...

இதில் அகிலாண்டம் மட்டும் அவனுக்கு விதிவிலக்கு... ஏனெனில் அவர் எப்போதும் அவனைப் பாராட்டி சீராட்டுவதால் அவரை மட்டும் அவனுக்கு ரொம்பப் பிடிக்கும்...

அவர்கள் இனத்தில் யாரும் இல்லாத அழகுடன் தன் பேரன் இருப்பதில் அவருக்கு அத்தனை பெருமை... அவனை விட அவனின் அழகில் அதிகப் பெருமை கொள்பவர் அவர்... அவனின் அழகின் கொள்கைப் பரப்பு செயலாளர் அவர் என்றால் அது மிகவும் பொருந்தும்...

இந்நிலையில் ஒரு நாள் அகிலாண்டம் தனது கையில் இருந்த ஒரு வயது குழந்தையான சுபிக்ஷாவை பதினோரு வயதான ஜீவாவிடம் காட்டி,

"உன் பொண்டாட்டி ராசா..." என்று விளையாட்டாய் கூற அவ்வளவு தான் அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது...

"க்ரனி... இந்தப் பேபி கறுப்பா இருக்கு... இது போய் என் வொய்ப்பா... உவ்வே..." என்று வாந்தி வருவது போல் சைகை செய்து அவன் ஆர்ப்பாட்டம் பண்ண, அதில் மற்றவர்கள் திகைத்து போய் அவனைப் பார்க்க, அகிலாண்டம் தான் அவனைச் சமாதானப்படுத்தினார்...

"விடு ராசா... தெரியாம சொல்லிட்டேன்... மன்னிச்சிக்கோ..." என்று அவர் மன்னிப்பு கேட்டதும் தான் அவன் அடங்கினான்...

அன்று ஆரம்பித்த பிரச்சனை அதன் பின் அந்தச் சிறுமியை காரணமே இல்லாமல் வெறுக்க ஆரம்பித்தான் அவன்... ஏன், எதற்கு என்று தெரியாது ஆனால் அவளைப் பார்த்தாலே அவனுக்கு வெறுப்பாய் இருக்கும்...

இதில் சுபிக்ஷா வேறு அவனை 'மாமா, மாமா' என்றழைத்து அவன் பின்னே சுற்றிக் கொண்டு இருந்தாள்... அது வேறு அவனுக்கு இன்னமும் கோபத்தை உண்டு பண்ணியது... ஆனாலும் அந்தக் கோபத்தை அவளிடம் காட்ட மாட்டான்... எரிச்சலுடன் அவளை விட்டு விலகி சென்றுவிடுவான்...

ஜீவாவிற்கு விபரம் புரியும் வயதில் தான் கார்த்திக்கின் துரோகம் அவனது காதுகளை வந்தடைந்தது... ஏனெனில் ராகவ்வும், அபிமன்யுவும் அவனுடன் தான் ஒரே பள்ளியில் படித்தனர்... அதிலும் ராகவ், கிருஷ்ணாவின் வகுப்பு தோழன்...

கிருஷ்ணாவை ஒரு வருடம் தாமதமாகப் பள்ளியில் சேர்த்ததால் இருவரும் ஒரே வகுப்பினர்... அதனால் இருவருக்குள்ளும் நல்ல தோழமை உண்டு... ஜீவா போல் ராகவ் கிடையாது அதனால் கிருஷ்ணா அவனிடம் நட்பு பாராட்டினான்...

கார்த்திக் துரோகம் கேட்டு அவனுள் சுருசுருவென்று ஏதோ ஒன்று பொங்கியது...

'கார்த்திக் துரோகத்தால் தான் உன் அம்மா ஜெகனை மணந்து கொண்டாள்... உன் அப்பா பணத்துக்காக உன் அம்மாவை மணந்து கொண்டான்... உன் அம்மாவின் இந்த நிலைக்குக் காரணம் உன் அப்பா தான்... அவர் மட்டும் வராமல் இருந்திருந்தால் உன் அம்மா தன் வாழ்க்கையைப் போராடி மீட்டு எடுத்து இருப்பாள்...'

இப்படிப் பல கதைகள் அவன் காதை வந்தடைய, அந்தப் பதினைந்து வயது பதின்வயது பருவ பையனுக்கு நல்லது

கெட்டது மூளையில் ஏறவில்லை... வாழ்வில் திருமணம் என்பது ஒரு முறை தான் வரும் என்று அழுத்தமாக எண்ணினான்... அதனால் தாயை வற்புறுத்தி மணந்த தந்தையை அவன் அறவே வெறுத்தான்...

அன்றே அதை அன்னையிடம் கேட்க எண்ணி அவன் குமுறிக் கொண்டு இருந்த போது அலுவலகத்தில் இருந்து அவள் இன்னமும் வீடு வந்து சேரவில்லை... அவளுக்காக அவன் காத்திருந்தான்...

ஜீவா அங்கும் இங்கும் டென்சனாய் நடை பயில்வதைக் கண்டு ஜெகன் தான் கவலை கொண்டு அவனிடம் சென்று என்ன என்று கேட்க, அதற்கு மகன் தனது கோபத்தை எல்லாம் அவனிடத்தில் வெடித்தான்...

"நீங்க ஏன் என் அம்மாவோட வாழ்க்கையில் வந்தீங்க... உங்களால தான் எங்கம்மாவுக்குக் கெட்டப் பெயர்... நீங்க அவங்க வாழ்க்கையில் வராம இருந்திருந்தா அவங்க நிம்மதியா இருந்திருப்பாங்க..." என்று கத்திய மகனை அதிர்ந்து போய்ப் பார்த்தான் ஜெகன்...

தான் உலகிற்கு வர காரணமாய் இருந்த தந்தையைப் பார்த்து அவன் அவ்வாறு கேட்டான்... தந்தை இல்லையேல் தானில்லை என்பதை அந்தக் கணம் அவன் மறந்து போனான்...

அதைக் கேட்டபடி வீட்டினுள் நுழைந்த ருத்ரஸ்ரீ அவனை அடிக்கப் போய்விட்டாள்... அப்போதும் ஜெகன் தான் அவளைத் தடுத்தான்...

"விடு... சின்னப் பையன் தெரியாம பேசுகிறான்..." என்று...

அன்று அவனை அமர வைத்து எல்லாவற்றையும் சொல்லியிருந்தால் ஜீவா மனது மாறியிருக்குமோ... அப்படிச் சொல்லியிருந்தாலும் அதை அவன் காது கொடுத்து கேட்டு இருப்பானோ என்பது சந்தேகமே...

அவனை அவன் விருப்பத்திற்கு விட்டது தான் அங்கே தவறாகி போனது... அவனாக ஒன்றை நினைத்துக் கொண்டு எல்லோரிடமும் இருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தான்...

இந்த மாதிரியான மனநிலையில் ஜீவா பத்தாவது தேர்வு எழுதி முடித்து விடுமுறையில் வீட்டில் இருந்தான்... அன்று அவனது நண்பர்கள் வீட்டிற்கு வருகை தந்திருந்தனர்... அது போல் தான் கிருஷ்ணாவை பார்க்க ராகவ்வும் வந்திருந்தான்... அவனுடன் சேர்த்து அபிமன்யுவும் அங்கு வந்திருந்தான்...

ராகவ்வையும், அபிமன்யுவையும் ஜீவா முறைத்துக் கொண்டு தான் இருந்தான்... அவர்களின் வரவை அவன் விரும்பவில்லை... ஆனாலும் மனதில் இருப்பதை வெளிக்காட்டி கொள்ளவும் இல்லை...

பிள்ளைகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து விளையாட துவங்க, ஐந்து வயது சிறுமியான சுபிக்ஷாவிற்கு மட்டும் விளையாட ஆள் இல்லாததால் அவர்களோடு ஒப்புக்கு சப்பாகத் தன்னையும் இணைத்துக் கொண்டு விளையாடி கொண்டு இருந்தாள்...

விளையாட்டுச் சுவாரஸ்சியத்தில் அவள் எப்போதும் போல் ஜீவாவை 'மாமா' என்று அழைத்து விளையாடி கொண்டிருக்க, அதைக் கேட்டு வழக்கம் போல் கோபம் வந்தாலும் பல்லை கடித்துத் தன்னை அடக்கி கொண்டான் அவன்...

ஆனால் அவனைப் போல் அவனது நண்பர்கள் சும்மா இருக்காமல் அவனைக் கிண்டலடித்து வம்பிழுத்தனர்...

"டேய் ஜீவா... நீ மாமாவாமே... அதுவும் இவளுக்குப் போயா...? ஆனாலும் சூப்பர்டா... உங்க இரண்டு பேருக்கும் ஜோடி பொருத்தம் சும்மா அள்ளுது போ..." என்று இருவரின்

நிற வேற்றுமையைச் சுட்டிக்காட்டி அவனை வெறுப்பேற்றினார்கள்...

அதைக் கேட்டு ஜீவாவிற்குச் சுள்ளென்று கோபம் வந்த போதும் அதை வெளிக்காட்டி கொள்ளாமல், "போயும் போயும் அவளைப் போயாடா நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்... இவளெல்லாம் என் கால் தூசி பெற மாட்டாள்..." என்று அவன் கூறியது கேட்டு அவனது நண்பர்கள் பெருங்குரலெடுத்து சிரிக்க...

அது அந்தச் சிறுமியின் காதில் விழவில்லை... ஆனால் கிருஷ்ணாவின் காதில் விழுந்து விட்டது... அவன் ஜீவாவை முறைத்து விட்டு தன் தங்கையைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான்...

தன்னை விடப் பதினான்கு வயது சிறியவளான தங்கை மீது அவனுக்கு அலாதிப்பிரியம்...

நண்பர்கள் சென்றவுடன் கோபமாய் வீட்டினுள் வந்தமர்ந்த ஜீவாவின் கோபத்தின் அளவு தெரியாமல் அவனின் கால்களை நாய்க்குட்டி போல் மீண்டும் மீண்டும் சுற்றி வந்தாள் சுபிக்ஷா...

"மாமா... மாமா..." என்று அழைத்தவளை மிதமிஞ்சிய ஆத்திரத்தில் அவன் ஓங்கி தள்ளி விட்டான் கீழே...

அவன் தள்ளிவிட்ட வேகத்தில் நிலைத்தடுமாறி போய் அங்கிருந்த மேசை மீது விழுந்தவளின் மேலுதடு மேசையில் நீட்டி கொண்டிருந்த ஆணியில் பட்டு கிழிந்து இரத்தம் வழிந்தது...

அதைக் கண்டு ஜீவா பயத்தில் உறைந்து போய் நின்றான்... அவன் வேண்டும் என்றே அதைச் செய்யவில்லை...

சுபிக்ஷாவின் வீறிடலில் வீட்டில் இருந்தவர்கள் எல்லோரும் அங்குக் குழுமிவிட்டனர்...

எதற்குமே ஜீவா மீது கோபம் கொள்ளாத ஜெகனுக்குக் கூட அன்று அவன் மீது கோபம் வந்தது... ஆனாலும் அமைதியாய் இருந்துவிட்டான்... ஆனால் ருத்ரஸ்ரீயால் அதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை...

ஓங்கி ஒரு அறை அறைந்தாள் மகனது கன்னத்தில்... அதில் நிலைக்குலைந்து போய்க் கண்ணீர் மல்க அன்னையை நிமிர்ந்து பார்த்தவன் விழி வட்டத்தில் மற்றவர்களும் சேர்ந்து விழ அந்த நொடி அவனுக்கு மிகுந்த அவமானமாகப் போய்விட்டது...

எல்லோரின் பார்வையும் தன்னை ஒரு குற்றவாளி போல் பார்ப்பதை உணர்ந்து மனம் குமைந்து போனான் அவன்...

சுபிக்ஷாவை தூக்கி கொண்டு மருத்துவமனைக்குப் பெற்றோர்கள் செல்ல, தனித்து விடப்பட்ட ஜீவா அருகில் வந்த அகிலாண்டம் அவனைச் சமாதானப்படுத்த முயல, அவனோ அவரது கைகளைத் தட்டிவிட்டு தனது அறைக்குச் சென்றுவிட்டான்...

அன்று முழுவதும் அறைக்குள் அடைந்து கிடந்தான் ஜீவா... எல்லோரும் தங்களது மனவருத்தத்தை மறந்து அவனை வந்து அழைத்த போதும் அவன் வெளிவரவில்லை...

அவனின் மனது தாயின் வருகையை எதிர்பார்த்தது... தாயின் பார்வையில் அவன் குற்றவாளி இல்லை என்பதை அவள் உணர்த்தினால் போதும் என்று நினைத்தான்... ஆனால் ருத்ரஸ்ரீயோ அவன் மீதிருந்த கோபத்தில் அவனைச் சென்று பார்க்கவில்லை...

'இவ்வளவு நடந்தும் வாய் திறந்து மன்னிப்பு கேட்டானா...? சரியான அழுத்தம்...' என்று மகனை நினைத்து அவள் மனம் குமுறினாள்...

அவரவர் நிலையில் அம்மாவும், மகனும் பிடிவாதமாய் நின்றனர்... எப்போதும் போல் ஜெகன் தான் இருவருக்கும்

இடையில் மாட்டி கொண்டு விழித்தான்...

அந்த நேரம் பார்த்து ராம்குமார் அங்கு வருகை தந்தார்... அவர் எப்போதும் ருத்ரஸ்ரீயின் மக்களைப் பார்க்க சென்னைக்கு வந்துவிடுவார்... முதலில் எல்லாம் அவர் சென்னை வரவே யோசிப்பார்... ஆனால் இப்போது ஷோபனாவின் மரணத்திற்குப் பின்னர், அதுவும் பேரக் குழந்தைகளுக்காக இங்கே வந்து போய்க் கொண்டிருந்தார்...

அவரைக் கண்டதும் அதுவரை அடக்கி வைத்திருந்த துக்கம் எல்லாம் நெஞ்சை அடைக்க ஜீவா அவரிடம் கதறிவிட்டான்...

"எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கலை க்ராண்ட்ப்பா... நான் உங்க கூடவே வர்றேன்... என்னைக் கூட்டிட்டு போங்க..." என்று...

அதை அவர் ருத்ரஸ்ரீயிடம் கூற, அவளோ மறுத்தாள்... ஜெகனோ,

"இப்போதைக்கு அவனுக்கு ஒரு இடமாற்றம் தேவை... அவனை விட்டு பிடி ஸ்ரீ... இப்போ அவனுக்கு லீவு தானே... லீவு முடிஞ்சு இங்கே வந்தா போதும்..." என்று ஜீவாவின் முடிவுக்கு அவன் சம்மதம் தெரிவித்தான்...

அது தான் தவறாகப் போனது... மும்பை சென்ற ஜீவா அதன் பின் ஊர் பக்கமே தலை வைத்து படுக்கவில்லை...

அவனது பள்ளி, கல்லூரி படிப்பு எல்லாமே மும்பை மற்றும் வெளிநாட்டில் படித்து முடித்தவன் படிப்பு முடிந்து வந்ததும் தொழிலை தன் கையில் எடுத்துக் கொண்டான் யாரின் அனுமதியுமின்றி...

அதற்கு ஜெகனும் இசைந்து கொடுத்தது வேறு விசயம்... அவன் தான் மனைவியின் மனதை மாற்றி மகனுக்குச் சாதகமாகச் செயல்பட்டான்...

இன்று சொந்த வீட்டில் தந்தைக்கு உரிமை இல்லை என்று ஜீவா பேசுவதற்கு அடிப்படை காரணம் அன்று ஜெகன் மகனுக்கு அத்தனை சொத்துக்களையும் தாரை வார்த்துக் கொடுத்ததினால் தான்... அப்படிப்பட்ட தந்தையின் தியாகத்தை இன்று வரை ஜீவா புரிந்து கொள்ளவே இல்லை...

அப்படிச் சென்னை பக்கமே தலை வைத்து படுக்காதவனைப் பூஜாவின் திடீர் முடிவு அவனைச் சென்னை பக்கம் வரவழைத்தது... வந்தது மட்டும் இல்லாமல் கிருஷ்ணாவிடம் சண்டை போடவும் வைத்தது...

அத்தோடு விட்டானா அந்த அடங்காத காளை... தனது இயலாமையை, ஆத்திரத்தை பதிமூன்று வயது சுபிக்ஷாவிடம் கொட்டி அனைவரின் கோபத்திற்கும் ஆளாகினான் இருபத்திமூன்று வயதான ஜீவா...!!!

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 7

பூஜா தன் முன் பரப்பி வைக்கப்பட்டு இருந்த அத்தனை புகைப்படங்களையும் சற்றும் ஆர்வம் இல்லாமல் பார்த்துக் கொண்டு இருந்தாள்... ஏனோ அதில் இருந்த இளைஞர்கள் எல்லாம் அவள் மனதை கவரவில்லை... கவரவில்லை என்பதை விடப் பிடிக்கவில்லை என்றே சொல்லலாம்...

எல்லாவற்றையும் ஒதுக்கி தள்ளி வைத்து விட்டு அறையை விட்டு வெளியில் வந்து பால்கனியில் நின்றாள் அவள்...

பூஜா இருபத்திமூன்று வயது இளம்பெண்... கல்லூரி படிப்பு முடித்துவிட்டு அன்னையுடன் சேர்ந்து தொழிலை கவனித்துக் கொண்டு இருந்தாள்... அதே சமயம் அன்னையைப் போல் வீட்டு வேலைகளையும் பொறுப்பாய் பார்த்து கொண்டாள்...

ருத்ரஸ்ரீயை போன்று பார்த்தவுடன் சுண்டி இழுக்கும் அழகி இல்லை என்றாலும் மாநிறமாய்த் துருதுருவென இருக்கும் அவளை யாருக்கும் பிடிக்காமல் போகாது... அதில் அவள் தனது தந்தையைக் கொண்டு இருந்தாள்... உதட்டில் தவழும் புன்னகையும், அன்பான செய்கையும், எல்லோரிடமும் பாசம் காட்டுவது, பொறுமை, நிதானம் என்று எல்லாவற்றிலும் அவள் ஜெகனே தான்...

இதுநாள் வரை மகளாய் வளைய வந்தவளை திருமணம் செய்து இன்னொரு வீட்டின் மருமகளாக்க நினைக்கும் பெற்றோரின் எண்ணத்தையும் தவறு என்று சொல்ல முடியாது... அது அவளுக்குப் புரிந்து தான் இருந்தது...

அவளுக்கு ஏற்றார் போல் அந்தஸ்து, அழகு, படிப்பு என்று எல்லாவற்றிலும் இணையான மணமகன்களைத் தான் தேர்ந்தெடுத்து அவளிடம் காட்டினர் அவளது பெற்றோர்... ஆனால் ஏனோ அவளுக்கு அவர்களை எல்லாம் பிடிக்கவில்லை...

அவளது பாசம் கொண்ட மனம் திருமணம் என்ற பெயரில் இந்த வீட்டை விட்டு பிரிந்து செல்வதைச் சிறிதும் விரும்பவில்லை... வெகுநேரம் மனதுக்குள் யோசித்துக் கொண்டு இருத்தவள் மனதில் அந்த எண்ணம் பளிச்சிட்டது... அதைத் தவிர வேறு எந்த வழியும் அவளுக்குப் புலப்படாத காரணத்தால் அதைச் செயல்படுத்த விழைந்தாள்...

மறுநாளே தனது பெற்றோரிடம் வந்து நின்றவள், "அப்பா, அம்மா நான் கிருஷ்ணா மாமாவை விரும்புகிறேன்... அவரைத் தான் திருமணம் செய்து கொள்வேன்..." என்றாள் தெள்ளத்தெளிவாக...

அதைக் கேட்டு ஜெகனும், ருத்ரஸ்ரீயும் அதிர்ச்சி அடையவில்லை... மாறாக ஆச்சிரியம் அடைந்தனர்...

உறவுக்குள் மணம் முடிப்பதை பற்றி இருவரும் பெரிதாக யோசிக்கவில்லை... இவ்வளவு ஏன் வீட்டுப் பெரியவர்கள் காளிமுத்து, அகிலாண்டம் கூட இது பற்றிப் பேசியது இல்லை... ஏனெனில் இது போல் பேசியதற்கு ஜீவா கோபம் கொண்டதால் சிறியவர்களைப் பற்றி அது போல் நினைக்கத் தோன்றவில்லை... அதனால் தான் அவளின் பேச்சு அவர்களுக்கு ஆச்சிரியத்தைக் கொடுத்தது...

கிருஷ்ணாவை மறுக்கப் பெரிதாகக் காரணம் இல்லாததால் அவர்கள் உடனே தங்களது சம்மதத்தைத் தெரிவித்தனர்... இந்த விசயம் செல்வா, ரம்யா மூலம் கிருஷ்ணாவின் காதுகளைச் சென்றடைந்தது...

விசயம் கேட்டு அவன் ஒன்றும் சந்தோசத்தில் துள்ளி குதித்து விடவில்லை... மாறாகச் சிந்தனையில் ஆழ்ந்தான்... உடனே பூஜாவை சந்தித்துப் பேசினான்...

தனது முகத்தைப் பார்க்காது தலையைக் குனிந்து கொண்டு இருந்த மாமன் மகளைப் பார்த்துக் கொண்டு இருந்தவனின் முகம் யோசனையைத் தத்தெடுத்தது... ஆனால் ஏனோ அவள் பேசியதற்கு அவனுக்குக் கோபம் வரவில்லை...

"பூஜா..." என்று அவன் அழைத்த போதும் அவள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை...

குற்றவுணர்வு மனதை கொல்ல அமைதியாய் நின்றிருந்தாள் அவள்...

"பூஜா... நிமிர்ந்து என்னைப் பார்..." அழுத்தமாய் ஒலித்த அவனது குரலில் திடுக்கிட்டு போய் நிமிர்ந்து பார்த்தாள் அவனை...

"என்ன தான் பிரச்சினை உனக்கு...?"

அவளின் மனக்குழப்பத்தை அவன் எளிதாய் கண்டு கொண்டான்... அதற்கும் அமைதி காத்தவளை கண்டு பொறுமையைக் கைவிடாமல் அவளுக்குப் புரியும்படி நிதானமாய்ப் பேச துவங்கினான் அவன்...

"இங்கே பார் பூஜா... நானும், நீயும் சின்ன வயசில் இருந்து ஒண்ணா சேர்ந்து வளர்ந்தவங்க தான் என்றாலும் இதோ இந்த நொடி வரை உனக்கும், எனக்கும் இடையில் மாமன் மகள், அத்தை மகன் என்கிற உறவு தாண்டி வேறு உறவோ, எண்ணமோ இருந்தது கிடையாது... அது எனக்கு நல்லா தெரியும்... நீ இப்படித் திடீர்ன்னு சொன்னதுக்கு என்ன காரணம்...?" என்றவன் நிறுத்திவிட்டு அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்தபடி,

"நீ உண்மையைச் சொல்வேன்னு நான் நம்பறேன்..."

அவனது வார்த்தைகளில் அவளது கண்களில் இருந்து கண்ணீர் கரகரவென வழிந்தது... பொய் கூறிவிட்டதில் அவளது மனசாட்சி அவளைச் சாடியதை விட அத்தை மகனின் வார்த்தைகள் அவளை வதைத்துக் கொன்றது...

அவளது கண்ணீர் கண்டு அவன் பயந்து போய்விட்டான்... அதற்காக அவள் அருகே வரவும் இல்லை, கண்ணீரை துடைத்து விடவும் இல்லை... தள்ளி நின்று கையாலாகாதவனாய் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்...

"எதுவாக இருந்தாலும் என்னிடம் நீ சொல்லலாம் பூஜா... பயப்படத் தேவையில்லை..." அவனது மென்மையான குரலில் அவள் தனது வாய் திறந்தாள்...

"எனக்குக் கல்யாணமாகி வேறு வீடு போக விருப்பம் இல்லை... இங்கே இருக்கத்தான் விருப்பம்..." என்றவளை கண்டு முதலில் திகைத்த கிருஷ்ணா பின்பு வாய்விட்டுச் சிரிக்கத் துவங்கினான்...

"இதுக்குத் தான் இப்படிச் சொன்னாயா...? நான் கூட என்னவோ ஏதோன்னு பயந்து போயிட்டேன்..." என்றவன்,

"சரி... இங்கேயே சென்னையில் மாப்பிள்ளை பார்க்கலாம்... நீ அடிக்கடி நம் வீட்டிற்கு வந்து போயிருக்கலாம்... உனக்கு முடியவில்லை என்றால் சொல்... நான் வந்து உன்னை அழைத்து வருகிறேன்..."

சிறு குழந்தைக்கு எடுத்து சொல்வது போல் அவன் சொல்ல...

"அப்படி நான் கல்யாணமாகி போகும் வீட்டில் அப்பா, அம்மா, ஐயா, அப்பத்தா, மாமா, அத்தை, சுபி எல்லாம் இருக்க மாட்டேங்களே... எனக்கு இவங்க எல்லார் கூடவும் இருக்கணும்... அதுக்குத் தான்..." என்றவள் மேலே சொல்லாமல் நிறுத்தி கொண்டாள்...

அவள் கூறிய பட்டியலில் அவனது பெயர் இல்லாததை அவன் கவனித்தான்... ஆனால் அவள் அதைக் கவனிக்கவில்லை... ஒன்று மட்டும் அவனுக்குப் புரிந்தது அவளுக்கு இந்த வீட்டை விட்டு, உறவுகளை விட்டுப் போகப் பிடிக்கவில்லை என்று...

"பெண்ணாய் பிறந்தால் இது சகஜமான ஒன்று பூஜா... இன்று கஷ்டமாகத் தெரியும் ஒன்று நாளை இஷ்டமா மாறலாம்... அதாவது நாளை கல்யாணமாகி போன பின் நீ உன் புருசனை விட்டு இங்கே வர கூட யோசிக்கலாம்... ஆனால் இன்று இஷ்டமாகத் தோன்றும் ஒன்று பின்னாளில் கஷ்டமாகத் தோன்றும்... அதனால் நன்றாக யோசித்து முடிவு செய்... இது உன் வாழ்க்கை... இப்படி விளையாட்டுத்தனமா முடிவு எடுப்பது சரியில்லை..."

குரலில் கொஞ்சம் கடுமையைக் கூட்டி அவன் பேசினான்... சின்னப் பெண் புரிந்து கொள்ளாமல் பேசுகிறாளே என்று...

"எனக்கு இது தான் பிடித்திருக்கிறது..." அழுத்தமாய், பிடிவாதமாய்க் கூறியவள்,

"என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா மாமா...?" கண்களில் பரிதவிப்புடன் கேட்டவளை கண்டு அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை...

"ச்சு... இது என்ன பேச்சு பூஜா... உன்னைப் பிடிக்காமல் இருக்குமா...? எனது மாமன் மகள் என்றளவில் எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும்... ஆனால் கல்யாணம்...?" என்று சொன்னவனின் முகம் யோசனையில் ஆழ்ந்தது...

"நீங்க யாரையாவது காதலிக்கிறீங்களா...?"

வருத்தத்தோடு கேட்டவளை கண்டு அவன் பட்டென்று சிரித்து விட்டான்...

"இல்லை..." என்றவனை அவள் நிம்மதியுடன் பார்த்தாள்...

"ஆனால் உனக்கும் எனக்கும் இடையில் மலைக்கும், மடுவுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் இருக்கிறது... அதாவது அந்தஸ்தில்..."

இதைச் சொல்லும் போது அவனது குரல் உள்ளே போயிருந்தது...

"நீ என் மாமா பெண்ணாக இருக்கலாம், ஒரே வீட்டில் வாழலாம், தோழமையுடன் பழகலாம்... ஆனால் உன்னளவு வசதி என்னிடம் கிடையாது..."

நிதர்சன உண்மையை அவன் அவளுக்கு நன்றாக உறைக்கும் படி கூறினான்...

கிருஷ்ணா இப்போது தான் சொந்த தொழில் செய்து அதில் சிறிது முன்னேற்றம் கண்டு கடுமையாய் உழைத்துக்

கொண்டிருக்கிறான்... பூஜா அளவிற்கு அவனிடத்தில் பணம் கொட்டி கிடக்கவில்லை...

"வசதி எனக்கு என்றுமே பெரிதில்லை மாமா... எனக்கு அன்பான உறவுகள் தான் வேண்டும்..." அழுத்தம் திருத்தமாய் உடனே பதில் சொன்னவளை கண்டு ஆச்சிரியமுற்றவனாய் அமைதியாய் நின்றான் அவன்...

ஏனெனில் இதற்கு அவனிடத்தில் பதிலில்லை...

"இப்போ என்ன செய்யலாம்...?" அவனிடமே அவள் கேட்டாள்...

"நீ தான் சொல்ல வேண்டும்..." தனக்கு இதில் பிடித்தமில்லை என்பதைச் சொல்லாமல் அவளின் விருப்பத்திற்கேற்ப விட்டு விட்டான்...

"எனக்கு என்ன செய்றதுன்னு தெரியலை..." என்றவள் சிறிது நேரம் வெளியில் வெறித்துவிட்டு,

"எனக்குக் கல்யாணமே வேண்டாம்... நான் கல்யாணம் பண்ணி கொள்ளப் போவதில்லை..." என்று சிறுபிள்ளை போல் அவள் சொல்வதைக் கேட்டு அவன் தான் திகைத்து போய் நின்றான்...

"இது சரி வராது பூஜா..."

"அதனால் தான் நானும் நீங்க சொன்னதுக்குச் சரின்னு சொல்லிட்டேன்..." என்றவளை ஏறிட்டு பார்த்தவன் விழிகளில் மிதமிஞ்சிய வருத்தம் தெரிந்தது...

"நான் அதைச் சொல்லலை..." என்றவனை இடைமறித்துக் கை நீட்டி தடுத்தவள்,

"உங்க விருப்பம் நீங்க சொல்லிட்டீங்கல்ல... இனி இந்தப் பிரச்சினையை நான் பார்த்துக்கிறேன்..." என்று அவள்

உறுதியான குரலில் கூறினாலும் அவளது கண்களில் வழிந்த கண்ணீரை தடுக்க அவளால் இயலவில்லை...

கண்ணீருடன் நின்றிருந்தவளை காணும் போது கிருஷ்ணாவிற்கு வேதனையாக இருந்தது... பின் ஒரு முடிவுடன் அவளின் அருகே வந்தான்... அவன் வரவை உணர்ந்து கண்களில் நீர் கோர்க்க நிமிர்ந்து பார்த்தவளின் தோற்றம் அவனது மனதை பிசைந்தது...

இதுவரை பூஜா அழுது அவன் பார்த்தது இல்லை... அவள் விருப்பம் எல்லாம் அவளது பெற்றோரால் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு விடும்... அதனால் எதற்கும் ஏங்கி நிற்கும் நிலையில் அவள் இருந்தது கிடையாது...

இதோ முதன்முறையாக உறவுகளுக்காக ஏங்கி நின்று தவித்துத் தன் முன் வாழ்க்கை கேட்டு யாசிக்கும் மாமன் மகளை விடவா சிறந்த பெண் ஒருத்தி அவனுக்கு மனைவியாக வந்துவிட முடியும்... அந்தக் கணம் முடிவு செய்தான் அவள் தான் தன் மனைவி என்று...

அவள் அருகே வந்தவன் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு, "இனி இது நம் பிரச்சினை ஓகேவா...?" என்க...

முதலில் அவன் கூறியதன் அர்த்தம் புரியாமல் விழித்தவள் பின் புரிந்ததும் அவளது இதழ்கள் புன்னகையில் விரிய, முகமோ அப்படி ஒரு மலர்ச்சியைத் தத்தெடுத்தது...

"இனி நீ எப்போதும் இப்படிச் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும்..." என்றவனின் கைகள் அவளது கன்னத்து விழிநீரை துடைத்து, அவளது மனதின் துயரையும் சேர்த்துத் துடைத்தது...

"தேங்க்ஸ்..." என்றவளை ஒரு நொடி கூர்ந்து பார்த்தவன்,

"எதுக்கு...?"

"என்னை ஏத்துக்கிட்டதுக்கு..." என்றவளை இமைக்காது பார்த்தவன்,

"உன்னைக் கல்யாணம் பண்ணுவது யாருக்குமே தண்டனையாகாது பூஜா... அப்படிப் பார்த்தால் நான் தான் உனக்கு நன்றி சொல்லணும்... உன்னைப் போல் அருமையான பெண் மனைவியாய் வருவதற்கு..."

அவனது வார்த்தைகள் அவளது மனதுக்கு இதமாக இருந்தது... கண்கள் பளபளக்க அவனைப் பார்த்தவள் பார்வையில் நிச்சயம் காதல் இல்லை என்றாலும் அதில் வானளவு அன்பு இருந்ததைக் கிருஷ்ணா உணர்ந்தான்...

இந்த அன்பு திருமணத்திற்குப் பின் காதலாக மாறும் என்று அவன் உறுதியாய் நினைத்தான்... காதலுக்கு அடிப்படை காரணம் மாசில்லா அன்பு தானே...

அதன் பின் கிருஷ்ணா, பூஜா திருமணம் நடைப்பெறுவதில் எந்தத் தொய்வும் ஏற்படவில்லை...

விசயம் கேள்விப்பட்ட ஜீவா மனதுக்குள் கொதித்தான்... என்ன இல்லை என்று இப்படி ஒருவனுக்குத் தனது சகோதரியை மணம் முடிக்க வேண்டும் என்று அவனுக்கு ஆத்திரம் வந்தது...

தாயை அழைத்து அவளிடம் சண்டை கூடப் போட்டான்... யாரும் அவனின் பேச்சு கேட்பதாய் இல்லை... அதனால் திருமணத்திற்கு வர மாட்டேன் என்று அவன் தகராறு செய்ய, அகிலாண்டம் தான் மச்சினன் என்ற முறையில் அவன் வந்து சபையில் நிற்க வேண்டும் என்று அழாத குறையாக வற்புறுத்தி அவனைச் சென்னைக்கு வரவழைத்தார்...

வெகு வருடங்களாகச் சென்னை பக்கம் எட்டிப்பார்க்காதவன் அப்போது தான் வந்தான்... அவன் இங்கு வரவில்லை என்றாலும் வீட்டினர் அவ்வப்போது

மும்பை சென்று அவனைப் பார்த்துவிட்டு வந்தனர்... சில சமயம் குடும்பத்தினரோடு சுற்றுலா செல்லும் போது ஜீவாவை அங்கிருந்தபடி அழைத்துச் சென்றனர்...

அதனால் ஜீவா பல மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் யாருக்கும் அவன் அந்நியமாய்த் தோன்றவில்லை... அவன் தான் அப்படி நினைத்து ஒதுங்கி இருந்தான்...

வந்தவனுக்கு எந்த மரியாதை குறைவும் ஏற்படவில்லை... என்னமோ அவன் தான் மணமகன் என்பது போல் முறுக்கி கொண்டு அலைந்தான்... மணமகன் கிருஷ்ணா கூடச் சற்று அடக்கி தான் வாசித்தான்...

திருமணத்திற்கு முந்தின நாள் இரவு கிருஷ்ணா ஜீவாவிடம் பேசுவதற்காக வந்தான்... எல்லோரும் இன்முகமாக நடமாடும் போது ஜீவா மட்டும் ஒட்டாமல் இருப்பது அவனை விடப் பூஜாவிற்குக் கஷ்டமாக இருக்க, அவளுக்காக அவனிடத்தில் பேச வந்தான்...

"ஜீவா... உன் அளவுக்கு நான் வசதி இல்லாமல் இருப்பதால் தான் நீ இப்படி நடந்து கொள்கிறாய் என்று எனக்குப் புரியுது... கூடிய சீக்கிரம் நான் என் தொழிலில் முன்னேறி விடுவேன்... பூஜாவை நல்லா பார்த்து கொள்வேன்..."

கிருஷ்ணா என்னவோ தன்மையாகத் தான் சொன்னான்... ஆனால் ஜீவாவின் அகந்தை அவனை வேறு மாதிரி பேச வைத்தது...

"அப்படியே முன்னேறினாலும் நீ என் நிலையை அடைந்து விட முடியுமா...?" ஒவ்வொரு வார்த்தையும் நக்கலாய் உதிர்த்தவன்,

"அது இந்த ஜென்மத்தில் நடக்காது... நீ முன்னேறி வரும் வரை நான் என்ன பூப்பறித்துக் கொண்டா இருப்பேன்... அந்தச் சமயத்தில் நான் உன்னை விடப் பல மடங்கு முன்னேறி இருப்பேன்... நீ என்றுமே என் உயரத்தை

எட்டிப்பிடிக்கவே முடியாது..." என்று திமிராய்ப் பேசினான் ஜீவா...

ஏனெனில் ஜீவாவை சொல்லி குற்றமில்லை... அவன் தொழிலுக்கு வந்த பின் அவனது வெற்றிகள் அப்படி இருந்தது... படிப்பு முடிந்து வந்தவனைத் தனது திரைப்படத்தில் கதாநாயகனாக நடிக்க வேண்டி பிரபல இயக்குநர் கேட்ட போது ஜீவா மறுக்க முடியாமல் அதற்குச் சம்மதிக்க, அந்த ஒரு படத்தில் ஜீவாவின் புகழ் எங்கோ உச்சத்துக்குச் சென்றது... அவன் போகும் இடமெல்லாம் ரசிகர்கள் அன்பு தொல்லை கொடுத்தனர்... அந்த ஒரு படம் தான்... அதன் பின் அவன் நடிக்கவில்லை...

ஆனால் அந்தப் புகழ் அவனுக்கு நன்றாக மமதையை ஏற்றி விட்டிருந்தது... புகழ் பெருமளவு வந்த போதும் ஒருவன் தன்னிலை உணர்ந்து பணிவாக நடந்து கொள்ள வேண்டும்... அதைச் செய்ய ஜீவா தவறிவிட்டான்... இயற்கையான அவனது செருக்கான குணம் இன்னமும் செருக்காய் மாறிப் போனது காலத்தின் கட்டாயமாகி போய்விட்டது...

ஜீவாவின் பேச்சில் கிருஷ்ணாவின் தன்மானம் வெகுவாய்ச் சீண்டப்பட்டது...

"வாழ்க்கை என்றால் மேடு, பள்ளம் வரும் ஜீவா... எப்போதுமே ஒருவன் ஜெயித்துக் கொண்டிருக்க முடியாது... வாழ்க்கை என்பது ஒரு வட்டம் மாதிரி..."

அப்போதும் கிருஷ்ணா நிதானமாகத் தான் பேசினான்... ஆனால் அதில் ஜீவாவிற்குத் தான் பொறுமை காற்றில் பறந்தது...

"என்ன ஓவரா பேசிக்கிட்டு போற... இப்படி இருக்கும் போதே இந்தப் பேச்சு என்றால் என்னை மாதிரி நீயும் முன்னுக்கு வந்தால் உன்னைக் கையில் பிடிக்க முடியாது..." எகத்தாளமாய்க் கூறியவனிடம் பேசி பிரயோஜனம்

இல்லை என்பதை உணர்ந்தவனாய் கிருஷ்ணா நகர ஆரம்பிக்க...

அப்படி அவனைச் சும்மா போக விட்டால் அது ஜீவா இல்லையே...

"உண்மையைச் சொல்லு... நீ எங்க கிட்ட இருக்கிற சொத்துக்குத் தானே பூஜாவை கல்யாணம் பண்ண ஆசைப்பட்ட... சொத்து வேணும்ன்னா நேரடியா கேட்டிருக்க வேண்டியது தானே... அதை விட்டுட்டு பூஜா வாழ்க்கையை ஏன் பாழ் பண்ற..."

ஜீவா பேசிய பேச்சுக்கு கிருஷ்ணாவின் கை உயர்ந்து விட்டது அவனை அடிப்பதற்கு...

'உன் தங்கை தான்டா என்னைக் கல்யாணம் பண்ணனும்ன்னு விருப்பப்பட்டாள்...' என்று நுனிநாக்கு வரை வந்த வார்த்தைகளை முயன்று அடக்கி கொண்டவன், தனது கைகளையும் கீழே இறக்கினான்... ஆனால் அவனது முகம் அவமானத்தில் கறுத்துப் போய்விட்டது...

இதுவரை யாரும் தன்னை எதிர்த்து சுண்டு விரல் கூட அசைத்து பார்த்து பழக்கப்பட்டிராத ஜீவா கிருஷ்ணாவின் செயலில் கொதித்து எழுந்து விட்டான்...

அடுத்த நொடி கிருஷ்ணாவின் சட்டையைப் பிடித்தவன், "பணத்துக்கு ஆசைப்பட்டுப் பெண்ணை ஏமாற்ற நினைக்கும் உனக்கு எல்லாம் எதுக்குடா மீசை...? உனக்கு என்ன தகுதியிருக்கு எனது தங்கைக்கு மாப்பிள்ளையா வருவதற்கு...? அதை விட என்ன யோக்கியதை இருக்கு எனக்கு உறவினனா வருவதற்கு...? என் அருகில் உட்கார கூட உனக்கு அருகதை இல்லை..."

சீறிய தோட்டாவை போல் வேகமாய் வந்து விழுந்த அவனது வார்த்தையில் அவமானம் அடைந்தாலும் ஒன்றும் பேசாது கிருஷ்ணா நிற்க, தற்செயலாக அங்கு வந்த பூஜா

இதை எல்லாம் கேட்டு அதிர்ந்து போனவளாய் வேகமாய் வந்தவள் சகோதரனின் கையைப் பிடித்துத் தள்ளிவிட்டாள்...

"என்ன காரியம் பண்ணிட்டிருக்க ஜீவா...?" அவளது முகம் கோபத்தில் சிவந்தது...

வேண்டுமென்றே கிருஷ்ணாவிடம் பேசிய வார்த்தைகளை அட்சரம் பிசகாமல் தன்னிடம் பேசி காட்டி கிண்டலடித்த சகோதரனை வெறித்துப் பார்த்தவள்,

"முதலில் அவரிடம் மன்னிப்பு கேள் ஜீவா..."

தங்கையின் வார்த்தையில் அவளைத் திமிராய் பார்த்தவன், "யார் நான்... இவனிடம் மன்னிப்பு கேட்கணுமா...? நெவர்..." கைகள் இரண்டையும் இறுக்கமாய்க் கட்டி கொண்டு அவன் நிற்க...

"பூஜா வா போகலாம்..." கிருஷ்ணா தன்னவளை இழுத்துக் கொண்டு செல்ல நினைக்க...

அவளோ ஜீவாவின் உடன்பிறந்தவள் தான் என்பதை நிரூபிக்கும் வகையில் அழுத்தமாய்ச் சகோதரனை பார்த்தபடி நின்றிருந்தாள்...

அவனோ அவளைக் கண்டு கொள்ளாமல் நின்றிருக்க அதற்கு மேல் பொறுமையைக் கைவிட்டவளாய்,

"அப்படி என்றால் இனி உனக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை..." என்றவளை கண்டு இளக்காரமாய் வளைந்தது ஜீவாவின் உதடுகள்...

"உனக்காகத் தான் நான் இவனிடம் பேசி கொண்டு இருந்தேன்... உன் நல்லதுக்காகத் தான் பேசினேன்... இதை நீ புரிந்து கொள்ளவில்லை என்றால் நஷ்டம் உனக்குத் தானே தவிர... எனக்கு இல்லை..."

"எனக்கு நீ நல்லது பண்ணிய விதம் போதும்... நீ நினைப்பது போல் அவர் ஒண்ணும் என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படவில்லை... நான் தான் அவரைக் கல்யாணம் பண்ண ஆசைப்பட்டேன்... அவரை நான் தான் காதலிக்கிறேன்... அவரில்லை..." என்றவள் கிருஷ்ணா கரத்தோடு தனது கரத்தை கோர்த்துக் கொண்டு,

"இனி அவரை ஒரு வார்த்தை பேசினாலும் நான் பொல்லாதவளாகிடுவேன்... சொத்து சொத்துன்னு பேசுறியே... அந்தச் சொத்தில் எனக்கும் உரிமையிருக்குங்கிறதை நீ மறந்துவிடாதே... ஆனால் எனக்கு அந்தச் சொத்து எதுவும் வேண்டாம்... எனக்கு இவர் மட்டும் போதும்..." என்றவள் கிருஷ்ணாவை பார்த்து,

"நாம போகலாம் மாமா... இவன் இந்தச் சொத்து, பணம், அந்தஸ்து இதை எல்லாம் வைத்துக் கொண்டு அழட்டும்... என்றாவது ஒரு நாள் புரியும் உறவுகளில் அருமை... அன்றைக்கு யாரும் அவன் அருகில் இருக்க மாட்டாங்க..." என்றவள் சகோதரனை திரும்பியும் பாராமல் நடந்தாள்..

கிருஷ்ணா தன்னவளை பிரமிப்புடன் பார்த்தபடி அவள் இழுத்த இழுப்பிற்கு அவள் பின்னே சென்றான்...

அன்று அவள் தன்னைத் திருமணம் செய்ய விரும்பி கேட்ட போது தோன்றாத ஏதோ ஒரு உணர்வு இன்று தோன்றி அவனது அடிமனது வரை சென்று தித்தித்தது... அவளை அள்ளி அணைத்து முத்தமிட துடித்த தனது மனதினை கண்டு அவன் திடுக்கிட்டுப் போனான்...

அந்த நொடி உணர்ந்தான் தனது மனம் மாமன் மகள் மீது முழுவதுமாய்ச் சாய்ந்துவிட்டதை... அந்தக் கணம் தனது மனதினை உணர உதவிய மாமன் மகனை கூட மன்னிக்கத்தான் தோன்றியது அவனுக்கு...

ஆனாலும் அவன் அடைந்த அவமானம் மட்டும் ஆறாத ரணமாக... பணத்தை அளவுகோளாகக் கொண்டு தன்னை

மதிப்பிட்ட மச்சினனின் வார்த்தைகளை அவன் மறக்கவில்லை...

அதன் பின் கிருஷ்ணா, பூஜா திருமணம் இனிதே நடைப்பெற்றது... மச்சினன் என்ற முறையில் சடங்கு செய்ய ஜீவாவை அழைத்த போது எல்லாம் முகத்தைச் சுளித்துக் கொண்டு வந்து நின்றான் அவன்... யாரும் இதைக் கண்டு கொள்ளவும் இல்லை... கவனிக்கவும் அவர்களுக்கு நேரமில்லை...

எரிச்சலுடன் திருமண மண்டப வாயிலுக்குச் சென்றவனை ஒரு சிறுமியின் குரல் தடுத்து நிறுத்தியது...

"மாமா..." என்றழைப்பில் திரும்பி பார்த்தவன் முகம் இன்னமும் கடுகடுத்துப் போனது...

அங்கே நின்று கொண்டிருந்த சுபிக்ஷாவை கண்டு, "ஏய்... உனக்கு எத்தனை தடவை சொல்வது... என்னை மாமான்னு கூப்பிடாதேன்னு..." என்று கோபப்பட்டுக் கத்த...

அவளோ கண்களில் மிரட்சியைத் தாங்கியபடி அதிர்ந்து போய் நின்றாள்...

"அண்ணா... அவள் என்னைத் தான் மாமான்னு கூப்பிட்டாள்..." எனக் கூறிக் கொண்டே அங்கு வந்து நின்றான் அபிமன்யு...

அவனைக் கண்டதும் செந்தணலாய் ஜொலித்தது ஜீவாவின் முகம்...

"நீ எங்கு இங்கே...?" என்று அபிமன்யுவை பார்த்து அவன் பல்லை கடிக்க...

"என் அக்கா கல்யாணம் நான் வராமலா..." என்று புன்னகையுடன் சொன்னவனைக் கொலைவெறியுடன் பார்த்தான் ஜீவா...

மாமன் மகன் முறைப்பதை கண்டு பயத்துடன் நின்றிருந்த சுபிக்ஷாவிடம் திரும்பிய அபிமன்யு,

"லட்டும்மா... எதற்கு என்னைக் கூப்பிட்டாய்..." என்றான் கனிவாக...

அதில் தனது பயத்தில் இருந்து வெளிவந்த சுபிக்ஷா, "அத்தை உங்களைக் கூப்பிட்டாங்க..." என்றவள் ஜீவாவை திரும்பியும் பாராது உள்ளே ஓடிவிட்டாள்...

அவளைத் தொடர்ந்து அபிமன்யும் உள்ளே சென்றுவிட்டான்...

'இவன் எப்போது இவளுக்கு மாமன் ஆனான்...' என்று யோசித்தபடி அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்துவிட்டான் ஜீவா...

அன்று ஜீவா சுபிக்ஷாவை பிடித்துத் தள்ளியதை அபிமன்யுவும் பார்த்துக் கொண்டு தான் இருந்தான்... 'மாமா' என்று அழைத்ததற்காக ஒருவன் இந்தளவுக்கு மூர்க்கமாக நடந்து கொள்வானா என்று அவனுக்குத் திகைப்பாய் இருந்தது...

அதை விட ஜீவாவின் செய்கையில் முகத்தில் இரத்தம் வழிய பரிதாபமாய் நின்றிருந்த அந்தச் சின்னப் பெண்ணைப் பார்க்கும் போது பாவமாக இருந்தது அவனுக்கு...

அன்றிலிருந்து அந்தச் சின்னப் பெண் அவன் கவனத்தைக் கவர்ந்தாள்... ஒரு நாள் அவளிடம் நேரே சென்று,

"ஜீவா அண்ணா மட்டும் தான் உன் மாமா இல்லை... நானும் உன் மாமா தான்... அதனால் என்னை நீ மாமான்னு கூப்பிடு..." என்று அவன் சொல்ல...

புதுத் தோழமை கிடைத்த மகிழ்ச்சியில் சிறுமியான சுபிக்ஷா உடனே சம்மதமாய்த் தலையாட்டினாள்... அன்றிலிருந்து அபிமன்யு அவளுக்கு நல்ல தோழனாகி போனான்... அப்படி ஒரு முறை அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போகும் போது தான் அவனது அன்னை சித்தாராவின் குரலில் லயித்துப் போன சின்னவள் அவளிடம் விரும்பி சங்கீதம் கற்க ஆரம்பித்தாள்...

அபிமன்யுவின் தோழமை பின்னாளில் அவளுக்குப் பெரும் புகழை ஏற்படுத்திக் கொடுக்கப் போகிறது என்பதை அப்போது அவள் அறியவில்லை...

"ஜீவா... உன்னை அங்கே தேடிக்கிட்டு இருக்காங்க... இங்கே என்ன பண்ற...? வா..." ருத்ரஸ்ரீ மகனை கடிந்தபடி அழைக்க, வேறுவழியின்றி அன்னையின் பின் நடந்தான் அவன்...

இரு நாட்களில் மும்பைக்குக் கிளம்ப இருந்தான் ஜீவா... தனது சொந்த வீட்டில் யாரோ அந்நியன் போல் தான் இருப்பதாய் அவனுக்குத் தோன்றியது... அதற்குத் தான் தான் காரணம் என்பதை அவன் உணரவில்லை...

திருமணத்திற்கு மறுநாள் சுபிக்ஷா பெரிய பெண்ணாகி விட, அகிலாண்டம் மிகவும் மகிழ்ந்து போனார்... உறவினர்கள் கூடியிருப்பதால் அதைப் பெரிய சடங்காகச் செய்ய நினைத்தார் அவர்... பெரியவர் வார்த்தையை யாரும் மறுக்கவில்லை... அதனால் அதைப் பெரியதாகச் செய்ய நினைத்தனர்...

சுபிக்ஷா தனித்து இருப்பதற்காகப் பச்சை ஓலையில் குடிசை கட்டுவதற்கு முறைமாமன் என்ற முறையில் ஜீவாவை அழைக்க அவனோ முகத்தைச் சுளித்தான்...

"என்னால் இதைச் செய்ய முடியாது..." என்றான் கைகளை இறுகக் கட்டி கொண்டு...

'இவர்கள் எல்லாம் எந்தக் காலத்தில் இருக்கிறார்கள்...' என்று அவனுக்கு உள்ளுக்குள் எரிச்சலாக இருந்தது...

"நீ தானே ராசா அவளுக்கு முறைப் பையன்..." அகிலாண்டம் சொல்ல...

அதைக் கேட்டதும் அவனது கோபம் அதிகரிக்க, "ஏன் எங்க வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து சொத்துக்களை வளைத்தது பத்தாது என்று இப்போது அவர்கள் பெண்ணை வைத்து வளைக்கப் பார்க்கிறார்களா...?" என்றான் காட்டமாக...

தந்தையைப் பெற்றவளிடம் அவன் சண்டைக்குப் போனான்... அவன் பேசும் போது அங்கு அகிலாண்டமும், அந்தப் பக்கமாய்ச் சுவரோரம் சுபிக்ஷா மட்டுமே இருந்தனர்...

அவளோ அவனது கோபமான பேச்சில் பயந்து மூலையில் ஒன்றி கொண்டாள்... ஏற்கெனவே புரிந்து கொள்ள முடியாத உடல் அவஸ்தையினால் மனம் நொந்து இருந்தவளை அவனது வார்த்தைகள் இன்னமும் அதிகமாய்க் கஷ்டப்படுத்தியது...

பேரனின் பேச்சில் அகிலாண்டம் அதிர்ந்து போய்விட்டார்... மனதளவில் பேரன் தங்களை விட்டு வெகு தொலைவு சென்றுவிட்டது போல் அவருக்குத் தோன்றியது...

அந்நேரம் அவனது பேச்சை கேட்டபடி வந்த ருத்ரஸ்ரீ மனதில் கோபம் கனன்ற போதும் மகனை ஒன்றும் சொல்லவில்லை... அவனைக் கண்டு கொள்ளவும் இல்லை... நேரே மாமியாரிடத்தில் சென்று,

"அத்தை... சுபிம்மாவுக்கு வேறு முறைப் பையன் யாரும் இல்லையா...?" என்று கேட்க...

"உனக்கே தெரியுமே... செல்வா அவனது பெற்றோர் இறந்ததும் நம் வீட்டிற்கு வந்தது... அதனால் அவனது தகப்பன் வீட்டு வழியில் யாரும் இல்லை..." என்று வேதனையுடன் அவர் சொல்ல...

ஒரு கணம் யோசித்த ருத்ரஸ்ரீ தனது அலைப்பேசியை எடுத்து அபிமன்யுவிற்கு அழைத்து உடனே வர சொன்னாள்... அதை வெறுப்புடன் பார்த்திருந்தான் ஜீவா...

"அத்தை... அபியும் என் மகன் மாதிரி தான்... அவன் இதைச் செய்வதில் உங்களுக்கு எந்த வருத்தமும் இல்லையே..."

ஆம் கார்த்திக், சித்தாராவிடம் ஒதுங்கி நின்று பழகிய ருத்ரஸ்ரீயால் அபிமன்யுவிடம் அப்படி நடந்து கொள்ள முடியவில்லை... ஜீவாவின் கோபம் அறிந்து அவனது தாயிடம் வற்புறுத்தி அவள் மூலம் அவர்களது விசயத்தைக் கேள்விப்பட்டவன் அன்றே தனது தந்தையிடம் சண்டை போட்டான் கார்த்திக் செய்தது தவறு என்று...

அதிலிருந்து அவனுக்கு ருத்ரஸ்ரீ மிகவும் பிடித்தவளாகி போனாள்... 'பெரியம்மா, பெரியம்மா' என்று அவள் பின்னே சுற்றினான்... ஏற்கெனவே குழந்தைகள் என்றால் அவளுக்கு மிகவும் பிடிக்கும்... அப்படிப்பட்டவள் அபிமன்யு பாசத்தில் கரைந்து தான் போனாள்...

இப்போது கல்லூரி படித்துக் கொண்டிருக்கும் அபிமன்யு ருத்ரஸ்ரீயிடம் தான் தொழில் கற்றுக் கொண்டு இருக்கிறான்... அவனது மானசீக குரு அவனது 'பெரியம்மா' தான்... தொழிலில் ருத்ரஸ்ரீயின் அர்ப்பணிப்பு அவன் என்றுமே பிரமிக்கும் ஒன்று...

அவனது இந்தச் செயல்கள் எதற்கும் அவனது அன்னை சித்தாரா தடை சொன்னது கிடையாது... அந்த இடத்தில் சித்தாரா தனது மௌனமான ஆதரவில் உயர்ந்து நின்றாள் எல்லோரின் மனதிலும்...

மருமகளின் வார்த்தையில் அகிலாண்டம் மறுப்பு தெரிவிக்கவில்லை... ஆனாலும் அவர் மனதில் வருத்தம் இருக்கத்தான் செய்தது... ஆனால் அதைப் பேரனிடம் காட்டாமல் மறைத்துவிட்டார்...

அபிமன்யு விரைந்து வந்து ருத்ரஸ்ரீ சொன்னதைச் செய்ய முனைந்த போது ஜீவா அகிலாண்டத்தின் முன் வந்து நின்று,

"க்ரனி... உனக்காக நான் இதைச் செய்கிறேன்..." என்றான் சம்மதமாக...

அதில் அகிலாண்டம் மகிழ்ந்து போக, ருத்ரஸ்ரீ மகனை புரியாத புதிராய் பார்த்தாள்... அபிமன்யு சந்தோசமாய்த் தனது கைகளில் இருந்த ஓலையை ஜீவாவிடம் நீட்டினான்...

அபிமன்யுவை இதைச் செய்ய விடாமல் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஓடிய ஜீவாவிற்கு அதைச் செய்யக் கொஞ்சமும் மனமில்லை...

ஜீவா வேண்டா வெறுப்பாய் அதை வாங்கிக் கொண்டு சுபிக்ஷா முன் வந்து நின்றான்... அவனது கண்கள் அந்தளவுக்கு வெறுப்பை உமிழ்ந்தது அந்த அறியாச் சிறுமியிடத்தில்... அவனது கனல் கக்கும் பார்வையில் அரண்டு போய் அமர்ந்திருந்தாள் அந்தச் சிறு பெண்...

அவனது பேச்சில், செய்கையில் பெரிதாய் காயமடைந்தாள் அவள்...

அகிலாண்டம் பேரனின் இந்தச் செயலில் மகிழ்ந்து போனவர் அடுத்தச் சில வருடங்களில் அவராய் எடுத்த ஒரு முடிவு சுபிக்ஷா மனதில் ஆறா வடுவாய்ப் பதிந்துவிட்டது... அப்படிப் பதிய வைத்தான் அவளது மாமன் மகன்...

இரண்டாம் முறையாக ஜீவா அவள் மனதை காயப்படுத்திவிட்டு மும்பை சென்றுவிட்டான்... அடுத்து

மூன்று வருடங்கள் கழித்து விக்ரமிற்கு மொட்டை போட அழைத்த போதும் முறுக்கி கொண்ட ஜீவா, அகிலாண்டத்தின் அழுகையில் கரைந்து அங்கு வந்து சேர்ந்தான் வேண்டா வெறுப்பாய்...

முன்பை விட முழு ஆண்மகனாய், அழகனாய் கம்பீரமாய் மாறியிருந்தான் அவன்... மொட்டை போடும் விழா முடிந்து அவன் ஊருக்கு கிளம்பும் போது அகிலாண்டம் நெஞ்சை பிடித்துக் கொண்டு கீழே விழ, அந்த வீடு பதறிப் போனது...

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த அகிலாண்டம் பேரனிடம், "ராசா... என் உசிரு போறதுக்குள்ள நீ ராசாத்தியை கல்யாணம் பண்ணிக்கணும்..." என்று அவனிடத்தில் வேண்டுதலாய் கேட்டார்...

அன்று தான் சொன்னதற்காகச் சுபிக்ஷாவிற்கு அவன் குடிசை கட்டியதை மனதில் வைத்துக் கொண்டு அவர் அப்படிப் பேசினார்... அது போகக் கிருஷ்ணா, பூஜா சந்தோசமான திருமண வாழ்க்கையைக் கண்டு அவராய் அடுத்த ஜோடியையும் இணைக்க விரும்பினார்... பேரன் வயதில் வளர்ந்து விட்டான் அது போல் அவன் மனதும் பக்குவம் அடைந்திருக்கும் என்று நினைத்தார் போலும்...

அதில் அவன் அதிர்ந்து போய் நிமிர்ந்து பார்த்தான் சுபிக்ஷாவை...

கண்களில் நீர் வழிய நின்றிருந்த அவளும் அவனைப் போல் அதிர்ந்து போய் நின்றிருந்தாள்...

மாநிறத்தில் சிறு பெண்ணாய் அவனின் அழகிற்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாமல் இருந்தவளை கண்டு அவனின் வெறுப்பு இன்னமும் அதிகமானது...

'போயும், போயும் இவளா எனக்கு மனைவி...' என்று வெறுப்புடனும், கோபத்துடனும் நினைத்தது அவனது

மனம்... ஆனால் பாட்டியின் உடல்நிலை அதை வெளியில் சொல்ல முடியாமல் தடுக்க,

"முதலில் ட்ரீட்மெண்ட் முடியட்டும் க்ரனி... இந்த விசயத்தைப் பிறகு பார்த்து கொள்ளலாம்..." என்று அவன் அந்தப் பேச்சை சாமார்த்தியமாகத் தவிர்க்க பார்க்க, அவனது இந்த இணக்கமான பேச்சில் அந்த மூதாட்டியின் மனம் சமாதானமாகியது...

வீட்டினர் அனைவருக்குமே அவனது இந்தப் பொறுமையான பதில் ஆச்சிரியத்தைக் கொடுத்தது...

ஆனால் அவனின் பொறுமை எல்லாம் பதினாறு வயது சுபிக்ஷாவிடம் தனிமையில் வெடித்தது...

"ஏய்... உன் அழகை கண்ணாடியில் பார்த்திருக்கிறாயா...? உன்னைப் போய் நான் கல்யாணம் பண்ணிக்கணுமா...? உனக்கு அப்படிக் கூட ஆசையிருக்கிறதா... அப்படி ஒரு ஆசையிருந்தால் அதை இப்போதே அழித்துவிடு... எனக்கு ஈடு, இணை நீ கிடையாது... க்ரனி ஹாஸ்பிட்டலில் இருந்து வந்ததும் நீயே இந்தத் திருமணம் வேண்டாம்ன்னு சொல்லிவிடு..." என்று கோபத்தில் அவன் கர்ஜிக்க...

அதில் அவளையும் அறியாமல், "மாமா... எனக்கு... நான்..." என்றழைத்தபடி அவள் திக்கித் திணறியபடி நிற்க...

"என்னை மாமான்னு கூப்பிட்ட உன்னைக் கொன்னுருவேன் கொன்னு... யாருக்கு யாருடி மாமா...? உன் அண்ணனை போல் நீயும் சொத்துக்கு ஆசைப்பட்டு என்னை வளைத்து பிடிக்கலாம்ன்னு நினைக்கிறியா...? அது இந்த ஜீவாவிடத்தில் ஒரு போதும் நடக்காது..."

ஆக்ரோசமாய் முகம் ஜிவுஜிவெனத் தக்காளி பழமாய்ச் சிவக்க கத்தியவனின் வார்த்தைகள் தீக்கங்குகளாய் மாறி அவளது மனதை சுட்டுப் பொசுக்கியது... இதுநாள் வரை அன்பான வார்த்தைகளை மட்டுமே கேட்டு, பேசி பழகிய

அந்தப் பதினாறு வயது பாவை அவனது சுடு சொல்லில் தனக்குள் துவண்டு, சுருங்கி போனாள்...

எப்போதுமே அவனைக் கண்டால் பயப்படுபவள் இன்று இன்னமும் அதிகமாய்ப் பயந்து போய்ச் சுவரோடு ஒன்றி நின்றாள்...

அன்று முதல் 'மாமா' என்ற வார்த்தையே அவளுக்குக் கசந்தது... அதனால் என்னவோ அபிமன்யுவை கூட அவள் 'மாமா' என்று அழைப்பது இல்லை... அதில் இருந்து ஆண்களிடமும் ஒதுங்கி போக ஆரம்பித்தாள்...

அந்த நேரம் ஏதேச்சையாய் வந்த ருத்ரஸ்ரீ இதைக் கேட்டு மகனை தான் கோபித்தாள்... இதில் வழக்கம் போல் ஜீவா இன்னமும் கோபம் கொண்டான்...

மருத்துவமனையில் இருந்து வந்த அகிலாண்டம் மீண்டும் திருமணப் பேச்சை பேரனிடத்தில் எடுக்க, அவனோ அழகாய் அதைத் தவிர்த்துவிட்டான்...

"எனக்கும் அவளுக்கும் இடையில் பத்து வயது வித்தியாசம் க்ரனி... இப்போது ஸ்கூல் படிக்கும் பெண்ணைப் போய் யாராவது கல்யாணம் பண்ணிப்பாங்களா...? உன் பேரன் கையில் விலங்கு மாட்ட உனக்கு அவ்வளவு ஆசையா...?" என்ற போது அந்த மூதாட்டி பயந்து போனாள்...

ஆனால் மீண்டும் மும்பை சென்றவன் தொடர்ந்து பல வருடங்களாகச் சென்னை வராமல் இருக்கவே, அந்த மூதாட்டிக்கு புரிந்து போனது அது தன்னால் தான் என்று... அதுவே அவருக்குப் பெரும் வருத்தமாக இருந்தது...

ஒவ்வொரு முறை வரும் போதும் ஏதாவது தவறு செய்து தாயிடம் வாங்கிக் கட்டி கொள்ளும் ஜீவா அதன் பின் சென்னை வரவேயில்லை... அவனது தவறை சுட்டிக்காட்ட ருத்ரஸ்ரீ எண்ணிய போதும், அவனாய் தன் தவறை உணராத போது தான் என்ன அறிவுரை கூறினாலும்

செவிடன் காதில் ஊதிய சங்கு தான் என்று நினைத்து அமைதி காத்தாள்...

அதன் பின் ஜீவா வாழ்க்கை அவனே எதிர்பாராத விதத்தில் மாறிப் போனது... பெரும் சுழல் வந்து அவனது வாழ்க்கையைப் புரட்டி போட்டது...

'காதல் ' என்ற மூன்று எழுத்து மந்திரம் அவனது வாழ்க்கையை வண்ணமயமாக்குவதற்குப் பதிலாக அவனது வாழ்க்கையைச் சூன்யமாக்கியது... காதல் என்ற வார்த்தையை அவன் வெகுவாய் வெறுத்த கணங்கள் அவை...

இப்போதும் காதலை வெறுக்கும் அளவுக்கு அது அவன் வாழ்க்கையில் தனது தடத்தை அழுத்தமாய்ப் பதித்துவிட்டுச் சென்றுவிட்டது...

அதைப் பற்றி மேலே நினைக்க விரும்பாமல் தனது யோசனையைக் கலைத்த ஜீவா கண்களைத் திறந்த போது பொழுது விடிந்தது விட்டதற்கு அறிகுறியாக எங்கோ பறவை ஒன்றின் சத்தம் கேட்டது... அதற்கு மேல் சோம்பி கிடக்க விருப்பம் இல்லாமல் அறையை விட்டு வெளியில் வந்தான் அவன்...

மாடிப்படியில் இறங்கி வரும் போதே சுபிக்ஷாவின் இனிமையான குரல் அவனது செவியைத் தீண்டியது... யோசனையாய் இறங்கி வந்தவன் கண்ணில் பூஜையில் அறையில் அமர்ந்து அழகான தமிழில் சுப்ரபாதம் பாடி கொண்டிருந்த சுபிக்ஷா தென்பட்டாள்...

அவன் அமைதியாய் அங்கிருந்த சோபாவில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடி கொண்டான்... அவனது காதில் அவளது குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டு இருந்தது...

திடீரென்று அவனது நாசி காபியின் மணத்தை நுகரப் பட்டென்று அவன் கண்களைத் திறந்தான்... எதிரே கையில்

காபியுடன் சுபிக்ஷா நின்றிருந்தாள்...

அவன் அதை வாங்காமல் மௌனமாய் அவளை ஏறிட்டுப் பார்த்தான்...

"இன்னும் வீட்டில் யாரும் எந்திரிக்கலை... அதான்..." என்றவள் மேலே பேச பயந்து அமைதி காக்க...

அவன் ஒன்றும் பேசாது அவள் கையிலிருந்த காபி கோப்பையை வாங்கிக் கொண்டான்... அவன் வாங்கியதும் அடுத்த நொடி வேகமாய் அவள் அங்கிருந்தது நகர்ந்து விட்டாள்... படியேறி போகும் அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தவன் கண்ணில் அவளது நீண்ட கூந்தல் விழுந்தது...

அதைப் பார்த்தபடி காபியை அருந்தியவனின் விழிகள் வியப்பில் விரிந்தன...

ஏனெனில் காபி அவன் விரும்பி குடிக்கும் சூட்டில், பிடிக்கும் விதத்தில் சர்க்கரை குறைவாய், டிகாசன் தூக்கலாய், அதில் குறைவான பால் விட்டு ஸ்ட்ராங்காகக் கலக்கப்பட்டு இருந்தது...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 8

"குட்மார்னிங் ஜீவா..." என்றபடி அங்கே வந்தாள் ருத்ரஸ்ரீ...

காபி குடித்துக் கொண்டிருந்த ஜீவாவின் முகம் அன்னையின் காலை வணக்கத்தில் அப்படியே மலர்ந்து போனது...

"குட்மார்னிங் மாம்..." என்றான் வாய் நிறையப் புன்னகையுடன்...

மகனின் அருகில் அவள் அமர்ந்து கொண்டதும் ஜீவா தாயின் தோளில் சாய்ந்து கண் மூடி கொண்டான்...

அன்னை மகன் இருவரின் மனதிலும் ஏதேதோ நினைவுகள்... அதையும் மீறி இருவர் மனதிலும் ஒரு வகையான நிம்மதி, சந்தோசம்...

ருத்ரஸ்ரீயின் கைகள் மகனது தலையை வருடி கொடுத்தது...

வெகு வருடங்களாகிற்று அவன் இந்தச் சுகத்தை எல்லாம் அனுபவித்து... எதைத் தேடி இப்படி ஓயாமல் ஓடி கொண்டு இருக்கிறோம் என்கிற உணர்வு இப்போது எல்லாம் அவனையும் அறியாமல் எழத்தான் செய்கிறது... இப்படியே தாய்க்கு மகனாய் இருந்துவிட மாட்டோமா என்று அவனது மனம் ஏங்கியது...

அந்நேரம் அங்கு வந்த ஜெகனை கண்டு ருத்ரஸ்ரீ எழுவதற்கு முயற்சிக்க, அவன் மனைவியைச் சைகையால் தடுத்து விட்டுச் சமையலறை பக்கம் சென்றான்...

திரும்ப வரும் போது அவனது கைகளில் இரு காபி கோப்பைகள்... அதைக் கண்டு ருத்ரஸ்ரீயின் விழிகள் காதலில் கனிந்தது...

ஒன்றை மனைவியிடம் கொடுத்தவன் மற்றதை தான் எடுத்துக் கொண்டு அங்கிருந்த தனிச் சோபாவில் அமர்ந்து கொண்டு அம்மா மற்றும் மகன் இருவரது பாசத்தை அமைதியாய் பார்த்துக் கொண்டிருந்தான்... அதை ருத்ரஸ்ரீயும் பார்த்துக் கொண்டு இருந்தாள்... கணவனது ஏக்கம் அவளுக்குப் புரியாமல் இல்லை...

காபி குடிக்காமல் யோசனையில் இருக்கும் மனைவியைக் கண்டு ஜெகன், "ஜில்லு முதல்ல காபியை குடி... சூடு ஆற போகுது..."

தந்தையின் குரலில் பட்டென்று கண்கள் திறந்த ஜீவா, தந்தையின் 'ஜில்லு' என்ற அழைப்பில் கடுப்பானான்...

'எப்பப்பாரு ஜில்லு, ஜில்லுன்னு மாம் கிட்ட ஜொள்ளு விடறதே இந்தாளுக்கு வேலையா போச்சு...' மனதுக்குள் கடுப்பாகி போனான் அவன்...

ஆனாலும் தனக்கு அன்னையிடத்தில் தோன்றாத அக்கறை தந்தைக்குத் தோன்றியதை நினைத்து அவனால் பொறாமை படாமல் இருக்கவும் முடியவில்லை...

"சூடு ஆறினா என்ன மாம்... நான் உங்களுக்கு வேற காபி கொண்டு வந்து தர்றேன்..." என்றான் மகன் தந்தையை முறைப்பாய் பார்த்துக் கொண்டு...

முறைப்பதற்காகவாவது தன்னை நோக்கிய மகனை கண்டு மிகவும் சந்தோசப்பட்டுப் போனான் அந்தப் பாசக்கார தந்தை...

"ஆனா அது நான் கலந்து தந்த காபி மாதிரி இருக்காதே..." என்றான் ஜெகன் வேண்டுமென்றே மகனை வெறுப்பேற்ற...

"ஏன்... ஏன்...? பாலில் சர்க்கரை, டிகாசன் கலப்பதுக்கு நீங்க இவ்வளவு பில்டப் கொடுக்க வேண்டாம்..." என்று மகன்

நேரடியாகவே அப்பாவிடம் மோதினான்...

அதை ஆச்சிரியமாய்ப் பார்த்து கொண்டிருந்தாள் ருத்ரஸ்ரீ... ஏதோ இந்தளவுக்காவது மகன் தந்தையிடத்தில் பேசுவது கண்டு அவளுக்குச் சந்தோசமாக இருந்தது...

"ஆனால் அதில் காதலை கலந்து கொடுப்பது என் கையில் மட்டும் தான் இருக்கிறது..." சற்று இறுமாப்புடனே வந்து விழுந்தது ஜெகனது வார்த்தைகள்... ஏனெனில் அது உண்மையும் கூட அல்லவா...

அதற்குப் பதில் பேச முடியாமல் வாய்க்கு பூட்டு போட வேண்டிய பரிதாப நிலையானது ஜீவாவின் நிலை...

"மாம்..." என்றான் தாயிடத்தில் சிணுங்கலாய்...

அவனைக் காணும் போது ருத்ரஸ்ரீக்கு சிறு பிள்ளையைப் பார்ப்பது போல் தோன்றியது... சிரித்தபடி அவனை அணைத்து கொண்டவள்,

"அந்தக் காதலுக்குக் கிடைத்த பரிசு தான்டா நீ..."

அன்னையின் ஆத்மார்த்த அந்தச் சொல்லில் மகனது உடல் விறைத்தது...

இதே சொல்லை ஸ்மிருதியின் வாய்மொழியாக அவன் கேட்டு இருக்கிறான்... ஆனால் அவள் சொன்ன 'காதல்' என்ற சொல்லுக்குப் பின் காதல் இருந்ததா என்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் நிச்சயம் காமம் இருந்தது... அது அவனுக்கு நன்கு தெரியும்...

'காதலையும், காமத்தையும் ஒன்றாய் போட்டுக் குழப்பிக் கொள்ளும் முட்டாள் அவள்...' அவனது முகம் கோபத்தில் இறுகியது...

"என்னமோ ஒரு பரிசு கிடைத்தது போல் சொல்லுகிறாயே ஜில்லு... இரட்டைப் பரிசு நான் கொடுத்திருக்கிறேன்... என் மகளை நீ இப்படி அம்போன்னு விட்டு விடலாமா..." என்று ஜெகன் மனைவியைக் கிண்டலடிக்க,

"அம்மாவுக்கு எப்பவுமே அவங்க மகன்னா உசத்தி தான்ப்பா..." என்றபடி அங்கு வந்த பூஜா சகோதரனை முறைத்துக் கொண்டு தந்தையின் தோளில் சலுகையாய் சாய்ந்து கொண்டாள்...

அதற்கு மேல் அங்கு இருக்க முடியாமல் ஜீவாவின் மனதில் பல எண்ணங்கள் அலை அலையாய் எழ, அதன் தாக்கம் தாங்க முடியாமல் எழுந்துவிட்டான் அவன்...

"என்ன ஜீவா...?" ருத்ரஸ்ரீ கவலையாகப் பார்த்தாள் மகனை...

"நத்திங் மாம்..." என்றவன் அப்போது தான் அன்னையின் முகத்திலிருந்த கவலையை உணர்ந்தான்...

"காதலை கொடுக்கக் கணவனால் மட்டும் தான் முடியும்... அதை நான் ஒத்துக்கிறேன் மாம்..." தந்தையை அடிக்கண்ணில் பார்த்தபடி சொன்னவன் அங்கிருந்து சென்றுவிட்டான்...

"இன்னைக்கு நிச்சயம் மழை பெய்யப் போகிறது..." வெளியில் பார்த்தபடி பூஜா கிண்டலடித்தாள்...

"சும்மாயிரு பூஜா..." ஜெகன் மகளை அடக்கினான்...

"ஜீவா கிட்ட ஏதோ வித்தியாசம் தெரியுது... நீங்க பார்த்திங்களாப்பா..." என்றாள் பூஜா யோசனையாய்...

"ம்... எனக்கும் அதே யோசனை தான்... மாற்றம் வந்தால் சந்தோசம் தான்..." என்றான் ஜெகன் பெருமூச்சு விட்டபடி...

"அப்படியே மாறினாலும் அவன் வெளியே காட்டிக்க மாட்டான்..." என்றாள் ருத்ரஸ்ரீ வருத்தமாக... மகனை பற்றி அவளுக்குத் தெரியாதா என்ன...?

அதை மௌனமாய் ஆமோதித்தபடி அப்பா, மகள் இருவரும் அமர்ந்திருந்தனர்...

சற்று நேரத்தில் விக்ரம், வினீதா எழுந்து அங்கு வர காலை நேர பரபரப்பு அங்குத் தொற்றிக் கொண்டது...

அலுவலகம் செல்வதற்காக ஜீவா கிளம்பி வந்த போது அங்கு அபிமன்யு ருத்ரஸ்ரீயிடம் அமர்ந்து பேசி கொண்டு இருந்தான்... அவனைக் கண்டதும் ஜீவாவின் இரத்த அழுத்தம் அதிகரித்தது... ஆனாலும் தாத்தா பேசிய வார்த்தைகள் மனதிலிருந்த படியால் பொறுமையாய் அமைதி காத்தான்...

அவரது பேத்தி சுபிக்ஷா, அவளுக்குக் கணவனாக வர போகிறவன் இந்த அபிமன்யு... தான் அபிமன்யுவை காயப்படுத்தினால் அது தாத்தாவின் மனதை காயப்படுத்தும் என்று அவனுக்கு நன்கு தெரிந்தபடியால் அபிமன்யுவை கண்டு கொள்ளாது அன்னையிடம்,

"பை மாம்..." என்க...

"இரு ஜீவா... சாப்பிட்டு விட்டு போகலாம்..." அன்னை வலியுறுத்தியதும் அவன் உணவு மேசையை நோக்கி நடந்தான்...

"அபி... நீயும் வாப்பா..." ருத்ரஸ்ரீ அபிமன்யுவை அழைக்க...

"நம்ம வீட்டில் சாப்பிட நீங்க கூப்பிடணுமா பெரியம்மா... நானே உரிமையா வந்து சாப்பிடுவேன்... வாசம் மூக்கை துளைக்குது... இன்னைக்கு என்ன மெனு..." என்றவன் முதல் ஆளாய் உணவு மேசைக்கு ஓடினான்...

'நம்ம வீடா...? இது உன்னோட வீடா...? என்னோட வீடு டா முட்டாள்...' மனதுக்குள் எரிச்சலாக வந்தது ஜீவாவுக்கு...

அங்கு அமர்ந்திருந்த காளிமுத்துவை கண்டதும் தனது எரிச்சலை கட்டுப்படுத்திக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தான் ஜீவா...

எப்போதும் போல் சுபிக்ஷா, பூஜா பரிமாறினர்... பூஜா வேண்டுமென்றே சகோதரனை கவனிக்க மறக்க, சுபிக்ஷா ஜீவாவுக்குத் தேவையானதை பரிமாற வேண்டியதாய் போயிற்று...

உணவு உண்பதற்காக முதல் ஆளாய் வந்த அபிமன்யு உணவு உண்பதை விடுத்து தன்னவளை கண்களால் விழுங்கி கொண்டு இருந்தான்... அபிமன்யுவின் பார்வையை உணர்ந்த சுபிக்ஷாவிற்கு உள்ளுக்குள் நடுக்கமும், ஒருவித சுகமான உணர்வும் ஒருங்கே தோன்றியது...

"ராசாத்தி... அந்தக் குருமாவை எடுத்து ராசாவுக்கு வையி..." அகிலாண்டம் பேத்திக்கு உத்தரவிட...

அவளோ தனது கையில் இருந்த கோழி குருமா கிண்ணத்தைப் பற்றியபடி தயங்கியவாறு நின்றாள்... அவரவர் தங்களது பேச்சில் மூழ்கியிருக்க, அவளது தயக்கத்தை யாரும் கவனிக்கவில்லை...

"வையிம்மா..." மீண்டும் அகிலாண்டம் சொல்ல...

"அவங்களும், அத்தையும் அசைவம் சாப்பிட மாட்டாங்க அம்மாச்சி..." பெரும் தயக்கத்துடன் சொன்னவளை கண்டு அகிலாண்டம்,

"மறந்து போயிட்டேன் கண்ணு... சரி அந்தச் சாம்பாரை எடு..." என்று சொல்ல... அவள் அதை எடுத்து மாமன் மகனுக்குப் பரிமாறினாள்...

இதை எல்லாம் ஜீவாவின் காதுகள் கேட்டுக் கொண்டு இருந்தாலும் அவன் சுபிக்ஷாவை ஏறெடுத்து பார்க்கவில்லை... தனது உணவில் கவனமாக இருந்தான்...

"உன் மாமன் மகன் அசைவம் சாப்பிட மாட்டான்... ஆனால் உன் மாமன் பறப்பது, ஊர்வது, நீந்துவது எல்லாம் சாப்பிடுவேன்... அடியேனுக்குக் கொஞ்சம் கருணை காட்டு தாயே..."

சுபிக்ஷாவை பார்த்து கையெடுத்து கும்பிட்டபடி வேண்டிய அபிமன்யுவை கண்டு எல்லோரும் சிரித்து விட்டனர்... சுபிக்ஷாவின் உதடுகளிலும் புன்னகை தவழ்ந்தது...

"சிரிப்பு வந்தா சிரித்து விடணும் லட்டும்மா..." என்ற அபிமன்யுவை கண்டு அவள் மென்மையாய் புன்னகைத்தாள்...

அபிமன்யு சுபிக்ஷாவிடம் பேசிய விதம், அவனது பார்வை எல்லாம் உணர்ந்து எல்லோரும் இங்கிதத்துடன் ஒவ்வொருவராக எழுந்து சென்றுவிட, அமைதியாய் உண்டு கொண்டிருந்த ஜீவா இதை உணரவில்லை... அவன் உணவில் மும்முரமாக இருந்தான்...

"சாரி..." என்ற சுபிக்ஷாவை அபிமன்யு புரியாமல் பார்த்தான்...

"எதுக்குடா...?"

"உங்களைப் பத்தி எனக்கு ஒண்ணுமே தெரியலை..." என்றவளின் முகத்தில் குற்றவுணர்வு அப்பட்டமாய்த் தெரிந்தது...

"ஹேய் இதுக்கு எல்லாம் யாராவது சாரி கேட்பாங்களா...? அண்ணா பத்தி நீ தெரிஞ்சு வச்சியிருக்கேன்னா அவன் உனது மாமன் மகன் என்பதால்..."

தன்னைப் பற்றிய பேச்சு வரவும் ஜீவா விலுக்கென்று நிமிர்ந்தான்... அப்போது தான் பார்த்தான் அபிமன்யு, சுபிக்ஷா இருவரை தவிர யாரும் அங்கு இல்லை என்பதை... தான் மட்டும் அதிகப்படியாய் அங்கு அமர்ந்திருப்பது போல் அவனுக்குத் தோன்ற அவசரமாய் எழுந்தான்...

"உன்னோட இந்த அக்கறை, அன்பு இது எல்லாம் பிடிச்சு தான் நான் உன்னை விரும்பியது... இந்த மாதிரி ஒரு குடும்பத்தில் நானும் ஒரு அங்கம் ஆகணும்ன்னு எனக்கு ரொம்ப நாள் ஆசை... நான் உன்னை மட்டும் காதலிக்கலை லட்டு... உன் குடும்பத்தையும் சேர்த்து தான் காதலிக்கிறேன்..."

அவனின் வார்த்தையில் அவள் நிம்மதியானாள்...

"எல்லோருமே புரிஞ்சிக்கிட்டு, தெரிஞ்சிக்கிட்டுக் கல்யாணம் பண்றது இல்லை... நாம கல்யாணம் பண்ணிக்கிட்டு ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்குவோம், தெரிஞ்சிக்குவோம்... என்ன சரியா...?"

அவனின் வார்த்தைக்குக் காதுகளில் தொங்கிய ஜிமிக்கி மெல்ல அசைய மௌனமாய்த் தலையாட்டியவளை கண்டு அவன் பெருமூச்சு விட்டான்...

"பேசாம அந்த ஜிமிக்கியா பிறந்திருக்கலாம்..." என்றவனை அவள் புரியாமல் பார்க்க...

"அது எத்தனை தடவை உன் கன்னத்தை முத்தமிடுது பார்..." என்றவனின் குரல் காதலில் குழைந்து ஒலித்தது...

அதில் அவள் விழிகள் படபடக்க அவனைப் பார்த்தாள்... இதயமோ வேகமாய்ப் படபடவெனத் துடித்தது... முகத்தில் வெட்கத்தின் சிவப்பு மெல்ல பரவலானது...

அவளது உணர்வை புரிந்தவனாய் அவளது கையை மென்மையாய் பிடித்தவன், "ஹேய் என் கிட்ட என்ன பயம் லட்டு..." என்றான் அவளது பயத்தைப் போக்கும் குரலில்...

"ம்... உன்னைப் பார்த்தால் பூச்சாண்டி போல் இருக்குதோ என்னவோ..." கையைத் துடைத்தபடி அங்கு வந்த ஜீவா நக்கலாய்க் கூறினான்...

"அச்சோ..." என்று சுபிக்ஷா தனது கையை அபிமன்யுவின் பிடியில் இருந்து விலக்கி கொள்ள முயல... அபிமன்யுவோ தனது பிடியை தளர்த்தவில்லை...

மாறாக அபிமன்யு ஜீவாவை பார்த்து புன்னகையுடன், "அதை நீ சொல்லுகிறாயா அண்ணா..." என்று பதிலுக்கு அவன் கிண்டலடிக்க...

அதில் கையில் இருந்த துண்டை கோபமாய் மேசை மீது விட்டெறிந்துவிட்டுச் சென்றான் ஜீவா...

"கோபமா போறாங்களோ...?" சுபிக்ஷா பயத்துடன் ஜீவாவின் முதுகை வெறித்தாள்...

"அவனை விடு லட்டும்மா... நீ இந்த மாமனை கவனி..." அபிமன்யு கூறியதும் அவளும் ஜீவாவை மறந்து தன்னவன் புறம் திரும்பினாள்...

***********************

மாலை வீட்டிற்கு வந்த ஜீவா மீண்டும் மும்பை கிளம்ப ஆயத்தமானான்... அன்னையிடம் சொல்லியவன் தனது பாட்டியை தேட அவர் பூஜை அறையில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவன் அங்கே சென்றான்...

அங்கே பூஜையறையில் பட்டுப்புடவை உடுத்தி, நீண்ட கூந்தலை தளர பின்னி அதில் மல்லிகைச் சூடி மங்களகரமாகக் கண்களை மூடி வேண்டி கொண்டிருந்த

சுபிக்ஷாவை கண்டு திகைத்துப் பின் தயங்கி அவன் வெளியில் நின்றான்...

அவளுக்கு நேரெதிரே நின்ற அகிலாண்டம் அவனை உள்ளே வருமாறு சைகை செய்ய, அவன் தன்னையும் அறியாமல் உள்ளே சென்றான்...

சுபிக்ஷாவை கண்டோ என்னவோ அவனது கைகளும் மேலே உயர்ந்தது கடவுளை வேண்டி... கண்கள் தாமாக மூடி கொண்டது பக்தி பரவசத்தில்...

பேரனும், பேத்தியும் அருகருகே நிற்பது கண்டு அந்த மூதாட்டியின் மனதில் ஏக்கம் பரவியது... இருவரையும் இணைக்கத் தானே அவரும் பாடுபட்டார்... ஆனால் பேரனின் மனதில் அந்த எண்ணம் இல்லாத போது அவரால் என்ன செய்ய முடியும்...

அதிலும் சுபிக்ஷாவை வேறு ஒருவனுக்கு நிச்சயம் செய்திருக்கும் இந்த நேரத்தில் தான் இப்படி நினைப்பதும் அவருக்கு அபத்தமாக இருந்தது... அதனால் தனது மனதை தேற்றிக் கொண்டு பேரனின் வாழ்க்கையும் நன்றாக அமைய கடவுளை வேண்டி கொண்டார்...

கடவுளை கும்பிட்டு விட்டுக் கண்களைத் திறந்த சுபிக்ஷா தன்னருகில் நின்றிருந்த ஜீவாவை கண்டு திடுக்கிட்டு போனவள் பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு பாட்டியிடம்,

"அம்மாச்சி... கச்சேரிக்கு நேரமாச்சு... என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க..." என்றபடி அவரது காலில் விழுந்தாள்...

அதில் ஜீவா தனது கண்களைத் திறந்தான்...

"நல்லபடியா போயிட்டு வாம்மா..." என்றபடி அகிலாண்டம் அவளை ஆசிர்வாதம் செய்வதைப் பார்த்துக் கொண்டு இருந்த ஜீவா தானும் அவரது காலில் விழுந்தான்...

அப்படி விழும் போது அவனது தோள் சுபிக்ஷாவின் தோளோடு உரசி கொண்டு செல்ல, அவள் பதட்டத்துடன் நிமிர்ந்தாள்...

"நல்லாயிரு ராசா... சீக்கிரம் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கோய்யா..." என்று மூதாட்டி விழிநீர் கசிய அவனை ஆசிர்வாதம் செய்ய...

"முதல் ஆசிர்வாதம் ஓகே... ஆனா இரண்டாவது யோசிக்க வேண்டிய விசயம்... இப்போதைக்கு நான் மாட்டி கொள்வதாய் இல்லை..." கண்ணடித்துப் பாட்டியிடம் கிண்டலடித்தவன் பூஜையறையை விட்டு வெளியில் வந்தான்...

சுபிக்ஷா தனது கச்சேரிக்கு செல்ல, ஜீவாவும் மும்பைக்குக் கிளம்பினான்...

அவன் கிளம்புவதை உணர்ந்து வினீதா தானும் அவனுடன் வருவதாய் அழுது அடம்பிடித்தாள்... அவள் பிறந்ததிலிருந்து அவனைப் பார்த்தது இல்லை... அப்படி இருந்தும் அவன் மீது இத்தனை பாசம் வைத்திருக்கும் அந்தச் சின்னவளை கண்டு அவனது மனம் இளகியது...

"அங்கே வேலையை முடிச்சிட்டு மாமா சீக்கிரம் இங்கே வந்திருவேன் பேபி... நீ எனக்காக வெய்ட் பண்ணிட்டிரு..." என்றான் அவளைச் சமாதானப்படுத்தும் விதமாக...

"ஜீவா இது உண்மையாக இருந்தால் எனக்கு ரொம்பச் சந்தோசம்..." என்று தனது மன விருப்பத்தைக் கூறினாள் அவனது அன்னை ருத்ரஸ்ரீ...

"மாம்... அவள் தான் சின்னப்பிள்ளை என்றால்... நீங்களுமா...? எனக்கு இங்கே என்ன இருக்கு...? என்னுடைய தொழில்கள் எல்லாம் அங்கே தான் இருக்கு..." என்றவனைப் பார்த்து,

"உன்னோட உறவுகள் இங்கே தானேப்பா இருக்கிறோம்..." என்ற அழுத்தம் திருத்தமாய்க் கூறிய அன்னையைக் கண்டு அவனால் பதில் பேச முடியவில்லை...

பதில் சொல்லாது வினீதாவை சமாதானப்படுத்திவிட்டு அவன் கிளம்பினான்...

***************************

அதே நேரம் மும்பையில் ஹர்ஷிதா தனது அண்ணன் ரிஷ்வந்த்திடம் சண்டை போட்டுக் கொண்டு இருந்தாள்...

"அண்ணா... நீங்க ஸ்மிருதி விசயத்தில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது தான் உங்களுக்கு நல்லது..."

"அப்படி ஒதுங்கவில்லை என்றால்...?" கேலியாய் கேட்ட சகோதரனை கண்டு முறைத்தவள்,

"இது போல் தான் இனி நடக்கும்..." என்றாள் தைரியமாக...

"வேண்டாம் ஹர்ஷி... இதில் நீ தலையிடாதே..."

"நான் எப்படித் தலையிடாமல் இருப்பது... இதில் நானும் சம்பந்தப்பட்டு இருக்கிறேன்..." என்றவள் முகத்தில் அப்படி ஒரு வேதனை...

"உனக்கும், இதுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை..." என்றான் எரிச்சலுடன்...

'முட்டாள் பெண்' என்று மனதுக்குள் தங்கையைத் திட்டி கொண்டான் அவன்...

"என் மனசாட்சிக்கு தெரியும்... இதில் நான் சம்பந்தப்பட்டு இருக்கிறேன் என்று..." துக்கத்தை விழுங்கி கொண்டு கூறியவள்,

"நீங்க இது போல் அம்ருவை கடத்தும் வேலையைச் செய்தால் அதைப் பார்த்துக் கொண்டு நான் சும்மா இருக்க மாட்டேன்..."

"அப்படி என்ன செய்துவிடுவாயாம்...?" இளக்காரமாய் ஒலித்த ரிஷ்வந்த்தின் குரலில் நிமிர்ந்து நின்றவள்,

"என் கடைசி மூச்சு இருக்கும் வரை அவளை நான் பாதுகாப்பேன்... என்னை மீறி அவளை நீங்க ஒண்ணும் செய்துவிட முடியாது... உங்களைப் போல் நானும் அதிரடி ஆள் தான்... என்னைப் பத்தி உங்களுக்கே நல்லா தெரியும்..."

ரிஷ்வந்த்திற்குத் தங்கையைப் பற்றி நன்றாகத் தெரியும்... அவள் ஒரு பெண் புலி என்று... தொழிலில் அவளது புத்திசாலித்தனம் அவனை என்றுமே பிரமிக்க வைக்கும்... அது போல் காதல் என்ற பெயரில் தனது அறிவை அடகு வைக்கும் அவளது முட்டாள்த்தனத்தையும் அவன் நன்கு அறிவான்...

"அப்படி என்ன அவள் மேல் உனக்கு அத்தனை கரிசனை...?" கூர்மையான அவனது பார்வை அவளைத் துளைத்தெடுத்தது...

"அவள் ஜீவாவின் குழந்தை... அதனால் என்னுடைய குழந்தை..." என்றாள் நிமிர்ந்து நின்று...

"முட்டாளத்தனமாய் உளறாதே..." ரிஷ்வந்த் வெடித்தான்...

"உண்மையைத் தான் சொன்னேன்..."

"இந்த உண்மை நம் குடும்பக் கௌரவத்திற்கு ஏற்றது இல்லை... இந்தக் காதல், கத்திரிக்காய் எல்லாம் நம்ம குடும்பத்துக்குச் சரி வராது..."

"எனக்குச் சரி வரும்..." என்றவள் அண்ணனை பாராமல் அங்கிருந்து சென்றுவிட்டாள்...

அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் மனம் நிறைய வெறுப்புடன் நின்றிருந்தான்... அந்த வெறுப்பு எல்லாம் ஜீவா மீது தான் திரும்பியது...

அவனை ஒன்றும் செய்ய இயலாத நிலையில் இருக்கும் தனது நிலையை அறவே வெறுத்தான்... அவனுக்கு எதிராக அவனது வீட்டுப் பெண்களே சதி செய்யும் போது அவன் எங்கிருந்து அந்த ஜீவாவை எதிர்ப்பது...

மும்பை இறங்கிய உடனேயே ஜீவா ரிஷ்வந்த்தின் கடத்தல் முயற்சியையும், அதை முறியடித்த ஹர்ஷிதாவின் துணிச்சலையும் பற்றி அறிந்து கொண்டான்... அவனுக்குக் கோபம் ஒரு பக்கம் தோன்றிய போதும், மறுபக்கம் உள்ளம் பதறியது...

நேரே அம்ரிதாவை காண சென்றான்... அவள் நன்றாக இருக்கிறாள் என்பதை அறிந்த பின்பே அவன் நிம்மதியுற்றான்...

மகளைக் கொஞ்சி கொண்டிருக்கும் ஜீவாவை கண்ணிமைக்காமல் பார்த்தபடி நின்றிருந்தாள் ஸ்மிருதி... என்றுமே ஜீவாவின் இந்தப் பாசம் அவளை அதிசயிக்க வைக்கும்... அது போல் இன்றும் அவள் தந்தையையும், மகளையும் அதிசயமாகப் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

"அம்ருவை பார்த்து கொள்வதை விட உனக்கு வேறு என்ன வேலை...?" அவளைக் கடிந்து கொண்டான் அவன்...

"அதான் அவளுக்கு ஒண்ணுமாகலையே... அப்புறம் ஏன் உனக்கு இந்தக் கோபம் ஜீவி..." சர்வ சாதாரணமாய்க் கூறியவளை கொலைவெறியுடன் பார்த்தான் அவன்...

"அவளுக்கு ஏதுமாகி இருந்தால்...?" பல்லை கடித்தான் கோபத்தில்...

"அம்ருவுக்குத் தான் நீ இருக்க, அவள் இருக்கிறாள்... அப்புறம் நான் எதுக்குப் பயப்படணும்...?" அலட்சியமாய்க் கூறியவளை வியந்து போய்ப் பார்த்தவன்,

"ஹர்ஷி மீது அந்தளவுக்கு நம்பிக்கையா...?"

"அதென்ன ஹர்ஷி...? என்னை ஸ்மிருதின்னு தானே கூப்பிடறே... அது போல் அவளையும் முழுப்பெயர் சொல்லி கூப்பிடு..." என்று சிடுசிடுத்தவளை கண்டு அவனது முகம் மாறியது...

"வாயை மூடு..." என்றான் கோபமாய்...

"எதுக்கு எடுத்தாலும் என் வாயை அடைப்பதிலேயே குறியாயிரு... கடைசியில் எனக்குத் தான் யாருமில்லை... என்ன இருந்தாலும் நான் ஒரு அநாதை தானே..." என்றவள் வார்த்தையில் அவன் தலையில் கையை வைத்துக் கொண்டு அங்கிருந்த சோபாவில் அமர்ந்துவிட்டான்...

"தேங்க்ஸ் ஜீவி..." என்றவளை புரியாமல் அவன் நிமிர்ந்து பார்க்க...

"இந்தச் சோபா வாங்கியதில் இருந்து இன்று தான் நீ இதில் அமர்ந்திருக்கிறாய்..."

அவள் கூறியதும் நெருப்பு மேல் அமர்ந்தது போல் துள்ளி குதித்தபடி எழுந்து நின்றான்... அதைக் கண்டு அவளது கோபம் அதிகரித்தது...

"என்னைக் கண்டு மட்டும் தான் இந்த ஒதுக்கம் எல்லாம்... அவளைக் கண்டதும் அப்படியே எல்லாம் மறந்துவிடும் உனக்கு... அப்படி என்னை விட அவள் எந்த விதத்தில்

உயர்ந்து விட்டாள்...?" என்று படபடத்தவளை அழுத்தமாய்ப் பார்த்தவன்,

"காதலில் அவசரப்படுவதில்..." என்றான் ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தமாய், நிதானமாய்...

அதற்குப் பதில் பேச முடியாமல் நொடி நேரம் விழித்தவள் பின் ஆவேசமாக, "இதுக்கு எல்லாம் காரணம் நீ தானேடா..." என்றபடி ஆத்திரத்துடன் அவனது சட்டையைப் பிடிக்க வர,

அவனோ இருவருக்கும் இடையில் அம்ரிதாவை கொண்டு வந்து நிறுத்தியவன், "ஒரு குழந்தைக்கு அம்மா மாதிரி பிஹேவ் பண்ணு... இன்னும் நீ இப்படிப் பொறுப்பு இல்லாமல் நடந்து கொள்ளாதே... அதுவும் பெண் பிள்ளையைப் பெற்று இருக்கிறாய்... அதை நியாபகத்தில் வைத்து செயல்படு..." என்றவன் அம்ரிதாவுடன் வெளியில் சென்றுவிட்டான்...

வெளியில் வந்தவன் அங்கு நின்றிருந்த மெய்க்காவலர்களையும் பிடித்துச் சத்தம் போட்ட பின்பே ஓய்ந்தான்... அப்படியிருந்தும் அவனது கோபம் அடங்கவில்லை... அந்த ரிஷ்வந்த்தை ஒருவழி செய்ய வேண்டும் என்றே தோன்றியது...

அன்றே அதைச் செயல்படுத்திய பின்பு தான் அவனுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது... ஆம் அன்று மட்டும் ரிஷ்வந் தொழில் ரீதியாய் இழந்த இழப்புகள் பல கோடிகள்... அவன் ஏற்றுமதிக்கு என்று வைத்திருந்த பொருட்கள் எல்லாம் எரிந்து நாசமாகி போனது சாட்சிகள் ஏதுமின்றி...

அதைக் கேள்விப்பட்டு ரிஷ்வந்த்தின் ஆத்திரம் இன்னமும் அதிகரித்தது... இருவருமே இப்படி மோதி கொள்வது அடிக்கடி நடக்கும் ஒன்று தான்...

ஆனாலும் இதைக் கேள்விப்பட்ட ஹர்ஷிதாவிற்கு ஏனோ மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது... உடனே ஜீவாவை

அலைப்பேசியில் அழைத்தாள்... தனது அழைப்பை எடுப்பானோ, மாட்டானோ என்ற படபடப்பில் அவள் காத்திருந்த அந்தச் சில நொடி துளிகள் அவள் மனதுக்குள் தவித்துத் துடித்தது அவளுக்குத் தான் தெரியும்...

ஆனால் அவன் அதிசயத்திலும் அதிசயமாய் அவளது அழைப்பை எடுத்தான்... அதை விட அதிசயமாய் மனம் நெகிழ்ந்து பேசினான்...

"ரொம்பத் தேங்க்ஸ் ஹர்ஷி..."

முதன்முறையாய் அவனது குரலில் உணர்ந்த நெகிழ்ச்சி அவளது மனதையும் நெகிழ்த்தியது...

அதில் சட்டென்று அவள், "நமக்குள் தேங்க்ஸ் எல்லாம் எதுக்கு ஜீவா...?" என்று தனது உணர்வினை வார்த்தையில் வெளிப்படுத்தி விட்டாள்...

"நீ செய்த உதவிக்குத் தான் நான் தேங்க்ஸ் சொன்னேன்..." என்று விறைத்துக் கொண்டு அவன் பதில் சொல்ல...

"அது என் கடமை..." கலங்கிய கண்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு கூறியவள்,

"அம்ரு எப்படி இருக்கிறாள்...?"

"நல்லாயிருக்கா... என்னுடன் தான் இருக்கிறாள்..."

"நான் அவளிடம் பேசவா...?" ஆர்வமாய்க் கேட்டவளிடம்,

"வேண்டாம்..." என்று முகத்தில் அடித்தார் போன்று நிர்தாட்சண்யமாய் மறுத்தவன் அழைப்பை துண்டித்து விட்டான்...

துண்டிக்கப்பட்ட அலைப்பேசியை வெகுநேரம் பார்த்துக் கொண்டு இருந்தாள் ஹர்ஷிதா...

அதே நேரம் ஜீவா தன்னருகில் உறங்கும் அம்ரிதாவை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்...

இருவரின் மனதிலும் இருந்த வேதனை ஒன்று தான்... ஆனால் எண்ணங்கள் தான் வேறு வேறு...

*************************

நாட்கள் நகர்ந்து மாதங்களாக அபிமன்யு, சுபிக்ஷா திருமண நாளுக்கான தேதி குறிக்கப்பட்டது... அதாவது அவள் படிப்பு முடிந்த மறு வாரத்தில் என்று...

அன்று சுபிக்ஷாவிற்குத் திருமணத்திற்காக முகூர்த்த புடவை மற்றும் திருமண நகைகள் வாங்குவதற்காக இரு வீட்டாரும் ஜீவாவின் வீட்டில் குழுமியிருந்தனர்...

புடவைகள், நகைகள் எல்லாம் விதம் விதமாய்ப் பல கடைகளில் இருந்து குவிக்கப்பட்டு இருந்தது...

அழகான அரக்கு நிறத்தில் உடல் முழுவதும் கொடி போல் தங்க சரிகை இழையோட, விளிம்பில் மட்டும் பச்சை கரையிட்ட பட்டுப்புடவை சுபிக்ஷாவின் மனதை கொள்ளை கொள்ள அதை அவள் கையில் வைத்து ஆசையாகப் பார்த்து கொண்டிருந்தாள்...

ஆனால் அபிமன்யுவோ இளஞ்சிவப்பு நிறத்தில் உடலெல்லாம் தங்க சரிகையிட்ட புடவையைக் கையில் எடுத்தவன் அதை அவள் மீது வைத்து அழகு பார்த்து விட்டு,

"உனக்குப் பொருத்தமா ரொம்ப அழகாயிருக்கு..." என்றான் புன்னகையுடன்...

அவளோ தன் கையிலிருந்த புடவையைப் பார்த்தபடி தன் விருப்பத்தைச் சொல்ல வழியில்லாது விழித்துக் கொண்டிருந்தாள்... அவளது விருப்பத்தை உணர்ந்த அபிமன்யு,

"இது ரொம்ப டார்க் கலரா இருக்கு லட்டும்மா... அது உனக்கு ஃசூட் ஆகாது..." என்றவன் அதைக் கீழே வைத்துவிட்டு தான் தேர்வு செய்ததை அவளின் கைகளில் வைத்தான்...

"சரி..." என்று தனது ஆசையை மறைத்துக் கொண்டு அவன் விருப்பத்திற்குத் தலையாட்டியவள் திடுமென ஏதோ தோன்ற நிமிர்ந்து பார்த்தவள் அப்படியே உறைந்து போனாள்...

ஏனெனில் அங்கே தனது இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டுக் கொண்டு ஸ்டைலாக நின்றபடி அவளை இமைக்காது பார்த்துக் கொண்டு இருந்தான் அவளது மாமன் மகன் ஜீவா...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 9

விரிந்த விழிகளுடன் தன்னை நோக்கிய அத்தை மகளைக் கண்ட ஜீவா தனது உதட்டின் மேல் விரல் வைத்து தனது வருகையை வீட்டினருக்குத் தெரியப்படுத்த வேண்டாம் என்பது போல் தலையசைத்துச் சைகையில் கூறினான்...

அதற்கு அவளும் மெதுவே தலையசைத்தவள் வாய்க்குள் எச்சிலை கூட்டி விழுங்கினாள்... அவனைக் கண்டால் மட்டும் அவளுக்கு உள்ளுக்குள் ஏன் தான் இப்படி நடுங்குகிறதோ...?

மற்றவர்கள் யாரும் அவனைக் கவனிக்கவில்லை... உடைகளைத் தேர்ந்தெடுப்பதில் மும்முரமாக இருந்தனர்...

பூனை நடை நடந்து வந்த ஜீவா அங்குத் தனிச் சோபாவில் சமத்தாக அமர்ந்து கொண்டு பெரியவர்களுக்குத் தொந்திரவு கொடுக்காமல் அலைப்பேசியில் வீடியோ கேம் விளையாண்டு கொண்டிருந்த வினீதாவின் பின்னே வந்து நின்றான்...

திடுமென அவனை அங்குக் கண்டதும் வீட்டினரின் விழிகள் திகைப்பும், வியப்புமாய் விரிந்தது...

ருத்ரஸ்ரீ அவனைக் கண்ட மகிழ்ச்சியில் அவனைப் பெயர் சொல்லி அழைக்க முயல, அவனோ அதைச் சைகையில் தடுத்தவனாய் சின்னவளின் கண்களைப் பின்னால் இருந்து பொத்தினான்...

திடுமெனக் கண்கள் மூடியதில் 'ஆ'வென அலறிய சின்னவளிடம், "யாருன்னு கண்டுபிடி பார்க்கலாம்...?" பின்னால் இருந்து ஒலித்த மாமனின் குரலை அடையாளம் கண்டு கொண்டவள் உற்சாகமாய்,

"மாமா..." என்றாள் மிகச் சரியாக...

"சூப்பர் பேபி..." என்று சிரித்தபடி அவள் முன் வந்து நின்றவன் அவளைத் தனது கைகளில் தூக்கி கொண்டான்...

"பேபி மாமாவை போல் ரொம்பப் புத்திசாலி..." என்று மருமகளை மாமன்காரன் மெச்சி கொள்ள...

'க்கும்... புத்திசாலியாம் புத்திசாலி... குணசாலி மட்டும் கிடையாது...' என்று மனதுக்குள் நொடித்துக் கொண்டாள் பூஜா...

ஜீவா தனது கண்ணசைவில் வேலையாளை அங்கு அழைக்க அவன் ஜீவா பிள்ளைகளுக்கு வாங்கி வந்த விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு வந்து வைத்துவிட்டு சென்றுவிட்டான்... அதிலிருந்து அழகான இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்த 'டெடிபியரை' எடுத்து மாமன் மருமகள் கையில் கொடுக்க,

"ஐய்..." என்று முகமெல்லாம் சந்தோசமாய் அதை வாங்கிய வினீதா அதில் தலையைச் சாய்த்துக் கொண்டு மாமனை பார்த்து புன்னகையுடன்,

"தேங்க்ஸ்..." என்க...

"தேங்க்ஸ் இப்படிச் சொல்லக்கூடாதே பேபி..." என்ற ஜீவா சின்னவளின் பட்டுக் கன்னத்தில் முத்தமிட்டபடி,

"இப்படித்தான் சொல்லணும்..." இதைக் கூறும் போது ஏனோ அவனது கண்கள் அவனையும் அறியாமல் சுபிக்ஷா புறம் ஒரு நொடி சென்று பின் மீண்டது...

அவ்வளவு நேரம் மாமன், மருமகள் பாசப்பிணைப்பை ஆவென்று பார்த்திருந்தவள் அவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து அவசரமாய்த் தலையைக் குனிந்து கொண்டாள்... அதைக் கண்டு ஜீவாவிற்கு உள்ளுக்குள் சிரிப்பு பீறிட்டது... ஆனால் அதை வெளிக்காட்டி

கொண்டால் அவன் ஜீவா இல்லையே... அவனின் கெத்து என்னாவது... அதனால் முயன்று தன்னை அடக்கி கொண்டான்...

பிறகு விக்ரமுக்கு வாங்கி வந்த விளையாட்டு பொருளை அவனிடம் கொடுத்தான் ஜீவா... இன்று ஞாயிறு என்பதால் அவனும் வீட்டில் இருந்தான்... அங்கு அமர்ந்திருந்த ராகவ் மகன் அரவிந்த்திற்கும் சேர்த்து விளையாட்டு பொருளை எடுத்துக் கொடுத்தான்...

"மாமா சொன்னபடி வந்துட்டேன்... மாமாவுக்கு நீ என்ன தருவ...?" மருமகளிடம் கேட்டபடி அவன் சோபாவில் அமர...

"கிஸ் கொடுப்பேன்..." என்று மழலையில் அழகாய் கூறியவள் மாமனின் கழுத்தை கட்டி கொண்டு அவன் முகம் எங்கும் முத்தம் கொடுக்க...

அவளது முத்தத்தைப் புன்னகையுடன் பெற்றுக் கொண்டிருந்த இந்த ஜீவா அனைவருக்கும் புதிது... மாமனும், மருமகளும் தனி உலகத்திற்குச் சென்றுவிட மற்றவர்கள் தங்களது வேலையைப் பார்க்க ஆரம்பித்தனர்...

புடவையைப் போலவே நகை வாங்கும் போதும் அபிமன்யு தனது விருப்பத்திற்கு ஏற்றார் போல் தான் தேர்வு செய்தான்... சுபிக்ஷா தேர்வு செய்ததை அவன் மறுத்த விதமே சிறு குழந்தைக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்வது போலிருந்தது...

சுபிக்ஷா என்றுமே தனது மனதிலிருப்பதை வெளியில் சொல்ல மாட்டாள்... அதே போல் இயல்பிலேயே மற்றவர்களுக்கு ஏற்றவாறு இசைந்து செல்லும் குணம் உள்ளவள்... அதனால் அபிமன்யுவின் விருப்பத்திற்குச் சம்மதமாய்த் தலையசைத்தாள்...

எல்லோரும் அவரவர் விருப்பத்திற்கு ஆடைகளைத் தேர்வு செய்தனர்... இறுதியில் ருத்ரஸ்ரீ ஜீவாவிடம்,

"நீ ட்ரெஸ் எதுவும் எடுக்கிறியா ஜீவா...?"

அதில் மருமகள் மீதிருந்து தனது பார்வையை அன்னையை நோக்கி செலுத்தியவன்,

"எனக்கு என் டிசைனர் டிசைன் பண்ணின ட்ரெஸ் மட்டும் தான் போட பிடிக்கும்..." என்று கர்வமாய்க் கூறியவன் விழிகள் அங்கிருந்த உடைகளைச் சற்று இளக்காரத்துடன் பார்த்தது...

அதைக் கேட்டு எல்லோருக்கும் சங்கடமாக இருந்த போதும் அவனின் குணம் அறிந்த ஒன்று என்பதால் அமைதி காத்தனர்...

"ஆனாலும் உன் அண்ணங்காரனுக்கு இவ்வளவு கொழுப்பு ஆகாது பூஜா..." என்ற கிருஷ்ணாவை பார்த்து பூஜா முறைத்தாள்...

அதைக் கண்டு சந்தேகமாக மனைவியைப் பார்த்தவன், "அண்ணன்ங்கிற பாசம் இழுக்குதோ..."

"ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை... அவனை என் அண்ணன்னு சொன்னீங்க எனக்கு நல்லா கோபம் வந்திரும்..."

"அப்படியா... கோபம் வந்தா என்ன செய்வீங்க மேடம்...?" கிண்டல் போல் கேட்டாலும் கிருஷ்ணாவின் விழிகளில் கேலி இல்லை... அதில் காதல் இருந்தது கடலளவு...

"ம்... நைட் ரூமுக்கு வாங்க செஞ்சி காட்டுறேன்..."

"அதுக்கு எதுக்கு நைட் வரைக்கும் காத்திருக்கணும் பூஜா குட்டி... நான் இப்பவே ரெடி..." சரசமாகப் பேசியவனைக்

கண்டு நக்கலாய்,

"அப்படியா..." என்றபடி அவள் சுற்றும் முற்றும் பார்க்க...

"என்ன பார்க்கிற செல்லம்...?"

"அடிக்கிறதுக்கு ஏதாவது கிடைக்குதான்னு..."

"அணைக்கிறதுக்கு இது இருக்கும் போது..." என்று சரசமாகக் கூறியபடி அவளது இரு கைகளையும் பிடித்தவன், "வேறு எதைத் தேடுற...?"

அவனது செயலில் வெட்கத்தில் முகம் சிவக்க புடவையைப் பார்ப்பது போல் தலையைக் குனிந்து கொண்டாள் அவள்...

மற்றவர்கள் யாரும் இவர்கள் இருவரையும் கவனிக்கவில்லை... ஆனால் ஜீவாவின் கண்கள் இந்தக் காட்சியைக் கவனித்துப் பார்த்துக் கொண்டு இருந்தது...

கிருஷ்ணாவுடன் தங்கையினது வாழ்வு சிறக்காது என்று அவன் நினைத்த நினைவை பொய்யாக்குவது போல் இருந்தது இருவரின் அந்நியோன்யம்...

பூஜா தனது வாழ்க்கை பாதையில் சரியாகத் தான் செல்கிறாள் என்று மனதில் நினைக்க வேறு தோன்றியது அவனுக்கு...

அதற்கு அடுத்து வந்த நாட்கள் ஜீவா தனது வீட்டினருடன் சற்று இணக்கமாகவே நடந்து கொண்டான்... அது எல்லோருக்கும் சந்தோசத்தைக் கொடுத்தது... அதை விடத் தொழில் நிமித்தம் அவன் சென்னையில் இருந்தது வேறு எல்லோருக்கும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது... ஆனாலும் அவ்வப்போது மும்பைக்குப் பறந்து செல்வதையும் அவன் வழக்கமாகி கொண்டு இருந்தான்...

அதே சமயம் அபிமன்யுவிற்குத் தொழில் மூலம் பதிலடி கொடுப்பதையும் அவன் மறக்கவில்லை, நிறுத்தவும் இல்லை... நாளுக்கு நாள் அவனின் பழிவாங்கல் அதிகரித்துக் கொண்டு தான் போனதே தவிரக் குறையவில்லை...

அதைக் கேள்விப்பட்டு ருத்ரஸ்ரீ மகனை கண்டித்தாள்...

"ஜீவா... நீ பண்றது எதுவும் சரியில்லை..."

"எனக்குச் சரின்னு பட்டதை மட்டுமே நான் செய்வேன் மாம்..." அவளின் மகன் என்பதைப் பேச்சிலும் அவன் நிரூபித்தான்...

"அபி உன் விசயத்தில் தலையிடுறானா... இல்லையே... அப்புறம் நீ எதுக்கு அவன் விசயத்தில் தலையிடுற...?"

"நான் எப்போ அவன் விசயத்தில் தலையிட்டேன்...?"

"அவனுக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்புகளை நீ ஏன் தட்டி பறிக்கிற...?" மகனை பார்த்து நேரடியாகவே அவள் கேட்டாள்...

"மாம்... இது தொழில்... இதில் உறவுகளுக்கு இடம் கிடையாது... எனக்கு எதிரியாக யார் வந்தாலும் நான் அடித்து வீழ்த்திக்கிட்டு போய்க்கிட்டே இருப்பேன்... எனக்குக் கிடைக்க வேண்டியதை எந்த வழியில் என்றாலும் பெற்று கொள்வேன்... இது என் சாமர்த்தியம்... இது அவனுக்கு இல்லை என்றால் இப்படித்தான் நஷ்டப்படணும்..."

ஜீவா சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை... தொழில் என்று வந்துவிட்டால் அதில் உறவுகளுக்கோ, இரக்கத்திற்கோ இடம் கிடையாது... இப்போது நாம் மற்றவர்களைப் பார்த்துப் பாவம் என்று இரங்கினால் நாளை நம்மைப் பார்த்து மற்றவர்கள் பாவம் என்று

இரங்கும் அளவுக்கு நம் நிலை தாழ்ந்து போய்விடும் அபாயம் இருக்கிறது... தொழிலில் நாளை எதுவும் நடக்கலாம்... இங்கு எதுவும் நிரந்தரம் இல்லை...

ஆனாலும் அவளுக்கு அபிமன்யுவை கண்டு பரிதாபமாக இருந்தது... மகனை போல் நினைக்கும் அவனுக்குத் தோல்வியைப் பரிசாக அளிக்க அவளது தாய் மனம் ஒத்துக் கொள்ளவில்லை...

"இருந்தாலும் ஜீவா...?" என்று ஆரம்பித்த பெற்றவளை இடைமறித்த ஜீவா,

"ஒரு உறவினனா அவனை நான் எந்த விதத்திலாவது அவமானப்படுத்தி இருக்கிறேனா... இல்லையே... உங்களுக்காக அவனையும், அவனது பெற்றோர் வரவையும் சகித்துக் கொண்டு தானே இருக்கிறேன்... மேலும் அவனிடம் இரண்டொரு முறை நல்ல விதமாகப் பேசியும் இருக்கிறேன்... இதுவும் உங்களுக்காகத் தான்... இதற்கு மேல் என்னால் மாற இயலாது..."

மகன் கூறியது அனைத்தும் உண்மை தான்... மறுப்பதற்கு இல்லை... வீட்டிற்கு வரும் அபிமன்யுவிடத்தில் ஜீவா இந்தளவுக்கு முகத்தைச் சுளிக்காமல் பேசுவதே பெரிய விசயம்... இதில் அவனைக் குறை கூறவும் வழியில்லை...

"ஆனாலும் அபி பாவம் ஜீவா... பார்த்து நடந்துக்கோ..." என்றவள் அங்கிருந்து சென்றுவிட...

தாயிடத்தில் தன்மையாகப் பேசினாலும் மகனோ கோபத்தின் உச்சியில் நின்றிருந்தான்... அவனுக்கு அந்த அபியை அறவே பிடிக்கவில்லை...

அதற்கு மேல் அபிமன்யுவாலும் அமைதியாகச் செல்ல இயலவில்லை... தனது அமைதி தனது தொழிலை முடங்கச் செய்துவிடும் என்பதை உணர்ந்தவனாய் அவனும் அதிரடி

பாணியில் இறங்கினான்... அதையும் ருத்ரஸ்ரீயிடம் சொல்லிவிட்டே செய்தான்...

"தொழிலில் உறவு முறையைப் பார்ப்பது தவறு..." என்று அவளும் அபிமன்யுவிற்கு அறிவுரை கூறி அவனது செயலை ஊக்குவிக்கத்தான் செய்தாள்...

மகன் தனக்குக் கூறிய பாடத்தை அபிமன்யுவிடத்தில் அவள் திரும்பப் படித்தாள்...

ஆனால் அந்தோ பரிதாபம் ஜீவாவை வெல்வது என்பது அவனால் முடியாத காரியமாக இருந்தது... அது சற்று கடினமாகவும் இருந்தது அவனுக்கு... தொழிலில் ஜீவா எல்லாம் கற்றுத் தேர்ந்த சாணக்கியனாக இருந்தான்...

எப்படி ஜீவாவை தோற்கடித்துத் தான் முன்னேறுவது என்று தெரியாமல் குழம்பி போய் நின்றான் அவன்...

தொழிலில் ஏற்பட்ட இக்கட்டினால் அபிமன்யு சுபிக்ஷாவை சுத்தமாய் மறந்து போய்த் தொழிலின் பின்னால் ஓடி கொண்டு இருந்தான்... வேறு ஒரு பெண்ணாக இருந்திருந்தால் இதைப் பெரிதாகக் காரணம் காட்டி சண்டை போட்டிருப்பாள்... ஆனால் சுபிக்ஷா அபிமன்யுவின் நிலையைப் புரிந்து கொண்டு அமைதியாய் இருந்தாள்...

மாலை அந்த நட்சத்திர விடுதியில் நடைப்பெற்ற தொழில் பேச்சு நல்லபடியாக முடிந்ததில் மிகவும் சந்தோசத்துடன் ஒருவித உல்லாச மனநிலையில் விடுதியில் இருந்து வெளியேற போன ஜீவா அங்கு வரவேற்பில் அமர்ந்திருந்த சுபிக்ஷாவை கண்டதும் அவனது கால்கள் அப்படியே நின்றது...

'இந்த நேரத்தில் இவள் எப்படி இங்கே...?' யோசனையாய் பார்த்தவன் அவளை அப்படியே விட்டு விட்டு செல்ல மனம் இல்லாமல் அவளை நோக்கி வந்தான்...

அவள் முன் வந்து நின்று அவன், "க்கும்..." என்று தொண்டையைச் செரும...

அதில் நிமிர்ந்து பார்த்தவள் அங்கு எதிர்பாராத விதமாக அவனைக் கண்டதும் அவளுக்குக் கை கால்கள் உதற ஆரம்பித்தது... இவ்வளவு நேரம் தனியாக இருந்த போதும் தைரியமாக இருந்தவளின் தைரியம் அவனைக் கண்டதும் புறமுதுகிட்டு ஓடி செல்ல, பயத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்த சோபாவில் இருந்து எழுந்து நின்றாள்...

"இங்கே தனியா லாபியில் உட்கார்ந்துட்டு என்ன பண்ணிட்டிருக்க...?" வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் அவன்...

"அது... வந்து..." அவள் திக்கித் திணற...

"அபி வர சொல்லியிருந்தானா...?" கடினமாய் மாறிப் போயிருந்தது அவனது முகம்...

‘இல்லை’ என்று தலையாட்டியவள், "ப்ரெண்ட்ஸ்க்கு ட்ரீட் கொடுக்க வந்திருந்தேன்..."

திருமணத்திற்கு இன்னும் நாட்கள் இருக்கிறது... அதற்குள் 'ட்ரீட்'டா என்பது போல் கேள்வியாய் புருவம் உயர்த்திய ஜீவாவை கண்டு,

"காலேஜ் முடிஞ்சா அவங்களைத் திரும்பப் பார்க்க முடியாது... அதான்..."

"ட்ரீட் முடிந்தது என்றால் வீட்டுக்கு கிளம்ப வேண்டியது தானே... இப்படித்தான் எல்லோருக்கும் காட்சிப் பொருளாய் உட்கார்ந்து இருப்பியா...?" எரிச்சலுடன் அவளிடம் சத்தம் போட்டவனைக் கண்டு நடுக்கம் ஏற்பட்டது அவளுக்கு...

அவளது தேகம் நடுங்கியதில் இருந்து அவனும் அவளது மனநிலையை நன்கு ஊகித்தான்...

"அண்ணா கூட்டிட்டு போக வர்றேன்னு சொன்னாங்க..." என்றவளை கண்டு அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை...

அவனுக்கு அடுத்தடுத்து ஏகப்பட்ட வேலைகள் இருந்தது... இதில் அத்தை மகளுக்குக் காவல் காத்துக் கொண்டு இருப்பதற்கு அவனுக்கு நேரம் இல்லை... அதற்காக அவளை அப்படியே அம்போவென்று விட்டு விட்டு செல்லவும் மனமில்லை...

கைக்கடிகாரத்தைப் பார்த்தவன் பின் முடிவு செய்தவனாய், "என்னுடன் வா..." என்றபடி அவன் முன்னால் நடக்க...

அவளோ அவனைப் பின்தொடராமல் இருந்த இடத்தில் அசையாது நின்றிருந்தாள்...

அவள் தன் பின்னால் வராமல் இருப்பதை உணர்ந்து திரும்பி பார்த்தவன் இரண்டெட்டில் வேகமாய் அவளருகே வந்தவன்,

"என்னோடு வான்னு கூப்பிட்டேன்..." என்றான் தன்மையாக...

"இல்லை... நான் வரலை..." அழுத்தமாய்ச் சொன்னவளை ஆச்சிரியத்துடன் அவன் பார்த்தான்...

அவனைப் பார்த்ததும் அவளிடத்தில் முதலில் தோன்றிய நடுக்கம் இப்போது இல்லை... மாறாக ஒருவித அழுத்தத்துடன் நிமிர்ந்து நின்றாள்... ஆனாலும் அவளது பார்வை நேர்ப்பார்வையாக அவனைச் சந்திக்கவில்லை... அது வேறு எங்கோ பார்த்துக் கொண்டு இருந்தது...

"ஏன்...?" அவனது விழிகள் கூர்மையாய் அவளைத் துளைத்தெடுத்தது...

அதில் திரும்பி அவனைப் பார்த்தவள், "உங்களோட விலையுயர்ந்த காரில் வரும் அளவுக்கு எனக்குத் தகுதி இல்லை..."

அவளது வார்த்தைகள் சாட்டையாய் மாறி அவனைச் சுழன்றடித்தது... அதில் ஒரு கணம் உள்ளுக்குள் திகைத்து போனவன் மறு கணம் ஒன்றும் பேசாது அமைதியாய் இருந்தான்...

அவளது இந்த அழுத்தமான குணம் அவனுக்குப் புதிது... கண்களால் அவளை எடை போட்டபடி அவன் நின்றிருந்தான்...

வேறுவழியின்றி அவளை வற்புறுத்தாது, அதே சமயம் அவளைத் தனியே விட்டு செல்ல மனமில்லாது அங்கேயே நின்றிருந்தான் அவன்... அவன் நின்ற அந்தப் பத்து நிமிடத்தில் அவனைத் தெரிந்தவர்கள் ஒரு பத்து பேர் அவனிடம் கைக்குலுக்கி நலம் விசாரித்து விட்டு சென்றனர்...

சுபிக்ஷாவின் பிடிவாதம் மனதுக்குள் எரிச்சலாக இருந்த போதும் அமைதி காத்தான் அவன்...

"நீங்க ஏன் வெய்ட் பண்றீங்க...?" தயக்கத்துடன் வந்தது அவளது வார்த்தைகள்...

'இவ்வளவு நேரம் அழுத்தத்தோடு பேசிட்டு இப்போ மட்டும் தயங்குவதைப் பார்...' மனதுக்குள் கோபமாக நினைத்த போதும் அதை வெளிக்காட்டாமல் அவன் அவளிடத்தில்,

"ம்... வேண்டுதல்..." என்றான் நக்கலாய்...

அதில் அவள் முகம் கறுத்துப் போய்ப் பதில் பேசாது முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

அதற்குள் அங்கு வந்து சேர்ந்த கிருஷ்ணா அவளை அலைப்பேசியில் அழைத்து வெளியில் வர சொல்ல, சரியென்று விட்டு அழைப்பை துண்டித்தவள்,

"அண்ணா வந்துட்டாங்க..."

அவள் சொன்னதற்குப் பதில் பேசாது அவன் முன்னால் நடக்க, அவள் அவனைப் பின்தொடர்ந்தாள்...

தங்கையின் முன் நடந்து வரும் ஜீவாவை கண்டு ஆச்சிரியப்பட்ட கிருஷ்ணா காரில் இருந்து இறங்கி நின்றான்...

கார் அருகே வந்ததும் ஜீவா அப்படியே நிற்க, கார் கதவை திறந்தபடி அவனைத் திரும்பி பார்த்த சுபிக்ஷா 'வருகிறேன்' என்பது போல் தலையசைத்தாள்... அதைக் கண்டு அவனும் சிறு தலையசைவோடு விடை கொடுத்தவன் பின் கிருஷ்ணாவிடம் திரும்பி,

"இப்படித்தானா வீட்டுப் பெண்களை ஹோட்டலில் காத்திருக்கச் செய்வது...? உனக்குக் கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா...? அவளுக்குன்னு தனியா கார் வாங்கிக் கொடுத்தா என்ன...? எல்லாத்துக்கும் உன்னையே சார்ந்து இருக்கணுமா...? உன்னை எல்லாம் நம்பி என் தங்கையை ஒப்படைத்து இருக்கிறார்களே என் பெற்றோர் அவங்களைச் சொல்லணும்..."

கடுமையாய் பேசிவிட்டு பதிலை எதிர்பாராது விறுவிறுவெனச் சென்றவனைக் கண்டு கிருஷ்ணா திகைத்து விழித்தான்... பின் சுதாரித்துக் கொண்டு காரை கிளப்பிக் கொண்டு வீடு நோக்கி சென்றான்...

ஏனோ ஜீவா பேசியதை கேட்டு அவனுக்குக் கோபம் வரவில்லை... மாறாகச் சந்தோசமாக இருந்தது அவனது அக்கறையை நினைத்து...

வீட்டிற்கு வந்ததும் மனைவியிடத்தில் அதைக் கூறி அவன் சந்தோசப்பட, பூஜாவோ அதிசயப்பட்டுப் போனவளாய் மோவாயில் கை வைத்தபடி அப்படியே நின்றிருந்தாள்...

"உண்மையாவா சொல்றீங்க...?"

"சத்தியமா பூஜா..." என்ற கணவனின் வார்த்தையில் இருந்த உண்மையில் அவளின் மனம் மகிழ்ந்து போனது...

சகோதரனின் மனமாற்றம் பெரிதும் மகிழ்ச்சியைக் கொடுத்தது அவளுக்கு...

அன்றைய சம்பவத்திற்குப் பின் ஜீவா சுபிக்ஷாவிடம் எதுவும் பேசுவது இல்லை... அவளை நிமிர்ந்து பார்ப்பதும் இல்லை...

அவள் அவனுக்கு உணவு பரிமாற வந்தாலும் அதைத் தடுத்து விட்டு, "எனக்குக் கைகள் இருக்கு..." என்று கூறி தானே பரிமாறி கொள்வான்...

சகோதரனை கண்டு கணவன் சொன்ன விசயம் ஒன்று, ஆனால் அவன் நடந்து கொள்வது வேறு மாதிரி இருக்கிறதே என்று பூஜா தான் குழம்பி போனாள்...

சுபிக்ஷா சும்மாவே அவனைக் கண்டால் விலகி நிற்பவள் இப்போது இன்னமும் ஓடி ஒளிந்து கொண்டாள்...

அதோ இதோவென்று நீண்டு கொண்டிருந்த திருமண நாள் இன்னும் ஒரு வாரம் என்றளவில் நெருங்கிவிட்டது... எல்லோரும் ஆளுக்கு ஒரு பக்கம் திருமண வேலைகளை இழுத்து போட்டுச் செய்து கொண்டிருந்தனர்...

சுபிக்ஷாவின் திருமணத்திற்காக அவளுக்குப் பரிசு கொடுக்க விரும்பிய ஜீவா விலையுயர்ந்த வைரங்கள் பதித்த கழுத்தணியோடு தோடு, வளையல், மோதிரம் என்று ஒரே மாதிரி அமைப்பில் வாங்கி வந்து அவளிடம் கொடுத்தான்... அவள் அன்று நடந்து கொண்டதை கூட அவன் மறந்துவிட்டான்... ஒருவித சந்தோச மனநிலையில் இருந்தான் அவன்...

வீட்டினர் எல்லோரும் கூடியிருக்கும் போது தான் அவன் அதை அவளிடத்தில் கொடுத்தது...

அவளோ அதை வாங்காமல் பெரும் தயக்கத்துடன் நின்றிருந்தாள்...

"ராசா கொடுக்கிறான்ல்ல வாங்கிக்கோ கண்ணு..." அகிலாண்டம் சொல்ல...

செல்வா, ரம்யா, கிருஷ்ணா மூவரும் விழியசைவால் அதை வாங்கிக் கொள்ளச் சொன்னார்கள்...

"சுபிம்மா... வாங்கிக்கோடா..." அத்தை, மாமனது அன்பான வார்த்தையைப் புறக்கணிக்க மனமில்லாமல் அதை வாங்கிக் கொண்டாள் அவள்...

அதைக் கண்டு ஜீவா முகத்தில் அப்படியொரு சந்தோசம்... எல்லாம் கொஞ்ச நேரம் தான்... அன்றே தனிமையில் அவனைச் சந்தித்த சுபிக்ஷா அந்த நகைப்பெட்டியை அவனிடத்தில் நீட்டினாள்...

அவனோ அதைப் புரியாது பார்த்து, "இது உனக்குத் தான்..." என்றான்...

"இவ்வளவு விலையுயர்ந்த நகை எனக்கு வேண்டாம்..."

அதைக் கேட்டதும் அவனது முகம் மிருதுவானது...

"இவ்வளவு தானா..." என்று நிம்மதி அடைந்தவன், "இது ஒண்ணும் பெரிய விலையில்லை..." என்றான் சமாதானமாய்...

"உங்களுக்கு இல்லை... ஆனால் எனக்கு இது ரொம்ப விலை அதிகம்..." என்றாள் மீண்டும்...

"பரிசு பொருளில் விலை அதிகம், குறைவு என்பது கிடையாது... கொடுப்பவர் மனசு தான் முக்கியம்..."

அவன் கூறியதை கேட்டதும் அவளது முகம் தீவிர மனோபாவத்திற்கு மாறியது...

"அதைத் தான் நானும் சொல்கிறேன்..." என்றாள் அழுத்தம் திருத்தமாய்...

அவளது அழுத்தமான பேச்சில் அவனது விழிகள் கூர்மையுடன் அவளைப் பார்த்தது...

"என்ன சொல்ல வர்ற...? எனக்கு மனசு இல்லைன்னா..."

"அப்படிச் சொல்லலை... இதை எல்லாம் வாங்கிக் கொள்ளும் தகுதி எனக்கு இல்லை... அதைத் தான் நான் சொன்னேன்..." என்றவள் அவனை நேராக விழியோடு விழி சந்தித்து,

"இதைச் சொன்னது நீங்க தான்... அப்படிப்பட்டவர் இந்த விலையுயர்ந்த பரிசை கொடுப்பது என்றால்...? நீங்க எப்படிக் கொடுத்தாலும் எனக்கு இது வேண்டாம்..."

அவளது வார்த்தைகளில் அவன் தான் பேச வார்த்தைகளற்றுப் போனான்... சற்று நேரம் அமைதியாகக் கழிந்தது...

பின் அவனே வாய்த் திறந்தான்...

"உன்னைப் பயந்த சுபாவம் கொண்ட பெண் என்று நினைத்தேன்... ஆனால் நான் நினைத்த அளவு நீ இல்லை..." என்றவனின் பார்வை மெச்சுதலாய் அவள் மீது படிந்தது...

அதை அவள் உணரவில்லை...

"நான் பயந்த சுபாவம் கொண்ட பெண் தான்... அமைதியான பெண் தான்... அதற்காகத் தன்மானம் இல்லாத பெண் இல்லை... மனம் என்ற ஒன்றில்லாத பெண்ணும் இல்லை... எனக்கும் மனசு இருக்கு... அதில் உங்களால் ஏற்பட்ட காயமும் நிறைய இருக்கு... இன்னைக்கு வரை நானும், என் பெற்றோரும் சரி, உங்க வீட்டு மருமகனான என் அண்ணனும் சரி எங்க வருமானத்தில் தான் நாங்க வாழ்கிறோம்... உங்க பணத்தில் இல்லை..." நிமிர்வாய் அவனைப் பார்த்து சொன்னவள்,

"தயவுசெய்து நமக்கிடையில் இந்தப் பணம், நகை, சொத்துக்கள் வராமல் இருப்பது நல்லது... நம் இருவருக்கும் இடையில் மாமன் மகன், அத்தை மகள்ங்கிற நல்ல உறவு இருக்கு... அது அப்படியே இருக்கட்டும்... இடையில் பணத்தைத் திணித்து அதைக் கேவலப்படுத்தி விடாதீங்க... உங்க உறவு மட்டும் போதும், தகுதி தராதரத்தை நிர்ணயிக்கும் உங்க பணமோ, பரிசோ எனக்குத் தேவையில்லை..." என்றவள் அருகில் இருந்த மேசை மீது அந்த நகைப்பெட்டியை வைத்தாள்...

வெகு நாட்களாக அவள் மனதை போட்டு உறுத்திய விசயத்தை அவனிடத்தில் அவள் கொட்டி விட்டாள்... அதில் சற்று அமைதியானது அவளது காயமடைந்த மனம்...

அவள் பேசிய வார்த்தைகளில் ஜீவாவின் கைகள் தானாக உயர்ந்து தலையைப் பிடித்துக் கொண்டது... அதைக் கண்டு அவள் அப்படியே நின்றாள்...

"தலை வலிக்குதா...?" என்றவளை அவன் வெறித்துப் பார்த்தான்...

அவள் பதில் பேசாது உள்ளே சென்றவள் ஐந்து நிமிடத்தில் காபி கோப்பையுடன் திரும்ப வந்தாள்...

"குடிங்க... சரியா போயிடும்..."

ஒன்றும் பேசாது தன் முன் காபி கோப்பையை நீட்டியவள் கரத்திலிருந்து அதை வாங்கிக் கொண்டான் அவன்...

அவளது செயலில் குழம்பி போயிருந்தவனுக்கு உண்மையில் தலை 'விண் விண்' என்று வலிக்க ஆரம்பித்தது... மெல்ல காபியை பருக ஆரம்பித்தான்... இதமான சூட்டில் இருந்த காபி அவனது தலைவலியை சற்றுக் குறைத்தது...

தலைவலியை வரவழைத்தவளே அதற்குத் தீர்வும் தருவதைக் கண்டு யோசித்தபடி நின்றிருந்தான் அவன்...

பின் அவளைத் திரும்பி பார்த்து, "வாழ்த்துக்கள்..." என்றான் புன்னகையுடன்...

திடுமென அவன் வாழ்த்தியதும் அவள் திகைத்து போய் நிற்க...

"உன் திருமணத்திற்கு உறவினனா நான் உன்னை வாழ்த்தலாம் இல்லையா..."

அதைக் கேட்டு அவளது முகம் மலர்ந்தது...

"நிச்சயமாய்..." என்றவள் நன்றியுரைத்துவிட்டு அங்கிருந்தது சென்றுவிட்டாள்...

செல்லும் அவளைப் பார்த்து கொண்டிருந்தவன் மனதில் ஏதேதோ யோசனைகள்...!!!

எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த அபிமன்யு - சுபிக்ஷா திருமண நாள் நாளை என்றளவில் வந்தே விட்டது... ஆனால் அதற்கு முந்தின நாள் இரவு தான் அந்த அசம்பாவிதம் நடந்தது...

அது இருவீட்டார் மனதிலும் பெரும் இடியை இறக்கி அவர்களை முற்றிலும் நிலைக்குலையச் செய்தது...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 10

திருமணத்திற்கு முந்தின நாள் இரவு கிருஷ்ணா திருமண மண்டபத்தில் எல்லா ஏற்பாடுகளும் சரியாக நடக்கிறதா என்று பார்த்துக் கொண்டு இருந்தான்... அந்த இரவு நேரத்திலும் அவன் சுறுசுறுப்பாக அங்குமிங்கும் அலைந்து வேலைகள் செய்து கொண்டு இருந்தான்... ஒரே தங்கையின் திருமணம் அல்லவா அதனால் அவன் மிகவும் பரபரப்புடன் காணப்பட்டான்...

மணவறையின் அலங்காரத்தைப் பார்வையிட்டுக் கொண்டு இருந்தவன் அதில் மேலும் சிவப்பு ரோஜாக்களை அதிகம் பயன்படுத்தி அலங்கரிக்குமாறு கூறிக் கொண்டு இருக்கும் போது அவனின் அலைப்பேசி அலறியது...

ராகவ் தான் அவனை அழைத்திருந்தான்... இப்போது தான் அவனும் இங்கிருந்து எல்லா வேலைகளையும் மேற்பார்வையிட்டு விட்டு வீட்டிற்குச் சென்றான்... அதற்குள் திரும்ப அழைத்திருக்கிறான்... உற்சாகமாய் நண்பனின் அழைப்பை எடுத்தவன்,

"நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன் ராகவ்... நீ மாப்பிள்ளை வீட்டுக்காரன் மாதிரி காலையில் ஜம்முன்னு வந்து இறங்கினா போதும்..." சிரித்தபடி நண்பனை கிண்டலடித்த கிருஷ்ணா மறுபுறம் அவன் சொன்ன செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தான்...

"என்னடா சொல்ற...?" உறுமலுடன் கேட்ட கிருஷ்ணாவிற்கு,

"ப்ளீஸ் கிருஷ்... மண்டபத்துக்கு வெளியில் வா... நான் இங்கே தான் நின்னுக்கிட்டு இருக்கேன்..." கெஞ்சிய ராகவ்வின் குரலை விட அவன் சொன்ன விசயம் ஆத்திரத்தை உண்டு பண்ண வேகமாக அங்குச் சென்றான் கிருஷ்ணா...

அங்கே மண்டபத்தில் இருந்து சற்று தள்ளி காரை நிறுத்திவிட்டு அதன் அருகே தவிப்புடன் நின்றிருந்த ராகவ்வை கண்டதும் கிருஷ்ணாவின் நடை துரிதமானது...

நேரே வந்தவன் ராகவ்வின் சட்டைக் காலரை இறுகப் பற்றினான்...

"நீ சொல்றது உண்மையா...?" ஆவேசத்துடன் கேட்ட கிருஷ்ணாவின் கண்கள் இரண்டும் கோவைப்பழமாய்ச் சிவந்திருந்ததை அந்த மெல்லிய தெரு விளக்கு ஒளியிலும் நன்கு கண்டான் ராகவ்...

பதில் பேசாது தனது சட்டைப்பையில் இருந்து அந்தக் காகிதத்தை எடுத்துக் கிருஷ்ணாவிடம் நீட்டினான் அவன்... அவசரமாய் அதை வாங்கிப் பார்த்தான் கிருஷ்ணா... அதில் எழுதியிருந்ததின் சாராம்சம் இது தான்...

"என்னோட அப்பா செஞ்ச தப்புக்கு என்னைப் பழிவாங்கிய ஜீவாவை தொழிலில் தோற்கடிக்க என்னால் முடியவில்லை... அதனால் அவனின் பாணியில் அவன் செய்த தப்புக்கு அவனின் குடும்பத்தைப் பழிவாங்க போகிறேன்... ஆம்... இந்தத் திருமணம் நடைப்பெறுவதில் எனக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லை... சுபிக்ஷாவை நான் காதலித்தேன் தான் இல்லை என்று மறுப்பதற்கு இல்லை... அவளைத் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணியும் இருந்தேன்... அதையும் மறுப்பதற்கு இல்லை... ஆனால் ஜீவாவால் எனக்கு ஏற்பட்ட தோல்விகளுக்குத் தக்க பதிலடி கொடுப்பதற்கு இதை விட்டால் எனக்கு வேறுவழி தெரியவில்லை... அதனால் என் காதலை அவனைப் பழிவாங்குவதற்காகப் பயன்படுத்திக் கொண்டேன்... சாரி சுபிக்ஷா..."

அபிமன்யு தன் மனதில் உள்ளதை வார்த்தைகளில் வடித்துக் கடிதமாக எழுதியிருந்தான்... அது தான் இது...

"எங்கே போனான்னு தெரியலைடா... பேச்சிலர் பார்ட்டிக்கு போயிட்டு வர்றேன்னு போனான்... இன்னும் வீடு வரலையேன்னு தேடினப்போ தான் அவனோட ரூமில் இந்த லெட்டர் இருந்தது..."

வருத்தமும், கவலையுமாகச் சொன்ன ராகவ் நண்பனின் முகத்தைக் காண முடியாமல் தலை குனிந்து நின்றிருந்தான்...

கிருஷ்ணாவிற்கு வந்த ஆத்திரத்தில் அபிமன்யு மேலுள்ள கோபத்தை ராகவ்விடம் காட்ட துடித்த மனதை முயன்று அடக்கியபடி,

"கல்யாணம்ன்னா சின்னப்பிள்ளைங்க விளையாடற விளையாட்டுன்னு நினைச்சானா உன் தம்பி... அவன் எங்கே போனாலும் கையைக் காலை கட்டி இழுத்து வந்தாவது என் தங்கச்சி கழுத்தில் தாலி கட்ட வைக்கிறேன்..." என்று ஆவேசமாகக் கர்ஜித்தவன் நண்பனை நோக்கி,

"போயிடு இங்கிருந்து... எனக்கு வர்ற ஆத்திரத்தில் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது..."

ராகவ் ஒன்றும் பேச முடியாத நிலையில் இருந்தபடியால் தலையைக் குனிந்து கொண்டு, "சாரிடா..." என்ற ஒற்றை வார்த்தையோடு அங்கிருந்து சென்றுவிட்டான்...

'மன்னிப்பு' என்ற ஒற்றை வார்த்தையில் செய்த தவறுகளை எல்லாம் மன்னித்து விட முடியுமா...? என்று உள்ளம் குமுறியபடி நின்றிருந்தான் கிருஷ்ணா...

முகத்தில் கல்யாண களையுடன், கைகளில் மருதாணி சிவக்க வலம் வந்த தங்கையின் முகம் அவனின் நினைவில் எழுந்து அவனை வெகுவாய் வருத்தியது... இந்த விசயத்தை எப்படி வீட்டில் சொல்வது என்று தெரியவில்லை...

'யாரோ செய்த தவறுக்கு என் தங்கை தண்டனை அனுபவிப்பதா...?' மனம் குமுறியவனின் கோபம் எல்லாம் இப்போது அபிமன்யுவை விடுத்து ஜீவா மீது திரும்பியது...

அதே ஆவேசத்துடன் அவன் வீட்டிற்குக் கிளம்பி சென்றான்...

வீட்டில் வரவேற்பறையில் அமர்ந்து ரிலாக்சாக ருத்ரஸ்ரீயிடம் பேசி கொண்டு இருந்த ஜீவாவை கண்டு கிருஷ்ணாவின் கோபம் அதிகரித்த போதும் அத்தைக்காகச் சற்று நிதானத்தைக் கடைப்பிடித்தான்...

திருமணத்திற்கு வந்த உறவினர்களை விடுதியில் தங்கச் செய்திருந்தபடியால் வீட்டில் வீட்டு உறுப்பினர்களைத் தவிர யாரும் இல்லை... ஜெகனின் மூத்த தங்கை ரஞ்சனி தனது கணவனுடன் திருமணத்திற்கு வந்திருந்தாள்...

நேரே ஜீவா முன் வந்து நின்ற கிருஷ்ணா அந்தக் கடிதத்தை அவனது முகத்தில் விட்டெறிந்தான்...

அதில் வெகுண்ட ஜீவா, "டேய்..." என்றபடி கோபமாய் எழுந்தான்...

"கிருஷ்... என்னப்பா ஆச்சு...?" ருத்ரஸ்ரீயும் சோபாவில் இருந்து எழுந்துவிட்டாள்...

"இன்னும் என்ன நடக்கணும் அத்தை... இவனால் சுபியின் கல்யாணம் நின்னது தான் மிச்சம்..."

கிருஷ்ணாவின் வெறுப்பான வார்த்தையில் அதிர்ந்து போன ருத்ரஸ்ரீ குனிந்து அந்தக் காகிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தாள்...

அதில் எழுதியிருந்ததை அவளது மூளை ஏற்றுக் கொள்ள மறுத்தது... அவளால் அதை நம்ப முடியவில்லை... கள்ளம் கபடம் இல்லா அபிமன்யுவிடத்தில் இத்தகைய கயமையை

ஒப்பிட்டு பார்க்க அவளால் முடியவில்லை... ஆனால் அதை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை... அதற்குச் சாட்சியாக அபிமன்யுவின் கையெழுத்தில் இருந்த அந்தக் கடிதம் அவளைப் பார்த்துக் கேலியாய்ச் சிரித்தது...

அப்படியே மடங்கிப் போய்ச் சோபாவில் அமர்ந்தாள் அவள்...

"மாம்..." அன்னையின் தோற்றம் ஜீவாவை கவலை கொள்ளச் செய்யக் கவலை படிந்த முகத்துடன் அவளது தோள் தொட்டான்...

"நீ பண்ணிய வேலை எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது பார்த்தியா...?"

தாயின் வார்த்தைகளில் அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்த்தவன் படித்துவிட்டு,

"இது முட்டாள்த்தனம்..." என்று அதைத் தூக்கி எறிந்தான் கோபமாய்...

"முட்டாள்த்தனமான வேலை எல்லாம் செஞ்சது நீ... ஆனா தண்டனை அனுபவிக்கிறது என் தங்கச்சிடா..."

கொஞ்சமும் கோபம் குறையாமல் கிருஷ்ணா அவனது சட்டையைப் பிடித்திருந்தான்... நொடியில் அதை உதறி தள்ளிய ஜீவா,

"பேச்சு பேச்சா இருக்கணும்... இப்படிக் கை பேசினா... என்னோட கையும் பேசும்..." என்றான் ஆள்காட்டி விரலை நீட்டி அவனை எச்சரித்தபடி...

"அப்படித்தான்டா என் கை பேசும்... உன்னால் தான் என் தங்கை வாழ்க்கை பாழாகிருச்சு..." இன்னமும் கிருஷ்ணாவின் ஆத்திரம் அடங்கவில்லை...

அதற்குள் இவர்களது சத்தமான குரல் கேட்டு வீட்டினர் அனைவரும் அங்குக் கூடிவிட்டனர்... ராம்குமாரும் இந்தத் திருமணத்திற்காக மும்பையில் இருந்து வந்திருந்தார்... அவரும் அங்கு வந்துவிட்டார்...

விசயம் கேள்விப்பட்டதும் எல்லோரும் இடி விழுந்தது போல் திகைத்து காணப்பட்டனர்... சுபிக்ஷாவின் நிலையைச் சொல்லவே வேண்டாம்... கண்களில் கண்ணீர் வழிய அதிர்ந்து போய் நின்றிருந்தாள்...

போன நொடி வரை எல்லாப் பெண்களைப் போல் திருமணக் கனவில், கற்பனையில் மகிழ்ந்து இருந்தவளுக்கு இது பெருத்த அடி... அவள் காதல் கொண்டு அபிமன்யுவை திருமணம் செய்யவில்லை என்றாலும், திருமண நாள் நெருங்க நெருங்க மற்ற பெண்களைப் போல் அதை நினைத்துத் தயக்கம், பயம், மயக்கம், வெட்கம் என்று எல்லாம் கலந்த உணர்வுகளோடு அந்த நாளுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்...

வருங்காலக் கணவன் என்ற முறையில் அபிமன்யு அவள் உள்ளத்தில் சிறிது சிறிதாக இடம் பெற்றிருந்தான்... இப்போது அந்தக் கனவை அவனே கலைத்து விட்டு சென்றதை நம்ப முடியாமல் திகைத்து நின்றாள் அவள்...

'எப்படி எல்லாம் காதல் வசனம் பேசினான்... கடைசியில் என்னை இப்படிக் கழட்டி விடுவதற்குத் தானா...?' மனதில் குமுறிக் கொண்டு நின்றிருந்தவளை பூஜா ஆறுதலாகத் தன்னோடு அணைத்து கொண்டாள்...

நாத்தனாரின் மனம் என்னப்பாடு படும் என்று பெண்ணாய் அவளும் அறிவாளே... அதே சமயம் தனது சகோதரனின் மீது கோபமும் வந்தது...

'இதற்கு இவன் இங்கே வராமலே இருந்திருக்கலாம்... ஒவ்வொரு முறை வரும் போதும் ஒரு கலகத்தை மூட்டிவிட்டு செல்வதே வாடிக்கையாகி போயிற்று...'

மனதில் ஜீவாவை வைதபடி அவனை முறைத்துக் கொண்டு இருந்தாள்...

ரம்யா மகளை நினைத்துக் கண்ணீர் விட, செல்வா அவளுக்கு ஆறுதலாக இருந்த போதும் அவனின் முகமும் இறுகி போயிருந்தது...

ரஞ்சனியும் செய்வதறியாது திகைத்து நின்றாள்...

காளிமுத்து என்ன செய்வது என்று தெரியாமல் அமர்ந்திருக்க, அகிலாண்டம் தனது வருத்தத்தை அழுது ஒப்பாரி வைத்து ஆற்றிக் கொண்டார்...

"எனக்குத் தெரியும் கண்ணப்பா... அவன் அப்பன மாதிரி இவனும் இப்படித்தான் நம்ம கழுத்தறுப்பான்னு... அவனுக்கு ராசாத்திய பேசும் போதே எனக்குப் பிடிக்கலை... ஆனா நீங்க எல்லாம் சம்மதிக்கும் போது நான் என்ன மறுத்து பேசன்னு அமைதியா இருந்துட்டேன்... கடைசியில் இப்படி நம்ப வச்சுத் துரோகம் பண்ணிட்டானே... நாளைக்குக் கல்யாணத்தை வச்சிக்கிட்டு இப்படிப் பண்ணிட்டானே... விசயம் கேள்விப்பட்டா நம்ம சாதி, சனம் நம்மளை பார்த்துச் சிரிப்பா சிரிச்சிருமே..."

மாமியாரின் வார்த்தையில் ருத்ரஸ்ரீக்குக் குற்றவுணர்வு மனதை போட்டுக் கொன்றது... ஏனெனில் அவள் தானே அபிமன்யுவுக்காகத் தனது வீட்டினரிடத்தில் பேசியது... அவமானத்தில் பேச்சற்று தலை குனிந்து அமர்ந்திருந்தாள்...

"ராசாத்தி... உன் நிலைமை இப்படியா ஆகணும்..." பேத்தியை கண்டு அகிலாண்டம் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழ,

"அம்மாச்சி..." என்றபடி ஓடி வந்து ஆறுதலுக்காக அவரின் மடியில் தலை சாய்ந்தாள் சுபிக்ஷா...

மனதின் துயரை தீர்க்க அழுகை ஒன்றே தீர்வானது அவளுக்கு...

அந்நேரம் ஜெகனின் அலைப்பேசி அழைத்தது... அதை எடுத்து பேசியவன் 'உம், உம்' என்று பதில் கூறிவிட்டு மேலே ஒன்றும் பேசாமல் வைத்துவிட்டான்...

கேள்வியாய் பார்த்த குடும்பத்தினரை நோக்கி, "சித்ராவும், கார்த்திக்கும் பேசினாங்க... அபிக்காக அவங்க மன்னிப்பு கேட்டாங்க..."

"செய்றது எல்லாம் செஞ்சிட்டு மன்னிப்பு கேட்டா எல்லாம் முடிஞ்சதா...? விடிஞ்சா கல்யாணம்... வந்திருக்கிற உறவுக்காரங்களுக்கு யார் பதில் சொல்றது...? அதை விட இதோ அழுதுக்கிட்டு இருக்கிற என் தங்கச்சிக்கு யார் பதில் சொல்றது...?" ஆவேசமாய்க் கத்திய கிருஷ்ணாவை யாரும் மறுத்து பேசவில்லை...

அவன் கூறவதும் உண்மை தானே...

ருத்ரஸ்ரீ தனது அலைப்பேசியை எடுத்து யாருக்கோ எண்களை அழுத்தினாள்...

"யாருக்கு...?" என்றான் ஜெகன்...

"கமிஷனருக்கு... அபி எங்கே இருந்தாலும் கண்டுப்பிடிச்சு கூட்டிட்டு வர போறேன்..."

"கூட்டிட்டு வந்து..." ஜெகன் அழுத்தமாய்க் கேட்க...

"சுபி கழுத்தில் தாலி கட்ட சொல்வேன்..." என்று சொன்ன மனைவியைப் பரிதாபமாய்ப் பார்த்தான் ஜெகன்...

"தாலி மட்டும் தான் நாம கட்ட சொல்ல முடியும் ஸ்ரீ... அதுக்கு அப்புறம் வாழ வேண்டிய வாழ்க்கையை நாம் வற்புறுத்த

முடியாது... கட்டாயக் கல்யாணத்துக்கு அப்புறம் நம்ம வீட்டு பொண்ணோட வாழ்க்கை...?"

ஜெகனின் வார்த்தையில் அதிர்ந்து போய் விழித்தாள் ருத்ரஸ்ரீ... பிடித்தம் இல்லாமல் போன தனது முதல் திருமண வாழ்க்கை அவளையும் அறியாமல் அவளது நினைவிலாடியது...

மனதுக்குப் பிடித்தால் மட்டுமே திருமண வாழ்க்கை சிறக்கும்... மற்றபடி மனம் ஒன்று சேரவில்லை என்றால் கழுத்தில் கட்டப்படும் மஞ்சள் கயிறுக்கு அர்த்தமே இல்லாமல் போகும்... பல திருமணங்கள் தோல்வியில் முடிவது இதனால் தான்... மஞ்சள் கயிறு மாயாஜாலம் செய்வது எல்லாம் சில தம்பதியினரிடத்தில் மட்டும் தான்...

அதற்கு மேல் ருத்ரஸ்ரீயால் பேச முடியவில்லை...

"அப்போ இப்படியே விடச் சொல்றீங்களா மாமா..." கொஞ்சமும் கோபம் குறையாது எகிறினான் கிருஷ்ணா...

கிருஷ்ணாவின் பேச்சில் ஜெகனுக்கும் வார்த்தைகள் இல்லை பேசுவதற்கு...

இது எல்லாவற்றையும் வெறும் பார்வையாளனாகப் பார்த்துக் கொண்டு இருந்தான் ஜீவா...

அப்போது தான் ராம்குமார் காளிமுத்துவை பார்த்து, "அண்ணா... நான் ஒண்ணு சொல்லலாமா...?"

ராம்குமார் மேல் காளிமுத்துவிற்கு நல்ல மதிப்பு உண்டு... என்றோ ஷோபனாவையும், ராம்குமாரையும் இணைத்து தவறாகப் பேசியதற்கு நிறைய நாட்கள் வருத்தபட்டு இருக்கிறார்... அதிலும் ராம்குமாரின் நல்ல குணங்களைக் கண்டதும் அவரின் எண்ணங்கள் அடியோடு மாறிவிட்டது...

"சொல்லுப்பா..." காளிமுத்துச் சம்மதம் தெரிவிக்க...

"நம்ம ஜீவாவுக்குச் சுபிக்ஷாவை கல்யாணம் பண்ணி வச்சால் என்ன...?"

அதைக் கேட்டு எல்லோரும் அதிர்ந்து போய் நின்றனர்...

அகிலாண்டம், ஜெகன் மனதில் இது போன்ற ஆசை இருந்தாலும் ஜீவாவின் குணம் அறிந்து அதைப் பற்றிய பேச்சை அவர்கள் மீண்டும் எடுக்கவில்லை... மற்றவர்கள் இதைப் பற்றி யோசித்தும் பார்க்கவில்லை... அதனால் அவர்களுக்குத் திகைப்பாய் இருந்தது...

"வாட்...?" என்றான் ஜீவா அதிர்ந்த முகத்துடன்...

"என்னது... போயும் போயும் இவனா என் தங்கைக்கு..." அருவருப்பாய் முகத்தைச் சுளித்தான் கிருஷ்ணா...

"ஏய்... வார்த்தையை அளந்து பேசு... இங்கே யாரும் உன் தங்கையைக் கட்டிக்கத் தவம் இருக்கலை..." எரிச்சலுடன் கிருஷ்ணாவை பார்த்து முறைத்தான் ஜீவா...

"என் தங்கை மாதிரி குணமுள்ளவளை கல்யாணம் பண்ண உன்னை மாதிரி ஒரு குணம் கெட்டவன் தவம் பண்ணியிருக்க வேண்டும்... ஆனால் அந்தக் கொடுப்பினையும் உனக்குக் கிடையாது... உன்னை மாதிரி தரங்கெட்டவன் என் தங்கைக்கு வேண்டாம்..."

அதில் ஜீவாவின் தன்மானம் வெகுவாய் சீண்டப்படக் கோபமாய் அவன் சீறினான்...

"நான் தரங்கெட்டவன்னு நீ வந்து பார்த்தியா... பெருசா பேச வந்துட்டான்... நீ என்னடா என்னை வேண்டாம்ன்னு சொல்றது... எனக்கு இந்த அழகு ரதியை ஓசியில் கொடுத்தாலும் வேண்டாம்..." என்று சுபிக்ஷாவை பார்த்து கேலியாய் சொன்னவன்,

"நான் விரல் சொடுக்கினால் ஆயிரம் பொண்ணுங்க க்யூவில் வந்து நிப்பாங்க... என் ஸ்டேட்டஸ் வல்யூ தெரியாம நீ பேசுற..." பெருமையாய், கர்வமாய்க் கூறியவனின் விழிகள் இளக்காரமாய்ப் பார்த்தது கிருஷ்ணாவை...

"என்னடா ஸ்டேட்டஸ் உன்னோடது... ரெண்டு பொண்ணுங்களோட நிரந்தரமா கூத்தடிச்சிட்டு இருக்க... இப்ப ஒரு கல்யாணமான பொண்ணு கூட... இந்த லட்சணத்தில் ஒரு குழந்தை வேறு... உன் பொழைப்பு மும்பை பத்திரிக்கையில் செய்தியாய் சந்தி சிரிப்பது உன் கண்ணுக்கு தெரியலையா... ஸ்டேட்டசாம் ஸ்டேட்டஸ் மண்ணாங்கட்டி ஸ்டேட்டஸ்..." பதிலுக்கு வெகுண்டு எழுந்தான் கிருஷ்ணா...

இத்தனை நாள் அவனது அடக்கப்பட்ட ஆத்திரம் வார்த்தையாய் வெளிவந்தது...

"டேய்..." என்றபடி அவனை அடிக்கக் கையை ஓங்கிவிட்டான் ஜீவா...

தங்கை கணவனாக இருந்தாலும் தனது அந்தரங்கத்தை விமர்சிப்பதற்கு அவனுக்கு யார் அனுமதி கொடுத்தது...? அவனுள் கோபம் நெருப்பாய்க் கனன்றது...

"ஜீவா..." ருத்ரஸ்ரீ தான் மகனை தடுத்தாள்...

"கிருஷ்... நம்ம வீட்டு மாப்பிள்ளை... அது உன் நியாபகத்தில் இருக்கட்டும்..." என்றாள் மகனை கண்டிக்கும் குரலில்...

"மாப்பிள்ளைங்கிறதுக்காக வாய்க்கு வந்ததைப் பேசிடலாமா...?" கிருஷ்ணாவை முறைத்தபடி எகிறினான் அவன்...

"நீ என் தங்கையை எப்படிப் பேசலாம்...?" கிருஷ்ணாவும் பதிலுக்கு எகிறினான்...

பெரியவர்கள் இருவரையும் பார்த்தபடி நின்றிருந்தனர்... யாரை அடக்குவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை...

ராம்குமார் ஏன் தான் இந்த ஆலோசனையைச் சொன்னோமோ என்று தனக்குள் நொந்து போனார்... ஜீவாவை வழிக்குக் கொண்டு வர அவனுக்குத் திருமணம் அவசியம் என்று எண்ணித்தான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர் இப்படிச் சொன்னது... உறவுக்குள் என்றால் வரும் பெண் அவனை அனுசரித்துச் செல்வாள் என்று நினைத்தார்... ஆனால் இவர்களது சண்டையைப் பார்த்தால் இருக்கும் உறவும் கெட்டு போய்விடும் போலிருந்தது...

அப்போது தான் அகிலாண்டம் அந்தக் காரியத்தைச் செய்தார்... நேரே எழுந்து தனது பேரன் ஜீவாவிடம் வந்தவர் அவன் முன் கையேந்தி நின்று,

"ராசா... உன் அப்பத்தா உன் கிட்ட கெஞ்சி கேட்கிறேன்... என் ராசாத்திக்கு ஒரு நல்ல பதிலா சொல்லுய்யா... உன்னை விட்டா அவளுக்கு யார் இருக்காப்பா...?" என்று கெஞ்சியவரின் கண்களில் கண்ணீர் தடங்கள்...

தனது பாட்டியை பார்க்காமல் கிருஷ்ணாவை முறைத்துக் கொண்டே, "ஏன் யாரும் இல்லை...? அதான் ஊரில் இருந்து வந்திருக்கிற சொந்தக்காரங்களில் அவளுக்குப் பொருத்தமான ஒரு அப்பாவி குப்பனையோ, சுப்பனையோ பிடிச்சு மாப்பிள்ளையாக்குங்க... என்னை ஆளை விடுங்க... இதுக்கு நான் ஆளில்லை..." என்றான் அலட்சியமாய்...

கிருஷ்ணாவின் வார்த்தைகள் அவன் மனதில் கனலை மூட்டியிருந்தது.. அது உள்ளுக்குள் புகைந்து அவனை வெறியேற்றிக் கொண்டு இருந்தது...

அதைக் கேட்டு கிருஷ்ணாவின் கோபம் பல மடங்கு அதிகரித்தது...

"உனக்கு அந்தக் குப்பன், சுப்பன் ஆயிரம் மடங்கு பரவாயில்லை..." கிருஷ்ணா கோபத்தில் கத்தினான்...

"அப்போ அவனைப் போய்த் தேடு... இங்கே நின்னு ஏன்டா கத்திக்கிட்டு இருக்க...?" ஜீவா நக்கலாய் பேச...

"இது எல்லாம் உன்னால் தான்டா வந்தது... அப்போ நீ தான் பதில் சொல்லணும்..."

"நினைத்தேன்... என்னடா இன்னும் இந்தப் பேச்சை காணோம்ன்னு... இது எல்லாம் நீயும், அபியும் சேர்ந்து போட்ட ப்ளானா...?"

எரிச்சலும், இளக்காரமுமாய்ப் பேசிய ஜீவாவின் வார்த்தைகள் கிருஷ்ணாவின் மனதை காயப்படுத்துவதற்குப் பதிலாக அது சுபிக்ஷாவின் மனதை அதிகம் காயப்படுத்தியது...

"ராசா..." என்ற அகிலாண்டத்தின் கூக்குரலில் இருவரையும் கவலையாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் திரும்பி அவரிடம் தங்களது கவனத்தைப் பதிக்கும் முன் அவர் தனது நெஞ்சை பிடித்துக் கொண்டு கீழே சாய்ந்தார்...

அதற்குள் ஜீவா, "க்ரனி..." என்று அலறியபடி அவரைத் தனது கரங்களில் தாங்கி பிடித்துக் கொண்டான்...

அவரது நெஞ்சை நீவி விட்டபடி, "என்ன பண்ணுது க்ரனி...?" என்று கலக்கத்துடன் கேட்ட ஜீவாவை கண்டு மூச்சு திணறியபடி அந்த மூதாட்டி,

"ராசா... ராசாத்தி..." என்று பேத்தியை சுட்டிக்காட்ட...

அவன் அவளைத் திரும்பி பார்த்தான்... அவள் தனது பாட்டியை பதட்டத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

"கல்யாணம் பண்ணிக்கணும்..." என்று அகிலாண்டம் சொல்ல...

அதில் சுபிக்ஷா தனது கண்கள் வெளிவந்து விடுவது போல் அதிர்ந்து போய் விழித்தாள்...

ஜீவாவோ எந்தவொரு உறுதியும் கொடுக்காது அமைதியாய் தலை குனிந்து இருந்தான்...

"ஜீவா..." ருத்ரஸ்ரீயின் குரல் அவனை அதட்டியது...

சுபிக்ஷாவிற்கு ஏற்றவன் தன் மகனில்லை என்று அவள் நினைத்திருந்த போதும், உயிரை கையில் பிடித்துக் கொண்டு கேட்கும் பெரியவரின் மனதை நோகடிக்க அவள் விரும்பவில்லை... அத்தோடு குற்றவுணர்ச்சியும் சேர்ந்து அவள் மனதை கொல்ல,

"இதுநாள் வரை எல்லோரையும் நீ நோகடிச்சு இருக்க... ஆனால் இப்போ ஒரு உயிர் வதைப் படுவதற்குக் காரணமா இருந்துவிடாதே..." கலக்கத்துடன் கூறிய அன்னையைக் கண்டவன் பின் பாட்டியை திரும்பி பார்த்தான்...

மூச்சு திணறியபடி உயிரை கையில் பிடித்துக் கொண்டு தனது மடியில் தலை சாய்த்திருந்த அந்த மூதாட்டியை பார்த்தவன் நொடி நேர தாமதம் என்றாலும் மறு நொடி அவரது வலக்கையைத் தனது கையால் அழுத்தமாய்ப் பற்றிக் கொண்டான்...

அதைக் கண்டு மனதுக்குள் திகில் அடைந்தது சுபிக்ஷா மட்டும் தான்...

செல்வா, கிருஷ்ணாவை தவிர மற்றவர்கள் இதைச் சந்தோசமாகத் தான் பார்த்தனர்... அவர்கள் இருவரும் பெரும் குழப்பத்துடன் நின்றிருந்தனர்...

"வேண்டாம்ன்னு சொல்லுங்களேன் மாமா..."

ஜீவாவிற்கு மட்டும் கேட்கும் குரலில் துக்கத்துடன் முணுமுணுத்தாள் சுபிக்ஷா... வெகு வருடங்களுக்குப் பின் அவள் அவனை 'மாமா' என்று அழைத்தாள்... அதை அவள் உணர்ந்து சொல்லவில்லை...

"ராசா... அப்போ மாதிரி நீ பொய் சொல்லலையே..." அன்று ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவால் அகிலாண்டம் அப்படிக் கேட்க...

என்ன செய்வது என்று தெரியாது விழித்த ஜீவா, “இப்போ எதுக்கு இந்தப் பேச்சு க்ரனி...? ஹாஸ்பிட்டல் போகலாம்...” என்றபடி அவரைத் தூக்க முயல,

“இல்லை... உன்னை நான் நம்ப மாட்டேன்... வாய்மொழியா நீ சம்மதம்ன்னு சொல்லு...” பிடிவாதம் பிடித்தார் அவர்..

பாட்டியின் துயர் துடைக்க எண்ணிய ஜீவா வேறுவழியின்றி அருகில் இருந்த சுபிக்ஷாவின் தோள் மேல் கை போட்டு அணைத்தபடி,

"உன் பேத்தியை கல்யாணம் பண்ண எனக்கு முழுச் சம்மதம்... உன் பேத்தியை நான் கைவிட மாட்டேன்... இப்போ என்னை நீ நம்புறியா..." என்று சிரித்தபடி சொன்னவன்,

"இப்போவாவது ஹாஸ்பிட்டல் போகலாமா...?" என்று தனது வார்த்தையில் அவன் நிற்க...

"ம்..." என்று தலையசைத்தவரின் தலை தொங்கியது அடுத்த நொடி...

அடுத்தச் சில மணித்துளிகளில் அகிலாண்டம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்... அவரின் உடல்நிலையைப் பற்றிய கவலையில் அனைவரும் வராந்தாவில் நின்றிருந்தனர்...

ஒன்றும் பேசாது இறுக்கமாய் நின்றிருந்த செல்வா அருகில் வந்தமர்ந்தான் ஜெகன்...

"மாப்ள... கோபமா...?" அதில் திரும்பிய செல்வா...

"இல்லை மச்சி..." என்றான் மனதை மறைத்துக் கொண்டு...

"ஜீவா பத்தின விசயத்தைக் கேள்விப்பட்டுப் பயப்படுறியா மாப்ள...?"

"ஒரு மாமனா எனக்குப் பயமில்லை... ஆனா ஒரு பெண்ணைப் பெத்தவன்ங்கிற முறையில் பயமாத்தான் இருக்கு..."

உண்மையில் செல்வாவின் வார்த்தைகள் பயத்தில் நடுங்கி கொண்டு தான் வெளி வந்தது...

"எங்களுக்கு ஏத்த மாதிரி சாதாரணமான ஒரு பையனை சுபிக்குக் கல்யாணம் பண்ணி வச்சா கூட அவள் நல்லா வாழ்ந்திருவாள்... ஆனா ஜீவாவை கல்யாணம் பண்ணிக்கிட்டு...? எனக்கு என்னமோ பயமாயிருக்கு மச்சி... நீ சொன்ன மாதிரி மனசு ஒத்து வரலைன்னா திருமண வாழ்க்கை சோபிக்காதுடா..."

"நீ சொல்றது சரி தான் ஒத்துக்கிறேன் மாப்ள... ஆனால் ஜீவா என் பையன்... சுபியை நல்லா பார்த்துக்குவான்... அவன் கடமையை அவன் என்னைக்கும் தவற மாட்டான்... அம்மாவுக்காக என்றாலும் கல்யாணத்துக்குச் சம்மதிச்சவன் சுபி கிட்ட எப்படி நடந்துக்கிட்டான்னு நீயும் பார்த்தே தானே...?"

மகன் மருமகளைத் தோளோடு அணைத்திருந்த காட்சி அவனது கண்ணில் விரிந்தது...

"இருந்தாலும் கடமையாய் வாழ்ற வாழ்க்கை ரொம்பக் கொடுமையானது மச்சி... அந்தக் கொடுமையை என்

மகளுக்கு நான் ஏற்படுத்திக் கொடுக்கணுமா...?"

தந்தையாய் அவன் மனம் யோசித்ததில் தவறில்லையே...

"சரி மாப்ள... உன் விருப்பப்படி சுபி கல்யாணத்தை முடிக்கலாம்..." என்ற ஜெகனின் வார்த்தையில் உள்ளார்ந்த வருத்தம் இருந்தது...

அதைக் கண்டு செல்வாவின் மனதிற்குள் சுருக்கென்று வலித்தது... மகளின் வாழ்க்கை முக்கியம் தான், அதே போல் நண்பனின் நட்பும் முக்கியம் அல்லவா...

"ஆனா உனக்காக நான் இதுக்குச் சம்மதிக்கிறேன் மச்சி..." நண்பனின் கைகளை எடுத்து தனது கைகளுக்குள் வைத்துக் கொண்டான்...

தோள் கொடுப்பான் தோழன் என்று சொன்னதற்கேற்ப இத்தனை வருடங்கள் கூட இருந்து தோள் கொடுக்கும் நண்பனின் நட்பு இன்றும் அவனுக்குத் தோள் கொடுத்து அரவணைத்துக் கொண்டது...

"எனக்காக உன் மகளின் வாழ்க்கையைப் பணயம் வைக்கிறியே மாப்ள... நிச்சயம் சுபிம்மா வாழ்க்கை நல்லவிதமா அமைய நான் உறுதுணையா இருப்பேன்டா... அவளால் மட்டும் தான் ஜீவாவை புரிந்து கொள்ள முடியும்..."

ஜெகனின் வார்த்தைகளில் இருந்த உண்மையை அவன் புரிந்து கொண்டான்...

"அப்படியே மாப்பிள்ளை தப்பு பண்ணினாலும் ரெண்டு அடி போட்டுத் திருத்திரலாம் மச்சி... நீ கவலைப்படாதே..." என்றான் செல்வா சமாதானமாக...

இது தான் சொந்தங்களின் அருமை... தவறுகள் நேர்ந்தாலும் தட்டி கொடுத்து அரவணைத்து செல்வது தான்

அதன் குணம்... அது போன்ற சொந்தத்தை அல்லவா செல்வா ஜெகனுக்குக் கொடுத்தான்...

அதனால் தான் கிருஷ்ணா வந்து தந்தையிடம் ஆட்சேபம் தெரிவித்த போதும் செல்வா ஜெகன் பக்கம் உறுதியாய் நின்றான்... ஜீவாவிற்குத் தனது மகளைக் கொடுப்பது என்று...

"அப்பா... அவன் ஒரு குழந்தைக்கு அப்பா... அவனைப் போய்..." கிருஷ்ணா வார்த்தைகள் வராமல் தடுமாறினான்...

"மறுமணம் செய்து வைப்பது இல்லையா... அது போல் நினைத்து கொள் கிருஷ்ணா..." என்ற செல்வா அதற்கு மேல் பேசவில்லை...

"முட்டாள்த்தனமான முடிவு..." என்று தந்தையிடத்தில் கத்திவிட்டு சென்றுவிட்டான் அவன்...

அகிலாண்டம் உடல் நலமானதும் உடனே தேடியது தனது பேத்தியையும், பேரனையும் தான்... அவரது அறைக்குள் இருவரும் ஒன்றாக நுழைந்தனர்...

"ப்ளீஸ்... அம்மாச்சியிடம் இந்தக் கல்யாணம் வேண்டாம்ன்னு சொல்லியிருங்களேன்..." கெஞ்சும் குரலில் கேட்டவளை கண்டு ஆழ்ந்து பார்த்த ஜீவா,

"இதை உன் அம்மாச்சியிடம் நீயே சொல்..." என்று பல்லை கடித்துக் கொண்டு அடக்கப்பட்ட கோபத்துடன் சொல்ல, அதைக் கேட்டு திகைத்து போய் நின்றுவிட்டாள் அவள்...

"வா... க்ரனி கூப்பிடுறாங்க..." என்று அவள் கைப்பிடித்து அவன் அழைத்துச் செல்ல, அவளோ பலியாடு போல் அவன் பின்னே நடந்தாள்...

இருவரும் சேர்ந்து வருவது கண்டு அவர்களை நிறைவாய் பார்த்த மூதாட்டியின் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்திருந்தது...

இருவரது கையையும் சேர்த்து பிடித்தவர், "ராசா... இன்னைக்குப் பிடிச்ச இந்தக் கையை என்னைக்கும் விட்டுடாதேப்பா..." என்றவரை பார்த்து அவன் புன்னகையுடன்,

"நிச்சயமாய் க்ரனி..." என்றவன் பின் கண்ணடித்து,

"உண்மையாவே உனக்கு நெஞ்சு வலி வந்ததா...? இல்லை உன் பேத்தியை என் தலையில் கட்டி வைக்க நீ போட்ட ப்ளானா இது...?" கேலிக்குரலில் கேட்டவனைக் கண்டு அவர் சிரிக்க...

அவனது வார்த்தையில் சுபிக்ஷாவிற்கு அப்படியே தன்னிரக்கமாய்ப் போய்விட்டது... தனக்கு மட்டும் ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது என்று...? ஆனாலும் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை...

அந்தத் தன்மானமுள்ள பெண் பெரியவரை எதிர்த்து வாதாடாமல் அமைதியாக நின்றிருந்தாள்... ஆனால் அவளது மனமோ கனத்துப் போயிருந்தது வேதனையில்...

மறுநாள் குறித்த முகூர்த்த நேரத்தில் ஜீவா, சுபிக்ஷா திருமணம் நடைப்பெற முடிவு செய்தனர் பெரியோர்கள்...

ஜீவா கூறியது ஒன்றே ஒன்று... இது அவனின் திருமணம்... அதனால் இதில் அபிமன்யு வீட்டாரின் சுவடு தெரியக்கூடாது என்பது தான்...

அவன் சொன்னது போல் கார்த்திக் செலவு செய்த பணத்தை எல்லாம் திருப்பிக் கொடுத்தவர்கள் இதைத் தங்களது வீட்டுத் திருமணமாக மாற்றிக் கொண்டனர்... பணம் பத்தும் செய்யும் என்பதற்கேற்ப இரவோடு

இரவாகத் திருமண வேலைகள் சிறப்பாகத் திட்டமிடப்பட்டது...

தனது அறைக்குள் முடங்கிய சுபிக்ஷவிற்கோ எதிர்காலம் இருட்டாக இருப்பது போல் தோன்றியது... இந்த அம்மாச்சி இப்படி அவசரப்பட்டுக் கத்திமுனையில் தனது திருமணத்தை முடிவு செய்திருக்க வேண்டாம் என்றே எண்ணத் தோன்றியது...

அதை எல்லாம் விட இந்த ஜீவா அவனை நினைத்தால் இன்னமும் பயமாய் இருந்தது அவளுக்கு... சின்ன வயதில் இருந்து அவனுக்கு அவளைப் பிடிக்காது... அப்படிப்பட்ட தன்னோடு அவனுக்குத் திருமணம் என்றால் நிச்சயம் அவனுக்குத் தன் மீது கோபம் இருக்கும்...

அதிலும் அவனைப் பற்றி அவள் கேள்விப்பட்ட விசயங்கள் எல்லாம் அவ்வளவு உவப்பானதாகத் தெரியவில்லை... அந்த அம்ரிதா யார் என்பது அவன் மட்டுமே அறிந்த ரகசியம்... அவளது தந்தை தான் என்பதை அவன் மறுத்தும் கூறவில்லை, ஆமென்று ஆமோதித்தும் கூறவில்லை... இரண்டிற்குமே அவனது பதில் புன்னகை மட்டுமே...

உண்மையில் அவள் அவனது குழந்தை தானோ...??? நினைத்து நினைத்து அவளுக்குத் தலைவலித்தது தான் மிச்சம்...

"ஜீவா கெட்டவனாக இருந்திருந்தால் நான் உனக்கு அவனைக் கல்யாணம் பண்ணி வைக்க நினைப்பேனா சுபிம்மா... அவன் நல்லவன் தான்... அதை மட்டுமே இப்போதைக்கு என்னால் சொல்ல முடியும்... நீயும் இதை விரைவில் தெரிந்து கொள்வாய்... எனக்காக நீ ஜீவாவை கல்யாணம் பண்ணிக் கொள் சுபிம்மா..."

கலங்கிய முகத்துடன் தனது கையைப் பிடித்து வேண்டிய மாமனின் முகம் அவளது கண்ணுக்குள் வந்து போனது...

மாமனது வார்த்தையில் இருந்த உண்மை அவளை அவரிடம் சம்மதமாகத் தலையாட்ட வைத்தது...

மேலும் தனது வாழ்க்கைக்காக உறவுக்குள் சிக்கல்கள் எழுவதை அவளும் விரும்பவில்லை... பெண்களின் தியாகத்தால் தான் அவளது குடும்பமே தலைநிமிர்ந்து நிற்கிறது... அவர்கள் விருப்பு, வெறுப்பற்று குடும்பத்தின் முடிவுகளுக்குத் தலைவணங்குவதால் தான் குடும்பம் என்ற அமைப்புச் சிதறிவிடாமல் காப்பாற்றப்படுகிறது...

அதைத் தான் அவளும் தனது குடும்பத்தினருக்காகச் செய்தாள்...

"சுபி இவன் உனக்கு வேண்டாம்..." கிருஷ்ணா தடுத்து கூறிய போதும் அவள் மறுத்து எதுவும் கூறவில்லை... வாய் மூடி மௌனியாய் நின்றிருந்தாள்...

எதிர்காலம் தனக்கு என்ன வைத்துக் காத்திருக்கிறது என்பதை அறியாமல் அவள் ஜீவாவுடனான திருமணத்திற்குத் தயாரானாள்...

இந்த யோசனையில் இருந்தவளுக்கு அபிமன்யுவின் நினைவு கூடப் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது...

ஜீவா பாட்டிக்காக, சுபிக்ஷா மாமாவிற்காக என்று இருவரும் மற்றவர்களுக்காக இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தனர்... யாருக்கு யாரென்று கடவுள் விதித்து வைத்த பாதையில் பயணம் மேற்கொள்ளத் தயாராகினர் இருவரும்...

மறுநாள் அதே முகூர்த்தத்தில் மணமகன் ஜீவா அருகில் மணமகளாய் வந்தமர்ந்தாள் சுபிக்ஷா... மணமகன் மாறியதை தவிர அங்கு வேறு ஒன்றும் பெரிதாய் மாற்றம் இல்லை... அபிமன்யுவை விட ஜீவா எந்த விதத்திலும் குறைந்தவன் இல்லை என்பதால் உறவினர் யாரிடமும் எந்த முணுமுணுப்பும் எழவில்லை...

ஆனால் மணமகள் தான் தெளிவில்லாத மனதுடன், முகத்துடன் அமர்ந்திருந்தாள்... அதைக் கண்டு ஜீவாவிற்குத் தான் எரிச்சலாக வந்தது...

"நாடகத்தில் நடிப்பதுன்னு முடிவாகி விட்டது... அதுக்கு எதுக்கு இப்படி மூஞ்சை தூக்கி வச்சிக்கிட்டு இருக்க... பிடிக்குதோ பிடிக்கலையோ கொஞ்சம் சிரிச்ச மாதிரி இருந்து பழகு... நம் திருமணத்தைப் பத்தி வெளியில் வீண் புரளி பரவுவதை நான் விரும்பவில்லை... எனக்கு என்னோட கௌரவம் முக்கியவம்..."

அவனது வார்த்தையில் அவள் உள்ளுக்குள் இன்னமும் அடிப்பட்டுப் போனாள்... கண்களில் கண்ணீர் மல்கியது...

மேளம் முழங்க, நாதஸ்வரம் இன்னிசையாய் இசைக்க, உற்றார் உறவினர் ஆசிர்வதிக்க ஜீவா சுபிக்ஷா கழுத்தில் மங்கல நாணை பூட்டினான்... அப்போது அவளது கண்களில் இருந்து சொட்டிய கண்ணீர் பொன் தாலியில் பட்டுத் தெறித்தது...

அவளது கண்ணீர் ஜீவாவின் கோபத்தை இன்னும் விசிறி வைத்து விசிறி விட்டது...

"எதுக்கு இந்தக் கண்ணீர்...? அந்த அபியை நினைத்தா...?" என்று கடுமையுடன் அவன் பேச... அதில் அவளது கண்ணீர் இன்னமும் அதிகமாகியது தான் மிச்சம்...

'அப்படி எந்த விதத்தில் அவன் என்னை விட உயர்ந்து விட்டான் என்று இவள் இப்படி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுகிறாள்...? என்னைக் கல்யாணம் பண்ண இவளுக்குக் கசக்கிறதாமா...?' என்ற கோபம் மட்டுமே அவனது மனதை ஆக்கிரமித்து அவனை எரிமலையாய் குமுறச் செய்தது...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 11

ஜீவாவின் சுடு சொல் சுபிக்ஷாவின் மலர் மனதை சுட்டுப் பொசுக்கியது... அதிலும் அவன் கேட்ட 'எதுக்கு இந்தக் கண்ணீர்...? அந்த அபியை நினைத்தா...?' என்ற வார்த்தைகள் அவளது மனதை பெரிதும் காயப்படுத்தியது...

ஏற்கெனவே அவனது சொத்துக்களுக்காகத் திட்டம் போட்டுத் தன்னை அவன் தலையில் கட்டியதாய் அவன் கிருஷ்ணாவிடமும், பாட்டியிடம் பேசிய போது ஏற்பட்ட மனக்காயத்தை விட அவனது இந்த வார்த்தைகள் மிகுந்த வலியை ஏற்படுத்தியது...

'காலம் முழுவதும் இவங்களோட சுடு சொல்லை கேட்டுக்கிட்டு தான் வாழணுமா...?' என்று நினைக்கும் போதே அவளுக்கு உள்ளுக்குள் பகீரென்றது...

தாலி கட்டும் சடங்கு முடிந்து ஜீவாவை மனைவியின் நெற்றியில் குங்குமம் வைக்கச் சொன்ன போது அவளது விழிகள் இன்னமும் கலங்கி கொண்டு இருப்பதைக் கண்டு அவனது கோபம் எல்லையைக் கடந்தது...

"ஏய்... நிமிர்ந்து என்னைப் பாரு..." என்று அதட்டியவனைக் கண்டு சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள் அவள்...

"நான் கட்டிய தாலிக்கு உண்மையாக இரு..." கோபத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் அவன்...

அவனது வார்த்தையில் அவளது கண்ணீர் அப்படியே நின்றது அதிர்ச்சியில்... அதில் அவன் திருப்தி அடைந்தவனாய் தனது வேலையைக் கவனிக்க, அவளோ உடலும், மனமும் அதிர அப்படியே சிலையாய் சமைந்து இருந்தாள்...

வார்த்தைகளில் நெருப்பை அள்ளி கொட்டுவது என்று கேள்விப்பட்டு இருக்கிறாள் தான்... ஆனால் அதை இப்போது தான் அனுபவிக்கிறாள்... அவன் எத்தனையோ முறை அவளை அவமானப்படுத்தி இருக்கிறான், கோபமாய்த் திட்டியிருக்கிறான் தான்... ஆனால் அது போல் அல்லாது இந்த வார்த்தைகளின் அர்த்தம் அவளை உயிரோடு வதைத்து கொன்றுவிடும் போலிருந்தது...

அதே சமயம் 'என்னைப் பற்றி இவங்க என்ன நினைச்சிக்கிட்டு இருக்காங்க...?' என்ற கோபத்தையும் அது அவளுள் விதைக்கத் தவறவில்லை...

மனதில் நேர்மையாய் இருப்பவர்களுக்கு மட்டுமே வரும் கோபம் அவளுடையது... அவளது மனதில் இந்த நொடி வரை யாரும் இல்லை... இவ்வளவு ஏன் தாலி கட்டியதால் மட்டும் வந்த கணவன் என்ற உறவான ஜீவா கூட இப்போது அவள் மனதில் நிறைந்து இருக்கவில்லை...

அப்படிப்பட்ட தன்னைப் பார்த்து அவன் என்ன வார்த்தை கூறிவிட்டான் என்று அவளது மனம் குமுறியது...

"என்ன உட்கார்ந்துக்கிட்டே தூக்கமா...? வீட்டில் போய்ச் சாவகாசமா தூங்கலாம்... இப்போ எழுந்திருக்கலாமா...?"

கணவனது கேலிக்குரலில் தன் யோசனையை ஒத்தி வைத்தவள் அவனை அழுத்தமாய்ப் பார்த்தபடி மணமேடையை விட்டு எழுந்தாள்...

அதற்குப் பின் நடந்த சடங்குகளில் எல்லாம் எந்தவொரு உணர்வினையும் காண்பிக்காது அவள் இயந்திரகதியில் கலந்து கொண்டாள்... அதைக் கண்டு அவனும் இறுகி போய் நின்றிருந்தான்...

மணமக்களின் இறுகிய முகத்தைக் கண்டு ருத்ரஸ்ரீயின் மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது...

தனது திருமணத்தின் போது கணவன் திருமணச் சடங்குகளின் ஒவ்வொரு அர்த்தத்தையும் கூறி அதைத் தனது மனதிலேற்றி மனமகிழ்வோடு நடைப்பெற்ற தங்களது திருமண நிகழ்வு அவள் மனதில் வலம் வந்தது...

அவளின் நிலை அறிந்து ஜெகன் அவளது கையை ஆதரவாக பற்றிக் கண்களால் 'நல்லதே நடக்கும்' என்று அவளுக்கு ஆறுதல் கூற... கணவனது காதலில் அவளது கண்கள் பனித்தது...

இது போல் தனது மகனும் அவனது மனைவியைப் புரிந்து கொண்டு காதல் வாழ்க்கை நடத்துவானா என்று அவளுக்குப் பெரும் யோசனையாக இருந்தது...

எல்லாச் சம்பிரதாயங்களும் முடிந்து வீட்டிற்குச் செல்வதற்காக மணமக்கள் மண்டபத்தை விட்டு வெளியில் வந்தனர்... அங்கு வாயிலில் அவர்களுக்காக ஜீவாவின் கார் நின்றிருந்தது...

விலையுயர்ந்த அந்தக் காரை கண்டதும் சுபிக்ஷா மனதில் அன்று அவனிடம் தான் பேசிய வார்த்தைகள் நினைவில் நின்று இன்று பெரும் தயக்கத்தைக் கொடுத்தது...

அதை உணர்ந்தார் போன்று அவனது உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது... ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி அவளைப் பார்த்து,

"அன்னைக்கு என் காரில் ஏற மாட்டேன்னு சொன்னியே... இன்னைக்கு என்ன பண்ண போற...?" என்றான் கிண்டலாய்...

அவனது வார்த்தையில் அவளது கோபம் அதிகரிக்க அழுத்தமாய் அவனைப் பார்த்தபடி தனது கழுத்தில் கிடந்த தாலியை அவன் முன் நீட்டி,

"இதை நீங்க தானே கட்டினீங்க..."

அவளின் வார்த்தையில் அவன் நக்கலாய், "இதில் உனக்கு ஏன் இவ்வளவு சந்தேகம்...? சாட்சாத் நானே தான்... ஏன் நான் தாலி கட்டும் போது நீ தூங்கிட்டியா என்ன...?"

"எனக்கு நல்லா நியாபகம் இருக்கு... உங்களுக்கு நினைவு இருக்கான்னு செக் பண்ணினேன்..." என்று அமர்த்தலாய் கூறியவள்,

"அப்போ நான் உங்க மனைவி தானே..." என்றவளை பார்த்து மௌனமாய்த் தலையாட்டியவன் புரியாமல் அவளைப் பார்த்தான்...

"அந்தத் தகுதி ஒண்ணு போதாதா... உங்களில் பாதி நான் அல்லவா... அப்போ உங்க கார் மட்டுமல்ல நீங்க, உங்க சொத்து எல்லாம் எனக்கு உரியது... இப்போ நான் மிஸஸ். ஜீவா... என்ன புரிந்ததா...?"

மிடுக்காய் கேட்டவளை கண்டு அவனது கண்கள் இரண்டும் மின்னியது... முகம் சந்தோசத்தில் மலர்ந்தது...

அவனுக்குத் தக்க பதிலடி கொடுத்ததில் அவள் மகிழ்வாய் நின்றிருந்தாள்... அதில் அவள் மனம் சற்று ஆறியது...

அவர்கள் இருவரும் பேசியதை கேட்ட வீட்டினர் முகமும் மலர்ந்தது...

"ஏங்க... உங்க தங்கச்சி இவ்வளவு வாய் பேசுவாளா...?" பூஜா தனது சந்தேகத்தைக் கணவனிடம் கேட்க...

"அதே சந்தேகம் தான் எனக்கும்... உன் அண்ணன்ங்காரனுக்கு இந்தளவுக்குப் பொறுமையிருக்கா...? அதிசயமா சிரிக்க வேற செய்றான்..." கிருஷ்ணாவும் ஆச்சிரியமாய் மணமக்களைப் பார்த்தான்...

"அது தான் திருமணப் பந்தத்தின் சிறப்பு..." சந்தோசத்தோடு சொன்ன ஜெகனின் வார்த்தைகளை

வீட்டினர் அப்படியே ஆமோதித்தனர்...

ஏனெனில் அங்கிருந்த அனைவரும் தங்கள் இணையைத் திருமணத்திற்குப் பின்னும் இன்னும் அதிகமாய்க் காதலிக்கின்றனரே... வருடங்கள் பல சென்றாலும் அவர்களது காதலின் அளவு குறையவில்லையே...

"அப்படிங்களா பொண்டாட்டி மேடம்... இப்ப காரில் ஏறலாமா..." சிறு புன்னகையுடன் கூறிய ஜீவா கார் கதவை அவளுக்காகத் திறந்துவிட, அவளோ ராணியின் கம்பீரத்துடன் ஏறியமர்ந்தாள்...

அவனது வார்த்தையில் அவளது முகத்திலும் லேசாய் புன்னகையின் சாயல்...

மறுபக்கம் ஜீவா ஏறியமர்ந்ததும் கார் கிளம்பியது... காரின் உள்ளே இருந்த ஆடம்பரத்தை கண்டு சுபிக்ஷா யோசனையில் ஆழ்ந்தவளாய் தனக்குள் மூழ்கியபடி அமர்ந்திருந்தாள்...

"விட்டா அப்படியே ஓடி போற மாதிரி ஏன் கதவோரம் உட்கார்ந்திருக்க...? இப்படி உள்ளே வா..." என்றபடி ஜீவா அவளது கையைப் பிடித்து இழுக்க...

ஏதோ யோசனையில் இருந்தவள் அவனது திடீர் செயலில் நிலைக்குலைந்து சரிந்து அவனது நெஞ்சில் மோதி நின்றாள்...

"சாரி... சாரி..." பதட்டத்துடன் எழுந்தவள் அவனை நிமிர்ந்து பார்க்க... அவனோ குனிந்து அவளைத் தான் உற்று பார்த்துக் கொண்டு இருந்தான்...

அவனது பார்வையில் இருந்து அவன் என்ன நினைக்கிறான் என்று அவளுக்குப் புரியவில்லை... ஒருவேளை கோபமாய் இருக்கிறானோ...?

அதில் மனம் சோர்ந்து போய் விலக முயன்றவளின் கை இன்னமும் அவனது கைப்பிடியில் இருந்தது... மெல்ல தனது கையை உருவ முயற்சித்தாள்... ம்ஹூம் உடும்பு பிடி போல் அது இறுக்கமாய் இருந்தது...

தயக்கத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தவள், "கை..." என்க...

அவனோ அவளைப் பார்த்துக் கொண்டே மெதுவே அவளது கையை விடுவித்தான்... அவளோ அவனது பார்வையின் தீர்க்கத்தை எதிர் நோக்கும் சக்தி இல்லாது தலையைக் குனிந்து கொண்டாள்...

அப்போது தான் அவளது கண்களில் பட்டது தனது மாநிற கரத்தின் மீது படிந்திருந்த அவனது வெண்ணிற கை... மீண்டும் மனம் சோர்ந்தது அவளுக்கு...

நிச்சயம் அது அவளுக்குத் தாழ்வு மனப்பான்மையைக் கொடுக்கவில்லை... ஆனால் அவளது கணவனுக்கு இந்தப் பொருத்தம் கோபத்தைக் கொடுக்குமே... அதனால் அவன் தன்னை எந்தளவுக்கு வார்த்தையால் குதறுவானோ என்ற பயத்தில் ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள்...

ஜீவா மனைவியைக் கண்டு கொள்ளாது வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தான்... லேசாகத் திரும்பி அமர்ந்திருந்த அவனது பக்கவாட்டுத் தோற்றம் அத்தனை கம்பீரமாய் இருந்தது...

பட்டு வேட்டி, சட்டையில் நெற்றியில் திருநீறு துலங்க என்றும் அவனைப் பார்த்தறியாத புதிய தோற்றத்தில் இன்று அவனைப் பார்த்ததில் அவளது விழிகள் ஆச்சிரியத்தில் சற்று அகன்றது...

அவளது பார்வை உணர்ந்தோ என்னமோ அவன் சட்டென்று அவளைத் திரும்பி பார்த்தான்... கணவன் இப்படித்

திடுமெனத் திரும்பி பார்ப்பான் என்று அறியாதவள் என்ன செய்வது என்று தெரியாது விழித்தாள்...

'என்ன...?' என்று ஒற்றைப் புருவத்தைத் தூக்கி வினவியவனின் செயலில், 'ஒன்றுமில்லை' என்பது போல் வேகமாய்த் தலையாட்டியவள் தலையைப் படக்கென்று குனிந்து கொண்டாள்... அவளது இதயம் படபடவெனத் துடித்தது...

அவளது செயலில் அவனது முகத்தில் மெல்லிய புன்னகை படர்ந்தது...

அடுத்தச் சில நிமிடங்கள் அமைதியாய் கழிய கார் வீடு வந்து சேர்ந்தது...

மணமக்கள் இருவருக்கும் ஆரத்தி எடுப்பதற்காக உள்ளே சென்ற பூஜா அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த அபிமன்யுவை கண்டு திகைத்து போய் நின்றுவிட்டாள்...

அவளைத் தொடர்ந்து வந்த பெரியவர்களும் எதிர்பாராமல் அங்கு அபிமன்யுவை கண்டு திகைத்து நின்றனர்... நல்லவேளை கிருஷ்ணா மண்டபத்தில் வேலையாய் இருந்ததால் வரவில்லை... இல்லை என்றால் அவன் கோபத்தில் அபிமன்யுவை அடித்துப் புரட்டி எடுத்து இருப்பான்...

எல்லோரையும் கண்டதும் அபிமன்யு தான் அமர்ந்திருந்த சோபாவில் இருந்து எழுந்து நின்றான்... யாரிடமும் ஒரு வார்த்தை பேசவில்லை...

"பூஜா... ஆரத்தி கரைச்சி கொண்டு வா..." ஜெகன் தான் சட்டென்று சூழ்நிலையைக் கையில் எடுத்துக் கொண்டு மகளை ஏவினான்...

ஆனால் அபிமன்யுவிடத்தில் அவன் ஒன்றும் பேசவில்லை...

அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் அமைதியாய் நின்றிருந்தனர்... ருத்ரஸ்ரீ பார்வையால் அபிமன்யுவை எரித்தபடி நின்றிருந்தாள்... அதைச் சளைக்காமல் தாங்கியபடி நின்றிருந்தான் அவன்...

அதில் அவளுக்கு எரிச்சல் வர வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

பூஜா ஆரத்தி எடுக்க வீட்டினுள் வந்தனர் மணமக்கள்... உள்ளே வந்த இருவரும் அங்கிருந்த அபிமன்யுவை கண்டதும் அதிர்ந்து போயினர்... அதுவரை இருவரிடையே இருந்த இணக்க நிலை சட்டென்று மறைந்தது...

'ஐயோ இவனை எப்படி மறந்தேன்...?' சுபிக்ஷா உள்ளுக்குள் கலங்கி தவித்துப் போனாள்...

ஜீவாவோ ஆத்திரத்துடன் அவன் அருகில் போவதற்குள் அவனே இவன் அருகில் வந்தான்...

"நீ பழிவாங்க என் வாழ்க்கை தான் கிடைத்ததா...?" ஜீவா கோபத்துடன் அபிமன்யுவின் சட்டையைப் பிடித்துக் கேட்க...

"ஆமாம்..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறிய அபிமன்யு,

"நீ என்னைத் தொழிலில் அடிச்ச... நான் உன் வாழ்க்கையில் அடிச்சிட்டேன்..." என்றவனின் வார்த்தையில் ஜீவாவின் பிடி இறுகியது...

"கடைசியில் உன் ரசனை இவ்வளவு மட்டமாகி போய்விட்டதே..."

அபிமன்யு சுபிக்ஷாவை கண்களால் சுட்டிக்காட்டி ஜீவாவிடம் கிண்டலாய் கேட்டதில் சுபிக்ஷா நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது... அவ்வளவு அவமானமாக உணர்ந்தாள்...

'லட்டும்மா, லட்டும்மா' என்று பேசியவனின் மனதின் குரோதம் இன்று தான் அவளுக்குப் புரிந்தது...

"டேய்..." என்று எச்சரித்த ஜீவாவின் குரலை புறந்தள்ளியவன்,

"இனி அவள் தான் உனக்கு விதிக்கப்பட்டவள்... பொருத்தம் இல்லாதவளை மணந்து காலம் முழுவதும் அவமானப்பட வேண்டும் என்பது உன் தலைவிதி... ஆனால் அந்தத் தலைவிதியை எழுதியது கடவுள் இல்லை... நான்..." திமிராய் வந்த அபிமன்யுவின் வார்த்தையில் ஜீவா அவனை அடிக்கப் போய்விட்டான்...

இருவருக்கும் இடையில் நுழைந்த ருத்ரஸ்ரீ மகனிடம், "அமைதியாகிரு ஜீவா..." என்று சொன்னவள் அபிமன்யுவிடம்,

"நீ இப்படிப் பண்ணுவன்னு நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலை அபி... அதுவும் இப்போ நீ பேசுற பேச்சு... என்னால் இன்னமும் நம்ப முடியலை..." அதிர்ச்சியும், வருத்தமாய்க் கூறியவளை பார்த்த அபிமன்யு,

"நான் நல்லவன் தான் பெரியம்மா... ஆனால் நல்லவனா இருந்தா இந்த உலகத்தில் என்ன மரியாதை இருக்கு... இதோ உங்க பையனால என் மானம், மரியாதை எல்லாம் போனது தான் மிச்சம்... இவனால் என் தொழிலில் எவ்வளவு நஷ்டம் தெரியுமா... என் தாத்தா ஆசையா ஆரம்பிச்ச தொழில் இப்போ மூடுற நிலைமைக்கு வந்திருக்குன்னா அதுக்குக் காரணம் உங்க மகன்... இப்படிப்பட்டவனை என்னால் எப்படிச் சும்மா விட முடியும்... தொழிலில் இவனை என்னால் ஜெயிக்க முடியலை... அதான் வாழ்க்கையில் அடித்தேன்... இதில் நான் ஜெயிச்சிட்டேன்... இப்ப தான் எனக்குச் சந்தோசமாயிருக்கு..." என்று வன்மத்துடன் கூறிய அபிமன்யுவை வெறுப்புடன் பார்த்தாள் ருத்ரஸ்ரீ...

"நீ நினைச்சது நடந்திருச்சு இல்லையா... இப்போ நீ கிளம்பலாம்... அதை விட்டுட்டு இப்படி என் மகனை, மருமகளை அவமானப்படுத்த வேண்டாம்..." கோபமாய்க் கூறியவளை அமைதியாய் பார்த்தான் அபிமன்யு...

"நிச்சயம் நான் கிளம்பத்தான் போறேன்... அதுக்கு முன்னாடி ஒண்ணு சொல்லிட்டு போறேன்... இந்தக் கல்யாணத்தை மணவறையில் வந்து நிறுத்தியிருக்க என்னால் முடியும்... ஆனால் நான் அப்படிச் செய்யலை... ஏன்னா உங்க மேல் எனக்கு இப்பவும் மரியாதை இருக்கு... அதனால் தான் முந்தின நாள் நிறுத்தினேன்... உங்களுக்கு எல்லாம் யோசிக்க அவகாசம் கொடுக்கத்தான் அப்படிச் செஞ்சேன்... என் பக்கத்து நியாயத்தையும் நீங்க புரிஞ்சிக்கணும் பெரியம்மா..."

அவனது வார்த்தையில் கோபம் அடைந்த ருத்ரஸ்ரீ, "ச்சீ... இனி நீ என்னைப் பெரியம்மான்னு கூப்பிடாதே..." என்று சத்தம் போட...

"அப்போ என் அப்பாவோட முன்னாள் மனைவின்னு கூப்பிடவா..." கேலிக்குரலில் கூறியவனை ஜீவா அடிக்கப் போனான்...

ருத்ரஸ்ரீயோ பேச்சற்று அதிர்ந்து போய் நின்றிருந்தாள்...

"அபி..." ஜெகனது கர்ஜனை குரல் பலமாய் ஒலித்தது...

மனைவியை ஒரு கையால் அணைத்து பிடித்தபடி, "ஸ்ரீ என்னோட மனைவி... தேவையில்லாத வார்த்தைகளை இங்கே வந்து பேசாதே..." என்றவன் வாசலை கைகளால் சுட்டிக்காட்டி,

"வெளியில் போ..." என்று உறுமினான்...

அதைக் கேட்டு அபிமன்யு வேகமாய் வெளியேறிவிட்டான்... ஜீவா தனது தந்தையைத் திகைத்துப் போய்ப்

பார்த்திருந்தான்...

அவன் அறிந்த தந்தை அதிர்ந்து பேசாதவர்... ஆனால் இன்று தந்தை காட்டிய கோபமுகம் அவன் இதுவரை கண்டதில்லை...

"எல்லோரும் என்ன பார்த்துக்கிட்டு இருக்கீங்க... பொண்ணு, மாப்பிள்ளையை அழைச்சிக்கிட்டுப் போய்ப் பால், பழம் கொடுங்க..."

ஜெகனது உத்தரவான குரலில் சூழ்நிலையின் இறுக்கம் சற்று தளர்ந்து அனைவரது கவனமும் மணமக்கள் மீது திரும்பியது...

பூஜையறை சென்று சுபிக்ஷா விளக்கேற்றிய பின் மணமக்கள் இருவரும் வீட்டுப் பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கினர்...

எல்லா நிகழ்வுகளிலும் சுபிக்ஷா கலந்து கொண்டாலும் அவளின் நினைவு அபிமன்யு பேசிவிட்டு சென்ற வார்த்தைகளிலேயே நின்று சுழன்றது...

"அத்தை..." அவளது மனநிலை புரிந்தார் போன்று வினீதா அவளிடம் வந்து ஒட்டி கொண்டாள்...

சிறிது நேரம் சின்னவளின் பேச்சில் கவனத்தைத் திரும்பினாள் சுபிக்ஷா...

பின்பு ஜீவா, சுபிக்ஷா இருவரையும் ஓய்வெடுக்கச் சொன்னதும் இருவரும் இணைந்து மாடிப்படி ஏறினர்... அதுவரை மனதை போட்டு அரித்துக் கொண்டு இருந்த துன்பத்தை வாய் விட்டுக் கணவனிடத்தில் கொட்டிவிட்டாள் சுபிக்ஷா...

"உங்க இரண்டு பேர் சண்டையில் என் வாழ்க்கையைப் பலியாக்கிட்டீங்களே..." வேதனைக் குரலில் கூறியவளின்

குரலில் அவளைச் சீற்றத்துடன் திரும்பி பார்த்தான் ஜீவா...

"இதை நான் சொல்லணும்... என் வாழ்க்கை தான் பலியாகி விட்டது... உன்னைப் போல் ஒருத்தியை கட்டியதால்..."

அவளுக்கு மட்டும் கேட்கும்படியாய் மெல்லிய குரலில் அவன் கூறினாலும் அதிலிருந்த கோபத்தை, கடுமையை அவள் நன்கு உணர்ந்தாள்...

அதில் மேனி அதிர அவள் அப்படியே நிற்க, அவனோ அவளைத் திரும்பியும் பார்க்காது விறுவிறுவெனத் தனது அறைக்குச் சென்றுவிட்டான்...

அவளும் தனது அறைக்குச் சென்றவள் ஓய்வு எடுக்க முடியாமல் மனதில் பல யோசனைகள் ஓட ஜன்னல் வழியே வெளிப்புறத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள்...

பொழுது யாருக்கும் காத்திருக்காமல் கரைந்து சென்று மாலை மங்கி இரவும் வந்தது...

மிதமான ஒப்பனையில் நாத்தனாரை தயார்படுத்திய பூஜா அவளது கரத்தை மென்மையாய் பற்றிக் கொண்டு,

"ஜீவா கொஞ்சமல்ல ரொம்பவே கோபக்காரன் தான்... அவனை மாற்றுவது அத்தனை எளிதான விசயமல்ல... இருந்தாலும் அன்புக்கு அடிபணியாதவங்க யாரும் கிடையாது... நிச்சயம் ஒரு நாள் அவனும் மாறுவான்... சுபி, உன்னோட அன்பு அவனை அடியோடு மாத்தி நம்ம குடும்பத்தோட இணக்கமா இருக்கச் செய்யணும்..."

அண்ணியின் வார்த்தையில் நிமிர்ந்து அவளைப் பார்த்த சுபிக்ஷாவின் கண்கள் கலங்கி இருந்தது...

"எனக்குப் பயமாயிருக்கு அண்ணி..." நடுங்கிய அவளது கையை ஆதரவாய் பிடித்துக் கொண்டவள்,

"எதுக்குப் பயம்...? உனக்கு ஒண்ணு தெரியுமா... உன் கிட்ட பொறுமையா பேசின மாதிரி அவன் யார் கிட்டேயும் இந்தளவுக்குப் பொறுமையா பேசி நான் பார்த்ததில்லை... முதலில் இருந்த ஜீவா இப்போ இல்லை... அதனால் நீ பயப்படாதே..."

அது அவளுக்கும் புரிந்து தான் இருந்தது... கணவனிடத்தில் நிறைய மாற்றங்கள் தெரியத்தான் செய்கிறது... ஆனாலும்...???

"அவங்களைப் பத்தி ஒண்ணும் தெரியாம..."

"போகப் போகத் தெரிஞ்சிக்கலாம்..."

"அவங்களுக்கு என்னைப் பிடிக்காதே..." என்ற நாத்தனாரை பார்க்க பாவமாக இருந்தது பூஜாவிற்கு...

கணவனது மனதிற்குத் தான் பிடிக்காத மனைவி என்கிற விசயம் எந்தவொரு மனைவிக்கும் கொடுமையான விசயம் தான்...

"உன்னைப் பிடிக்காமல் போகுமா... அதெல்லாம் அவனுக்குப் பிடிக்கும்... பிடிக்க வை..." என்றவள் சுபிக்ஷாவை அழைத்துக் கொண்டு வெளியில் வர, அங்கே எல்லோரும் கவலையில் அமர்ந்திருந்தனர்...

விசயம் இது தான்... மாலை வரை அங்கு இருந்த ஜீவாவை இப்போது காணவில்லை... அதைக் கேட்டு அதிர்ந்தது சுபிக்ஷா மட்டுமல்ல... பூஜாவும் தான்...

இப்போது தான் நாத்தனாரை சமாதானப்படுத்தி அழைத்து வந்தாள்... ஆனால் அவள் கூறியது அனைத்தும் பொய் என்பது போல் அவளது சகோதரனின் செயல் இருந்தது...

சுபிக்ஷா கண்ணீரோடு அப்படியே அமர்ந்துவிட்டாள்... அவளுக்கு ஜீவாவை பிடிக்குமா, இல்லை அவனைக்

கணவனாக ஏற்றுக் கொண்டாளா என்று கேள்வி கேட்டால் அவளிடத்தில் பதில் இல்லை தான்...

ஆனால் ஜீவாவின் இந்தப் புறக்கணிப்பில் மனதில் சொல்ல முடியாத வலி ஒன்று எழுந்தது... மனம் மிகவும் கனத்துப் போனது...

"மாமா... மனம் ஒத்துப் போகாமல் கட்டாயப்படுத்திக் கல்யாணம் பண்ணினா இது தான் நடக்கும்... இதுக்குத் தான் அவனை வேண்டாம்ன்னு தலைப்பாடா அடிச்சிக்கிட்டேன்..."

கிருஷ்ணாவிற்குத் தங்கை வாழ்க்கை இப்படியாகி போனதை நினைத்து அப்படி ஒரு கோபம் வந்தது... அதைத் தன் மாமனிடத்தில் அப்படியே காட்டினான்...

மகன் செய்த செயலால் ஜெகனுக்குப் பெரும் தலைக்குனிவாய் இருந்தது... ருத்ரஸ்ரீயோ இறுகி போய் அமர்ந்திருந்தாள்... ஜீவா அவள் கண்முன் இருந்திருந்தால் அடித்துத் துவம்சம் செய்திருப்பாள்... அப்படி ஒரு கோபம் அவளிடத்தில்...

அலைப்பேசியில் மகனை தொடர்பு கொண்ட போதும் அவன் இவர்களது அழைப்பை எடுக்கவில்லை... அது வேறு கோபத்தை இன்னமும் அதிகரித்தது...

அகிலாண்டம் பேரனை நினைத்து கவலைப்படுவதா...? பேத்தியை நினைத்து கவலைப்படுவதா என்று தெரியாமல் துன்பத்தில் உழன்றார்...

"கிருஷ்... கொஞ்சம் பொறுமைப்பா..." என்று மகனை அதட்டிய செல்வா,

"ஜீவாவுக்குக் கொஞ்சம் டைம் கொடுப்போம்..."

"எவ்வளவு நாள் கொடுக்கப் போறீங்க...? வாழ்க்கை முழுவதுமா...?" கிருஷ்ணாவின் கோபக்குரலுக்கு அவனால் பதில் பேச முடியவில்லை...

ரம்யா வழக்கம் போல் அழுது கரைந்தாள்...

எவ்வளவு நேரம் எல்லோரும் அப்படியே விழித்திருக்க முடியும்... எல்லோரும் உறங்க செல்ல பூஜா சுபிக்ஷாவுடன் அவளது அறைக்கு வந்தாள்... ஏற்கெனவே வினீதாவை தங்களது அறையில் தூங்கச் செய்து விட்டபடியால் பூஜா சுபிக்ஷாவுடன் வந்தாள்...

"நான் தனியா இருந்துக்குவேன் அண்ணி..."

"அதுக்கு இல்லை சுபி..." என்று தயங்கிய அண்ணியைக் கண்டு,

"எனக்குக் கொஞ்சம் தனிமை வேணும் அண்ணி... ப்ளீஸ்..." இறைஞ்சுதலுடன் கேட்ட அந்தச் சின்னப் பெண்ணைப் பார்க்கும் போது அவளுக்கு அத்தனை பரிதாபமாக இருந்தது...

தேவையில்லாமல் ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டார்களோ என்று பெரியவர்கள் மீது கோபம் வந்த அதே நேரம் சகோதரனின் மீது அளவில்லாத ஆத்திரம் வந்தது... ஆனாலும் அதை நாத்தனாரிடம் மறைத்தபடி,

"எல்லாம் சரியாகும்..." என்று அவளைத் தேற்றினாள்...

தனது கன்னம் தட்டி தேற்றிய அண்ணியைக் கண்டு விரக்தியாய் சிரித்த சுபிக்ஷா அறைக்கதவை தாழ் போட்டுவிட்டுக் கட்டிலில் அமர்ந்தாள்...

மனதில் தன்னிரக்க உணர்வுகள் கடலலையாய் பிரவாகம் எடுக்க ஓவென்று கத்தி அழ வேண்டும் போலிருந்தது

அவளுக்கு... ஆனால் ஏனோ அழுகை வரவில்லை... அவள் தவறு செய்திருந்தால் தானே அழுகை வரும்... யாரோ செய்த தவறுகளுக்கு அவள் ஏன் அழ வேண்டும்...? அப்படித்தான் நினைக்கத் தோன்றியது அவளுக்கு...

மனதுக்குக் கஷ்டமாக இருக்கும் போது அவள் அடிக்கடி கேட்கும் எம்.எஸ் அம்மாவின் பாடல்களைத் தேர்ந்தெடுத்து ஒலிக்கச் செய்தவள் ஹெட் போனை காதில் மாட்டி கொண்டு கண்களை மூடி அமர்ந்து கொண்டாள்...

அவளுக்குச் சந்தோசமாக இருந்தாலும் சரி, துக்கமாக இருந்தாலும் சரி எல்லாவற்றையும் இசையில் கரைத்து கொள்வாள்... அப்படித்தான் இப்போதும் இசையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள்...

அவளின் மனதை தேற்றுவது போல் எம்.எஸ்சின் தேன்குரலில் பாடல் ஒலித்தது...

"குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்திக் கண்ணா
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா
கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எனக்கு
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்திக் கண்ணா"

பாடலில் அந்தக் கோவிந்தனுக்குப் பதில் தனது கணவனை வைத்து நினைத்து பார்த்தவள் மனதில் 'நீ கண்ணுக்குத் தெரியாமல் எங்கே சென்றால் என்ன...? எனக்கு எந்தக் குறையும் இல்லை...' என்று வீம்பாய் நினைக்கத் தோன்றியது...

அவளை விடத் துன்பப்படுகிறவர்கள் இந்த உலகில் எத்தனையோ பேர்... அவளுக்காவது அன்பான உறவுகளைக் கடவுள் கொடுத்திருக்கிறார்... ஆனால் அந்த

ஆதரவு கூட இல்லாமல் தவிப்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்...

அதை எல்லாம் நினைத்து பார்க்கும் போது தனது நிலை பரவாயில்லை என்றே அவளுக்குத் தோன்றியது...

ஏதோ வீட்டு பெரியவர்களின் விருப்பத்திற்காக இந்தத் திருமணம் நடந்து முடிந்துவிட்டது... அது சரியில்லை என்பதற்காக அழுது கரைந்து வாழ்க்கையைத் தொலைப்பதை காட்டிலும் இசையில் தனது வாழ்க்கையைக் கரைக்க எண்ணினாள் அவள்...

தனது வாழ்க்கைத் துணையாக இசையைக் கருதினாள்...

"பாவயாமி ரகுராமம் பவ்ய சுகுண ராமம் (பாவயாமி)

பாவுக விதரணபரா பாங்க லீலா லஸிதம் (பாவயாமி)

தினகரான்வய திலகம் திவ்யகாதி சுதஸவனா

வனரசித சுபாஹுமுக வதமகல்யா பாவனம்

அனக மீச சாப் பங்கம் ஜனக சுதாப்ராணேசம்

கனகு பித ப்ருகு ராம் கர்வஹரமித சாகேதம் (பாவயாமி)"

கணீர் குரலில் பாடியவளின் குரல் அந்த வீட்டில் தூங்காமல் விழித்துக் கொண்டு இருந்த பெரியவர்களின் காதில் விழுந்து அவர்களது கண்களில் கண்ணீரை வரவழைத்தது...

இரண்டு நாட்கள் அமைதியாகக் கழிந்தது... ஜீவா எங்குச் சென்றான் என்று யாருக்கும் தெரியவில்லை... ராம்குமாரிடம் கேட்ட போது அவன் இங்கு இல்லை, வெளிநாட்டில் இருக்க வேண்டும் என்று சொன்னார்... எங்கே என்று அவருக்கும் தெரியவில்லை... ஆனால் தொழில்கள் மட்டும் ஜீவா இல்லை என்றாலும் அது பாட்டுக்கு நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்...

மூன்றாவது நாள் சித்தாரா, கார்த்திக் அவர்களது வீட்டிற்கு வந்திருந்தனர்... வந்தவர்களை 'வாங்க' என்று சொல்ல முடியாதபடி அங்கே கனத்த சூழ்நிலை நிலவியது... அவர்களும் வரவேற்பை எதிர்பார்த்து வந்த மாதிரி தெரியவில்லை...

"அபி பண்ணிய தப்புக்கு நாங்க மன்னிப்பு கேட்க வந்தோம்... எங்களை மன்னிச்சிருங்க..." இருவரும் கைக்கூப்பி மன்னிப்பு வேண்ட...

"இப்போ மன்னிக்கிற நிலைமையில் நாங்க இல்லை... எங்க மனக்காயம் ஆறும் போது நாங்களே உங்களைப் பார்க்க வர்றோம்... அதுவரை..." என்ற ஜெகன் மேலே பேசாது வேறு எங்கோ பார்த்தான்...

மகன் பண்ணிய முட்டாள் வேலையில் ஜெகனது மனம் மிகவும் வருத்தமுற்று இருந்தது...

அதைக் கேட்டு வேறுவழியின்றி இருவரும் மௌனமாய் வெளியேறினர்...

அவர்கள் சென்றதும் அனைவரது பார்வையும் வினீதாவிற்கு உணவு ஊட்டி கொண்டிருந்த சுபிக்ஷாவின் மீது நிலைத்தது... எதையும் காட்டி கொள்ளாமல் புன்னகை முகமாய் வளைய வரும் அவளைக் கண்டு அவர்களது மனம் கனத்துப் போனது...

எல்லோரின் பார்வையும் தன் மீது விழுவதை உணர்ந்தே இருந்த சுபிக்ஷா முகத்தில் மாறுதல் ஏற்படாமலிருக்கப் பெரிதும் பிரயத்தனப்பட்டாள்...

மனதுக்குள் துக்கம் இருக்கத்தான் செய்கிறது... ஆனால் அதை வெளிக்காட்டி மற்றவர்களைத் துயரப்படுத்த அவள் விரும்பவில்லை...

ஆயிற்று இன்றோடு ஜீவா வீட்டை விட்டு கிளம்பிச் சென்று பத்து தினங்களாகி விட்டது... வீட்டினர் யாரின் அழைப்பையும் அவன் எடுக்கவில்லை... அதற்காக அலைப்பேசியை அவன் அணைத்தும் வைக்கவில்லை... அவனை எப்படித் தொடர்பு கொள்வது என்று தெரியாமல் அனைவரும் விழித்தனர்...

என்றும் போல் இன்றும் பாட்டிக்கு மாத்திரைகளை எடுத்து கொடுத்துக் கொண்டிருந்த சுபிக்ஷாவை பார்த்து அகிலாண்டம்,

"ராசாத்தி... உன் புருசனுக்கு ஃபோன் போட்டு பேசினியா...?"

அதைக் கேட்டு அவள் மனதுக்குள் விரக்தியாய் சிரித்துக் கொண்டாள்... வீட்டினர் அழைப்பையே ஏற்காதவன் அவளின் அழைப்பையா ஏற்று அவளிடத்தில் பேச போகிறான்...

"இல்லை அம்மாச்சி..."

"எனக்காகப் பேசு ராசாத்தி... ராசாவுக்கு ஏதாவது கோபமா இருக்கும்... நீ பேசுனா ராசா திரும்ப வந்திருவான்..."

'யாரு... உங்க பேரனா... அப்படியே மனசு மாறி வந்துட்டாலும்...' மனதுக்குள் நொடித்துக் கொண்டவள் அமைதியாய் இருந்தாள்...

பெரியவள் சின்னவளின் கையைப் பிடித்துக் கொண்டு, "ராசாவை வெறுத்துடாதே கண்ணு..." கண்ணீர் மல்க கேட்டவரை கண்டு அவளுக்கு இரக்கமாக இருந்தது...

"அப்படி எல்லாம் இல்லை அம்மாச்சி... நீங்க மனசை போட்டு குழப்பிக்காதீங்க..."

சின்னவள் பேசியதில் சிறிது சமாதானம் அடைந்தவர், "உன் வாழ்க்கையைக் கெடுத்துட்டேனோன்னு எனக்கு வருத்தமா இருக்கும்மா..." கவலையுடன் கூறியவரை கண்டு கணவன் மேல் தான் அவளுக்குக் கோபம் வந்தது...

"எனக்காகப் பேசும்மா..." என்றவரிடத்தில் சரியென்று தலையாட்டியவள் அறையை விட்டு வெளியில் வந்தாள்...

எப்படி அவனிடம் பேசுவது...? அப்படித் தான் அழைத்தாலும் அவன் தனது அழைப்பை எடுப்பானா...? அவளுக்குப் பெரும் குழப்பமாய் இருந்தது...

அதே சமயம் வீட்டில் அத்தனை பேரின் மகிழ்ச்சியையும் கொன்றுவிட்டு சென்ற அவனிடம் அளவில்லா கோபம் எழுந்தது...

'என்னை மட்டும் தாலிக்கு உண்மையா இருன்னு சொல்லிட்டு இவங்க மட்டும் இப்படி நடந்துக்கலாமா...' மனதுக்குள் பொருமியபடி அறைக்குள் வந்தவள் பெரும் யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுடன் அலைப்பேசியை எடுத்து அவனுக்கு அழைத்தாள்...

அவனது அலைப்பேசி எண் அவளது அலைப்பேசியில் எப்போதும் இருக்கும் வீட்டினர் பெயரோடு... ஆனால் இதுவரை எந்த உபயோகமும் இல்லாது இருந்தது, இன்று அவளுக்கு உபயோகமானது...

என்னே ஆச்சிரியம் முதல் அழைப்பிலேயே ஜீவா எடுத்தான்... ஆனால் அவன் பேசவில்லை...

"ஹலோ..." என்று அவள் சொல்ல... அதற்கு மௌனமே பதிலாகக் கிடைத்தது...

அவன் எடுத்தானா இல்லையா என்று அவளுக்குச் சந்தேகமாக இருக்க, காதில் இருந்து அலைப்பேசியை

எடுத்து பார்க்க அதில் அழைப்பு எடுக்கப்பட்டு இருந்தது... அவசரமாய் அலைப்பேசியை மீண்டும் காதில் வைத்தவள்,

"ஹலோ... ஹலோ.... ஹலோ..." என்று இருபது முறை கத்தியிருப்பாள்...

"கேட்கிறது... சொல்லு..." அவனின் கம்பீரமான குரலில் அவள் பேச்சற்று போனாள்...

அழைப்பது தான் தான் என்பது அவனுக்கு எப்படித் தெரியும்...? பெருத்தச் சந்தேகமாக இருந்தது... ஒருவேளை வேறு யாரோ என்று எண்ணி பேசுகிறானோ என்று நினைத்தவள்,

"நான்..." மேலே அவள் பேசும் முன்,

"மிஸஸ். ஜீவா பேசுறீங்கன்னு தெரியுது... சொல்லுங்க மேடம்..." என்றவனின் குரலில் சிரிப்பு கலந்து இருந்ததோ...

அவனது வார்த்தையில் அவளுக்குத் தான் நெற்றியில் வியர்வை பூக்கள் அரும்பத் துவங்கியது... என்னமோ அசட்டுத் தைரியத்தில் அழைப்பை எடுத்து விட்டாள் தான் ஆனால் என்ன பேசுவது என்று தெரியாமல் விழித்தாள்...

"என்ன விசயம் சொல்லு...?" அவனின் குரல் தன்மையாக ஒலித்ததோ...

'என்ன இது... அவங்க குரலை ஆராய்ச்சி பண்ணவா ஃபோன் எடுத்தேன்...?' தன்னைத் தானே கடிந்து கொண்டவள்,

"என்ன சொல்லச் சொல்றீங்க...? இப்படி நீங்க பாட்டுக்கு சொல்லாம கொள்ளாம கிளம்பி போயிட்டா என்ன அர்த்தம்...? உங்களை நினைச்சு வீட்டில் எல்லோரும் கவலையா இருக்காங்க..."

அதற்கு அவன் பதில் பேசவில்லை... மௌனத்தைப் பதிலாகக் கொடுத்தான்... அவனது மௌனம் அவளது மனதை வாள் கொண்டு அறுத்தது... என்ன தான் இருந்தாலும் அவளும் ஒரு பெண் அல்லவா... கணவனது உதாசீனம் வலியை கொடுத்தது...

"உங்களுக்கு விருப்பம் இருக்கோ இல்லையோ இப்போ நாம கணவன், மனைவி... வீட்டில் எல்லோரும் அந்தக் கண்ணோட்டத்தில் தான் நம்மளை பார்ப்பாங்க... நீங்க இப்படி நடந்துக்கிறது அவங்களுக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா...?"

"சரி அதுக்கு நான் என்ன பண்ணணும்...?"

அவன் கேட்டதில் இப்போது அவள் மௌனமானாள்... அவனிடத்தில் என்ன கேட்பது...?

'என்னை இங்கே இருந்து கூட்டிட்டு போங்க என்றா, இல்லை எனக்கு வாழ்க்கை கொடுங்க என்றா...' இப்படி எல்லாம் கேட்பதற்கு அவளுக்குச் சற்று அவமானமாக, தலையிறக்கமாக இருந்தது...

"சொல்லு நான் என்ன பண்ணணும்...?" மீண்டும் கேட்டவனிடத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"தெரியலை... அதை நீங்க தான் சொல்லணும்..."

திருமணம் செய்தவன் அவன், அவளது கணவன் அவன்... தன்னை என்ன செய்வது என்று அவனே முடிவு செய்யட்டும் என்று அதை அவனின் விருப்பத்திற்கு விட்டுவிட்டாள்...

அதற்குப் பதில் பேசாது அழைப்பை துண்டித்து விட்டான் ஜீவா... அதைக் கண்டு அவளுக்குக் கண்கள் கலங்கியது... முயன்று கண்ணீரை உள்ளிழுத்து கொண்டாள்...

'இதற்கே அழுதால் எப்படி...? இன்னமும் இருக்கிறது... எல்லாவற்றையும் தைரியமாகச் சமாளி சுபி...' மனதை தேற்றி கொண்டாள் அவள்...

ஏனோ யாருமே இல்லாதது போல் ஒரு தனிமை உணர்வு அவளைக் கொன்று தின்றது...

இங்கேயே இருந்தால் தேவையில்லாத யோசனைகள் எழும் என்று அறையை விட்டு வெளியில் வந்தவள் கீழே சென்றாள்...

மாடிப்படி இறங்கும் போது வழக்கம் போல் சுவர் பக்கம் திரும்பாமல் இறங்கியவள் திடுமென யோசித்தவளாய் நின்று கணவனது புகைப்படம் நோக்கி கண்களைத் திருப்பினாள்...

இப்போது அவனது புகைப்படத்தைக் கண்டு அவளுக்குப் பயம் வரவில்லை... மாறாகக் 'கணவன்' என்கிற சொந்தம் வந்தது...

தூரத்தில் இருக்கும் வரை அவனைக் கண்டு பயந்தவள் மனதில் இப்போது அருகில் அவனைக் கணவனாகக் காணும் போது அந்தப் பயம் சற்று விலகியிருந்தது...

அவன் அவளுடன் தன்மையாகப் பேசிய நாட்கள் நியாபகத்தில் வந்தது... அதே போல் திருமண நாளன்று நடந்த நிகழ்வும்... காரில் வரும் போது நிகழ்ந்த நிகழ்வை நினைத்து அவளையும் அறியாது அவளது இதழ்களில் புன்னகை தோன்றியது...

அதற்கு அடுத்து அவன் தன்னை விட்டு நீங்கி சென்றதை நினைத்து பார்த்தவளது மனம், அடுத்து இப்போது எதுவும் பேசாது அழைப்பை துண்டித்த அவனது செயலில் மிகவும் சோர்ந்து போனது...

"ராசா கிட்ட பேசினியா...?" என்று ஆர்வமுடன் கேட்ட பாட்டியிடம் வலிய வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன்,

"பேசினேன் அம்மாச்சி... வர்றேன் சொன்னாங்க..."

அதில் மகிழ்ந்து போன மூதாட்டி அந்த விசயத்தை எல்லோருக்கும் ஒலிபரப்புச் செய்ய அனைவரும் அவளைப் பிடித்துக் கொண்டனர்...

பாட்டியிடம் சொன்னதை அவர்களிடமும் சொல்லிவிட்டு தப்பிப்பதற்குள் அவளுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது...

அவள் கூறியது போல் எல்லாம் அவன் உடனே வரவில்லை... ஆனால் ஒரு வாரம் கழித்து அவனிடம் இருந்து தகவல் வந்தது... அதாவது அவளை மட்டும் மும்பைக்கு அனுப்பி வைக்கும்படி...

அதைக் கேட்டு எல்லோரும் முடியாது என்று பிடிவாதம் பிடித்தனர்...

ருத்ரஸ்ரீ மகனை அலைப்பேசியில் தொடர்பு கொண்ட போது இந்த முறை அவன் அழைப்பை எடுத்தான்...

"ஜீவா... நீ இங்கே வந்தால் என்ன...?" என்று அவள் கேட்ட போது...

அவன் மௌனம் சாதிக்க...

"சுபியை அங்கே அனுப்பி வைக்க முடியாது... அவன் இங்கே வந்து குடும்பம் நடத்துறதா இருந்தா வர சொல்லு..." பக்கத்தில் இருந்த ஜெகன் மனைவியிடம் பேசுவது போல் மகனிடம் கோபத்தைக் காண்பிக்க...

அதற்கு மகனோ, "அப்படி என்றால் அவள் அங்கேயே இருக்கட்டும்..." என்றான் தெனாவெட்டாய்...

"ஜீவா..." ருத்ரஸ்ரீ மேலே பேசுவதைக் கேட்க அவள் மகன் அழைப்பில் இல்லை... அவன் எப்போதோ அதைத் துண்டித்து இருந்தான்...

கடைசியில் ஜீவாவின் விருப்பம் தான் ஜெயித்தது... சுபிக்ஷாவின் வாழ்க்கையை முன்னிட்டு வேறுவழியின்றி எல்லோரும் ஒரு மனதாக அவளை மும்பைக்கு அனுப்பி வைக்க முடிவு செய்தனர்... ராம்குமார் தான் அவளைப் பார்த்துக் கொள்வதாக உறுதி அளிக்க அவளது மும்பை பயணம் உறுதி செய்யப்பட்டது...

என்ன தான் மாமன் மகன் தான் தனது கணவன் என்றாலும் சுபிக்ஷாவிற்குக் கிளம்பும் போது அழுகை முட்டி கொண்டு வந்தது... உறவுகளைப் பிரிந்து செல்வது அவ்வளவு வருத்தமாக இருக்க அழுது கொண்டே தான் கிளம்பினாள்...

விமானத்தில் ஏறுவதற்காக வந்தவளுக்கு அங்கே பெரிய ஆச்சிரியம் காத்திருந்தது... விமானப் பயணம் என்பது அவளுக்கு ஒன்றும் புதிது அல்ல... ஆனால் இந்தத் தனி விமானப் பயணம் மிகவும் புதிது...

கண்கள் அகல விரிய வியப்புடன் அதில் ஏறி அமர்ந்தவளுக்கு ராஜ மரியாதை அளித்தனர் அதில் பணி புரிந்தவர்கள்... உண்மையில் அவள் தன்னை ராணி போல் தான் உணர்ந்தாள்... அதில் பிரிவுத்துயர் கூடச் சற்று பின்னுக்குத் தள்ளப்பட்டது...

அவள் பிரமிப்பில் ஆழ்ந்தபடி அந்தப் பயணத்தை ரசித்து முடிப்பதற்குள் மும்பை வந்து சேர்ந்துவிட்டாள்...

மும்பை வந்துவிட்டதை அறிந்து அவளது மனதில் இத்தனை நேரம் இருந்த இதம் காணாமல் போக, அவள் மனம் பயத்தில் படபடவென அடித்துக் கொண்டது...

அவளது மனதை போல் விமானத்திலிந்து வெளியில் வந்தவள் முகத்தில் வேகமாய் அறைந்த காற்று படபடவென வீசி சென்று அவளது பயத்தை இன்னமும் அதிகரித்தது...

திருவிழாவில் தொலைந்து போன குழந்தை போல் மிரட்சியுடன் படியில் காலை வைத்தவள் கீழே கண்ட காட்சியில் அப்படியே உறைந்து போய் நின்றாள்...

அங்கே விமானப் படி முடியும் தறுவாயில் இடது கையைப் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி, வலது கையில் சிவப்பு ரோஜா பூங்கொத்தை பிடித்துக் கொண்டு, காற்றில் முன்னுச்சி முடி அலைப்பாய, கால்களை அகட்டி வைத்தபடி அலட்சியமாய் நின்றிருந்தான் அவளது கணவன் ஜீவா...

அவனது பார்வை இமைக்காது மனைவியைப் பார்த்துக் கொண்டு இருந்தது...

"மேம்..." விமானப் பணிப்பெண்ணின் குரலில் சுயவுணர்வு அடைந்த சுபிக்ஷா மெதுவே படிகளில் இறங்கினாள் கணவனிடம் இருந்து விழிகளைத் திருப்பாது...

அவளது கால் தரையில் பதிந்ததும் தான் தாமதம் ஜீவா விரிந்த புன்னகையுடன் தனது கையிலிருந்த பூங்கொத்தை அவளிடம் நீட்டி,

"வெல்கம் டு மும்பை..." என்க...

அதில் திகைத்து போய் விழி விரிய நின்றவளை தனது இருகரங்களால் அணைத்து மேலும் அவளுக்கு அதிர்ச்சி கொடுத்தவன்,

"மொச்சைக் கொட்டை கண்ணை விரிச்சு அப்படி என்ன திகைச்சுப் போய்ப் பார்க்கிற...? இருபது நாள் பார்க்காததில் உன் புருசனை உனக்கு அடையாளம் தெரியலையா..." என்றவனின் அணைப்பு இன்னமும் இறுகியது...

அவனது இறுகிய அணைப்பில் அவளது மேனி அச்சத்தில் அதிர்ந்தது...

"எப்படி இருக்க மை டியர் பட்டிக்காடு...?" என்றவனின் கிசுகிசுப்பான குரல் அவளது காதோரம் கிறங்கி போய் ஒலித்தது...

அப்போது அவனது உதடுகள் அவளது காதோரம் உரசி அவளுள் இனம் புரியா குறுகுறுப்பை மூட்டி அவளைச் சிலிர்க்கச் செய்தது அவளது அச்சத்தையும் மீறி...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 12

தன்னை அழைத்துச் செல்ல கணவன் விமான நிலையத்திற்கு வருகை தருவான் என்று சற்றும் எதிர்பார்க்காத சுபிக்ஷா அவனது அணைப்பில் திகைத்து போய் அசையாது நின்றாள் என்றால், அவனது உதடுகளின் மெல்லிய ஸ்பரிசத்தில் மெய் சிலிர்த்து நின்றாள்...

முதன்முறையாய் அருகில் வந்த கணவனது அருகாமை அவளை ஏதோ செய்தது... சிலீரென்ற ஒரு உணர்வு உடலையும், உள்ளத்தையும் ஊடுருவி செல்ல விழி விரித்து அவள் நின்றாள்...

மனைவியை அணைத்திருந்த நிலையை விட்டு விலக மனம் இல்லாமல் விலகிய ஜீவா, மனைவியின் மெய் மறந்த தோற்றத்தை கண்டு அவனையும் அறியாது அவனது உதட்டில் புன்னகை விரிந்தது...

"ஹேய் பேபி..." அவள் கண் முன் தனது வலக்கையை விரித்து வைத்து இங்கும் அங்கும் அவன் ஆட்ட...

அதில் அவள், "ஆங்..." என்று தூக்கத்தில் இருந்து விழிப்பவள் போல் சுயவுணர்வு அடைந்தாள்...

"இது என்ன பட்டிக்காட்டான் மிட்டாய் கடையைப் பார்க்கிற மாதிரி பார்க்கிற...?"

தனது நிலையை எண்ணி கணவன் கேலி செய்வதை உணர்ந்து லஜ்ஜையுற்றவளாய் தலை குனிந்தவள் பின் வெடுக்கென்று அவனை நிமிர்ந்து பார்த்து,

"அது என்ன பட்டிக்காடுன்னு சொல்றீங்க...? என்னைப் பார்த்தா பட்டிக்காடு மாதிரியா தெரியுது..." சிறு கோபம்

துளிர்க்க படபடத்தவளை நிதானமாக ஏறிட்டுப் பார்த்தான் அவள் கணவன்...

அதில் மீண்டும் உறை நிலைக்குச் செல்ல ஆயத்தமான மனதை முயன்று இழுத்துப் பிடித்துக் கொண்டு ‘பதில் சொல்’ என்பது போல் அவனைப் பார்த்தவாறு அழுத்தமாய் நின்றிருந்தாள்...

அவனோ அவளது பார்வையைக் கண்டு கொள்ளாது அவளது தோளில் தனது இரு கையை வைத்து அவளை மேலும் கீழுமாய் அளவிடுவது போல் பார்த்தான்...

இளஞ்சிவப்பு வண்ண விலையுயர்ந்த பருத்தி சேலையில், நீண்ட கூந்தலை தளர பின்னி அதில் மல்லிகைப்பூ வைத்து, உச்சி வகிட்டில் குங்குமம், இரு புருவங்களுக்கு மத்தியில் அரக்கு நிற ஒட்டு பொட்டு, கழுத்தில் அவன் கட்டிய மாங்கல்யம் புது மெருகு குலையாத மஞ்சள் கயிற்றில் ஊஞ்சலாட அவளைப் பார்ப்பதற்கு அப்படியே புது மணப்பெண் போலிருந்தாள்...

மாநிறம் தான் ஆனாலும் அறிவுச்சுடர் ஒளி வீசும் தீர்க்கமான அவளது இரு கயல் விழிகளும், அவளது முகத்தில் தவழும் சாந்தமும், அவளது இதழ்களில் எப்போதும் உறைந்திருக்கும் புன்னகையும் எல்லாம் சேர்த்து எந்தப் பெண்ணிடத்திலும் இல்லாத ஒருவித அழகு அவளிடத்தில் தனித்துத் தெரிந்தது...

ஆனாலும் அவன் அதை அவளிடத்தில் சொல்லாது வேண்டுமென்றே அவளைச் சீண்டும் குரலில்,

"இப்படி முழுநீளப் புடவையைச் சுத்திக்கிட்டு வந்தால் பட்டிக்காடுன்னு சொல்லாமல் என்ன சொல்வதாம்...?" அவனது குரலில் ஏகத்துக்கும் குறும்பு கொப்பளித்தது...

அதில் அவளது முகம் வாடி போனது...

"முதன்முறையா இங்கே வர்றதால எல்லோரும் புடவை கட்ட சொன்னாங்க..." அவளது குரல் சற்று உள்ளே சென்றிருந்தது...

அதைக் கேட்டு அவனுக்கே பாவமாய்ப் போயிற்று... அவள் அருகில் நெருங்கி வந்தவன் தனது கை கொண்டு அவளை இடையோடு சேர்த்து அணைத்தபடி,

"ஆனாலும் நீ இப்படிப் புடவை கட்டி இருப்பது தான் எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்று அவளது வெற்றிடையில் தன் கை கொண்டு அழுத்தம் கொடுத்தபடி கண்சிமிட்டி சிரித்தான் அவன்...

வெற்றிடையில் பதிந்த அவனது கை தொடுகையில் பெண்ணவள் மேனி சிலிர்த்தது என்றால், அவன் கண்சிமிட்டி சிரித்ததில் அவளது உள்ளத்தில் ஏதேதோ உணர்வுகள் வந்து சுனாமியாய்த் தாக்கியது...

"என்னதிது...? யாராவது பார்க்க போறாங்க...?" வெட்கத்தில் முணுமுணுத்தவள் தனது இடையில் இருந்து அவனது கையை விலக்க முற்பட,

"யாரும் பார்க்க மாட்டாங்க பேபி..." என்றவன் பிடிவாதமாய்த் தனது கரத்தை விலக்கவில்லை... அப்படியே தான் அவளை அழைத்துச் சென்றான்...

வெளியில் அவள் தடுமாறினாலும் மனதிற்குள் அவளுக்கும் அவனது செய்கை பிடித்துத் தான் இருந்தது... அவளுக்கே அவளது மனம் போகும் பாதை புரியவில்லை...

கணவனாக அவனைத் தன் மனது ஏற்றுக் கொண்டு விட்டதோ என்று உள்ளுக்குள் சற்று தடுமாறி தான் போனாள்...

விமான நிலையத்தை விட்டு வெளியில் வந்ததும் அவனது கார் அவர்களுக்காகக் காத்திருந்தது... அவளை அதில்

ஏறியமர செய்தவன் ஓட்டுநரை தவிர்த்துவிட்டு தானே காரை எடுத்தான்...

லாவகமாகக் காரை ஓட்டும் கணவனை ஏறிட்டு பார்த்தாள் அவள்... அவளின் பார்வையை உணர்ந்து திரும்பி பார்த்தவன் 'என்ன?' என்று விழிகளால் கேட்க, ஒன்றுமில்லை என்று தலையசைத்தவள் தலையைக் குனிந்து கொண்டாள்...

"அப்புறம்... உன் மாமனார் இங்கே வர்றதுக்கு ஒண்ணும் சொல்லலையா...?" தந்தையைப் பற்றித் தெரிந்திருந்தும் அவளிடம் பேச்சு கொடுக்க வேண்டி அவன் அப்படிக் கேட்டான்...

"மாமா சொல்ல என்னயிருக்கு...? ஒண்ணும் சொல்லலையே..." தாய்மாமனை அவன் மகனிடத்தில் கூட விட்டு கொடுக்காது மாமனை தாங்கி பேசினாள் அந்த அன்பு மருமகள்...

"எனக்குத் தெரியும் அவர் என்ன சொல்லியிருப்பார்ன்னு..." என்றவன், "அடேங்கப்பா மாமனாருக்கு அவ்வளவு சப்போர்ட்டா... மாமனார் பெத்த மகனுக்கு இந்தளவுக்குச் சப்போர்ட் பண்ணுவீங்களா மேடம்..." கிண்டல் குரலில் அவன் வினவ...

"சப்போர்ட் பண்ணாமலா இங்கே கிளம்பி வந்திருக்கேன்..." என்றவளை கண்டு அவனது முகம் மலர்ந்தது...

"இந்தச் சப்போர்ட் எப்போதும் இருக்கணும் பேபி... எந்த நிலையிலும் மறந்திறாதே..." என்றவனின் குரலில் என்ன இருந்தது என்று அவளுக்குத் தெரியவில்லை...

ஆனாலும் அவனது குரலுக்கு மறுப்பு தெரிவிக்க அவளுக்குத் தோன்றவில்லை...

"ம்..." என்றாள் சம்மதமாய்...

சிறிது தூரம் சென்றதும் தான் அதைக் கவனித்தாள் அவள்... அவர்களது காருக்கு முன்னும், பின்னும் பாதுகாப்புக்காக இரு வண்டிகள் பின்தொடர்ந்து வருவதை...

அதைக் கண்டதும் அவளது முகத்தில் புன்னகை வந்தமர்ந்தது... அதே புன்னகையுடன் அவனைத் திரும்பி பார்த்தவள்,

'இவங்க பண்ற அலப்பறைக்கு அளவே இல்லையா...?' என்று மனதில் கேலியாய் நினைக்க...

"என்னன்னு சொன்னேன்னா நானும் கூடச் சேர்ந்து சிரிப்பேன்ல..." அவளின் மனதினை படித்தவன் போல் அவன் கேட்க...

அதில், "அச்சச்சோ..." என்று அவள் வாய் விட்டு பதறினாள்... பின்னே அவள் மனதில் இருப்பதைக் கூறினால் அவன் அவளைக் குதறி எடுப்பது நிச்சயம்...

"அப்போ ஏதோ இருக்கு... சொல்லு... சொல்லு..." என்று அவன் அவளை வற்புறுத்த... அதில் வேறுவழியின்றித் தான் மனதில் நினைத்ததை அவள் வாய்விட்டு கூறிவிட்டு பயத்துடன் அவனது முகத்தைப் பார்த்தாள்...

ஆனால் அவனோ அவளைக் குதறிவிடுவதற்குப் பதிலாகப் பலமாய் வாய்விட்டுச் சிரித்தான்... அதைக் கண்டு அவளது பயம் அகன்று மனதில் நிம்மதி தோன்றியது...

"நீங்க திட்டுவீங்கன்னு நினைச்சேன்..." மனைவியின் முகத்தில் தோன்றிய நிம்மதியை கண்டு அவனது முகம் மென்மையானது...

"நியாயமா கோபப்பட்டு இருக்கணும்... ஆனா கோபப்படத் தோணலை..." என்றவனின் முகத்தில் இருந்த புன்னகை மாறவில்லை...

அவனின் இந்தப் புன்னகை முகம் அவளுக்குப் புதிது... விழி விரித்து அதிசயித்து அவனைப் பார்த்தாள் அவள்...

கடல் போன்று அகன்ற அவளது விழிகளில் விரும்பி மூழ்கிப் போக இருந்தவன் பின் சுதாரித்துக் கொண்டு சாலையில் தன் கவனத்தைப் பதித்தான்...

"நான் கேட்டதுக்கு நீங்க பதில் சொல்லலையே...?"

இதற்கு என்னவென்று பதில் சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை... அவனுக்கு இருக்கும் உயிர் அச்சுறுத்தலை சொன்னால் பயந்து விடுவாளோ என்று அவனுக்குப் பயமாக இருந்தது... அதனால் சிரித்தபடி,

"கவர்மெண்ட்ல கொடுக்கிறதை ஏன் வேண்டாம்ன்னு சொல்லணும்...?" என்று சமாளித்து மழுப்பினான்...

"நாட்டில் எத்தனையோ செலவுகள் இருக்கு... இதில் தனிநபருக்காக இப்படிச் செலவு பண்றதை என்ன சொல்றது...? இது கொஞ்சமல்ல ரொம்பவே ஓவர் தான்..." என்றவள் உதட்டில் நமட்டுச் சிரிப்பு நெளிந்தது...

மனைவியின் வார்த்தையில் அவளைத் திரும்பி பார்த்தான் அவன்... அவனுக்குத் தெரியும் அவளின் எளிமையான வாழ்வை பற்றி... அவனது வீட்டாரை பொறுத்தவரை என்ன வசதியிருந்தாலும் ஆடம்பரமில்லாத மிகவும் எளிய வாழ்க்கை வாழ்பவர்கள்... எந்தவொரு புகழையும், பகட்டையும் தங்கள் பக்கம் அண்ட விடாதவர்கள்... அப்படிப்பட்டவர்கள் இடையே வளர்ந்தவள் இப்படித்தான் யோசிப்பாள்...

ஆனால் அவனின் நிலை வேறு அல்லவா... அந்தஸ்தில் அவர்களை விடப் பல மடங்கு உயரத்தில் அல்லவா அவன் இருக்கிறான்... ஏனோ அதை அவளிடத்தில் சொல்ல பிடிக்கவில்லை அவனுக்கு...

தன்னை ஒரு தொழிலதிபனாக மனைவியிடத்தில் அடையாளம் காட்டி கொள்வதை விட, நல்ல கணவனாக அடையாளம் காட்டவே எண்ணினான் அவன்...

"ஹலோ... இது கவர்மெண்ட் செலவு கிடையாது... நான் தான் செலவு பண்றேன்..." என்றவன்,

"இப்போ நீ மிஸ். சுபிக்ஷா செல்வகுமார் இல்லை... மிஸஸ். ஜீவா... என்ன புரிந்ததா...? இப்போ உங்க லெவல்லே வேறங்க மேடம்..."

அவன் அப்படிச் சொன்னதும் அவளது மலர் முகம் வாடி போனது... அவனுக்கும், அவளுக்கும் இடையில் இருக்கும் அந்தஸ்து பேதம் இப்போது சீனப் பெருஞ்சுவராய் இடையில் நிற்க, அதைத் தாண்ட முடியாமலும், தாண்டி வர முடியாமலும் அவன் ஏற்படுத்திய காயம் மனதில் ரணமாய் வலிக்க மௌனத்தைத் தத்தெடுத்துக் கொண்டு வெளிப்புறம் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள் அவள்...

திடீரென்ற அவளது அமைதியில் அவளைத் திரும்பி பார்த்தவன், "இது நீ சொன்னது தான் சுபி... என்னில் பாதி நீ... என்னுடையது எல்லாம் உன்னது... என்னுடையது என்றால் என்னையும் சேர்த்து..."

அவனது வார்த்தையில் வேடிக்கை பார்ப்பதை விட்டு விட்டு அவனைத் திரும்பி பார்த்தவள் அவனது பார்வையில் தெரிந்த பொருளின் அர்த்தம் புரியாது அப்படியே ஸ்தம்பித்தாள் அவள்...

உயிரை உறிஞ்சும் பார்வையாக இருந்தது அவனது பார்வை... ஏன், எதற்கு இப்படி ஒரு பார்வை...? என்று தெரியாது விழித்தாள் அவள்...

"இப்பவாவது உனக்கு இதைப் போட்டுக்கணும்ன்னு தோணுச்சே..."

மொட்டையாக அவன் கூறியதும் அவள் திருதிருத்தாள் என்ன சொல்கிறான் என்று புரியாது...

"இதைச் சொன்னேன்..." என்றவன் கை உயர்ந்து அவளது கழுத்தை சுட்டிக்காட்டியது...

அன்று அவன் பரிசாகக் கொடுத்த விலையுயர்ந்த வைர கழுத்தணியைத் தான் இப்போது அவள் அணிந்திருந்தாள்...

கிளம்பும் போது நகை அணிவதற்காக நகைப்பெட்டியை எடுக்கும் போது அதில் ஜீவா கொடுத்த நகையும் சேர்ந்து இருந்தது... எப்போது அதை அவளது நகைகளோடு வைத்தான் என்று அவளுக்குத் தெரியவில்லை...

அன்று அவள் அதை மறுத்த போது முகம் வாடி போன அவனது முகம் அவளது நியாபகத்தில் எழ, அவனைக் காண வரும் இன்று அவனுக்காக அதை அணிந்து கொண்டாள்... அதன் பின் இப்போது கணவன் கேட்கும் வரை அதை மறந்தும் போயிருந்தாள்...

அதைக் கணவன் கவனித்துக் கேட்டதில் அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது...

"நான் இப்போ மிஸஸ். ஜீவாவாக்கும்... அதற்கு ஏத்தார் போல் இருக்க வேண்டாமா...?" என்றவளின் இதழ்களோடு சேர்த்து அவளது கண்களும் சேர்ந்து சிரித்தது அத்தனை அழகாக, கவிதையாக இருந்தது...

அதை உணர்ந்தவன் தனது விழிகளை அவள் புறம் இருந்து அகற்ற மிகுந்த சிரமப்பட்டான்...

"அழகாயிருக்கா...?" அந்த நகையைக் கையில் தாங்கியபடி அவள் அவனைப் பார்த்து கேட்க...

அதில் அவனது பார்வை அந்த நகையை விடுத்து அவளது முகத்தில் அழுத்தமாய்ப் படிந்து பின் நிதானமாய்,
"ரொம்ப..." என்றவனின் குரல் குழைந்திருந்ததோ...?

அந்தக் குரல் அவளுள் ஜில்லென்று குளுமையாய் பரவி அவளைத் தடுமாறச் செய்தது... அதில் கணவனது முகத்தைப் பார்க்க இயலாது தன் கை விரல்களை அவள் ஆராய்ச்சி செய்ய, அவனோ அவளின் மனநிலை புரிந்தார் போன்று மேலும் அவளைத் தொந்திரவு செய்யாமல் காரை ஓட்டினான்...

வீடு வந்ததும் அவள் இறங்க அவளைக் கைப்பற்றி அவன் அழைத்துச் சென்றான்... ராம்குமார் வீட்டு வாயிலில் இவர்களுக்காகக் காத்திருந்தார்...

"வாம்மா சுபிக்ஷா..." என்று பேரனின் மனைவியை வரவேற்றவர் உள்ளே திரும்பி,

"மதுரா ஆரத்தி கொண்டு வா..." என்று உத்தரவிட...

அங்கு நீண்ட நாளாக வேலை செய்யும் மதுரா ஆரத்தி தட்டுடன் வந்தவர் அவளைப் பார்த்து புன்னகைத்து,

"வாங்கம்மா..." என்று அழகான தமிழில் வரவேற்றவர் ஆரத்தியை இருவருக்குமாய்ச் சேர்த்துச் சுற்றினார்...

ஆரத்தி சுற்றும் போது தனது இடக்கையால் மனைவியின் தோளோடு அணைத்திருந்த ஜீவா அதற்குப் பின்னும் தனது கையை விலக்காமலேயே அவளை வீட்டினுள் அழைத்துச் சென்றான்...

பேரனின் முகத்தில் இருந்த மகிழ்ச்சி, அவனது செயல் எல்லாம் பெரியவர்க்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது... இத்தனை நாளாய் இருந்த தனது சந்தேகம் வீண் என்றே அவருக்குத் தோன்றியது...

நேரே பூஜையறையில் விளக்கேற்றி சாமி கும்பிட்ட சுபிக்ஷா தாத்தாவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க, அவளுடன் சேர்ந்து அவசரமாய்த் தானும் தாத்தாவின் பாதம் பணிந்தான் பேரன்...

அன்று போல் இன்றும் தனது தோளோடு அவனது தோள் உரசி செல்ல தன்னோடு சேர்ந்து குனிந்தவனைக் கண்டு அவள் திகைப்பாய் பார்க்க, அவனோ குனிந்திருந்த நிலையிலேயே அவளைத் திரும்பி பார்த்துக் குறும்பு சிரிப்புடன் கண்சிமிட்டினான்...

அதில் அவள் தான் அதிர்ந்து போய் வேகமாய் விழிகளைத் திருப்பிக் கொண்டாள்...

"பதினாறு பெற்றுப் பெருவாழ்வு வாழணும்..." என்று ஆசிர்வதித்த ராம்குமார் வார்த்தையில் எழுந்து நின்ற ஜீவா மனைவியின் காதில் குனிந்து,

"பதினாறு போதாதே... எனக்கு வீடு நிறையக் குழந்தைகள் வேணுமே..." என்றவனின் ரகசிய குரலில் விதிர்த்து போய் அவனை நோக்கினாள் அவனது மனையாள்...

"உண்மை தான் பேபி... தனியாவே வாழ்ந்து பழகிட்டேனா... இப்போ எல்லாம் தனிமை ரொம்பப் போர் அடிக்குது... கலகலப்பான குடும்பச் சூழல் வேணும்ன்னு மனசு ஏங்குது..."

கணவனது ஏக்கமான குரல் பெண்ணான அவளது தாய் மனதை தொட அவனது கையை ஆறுதலாகப் பிடித்துக் கொண்டவள்,

"ஆயிரம் குழந்தைகள் போதுமா..." என்று நமட்டுச் சிரிப்புடன் கூறி தானும் அவனுக்குச் சற்றும் சளைத்தவள் இல்லை என்பதை நிரூபித்தாள் அவனது மனையாட்டி...

சிறியவர்கள் ரகசியமாய்த் தங்களுக்குள் பேசி சிரித்துக் கொள்வதைக் கண்டு இங்கிதம் அறிந்து ராம்குமார் சிரித்தபடி அங்கிருந்து அகன்று சென்றுவிட்டார்...

"நீ இவ்வளவு பேசுவியா...?" என்றவனது விழிகள் இரை தேடும் கழுகாய் அவளது இதழ்களையே வட்டமிட... அதில் லஜ்ஜையுற்றவள் தலை குனிந்து கொண்டு,

"அப்படி என்ன என்னைப் பற்றி உங்களுக்கு முழுதாகத் தெரியும்...?" முணுமுணுத்தவளை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டே,

"தெரிந்து கொள்வதற்குத் தானே கல்யாணம் பண்ணியிருக்கிறேன்..." என்றவனது குரலில் தாபம் மட்டுமே நிறைந்து வழிந்தது...

அதில் வெட்கம் பிடுங்கி தின்க அவசரமாய் அங்கிருந்து நகர்ந்தாள் அவள்... அவளது வெட்கம் அவனுக்கு உல்லாசத்தைக் கொடுக்க வாய்விட்டு சிரித்தபடி மனைவியைப் பின் தொடர்ந்தான் அவன்...

"ஜீவா... சுபிக்கு வீட்டை சுத்தி காட்டுப்பா..." என்ற ராம்குமார் தனது அறைக்குச் சென்றார்...

தாத்தா போவதை பார்த்து கொண்டிருந்தவன், "தாத்தா தனியாவே இருந்ததாலோ என்னமோ அவருக்குன்னு ஒரு டைம் டேபிள் போட்டு வாழ பழகிக்கிட்டாரு... இப்போ நியூஸ் பேப்பர் படிக்கப் போறாரு..."

அவரைப் பற்றித் தெரிந்தவனாய் கூறிய ஜீவா மனைவியைக் கைப்பிடித்துத் தன்னருகில் அமர வைத்து, "நீ டயர்டா இருக்கிற மாதிரி இருக்கே... ஜூஸ் ஏதாவது குடிக்கிறியா...?"

அவனது அன்பான அக்கறை அவளது அடிமனது வரை சென்று தித்தித்தது... காலையில் கிளம்பி அவனைச்

சந்திக்கும் வரை திக்திகென்று பயத்தில் துடித்த மனம் இப்போது எல்லையில்லாத நிம்மதியில் ஆழ்ந்திருப்பதை அவள் உணர்ந்தாள்...

இது தான் திருமணப் பந்தமோ... இது தான் கணவன் உறவுக்கான அர்த்தமோ...!!! அது அவளுக்குத் தெரியவில்லை... ஆனாலும் மனம் ஆழ்கடல் போல் அமைதியாய் இருந்தது...

"ம்... சரி..." என்று அவள் தலையாட்ட அவன் மதுராவை அழைத்து அவளுக்கு மாதுளம்பழ பழச்சாறை கொண்டு வர சொல்ல, அதைக் கேட்டு அவள் ஆச்சிரியமாய் அவனைப் பார்த்தாள்...

தனக்குப் பிடித்த பழச்சாறு கணவனுக்கு எப்படித் தெரியும் என்று...

அவளது பார்வையை உணர்ந்தார் போன்று அவன், "கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கேட்டியே உன்னைப் பத்தி எனக்கு என்ன தெரியும்ன்னு...? இப்போ ஓகேவா...?"

இரு புருவங்களையும் தூக்கி அவளைப் பார்த்து தலையாட்டியபடி வினவியவனைக் கண்டு அவள் தான் பேச்சற்று போனாள்...

அதற்குள் மதுரா பழச்சாறு கொண்டு வந்து கொடுக்க அதை வாங்கிப் பருக போன சுபிக்ஷா, "உங்களுக்கு...?" என்றபடி அவனிடம் அதை நீட்ட...

அதைத் தடுத்து அவளின் வாயருகே கொண்டு சென்றவன், "ம்ஹூம் இது வேண்டாம்... உன் கையால் காபி போட்டுக் கொடுப்பது என்றால் ஓகே..." என்றவனது கண்களில் அன்று அவள் கையால் குடித்த காபியின் ரசனை இன்று தெரிந்தது...

"இதோ இப்பவே..." என்றபடி எழுந்தவளை பிடித்து மீண்டும் அமர வைத்தவன்,

"நீ ஜூஸ் குடிச்ச பிறகு..."

அவன் சொன்னதும் தான் தாமதம் ஒரே மூச்சில் கையிலிருந்த பழச்சாறை குடித்து முடித்து விட்டு, மதுரா சென்றதை வைத்து தானாகக் கணித்து நேரே சமையலறையை நோக்கி சென்றாள் சுபிக்ஷா...

நீண்ட பின்னலாட, புடவைத் தலைப்பை இடுப்பில் சொருகி கொண்டு இயல்பாய் நடந்து சென்றவளை பின் தொடர்ந்தது அவனது இமைக்காத விழிகள்...

அவனது அந்த விழிகளில் தான் எத்தனை விதமான ரசனையான உணர்வுகள்...!!!

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவள் கொண்டு வந்து கொடுத்த காபியை ஒரு மடக்கு பருகியவன், "ரியலி ஐ மிஸ் யுவர் காபி..." என்று சொல்ல அதில் அவள் முகம் மலர்ந்து அவனை ஆச்சிரியமாய் நோக்கினாள்...

உலகம் முழுவதும் சுற்றி வருபவன் பருகியிராத காபியையா அவள் போட்டு கொடுத்து விடப் போகிறாள்...?

ஆதவனைக் கண்டு மலரும் கமலம் போன்று தன்னைக் கண்டு முகம் மலர்ந்து நிற்கும் மனைவியின் கையைப் பிடித்து இழுத்துத் தன்னருகில் அமர்த்திக் கொண்டவன் அவளைத் தன் கையணைவில் கொண்டு வந்து அவள் புறம் சாய்ந்தபடி,

"அன்ட் யூ ஆல்சோ பேபி..." என்றவனின் குரலில் கணவனுக்கான தவிப்பு அப்பட்டமாய்த் தெரிந்தது...

அவனது தவிப்பை உணர்ந்தவள் திகைத்து போய் அவனை ஏறிட்டு பார்த்தாள் 'இது எப்படிச் சாத்தியம்' என்று... பிறகு

தன்னைப் போல் அவனும் நினைத்திருப்பான் போலும் என்று மனதில் எண்ணி கொண்டாள்...

"யாராவது வர போறாங்க...?" என்று அவனது கையணைவில் நெளிந்தவளை கண்டு சிரித்தவன்,

"நான் சொல்லாம யாரும் வர மாட்டாங்க..." என்றவன் அப்போதும் அவளை விடவில்லை...

அவன் காபி முழுவதும் பருகி முடிக்கும் வரை அந்த நிலை தொடர்ந்தது... அதன் பின்னரே அவளை வீட்டை சுத்தி பார்க்க அழைத்துச் சென்றான்...

அவர்களது சென்னை வீடே சற்று பெரியது தான்... ஆனால் அதை விட இந்த வீடு இன்னும் பெரியதாய், பிரமாண்டமானதாய் இருந்தது... ஒவ்வொரு மூலையிலும் பணத்தின் செழுமை தெரிந்தது...

கண்கள் அகல ஒவ்வொன்றையும் ஆர்வமாய்ப் பார்த்துக் கொண்டு வந்தவளை கண்டு ஜீவாவின் முகம் மலர்ந்தது... அங்கிருந்த ஒவ்வொரு பொருளையும் சுட்டிக்காட்டி அது எல்லாம் எங்கு, எப்போது வாங்கியது என்பதை விளக்கி கொண்டு வந்தான்...

"தாத்தாவோட வீடு சிட்டிக்குள் இருக்கு... எனக்கு அமைதி வேணும்ங்கிறதுக்காகக் கொஞ்சம் தள்ளி வந்து இந்த வீட்டை கட்டினேன்..."

அது அவளுக்கும் தெரியும்... அந்த வீட்டிற்கு அவள் சில சமயம் வந்திருக்கிறாள்...

கடைசியாய் அவன் அழைத்துச் சென்றது அவர்களது அறைக்கு...

"உங்க ரூமுக்கு வாங்க மேடம்..." ஆங்கிலேய பாணியில் இடை வரை குனிந்து அவளை வரவேற்றவனைக் கண்டு

அவளுக்குச் சிரிப்பு வந்தது...

அவன் அதை 'என் ரூம்' என்றோ, 'நம்ம ரூம்' என்றோ கூறவில்லை... அதில் கூட அவளை முன்னிலைப்படுத்தித் தான் கூறினான்...

அறையின் உள்ளே முன்பகுதியில் வரவேற்பறை அதை ஒட்டி சிறிய அலுவலக அறை, வரவேற்பறையைத் தாண்டி உள்ளே சென்றால் படுக்கையறை என்று அழகாக, சுத்தமாக இருந்தது அவனது தனியறை...

படுக்கையறைக்குச் சென்றதும் ஜீவாவின் விழிகள் ஒருவித ஆர்வத்துடன் மனைவி மீது படிந்தது... அவனது ஆர்வத்தைப் போன்ற ஆர்வம் ஏதும் அவளிடத்தில் இல்லாது போகவும் அவனது மனம் சற்று ஏமாற்றம் அடைந்தது...

கணவனின் வேறு ஆர்வத்தை அறியாத அவளோ அறையை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தாள்... அதில் ஒருவித ரசிப்புத் தன்மை இருந்ததே ஒழிய வேறுவித உணர்வுகள் சற்றும் இல்லை...

பெருமூச்சை ஆழ இழுத்து விட்டுத் தன்னைச் சமன்படுத்திக் கொண்டவன் அவளைப் பால்கனிக்கு அழைத்துச் சென்றான்... அங்குச் சிறு தோட்டமும் அதன் நடுவே பெரிய ஊஞ்சலும் போடப்பட்டு இருந்தது... அதைக் கண்டதும் அவளது முகம் மலர அவனது முகமும் சேர்ந்து மலர்ந்தது மனையாளை கண்டு...

"ரொம்ப அழகாயிருக்கு..."

அவளது வார்த்தையில் ஏதோ விருது கிடைத்தது போல் அவன் பூரிப்புடன் நின்றிருந்தான்... அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது அவளது வார்த்தையில்...

"உள்ளே வா..." என்று மீண்டும் உள்ளே அழைத்துச் சென்றவன் அறையிலிருந்த எல்லா அலமாரியையும் திறந்து காட்டி எதெது எங்கு இருக்கிறது என்று விளக்கி கூறிவிட்டு,

"நமக்குள் எந்த ஒளிவு மறைவும் கிடையாது... நீ எதை வேணும்ன்னாலும் எடுக்கலாம், பார்க்கலாம்... உனக்கு முழு உரிமை இருக்கு... ஆனா எடுத்த இடத்தில் அப்படியே வச்சிடணும்..."

அதை அவன் அறையைச் சுத்தமாய், நேர்த்தியாய் வைத்திருப்பதிலேயே அவளுக்குப் புரிந்து போனது...

அங்கு அவர்களது வீட்டில் ஆண்கள் யாரும் இப்படிக் கிடையாது... ஆனால் இவன் இப்படி இருப்பது கண்டு அவளுக்கு ஆச்சிரியமாக இருந்தது... அப்போது தான் ஒன்று உறைத்தது அவளுக்கு... அதை அவனிடத்தில் அப்படியே கேட்டும் விட்டாள்...

"நீங்க ட்ரிங்க்ஸ், சிகரெட் எல்லாம் யூஸ் பண்ண மாட்டீங்களா...?"

அங்கு அவளது அப்பா, சகோதரன் இருவரும் அளவோடு தான் என்றாலும் மது, சிகரெட் குடித்துப் பார்த்திருக்கிறாள்... மாமாவும் அவரது திருமணத்திற்கு முன் அப்படிப்பட்ட பழக்கம் உள்ளவர் தான்... அதனால் தான் அவள் அப்படிக் கேட்டாள்...

ஏனெனில் கணவனது அறையில் அந்த மாதிரி பொருட்கள் எதுவும் காணவில்லை...

கணவனிடம் இருந்து பேச்சு வராது போகவும் அவனை ஏறிட்டு பார்த்தவள் அவனது ஆழ்ந்த பார்வையில் அவளுக்கு உள்ளுக்குள் கலவரப் பந்து உருள ஆரம்பித்தது...

யாரிடமும் இந்தளவுக்குச் சட்டென்று வாய் விடாதவள் அவனிடத்தில் எப்படி அப்படிக் கேட்டாள் என்று அவளுக்கே தெரியவில்லை... அவனைப் பார்த்ததில் இருந்து அவனிடத்தில் மட்டும் தனது உணர்வினை வெளிப்படையாய் வெளிப்படுத்தி வருவதை ஆச்சிரியமாய் எண்ணி பார்த்து கொண்டாள்...

இப்போதும் அவனிடத்தில் யாரோ என்ற எண்ணம் வரவில்லை... நெடுநாள் பழகியது போன்ற ஒரு உறவு தான் தோன்றுகிறது...

ஒருவேளை மாமன் மகன் என்ற உறவால் ஏற்பட்ட உணர்வாக இருக்குமோ...? இப்போது அவன் மாமன் மகன் மட்டுமில்லாது தனது கணவனும் அல்லவா... அதனால் இருக்குமோ...?

அப்படித்தான் இருக்க வேண்டும் என்றே அவளுக்குத் தோன்றியது... ஆனால் அவளின் ஆழ்மனதின் ஆழத்தை அவள் அந்நேரம் ஆராய்ந்து பார்க்கவில்லை...

"சாரி..." மெதுவே வந்தது அவளது மன்னிப்பு வார்த்தை...

"என்னை என்னன்னு நினைச்சிக்கிட்டு இருக்க...? என்னைப் பலகீனமாக்குவது எதையும் நான் என் கிட்டே நெருங்க விடுவது இல்லை..." என்றவனின் அமர்த்த குரலில் ஏதோ செய்தி இருந்ததோ... இல்லை அவளுக்குத் தான் அதைப் புரிந்து கொள்ளத் தெரியவில்லையோ...

"சாரி..." என்று தலை குனிந்தபடி மீண்டும் மன்னிப்பு கேட்டவளின் அருகே சென்றவன் ஒற்றை விரலால் அவளது முகத்தை நிமிர்த்தி,

"இதில் மன்னிப்பு கேட்கிறதுக்கு ஒண்ணும் இல்லை... மாம்க்கு பிடிக்காததால நான் பழகலை... இப்போ உனக்குப் பிடிச்சா பழகிக்கிறேன்... மனைவி சொல்லை தட்ட கூடாது தெரியுமா...?"

குறும்பு குரலில் கூறியவனின் வார்த்தையில் மனதில் நிம்மதி எழுந்தது அவளுள்...

இதுநாள் வரை அவளைக் காயப்படுத்தியவன் தான் அவளது கணவன்... ஆனாலும் அவன் வருத்தத்தைப் பார்க்கும் போது அவளுள் வருத்தம் எழுதுவதைத் தடுக்க முடியவில்லை... இது தாலிக்கயிற்றின் மகிமையா... இல்லை காலம் காலமாய்க் கூறும் கணவன் என்ற பந்தமா... எது என்று அவளால் உறுதியாகக் கூற முடியவில்லை...

ஆனால் அவனின் வருத்தம் அவளைப் பெரிதாய்ப் பாதிக்கிறது... அது மட்டும் அவளுக்கு நன்கு புரிந்தது...

"என்ன பழகிக்கவா...?"

அவனது வார்த்தையில் தன் நினைவு கலைந்தவள், "என்ன பழகிக்கணும்...?" என்றாள் புரியாதவளாய்...

மீண்டும் அவன் தான் கூறியதை கூற, "ஐயோ வேண்டாம்..." என்று பதறியபடி மறுத்தவளை கண்டு அவனுள் சிரிப்பு குமிழிட்டது...

"உனக்கு வேண்டாம்ன்னா எனக்கும் வேண்டாம்..." நமட்டுச் சிரிப்புடன் கூறியவனைக் கண்டு அவள் 'பே' என்று விழிக்க, அவளது தோளை தட்டி,

"சாப்பிட போகலாம் வா..." என்று அவன் அழைத்துச் சென்றான்...

இருவருக்குமே மனதில் அப்படி ஒரு நிறைவு இந்த இணக்க நிலையை நினைத்து... இது காலம் முழுவதும் தொடர வேண்டும் என்பதே இருவரின் மன வேண்டுதலாக இருந்தது...

அவர்கள் இருவருக்காக ராம்குமார் காத்திருக்க மூவரும் உணவு மேசையை அடைந்தனர்... ஆண்கள் இருவரும் அமர அவர்களுக்குப் பரிமாறப் போனவளை கை நீட்டி தடுத்தவன்,

"நீயும் உட்காரு... சேர்ந்து சாப்பிடலாம்..." என்க...

"இல்லை..." என்று இழுத்தவளை...

"மூச்... ஒன்றும் பேச கூடாது..." என்று அதட்டியவன் அவளுக்குத் தானே உணவு பரிமாறி அவளை உண்ண வைக்க...

அதை ஆச்சிரியத்துடனும், சந்தோசத்துடனும் பார்த்துக் கொண்டு இருந்தார் ராம்குமார்... அதை விடப் பேரனிடம் சகஜமாக உரையாடும் சுபிக்ஷாவை கண்டு அவருக்குப் பெரும் ஆச்சிரியமாக இருந்தது...

"நீ ரொம்பப் பயந்த சுபாவம்ன்னு நினைச்சேன்ம்மா..." என்றார் மனதை மறைக்காமல்...

"நானும் அப்படி நினைச்சு தான் ஏமாந்து போயிட்டேன் தாத்தா..." என்றான் பேரன் தானும் உடன் சேர்ந்து கொண்டு போலியான சோகத்துடன்...

கணவனைப் போலியாக முறைத்தவள், "பயந்த சுபாவமா இருந்தால் எப்படித் தாத்தா மேடையேறி கச்சேரி எல்லாம் பண்ணுவேன்... பயம்ன்னு கிடையாது... நான் கொஞ்சம் அமைதி... யார் கிட்டேயும் சட்டுன்னு பேசிட மாட்டேன் அதான் எல்லோருக்கும் அப்படித் தோணியிருக்கும்..." என்றவள்,

"இவங்களைப் பார்த்தா மட்டும் தான் எனக்குப் பயமா இருக்கும்... ஆனா இப்போ அந்தப் பயம் எல்லாம் இல்லை..." என்றாள் உண்மையாக...

"அது ஏன்ம்மா ஜீவா மேல் மட்டும் அப்படி ஒரு பயம்...?" ராம்குமார் கேட்க...

"ஏன் தாத்தா நான் நல்லாயிருக்கிறது உங்களுக்குப் பொறுக்கலையா...?"

இப்போது தான் இருவரும் பழைய விசயங்களை மறந்து இணக்கமாக இருக்கின்றனர்... இந்த நேரத்தில் போய் எதற்கு வேண்டாத நினைவுகள் என்று பேரன் நினைத்தான்...

"அப்போ இவங்க என்னைக் கோபமா திட்டிட்டே இருப்பாங்க... இந்தத் தடவை தான் அப்படி எதுவும் திட்டலை... அதனால் பயம் போயிருச்சு..." என்று புன்னகைத்தவளை வாஞ்சையுடன் வருடியது ஜீவாவின் கண்கள்...

மனைவியை ரொம்பப்படுத்தி எடுத்து இருக்கிறோம் என்பது மட்டும் அவனுக்கு நன்கு புரிந்தது...

"ஆஹா... பயம் விட்டு போச்சு போலவே... மீண்டும் கோபத்தைக் கையில் எடுக்க வேண்டியது தான்..." என்றவனைக் கண்டு சிறிதும் பயமில்லாது,

"அதான் லைசென்ஸ் கிடைத்து விட்டதே... இனி நோ பயம்..." என்று கலகலவெனச் சிரித்தவளை ஆசையுடன் விழுங்கி கொண்டது அவனது விழிகள்...

இருவரையும் பார்த்த பெரியவர், "இப்படிச் சந்தோசமா இருக்கிற ஜீவாவும், கலகலப்பா இருக்கிற நீயும் எனக்குப் புதுசா தெரியறீங்க... இப்படியே நீங்க ரெண்டு பேரும் எப்பவும் சந்தோசமா, கலகலப்பா இருக்கணும்மா..." என்று மனமார கூறினார்...

"ஜீவா... இன்னைக்கு ஆபிஸ் போகலையா...?" என்று கேட்ட தாத்தாவை கொலைவெறியுடன் பார்த்தான் பேரன்...

"தாத்தா... இன்னைக்குச் சன்டே..."

"அடடே... இன்னைக்குச் சன்டேன்னு இப்பத்தான் உனக்குத் தெரிஞ்சதா...? இத்தனை நாள் இந்த நினைவு எங்கே போயிருந்தது பேராண்டி...?" என்று பேரனை கேலி செய்தவர்,

"இப்ப மனைவி வந்தாச்சு இல்லையா வீக் டேஸ் கூடச் சன்டே மாதிரி தான் தெரியும்..." என்று கிண்டலடித்தபடி அவர் எழுந்து சென்றார்...

அதைக் கேட்டு அவன் அசடு வழிய, கம்பீரமாய் வலம் வரும் கணவனின் இந்த அசட்டுத்தனம் கண்டு சுபிக்ஷா வாய்விட்டு சிரித்தாள்... அதைக் கண்டு அவன் உள்ளம் மகிழ்ச்சியில் நிறைய நிறைவோடு பார்த்துக் கொண்டு இருந்தான்...

இருவரும் உண்டு விட்டு மீண்டும் அறைக்குள் நுழைந்தனர்...

"அங்கே வீட்டுக்கு கூப்பிட்டு பேசிவிடு... இங்கே உன்னை நான் கொடுமை செய்ற மாதிரி எல்லோரும் கற்பனை பண்ணி பயந்துக்கிட்டு இருக்கப் போறாங்க..."

ஜீவா சொன்னது கேட்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது... அவளும் அப்படி நினைத்துக் கொண்டு தானே இங்கு வந்தாள்... அதை மறையாது கணவனிடத்தில் கூறியவள்,

"ஆனா நான் நினைச்ச மாதிரி நீங்க இல்லை..." என்று சிரிப்புடன் கூறியவளை கண்டு,

"என்னைப் பத்தி நீ புரிஞ்சிக்க இன்னும் நாளாகும் பேபி..." என்றவனின் பார்வை கணவனது பார்வையாக மாற அவனது கை உயர்ந்து அவளது கன்னத்தில் கோடு போட்டது மென்மையாக...

அதில் அவளது இதயம் தடம் புரண்டது... திக்திகென்று அடித்த மனதுடன், இமைகள் இரண்டும் பயத்தில் பட்டாம்பூச்சியாய் படபடக்க நின்றிருந்தவளின் முகம் நோக்கி குனிந்தான் அவன்...

தன் முகம் நோக்கி கணவனது முகம் அருகில் வர வர அவளது விழிகள் இரண்டும் இடைவிடாது படபடக்க, அதன் படபடப்பை போக்க எண்ணிய ஜீவா அவளது இமைகள் மீது மென்மையாக முத்தமிட்டான்...

அவனது மென்மையான இதழொற்றலில் அவளது இமை படபடப்பு மட்டுமா நின்றது... அவளின் இதயத்தின் படபடப்பும் சேர்ந்து அல்லவா நின்றுவிட்டது...

அது மட்டுமா... அன்று அவனால் அடைந்த அவளது மனக்காயம் கூட அப்படியே ஆறிவிட்டதே... அவனது அந்த இதழொற்றலுக்கு அத்தகைய பெரிய சக்தி இருக்கிறதா என்ன...

காயத்தை அளித்தவனே அதுக்கு மருந்தாய் மாறி தனது ரணத்தின் வலியை போக்க செய்த விந்தையை எண்ணி திகைப்பும், வியப்புமாய்க் கணவனை ஏறிட்டு பார்த்தவளின் விழி வீச்சில் அவன் ஒட்டு மொத்தமாய்ச் சுருண்டு போனான் அவளிடத்தில்...

இப்போது வியப்பில் படபடத்த மனைவியின் இமைகள் மீது மீண்டும் தனது இதழை அவன் அழுத்தமாய்ப் பதித்தான்... அவனது அழுத்தமான இதழொற்றல் அவளது மனதில் அவனை அழுத்தமாய்ப் பதியச் செய்தது...

அந்தச் சிறு இதழொற்றலுக்கே அவள் ஊன் உருக, உயிர் உருக கண் மூடி நின்றிருந்தாள்... அவளது இதயம் கணவனிடத்தில் நழுவி சென்று கொண்டிருந்தது அவளது அனுமதி வேண்டாமல்...

"அன்பே இது நிஜம் தானா...

என் வானில் புது விண்மீனா...
யாரை கேட்டது இதயம் உன்னைத் தொடர்ந்து போக
என்ன துணிச்சல் அதற்கு என்னை மறந்து போக"

"பேபி..." என்றவனது கிறங்கிய குரலில் கண்களை மெல்ல மலர்த்தினாள் சுபிக்ஷா...

சூடான மூச்சுக்காற்று தனது முகத்தின் மீது படும்படி நெருங்கி நின்ற கணவனது அருகாமை அவளை ஏதோ செய்ய, மெல்ல விலகப் பார்த்தவளை அவனது கைகள் இரும்புப் பிடியாய் தன்னுடன் இறுக்கி வைத்தது...

அதில் தோள் இரண்டும் வலிக்க அவனைப் பாவமாய் ஏறிட்டவள் அவனது விழிகளில் தெரிந்த தாபத்தில் தனது வலி மறந்து மனமுருக அவனது விழியோடு விழி கலந்து நின்றாள் அவள்...

"விழியும் விழியும் கலந்து கலந்து பார்வை ஒன்று ஆனதே
உயிரும் உயிரும் கலந்த போது உலகம் நின்று போனதே"

இருவரின் பார்வையும் ஒன்றோடு ஒன்று கலந்து உயிர் உறைந்து போய் நின்றனர்... எத்தனை நேரம் சென்றதோ அவர்களது மோனநிலையைக் கலைப்பதற்கு என்றே அவனது அலைப்பேசி அழைத்தது...

"ஆனந்த யாழை மீட்டுகிறாய் - அடி
நெஞ்சில் வண்ணம் தீட்டுகிறாய்
அன்பென்னும் குடையை நீட்டுகிறாய்
அதில் ஆயிரம் மழைத்துளி கூட்டுகிறாய்"

அதில் ஜீவா திடுக்கிட்டுப் போய்த் தனது மோனநிலையில் இருந்து வெளிவந்தவன் அவசரமாய்த் தனது சட்டைப் பையில் இருந்து அலைப்பேசியை வெளியில் எடுத்தான்...

கணவன் தனது பார்வையை விலக்கியதும் தன்னை மீட்டுக் கொண்ட சுபிக்ஷாவின் கண்களில் அலைப்பேசியின் திரையில் ஒளிர்ந்த 'அம்ரு காலிங்' என்ற வார்த்தை தென்பட்டது...

என்ன இருந்தாலும் அவளும் ஒரு பெண் அல்லவா... மாமா, தந்தை இருவரும் அம்ரிதா பற்றிக் கூறியிருந்த போதும் இப்போது அந்த 'அம்ரு'வின் அழைப்பை நேரில் காணும் போது ஏதோ ஒன்று அவளுள் உடைந்தது...

கணவனாக அவன் அவள் மனதில் பதியாத போது தோன்றாத ஒரு வேதனை உணர்வு, இப்போது அவன் அவள் மனதில் ஆழமாய்ப் பதிந்த பின்பு தோன்றி அவளை உயிரோடு வதைத்தது...

அதிலும் இவ்வளவு நேரம் தோன்றாத அந்த விசயம் வேறு நீர்க்குமிழ் போல் மெல்ல மேலெழுந்து அவளை உறுத்தியது... திருமணமாகி இத்தனை நாள் தன்னை விட்டு நீங்கியிருந்த கணவனது புறக்கணிப்பு இப்போது நினைவில் எழுந்து அவளுள் வலிக்கச் செய்தது...

ஒருவர் நம்மைக் காயப்படுத்தும் போதும் தான் அவர்கள் செய்த தவறுகள் எல்லாம் பூதாகரமாக எழுந்து நம்மைப் பயமுறுத்தும்... நம்மை அதிகமாய்க் காயப்படுத்தும்... அது தான் அவள் விசயத்திலும் நிகழ்ந்தது...

அத்தனை நேரம் இருந்த இதம் மறைய மனதுள் பெரும் பாரமேறிய உணர்வு அவளுள்... ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாது அமைதியாய் கணவனுக்குத் தனிமை கொடுக்க வேண்டி அவள் அங்கிருந்து விலகி செல்ல முயன்றாள்...

அந்தோ பரிதாபம் அவள் நகர முடியாதபடி ஜீவாவின் கை அவளது கையை இரும்பு பிடியாய் இறுக்கமாய்ப் பற்றியிருந்தது...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 13

"சுபி... நமக்குள்ள எந்த ஒளிவு மறைவும் கிடையாதுன்னு நான் சொன்னதா எனக்கு நியாபகம்..." ஜீவாவின் குரலில் சுபிக்ஷா அப்படியே நின்றாலும் அவனை ஏறிட்டு பார்க்கவில்லை...

கணவனின் இறுகிய பிடியில் கை வலித்ததை விட அவளது மனதில் ஏதோ உணர்வு எழுந்து அவளுக்கு மிகவும் அதிகமாய் வலித்தது... அதில் அவளது கண்கள் கலங்கி போனது...

அதற்குள் அலைப்பேசி அழைப்பு நின்று போய் மீண்டும் அழைக்கத் துவங்க அதைச் 'சைலண்ட்'டில் போட்டவன் மனைவியை நோக்கி,

"இங்கே பார் சுபி..." சிறிது கண்டிப்புடன் கூடிய அதட்டலோடு ஒலித்த அவனது குரலில் அவளையும் அறியாது அவனை ஏறிட்டு பார்த்தாள்...

அந்நேரம் அவனது பார்வையும் அவளைத் தான் விடாமல் பார்த்துக் கொண்டு இருந்தது...

கண்கள் இரண்டும் கலங்கியிருந்தாலும் அதன் கண்ணீர் துளிகள் கீழே விழுந்து விடாதபடி முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அழுத்தமாய்த் தன்னை நோக்கியபடி இருக்கும் மனையாளின் இந்த மனதைரியம் அவன் இதுவரை பார்த்தறியாது...

அவன் அறிந்த சுபிக்ஷா இது இல்லை... பதினாறு வயதில் அவனைப் பார்த்து பயந்து மிரண்டு விழித்த சுபிக்ஷாவுக்கும், இப்போது அழுத்தமாய் நின்றிருக்கும் சுபிக்ஷாவிற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கிறது...

ஏனோ அவளின் இந்த மனதைரியத்தை மெச்சத் தான் தோன்றியது அவனுக்கு... கரடு முரடான வாழ்க்கை பாதையில் பயணிப்பவன் அவன்... காலம் முழுவதும் உடன் வரும் தன் மனைவிக்கு இத்தகைய மனதைரியம் மிகவும் அவசியம் என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

தனக்குப் பொருத்தமான மனைவி தான் தனக்கு அமைந்திருக்கிறாள் என்று பெருமிதமாக நினைத்தான் அவன்...

அவளது அழுத்தம் எந்தளவுக்குப் பிடித்திருந்ததோ... அந்தளவுக்கு அவளது கண்ணீரும் மிகவும் பிடித்துப் போனது அவனுக்கு... இன்னும் சொல்ல போனால் அதை விட இது அதிகமாய்ப் பிடித்துப் போனது...

இந்தக் கண்ணீர் துளிகளுக்குப் பின்னால் இருக்கும் காரணம் அவன் அல்லவா... அவள் மனதில் அவன் நுழைந்து விட்டதற்கான அடையாளம் அல்லவா இந்தக் கண்ணீர் துளிகள்...

தனது இதழ் கொண்டு அவளது கண்ணீரை துடைக்க விழைந்தது அவனது மனம்... ஆனால் இன்னமும் அந்தளவுக்கு இருவருக்கும் இடையில் நெருக்கம் ஏற்படவில்லை என்பதை உணர்ந்தவனாய் அவன் அமைதி காத்தான்...

எதுவும் பேசாது தன்னைப் பார்த்தபடி நின்று கொண்டிருக்கும் கணவனைக் கண்டவள் பின் அவன் கையில் இருக்கும் அலைப்பேசியைப் பார்த்தாள்... மீண்டும் மீண்டும் அது அழைத்து ஓய்ந்து கொண்டு இருந்தது...

"நீங்க பேசுங்க... நான் வெளியில் இருக்கேன்..." என்றவளின் குரல் மேலெழும்பவில்லை...

"நான் தான் சொன்னேனே எந்த ரகசியமும் இல்லைன்னு... உனக்குத் தெரியாம அம்ரு பேபி கிட்ட பேச எனக்குத்

தனியா ரகசியம் எதுவும் கிடையாது... அதனால் நீயும் கூட இரு..." என்றவன் அவள் போக முடியாதபடி அவளைத் தன் கையணைவில் வைத்துக் கொண்டு அம்ரிதாவிற்கு அழைத்தான்...

மறுபக்கம் அம்ரிதா அழைப்பை எடுத்ததும் அவன் அலைப்பேசியை 'ஸ்பீக்கர் மோட்'இல் போட்டான்...

"டாடி..." அம்ரிதாவின் உற்சாகக் குரலில் என்ன முயன்றும் சுபிக்ஷாவினால் தனது மனதினை கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை...

'ப்ளீஸ் என்னை விட்டிருங்களேன்...' என்பது போல் அவள் கணவனிடம் பார்வையால் இறைஞ்சினாள்...

அதைக் கண்டு அவன் யோசனையாய் தனது கையைத் தளர்த்தினான்... விட்டால் போதும் என்று அவள் ஒரே ஓட்டமாய்ப் பால்கனி நோக்கி ஓடினாள்...

சிறிது நேரத்திற்கு முன் அழகாய் தோன்றிய பால்கனியின் அழகு இப்போது அவளுக்கு ரசிக்கவில்லை... மனதுக்கு மிகவும் பாரமாய் இருந்தது...

கணவன் ஏற்கெனவே ஒரு பெண்ணுடன் குடும்பம் நடத்தி ஒரு குழந்தையும் இருக்கிறது என்கிற விசயத்தை இப்போது அவளால் எளிதில் எடுத்துக் கொள்ள முடியவில்லை...

"அந்தக் குழந்தை ஜீவாவுடையதாக இருந்தாலும் அது மறுப்பதற்கு இல்லை சுபிம்மா... அந்தக் குழந்தை மேல் அவ்வளவு பாசம் வைத்திருப்பவன் அதன் அம்மாவோடு சேர்ந்து வாழ்ந்து இருக்கலாம் இல்லையா... ஆனால் அதை ஏன் அவன் செய்யவில்லை... நிச்சயம் அந்தப் பெண்ணை அவனுக்குப் பிடிக்கவில்லைன்னு தானே அர்த்தம்... அந்தப் பெண் அவனது வாழ்க்கையில் முடிந்து போன அத்தியாயம்... அவன் திருமணம் செய்யச் சம்மதித்தது

உன்னை மட்டும் தான்... இனி நீ தான் அவனுக்கு எல்லாம்... ஏற்கெனவே திருமணமாகி விவாகரத்து வாங்கியவன் என்றே அவனை நினைத்து கொள்... இந்த மாமாவுக்காக அவனுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடு சுபிம்மா... உன்னால் மட்டுமே அவனை மாத்த முடியும்..."

திருமணத்திற்கு முன் அவளது தாய்மாமன் அவளிடத்தில் வேண்டியது அவளுக்கு நியாபகத்தில் வந்தது... அன்று சொந்தத்திற்காக, மாமன் மனம் வருந்தக் கூடாது என்பதற்காக எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்த திருமணம் இன்று மனதில் நிறைய எதிர்பார்ப்பை தூண்டி விட்டிருந்தது மற்ற பெண்களைப் போன்று...

அதில் தன் கணவன் தனக்கு மட்டும் தான் என்ற எண்ணம் எல்லாப் பெண்களையும் போல் அவளின் மனதிலும் ஆழ ஊன்றியிருந்தது...

அதனால் தான் அம்ரிதாவின் அழைப்பை அவளால் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை... அம்ரிதாவின் அன்னை வேண்டுமென்றால் இறந்த காலமாக இருக்கலாம்... ஆனால் அம்ரிதா...?

கணவனின் ஆயுட் காலம் முழுவதும் உடன் வரும் அவனது சொந்தம் அல்லவா...

அதற்கு மேல் யோசிக்க முடியாது சோர்ந்து போன மனதுடன் அவள் அங்கிருந்த ஊஞ்சலில் அமர்ந்து வான்வெளியை வெறித்துக் கொண்டு இருந்தாள்... அவளின் மனதை போன்று வானமும் மேகங்கள் இன்றி வெறுமையாகக் காட்சியளித்தது...

ஒரு சில நிமிடங்கள் கழித்து அருகில் கணவன் வந்து அமரும் அசைவில் அவனைத் திரும்பி பார்த்தாள்... அவனது முகத்தில் அப்படி ஒரு குழப்பம் இருந்தது... பெருத்த யோசனையோடு அவளைப் பார்த்தான் அவன்...

அவனது குழப்பத்தைக் கண்டு அவளுக்குத் தான் பாவமாக இருந்தது...

எல்லாம் தெரிந்து தானே அவனைத் திருமணம் செய்யச் சம்மதித்தாள்.... பிடிக்கவில்லை என்றால் இந்தக் காரணத்தைக் கூறி அப்போதே வேண்டாம் என்று சொல்லியிருக்கலாமே... ஆனால் அதைச் செய்யாமல் திருமணத்திற்குச் சரியென்று சம்மதித்து விட்டு இப்படிச் சிறு பிள்ளை போல் நடந்து கொள்வது அவளுக்கே சற்று அபத்தமாகத் தோன்றியது...

ஜீவாவின் மனைவியாக வாழ்வது என்று முடிவாகிவிட்டது... பின்னர் அவனது மகளை ஏற்றுக் கொள்ள ஏன் தயங்க வேண்டும்...? என்று எண்ணியவள் அவனது கை மீது ஆறுதலாய் தனது கையை வைத்தாள்... அதில் அவன் குழப்பம் அகன்று அவளை ஆச்சிரியமாய்ப் பார்த்தான்...

"உங்..." 'உங்க பெண்' என்று சொல்ல வந்தவள் மனதை திடப்படுத்திக் கொண்டு, "நம் பெண்ணை இங்கே கூட்டிட்டு வந்து வச்சிக்கலாமே... இப்பத்தான் நான் வந்துவிட்டேனே... இனியும் ஏன் அவள் அங்கே இருக்கணும்...?"

அவளது வார்த்தையில் அவன் என்ன மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை... ஆனால் மனதுக்கு மிகவும் வேதனையாய் இருந்தது என்னவோ உண்மை...

இது மாதிரி எல்லாம் இதுக்கு முன்னர் அவன் உணர்ந்தது இல்லை... அதனால் என்னமோ அவனால் அந்த உணர்வினை தாங்க முடியாது அவளது வலது கரத்தை எடுத்து தனது கன்னத்தோடு சேர்த்து வைத்துக் கொண்டு கண் மூடி அமர்ந்திருந்தான்...

தவறு மேல் தவறு செய்கிறோமோ என்று அவனுக்குத் தோன்றியது...

கண்மூடி இருந்த கணவனிடம் அசைவில்லாது போக அவனது தோளில் தனது இடது கையை வைத்து அவள் அழைக்க, அதில் மெதுவே கண் திறந்தவன் பார்வையில் மனைவியின் மதி முகம் விழுந்து அவனை இன்னமும் அதிகமாய் வேதனைப்படுத்தியது...

தானும் துன்பப்பட்டு இந்தச் சிறு பெண்ணையும் துன்படுத்துகிறோமோ என்று கழிவிரக்கம் தோன்றி அவனைக் கொன்றது...

"எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை..."

அதற்காகத் தான் அவன் இப்படி முகம் சுணங்கி அமர்ந்து இருக்கிறானோ என்று எண்ணி அவள் அவசரமாய்க் கூறினாள் அவனிடத்தில்...

அவளது அப்பாவித்தனமான பேச்சில் மனதை பறி கொடுத்தவனின் மனம் லேசாக, அவனது உதட்டில் குறுநகை வந்தமர்ந்தது...

"அவ்வளவு நல்லவங்களா நீங்க..." என்று சிரித்தபடி அவளது கூர்மூக்கை பிடித்து ஆட்டியவன்,

"அம்ரு பேபியை கூப்பிட்டு இங்கே வச்சிக்கிறதில் எந்தப் பிரச்சினையும் இல்லை... ஆனால் அவளோடு சேர்ந்து அவள் அம்மாவும் இங்கே வந்து நம்மளோடு இருப்பாள்... அதுக்கு உனக்கு ஆட்சேபணை இல்லைன்னா எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை..." நமட்டுச் சிரிப்புடன் கூறியவனைக் கண்டு அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்...

அவன் கூறிய விசயம் அவளது மூளையில் ஏறிய அடுத்த நொடி அவளது கண்களில் கண்ணீர் உற்பத்தியாகி கன்னங்களில் வழிந்தது அவளது கட்டுப்பாட்டையும் மீறி...

அவளது கண்ணீர் கண்டு அவன் பதறிப் போனது என்னவோ உண்மை...

"ஹேய் பேபி... எதுக்கு இந்தக் கண்ணீர்...? எத்தனை பெண்கள் என்னைச் சுற்றி வந்தாலும் எனது பார்வை உன் மீது மட்டும் தான்... என்ன புரிந்ததா...?" பரிதவிப்பும், பரிவுமாய் ஒலித்தது அவனது குரல்...

மனைவியின் கண்ணீரை துடைத்து அவளைத் தன்னோடு அணைத்து கொண்டவன் சிறு குழந்தைக்கு எடுத்து கூறுவது போல் எடுத்துக் கூறினான்...

கணவனது வார்த்தைகளோ இல்லை அவனது அணைப்பிலோ ஏதோ ஒன்றில் அவளின் மனதில் இதம் பரவ அவளது கண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாய் வற்றலானது...

மனைவியை அணைத்துக் கொண்டிருந்த ஜீவாவுக்கோ இது தான் தானா என்று வியப்பாய் இருந்தது... எந்த நொடி தோன்றியது இந்த மாற்றம் அவனுக்கே அது தெரியவில்லை... ஆனால் மனைவியின் வருத்தம் அவனையும் வருந்த செய்தது... அதை அவன் உணர்ந்தே இருந்தான்...

மனைவியின் அழுகை முற்றிலும் குறைந்ததும் அவளது முகத்தை நிமிர்த்தியவன் அதைத் தனது கைகளில் தாங்கியபடி,

"அம்ருவுக்கு ஆயா வேலை பார்க்கிறதுக்கா உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்கேன்... எனக்கு மனைவியா இருப்பதற்குத் தான் உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்கிறேன்..."

அவனது குரலில் இருந்த கோபம், வருத்தம், ஒருவித உரிமை உணர்வு எல்லாம் சேர்ந்து அவள் முகத்தில் சிறு புன்னகையைத் தோற்றுவித்தது...

அதைக் கண்டு அவனது உதட்டிலும் புன்னகை அரும்பியது...

"இப்போ நல்லா சிரி... கொஞ்ச நேரத்தில் மனுசனை இப்படிக் கலவரப்படுத்திட்டியே..." என்றவனின் முகத்தில் லேசாய் வருத்தத்தின் சாயல்...

"அம்ரு பத்தி நாம பேசுறது இதுவே கடைசித் தடவையா இருக்கணும்... அம்ருவோட பாரத்தைச் சுமக்கிறது என்னோட கடமை... கணவனோட கடமையைத் தன் கடமையா நினைக்கிற நல்ல மனைவியா நீ இருக்கலாம்... ஆனால் என்னால் அப்படி இருக்க முடியாது... நீ மனசு கஷ்டப்படுறதை பார்த்துட்டு என்னால் சும்மா இருக்க முடியாது... அம்ரு என்னோட ஒரு கண் என்றால், நீ என்னோட இன்னொரு கண்... உங்க ரெண்டு பேருக்கும் எந்தப் பாதிப்பும் வராமல் நடந்துக்கணும்ன்னு தான் நான் நினைக்கிறேன்..."

"அம்ருவை நீயோ, இல்லை உன்னை அம்ருவோ பார்ப்பதை நான் விரும்பலை... அவளைப் பார்த்தால் நீ வருத்தப்படுவ... அதே போல் உன்னைப் பார்த்தால் இது யார்ன்னு அவள் ரொம்பவும் குழம்பி போவாள்... 'டாடிக்கு வொய்ப்ன்னா எனக்கு மம்மியா இவங்க...? அப்போ அங்கே இருக்கும் அம்மா யாருன்னு...?' அப்படின்னு அவளோட பிஞ்சு மனசில் தேவையில்லாத குழப்பம் வரும்... இது எல்லாம் வேண்டாம்... அம்ருவை நான் பார்த்துக்கிறேன்... நீ என்னுடைய மனைவியா, நமக்குப் பிறக்க போகும் குழந்தைகளுக்கு அம்மாவா இருந்தா போதும்... அவள் அவளோட அம்மாவோடு இருப்பது தான் நல்லது... நீ இங்கே நம் வீட்டில் இருப்பது தான் நல்லது..." என்றவன்,

"எதையும் போட்டு யோசிக்காம இரு... எல்லாவற்றையும் நான் பார்த்துக்கிறேன்..."

விழியோடு விழி நோக்கியபடி ஊடுருவும் பார்வை பார்த்த கணவனின் பேச்சில் அவள் புரிந்தார் போன்று மெதுவே

தலையாட்டினாள்... அவனளவில் அவன் தெளிவாகத்தான் இருக்கிறான்... அவள் தான் ஏதேதோ எண்ணி குழம்பி கொண்டு தன்னையும் வருத்தி அவனையும் வருத்தியிருக்கிறாள்...

அவளுக்கு மிகவும் வெட்கமாய்ப் போய்விட்டது தன்னைக் குறித்து...

அவனது விழிகளைச் சந்திக்க முடியாமல் இமை தாழ்ந்து நிலம் நோக்கியபடி இருந்தவளின் விழி மீது தனது உதட்டினை பொருத்தியவன் திடீரென்று வாய் விட்டுச் சிரித்தான்... அதில் அவள் புரியாது அவனைப் பார்த்தாள்...

"ஆனாலும் நீ இவ்வளவு நல்லவளா இருக்கக் கூடாது பேபி..."

சிரித்துக் கொண்டே மனைவியின் முகத்தோடு முகம் பதித்து இயல்பாய் நெருங்கி இருந்தவனின் அருகாமை இப்போது அவளை உள்ளுக்குள் உருகவும் செய்தது... அவளை வெட்கம் கொள்ளவும் செய்தது...

"இப்போ தான் உன்னை எனக்கு ரொம்ப, ரொம்பப் பிடிச்சியிருக்கு பேபி..." கணவனின் வார்த்தைகள் அமிர்தமாய் அவளது செவியில் ஒலித்த போதிலும்,

"முதல்ல உங்களுக்கு என்னைப் பிடிக்காது தானே மாமா..." என்று வருத்தமாய்க் கேட்டவள் சட்டென்று உதட்டினை கடித்துக் கொண்டாள் அவனை 'மாமா' என்று அழைத்ததற்காக...

அவனோ அதைக் கண்டு கொள்ளாதது போல் பற்களிடையே அவஸ்தையாய் கடிப்பட்டுக் கொண்டு இருந்த அவளது இதழ்களை மென்மையாய் வருடி விட்டபடி,

"மாமான்னே கூப்பிடு... இது கூடத் தனிக் கிக்கா தான் இருக்கு..." என்று கூறி கண் சிமிட்ட...

தன்னை ஏதோ அதிசயம் போல் பார்த்து முழித்த தன்னவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு பீறிட்டது...

"உலக அதிசயத்தைப் பார்ப்பது போல் இது என்ன பார்வை மேடம்...?"

"உண்மையில் அதிசயம் தான்ங்க... நீங்களா இப்படின்னு..." வியப்பு விலகாது கேட்டவளிடம்,

"சாட்சாத் நானே தானுங்க..." என்றான் அவன் சிரித்தபடி...

"பிடிக்காத என்னைக் கல்யாணம் பண்ணி இருபது நாள் பிரிஞ்சு இருந்தீங்க... ஆனா இப்போ...? என்னால் என் கண்ணை நம்ப முடியலை..."

அவளது வார்த்தைகள் கேட்டு அவனது முகம் மாறியது...

"நம்ம கல்யாணம் நடந்த அன்னைக்கு நடந்தது உனக்கு நியாபகம் இருக்கா...?"

அவன் கேட்டதற்கு அவள் ஆம் என்பது போல் தலையசைத்தாள்...

"அன்னைக்குத் தாலி கட்டும் போது நீ அழுதுக்கிட்டு இருந்த... அதைப் பார்த்து நான் என்னன்னு நினைக்கிறது... உன் மனசில் அந்த அபி இருக்கான்னு நினைச்சு அன்னைக்கு எனக்கு அப்படி ஒரு கோபம் வந்தது..."

"அது வந்து..." இடையில் குறுக்கிட்டவளை கண்டு,

"நான் பேசி முடிச்சிடறேன்..." என்றவன்,

"அதுக்கு அப்புறம் நீ மிஸஸ். ஜீவான்னு சொன்னப்போ எனக்குக் கொஞ்சம் கோபம் குறைஞ்சு போச்சு..."

அவன் சொன்னதும் அன்றைய நினைவில் அவளது முகத்தில் புன்னகை தோன்றியது...

"கொஞ்சம் சந்தோசத்தோட வீட்டுக்கு வந்தா அங்கே அவன் வந்து நிற்கிறான்... அவனைப் பார்த்து நீ அதிர்ச்சி அடைஞ்சு நிற்கிற... அடுத்து, 'என் வாழ்க்கையைப் பலியாக்கிட்டீங்க'ன்னு என் கிட்ட சொல்லுற... இதை எல்லாம் வச்சு பார்க்கும் போது நான் என்னன்னு நினைக்கிறது... சரி உன் மனசில் அவன் தான் இருக்கிறான்னு நினைச்சுக் கோபத்தில் கிளம்பி வந்துட்டேன்... நீ அவனை மறந்துட்டு என்னை உன் கணவனா நினைக்கணும்ன்னு நான் நினைச்சேன்... அதனால் தான் எல்லோரும் கூப்பிட்ட போதும் நான் ஃபோனை எடுக்கவில்லை... இதே இது நீ கூப்பிட்டப்போ உடனே எடுத்தேன்... கணவன், மனைவிங்கிறதுக்கான அர்த்தம் உனக்குப் புரிஞ்சிடுச்சுன்னு எனக்குப் புரிஞ்சு போனது... அதுக்கு அப்புறம் தான் நான் உன்னை இங்கே அழைச்சிட்டு வந்தது..." என்றவன் அவள் கழுத்தில் கிடந்த தாலியை எடுத்து அவள் முன் நீட்டி பிடித்தபடி,

"நீயும் நானும் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கலை... பெரியவங்களுக்காகப் பண்ணிக்கிட்டோம்... ஆனா அந்தத் திருமணப் பந்தத்தை உண்மையா மதிச்சு உணர்ந்து வாழ்க்கையை ஆரம்பிக்கணும்... அப்போ தான் கணவன், மனைவி உறவுக்கான முழுமையான அர்த்தம் இருக்கு..."

அவன் கூறியது எல்லாம் சரி தான்... இதில் கணவனை மட்டும் குறை கூற முடியாது... அவளின் நிலை போன்று தான் அவனது நிலையும்...

இருவரும் மனம் விரும்பி மணம் முடிக்கவில்லை... பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் இது... இந்தத் திருமணம் தோற்றுவிடாமல் இருப்பது இனி அவர்கள் கையில் தான் இருக்கிறது...

அந்த நொடி கணவனை மனதார காதலித்துக் காதல் வாழ்க்கை வாழ வேண்டும் என்றே அவளுக்குத் தோன்றியது... அதற்கு முன்னர்த் தன்னைப் பற்றி அவன் மனதில் இருக்கும் அந்தக் கசடுகளை அகற்ற வேண்டும் என்று எண்ணினாள்...

"அன்னைக்கு நான் அழுதது அதுக்காக இல்லை... உங்களைப் பார்த்து ஒருவித பயம்... இனி வாழ்க்கை எப்படிப் போகுமோன்னு கவலை... எல்லாம் சேர்ந்து தான் நான் அழுதது... அப்போ என் மனசில் யாரும் கிடையாது... நீங்க உட்பட..."

அவளது மனம் தெளிவாகப் புரிந்ததும் அவனது மனமும் தெளிவானது...

"அப்போ யாருமில்லை சரி... ஆனா இப்போ யார் மேடம் இருக்காங்க...?" குறும்பு குரலில் கூறியவனை நிமிர்ந்து பார்த்தவள் முகத்தில் அத்தனை நாணம்...

"சொல்லுங்க மேடம்..." அவன் வற்புறுத்த...

"என்னோட கணவர்..." என்றாள் பெருமிதமாக...

நேற்று வரை அவள் மனதில் இருந்த கலக்கம் இன்று இல்லை... அவளின் மனநிலை அவளுக்கு ஆச்சிரியமாக இருந்தது...

அவள் கூறியதை கேட்டு ஜீவா தனது சட்டைக் காலரை தூக்கிவிட்டுக் கொண்டான்...

"ஆனாலும் நான் 'என் வாழ்க்கையைப் பலியாக்கிட்டீங்க'ன்னு பேசியிருக்கக் கூடாது தான்... என்னை மன்னிச்சுக்கோங்க..." உண்மையாக மனதார அவனிடம் மன்னிப்பு கேட்டாள் அவள்...

"கணவன் மனைவிக்குள்ள மன்னிப்புங்கிற வார்த்தை தேவையில்லை... நம்ம கிட்ட நாம மன்னிப்பு கேட்போமா...?"

ஜீவாவின் வார்த்தையில் அவளது மனம் நெகிழ்ந்தது... அவள் நினைத்து போல் அவன் ஒன்றும் குணம் கெட்டவன் இல்லை... மாறாக வாழ்க்கைத் தத்துவத்தை நன்றாகப் புரிந்து வைத்தவனாக இருக்கிறான் என்பதை அவள் உணர்ந்தாள்...

"இப்ப எல்லாம் நீங்க ரொம்ப மாறிட்டீங்க..." என்றாள் தன் மனதை மறையாமல்...

"வயது ஏற ஏற மனப்பக்குவமும் வரணும் இல்லையா..." என்றான் எங்கோ வெறித்துக் கொண்டு...

"ம்... உண்மை தான்..." என்றவள், "வீட்டுக்கு பேசலாமா...?"

அதில் அவளைத் திரும்பி பார்த்தவன், "ம்... பேசு... அதுக்கு ஏன் என் கிட்ட பெர்மிசன் கேட்டுட்டு இருக்க..." என்றபடி தனது அலைப்பேசியை மனைவியிடத்தில் நீட்டினான்...

"நீங்க...?"

"நான் எதுக்கு...? நீ பேசினால் போதாதா..." என்ற கணவனிடத்தில் மேலே வாதாடாமல் அவர்களது வீட்டாருக்கு அழைத்தாள்...

மெல்ல அங்கிருந்து நழுவ முயன்ற கணவனைக் கண்டு, "நமக்கு இடையே எந்த ரகசியமும் கிடையாதுன்னு நீங்க சொன்னதா எனக்கு நியாபகம்..." என்றாள் குறும்பு குரலில்...

மோவாயில் ஒற்றை விரலை வைத்து யோசிப்பது போல் பாவனைச் செய்தவளின் முகத்தில் தெரிந்த குறும்பில் அவனின் மனம் மயங்க மனைவி சொன்னதைத் தட்டாமல்

செய்தான்... அதாவது அவளை உரசி கொண்டு அருகே அமர்ந்தான்...

அதற்குள் மறுபக்கம் அழைப்பு எடுக்கப்பட்டு விட, வீட்டார் ஒவ்வொருவருடனும் தனித்தனியாய் அக்கறையாய், அன்பாய் அவள் பேசி கொண்டிருப்பதை அவன் வாஞ்சையுடன் பார்த்திருந்தான்... உறவுகளுக்கு அவள் கொடுக்கும் முக்கியத்துவத்தை அவன் தான் அறிவானே...

அதனால் சிறு புன்னகையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்...

தந்தை தன்னைப் பற்றிக் கேட்கும் போது மட்டும் அவனுக்கு உள்ளுக்குள் சற்று புகைச்சலாக இருந்தது... ஆனாலும் புது மனைவியிடத்தில் அதைக் காட்டி கொள்ள முடியுமா... அதனால் அமைதியாக இருந்தான்... கடைசியில் வினீதா பேசும் போது மட்டும் அவனையும் அறியாமல் மனைவியுடன் இணைந்து மருமகளிடம் பேசினான்...

"அது என்ன விக்ரம் கூடப் பேசாம வினீ கூட மட்டும் பேசுறீங்க...?" அலைப்பேசியை அணைத்துவிட்டு அவனிடம் நீட்டியபடி கேட்டவளை கண்டு,

"எனக்குப் பெண் குழந்தைகள் தான் ரொம்பப் பிடிக்கும்..." என்றவன் அவளது காதோரம் குனிந்து,

"எனக்கு நிறையப் பெண் குழந்தைகள் பெத்து கொடு..." என்று முணுமுணுக்க... அதில் வெட்கம் அடைந்தவள் அங்கிருந்து நழுவி ஓடினாள்...

அவனும் சிரித்தபடி அவளின் பின்னே சென்றான்...

மதிய உணவுக்குப் பின் சிறிது நேரம் அவளை ஓய்வு எடுக்கச் சொல்லியவன் வெளியில் வேலையாய் சென்றுவிட்டான்... சுமார் இரண்டு மணி நேரம் கழித்து

அவள் எழும் போது மீண்டும் அறையினுள் வந்தவன் அவளிடம்,

"ரொம்ப க்ராண்டாவும் இல்லாம அதே சமயம் ரொம்பச் சிம்பிளாவும் இல்லாம ஒரு புடவையைக் கட்டிட்டு ரெடியாகி வா... க்விக்..." என்று அவளை அவசரப்படுத்தி விட்டு அறையை விட்டு செல்ல...

அவள் எங்கே என்று புரியாது விழித்தாலும் அவன் சொன்னபடி தயாராகி வந்தாள்...

முன்னறையில் அமர்ந்து மடிகணினியில் வேலை செய்து கொண்டிருந்தவன் மனைவியின் வரவை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தவன் மெல்ல விசிலடித்தபடி எழுந்து வந்தான்...

"யூ லுக் ப்யூட்டிபுல்..." என்றவனது விழிகள் ரசனையுடன் விழுங்கியது தன்னவளின் தோற்றத்தை...

"உங்களை விடவா..." கணவனது கம்பீரமான அழகை கண்களில் தேக்கியபடி அவள் கூற...

"எப்படியோ என்னை அழகுன்னு ஒத்துக்கிட்டியே... ரொம்பச் சந்தோசம்..." கேலிக்குரலில் கூறியவன் அவள் அருகில் வந்து,

"அழகு என்பது சிவந்த தோலில் இல்லை... எல்லாம் இங்கே இருக்கிறதடி பெண்ணே..." என்றவன் தனது நெஞ்சின் இடது பாகத்தைச் சுட்டிக்காட்டினான்...

முன்பு தன் கால் தூசு பெற மாட்டாய் என்று அவளை இகழ்ந்து கூறியவன் இன்று இப்படிக் கூறுவது அவளுக்கு ஆச்சிரியமாக இருந்தது...

"இப்போ இங்கே இதில் நீ மட்டும் தான் இருக்க... அதனால் உலகத்தில் உள்ள எல்லாப் பெண்களையும் விட என்

கண்ணுக்கு நீ மட்டும் தான் அழகாய் தெரியற..." தனது இதயப்பகுதியை மெல்ல வருடியவாறு கூறிய மாமன் மகனான கணவனது வார்த்தையில் மயக்கமே வருவது போலிருந்தது அவளுக்கு...

அதை விட அவன் மனதில் தான் மட்டுமே இருக்கிறோம் என்ற மகிழ்ச்சி அவள் மனதை மயக்கவும் மறக்கவில்லை...

"வெய்ட் பண்ணு... நான் ரெடியாகிட்டு வர்றேன்..." அவளது கன்னத்தில் தட்டியபடி அவன் படுக்கையறைக்குள் நுழைய...

கணவனது வார்த்தைகளை அசை போட்டபடி சுபிக்ஷா அங்கே சோபாவில் அமர்ந்தாள்...

ஜீவா கிளம்பி வந்ததும் கீழே சென்ற போது தான் தெரிந்தது எதற்காகக் கிளம்பச் சொன்னான் என்று... இவர்களைப் புகைப்படம் எடுப்பதற்காகப் புகைப்படக் கலைஞர் ஒருவர் காத்துக் கொண்டு இருந்தார்...

"எதுக்கு...?" என்று அவள் தயங்கிய போதும் அவன் விடாமல் வற்புறுத்தி இருவரையும் சேர்த்துப் புகைப்படம் எடுக்க வைத்தான்...

அன்று மாலையே அவனது திருமணச் செய்தி ஊடகங்களில் வெளிவருமாறு அவன் ஏற்பாடு செய்தான்... அவனது துரித நடவடிக்கையைப் பிரமிப்பாய் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள் அவள்...

அவளோ வெகு நிதானம்... அவனோ வெகு வேகம்... இதில் எப்படி இருவருக்கும் திருமணம் செய்து வைத்தார்கள் இந்தப் பெரியவர்கள் என்று அவளுக்குச் சிரிப்பாய் வந்தது...

'நல்லா பொருத்தம் பார்த்து சேர்த்தாங்க...' மனதுக்குள் கேலியாய் நினைத்து கொண்டாள்...

அதை அவளது கணவன் கவனித்துப் பார்த்துவிட்டு என்ன என்று கேட்க, அவளும் மறுக்காமல் அதை அப்படியே அவனிடத்தில் கூற, அவன் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு,

"இரண்டும் சேர்ந்தால் மிதவேகம்... மிதவேகம் எப்போதுமே நன்று..." என்றான் பளிச்சென்று...

அதைக் கேட்டு அவளது முகத்தில் புன்னகை அரும்பியது... அவன் கூறுவதும் சரி தானே என்றே நினைக்கத் தோன்றியது...

மாலை பொழுது தாத்தா, கணவன் என்று இனிமையாகக் கழிந்தது... இரவு பொழுது வந்ததும் தான் பாவையவளுக்கு மூளையில் மின்னல் அடித்தது...

இன்று இரவு எப்படி அறைக்குள் செல்வது என்று பெரும் தயக்கமாக இருந்தது அவளுக்கு... அத்தனை நேரம் இருந்த இயல்பு நிலை மாறி மனம் படபடக்கக் கணவனது முகத்தை ஏறிட்டுப் பார்க்காமல் தாத்தாவிடம் மட்டும் பேசி கொண்டு இருந்தாள் அவள்...

ஜீவா அவளைப் புரியாது பார்த்தவன் ஒன்றும் பேசாது உணவு உண்டு விட்டு தங்களது அறைக்குச் சென்றுவிட்டான்...

எவ்வளவு நேரம் முதியவருடன் அவளும் பேசி கொண்டிருக்க முடியும்... அவரும் உறங்கச் சென்றுவிடத் தயங்கியபடி தங்களது அறைக்கு வந்தாள்...

முன்னறையில் ஜீவா ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்திருந்தான்... அதைக் கண்டு நிம்மதி பெருமூச்சு விட்டவள் சத்தம் செய்யாது படுக்கையறைக்குச் செல்ல முயன்றாள்...

அப்போது அவள் பின்னால் கதவு தாளிடும் சத்தம் கேட்க திடுக்கிட்டு திரும்பினாள் அவள்... அவளது கணவன் தான்

கதவை தாளிட்டு விட்டு அவளை நோக்கி வந்து கொண்டு இருந்தான்...

தான் பார்க்கும் போது அவன் புத்தகம் அல்லவா வாசித்துக் கொண்டு இருந்தான்... பிறகு எப்படி...?

அவள் யோசித்து முடிப்பதற்குள் அவளை நெருங்கி இருந்தான் ஜீவா...

"இந்தளவுக்கு நீ நிதானம்ன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலையே பேபி... ஜீவா உன் நிலைமை கொஞ்சம் கஷ்டம் தான்..." என்று அவன் முணுமுணுப்பாய் கூறினாலும் அது அவள் காதில் தெளிவாய் விழத்தான் செய்தது...

அதன் அர்த்தம் மிகவும் தாமதமாக அவளுக்குப் புரிய, "அப்போ அப்ப நீங்க சொன்னதன் அர்த்தம் இது தானா...?" விழி விரித்தவளை கண்டு,

"இதுக்கு அர்த்தம் இதே தான்ங்க..." என்று கண்சிமிட்டியவனின் அர்த்தமே வேறாக இருந்தது...

அதில் வெட்கத்தில் நாணி அவள் தலை குனிந்தாள்... அவளது வெட்கத்தை ரசித்தபடி நின்றிருந்தவன் பின்,

"குட் நைட் பேபி..." என்றான் அவளது நெற்றியில் தனது இதழ்களைப் பதித்து...

அதில் அவள் திகைத்து போய் நின்றிருந்தாள்...

"குட் நைட் இப்படிச் சொல்லணும்ன்னு சொன்ன டீச்சர் நீங்க தானே மேடம்... அப்புறம் ஏன் இப்படி ஷாக்காகுறீங்க...?"

அதில் அன்றைய நாளின் நினைவில் அவளுக்குச் சிரிப்பு வந்தது...

"பதிலுக்குக் குட் நைட் கிடையாதா பேபி..." ஏக்கத்துடன் ஒலித்த அவனது குரலில் நிமிர்ந்து பார்த்தவள்,

"குட் நைட்..." என்று தெளிவில்லாமல் முணுமுணுக்க...

"ம்ஹூம்... குட்நைட் இப்படிச் சொல்லக் கூடாதே..." குறும்பாய் கூறியவன் தனது நெற்றியை சுட்டிக் காட்ட...

முதலில் திகைத்தவள் பின் அவனது பிடிவாதத்தில் வேறுவழியின்றி அவனது உயரத்திற்குத் தனது கால்களை உயர்த்தி எம்ப முயன்றாள்...

அதைக் கண்டு அவன் சிரித்தபடி அவளது முகத்துக்கு நேரே குனிந்து தனது நெற்றியை காட்டினான் அவள் முத்தமிட ஏதுவாக... மெல்ல பட்டும் படாமல் கணவனது நெற்றியில் இதழ்களைப் பதித்தவளை கண்டு,

"டீச்சர்க்கே பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் போலிருக்கே..." என்று போலியாய் சலித்தபடி அவளது பின்னந்தலையில் தனது கையைச் செலுத்தி அவளைத் தன்புறமாய் அவன் அழுத்த, அதில் அவளது இதழ்கள் அவனது நெற்றியில் அழுத்தமாய்ப் பதிந்தது மிக அழகாய்...

"இப்போ ஓகே..." என்றபடி புன்னகையுடன் நிமிர்ந்தான் அவன்...

அவளோ அவனது முகத்தைப் பார்க்க இயலாது வெட்கம் கொண்டு தலை குனிந்து நின்றாள்...

"போய்த் தூங்கு பேபி..." என்றவனது குரல் மிருதுவாய் ஒலித்தது...

அதில் வியப்பாய் பார்த்தவளை கண்டு அவன் ஆம் என்பது போல் தலையசைத்து படுக்கையறையைச் சுட்டிக்காட்ட, அதில் நிம்மதி அடைந்தவளாய் அவள் உள்ளே சென்றாள்...

அவள் சென்றதும் படுக்கையறை கதவை சாத்திவிட்டு அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான் ஜீவா...

மனைவியின் மனநிலை அவனுக்கு நன்கு புரிந்து இருந்தது... அவன் தொட்டால் அவள் ஒன்றும் மறுப்பு சொல்ல போவதில்லை தான்... ஆனாலும் அவனுக்கு அவளிடத்தில் இன்னும் ஏதோ ஒன்று குறைவது போலிருந்தது...

என்ன அது என்று யோசித்துக் கொண்டு இருந்தவனின் மனதில் தன்னை முத்தமிட தயங்கிய மனைவியின் முகம் நினைவிலாடியது...

அவனின் விருப்பத்தை விட அவள் தன்னை விரும்பி வர வேண்டும் என்றே அவன் ஆசை கொண்டான்... அப்படி அவள் தன்னை நாடி வரும் போது இந்த வெட்கம், தயக்கம் எல்லாவற்றையும் துறந்து முழுமனதோடு அவனிடத்தில் சேர வேண்டும் என்று பேராசை கொண்டான்...

அவனில்லாமல் அவளில்லை என்பதை அவள் உணர்ந்து காதலோடு தன்னோடு வாழ வேண்டும் என்று அவன் எண்ணினான்...

வெகு நேரம் கழித்துப் படுக்கையறைக்குள் நுழைந்தவனைத் தரையில் படுத்து உறங்கி கொண்டிருந்த அவன் மனையாள் வரவேற்றாள்...

அதைக் கண்டு அவனது மனம் மிகவும் வருந்தியது... கைகளைக் கட்டியபடி சிறிது நேரம் உறங்கும் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்...

"வாய் மட்டும் தான் மிஸஸ். ஜீவான்னு ஓயாமல் சொல்லுது... ஆனா செயலில் அது இல்லையே..." மனைவியைக் கடிந்து கொண்டே அவளைத் தனது கைகளில் ஏந்தியவன்,

"மிஸஸ். ஜீவா கீழே படுக்கக் கூடாதுன்னு உனக்கு ஏண்டி புரியலை..." கையில் தூங்கி கொண்டிருந்த மனைவியின் அழகு முகத்தைப் பார்த்தபடி செல்லமாய்த் திட்டியவன் அவளை அலுங்காமல் தூக்கி வந்து படுக்கையில் கிடத்தினான்...

பின்பு அவளுக்குப் போர்வையைப் போர்த்தி விட்டவன் அவளது மலர் முகத்தைச் சிறிது நேரம் பார்த்து ரசித்துவிட்டுப் பின் அவளது நெற்றியில் முத்தமிட்டான் மென்மையாக...

ஒரு முத்தத்தில் அடங்கி விடுமா கணவனின் தாபம்... மெல்ல அவனது உதடுகள் அவளது மூடிய விழிகள், நாசி, கன்னங்கள் எனப் பயணம் செய்து இறுதியில் அவளது இதழ்களைக் கண்டு தயங்கி நின்றது...

இதுவரை அவனது அகராதியில் தயக்கம் என்பதே இருந்தது இல்லை... அப்படிப்பட்டவன் இன்று தயங்கி நின்றான்...

பின் மனதை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு மெதுவே ஒரு மலரை வருடுவது போல் மென்மையாகத் தனது உதட்டினை அவளது இதழில் பதித்தான் அந்த வன்மையான கணவன்...

அதில் அவள் தூக்கம் கலைந்து மெல்ல புரண்டு படுக்க, அதைக் கண்டு பதறி விலகியவன் அவள் சீரான மூச்சுடன் மீண்டும் உறங்குவதைக் கண்ட பின்பே நிம்மதியுற்றான்... பின் தனது பயத்தை எண்ணி சிரித்தபடி தன் பின்னந்தலையில் தட்டி கொண்டவன் மறுபக்கம் வந்து படுத்தான்...

படுத்த அடுத்த நொடி நித்ராதேவி அவனை ஆரத்தழுவி கொண்டாள்...

இங்கே அவன் சுகமாய் உறங்கி கொண்டிருக்க, அங்கே அவனை நேசித்த இரு நெஞ்சங்களும் அவனது திருமணச் செய்தி கேட்டு உறங்காது அவனை நினைத்துத் தவித்துக் கொண்டு இருந்தது...

ஒன்று துயரத்துடன், மற்றொன்று வன்மத்துடன்...!!!

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 14

எப்போதும் போல் அதிகாலையில் விழிப்பு வந்து எழுந்த சுபிக்ஷா தனது இரண்டு கைகளையும் சேர்த்து விரித்து வைத்தபடி,

"முருகா சரணம்..." என்றபடி தனது உள்ளங்கையில் கண் விழித்தாள்...

அதன் பின்னரே அவளுக்குச் சுற்றுப்புறம் உறைத்தது... தான் மும்பையில் கணவனது வீட்டில் இருக்கிறோம் என்பது நியாபகத்தில் எழ, அப்போது தான் மெத்தென்ற படுக்கையின் மென்மையை அவள் உணர்ந்தாள்...

'நேத்து கீழே தானே படுத்தேன்... அப்புறம் எப்படி மேலே...?' என்று யோசித்தவளாய் அருகில் படுத்திருந்த கணவனைத் திரும்பி பார்த்தாள்...

அவளுக்குப் புரிந்து போனது அவன் தான் அவளைத் தூக்கி கொண்டு வந்து மெத்தையில் படுக்க வைத்திருக்கிறான் என்று...

கணவன் தன்னைத் தூக்கிய விதத்தைக் கற்பனையில் கண்டவள் வெட்கம் மேலிட தனது முகத்தை முழங்காலில் புதைத்து கொண்டாள்... மீண்டும் மீண்டும் அதை எண்ணி பார்த்தவளின் மனதுக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் ஒருசேர படபடத்தது...

அதிகாலையில் தோன்றிய இந்த இன்ப உணர்வு அவளுக்கு அத்தனை சுகமாய் இருந்தது... முழங்காலில் இருந்து தலையை எடுக்காமல் மெல்ல பக்கவாட்டில் திரும்பி கணவனை நோக்கினாள்...

அயர்ந்து உறங்கும் கணவனது கம்பீரமான தோற்றம் அவள் மனதை கொள்ளை கொண்டது... திருமணத்திற்கு முன்

தான் அவனைக் கண்டு பயந்தது என்ன... இப்போது அவனை ரசிப்பது என்ன... அவளின் மனமாற்றம் அவளுக்கே புதிதாக இருந்தது...

'நேற்று இல்லாத மாற்றம் என்னது...' என்று பாட்டு பாட மனம் ஆசை கொண்டது...

அவள் பிறந்து வளர்ந்த இத்தனை வருடங்களில் என்றும் இல்லாத நாளாக இன்றைய விடியல் அத்தனை மகிழ்ச்சியாய் விடிந்திருந்தது அவளுக்கு...

நேற்று ஒரு நாளில் கணவன் காட்டிய அன்பு, அக்கறை, பரிவு, புரிதல் எல்லாம் சேர்த்து அவளைச் சந்தோச வானில் சிறகடித்துப் பறக்கச் செய்தது...

அந்தச் சந்தோசமான மனநிலையில் அவள் கணவனின் துயில் கலையா வண்ணம் மெல்ல எழுந்தவள் சப்தம் செய்யாது குளித்து முடித்துக் கிளம்பி அறையை விட்டு வெளியில் வந்தாள்...

இத்தனை நாள் பழக்கதோசத்தில் அவளது கால்கள் நேரே பூஜையறைக்குத் தான் சென்றது... அவர்களது வீட்டினருக்கு இந்தப் பழக்கம் எல்லாம் கிடையாது... ஆனால் அவளுக்குச் சங்கீதத்துடன் நெருங்கிய தொடர்பு இருந்ததாலோ என்னமோ அவளுக்குக் கடவுளை வழிபடுவதில் அத்தனை ஈடுபாடு இருந்தது...

முதலில் விளக்கேற்றி விட்டுச் சுப்ரபாதம் சொல்ல துவங்கியவள் மெல்ல கணவனின் நினைவை மறந்து கடவுளின் பக்தியில் திளைத்து அதில் மூழ்கிப் போனாள்...

பாடி முடித்ததும் கண்களைத் திறந்தவள் கண்ணில், புன்னகையுடன் அவளைப் பார்த்தபடி கைகள் இரண்டையும் கட்டி கொண்டு பூஜையறையின் நிலை மீது சாய்ந்து நின்ற அவளது கணவன் தென்பட்டான்...

எதிர்பாராமல் அவனை அங்குக் கண்டதும் அவளது முகம் மலர்ந்து புன்னகையைத் தத்தெடுத்தது...

அவளது மலர்ச்சியைக் கண்டு அவனது முகமும் மலர்ந்தது...

'உள்ளே வாங்க...' என்று சைகையில் அவள் அவனை உள்ளே வரச் சொல்லிக் கூப்பிட...

'குளிக்கவில்லை...' என்று அவனும் சைகையில் பதில் சொன்னான்...

அதைக் கண்டு சிரித்தபடி திரும்பியவள் சாமி கும்பிட்டு முடித்துவிட்டு தன்னிச்சையாய் குங்குமத்தை எடுத்து உச்சி வகிட்டில் வைத்துக் கொண்டு எழுந்தாள்...

அவளது அந்தச் செய்கை அப்படி ஒரு நிறைவை கொடுத்தது அவனுள்...

'என்ன தான் ஃபாரின் போய்ப் படிச்சாலும், உலகம் முழுவதும் தொழில் பண்ணினாலும் மனசுக்குள் நீ காளிமுத்து பரம்பரைன்னு நிரூபிக்கிறியேடா ஜீவா...' அவனது மனசாட்சி அவனுக்குக் கவுண்ட்டர் கொடுத்தது...

'எல்லா ஆண்களும் என்னைப் போல் தான்...' என்று தன் மனசாட்சியை அடக்கினான் அவன்...

அதற்குள் அவன் அருகில் வந்த அவனது மனைவி அவன் முன் தீபாராதனை தட்டை நீட்ட, அவனோ அதைத் தொடாமல் முன் புறம் குனிந்தான்... அதைக் கண்டு அவள் சிரித்தபடி தானே தீபாராதனையை எடுத்து அவனது கண்களில் ஒற்றி, திருநீறு எடுத்து அவனது நெற்றியில் பூசிவிட்டாள்...

சிறு குழந்தை ஒன்றிற்கு அன்னை பரிவுடன் செய்வது போலிருந்தது அவளது செய்கை... அதில் அவனது மனம்

நெகிழ்ந்தது...

"இருங்க காபி எடுத்துட்டு வர்றேன்..." என்றபடி போன மனையாளை பார்த்தபடி சோபாவில் அமர்ந்த ஜீவாவின் மனம் நிறைந்திருந்தது மகிழ்ச்சியில்...

இப்படி ஒரு வாழ்க்கையைத் தான் அவன் வாழ ஆசைப்பட்டது... அது சுபிக்ஷா மூலம் அவனுக்குக் கிடைத்துவிட்டதை எண்ணி அத்தனை சந்தோசமாய் இருந்தது...

மனைவி கொடுத்த காபியை பருகி விட்டு அவன் உடற்பயிற்சி கூடத்திற்குச் செல்ல, அவள் மீண்டும் சமையலறைக்குச் சென்றாள்...

அப்போது தான் மதுராவும் வேலைக்கு வந்து சேர்ந்தார்... இவளது கையிலிருந்த காபி கோப்பையைக் கண்டதும் பதறி போனவராய்,

"நீங்க எதுக்கும்மா காபி போட்டீங்க... நான் வந்து போட்டிருப்பேனே..." என்க...

அவரின் பதற்றத்தை கண்டு புன்னகையுடன், "நான் இன்னும் காபி குடிக்கலை... இது அவர் குடிச்சது..." என்றவளை பார்த்து மதுரா ஆச்சிரியப்பட்டவராய்,

"தம்பி காபி குடிக்க மாட்டாரேம்மா... எப்பவும் ஜூஸ் தானே குடிப்பார்..."

அவரது வார்த்தையில் இப்போது ஆச்சிரியப்பட வேண்டியது அவளது
முறையாயிற்று...

மதுரா காபி கலந்து அவளிடத்தில் கொடுக்க அதை வாங்கிக் கொண்டு அமர்ந்தவளுக்குக் கணவனைப்

பற்றிய சிந்தனைகள் தான் மனதில் ஓடியது...

அப்போது ராம்குமார் எழுந்து வர அவருக்குக் காபி கொண்டு வந்து கொடுத்தவள் அவரிடம் பேசி கொண்டு இருந்தாள்...

அதற்குள் உடற்பயிற்சி முடிந்து ஜீவாவும் வந்துவிடப் பொதுவான விசயத்தைப் பேசியபடி நேரம் கடந்தது...

அலுவலகம் செல்வதற்குக் கிளம்ப வேண்டி ஜீவா அறைக்குச் செல்ல அவனைப் பின் தொடர்ந்தாள் அவனது மனைவி...

"உங்களுக்குக் காபி பிடிக்காதா...?" அவனிடம் அவள் கேட்க...

"பிடிக்குமே..." என்றவனது பார்வை ரசனையுடன் அவளை மொய்த்தது...

"பொய் சொல்லாதீங்க..." என்றவள் மதுரா சொன்னதை நினைவு கூற...

"காபி எனக்கு ரொம்பப் பிடிக்கும்... ஆனா யாரும் எனக்குப் பிடிச்ச விதத்தில் கலந்து கொடுக்க மாட்டாங்க... ஒண்ணு சூடா இருக்கும், இல்லை ஆறி இருக்கும் இல்லை ஏதோ ஒண்ணு குறைவா இருக்கும்... அதனால் காபி குடிக்கிறதை நிறுத்திட்டேன்..." என்றவன் மனைவியின் அருகில் வந்து,

"எனக்குப் பிடிச்ச மாதிரி காபி கலந்து கொடுத்தது நீ தான்... அதனால் என்றுமே உன் காபிக்கு நான் அடிமை..."

கண்சிமிட்டி குறும்பு குரலில் கூறியவனைக் கண்டு அவள் அயர்ந்து போய் நின்றாள்... ஒரு காபிக்கு இத்தனை அக்கப்போரா என்று...

'அதற்கு நீங்களே கலந்து குடிக்கலாமே...' என்று நுனி நாக்கு வரை வந்த வார்த்தைகளை முயன்று விழுங்கி கொண்டாள்...

அதை அவள் அப்போதே கேட்டிருக்கலாம்... அவனது குணம் அதிலேயே தெரிந்திருக்கும்...

எதுவுமே அவனுக்குப் பிடித்த விதத்தில் அதுவாய் தான் அவனிடத்தில் வந்து சேர வேண்டும்... அவனாய் தானாக எதையும் நாடி போக மாட்டான் என்று... அது அவன் விரும்பியதாக இருந்தாலும் கூட...

**********************

ஜீவாவின் திருமணச் செய்தியை ஊடங்களில் கண்டு அதிர்ந்து போன மணீஷா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தன் அறை தோழியைப் பிடித்து உலுக்கி எழுப்பினாள்...

"எதுக்குடி காலங்கார்த்தால எழுப்புற...?" என்று கொட்டாவி விட்டபடி எழுந்தவள் மீண்டும் படுக்கப் போக...

"ஏய் இங்கே பாருடி... அவனுக்குக் கல்யாணம் ஆகிருச்சாம்..." என்றபடி செய்தித்தாளை தோழியின் முகத்தின் முன்னே அவள் நீட்ட...

"யாருக்கு...?" என்றபடி அதைப் பார்த்த தோழி அதில் ஜீவாவின் புகைப்படத்தைக் கண்டதும் அதை அலட்சியமாய்த் தூக்கி போட்டபடி மீண்டும் படுக்கையில் சாய்ந்தாள்...

"என்னடி இப்படிப் பண்ற...?" மணீஷாவிற்கு அழுகை வரும் போலிருந்தது...

ஜீவாவை மடக்கி பிடித்து விடலாம் என்று அவள் கண்ட கனவு அத்தனையும் சிதறி போய்விட்டதே...

"நான் தான் சொன்னேனே... அவன் ஒரு புரியாத புதிர்ன்னு... மீடியா முன்னாடி இப்படித்தான் பல்லை காட்டி இளித்து வைப்பான்... இதே இது தனியா அவனைப் போய்ச் சந்திச்சு பாரு பல்லை கடிப்பான் கோபத்தில்... இவ்வளவு ஏன் நானே இரண்டு முறை ட்ரை பண்ணியிருக்கேன்... ஆள் மடங்கலையே..."

"அப்போ அவனைப் பத்தி வர்ற கிசு கிசு எல்லாம்..."

"உண்மையா இருக்கலாம் இல்லை இல்லாமலும் போகலாம்... அவனோட ஸ்டேட்டஸ்க்கு ஏத்த மாதிரி பொண்ணுங்க கூடப் பழகலாம்... நம்மளை மாதிரி சாதாரணப் பொண்ணுங்களை அவனுக்குப் பிடிக்காமல் இருக்கலாம்..." என்றவள்,

"உலகத்தில் இவன் ஒருத்தன் தான் பணக்காரனா...? எத்தனையோ பேர் இருக்காங்க... யூ டோன்ட் வொர்ரி..." என்றவள் மீண்டும் தூங்கி போக...

மணீஷா அப்படியே திகைத்து போய் அமர்ந்திருந்தாள்... அவள் மனதில் ஜீவா ஒரு புரியாத புதிராக விளங்கினான்...

**********************

தான் கேட்ட செய்தியை நம்ப முடியாமல் அமர்ந்திருந்தாள் ஹர்ஷிதா... ஜீவா இப்படித் திடீரென்று திருமணம் செய்வான் என்று அவள் கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை... என்றாவது ஒரு நாள் அவளைப் புரிந்து கொண்டு அவளது காதலை அவன் ஏற்றுக் கொள்வான் என்று நம்பிக்கையுடன் காத்திருந்தாள்...

ஆனால் அந்த நம்பிக்கையில் அவன் இடியை அல்லவா இறக்கி இருக்கிறான்...

அவளது மனம் மிகவும் வலித்தது... கண்களில் கண்ணீர் உடைப்பெடுத்து விடாமல் கொட்டியது... தொழிலில் உணர்வுகளை வெளிக்காட்டாமல் நிமிர்வாய் வலம் வந்தவளுக்குக் காதல் தோல்வியில் வடிந்த கண்ணீரை கட்டுப்படுத்த தெரியவில்லை...

"இனியாவது புத்தியோடு பிழைத்து கொள்..." என்றபடி அவள் முன் வந்து நின்றான் ரிஷ்வந்த்...

"நான் சொல்லும் மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டும் வழியைப் பார்... அவனை விட அழகனாய், பணக்காரனாய் உள்ள மாப்பிள்ளைகள் ஃபோட்டோ இதில் இருக்கு..."

என்றபடி தங்கை முன் ஒரு கவரை தூக்கி போட்டான் அவன்... எந்தவொரு உணர்வும் இல்லாமல் அதை வெற்றுப்பார்வை பார்த்தவள்,

"இதில் யாரும் ஜீவா இல்லையேண்ணா..." என்றாள் மனம் வெறுத்த குரலில்...

"ஜீவா... ஜீவா... அவனை விட்டால் வேறு ஆளே இல்லையா இந்த உலகத்தில்... உன்னைப் பிடிக்காதவன் பின்னால் நீ ஏன் தொங்கிட்டு அலையற... நீ பண்றது எனக்குச் சுத்தமா பிடிக்கலை..."

அவனுக்கும் கோபம் வந்தது தங்கையின் முட்டாள்த்தனத்தை எண்ணி...

"இனியும் அவர் பின்னால் சுத்த எனக்கு என்ன பைத்தியமா பிடிச்சியிருக்கு..." என்ற தங்கையைச் சந்தோசமாய்ப் பார்த்தான் ரிஷ்வந்த்...

"அப்படின்னா கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறியா...?"

"இல்லைண்ணா... இனி என் வாழ்க்கையில் கல்யாணம் என்பதே கிடையாது..." என்று மரத்துப் போன குரலில்

கூறியவள் அங்கிருந்து சென்றுவிட அவனது கோபம் எல்லாம் இப்போது ஜீவா மீது தான் திரும்பியது...

"இப்போது உனக்கும் மனைவி வந்துவிட்டாள் இல்லையா ஜீவா...?" கோபத்துடன் அவன் பல்லை கடித்த போது சரியாக அங்கு வந்தாள் அவனது மனைவி தீபிகா...

"அவளை உன்னால் என்ன பண்ண முடியும்...?" இகழ்ச்சியாய் வந்தது அவளது வார்த்தைகள்...

அதைக் கண்டு அவனது முகம் கறுத்தது...

"ஏன்...? ஒண்ணும் பண்ண மாட்டேன்னு நினைப்பா...?" என்றான் கோபமாய்...

"அதுக்கான திறமை உனக்கு இருக்கா...?"

"ஏன் என் திறமையைப் பத்தி உனக்குத் தெரியாதா என்ன...?"

"உன் திறமை பத்தி தான் எனக்கு நல்லா தெரியுமே... அதுக்குச் சாட்சியானது ஃபோர்டிங் ஸ்கூலில் படிக்கிறதே உன் மகனாய்..." என்றவளின் குரலில் அத்தனை கேலி, கிண்டல்...

அவளது கேலிக்கும், கிண்டலுக்கும் பின்னால் அவளது ஒட்டு மொத்த மனவலி இருந்தது... இப்போதும் அது அவளுக்கு வலிக்கத்தான் செய்கிறது... அதை மறக்கத்தானே அவள் தினமும் மதுவின் துணையை நாடுகிறாள்...

குடும்பக் குத்து விளக்காய் இருந்தவளை இப்படி நாலு பேர் தெருவிளக்கு என்று சொல்லும்படி வைத்தது அவளது கணவன் தானே... இதில் குடும்பக் கௌரவம் என்று வீண் வெட்டி பேச்சு வேறு... அவளுக்கு அத்தனை வெறுப்பாய் இருந்தது கணவன் மீது...

அதில் அவன் முகம் அவமானத்தில் சிறுத்துப் போனது...

"நீ பேசியதுக்கு, அவன் நடத்துக்கிட்டதுக்கு எல்லாம் நான் தக்க பதிலடி கொடுக்காம போக மாட்டேன்... அந்த ஸ்மிருதியை ஏதாவது செய்யலாம்ன்னு நினைச்சேன்... இப்போ அவள் எதுக்கு...? இப்போ தான் அவனது அருமை மனைவி இருக்காளே..." என்றவனின் வார்த்தையில் 'நான் சொன்னதைச் செய்வேன்' என்ற வேகம் இருந்தது...

"ஏய்... இங்கே பார்... நானா தான் அவனைத் தேடி சென்றேன்... அவன் இல்லை... என்ன புரிந்ததா...? இதுக்கு மேல அவனை நீ ஏதாவது செஞ்ச நான் ஃபிரஸ்சை கூப்பிட்டு உன் மானத்தை வாங்கிவிடுவேன்... உன் வீக்னெஸ் என் கையில்..."

நெஞ்சழுத்தத்துடன் மிரட்டிய மனைவியை ஒன்றும் செய்ய முடியாதபடி வெறுமனே வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தவன்,

"ச்சே..." என்ற ஒற்றைச் சொல்லோடு அவளை விட்டு விலகி சென்றான்...

கணவன் சென்றதும் தனது சக்தி எல்லாம் வடித்தார் போன்று அப்படியே அமர்ந்துவிட்டாள் தீபிகா... அவ்வளவு நேரம் இருந்த மன தைரியம் சொல்லாமல் கொள்ளாமல் அவளை விட்டு விலகி சென்றது... மனம் கோழையாகி போகக் குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்தாள் தேற்றுவார் யாருமின்றி...

அவளது உதடுகள் மெதுவே முணுமுணுத்தது...

"ஐ லவ் யூ ரிஷி..."

கணவன் மீதான காதல் தான் அவனை ஒன்றும் செய்ய விடாமல் அவளைத் தடுத்து நிறுத்தி கொண்டு

இருக்கிறது... அது தான் அவனிடத்தில் கோபமாகவும் நடந்து கொள்ளச் செய்கிறது...

அவளின் மனதினை அவன் என்றுமே புரிந்து கொள்ளப் போவதில்லை... அவளை மாதிரியான பெண்களுக்கே உண்டான சாபம் இது... மனம் துயரக்கடலில் தத்தளித்தது...

ஜீவாவின் திருமணச் செய்தி கேட்ட ஸ்மிருதியோ மனம் நிறையக் கோபத்துடன் இருந்தாள்... எப்படி அவன் தன்னை ஏமாற்றலாம் என்று... அம்ரிதா மேல் அத்தனை பாசம் வைத்திருப்பவன் இப்படித் திடுமென வேறு பெண்ணை மணந்து கொள்வான் என்று அவள் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை...

இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் அவன் தன்னை மணந்து கொள்வான் என்றே எண்ணினாள்... இப்படித் தன்னை வெறுத்து ஒதுக்குவான் என்று அவள் நினைத்தும் பார்க்கவில்லை...

விசயம் கேள்விப்பட்ட அடுத்த நொடி அவனைச் சந்தித்துச் சட்டையைப் பிடித்து, 'என்னை ஏன் இப்படி ஏமாற்றிவிட்டாய்...?' என்று கேட்க வேண்டும் என்ற எண்ணம் வெறித்தனமாய் எழுந்த போதும் அதை உடனே செயல்படுத்த அவளால் முடியவில்லை...

அவள் அப்படி எல்லாம் அவ்வளவு எளிதாக அவனைச் சந்தித்துவிட முடியாது... அது அவனே விருப்பப்பட்டால் ஒழிய... ஏனெனில் அப்படி அவள் விருப்பப்படி சந்திக்க முடியாதபடி இந்த ஜீவா அவளைக் காவல் மூலம் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறான்... ஏறக்குறைய சிறைக் கைதியை போல்...

உலகெங்கும் அவள் சென்று வர அனுமதி உண்டு... அதுவும் மெய்க்காப்பாளர் உதவியுடன்... ஆனால் அவனது வீடு செல்வதற்கு அவளுக்கு அனுமதி கிடையாது...

அவள் மீது அவன் இப்படிப்பட்ட அடக்குமுறைகளை விதிக்க, விதிக்க அவளுக்கு அதை எல்லாம் உடைத்துக் கொண்டு வெளிவர வேண்டும் என்பது போல் ஒரு வெறி கிளம்பியது...

காதலில் ஒருத்தி மிதவாதியாக இருக்கின்றாள்... இன்னொருத்தி இப்படித் தீவிரவாதியாக இருக்கின்றாள்...

இந்தக் காதல் தான் மனிதனை என்ன பாடு படுத்துகிறது...!!!

*******************

அலுவலகம் சென்ற கணவன் சிறிது நேரத்தில் வீடு வந்ததை உணர்ந்து கேள்வியாய் அவனைப் பார்த்தாள் சுபிக்ஷா...

"உன் கூட டைம் ஸ்பெண்ட் பண்ணணும்ன்னு வந்திட்டேன்..." என்றவன் மனைவி அருகில் அமர்ந்து அவளை இழுத்து அணைத்து,

"ஒரு நொடி கூட உன்னை விட்டிருக்க முடியலை பேபி... அப்படியே காந்தம் போல் என்னை இழுக்கற..." என்றவனது கிறக்க குரல் அவளைத் தான் காந்தம் போல் ஈர்த்தது...

அதில் மனம் மயங்கியவள் அவனது அணைப்பில் வாகாய் அடங்கினாள்... சிறிது நேரம் அப்படியே கண் மூடி இருந்தார்கள் இருவரும்...

பிறகு, "வா... ஹாலுக்குப் போகலாம்..." என்று ஜீவா மனைவியை அழைக்க... அவள் புரியாது அவன் பின் சென்றாள்...

அங்கு வரவேற்கறையில் புகழ் பெற்ற ஆடை வடிவமைப்பாளர் இவர்களுக்காகக் காத்துக்

கொண்டிருந்தார்... அவரைக் கண்டதும் அவளது விழியில் வியப்பு தோன்றியது...

"இவரை உனக்கு அடையாளம் தெரிகிறதா...?" மனைவி காதில் கிசுகிசுத்தான் ஜீவா...

"இவரைத் தெரியாமல் இருக்குமா..." என்றவளின் குரலில் அத்தனை பிரமிப்பு...

"இவர் தான் என்னோட ட்ரெஸ் டிசைனர்..."

அதில் அவனைத் திரும்பி பார்த்தவளுக்கு அன்று அவன் பெருமையாய்ச் சொன்னது நியாபகம் வந்தது...

"நீங்க பெருமைப்பட்டதில் ஒரு அர்த்தம் இருக்கு..." என்றாள் உண்மையாய்...

அதைக் கேட்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

மனைவியின் கரம் கோர்த்தபடி வந்தவனைக் கண்டு மரியாதையாய் எழுந்து நின்ற அந்த ஆடை வடிமைப்பாளர் அவனைக் கண்டு பிரமித்தபடி அவனின் கரத்தோடு கரம் குலுக்கியபடி,

"உங்களை நேரில் சந்தித்ததில் ரொம்பச் சந்தோசம் மிஸ்டர். ஜீவா... எத்தனையோ தடவை உங்களைப் பார்க்க முயற்சித்தேன்... ஆனால் முடியவில்லை... இன்று எனக்கு நல்ல நேரம் என்றே நினைக்கிறேன்..." என்று தெளிவான ஆங்கிலத்தில் ஜீவாவை கண்டு பிரமித்தபடி கூறியவரை கண்டு அவனது மனையாள் வியந்து போய்ப் பார்த்தாள்...

பின்னே அவள் வியந்து பார்க்கும் ஒருவர் அவளது கணவனைக் கண்டு பிரமிக்கிறார் என்றால் அவளுக்கு ஆச்சிரியமாக இருக்காதா...

"எங்களோட ரிசப்சனுக்கு ட்ரெஸ் டிசைன் பண்ணணும்... அதுக்குத் தான் வர சொன்னேன்... மீட் மை வொய்ப் சுபிக்ஷா..." என்றவன் மனைவியின் வியந்த நிலையைக் கண்டு அவளின் தோளில் கை வைத்து அவளின் நினைவை தன்புறம் திருப்பினான்...

அவருக்குக் கை குவித்து வணக்கம் கூறியவள் கணவனிடம், "ஏங்க நீங்க என்ன அவ்வளவு பெரிய ஆளா...?" என்றாளே பார்க்கலாம் அப்பாவியாக...

அதைக் கேட்டு அவனுக்குச் சட்டென்று புரையேறியது... அதில் பிரமிப்பு நீங்கியவளாய் அவனைப் பதற்றத்தோடு பார்த்தவள்,

"இருங்க தண்ணி கொண்டு வர்றேன்..." என்றவளின் கைப்பிடித்துத் தடுத்து நிறுத்தியவன்,

"என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்டுட்டியே பேபி... மாமன் லெவல் என்னன்னு இன்னும் உனக்குத் தெரியலையே..." என்றவனது குரலில் கோபமோ, வருத்தமோ இல்லை... மாறாகக் கேலியே இருந்தது...

அதைக் கண்டு அவளுக்கு அப்படி ஒரு வெட்கமாய்ப் போய்விட்டது...

மாமன் மகனாய் சொந்தமாய்ப் பார்த்த கணவனின் அந்தஸ்து பேதத்தை அவள் உணர்ந்திருந்தாலும் அவன் இந்தளவுக்கு அந்தஸ்தில் உயர்ந்து இருப்பான் என்று நினைக்கவில்லை...

"எனக்குத் தெரியாது..." என்று முணுமுணுத்தவளின் தோளோடு அணைத்து கொண்டவன்,

"நான் உனக்கு எப்பவும் உன் மாமன் மகன் தான்... உன் கணவன் தான்..." என்றவனைப் பார்த்தவள் விழியில் அத்தனை நேசம் இருந்தது...

அதை அவன் உணர்ந்தே இருந்தான்... மனைவியின் நேசத்தைப் பெறுவதற்காகத் தன் அந்தஸ்தில் இருந்து இறங்கி வரவும் அவன் தயாராக இருந்தான் அந்த நொடி...

ஆடை வடிவமைப்பாளர் காட்டிய உடை மாதிரிகளை மனைவியிடத்தில் காட்டி விட்டு ஜீவா அமைதியாக ஒதுங்கி கொண்டான்...

"உங்களுக்குப் பிடிச்சதை நீங்க சொல்லுங்களேன்..." என்று அவனின் விருப்பத்தை அவள் கேட்க...

"ட்ரெஸ் போட போறது நீ... அப்போ நீ தான் செலக்ட் பண்ணணும்..." என்று அவன் கையை விரித்தான்...

சிறிது நேரத்தில் அவள் தேர்வு செய்து கொடுத்ததையே உடையாகத் தைக்கச் சொன்னவன் தனக்கு வேண்டியதையும் அவளையே தேர்வு செய்ய வைத்தான்...

அதன் பின் ஆடை வடிமைப்பாளர் சென்றதும் சுபிக்ஷா கணவனை இமைக்காது பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்க...

"என்ன பேபி பார்வை எல்லாம் பலமாயிருக்கு..." என்று அவன் அவளை வம்பிழுக்க...

"ஒண்ணுமில்லை..." என்றவளை அணைத்தவன்,

"அப்போ ஏதோ இருக்கு... சொல்லு... சொல்லு..." என்க...

"நல்லவங்கன்னு நினைச்சவங்கன்னு எல்லாம் கெட்டவங்களா போயிட்டாங்க... கெட்டவங்கன்னு நினைச்ச நீங்க ரொம்ப நல்லவங்களா இருக்கீங்க..." என்றவளது கண்கள் கலங்கியது...

அவள் அபி என்று குறிப்பிட்டுச் சொல்லாமல் மொட்டையாகக் கூற அவனுக்கு அது புரிந்தது...

"ஹேய்... இதுக்கு எல்லாமா கண் கலங்குவது... எனக்கு உன் சந்தோசம் தான் முக்கியம்..."

மனைவியின் உச்சந்தலையில் இதழ் பதித்தவன் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்... அது அவளுக்குப் பெரும் ஆறுதலை தந்தது என்றால் மிகையில்லை...

"ஏங்க..." திடுமென அவனை அழைத்தவள், "நம்ம ரிசப்சனுக்கு நம்ம வீட்டில் இருந்து எல்லோரும் வருவாங்களா...?"

ஆவலுடன் கேட்டவளை குனிந்து பார்த்தவன் புரியாமல், "இது அஃபிசியலா கொடுக்கிறது... இதுக்கு எதுக்கு வீட்டாளுங்க எல்லாம்...?"

அதில் அவளது முகம் வாடி போனது... ஆனாலும் அவனிடம் மேலே எதிர்த்து வாதாடவில்லை...

"இப்போ என்ன அவங்களை வர சொல்லணுமா...?" என்றான் அவளின் மனதை புரிந்தவனாய்...

"ம்... ம்..." முகம் மலர தலையை வேகமாய் ஆட்டியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு தான் வந்தது...

"ஓகே டன்..." என்றான் வலக்கை கட்டை விரலை உயர்த்திக் காட்டியபடி...

"தேங்க்ஸ்..." என்று சொன்னவளை கண்டு குறும்பாய் பார்த்தவன்,

"அன்னைக்கு வினீ பேபிக்குத் தேங்க்ஸ் எப்படிச் சொல்றதுன்னு சொல்லிக் கொடுத்தேனே... அதை நீ பார்க்கலையா...?"

அன்று அவன் 'தேங்க்ஸ்' உரைத்தவிதம் அவள் மனக்கண்ணிலாட வெட்கத்தில் முகம் குனிந்தவள்,

"நான் பார்க்கலையே..." என்று பொய்யுரைக்க...

"அப்போ நான் சொல்லிக் கொடுக்கவா..." என்றவன் அவள் கன்னம் நோக்கி குனிய...

வரவேற்பறையில் இருந்து கொண்டு கணவன் செய்யும் அட்டகாசம் தாங்க முடியாது தன் முகத்தை இரு கை கொண்டு மூடி,

"எனக்கு நல்லா நியாபகம் இருக்கு..." என்றவள் கை இடைவெளியில் கணவனைப் பார்த்து இறைஞ்சுதலாக,

"ப்ளீஸ் என்னை விட்டிருங்க..." என்க...

"ஹாலில் இருப்பதால் போனா போகுதுன்னு விடறேன்... ரூமுக்கு வந்ததும் எனக்கு நிறையத் தேங்க்ஸ் சொல்லணும்..." என்று போலியாக மிரட்டிய கணவனைக் கண்டு கையைக் கீழே இறக்கியவளின் முகத்தில் புன்னகையின் சாயல்...

"எல்லோரையும் கூப்பிட்டு சொல்லலாமா...?" அவனிடம் அனுமதி கேட்டவளை கண்டு அவன் சம்மதமாய்த் தலையாட்டினான்...

"நீங்க ஏன் மாமா கிட்ட பேச மாட்டேங்கிறீங்க...? அவர் ரொம்ப நல்லவர் தெரியுமா...?"

மனைவியின் வார்த்தையில் அவனது முகத்தில் இறுக்கம் வந்தாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாது புன்னகையுடன்,

"அவர் மாம்க்கு எந்த விதத்தில் பொருத்தமா இருக்காரு... அப்படிப்பட்டவர்..." மேலே ஏதோ சொல்லப் போனவன் மனைவியின் பார்வையில் அப்படியே நிறுத்தினான்...

"நானும் அவரைப் போல் தானே..." என்று மனம் வருந்த கூறிய மனைவியின் வார்த்தையில் அவன் அப்படியே ஸ்தம்பித்தான்...

பெற்றோர் இடத்தில் அவன் தங்களை வைத்து பார்க்கவில்லை... இதுவரை அவன் இதைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்கவில்லை... ஆனாலும் மனைவியின் வருத்தம் அவனையும் வருந்த செய்தது...

"ஹேய் அப்படி எல்லாம் இல்லை பேபி... எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும்... மனசு ஒண்ணு சேர்ந்திருச்சுன்னா இந்த வேறுபாடு எல்லாம் ஒண்ணுமே இல்லை..." என்றான் சமாதானமாக...

"இது மாமாவுக்கும் பொருந்தும் இல்லையா... அத்தையும் மாமாவும் விரும்பி கல்யாணம் பண்ணியிருந்தால்...?"

அவளது வார்த்தைகளில் இருந்த உண்மை அவனைச் சுரீரென்று தாக்கியது... அவள் கூறுவதும் உண்மை தானே... பெற்றோரிடத்தில் அவன் கண்ட காதலை வேறு யாரிடத்திலும் அவன் கண்டதில்லையே... இதை ஏன் அவன் இதுநாள் வரை உணரவில்லை...

மேலே யோசிக்க முடியாமல் தலையை அழுந்த கோதி கொண்டவன்,

"ஐம் ரியலி சாரி பேபி..." என்று மனைவியிடத்தில் மனதார மன்னிப்பு கேட்டான் அவன்...

"நமக்குள் மன்னிப்புங்கிற வார்த்தை வேண்டாம்... நீங்க மாமா கிட்டத்தான் மன்னிப்பு கேட்கணும்... அது கூடத் தேவையில்லை... நீங்க பேசினாலே அவங்க ரொம்பச் சந்தோசப்படுவாங்க..." என்றவள்,

"எனக்காக ப்ளீஸ்..." அபிநயத்தோடு கெஞ்சியவளை கண்டு அவனது மனமுருகியது...

"அவருக்காக இல்லைன்னாலும் உனக்காகப் பேசுகிறேன்... ஓகேவா பேபி..." என்ற கணவனைக் கண்டு மகிழ்ச்சியாய்,

"டபுள் ஓகே..." என்றவள் தாமதிக்காது சென்னைக்கு அழைத்தாள்...

எல்லோரிடமும் அவர்களது வரவேற்பு பற்றி நீளமாய் ஒரு கதையைப் பேசி அவர்களுக்கு அழைப்பு விடுவித்தவள் கடைசியாக மாமனிடம் நலம் விசாரித்து விட்டு,

"மாமா... உங்க மகன் உங்க கிட்ட ஏதோ பேசணுமாம்..." என்றவளை கண்டு ஜெகன் ஆச்சிரியப்பட்டுப் போனவனாய்,

"யாரு ஜீவாவா...? நீ உண்மையாவா சொல்ற சுபி..." தவிப்பும், நெகிழ்ந்தும் வந்த தந்தையின் வார்த்தை ஜீவாவின் மனதையும் ஏதோ செய்தது...

உறவின் அர்த்தம் புரியாது இருந்தவன் இப்போது அதன் அர்த்தம் புரிந்ததாலோ என்னவோ தந்தையின் குரல் அவனது மனதை சற்றுப் பிசையத்தான் செய்தது...

"நீங்க பேசுங்க மாமா..." என்று ஜெகனிடத்தில் கூறியவள் கணவனிடம் அலைப்பேசியை நீட்டினாள்...

அலைப்பேசியை வாங்கிக் காதில் வைத்த மகனோ என்ன பேசுவது என்று தெரியாமல் தயங்கினான்... அவரிடம் அவன் இணக்கமாகப் பேசி பல வருடங்களாகி விட்டது... அதனால் வார்த்தை வரவில்லை மௌனமாய் இருந்தான்...

அத்தகைய மௌனம் எல்லாம் ஜெகனுக்குத் தேவையில்லை போலும்... அவன் மடை திறந்த வெள்ளமென விடாது பேசினான்...

"ஜீவா... எப்படிப்பா இருக்க...? இந்த அப்பா கிட்ட பேச இப்பவாவது உனக்கு மனசு வந்ததே... ரொம்பச் சந்தோசமா

இருக்குப்பா..." கண்ணீர் குரலில் கூறினாலும் அவனது வார்த்தையில் மிதமிஞ்சிய மகிழ்ச்சியே இருந்தது...

"ம்... நல்லாயிருக்கேன்... நீங்க...?" தயக்கத்துடன் வந்தது மகனது வார்த்தைகள்...

தயங்கி, தயங்கி பேசும் கணவனைப் புன்சிரிப்புடன் பார்த்திருந்தாள் சுபிக்ஷா...

"எனக்கென்ன நான் நல்லாயிருக்கேன்... நீ பேசாதது ஒண்ணு தான் குறையா இருந்தது... இப்போ அதுவும் தீர்ந்திருச்சு..."

அதற்குப் பதில் பேசாது இருந்த ஜீவாவின் மனதில் அன்று தவறாகத் தோன்றியது எல்லாம் இன்று சரியாகப்பட்டது தந்தையின் பார்வையில்... அதனால் என்னவோ,

"சாரிப்பா..." என்றான் மனதார...

அவ்வளவு தான் மகனின் மன்னிப்பில் ஜெகன் அப்படி ஒரு சந்தோசம் அடைந்தான்... அருகில் இருந்த மனைவியிடம் 'பார்த்தியா என் மகனை' என்பது போல் ஒரு பெருமிதப் பார்வை வேறு...

'ஸ்பீக்கர் ஃபோன்' இல் தான் ஜெகன் பேசிக் கொண்டு இருந்தான்... அதனால் ருத்ரஸ்ரீ கணவனும், மகனும் பேசுவதை அருகில் இருந்து கேட்டுக் கொண்டு இருந்தாள்...

முதலில் அதிசயமாக அதைக் கேட்டு கொண்டிருந்தவள் கடைசியில் மகனின் மன்னிப்பில் அவளது முகம் யோசனையாய்ச் சுருங்கியது...

அவள் அறிந்த மகனுக்கு மன்னிப்பு என்கிற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாது... அப்படிப்பட்டவன் இன்று மன்னிப்புக் கேட்கிறான் என்றால் அவளது மனதில் குழப்பம் தோன்றியது...

அப்போது அவளது காதில் கலகலவென மகனது குரலும், மருமகளது குரலும் சேர்ந்து ஒலித்தது...

"உங்க மாமா கிட்ட மன்னிப்புக் கேட்டுட்டேன்... இப்ப உனக்குச் சந்தோசமா..." என்று சிரிப்புடன் மகன் கேட்க...

அதற்கு மருமகளும், "டபுள் சந்தோசம்..." என்க...

"அப்போ நீ இந்த மாமனை ட்ரிபிளா கவனிக்கணும்..." என்று மனைவியைக் கொஞ்சிய மகனது குரல் அவளுள் பெருத்த யோசனையைத் தோற்றுவித்தது...

அதற்குள் ஜெகன் அலைப்பேசியைத் துண்டித்து விட்டான்...

"ஃபோனை ஆஃ பண்ண மறந்து பேசிக்கிட்டு இருக்காங்க..." என்ற ஜெகன் மனைவியிடம்,

"இன்னைக்கு எனக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு ஜில்லு..." என்றான் நிறைவாய்...

"நம்ம ஜீவாவா இதுன்னு என்னால் நம்ப முடியலை... எல்லாம் மருமகள் வந்த நேரம்..." என்று அவன் வெள்ளேந்தியாய் சொல்ல...

"அது தான் என்னாலும் நம்ப முடியலை..." என்றாள் அவள் எதையோ ஆராய்ந்தவாறு...

மனைவியின் முகத்தை வைத்து அவளின் யோசனையைப் புரிந்து கொண்டவன், "ரொம்ப யோசிக்காதே ஜில்லு... அவன் நம் மகன்... அதை மட்டும் நினைவில் வை..." என்க...

கணவன் சொன்னதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... மனது சரி என்று வாதிட்டாலும், அவளது அறிவோ 'எங்கோ தவறு நடந்திருப்பதாய்' அவளை எச்சரித்தது...

அறிவு சொன்னபடி கேட்ட ருத்ரஸ்ரீ அடுத்த இரண்டு மணி நேரத்தில் தனக்குக் கிடைத்த விபரத்தில் சற்றுக் கலங்கித்தான் போனாள்...

ஆதாரமில்லாத ஆதாரத்தால் அவளால் எதையும் நிரூபிக்க முடியாமல் போனது... அதனால் வாயிருந்தும் ஊமையாய் அவள் மாறி போனாள்...

மனதுக்குள் அத்தனை வேதனையாய் இருந்தது அவளுக்கு...!!!

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 15

அருகில் படுத்திருந்த மனைவியின் கண்ணீர் கறை படிந்த முகத்தினைப் பார்த்தபடி கவலையுடன் அமர்ந்திருந்த ஜெகனுக்குத் தூக்கம் தூரப் போனது... அவனது மனைவி ருத்ரஸ்ரீ மற்ற பெண்களைப் போன்று எதற்கும் கண்ணீர் விட்டு அழும் ரகம் கிடையாது...

மகன் தன்னிடம் பேசிய சந்தோசத்தில் அன்றைய நாள் முழுவதும் தரையில் கால் பாவாமல் திரிந்து கொண்டு இருந்தவன் இரவு அறைக்குள் வந்த பின்னும் மனைவியிடத்தில் ஓயாது மகனை பற்றிப் பெருமை பேசி கொண்டு இருந்தான்... ருத்ரஸ்ரீயோ எந்தவித சுரத்தும் இல்லாமல் கணவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

"எனக்கு நம்பிக்கை இருந்தது ஜில்லு... என்னைக்காவது ஒரு நாள் ஜீவா என்னைப் புரிஞ்சிப்பான்னு... என்னோட நம்பிக்கையை என் மகன் காப்பாத்திட்டான்..." என்று மகிழ்ச்சியில் திளைத்தவனை அப்படியே அணைத்து கொண்டாள் அவனது மனைவி...

சிறிது நேரம் அவளிடம் இருந்து எந்தச் சத்தமுமில்லை... அவனுக்கு இருந்த சந்தோசத்தில் அவளது அருகாமையை ரசித்தவன் அவளது மௌனத்தை ஏன் என்று யோசிக்கவில்லை...

தனது சட்டையின் ஈரத்தை உணர்ந்து அவன் பதறி போய் மனைவி முகத்தை நிமிர்த்திய போது தான் அவனுக்குமே தெரிந்தது அவள் அழுது கொண்டு இருக்கிறாள் என்று...

பதட்டத்துடன் என்ன என்று கேட்டவனுக்கு அவள் இதுவரை பதில் கூறவில்லை... அவனது சமாதான முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்து இறுதியில் அவளே அழுது அழுது ஓய்ந்து போய் உறங்கிவிட்டாள்...

திருமணமாகி இத்தனை வருடங்களில் அவள் அழுது அவன் பார்த்தது அன்று அவர்கள் வாழ்க்கையைத் தொடங்கியன்று மட்டுமே... அதுவும் அவனுக்காக வருத்தப்பட்டு அவள் அழுதது... அதற்குப் பின் அவள் அழுது அவன் பார்த்ததில்லை... குழந்தை பேற்றின் போது கூட வலியை தாங்கி கொண்டவள் சிறிதும் அழவில்லை... அதற்கு அவள் கூறிய காரணம் இன்றும் அவனது நினைவில் பசுமையாக...

"என்னுடைய கண்ணீர் விலை மதிப்பில்லாதது... அது உங்களுக்காக மட்டும் தான் சிந்தும்... வேறு யாருக்காகவும் இல்லை... அது நம் குழந்தைகளாக இருந்தாலும் கூட..."

உண்மை தான்... அவளே விலை மதிப்பில்லாதவள்... அது போல் தான் அவளது கண்ணீரும்... அதன் மதிப்பை உணர்ந்தவனாய் அவன் இருந்ததால் தான் இதுநாள் வரை அவள் கண்ணீர் விடும்படி அவன் நடந்து கொண்டது கிடையாது... அவளின் அருமையை நன்கு உணர்ந்தவன் அவன்... அப்படித்தான் அவளும் அவனிடம் நடந்து கொண்டாள்...

அப்படிப்பட்டவள் இன்று இப்படி அழுகிறாள் என்றால்...???
'நான் ஏதும் என்னையும் அறியாமல் தவறு செய்துவிட்டேனோ...' என்று உள்ளுக்குள் அச்சம் அடைந்தான் அந்தக் காதல் கணவன்...

என்ன யோசித்தும் அவன் தவறு செய்ததாய் அவனுக்கு நியாபகம் இல்லை... தவறு செய்தால் அல்லவா அது அவனுக்கு நியாபகத்தில் இருக்கும்... பிறகு வேறு என்ன காரணம் என்று யோசித்தவனுக்கு அப்போது தான் அது உறைத்தது...

அவள் என்றுமே தான் காயப்பட்டதற்காக அழ மாட்டாள்... அவன் மனக் காயமடைந்தால் தான் அவள் அழுவாள்... அவனின் வருத்தம் அந்தளவுக்கு அவளைப் பாதிக்கும்...

அப்படி என்றால் இப்போது அவனை வருத்தமுறச் செய்த, செய்யப் போகும் விசயம் தான் என்ன...??? விடை தான் அவனால் கண்டுப்பிடிக்க முடியவில்லை... மனைவியாய் வாயை திறந்து கூறினால் தான் உண்டு...

அந்த அதிகாலை நேரத்தில் மும்பையில் ஜீவா வீட்டின் முன்பு நின்று கொண்டு ஸ்மிருதி கத்தி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு இருந்தாள்... அத்தனை காவல்களையும் மீறி ஜீவாவை பார்ப்பதற்காக இந்த நேரத்தில் அவனின் வீடு தேடி வந்துவிட்டாள் அவள்...

ஆனால் வாயிலில் இருந்த காவலாளி அவளை உள்ளே விட மாட்டேன் என்று மறுத்து எஜமான் மீதான விசுவாசத்தைக் காட்டியவன் கல் போல் அசையாது நின்றான்...

அதைக் கண்டு கோபம் கொண்டவள் வாய்க்கு வந்ததைப் பேசி தாறுமாறாய் அவனைத் திட்ட துவங்கினாள்...

எப்போதும் போல் அதிகாலை விழித்து எழுந்து வந்த சுபிக்ஷா வாயிலில் கேட்ட பெண்ணின் சத்தமான குரலில் வெளியில் வந்து எட்டி பார்த்தாள்...

சுபிக்ஷாவை கண்டதும் ஸ்மிருதியின் கோபம் எல்லையைக் கடக்க ஆத்திரத்தில் அவளைக் கண்டதும் திட்டத் துவங்கினாள்... அவளது பேச்சு எல்லாமே இந்தியில் இருந்ததால் சுபிக்ஷாவால் சில வார்த்தைகளைத் தவிர வேறு ஒன்றையுமே புரிந்து கொள்ள முடியவில்லை...

ஆனால் ஸ்மிருதியின் பேச்சின் இடையே வந்த அம்ரிதாவின் பெயரை புரிந்து கொண்டவள் 'ஒருவேளை இவள் தான் அம்ரிதாவின் அம்மாவோ' என்று நினைத்து அவளை உள்ளே விடச் சொன்னாள் காவலாளியிடம்...

அது தான் தவறாகி போனது... உள்ளே நுழைந்த ஸ்மிருதி திமிருடன் அவளைச் சிறிதும் கண்டு கொள்ளாமல்

வீட்டினுள் நுழைந்து அங்கிருந்த சோபாவில் அமர்ந்து கொண்டு,

"போய் ஜீவியை வரச் சொல்..." என்றாள் அதிகாரமாக... அவளது அதிகாரமான பேச்சில் சுபிக்ஷா தான் வாயடைத்து போனாள்...

ஆனாலும் அவள் சொன்னதை அப்படியே செய்தாள் சுபிக்ஷா...

உறங்கி கொண்டிருந்த கணவனை எழுப்பி, "அம்ருவோட அம்மா வந்திருக்காங்க...?"

தூக்க கலக்கத்துடன் எழுந்து அமர்ந்தவன் மனைவியின் வார்த்தையில் அதிர்ச்சி அடைந்தவனாய், "வாட்...?" என்றபடி அவசரமாய் எழுந்து அறையை விட்டு வெளியில் வந்தான்...

அவனது அதிர்ச்சி கண்டு சுபிக்ஷாவிற்கு உள்ளம் வருந்தியது...

வேகமாய் மாடிப்படி இறங்கியவனின் பின்னே அவளும் கீழே இறங்கி வந்தாள் மிகுந்த மன வருத்தத்துடன்...

ஜீவாவை கண்டதும் அமர்த்தலாய் அமர்ந்திருந்த ஸ்மிருதி எழுந்து விறுவிறுவென அவன் அருகில் வந்து, "என்னை விட்டுட்டு இவளை கல்யாணம் பண்ணியிருக்கியே... அப்படி எந்த விதத்தில் இவள் என்னை விட உயர்ந்து போய்விட்டாள்...? இல்லை என்னை விட இவள் என்ன அவ்வளவு அழகா...?" என்று கேட்டவளின் குரலில் ஆதங்கத்தை விடக் கோபமும், கிண்டலும் சரிவிகிதமாய்க் கலந்து இருந்தது...

"ஏய்..." என்று ஒற்றை விரல் நீட்டி ஸ்மிருதியை எச்சரித்த ஜீவா வாசலை நோக்கி கையைக் காண்பித்து,

"வெளியில் போ..." என்றான் கோபமாய்...

யாரின் வீட்டிற்குள் வந்து யாரை பேசுவது... கோபம் என்றால் அப்படி ஒரு கோபம் வந்தது அவனுக்கு...

"நான் எதுக்குப் போகணும்...? நீ என்னோட காதலன்... அம்ருவோட அப்பா..." அவள் மேலே பேசும் முன்,

"ச்சீய்... நிறுத்து..." என்றான் அவன் அருவருப்புடன் முகத்தைச் சுளித்துக் கொண்டு...

"நீ யார்ன்னு எனக்குத் தெரியும்... அதே போல் நான் யார்ன்னு உனக்கும் தெரியும்... இதுக்கு மேல் நீ இங்கே இருந்தேன்னா உன்னையும், அம்ருவையும் நான் மறக்க வேண்டி வரும்... இனி உன் வாழ்க்கையை நீ பார்த்துக்க வேண்டியது தான்..."

அவனது பேச்சில் ஸ்மிருதியின் பார்வை தீவிரமாய் அவனைப் பார்த்தது...

"இப்படி வீடு தேடி வந்து நீ என் மனைவியை அசிங்கப்படுத்தினா நானும் உன்னை அசிங்கப்படுத்த வேண்டி வரும்..." என்றவனின் பார்வை அவளின் முகத்தில் ஒரு நொடி நிலைத்தது...

அதன் தீர்க்கத்தைத் தாங்க முடியாது தலை குனிந்தவளுக்கு அத்தனை அவமானமாக இருந்தது...

"நீ ஒழுங்கா இருந்தா எல்லாம் ஒழுங்கா நடக்கும்... இல்லை என்றால் உன்னால் நான் அம்ருவின் வாழ்க்கையில் இருந்தும் விலக நேரிடும்... எது வேண்டும்ன்னு நீயே முடிவு செய்து கொள்..."

கற்சிலையாய் நின்றபடி சற்றும் இளகாமல் கடுமையுடன் பேசிய ஜீவாவை கண்டு ஸ்மிருதியின் கண்கள் கரித்தது... கடைசியில் அவளுக்கு இருந்த ஒரே ஆதரவு இந்த ஜீவா

தான்... அவனும் அவளை விட்டு போய் விடுவேன் என்று மிரட்டுகிறானே... அதுவும் அவனது மனைவிக்காக...

அத்தனை காதலா அவன் மனைவி மீது...? அவளுக்குச் சற்றுப் பொறாமையாக இருந்தது சுபிக்ஷா மீது...

அதே சமயம் அவளது காதில், "நான் செய்தது தப்பு தான்... என்னை மன்னித்து ஏற்றுக் கொள் ஸிமி... கடைசியாய் ஒரு வாய்ப்பு கொடேன்..." என்று கெஞ்சிய ஒரு குரல் அவளது காதுகளில் ஒலித்தது...

அவளது மனதுக்குள் விரக்தி உணர்வு தலை தூக்க வேதனையுடன் ஜீவாவை பார்த்தவள்,

"அன்னைக்கு நான் காதலை உதறியதுக்கு இன்னைக்கு நீ நல்ல பதிலடி கொடுத்துவிட்டாய்... இப்பவும் நான் செஞ்சது தப்புன்னு எனக்குத் தோணலை... இந்த நொடி வரை என் மனசில் நீ தான் இருக்க ஜீவி... இதை அழிக்க என்னால் எப்போதும் முடியாது... அழிச்சு அழிச்சு எழுத மனசு என்ன ஃப்ளாக் போர்டா... உன்னோட பேச்சு எனக்கு ரொம்ப வலிக்குது ஜீவி..."

வேதனையுடன் கூறியவள் அவன் அருகில் நெருங்கி வந்து, "என்னை ஏன் உனக்குப் பிடிக்கலை ஜீவி...? என் காதலை ஏன் நீ புரிஞ்சிக்கவே மாட்டேங்கிற..."

கண்களில் ஒருவித அலைப்புறுதலுடன், தவிப்புடன் கேட்டவளை பார்த்த ஜீவாவிற்கு அவளைக் கண்டு பாவமாக இருந்தது... அன்று பதினேழு வயதிலும் அவனைப் பார்த்து இப்படித்தான் கேட்டாள்... இதோ இப்போதும் இப்படித்தான் கேட்கிறாள்...

அன்று அவளை அலட்சியமாய்ப் புறம் தள்ளி விட்டு சென்றவன், இன்று அவளைக் கண்டு பரிதாபப்பட்டு நிற்கிறான்... வாழ்க்கை தான் எத்தனை விசித்திரங்களை உள்ளடக்கியதாய் இருக்கிறது...

"ஆனா ஒண்ணு மட்டும் உறுதி ஜீவி... உனக்கு என்னைப் பிடிக்காமல் போனாலும் நான் சாகும் வரை என் மனதில் நீ தான் இருப்ப... உன் நினைவா தான் நான் சாவேன்... அதை மாத்த உன்னால் முடியாது ஜீவி..." துயரத்துடன் சொன்னவள் அங்கிருந்து நகர முற்பட்டுப் பின் நின்று,

"உன் தயவில் இருப்பதால் தானே நீ இப்படி எல்லாம் பேசுற... இனி உன் தயவு எனக்கும், என் மகளுக்கும் தேவையில்லை..." என்றவளின் வார்த்தையில் அவன் திகைத்துப் போய்ப் பார்த்தான்...

"எனக்குப் படிப்பு இருக்கு... எங்களைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்... இனி நானா உன்னைத் தேடி வர மாட்டேன்... நீ தான் எங்களைத் தேடி வரணும்..."

பேசியது போதும் என்று அத்தோடு முடித்துக் கொண்டு அவள் கிளம்பிவிட்டாள்... அவள் வந்த வேகம் என்ன, இப்போது திரும்பி செல்லும் நிதானம் தான் என்ன...?

ஜீவா அவனது மனைவியே ஆனாலும் வேறு பெண் முன் தன்னைத் தரக்குறைவாய் பேசியதை நினைத்து அவளுக்குப் பெருத்த அவமானமாக இருந்தது...

என்னவோ அவனது பணத்துக்காக அவனிடம் வழிவது போல் அவன் பேசியது அவளின் தன்மானத்தைப் பெரிதும் சீண்டி விட்டது...

'யாருக்கு வேண்டும் உன் பணம்...? என்னிடமும் தேவையான பணம் இருக்கிறது... என் வாழ்க்கையைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும்...' மனதுக்குள் வீம்பாக நினைத்தவள் வீடு நோக்கி சென்றாள்...

இதைத் தானே ஜீவா இத்தனை நாளாய் சொல்லி கொண்டு இருந்தான் என்பதை அவள் உணரவில்லை... தானே தன் வாழ்க்கையில் மண்ணை அள்ளி போட்டு கொண்டதையும் அவள் இன்னமும் உணரவில்லை...

அவள் மனதில் இருந்தது எல்லாம் கோபம் மட்டுமே...

ஸ்மிருதி சென்றதும் ஜீவாவின் பார்வை மனைவி புறம் திரும்பியது... அவளது திகைத்த தோற்றம் அவனை ஏதோ செய்ய அவள் அருகில் வந்து அவளது தோளை தொட்டான்...

சுபிக்ஷாவிற்கு மொழி புரியாவிட்டாலும் ஒருவரது உரிமையான பேச்சு, செய்கை எல்லாம் புரியாமலா இருக்கும்... அதிலும் ஸ்மிருதி தன் கணவனைப் பார்த்த பார்வையில் இருந்த காதல் அவளுக்குப் புரியாமல் இல்லையே... அதைக் கண்டு அவளது மனது மிகவும் வலித்தது ...

"சாரி..." என்றவனை ஏறிட்டு பார்த்தவளின் கண்கள் கலங்கியிருந்த போதும் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனைப் பார்த்து புன்னகைத்தபடி,

"நமக்குள் மன்னிப்பு தேவையில்லைன்னு சொன்னதா நியாபகம்..." என்றவள் அவனது கையைப் பிடித்துச் சிறு அழுத்தம் கொடுத்தவளாய்,

"நடந்து முடிந்ததைப் பத்தி பேச தேவையில்லை... அதை விட நீங்க பேசிய இந்தி மொழி எனக்குப் புரியவும் இல்லை... அதனால் கவலை வேண்டாம்..."

இந்தச் சிறு பெண்ணிற்குள் இத்தனை தெளிவா என்று வியந்து நின்றான் ஜீவா... இதுவரை அவனது கடந்த காலத்தைப் பற்றி அவன் எதுவும் அவளிடத்தில் கூறவில்லை... ஆனாலும் அவனுக்காகத் தன்னை மாற்றிக் கொண்டு அனுசரித்து நடக்கும் அவளைக் கண்டு அவனது மனம் நெகிழ்ந்து போனது...

அந்தக் கணம் அவளை இன்னமும் அதிகமாய்ப் பிடித்துப் போனது அவனுக்கு... அவனுக்கு எப்போதுமே 'அன்கண்டிசனல் லவ்' தான் ரொம்பப் பிடிக்கும்... அதைத்

தான் அவனது மனைவி அவனுக்கு அள்ளி அள்ளி கொடுத்துக் கொண்டு இருந்தாள்...

கட்டுப்பாடற்ற அன்பை அவனுக்கு அளித்து அவனைத் தன் கட்டுக்குள் கொஞ்சம் கொஞ்சமாய்க் கொண்டு வந்து கொண்டு இருந்தாள் அந்த அன்பு மனைவி...

அது அவனுக்குமே விருப்பமாய் இருந்தது என்பது வேறு விசயம்...

தன்னைச் சிறையெடுக்க முனைந்த பெண்களை விடுத்து தானாய் மனைவியின் அன்பில் சிறைப்படத்தான் விரும்பினான் அந்த முரட்டு கணவன்...

சுபிக்ஷா தன்னை ஒரு வார்த்தை ஏனென்று கேட்காதது அவளது பெருந்தன்மையாக இருக்கலாம்... ஆனால் தனது வாழ்வை வீண் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு கண்ணாடி போல் தெளிவாய் வைத்திருக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது...

இனி அதில் ஒரு சிறு கறுப்பு புள்ளி கூட விழ அனுமதிக்கக் கூடாது என்பதில் அவன் மிகத் தீவிரமாய் இருந்தான்...

**********************

எப்போதும் போல் சாதாரணமாய் நடமாடி கொண்டிருந்த ருத்ரஸ்ரீயை பின் தொடர்ந்தது ஜெகனது விழிகள்... நேற்றைய கண்ணீரின் சுவடுகள் இப்போது அவளது கண்களில் இல்லை... மாறாக ஏதோ ஒரு யோசனையில் அது ஆழ்ந்திருந்தது... அவனது பார்வை உணர்ந்தும் எதுவும் காட்டி கொள்ளாமல் அங்குமிங்கும் அவள் நடந்து கொண்டிருக்க, அதற்கு மேல் தாங்க முடியாது அவள் அருகில் வந்தான் அவன்...

"நேத்து நீ அழுதது எனக்காகத் தான்னு எனக்குத் தெரியும் ஜில்லு..." என்றான் அவளது கண்களைப் பார்த்தபடி...

அதில் திகைத்து போய் நின்றுவிட்டாள் ருத்ரஸ்ரீ...

"இந்த நொடி வரை நான் சந்தோசமா தான் இருக்கேன்... அப்படியே எந்தப் பிரச்சினை வந்தாலும் நான் சமாளிப்பேன்..." என்றவன் அவளது கைகளைத் தனது கைக்குள் பொத்தி வைத்துக் கொண்டு,

"நீ மட்டும் என் கூட இருந்தால் போதும்..." என்ற கணவனைக் கண்டு அவளது விழிகளில் நீர் தளும்பியது...

"நிச்சயமாய்..." என்றவள் கணவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள் ஆறுதலாக... அவனும் அவளை அணைத்துக் கொண்டான் ஆதரவாக...

கணவனது அருகாமையில் மனம் தைரியம் பெற, இனியும் யோசிக்காது தான் நேரடியாய் களத்தில் இறங்க வேண்டியது தான் என்று முடிவு செய்தாள் அவள்...

அதன் விளைவு அடுத்த அரை மணி நேரத்தில் அவள் அபிமன்யு வீட்டில் இருந்தாள்... புயல் போல் வீட்டினுள் நுழைந்த ருத்ரஸ்ரீயை கார்த்திக்கும், சித்தாராவும் ஆச்சிரியமாய்ப் பார்த்தனர்...

இத்தனை நாளில் ருத்ரஸ்ரீ அதிகமாய் அவர்களது வீட்டிற்கு வந்தது கிடையாது... அதுவும் இந்தக் காலை நேரத்தில் வந்தவளை கண்டு திகைத்து தான் போயினர் இருவரும்...

"வாங்க ருத்ரா..." சித்தாரா தான் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவளை வரவேற்றாள்...

"எங்கே இருக்கான் அந்த வளர்ந்து கெட்டவன்...?" அவளது வார்த்தையில் அப்படியொரு அடக்கப்பட்ட கோபம்...

"மேலே அவன் ரூமில்..." என்று சித்தாரா சொல்ல...

அடுத்த நொடி ருத்ரஸ்ரீ மேலே செல்ல மாடிப்படியில் கால் வைத்தாள்...

"ருத்ரா... அபி குடிச்சிட்டு இருக்கான்..." தயக்கத்துடன் மகனின் நிலையைக் கூறினாள் அவள்...

"காலையிலேவா...?" முகத்தைச் சுளித்தாள் ருத்ரஸ்ரீ...

"இல்லை நேத்திலிருந்து... நீங்க அபி கிட்ட கல்யாணத்துக்குப் பொண்ணு ஃபோட்டோ காட்ட சொன்னீங்கல்ல... அது மாதிரி பொண்ணுங்க ஃபோட்டோ அவன் கிட்ட காட்டினேன்... அப்போ சத்தம் போட்டு கத்திட்டு வீட்டை விட்டு வெளியில் போனவன் மிட்நைட் தான் திரும்ப வந்தான்... வரும் போதே ஃபுல்லா மூக்கு முட்ட குடிச்சிட்டு தான் வந்தான்... போதாதுக்கு அந்தக் கர்மத்தை வேற வீட்டுக்கு வாங்கிட்டு வந்து குடிச்சிட்டு இருக்கான்..."

சித்தாராவின் வருத்தமான குரலில் ருத்ரஸ்ரீக்கும் அத்தனை வருத்தமாய் இருந்தது... அபிமன்யும் அவளது மகனை போன்றவன் அல்லவா... ஒன்றும் பேசாது விறுவிறுவென அபிமன்யு அறைக்குச் சென்றவள் அனுமதி வேண்டாமலே அவனது அறைக்குள் நுழைந்தாள்...

அங்குச் சோபாவில் அமர்ந்திருந்த அபிமன்யு கையில் மது கோப்பையுடன் விட்டத்தை வெறித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்... அவன் முன்னிருந்த மேசையில் மது பாட்டில்கள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது...

முகத்தில் தாடி புதர் போல் மண்டி கிடந்தது... அவன் இருந்த நிலையைக் கண்டு அவளுக்கு அத்தனை கோபம் வந்தது... நேரே அவன் முன் வந்து நின்றவள் இரு கைகளையும் கட்டி கொண்டு,

"அப்படியே பக்கத்தில் ஒரு நாயையும் கட்டி வச்சேன்னா பார்க்கிறதுக்கு அச்சு அசல் தேவதாஸ் மாதிரி இருக்கும்..."

நக்கலாய் கூறிய ருத்ரஸ்ரீயை அங்குச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை அபிமன்யு...

"பெரியம்மா..." வாய் குழறியபடி, நிற்க முடியாமல் தள்ளாடியபடி எழுந்து நின்றான் அவன்...

"அவ்வளவு நல்லவனா நீ..." என்ற ருத்ரஸ்ரீ அடுத்த நொடி அவனது கன்னத்தில் ஓங்கி அறைந்திருந்தாள்...

"பெரியம்மா..." அதில் போதை சற்று இறங்க அவன் திகைத்து போய் விழித்தான்...

"ஒரு பொண்ணோட வாழ்க்கை உனக்கு விளையாட்டா போச்சில்லை..." என்று கோபமாய்க் கத்தியவளை கண்டு அவன் தலை குனிந்தான்...

"இது என்ன தொழில்ன்னு நினைச்சியா... விட்டு கொடுத்து போறதுக்கு... நீ விளையாடியது இரத்தமும், உணர்வும் கொண்ட உயிருள்ள ஒரு பொண்ணோட மனசோடு... அது ஏன்டா உனக்குப் புரியலை...?"

"கல்யாணம் முடிஞ்சதுக்கு அப்புறம் நான் என்ன செய்ய முடியும் பெரியம்மா... லட்டும்மா கழுத்தில் இருந்து தாலியை கழட்டி எறிஞ்சிட்டு அவளை நான் கல்யாணம் பண்ணிக்கணுமா...? இதேது வேறு யாராவது மாப்பிள்ளையா இருந்திருந்தா அதைத் தான் நான் பண்ணியிருப்பேன்... ஆனா லட்டும்மாவோட புருசனா நம்ம ஜீவா அண்ணா இருக்கும் போது என்னால் ஒண்ணும் செய்ய முடியலை பெரியம்மா..." என்றவனின் குரலில் அத்தனை துயரம் நிறைந்திருந்தது...

"செஞ்சிருக்கணும்டா... அதைச் செஞ்சியிருந்தேன்னா நீ ஒரு நல்ல ஆம்பிளை..."

எந்த இடத்திலும் நியாயத்துடன் நடந்து கொள்ளும் ருத்ரஸ்ரீ இன்றும் நியாயத்துடன் பேசி அவனைப் பிரமிக்கச்

செய்தாள்...

"பெரியம்மா..." என்றபடி கண்ணீரோடு அவளை அணைத்துக் கொண்டான் அபிமன்யு...

"எனக்கு வேற வழி தெரியலை... அதனால் தான் நான் எல்லாப் பழியையும் என் மேல் போட்டுக்கிட்டேன்..." சிறு குழந்தை போல் அழுதான் அந்தக் கட்டிளம் காளை...

"அன்னைக்கு என்ன தான் நடந்தது அபி...?"

அதை நினைத்து பார்த்தவனின் முகத்தில் துன்பத்தின் சாயல் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"கல்யாணத்துக்கு முந்தின நாள் பிரெண்ட்ஸ்க்காக பேச்சிலர்ஸ் பார்ட்டி கொடுத்தேன்... அதில் நானும் லைட்டா குடிச்சியிருந்தேன்... ஹோட்டலில் இருந்து வெளியில் வந்தது மட்டும் தான் என் நியாபகத்தில் இருக்கு... அதுக்கு அப்புறம் என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியலை... மறுநாள் நான் கண் விழிக்கும் போது சென்னைக்கு அவுட்டர்ல இருந்தேன்... என்னோட கார்ல தான் படுத்திருந்தேன்... பதறிக் கொண்டு எழுந்து காரை ஓட்டி கொண்டு கல்யாண மண்டபத்துக்கு வந்து பார்த்தா அங்கே அண்ணா..."

அதற்கு மேல் சொல்ல முடியாமல் அவனுக்கு அழுகை முட்டி கொண்டு வந்தது... காதல் தோல்வி அதுவும் வேண்டுமென்றே தோற்கடிக்கப்பட்ட வலி அவனது முகத்தில் தெரிந்தது...

"அங்கே இருக்கப் பிடிக்காமல் வீட்டுக்கு வந்தால் அம்மா, அப்பா, ராகவ் எல்லோரும் என்னைத் திட்டுறாங்க... ஏன், எதுக்குன்னு புரியாம முழிச்சேன்... பிறகு தான் புரிஞ்சது நானே லெட்டர் எழுதி வச்சிட்டு காணாம போனது... என் கல்யாணத்தை நிறுத்த நானே லெட்டர் எழுதி வச்சிட்டு

எப்படிக் காணாம போவேன்... எல்லாம் பக்கா ப்ளான்..." என்றவனின் குரலில் விரக்தி கலந்திருந்தது...

"எல்லாமே ஜீவாவோட பக்கா ப்ளான்..." மகனை நினைத்து வெறுப்புடன் வந்தது ருத்ரஸ்ரீயின் வார்த்தைகள்...

"ஆமாம் பெரியம்மா... அது ரொம்ப லேட்டா தான் எனக்குப் புரிஞ்சது... அண்ணா என்னைப் பழிவாங்க, என் அப்பாவை பழிவாங்க இப்படிச் செஞ்சியிருக்கான்... தொழிலில் பழிவாங்கியது சரி பெரியம்மா... அதில் தப்பே இல்லை... ஆனால் என் வாழ்க்கையில்...? ரொம்ப வலிக்குது பெரியம்மா..." என்றான் தன் நெஞ்சை தொட்டு காட்டி...

தன் வயிற்றில் பெறாத மகன் கண் கலங்குவது கண்டு மனம் கலங்கியவளாய் ருத்ரஸ்ரீ அவனை அணைத்து கொண்டாள்...

நல்லவனாய் இருந்து அபிமன்யு சாதித்தது என்ன...? கெட்டவனாய் இருந்து அனைத்தையுமே சாதித்துக் கொண்ட மகனை நினைத்து அத்தனை வெறுப்பாய் இருந்தது அவளுக்கு...

"ஜீவா உனக்குத் துரோகம் பண்ணின போதும் நீ அவனைக் காட்டி கொடுக்க நினைக்கலையே அபி... உன்னை நினைச்சு பெருமையா இருக்குடா..."

"நடந்து முடிஞ்ச விசயத்தை யாராலும் மாத்த முடியாது பெரியம்மா... அண்ணா லட்டும்மாவோட புருசன்... நான் உண்மையைச் சொல்வதால் அது மாறப் போகுதா... இல்லையே... அப்படியாவது லட்டும்மா என்னை வெறுத்து அண்ணா கூட நல்லபடியா வாழணும்ன்னு தான் அப்படிச் செஞ்சேன்..." என்றவனின் முகம் வேதனையில் கசங்க,

"அன்னைக்கு நான் உங்களை அப்படிப் பேசியிருக்கக் கூடாது பெரியம்மா... எவ்வளவு மனவருத்தத்தோடு அதைச் சொன்னேன் தெரியுமா...?"

அப்போது புரியாத அவனது வேதனை இப்போது அவளுக்கு நன்கு புரிந்தது...

"நானாவது உன்னைப் புரிஞ்சு இருந்திருக்கணும் அபி... என் மேலும் தப்பு இருக்கு..." அவளுக்கும் வேதனையாய் இருந்தது...

சிறு புரிதல் இல்லாத இந்த நிலையைத் தன் மகன் தனக்குச் சாதகமாக ஆக்கி கொண்டது அவளுக்கு வருத்தமாகவும் இருந்தது அதே சமயம் கோபத்தையும் ஏற்படுத்தியது...

"பெரியப்பா என் மேல கோபமா இருக்காரா...?" சிறு குழந்தை போல் கேட்டவனைக் கண்டு அவளுக்குப் பாவமாய் இருந்தது...

"இந்தப் பெரியம்மா சொன்னால் பெரியப்பா கோபம் 'ப்பூ'ன்னு பஞ்சாய் காற்றில் பறந்து போயிரும்..." என்று புன்னகைத்தவள்,

"சரி நீ கிளம்பி வீட்டுக்கு வா... நான் பெரியப்பா கிட்ட பேசறேன்..."

"இல்லை பெரியம்மா... நான் வரலை... இந்த உண்மைய சொல்றதால தேவையில்லாம உங்க குடும்பத்தில் பிரச்சினை வரும்... நான் கெட்டவன் கெட்டவனாகவே இருந்துட்டு போறேன்..."

"ஆனா பழிவாங்குவதற்காகப் பண்ணிய இந்தக் கல்யாணம்... எனக்குப் பயமா இருக்கே அபி..."

பயமே அறியாத ருத்ரஸ்ரீ மகனை நினைத்துப் பயம் கொண்டாள்...

"இவ்வளவு நாள் எந்தப் பிரச்சினையும் இல்லையே... அது போல் இனியும் இருக்கட்டும்..." என்று அவன் முடிக்கவும்

அவளுக்குமே அது தான் சரியென்று தோன்றியது...

இப்போது தான் மகன் குடும்பத்தாரோடு இணைந்து இணக்கமாக இருக்கிறான்... இப்போது தான் ஏன் வீண் பிரச்சினையைக் கிளப்ப வேண்டும் என்றே அவளுக்கும் தோன்றியது... அதிலும் கணவனது மகிழ்ச்சியான முகம் நினைவில் எழ அமைதியானாள்...

"எல்லாம் சரி அபி... நீ ஏன் கல்யாணம் வேண்டாம்ன்னு சொல்ற...?"

"எல்லாம் தெரிந்திருந்தும் நீங்களே இப்படிக் கேட்டால் எப்படிப் பெரியம்மா...?" அபிமன்யுவின் வார்த்தையில் அத்தனை வலி இருந்தது...

அவனது மனம் புரிந்தவளாய், "அதுக்காக இப்படியே நீ தனியா வாழ முடியுமா அபி... தனிமை ரொம்பக் கொடுமையானது..."

அதை அவள் அனுபவித்தவள் அல்லவா...!!!

"லட்டும்மாவை நினைச்ச மனதில் வேறு யாரையும் நினைத்து பார்க்க என்னால் முடியலை பெரியம்மா... நான் என்ன பண்றது..."

உலகத்தில் உள்ள அத்தனை சோகத்தையும் தன்னுள் அடக்கியபடி கூறியவனை அந்தத் தாயால் ஆறுதலாய் அணைத்துக் கொள்ள மட்டுமே முடிந்தது...

“இந்தக் குணத்தால் தான் அபி நான் உன்னை நல்லா தெரிஞ்சிக்கிட்டேன்... உன் பக்கம் தவறு இருக்காதுன்னு உறுதியா நம்பினேன்... அது போல் தான் நீயும் இருக்க...” என்றவள்,

"அபி... பெரியம்மா சொன்னா கேட்பியா...?" என்ற ருத்ரஸ்ரீயை ஏறிட்டவன் சரியென்பது போல் தலையாட்ட...

"வேதனை நம்மளை தின்பதற்கு நாம இடம் கொடுக்கக் கூடாது அபி... இப்படி இருப்பதைக் காட்டிலும் உன் வேதனையின் வலியை தொழிலில் காட்டி முன்னேறு... இப்படி ஓய்ந்து இருந்தால் இந்த வேதனை ஒரு நாள் இல்லை ஒரு நாள் உன்னைக் கொன்று தின்றுவிடும்..."

அவள் கூறியது அவனுக்கும் புரிந்து தான் இருந்தது... சிறிது நேரம் யோசனையாய் இருந்தவன் பின் பளிச்சென்ற புன்னகையுடன்,

"நீங்க சொன்னபடி கேட்கிறேன் பெரியம்மா..." என்க...

"தட்ஸ் மை குட் பாய்... முதல்ல இந்தத் தாடியை எடுத்துட்டு குளிச்சு முடிச்சு ஃபிரெஷ்ஷா வா பார்க்கலாம்..." என்றவள்,

"நான் கீழே வெய்ட் பண்றேன்..." என்றுவிட்டு அறையை விட்டு வெளியேறினாள்...

ருத்ரஸ்ரீ வந்து அவனிடத்தில் பேசியதும் அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது அத்தனை வேதனைகளையும் தாண்டி... மகிழ்ச்சியாய் குளியலறைக்குள் நுழைந்தான்...

அடுத்தக் கால் மணி நேரத்தில் புத்துணர்வோடு பழைய அபிமன்யுவாய் கீழிறங்கி வந்தவனைக் கண்டு அவனது பெற்றோர் அதிசயமாய்ப் பார்த்தனர் என்றால் ருத்ரஸ்ரீ பெருமிதமாய்ப் பார்த்தாள்...

"போகலாமா அபி..." அவள் கேட்டதும் சரியென்றபடி அவன் அவளுடன் கிளம்பிச் சென்றான்...

அதைப் பார்த்துக் கொண்டு இருந்த கார்த்திக், சித்தாரா இருவரது கண்களும் கலங்கியது... ருத்ரஸ்ரீ வாழ்க்கையில் தாங்கள் எத்தனை தவறுகள் செய்த போதும் அவள் அவர்களுக்கு எப்போதுமே நல்லதை மட்டும் தான் செய்கிறாள்...

அடுத்து வந்த நாட்களில் அபிமன்யுவின் தொழிலுக்கு ருத்ரஸ்ரீ உதவி செய்ததன் மூலம் அவனை வெற்றியடையச் செய்து தான் ஜீவாவின் தாய் என்பதை மௌனமாய் ஜீவாவிற்கு நிரூபித்தாள்... இத்தனை காலம் இதை மறுத்திருந்த அபிமன்யு ருத்ரஸ்ரீயின் வற்புறுத்தலில் அவளின் உதவியை ஏற்றுக் கொண்டான்...

அபிமன்யுவின் திடீர் விஸ்வரூபத்தின் பின்னே தனது அன்னை இருப்பதை உணர்ந்து ஜீவா பல்லை கடித்தான்... பின்னே அவனது திட்டத்தைத் தோற்கடிக்கும் அளவுக்கு அந்த அபிமன்யுவிற்கு எங்கே மூளை இருக்கிறது...

உடனே அன்னைக்கு அழைத்தான் அவன்... ருத்ரஸ்ரீயும் மகனது அழைப்பை எதிர்பார்த்தது போல் உடனே எடுத்தாள்...

"நீங்க பண்றது ஒண்ணும் சரியில்லை மாம்..."

"அப்போ நீ பண்றது மட்டும் சரியா...?" அலட்டாமல் கேட்ட அன்னையை என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை...

"அந்த அபியை போல் நான் ஒண்ணும் கல்யாணம் அன்னைக்கு ஓடி ஒளியவில்லை... மனசுக்கு பிடிக்காத பெண்ணாய் இருந்தாலும் உங்களுக்காகக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்..."

அவனது திமிரான கேலி பேச்சில் அவளுக்குக் கோபம் வந்தது...

"அது நீ போட்ட திட்டம்ன்னு எனக்குத் தெரியாதா ஜீவா..." கோபத்துடன் பேசிய அன்னையிடம்,

"வாட்... நானா...?" என்றான் திகைப்புடன்...

அதற்கு ருத்ரஸ்ரீ எல்லாவற்றையும் அப்படியே அவனிடத்தில் கூற... அதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்தான் அவளது மகன்...

"ரொம்ப நல்லாயிருக்கிறது மாம் உங்க கதை... இந்தக் கதை எல்லாம் நீங்க யோசிச்சதா இல்லை அவன் சொன்னதா...? எனக்குக் கடத்துறதை தவிர வேறு வேலை இல்லை பாருங்க..." நக்கலுடன் பேசிய மகனை கண்டு இப்போது ருத்ரஸ்ரீ பல்லை கடித்தாள்...

"வேண்டாம் ஜீவா... ஆதாரம் இல்லாம தப்பு பண்ணிட்டோம் என்கிற திமிரில் நீ பேசாதே... நீ பண்ணிய காரியத்துக்கு உன் மனசாட்சி தான் சாட்சி... அது கிட்ட கேட்டு பாரு... அது சொல்லும் உண்மையை..."

"மாம் ஜோக் அடிக்காதீங்க..." என்று சிரித்தவன், "மாம்... பழிவாங்குவதற்காக யாராவது கல்யாணம் பண்ணுவாங்களா...? அதிலும் சுபி எனக்கு எந்தவிதத்திலும் பொருத்தம் இல்லாதவள்... அப்படி அபியை கடத்தி அவளைக் கல்யாணம் பண்ணணும்ன்னு எனக்கு என்ன வேண்டுதலா...? ரொம்ப நல்லா கதை சொல்கிறான்..." என்றவன் பின் சிரிப்பை கைவிட்டவனாய் இறுகிய குரலில்,

"உங்களால் மனசுக்குப் பிடிக்காத பெண்ணைச் சகித்துக் கொண்டு வாழ வேண்டிய கட்டாயம் எனக்குதான்... அவனுக்கு இல்லை..." வெறுப்புடன் வந்தது மகனது வார்த்தைகள்...

அதைக் கேட்டு ருத்ரஸ்ரீ சற்று திகைத்து தான் போனாள்... ஆனாலும் மகனை முழுமனதாய் நம்பத்தான் அவளால் முடியவில்லை...

"அப்படின்னா நீ பழிவாங்க கல்யாணம் பண்ணலை..." சந்தேகமாய்க் கேட்டாள் அவள்...

"நிச்சயமாய் இல்லை..." உறுதியாய் மறுத்து வந்தது மகனது வார்த்தைகள்...

"அப்போ எங்களுக்காகத் தான் சுபியை கல்யாணம் பண்ணிக்கிட்ட..."

"ஆமாம்... இதில் சந்தேகம் வேறா..." நக்கல் தெறித்தது அவனது பேச்சில்...

"எங்களுக்காகக் கல்யாணம் பண்ணியது உண்மை என்றால்..." என்று அவள் நிறுத்த...

"உண்மை என்றால்...?" கூர்மையுடன் வந்த ஜீவாவின் வார்த்தையில்,

"அவள் கூடச் சந்தோசமாய்க் குடும்பம் நடத்தும் வழியைப் பார்... வீணாய் பழிவாங்குகிறேன்னு அவள் மனதை நோகடித்து விடாதே..."

"வேறுவழி... உங்களுக்காகப் பிடித்தமில்லாத அவளுடன் குடும்பம் நடத்த வேண்டிய தலையெழுத்து எனக்கு..."

வேண்டா வெறுப்பாய் எரிச்சலுடன் கூறிய ஜீவா அலைப்பேசியை அணைத்துவிட்டுக் கோபமாய்த் திரும்பிய போது அங்கே அவனது மனைவி நின்றிருந்தாள்...

அவனது பேச்சு எல்லாம் அவள் கேட்டதற்கு அடையாளமாக அவளது கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது...!!!

## ஸ்வரம் : 16

எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையையும் தனது புத்திசாலித்தனத்தால் திறம்படக் கையாண்டு அதை வெற்றிகரமாகக் கொண்டு சென்றுவிடுபவன் ஜீவா... அப்படிப்பட்ட அவனே இந்தச் சூழ்நிலையை எப்படிக் கையாள்வது என்று தெரியாது திகைத்து நின்றான்...

அன்னை பேசிய வார்த்தையில் எழுந்த கோபத்தில் அவன் வேண்டுமென்றே சில வார்த்தைகளைச் சிதறிவிட்டான்... ஆனால் அந்த நேரத்தில் தனது மனைவியவளின் மனதை பற்றிக் கொஞ்சமும் யோசிக்க மறந்துவிட்டான்...

அவனது அறைக்குள் அவனை மீறி யாரும் அத்துமீறி உள்ளே நுழைய மாட்டார்கள்... அந்தத் தைரியத்தில் தான் அவன் அப்படிப் பேசியது... ஆனால் அவனின் பாதியவளுக்கு அத்தகைய அனுமதி தேவையில்லை என்பதை அவன் மறந்து போனது அவனது தூரதிர்ஷ்டமே...

இந்தக் கணத்தை மிகவும் ஒரு கடினமான கணமாகவே கருதினான் அவன்... இருந்தாலும் அதையும் சமாளிக்கத் தெரியாவிட்டால் அவன் இவ்வளவு பெரிய தொழிலதிபனாய் இருந்து வேலையில்லையே...

"பேபி..." என்று அவன் மேலே பேசும் இடைமறித்த அவன் மனைவி,

"உங்களுக்கு என்னைப் பிடிக்காது தான்... அது எனக்கும் தெரியும்... ஆனா இப்போ அதை உங்க வாயால் கேட்கும் போது எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு..."

அவன் முதலில் பேசியதை அவள் கேட்கவில்லை போலும்... கடைசியாய் பேசியது மட்டும் தான் கேட்டிருக்கிறாள் அவள்... முழுதாய் புரிந்து கொள்ளாமல் அவளாக ஏதேதோ பேசுகிறாளே என்று சிறு எரிச்சல் அவனுள் எட்டி பார்த்த

போதும் தான் பேசிய வார்த்தைகள் சற்று அதிகப்படித்தான் என்று அவனுக்குத் தோன்றியதால்,

"ஹேய்... அப்படி எல்லாம் இல்லை..." என்று அவன் அவளைச் சமாதானப்படுத்தும் முயற்சியாகப் பேச ஆரம்பிக்க...

"ப்ளீஸ் மாமா..."

விழிகளில் விழிநீர் தேங்க தன்னிடம் கெஞ்சிய மனைவியைக் கண்டு அவன் பேச்சற்று வாயடைத்துப் போனான்... விட்டால் பட்டிமன்ற பேச்சாளர் போல் விடாமல் பேசுபவன் அவன்... அதிலும் பல மொழிகள் தெரிந்து கரைத்து குடித்திருப்பவன் அவன்...

ஆனால் இப்போதோ ஒரு வார்த்தைக்கே பஞ்சமாகி போனது பாவையவளின் கண்ணீரை கண்டு... பெண்களின் கண்ணீருக்கு இத்தனை சக்தியா என்று திகைத்தபடி மனைவியைப் பார்த்திருந்தான் அவன்...

அவனது பார்வையை உணராத அவளோ அவனை விட்டு விலகி சென்றாள் மௌனமாய்...

அதற்குப் பின் அவளது பேச்சு அவனிடத்தில் முற்றிலும் குறைந்து போனது... அவளது அழுத்தமான, அமைதியான குணத்தை அவனும் அறிவான் தான்... ஆனால் அவளது இத்தகைய ஒதுக்கத்தை அவன் இப்போது தான் முதன்முறையாகப் பார்க்கிறான்...

தானாய் வலிய சென்று அவளிடத்தில் பேச அவனது மனமும் இடம் கொடுக்கவில்லை... அதை விட அவனுக்கு அது பழக்கமும் இல்லை... ஒரு பெண்ணை எப்படிக் கையாள்வது என்று அவனுக்குத் தெரியவில்லை... அது தான் உண்மையும் கூட...

சுபிக்ஷாவோ மனதுக்குள் மிகவும் நொறுங்கி போயிருந்தாள்... கணவன் கூறியது நிதர்சனம் தான் என்று அறிவு அவளுக்கு அறிவுறுத்தினாலும், பேதை மனமோ அதை நினைத்து வேதனையில் உழன்றது...

பிடிக்காத பெண்ணாய் இருந்தாலும் திருமணம் நடந்த பின்னர் அந்தத் திருமணத்திற்கு உண்மையாக இருக்க வேண்டும் என்று கூறிய கணவன் இப்போது இப்படிக் கூறுவது கண்டு அவளுக்கு உள்ளம் வலித்தது...

அவன் முன்பு போல் கோபம் காட்டியிருந்தால் கூட அவளுக்கு இந்தளவுக்கு வலித்திருக்காது... ஆனால் அவள் இங்கு வந்த பின்பு இத்தனை நாட்களில் பல ஆண்டுகள் அவனுடன் வாழ்ந்தது போல் தன் மேல் அன்பை பொழிந்தவன் திடுப்பென இப்படிக் கூறியது அவளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது...

மனதிற்குள் அழுத்தமாய்ப் பதிந்திருந்த கணவன் அந்த மனதை காயப்படுத்தியதை கண்டு அவள் பெரிதாய் காயமடைந்தாள்... அவளைக் காயப்படுத்துவது ஒன்றும் அவனுக்குப் புதிது அல்ல தான்... அதே போல் அவன் ஏற்படுத்திய ரணத்துடன் வாழ்வதும் அவளுக்குப் புதிதல்ல தான்...

அன்று அவன் ஏற்படுத்திய ரணமானது அவளுள் பயத்தை விதைத்தது... ஆனால் இன்று அவன் ஏற்படுத்திய ரணமானது உயிர் வரை சென்று வலித்தது... யாரோ இதயத்தைக் கசக்கி பிழிவது போல் அப்படி ஒரு தாங்க முடியாத வலி...

அதுவே சொல்லாமல் சொல்லியது அவளது கணவன் அவளது மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருப்பதை... அது ஒரு புறம் மனதுக்குச் சந்தோசத்தைக் கொடுத்த போதும், மறுபுறம் பெரும் துயரத்தை கொடுத்தது...

அவளிடம் ஒரு குணம் உண்டு... பிடிக்காத ஒன்றை தன்னிடம் தக்க வைத்துக் கொள்ள அவள் எந்த முயற்சியும் எடுக்க மாட்டாள்... அதைப் போல் தன்னைப் பிடிக்காதவர்களிடம் இருந்து ஒதுங்கி சென்று விடுவாள்... தன்னைப் பற்றி மற்றவர்களுக்குப் புரிய வைக்கும் முயற்சியில் அவள் ஒருபோதும் இறங்கியது இல்லை... அது அவளுக்குப் பிடிக்கவும் பிடிக்காது...

தன் நிலையில் இருந்து இறங்கி வராத இந்தக் குணத்தில் இருவருமே ஒன்று தான்... அவளோ விலகி செல்வாள்... அவனோ தானாகத் தேடி செல்ல மாட்டான்...

அப்படிப்பட்ட இருவரும் தங்களது மனதின் எண்ணங்களை மறைத்தபடி அமைதியாய் வளைய வந்து கொண்டு இருந்தனர்...

மற்ற தம்பதியர்கள் போல் அவர்கள் அந்நியோன்யமாய் இருந்தது கிடையாது தான்... ஆனால் அவர்களிடையே சிரிப்புடன் கூடிய கேலி பேச்சு, சின்னச் சின்னச் சீண்டல்கள், சிறு அணைப்பு, முத்தம் என்று தங்களது அன்பை பரிமாறிக் கொண்டு தான் இருந்தனர்...

ஆனால் இப்போது அதற்கும் பஞ்சம் வந்து விட்டது... அவனின் தேவைகளை அவள் பார்த்து பார்த்துக் கவனித்தாலும் அவனின் முகத்தை ஏறிட்டு பார்க்க அவள் முயற்சிக்கவில்லை... பேசவும் இல்லை...

அதைக் கண்டு அவனுக்குச் சில சமயம் கடுப்பாய் வரும்...

'காபி கொடுப்பதும், உணவு பரிமாறுவதும் தான் மனைவியின் கடமை என்று எந்த மடையன் இவளுக்குச் சொன்னது... மனைவியின் கடமையே வேறு என்று இந்த மடச்சிக்கு நான் புரிய வைத்துவிடவா...?'

அவனது மனம் வேகமாய் எண்ணும்... பின் அதே வேகத்தில் அந்த நினைவை அழித்தும் விடுவான்... இருக்கும்

பிரச்சினையில் இதை வேறு செய்து காலம் முழுவதும் வருந்த வேண்டுமா...? என்று அமைதியாய் அவளிடம் இருந்து விலகி போய்விடுவான்...

அடுத்து வந்த நாட்களிலும் இதே கதை தான் தொடர்ந்தது... அவன் வடக்கு என்றால், அவள் தெற்கு என்று விலகி நின்றாள்... முதன்முறையாய் மனைவியை எப்படி அணுகுவது என்று தெரியாது விழித்தான் அவன்...

'ஒரு பொண்டாட்டிக்கே இந்தப் பாடாய் இருக்கே... அவனவன் எப்படி அத்தனை பொண்ணுங்களை மெயின்டையின் பண்ணுறான்ங்க...'

அது அவனுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... அவனது தொழில் வட்டாரத்தில் இது எல்லாம் சகஜம்... அதைத் தான் வியப்பாய் எண்ணி பார்த்தான்...

'ஆயிரம் பொண்ணுங்களுக்கு உள்ள அழுத்தம் இவள் ஒருத்திக்கு மட்டுமே இருக்கும் போலிருக்கு... அழுத்தம் சரியான அழுத்தம்... நான் கொஞ்சமாவது அவளைப் பாதிக்கிறேன்னான்னு பாரு... ஏதோ ஜடத்தைப் பார்ப்பது போல் என்னைப் பார்த்துட்டு போறதை பார்...?'

எத்தனையோ பெண்கள் அவனின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கி நிற்க, அவனோ மனையாளின் ஓரவிழி பார்வைக்கு ஏங்கி காத்திருந்தான்... அந்தளவுக்கு அவன் மனதை ஆட்டிப் படைத்தாள் அவனது மனைவி...

அன்றும் அது போல் அலுவலகத்தில் இருந்து வந்த ஜீவா சிறிது அலுப்புடனே காரில் இருந்து இறங்கினான்... பின்னே வீட்டிற்கு வந்தால் மனைவி என்ன இன்முகத்துடன் அவனை வரவேற்கவா போகிறாள்... அவனே வெளியில் ஆயிரத்தெட்டு பிரச்சினைகளைச் சந்தித்து விட்டு மூளை சூடாகி வீட்டிற்கு வந்தால் அவன் மனைவி மௌனமாய் அவனை வதைத்து அதைக் கொதிநிலைக்கு அல்லவா மாற்றுகிறாள்...

அந்த நினைப்புடன் வீட்டுக்கு வந்தவனை இன்முகத்தோடு வாயிலுக்கு வந்து வரவேற்றாள் அவனது மனைவி... அதைக் கண்டு அவன் தான் திகைத்து போய் 'ஆ'வென்று அவளைப் பார்த்தான்...

"ரொம்ப டயர்டா இருக்கிற மாதிரி இருக்கீங்களே... வேலை அதிகமோ..." என்று கேட்டவளை கண்டு அவன் மயக்கம் போடாத குறை தான்...

'என்னடா நடக்குது இங்கே...?' மனதுக்குள் குழம்பினாலும் அவளது புன்னகை முகம் அவனுள் இதத்தைப் பரப்பியது என்னவோ நிஜம்...

"உன்னோட சிரிச்ச முகத்தைப் பார்த்ததுமே என்னோட டயர்ட்னெஸ் எல்லாம் பறந்து போயிருச்சு பேபி..." என்று உண்மையாய் கூறியவன் சந்தோசத்துடன் அவளை அணைத்துக் கொண்டான்...

பின்னே இத்தனை நாளாய் பாராமுகமாய் இருந்த மனைவி அவனிடம் பேசியது கண்டு அத்தனை சந்தோசமாய் இருந்தது அவனுக்கு...

அப்போது தான் அவளது கூந்தலில் இருந்த பூவை கவனித்தான் அவன்...

"ஹேய்... நம்ம ஊரு பூ எப்படி உன் தலையில்..." என்றபடி அதை நுகர்ந்து பார்த்தவன், "செம ஸ்மெல்..." என்று அதன் வாசத்தைச் சிலாகித்துச் சுவாசிக்க...

சுபிக்ஷாவோ தான் சொல்ல வந்ததை மறந்து கணவனது அணைப்பில் திகைத்து போய் நின்றிருந்தாள்... வெகு நாட்கள் கழித்துக் கிடைத்த கணவனது அருகாமை அவளைப் பேசாமடந்தை ஆக்கியது...

"ஓய்... என்ன ப்ரீசாகி நிற்கிற..." என்றபடி அவளது நெற்றியில் அவன் செல்லமாய் முட்ட...

அதில் அவனைப் பார்த்தவள், "நம்ம வீட்டில் இருந்து எல்லோரும் வந்திருக்காங்க..." என்றாள் மெல்லமாய்...

அவள் அப்படிச் சொன்னதும் அவனுள் பெருத்த ஏமாற்றம் எழுந்தது... பின் அதை மறைத்துக் கொண்டு அவளைப் பார்த்து,

"உள்ளே போகலாம் வா..." என்றுவிட்டு உள்ளே சென்றான் அவளது கரத்தோடு கோர்த்திருந்த தனது கரத்தினை விலக்காது...

மாமனை கண்டதும் வினீதா ஓடி வந்து அவனைக் கட்டி கொண்டது... அவளைத் தூக்கி கொஞ்சினான் அவளது தாய்மாமன்...

அவர்களது வரவேற்பிற்காக எல்லோரும் இங்குக் கிளம்பி வந்திருந்தனர்... காளிமுத்து, அகிலாண்டம் கூடத் தங்களது முதுமையைப் பொருட்படுத்தாது பேரன், பேத்திக்காக வந்திருந்தார்கள்...

வந்தவர்கள் அனைவரையும் ஜீவா 'வாங்க' என்று தனித்தனியாக வரவேற்றது எல்லோரின் புருவங்களையும் உயர்த்த செய்தது... அதிலும் அவன் தனது தந்தை, கிருஷ்ணாவிடம் பேசியது அனைவருக்கும் பெருத்த ஆச்சிரியமாய் இருந்தது...

"ரெப்ரெஷ் பண்ணிட்டு வந்திடறேன்... நீங்க பேசிட்டு இருங்க..." என்று எல்லோரிடமும் சொன்னவன் மனைவியைப் பார்த்து, "ரூமுக்கு வா பேபி..." என்றுவிட்டு மேலே தங்களது அறைக்கு அவன் சென்றுவிட்டான்...

அவனது 'பேபி' என்றழைப்பில் அவளுக்குத் தான் அத்தனை வெட்கமாய்ப் போயிற்று... அனைவரது முகத்தையும் பார்க்க முடியாது தலையைக் குனிந்து கொண்டு படிகளில் ஏறினாள் வேகமாய்...

அனைத்தையும் ஆராய்ச்சியாய் பார்த்துக் கொண்டு இருந்தது ருத்ரஸ்ரீயின் விழிகள்...

மகனது குணம் கோணலாக இருந்தாலும் மருமகள் நல்ல குணவதி என்பது அவளுக்கு நன்கு தெரியும்... அவன் மற்றவர்களுக்காக நடித்தாலும் மருமகள் அப்படி நடிக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லையே... அவர்கள் சந்தோசமாய் இருப்பதை மருமகள் முகம் அவளிடத்தில் காட்டி கொடுத்தது...

என்னவோ மருமகள் அன்பில் மகன் மனம் மாறினால் சந்தோசம் தான் என்று நினைத்தவளுக்கு மனதில் சற்றுப் பாரம் இறங்கிய உணர்வு...

அபிமன்யு சொன்னதைக் கேட்டதில் இருந்து அவள் மனதில் பெரும் குழப்பம்... இப்படி அபிமன்யுவை பழிவாங்க என்று ஜீவா போட்ட திட்டத்தில் கடைசியில் அவன் மாட்டி கொண்டது மட்டுமில்லாமல் ஒரு அப்பாவி பெண்ணின் வாழ்க்கையையும் சேர்த்து பலியாக்கி விட்டானே என்று வருத்தமாய் இருந்தது மகன் மீது...

ஆனாலும் இப்போது திருமணப் பந்தத்தை மதித்து வாழும் மகனை கண்டு சற்று ஆறுதலாய் இருந்தது... என்ன இருந்தாலும் ஜெகனின் இரத்தம் அல்லவா... அதை யோசிக்கும் போது தான் அன்று ஜீவா சொன்னது நியாபகத்தில் வந்தது...

'கணவனால் மட்டும் தான் காதலை கொடுக்க முடியும்...' ஒருவேளை அதை மகன் உணர்ந்து கொண்டானோ...? அப்படி உணர்ந்து மனைவிக்கு உண்மையாய் வாழ்ந்தால் சந்தோசமே என்று நினைத்தாள்...

அறைக்கு முன் வந்து நின்ற சுபிக்ஷாவிற்கு அறைக்குள் செல்லவே தயக்கமாய் இருந்தது... இத்தனை நாளாய் நெருங்காத கணவன் இன்று அணைத்தது அவளை ஏதோ

செய்தது... மீண்டும் அவனைச் சந்திக்க அவளுக்கு அத்தனை வெட்கமாய் இருந்தது...

ஆனாலும் எதற்கு அழைத்தானோ என்று யோசித்தவளாய் மெல்ல அறைக் கதவை திறந்து உள்ளே நுழைந்தாள்...

அவள் உள்ளே நுழைந்ததும் தான் தாமதம் அடுத்த நொடி கணவனது இறுகிய அணைப்பில் கட்டுண்டு இருந்தாள் அவள்...

"நீ என்னிடம் பேச இத்தனை நாளானதா பேபி... இப்படிப் பேசாம இருந்து என்னைப் பைத்தியக்காரனா ஆக்கிறியே... உன்னை எந்தளவுக்குத் தேடினேன் தெரியுமா... உன்னை எந்தளவுக்கு எனக்குப் பிடிக்கும் தெரியுமா...?"

ஒவ்வொரு வார்த்தையாய் அழுத்தி கூறியபடி அந்த ஒவ்வொரு வார்த்தைக்கும் தனது இதழ்களை அவளது முகத்தில் அழுத்தமாய்ப் பதிய வைத்துக் கொண்டு இருந்தான் ஜீவா... அத்தோடு தனது அன்பையும் சேர்த்து...

அவளை அவனுக்கு எந்தளவுக்குப் பிடிக்கும் என்பதை அவனது கட்டுப்பாடற்ற, எண்ணிலடங்கா அவனது முத்தங்கள் அவளிடத்தில் சொல்லாமல் சொன்னது...

அவளுக்குமே அவனிடத்தில் அப்படிப் பாராமுகமாய் இருப்பது மிகவும் கஷ்டமாகத் தான் இருந்தது... அதை விட அவனது வார்த்தைகள் மிகுந்த துன்பத்தைக் கொடுக்க அதனால் அவள் சற்று ஒதுங்கி சென்றாள்...

ஆனால் இப்போது அவனது இதழொற்றலில் அவளது மனத்துன்பம் எல்லாம் பனியாய் கரைய அவளும் அவன் மீதான தனது மனத்தேடலை நிரூபிப்பதற்காக இசைந்து கொடுத்தாள் அவனுக்கு வாகாய்...

மனைவியின் உடல் மொழியில் அவளது மன சம்மதத்தை அறிந்து கொண்ட ஜீவாவின் மனதின் தேடல் கொஞ்சம்

கொஞ்சமாய் உடலின் தேவையாய் மாறி போக அதற்கு மேல் தாங்க மாட்டாதவனாய் மனைவியின் இதழ் மீது முற்றுகையிட்டான் அவன்...

கணவனது முதல் இதழ் முத்தம் அவளை அப்படியே வேறு ஒரு உலகத்துக்கு அழைத்துச் சென்றது சுகமாய்...

எவ்வளவு நேரம் நீடித்ததோ இதழ் யுத்தம்... அவள் தான் மூச்சுக்காற்று வேண்டி அவனைத் தன்னிடம் இருந்து பிரித்துத் தள்ளிவிட்டாள்...

"ச்சு... என்ன பேபி..." என்று ஆதங்கத்துடன் அவளை விட்டு விலகியவன் மீண்டும் அவளைத் தன் பிடியில் கொண்டு வந்தான் தாபமாய்...

"கீழே எல்லோரும் இருக்காங்க... என்ன நினைப்பாங்க... நான் போகணும்..." மெல்லமாய்க் கூறியவள் கணவனது முகம் காண வெட்கி அவனது சட்டை பொத்தானில் கண்களைப் பதித்துக் கூறினாள்...

அவளது வெட்கத்தை அவன் உணரவில்லை... அவளது பேச்சு அவனுக்குப் பெருத்த ஏமாற்றத்தை தோற்றுவிக்க மெல்ல அவளை விடுவித்தான்...

தனக்குத் தோன்றியது போல் ஏக்கம் அவளுள் ஏன் தோன்றவில்லை...? என்று அவனது மனம் குழம்பி போனது... ஒருவேளை இன்னமும் கோபமோ...? இல்லையே அவளே விருப்பப்பட்டுத் தானே...

மேலே அதைப் பற்றிச் சிந்திக்கும் போதே அவனது மனம் இறுகி போனது... தான் தேவையில்லாமல் அவளது உணர்வுகளைத் தூண்டிவிட்டு அதில் குளிர் காய்ந்தது போல் அவனுக்கு அத்தனை அவமானமாக இருந்தது...

"சரி நீ போ..." என்றான் இறுக்கமாய்...

திடீரென்று ஒலித்த அவனது குரல் இறுக்கத்தில் அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்... முறுக்கேற்றிய நாண் போல் விறைத்துக் கொண்டு எங்கோ பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டு அவள் கலக்கமுற்றாள்...

'இப்போ எதுக்குத் தேவையில்லாததைப் பேசி அவங்களைக் கோபப்படுத்துற...' தன்னைத் தானே கடிந்து கொண்டவள் அவனது கைத்தொட்டு அழைத்து,

"என் மேல் கோபமா...?" தான் அவன் மீது கொண்ட வருத்தத்தை மறந்துவிட்டு அவனைப் பற்றி மட்டுமே யோசித்தாள் அவள்...

அதில் கண்கள் பளிச்சிட திரும்பியவன், "உனக்கு ஒன்றும் கோபமில்லையே...?" என்று தயக்கத்துடன் அவளைப் பார்த்துத் திருப்பிக் கேட்டான்...

அவனின் தயக்கம் அவளுள் சிரிப்பை தோற்றுவிக்க, "இல்லையே..." என்றாள் புன்னகையுடன்...

"அப்போ பிடிச்சியிருக்கா..." ஒற்றை விரலால் அவளது முகத்தில் கோலம் போட்டபடி அவன் வினவினான்...

"ம்... ம்..."

அவன் எதைப் பற்றிக் கேட்டான் என்று அவளுக்குத் தெரியாது... அவள் எதற்குப் பதில் கூறினாள் என்று அவனுக்கும் தெரியாது... ஆனால் ஒருவரது அருகாமையை ஒருவர் அனுபவித்து ரசித்துக் கொண்டிருந்தனர்...

"அத்தை..." வினீதாவின் குரலில் நிகழ்காலத்துக்கு வந்தவர்கள் அவசரமாய்க் கதவை திறக்க...

"அத்தை... எனக்கு ஊட்டி விட வா..." என்றழைத்தபடி வந்து நின்றாள் அந்தச் சின்னச்சிட்டு...

"வர்றேன்டி பட்டு..." என்றபடி மருமகளை அவள் தூக்கி கொள்ள...

"எனக்கு...?" என்று அவன் மனைவியிடத்தில் கண்சிமிட்டி கேட்க...

அதற்குப் பெரியவள் பதில் அளிக்கும் முன் சின்னவள் முந்தி கொண்டு, "பெரியவங்களுக்கு ஊட்டி எல்லாம் விட முடியாது... அது பேட் ஹேபிட்..."

அதைக் கேட்டுச் சுபிக்ஷா சிரிக்க அவனோ இருவரையும் முறைத்துப் பார்த்தான்...

"உன் அத்தைக்கு நான் சின்னக்குழந்தை தான்... ஆமாவா இல்லையான்னு அத்தை கிட்ட கேட்டு சொல்லு..."

இதற்குச் சுபிக்ஷா என்னவென்று பதில் சொல்வாள்... பதில் தெரியாது திருதிருவென்று முழித்தாள்...

"அத்தை சொல்லு..." சின்னவள் கேட்க,

"அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லைடா வினீ குட்டி..." என்று அவள் சமாளிக்க...

"ஆனால் எனக்கு உங்கத்தைச் சின்னக்குழந்தை தான்... எங்களுக்கு ஆயிரம் குழந்தை பிறந்தாலும் என்னோட முதல் குழந்தை உன் அத்தை தான்..."

அன்று மனைவி சொன்னதை நினைவு கூர்ந்து கூறியவன் அவளைக் கண்டு கண்சிமிட்டி சிரித்தான்...

அதில் வெட்கம் கொண்டு அவள் வினீதாவோடு அறையை விட்டு வெளியில் ஓடினாள்...

குழந்தையோடு அவள் செல்லும் காட்சியைப் பார்த்தபடி நின்றிருந்த ஜீவாவின் மனதில் பல கற்பனைகள்

சிறகடித்துப் பறக்க, அவன் உற்சாகமாக விசிலடித்தபடி குளிக்கச் சென்றான்...

மீண்டும் அவன் கீழிறங்கி உணவு மேசைக்கு வந்த போது வினீதா மாமன் பேசியதை எல்லாம் கடைப்பரப்பி வைத்திருந்தாள் அனைவரிடமும்... அதைக் கேட்டு புது மணத்தம்பதியை எல்லோரும் ஓட்டி எடுத்தனர்...

வெட்கத்தில் முகம் சிவக்க நின்றிருந்த இருவரையும் கண்டு ஜெகன், செல்வா இருவரது மனமும் நிறைந்தது... அதிலும் ஆணான ஜீவாவின் முகம் வெட்கத்தில் சிவந்தது இருவருக்குமே ஆச்சிரியமாக இருந்தது...

"நான் சொன்னேன்ல்ல மாப்ள... என் மகன் அவனோட கடமையில் இருந்து தவற மாட்டான்னு... இனி அந்நியோன்யமா வாழ்றது எப்படின்னு அவனே புரிஞ்சிப்பான்... வாழ்க்கையில் ஜெயிச்சுடுவான்னு எனக்கு நம்பிக்கை இருக்கு..." மனம் பூரிக்கச் சொன்ன ஜெகனின் கூற்றை அப்படியே ஆமோதித்தான் செல்வா...

முகம் மலர கணவனை நேசத்தோடு பார்த்தபடி இருக்கும் மகளைக் கண்டதும் அவனுள் பெரும் திருப்தி... இந்தத் திடீர் திருமணம் இருவரையும் எந்த விதத்தில் பிணைத்து வைக்கப் போகிறதோ என்று கவலைப்பட்டுக் கொண்டு இருந்தவனுக்கு இப்போது தான் நிம்மதியாக இருந்தது...

ருத்ரஸ்ரீக்கும் மனம் நிறைவாக இருந்தது... எப்படி நடந்திருந்தாலும் இந்தத் திருமணம் வெற்றி பெற வேண்டும் என்றே அந்தத் தாயுள்ளம் விரும்பியது...

தனிமையில் மகனை சந்தித்த போதும் அவள் அதையே அவனிடத்தில் சொன்னாள்...

"மாம்... நான் அந்தக் கார்த்திக் போல் கட்டிய மனைவிக்குத் துரோகம் பண்ண மாட்டேன்... என் வாழ்க்கையில்

திருமணம் ஒரு முறை தான்... என் மனைவி சுபி மட்டும் தான்... அதில் எந்த மாற்றமும் இல்லை..."

அத்தோடு பேச்சு முடிந்தது போல் சென்ற மகனை கண்டு யோசித்தபடி நின்றிருந்தாள் ருத்ரஸ்ரீ... அபிமன்யு சொன்னதற்கும், மகன் நடந்து கொள்வதற்கும் சற்றும் சம்பந்தம் இல்லையே...

அப்படி என்ன தான் நடந்திருக்கும் என்று அவளுக்குப் பெருத்த சந்தேகமாய் இருந்தது... அந்தச் சந்தேகத்தில் இருந்து அபிமன்யுவை விலக்கி வைத்தவளால் மகனை அப்படி விலக்கி வைக்க முடியவில்லை...

ஏனெனில் அவன் அவளது வாரிசாயிற்றே...!!!

அன்று இரவு அறைக்கு வந்த ஜீவா மனைவியிடம், "தேங்க்ஸ்..." என்று கூறிவிட்டு அவளது கன்னத்தில் அழுந்த முத்தமிட்டவன் அங்கிருந்து நகர மனம் இல்லாதவனாய் அவளது கன்னத்திலேயே இதழ் பதித்து நிற்க... கணவனது செய்கையில் பெண்ணவள் நாணத்துடன் அவனது தோள் வளைவில் முகத்தைப் புதைத்து கொண்டாள்...

அதில் அவனது மனம் மகிழ்ச்சியில் திளைத்தது...

"பேபி... மாம் பேசிய பேச்சு என்னைக் கொஞ்சம் கோபப்படுத்திருச்சு... அந்தக் கோபத்தில் தான் அப்படிப் பேசிவிட்டேனே தவிர... உன் மேல் எந்த வெறுப்பும் இல்லை..." என்றவன் அவளது முகத்தைத் தனது கைகளில் தாங்கி,

"என்னை நம்புறியா பேபி..."

ஆளை கொல்லும் ஊடுருவும் பார்வையோடு அவன் அப்படிக் கேட்டால் அவளால் தான் மறுத்து பேச முடியுமா...?

ஆம் என்பது போல் தலையாட்டியவளை அவன் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டான்...

அதற்கு மேல் கணவன் என்கிற உரிமையை அவளிடத்தில் நிலை நாட்ட விரும்பாதவனாய் அவளது நெற்றியில் இதழ் பதித்து, "குட்நைட்..." என்று விட்டு அவன் உறங்க சென்றுவிட... அவள் தான் அவனது தொடுகையில் மனதுக்குள் பாகாய் உருகி கரைந்தாள்...

அந்த நொடி அவளுக்குப் புரிந்தது கணவனைத் தனக்கு மிகவும் பிடித்திருப்பது...

அடுத்து வந்த இரண்டாவது நாளில் ஜீவா - சுபிக்ஷா வரவேற்பு மிகப் பிரமாண்டமாய் நடைப்பெற்றது... விழாவிற்கு வருகை தந்திருந்த கூட்டத்தைக் கண்டு சுபிக்ஷா பிரமித்தாள் என்றால் அங்கு வந்த பெண்களின் அழகை கண்டு வியப்பில் விழி விரித்தாள்...

அந்தக் கணம் அவளுக்கு ஒன்று மட்டும் புரிந்தது தான் கணவனுக்குச் சற்றும் பொருத்தம் இல்லை என்று... அந்தஸ்தில், அழகில் என்று எதிலுமே அவள் பொருத்தமில்லை...

ஆனால் அந்த எண்ணம் எதுவும் அவனுக்கு இல்லை போலும்... வந்த விருந்தினர் எல்லோரிடமும் மனைவியை அறிமுகப்படுத்தி வைத்தான் புன்னகை முகத்துடன்... அதில் சிறு முகச்சுளிப்பு கூட இல்லை...

அதை உணர்ந்தார் போன்று அவளது பார்வை அடிக்கடி கணவனை நோக்கி சென்று சென்று மீண்டது...

அதைக் கண்டு கொண்டவனாய் அவன், "இந்தப் பார்வையை இங்கே வைத்து பார்க்கிறாயே பேபி... இதேது நம் ரூம்மா இருந்திருந்தா நடந்திருப்பதே வேறு..." என்று பெருமூச்சு விட்டான்...

"உங்களுக்குக் கொஞ்சமும் வருத்தமா இல்லையா...?" மனைவியின் கேள்வியில் புரியாது நோக்கியவன்,

"எதுக்கு...?"

"நான் உங்களுக்குக் கொஞ்சமும் பொருத்தமில்லாதவள்ன்னு..."

அதைக் கேட்டு அவனது பார்வை அவளிடம் நிலைத்தது... தன்னை மேலிருந்து கீழாக ஊடுருவுவது போல் லேசர் பார்வை பார்த்த கணவனது பார்வையில் அவளுக்கு வெட்கம் பிடுங்கி தின்றது...

"இந்த ட்ரெசில் எவ்வளவு அழகா இருக்கத் தெரியுமா...?"

கணவனது குரலில் வழிந்த நேசம் அவளது மனதை தொட்டது... அதில் விழி விரிய அவனை ஏறிட்டவளை கண்டு அவன்,

"அப்படியே உன்னை அள்ளியெடுத்து..."

அது மேடை என்பதையும் மறந்து மேலே அவன் பேசும் முன் அவனது வாயை தனது மென்கரங்களால் மூடியிருந்தாள் அவள்... அதைக் கண்டு அவனது முகத்தில் அத்தனை சிரிப்பு...

"இது மாதிரி இனி நீ பேசுவியா...?" அவன் சொன்னதற்கு அவள் இல்லை என்பது போல் தலையாட்ட...

"குட்... இல்லைன்னா இனி நான் இப்படிப் பதில் சொல்லிக்கிட்டு இருக்க மாட்டேன்... செயலில் காட்டி விடுவேன்..." என்று செல்லமாய் மிரட்டிய கணவனைக் கண்டு இப்போது நிறைவாய் சிரித்தாள் அவள்...

இருவரையும் மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டு இருந்தனர் குடும்பத்து உறுப்பினர்கள்... ஜீவா அவர்கள்

அனைவரையும் வந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்... அப்படிக் கிருஷ்ணாவை அவன் அறிமுகப்படுத்தும் போது,

"என் மனைவியின் அண்ணன்..." என்று அறிமுகப்படுத்த... அதைக் கண்டு சுபிக்ஷா, பூஜா இருவரது முகமும் சுருங்கியது...

தங்கை முக மாறுதலை அவன் உணர்ந்தானோ இல்லையோ மனைவியின் முகவாட்டத்தைக் கண்டு கைகள் இரண்டையும் உயர்த்தியபடி 'சரண்டர்' என்றவன் அதன் பின் கிருஷ்ணாவை,

"என் சகோதரியின் கணவர், எங்க வீட்டு மாப்பிள்ளை..." என்று அறிமுகப்படுத்தியவன் கிருஷ்ணாவின் தோளில் கைப் போட்டு அணைத்துக் கொண்டு மனைவியிடம் பார்வையால் 'ஓகேவா?' என்று கேட்டான்...

அதில் அவள் முகம் மலர வேகமாய் 'ஓகே' என்று தலையசைக்க அதைக் கண்டு அவனும் முகம் மலர்ந்தான்... இதைப் பார்த்த கிருஷ்ணா கூடச் சற்று அசந்து தான் போனான் தனது மச்சினனின் மாற்றம் கண்டு...

ஜீவா தன்னுடைய வரவேற்பிற்கு ரிஷ்வந்த், ஹர்ஷிதா, ஸ்மிருதி யாரையும் அழைக்கவில்லை... அவர்கள் அனுமதியின்றி உள்ளே வராதபடி ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது...

இவர்களின் வரவு நிச்சயம் மனைவியின் மனதை வருத்தும் என்பது அவனுக்குத் தெரியும்... அவளை வருத்தும் எந்த விசயத்தையும் செய்ய அவனுக்கும் விருப்பமில்லை...

அன்றைய இரவும் தேவதை போல் ஜொலித்த மனைவியைக் கண்டு தாபம் எழுந்த போதும் ஜீவா அவளை விட்டு சற்று விலகித்தான் இருந்தான்... இன்னமும் ஏதோ ஒன்று அவன் தன் மனைவியிடத்தில் எதிர்பார்த்தான்...

அது என்னவென்று அவனுக்கும் புரியவில்லை... ஆனாலும் ஏதோ ஒன்று குறைவது போல் அவனுக்குத் தோன்றியது...

அவ்வளவு நேரம் தன்னைச் சீண்டி கொஞ்சி பேசிய கணவன் படுக்கையறையில் மட்டும் கண்ணியத்துடன் நடந்து கொள்வது அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது... ஆனாலும் அதைக் கேட்க முடியாமல் அவனின் விருப்பத்திற்கேற்ப அமைதி காத்தாள் அவள்...

ஸ்மிருதி மகளைப் பள்ளிக்குக் கொண்டு விட்டு விட்டு மீண்டும் வீடு திரும்பியவள் பரபரப்பாக வெளியில் கிளம்பி கொண்டு இருந்தாள்... ஒரு கணினி நிறுவனத்தில் வேலைக்காக நேர்முகத் தேர்வுக்கு இன்று வர சொல்லியிருந்தார்கள் அதற்குத் தான் அவள் கிளம்பி கொண்டு இருந்தாள்...

ஒரு கோப்பில் அவளது படிப்புச் சான்றிதழ்களை அடுக்கி வைத்துக் கொண்டு இருந்தவளுக்கு அவளையும் மீறி ஜீவாவின் நினைவுகள்...

உறவாய் இருந்த அனைவரையும் இழந்து வயிற்றில் பிள்ளையோடு, படிப்பையும் கைவிட்டு அவள் தனித்துத் தவித்துப் போது இந்த ஜீவா தான் அவளின் முழுப் பொறுப்பையும் தன் கையில் எடுத்துக் கொண்டான்... எத்தனையோ சொந்தங்கள் இருந்த போதும் யாரும் அவளுக்கு உதவ முன் வரவில்லை...

மசக்கையில் கஷ்டப்பட்டுப் பிள்ளை பெற்று இவள் அம்ரிதாவை வளர்க்க துன்பப்பட்ட போதும் அவன் தான் உடன் இருந்தான் ஒரு தாயாய்...

அதை நினைக்கும் போது தான் அவளுக்கு மூளையில் மின்னல் வெட்டியது... அவன் எப்போதுமே அவளுக்கு ஒரு தாய்மை உணர்வோடு தான் எல்லாவற்றையும் செய்திருக்கிறான்... தான் தான் தேவையில்லாமல் எதை எதையோ கற்பனை செய்து கொண்டு அவன் பின்னால்

சுற்றி இருக்கிறோம் என்பதைக் காலத் தாமதமாய் இப்போது புரிந்து கொண்டாள்...

அவன் மனதில் அவளைப் பாதுகாக்கும் உணர்வு தான் இருந்ததே தவிர... அவளைப் பெண்டாளும் உணர்வு சற்றும் இருந்தது இல்லை... அவன் வரையில் அவன் நினைத்தது, நடந்து கொண்டது எல்லாம் சரி...

ஆனால் தான் அவனை உயிருக்கு உயிராய் நேசித்தது பொய்யில்லையே... இதோ இப்போதும் அவனுக்காகத் தானே அவளது இதயம் துடிக்கிறது... அவளது இதயத்தில் அவன் தானே கொலு வீற்றிருக்கிறான்... அதை எப்படி அவளால் மறக்க முடியும், அழிக்க முடியும்...

அதைத் தொடர்ந்து அவளுள் ஏதேதோ பழைய நினைவுகள் எழுந்து அவளது துக்கத்தை அதிகரித்தது...

இதுக்கு மேல் அமர்ந்திருந்தால் சரி வராது என்று எண்ணி அவள் தனது கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பிய அதே நேரம் வீட்டு அழைப்பு மணி ஒலித்தது...

'யாராக இருக்கும்...?' என்று யோசித்தவளாய் கதவை நோக்கி சென்றாள் அவள்...

அவளையும், மகளையும் பார்க்க வரும் ஒரே ஜீவன் ஜீவா மட்டும் தான்... ஒருவேளை அவனோ...???

அந்த நினைவில் முகம் மலர மகிழ்ச்சியோடு கதவை திறந்தவள் முகம் அங்கு நின்றிருந்தவனைக் கண்டு பேயறைந்தது போலானது...

அச்சத்துடன் பின்னால் நகர்ந்தவள் அடுத்த நொடி விரைந்து அறைக்குள் நுழைந்து கதவை சாத்தி தாளிட்டு கொண்டாள்...

அறையில் இருந்த தொலைப்பேசியில் இருந்து அவள் ஜீவாவை அழைத்தாள்... ம்ஹூம் அவ்வளவு சுலபத்தில் அவளது அழைப்பை அவன் எடுக்கவில்லை... மீண்டும் மீண்டும் அவள் அழைப்பு விடுவிக்க வேறுவழியின்றி மறுபுறம் எடுத்தவன் கோபமாய்ப் பேசும் முன்,

"ஜீவி... அவன் வந்திருக்கான்..." என்றாள் மொட்டையாக...

"யார்...?" என்றான் ஜீவா சற்று எரிச்சலோடு...

"அதான்... அவன்..." அவள் பயத்தில் திக்கியதை உணர்ந்தவனாய்,

"யார்ன்னு தெளிவா சொல்லு ஸ்ருதி...?" என்றான் தன்மையாக...

"யஷூ..."

ஸ்மிருதி சொன்னதைக் கேட்டு திகைத்து போய் வேகமாய் அமர்ந்திருந்த இருக்கையில் இருந்து எழுந்தான் ஜீவா... இப்போது புரிந்தது அவளின் பயம் எதனால் என்று...

"நீ பயப்படாம இரு... நான் இப்பவே அங்கே வர்றேன்..."

ஜீவா அப்படிக் கூறியதும் தைரியம் வந்தவளாய் கட்டிலில் அமர்ந்த ஸ்மிருதி மறந்தும் அறைக் கதவை திறக்கவில்லை...

அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த அந்த 'யஷூ' சாத்தியிருந்த அறைக் கதவை வேதனையுடன் பார்த்திருந்தான்...

அதை விட வேதனை எழுந்தது அதனுள் இருந்தவளை நினைத்து...!!!

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 17

பழைய நினைவுகளின் தாக்கத்தில் கண்களை மூடி ஆழ்ந்திருந்த யஷ்வந்த் ஆள் வரும் அரவத்தில் தனது கண்களைத் திறந்து பார்த்தான்... அங்கே வீட்டின் வாயிலில் மூச்சிறைத்தபடி நின்றிருந்த ஜீவாவை கண்டதும் அவனது முகம் ஒரு நொடி மலர்ந்து மறுநொடி வாடி அவனை நேர்ப்பார்வையாய் சந்திக்க முடியாமல் குற்றவுணர்ச்சியில் தலை குனிந்தான்...

அந்தளவுக்கு அவன் செய்த தவறின் அளவு அவனை மிகவும் வருத்தியது...

ஜீவாவின் நிலைமையோ வேறு விதமாக இருந்தது... இத்தனை வருடங்களாகக் கண்ணில் அகப்படாமல் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடி கொண்டிருந்த நண்பனை கண்டதும் அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... ஆனாலும் மனதினோரம் கோபம் கனன்று கொண்டிருந்தது...

இப்போது அந்தக் கோபத்தைத் தள்ளி வைத்தவனாய் நண்பனை நோக்கி ஆவலுடன் வந்தவன்,

"யஷூ..." என்றபடி அவனை ஆரத்தழுவி கொண்டான்...

ஸ்மிருதியின் புறக்கணிப்பில் காயப்பட்டு இருந்த யஷ்வந்த்திற்கு ஜீவாவின் அணைப்பு சற்று ஆறுதலாக இருந்தது... என்ன இருந்தாலும் உயிர் நட்பு எல்லா உறவுகளையும் விட ஒரு படி மேலானது அல்லவா...

"இத்தனை வருசம் எங்கேடா போயிருந்த...? உன்னைத் தேடாத இடமில்லை... ஒரு நாட்டில் உன்னைத் தேடி கண்டுபிடித்தால் அடுத்த நாட்டிற்கு ஓடி போயிர்ற... இப்படி எத்தனை நாளைக்கு ஓடி ஒளிந்து கொண்டிருப்ப...?

இப்பவாவது இங்கே வரணும்ன்னு தோணுச்சே... ரொம்பச் சந்தோசம்டா..."

"இப்பத்தானே ஸிமி உன்னை விட்டு விலகி வந்திருக்கிறாள்..." என்ற யஷ்வந்த்தின் முகத்தில் அத்தனை வேதனை...

அதைக் கேட்டு ஜீவாவின் முகம் மாறியது... ஒரு நொடியில் தன்னை மீட்டு கொண்டவன்,

"அவள் எப்போதும் உன் ஸிமி தான் யஷூ..." என்றான் பரிவாக நண்பனின் மனம் அறிந்து...

"எங்கே அதை அவளைச் சொல்லச் சொல் பார்க்கலாம்..." என்ற நண்பனுக்குப் பதில் சொல்லத் தெரியாது விழித்தான் ஜீவா...

"நாம பிறகு பேசிக்கலாம் ஜீவா... முதல்ல ஸிமி என்ன பண்றாள்ன்னு பார்... அவள் கதவை சாத்தி ரொம்ப நேரமாகுது..."

அதைச் சொல்லும் போதே யஷ்வந்த்தின் விழிகள் அந்த அறைக்கதவை வலியுடன் பார்த்தது... அதைக் கண்டு ஜீவா ஒன்றும் பேசாது ஸ்மிருதி இருந்த அறைக்கதவை தட்டினான்...

"ஸ்ருதி... கதவை திற..."

அத்தனை நேரம் பழைய நினைவுகள் மனதை பாரமாய் அழுத்தியதில் தனக்குள் அழுது கரைந்து கொண்டிருந்த ஸ்மிருதி காதில் ஆபத்பாந்தவனாய், தன்னை ரட்சிக்க வந்த கடவுளாய் ஜீவாவின் குரல் விழுந்தது...

அடுத்த நொடி கதவை திறந்து கொண்டு வெளியில் வந்தவள் ஒரே பாய்ச்சலில் ஜீவாவை அணைத்துக் கொண்டு,

"ஜீவி..." என்று கண்ணீர் விட்டு கதறினாள்...

அவளது செயலில் முதலில் திகைத்த ஜீவா பின்பு அவளை அணைத்து ஆறுதல் சொல்ல முடியாமல் தனது இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி நின்றவன் தன் நண்பனை தர்மசங்கடத்துடன் பார்த்தான்...

யஷ்வந்த்திற்குமே என்ன செய்வது என்று தெரியவில்லை... அதற்காக அவன் தனது நண்பனையோ, தன்னவளையோ சந்தேகப்படவில்லை... தோள் சாய்ந்து ஆறுதல் தேட தான் இருக்கும் போது அவள் ஜீவாவை நாடியது அவனுக்கு அத்தனை வருத்தமாக இருந்தது... அதே சமயம் இந்த நிலைக்கு வித்திட்ட தனது செயலை எண்ணி அவனது மனதில் அப்படி ஒரு துயரம் மண்டியது...

காலம் எந்தவொரு காயத்தையும் ஆற்றும் வல்லமை படைத்தது என்கிறார்கள்... ஆனால் ஸ்மிருதியின் காயத்தை ஆற்ற இத்தனை வருடங்களில் ஒரு முறை கூடக் காலம் ஏன் முயலவில்லை... மனதுக்குள் தவிப்பாக எண்ணியவன் தன்னவளை பார்த்தான்...

முன்பு பட்டாம்பூச்சி போல் உற்சாகமாகப் பறந்து திரிந்த ஸ்மிருதி இவள் இல்லை... அழுகையில் கரைந்து கொண்டிருந்தவளை பார்க்கும் போது யாரோ போல் வேற்று ஆளாய் தெரிந்தாள்... அவன் அறிந்த ஸ்மிருதிக்கு அழ தெரியாது... எப்போதும் சிரித்துக் கொண்டிருக்க மட்டுமே தெரியும்...

அப்படிப்பட்ட பெண்ணை இந்த நிலைக்குத் தள்ளிய தன் அவசரப்புத்தியை எண்ணி இப்போதும் குற்றவுணர்ச்சி எழுந்தது...

"ஸிமி..." என்று அவளை அழைத்தான்...

"ஜீவி... முதலில் இங்கிருந்து அவனைப் போகச் சொல்... எனக்கு அவன் முகத்தில் முழிக்கவே விருப்பமில்லை..."

என்று அவன் மேலே பேச வாய்ப்பில்லாமல் அவள் கத்தினாள்...

தன்னை அணைத்துக் கொண்டு கதறுபவளை பதிலுக்கு அணைத்து ஆறுதல்படுத்தவும் முடியாமல், அதே சமயம் அவளை விட்டு விலகவும் முடியாமல் பெரும் அவஸ்தையாக இருந்தது ஜீவாவிற்கு...

"ஷ்... ஸ்ருதி... இது என்ன பேச்சு...? தவறு செய்தவனுக்கு மன்னிப்பு என்பதே கிடையாதா...? அவனும் தான் எத்தனை தடவை உன்னிடம் மன்னிப்பு கேட்பான்...? கொஞ்சம் அவனைப் புரிஞ்சிக்க முயற்சி செய்... உனக்காக இல்லைன்னாலும் அம்ருவுக்காக..."

ஜீவா சொல்லி முடிக்கும் முன் அவளுக்கு அப்படி ஒரு கோபம் வந்துவிட்டது... அவனிடம் இருந்து விலகி நின்றவள் அவனை அருவருப்புடன் பார்த்தாள்...

"என்ன இருந்தாலும் நீயும் அவனைப் போல் ஒரு ஆண் இனம் தானே... அதான் அவனுக்குச் சப்போர்ட் பண்ணி பேசுற... நீ ஒரு பெண்ணாய் இருந்திருந்தால் என் மனக்கஷ்டம் என்னன்னு உனக்குப் புரிந்திருக்கும்... அவன் என் விருப்பம் இல்லாமல் என்னைத் தொடுவான்... அதுக்கு அப்புறம் மன்னிப்பு கேட்பான்... நானும் சரின்னு அவனை மன்னிச்சு அவன் கூட வாழணுமா...? எனக்குன்னு ஒரு மனசு இல்லையா ஜீவி...?" என்று ஜீவாவை பார்த்து கேட்டவள் அடுத்து யஷ்வந்த்தை பார்த்து,

"என் மனசுல ஜீவி தான் இருக்கான்னு தெரிஞ்சு இருந்தும் என்னைத் தொட்டியே நீ எல்லாம் மனுசனா இல்லை ராட்சசனா...? நீ பண்ணிய தப்பை மன்னிப்புங்கிற ஒரு வார்த்தையில் அடக்கிவிட முடியுமா...? உனக்கும் ஒரு தங்கச்சி இருக்கா இல்லையா... அவள் கிட்ட யாராவது இப்படி நடந்துக்கிட்டால் உன் பதில் என்ன...? சொல்லுடா... பதில் சொல்லுடா..."

ஆவேசத்துடன் யஷ்வந்த்தை நெருங்கி வந்தவள் அவனின் சட்டையைப் பிடித்துக் கொண்டு கத்தினாள்... அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை... மன்னிக்க முடியாத தவறு செய்தவன் அவன் அல்லவா...

அதற்காக இத்தனை நாளாய் அவனிடத்தில் பேச கூட மறுத்து பாராமுகமாய் இருந்தவள் முதன்முறையாய் அவனிடத்தில் தனது கோபத்தை வெளிப்படுத்துகிறாள்... அது கூட அவனுக்குச் சந்தோசமாகத் தான் இருந்தது... அவன் செய்த தவறுக்கு அவள் அவனது உயிரை எடுத்தால் கூட அவனுக்குச் சம்மதமே...

"ஏன்டா இப்படிச் செஞ்ச...? ஏன்டா...?" என்று கேட்டபடி அவனது கன்னத்தில் மாறி மாறி அறைவிட்டாள் தனது இத்தனை நாள் ஆத்திரத்தை, துக்கத்தைக் காட்டும் வழியறியாது...

அதைக் கண்டு பதறி போய் ஜீவா முன்னால் வர யஷ்வந்த் அவனை 'வரவேண்டாம்' என்று சைகையில் தடுத்து நிறுத்திவிட்டான்...

ஜீவாவிற்கு நண்பனை கண்டு அதிசயமாக இருந்தது... அவன் அறிந்த நண்பன் யஷ்வந்த் இவனில்லை... யஷ்வந்த்தும் ஜீவாவை போன்று பணத்திமிர் பிடித்தவன் தான்... ஆள் நல்ல அழகு, பணத்திற்கும் குறைவில்லை... போதாக் குறைக்கு ராஜ வம்சம் வேறு... அதனால் இயல்பிலேயே அகம்பாவம் கொண்டவன்...

அப்படிப்பட்டவன் இன்று ஸ்மிருதி கொடுக்கும் அடிகளை வாங்கிக் கொண்டு அமைதியாக இருக்கிறான் என்றால்...? அவன் மனதில் பெருத்த மாற்றம் வந்திருக்க வேண்டும் என்று தான் அவனுக்குத் தோன்றியது...

யஷ்வந்த்தை அடித்து அடித்து ஓய்ந்து போனவளாய் அப்படியே தரையில் அமர்ந்து அழ போனவளை தன்னுடன் இறுக்கி அணைத்துக் கொண்டான் யஷ்வந்த்... சற்று முன்

ஜீவாவை அவள் அணைத்த போது அவன் ஆதரவு தர வேண்டி கூட அவளைத் தொடவில்லை... ஆனால் இப்போது தன்னை அணைத்த யஷ்வந்த்தின் ஆறுதலான அணைப்பில் தன்னை மறந்து அவனுள் அடங்கியவள் குமுறி குமுறி அழ ஆரம்பித்தாள்... தனக்குக் கிடைத்த ஒரே ஆதரவை விட்டு விட மனமில்லை போலும் அந்தப் பேதை பெண்ணிற்கு...

அவனின் மனம் அழும் தன்னவளை கண்டு மிகவும் வருத்தமுற்றது... அவளாவது அழுது தனது சோகத்தை ஆற்றி கொள்கிறாள்... ஆனால் அவன்...???

"ஸிமி... இங்கே பார்... அழாதே... நீ அழுதால் எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு..." அவளது தலையைத் தடவி ஆறுதல்படுத்தியவாறு அவன் கூற...

அதில் சட்டென்று நடப்பு புரிய அவனை விட்டு வேகமாய் விலகியவள் தீயாய் அவனை உறுத்து விழித்தாள்...

"நான் இப்படி அழுவதற்கு நீ தானே காரணம்... நீ மட்டும் என் வாழ்க்கையில் வராமல் இருந்திருந்தால் நான் என் குடும்பத்தோடு சந்தோசமா இருந்திருப்பேனே... எல்லாம் உன்னால் தான்..." என்று கத்தியவள் ஜீவாவிடம்,

"இப்போ உன் பிரெண்ட்டை வெளியில் போகச் சொல்லுறியா இல்லையா...?" என்று அவனிடத்திலும் கத்த துவங்கினாள்...

ஜீவா இயலாமையுடன் நண்பனை பார்க்க... அதைக் கண்டு அவளின் ஆத்திரம் அதிகரித்தது...

"என்ன இருந்தாலும் அவன் உன் உயிர் நண்பன் இல்லையா... அந்தப் பாசம் இல்லாமல் போகுமா..." என்று கேலி குரலில் கேட்டவள்,

"அப்போ அவனோடு சேர்த்து நீயும் இந்த வீட்டை விட்டு வெளியேறு..." என்றாள் சிறிதும் தயவுதாட்சண்யமின்றி...

அதில் யஷ்வந் தான் கோபம் கொண்டான்...

"ஸிமி... என்னை என்ன வேணா சொல்லு... நான் அப்படிப்பட்டவன் தான்... ஆனால் அவனைப் பார்த்து நீ எப்படி இப்படிச் சொல்லலாம்...? அவன் உனக்குச் செஞ்ச உதவியை மறந்துட்டு பேசுறியா...?"

அதைக் கேட்டு அவளது தலை தானாகத் தாழ்ந்தது...

"விடு யஷூ... அவள் சின்னப் பெண் தானே... அவளின் மனக்கஷ்டம் அப்படி..." என்றான் ஜீவா தன்மையாக...

முதன்முறையாகத் தன்னைத் தாங்கி பேசிய ஜீவாவை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் அவள்... ஆனால் அடுத்த நொடி அவளின் கண்கள் விரக்தியுடன் அவனைப் பார்த்தது...

"நண்பனை கண்டதும் தான் நான் சின்னப் பெண் என்று உனக்குத் தெரிகிறதா...? எத்தனை நாள் எனக்கு வாழ்க்கை கொடுன்னு உன்னிடம் கெஞ்சியிருப்பேன்... அப்போ எல்லாம் இது தோணலை... இப்போ மட்டும் தோணுதா உனக்கு..." என்றவளின் குரலில் கேலியும், வேதனையும் சரிபாதியாய்க் கலந்திருந்தது...

"ஸ்ருதி..." அதட்டலாய் ஒலித்த ஜீவாவின் குரலில் எங்கே நண்பன் தங்களை இருவரையும் தவறாக எண்ணி விடுவானோ என்கிற பதட்டமே அதிகமாக இருந்தது...

யஷ்வந்த்தோ அதைத் தவறாக எண்ணாமல் சாதாரணமாக எடுத்துக் கொண்டு இருவரையும் பார்த்தான்... பின்பு,

"ஸிமி... இனியும் உன்னை இப்படியே விடறதா இல்லை... இனி நான் அடிக்கடி இங்கே வருவேன்... உன் மனசு மாறும்

வரை உன்னை நான் விட மாட்டேன்..." என்ற யஷ்வந்த் ஜீவாவிடம்,

"ஜீவா... நான் கிளம்பறேன்..." என்க...

"இருடா நானும் வர்றேன்..." என்றபடி ஜீவா தானும் கிளம்ப முயல...

கண்களால் நண்பனை 'வேண்டாம்' என்று சொன்ன யஷ்வந்த் ஸ்மிருதியை சுட்டிக்காட்டி அவளைப் பார்த்துக் கொள்ளச் சொன்னவன் தனது அலைப்பேசியில் இருந்து ஜீவா அலைப்பேசிக்கு அழைப்பு விடுத்தவன் பின்பு அதைத் துண்டித்துவிட்டு,

"இது என்னோட செல் நம்பர்... எப்போன்னாலும் நாம சந்திச்சு பேசலாம்..." என்றுவிட்டு அங்கே நிற்காது சென்றுவிட்டான்...

நண்பன் சென்றதும் ஜீவா ஸ்மிருதியை சிறிது கோபத்துடன் பார்த்தான்...

"உண்மையை உணர்ந்துக்காம முட்டாள் மாதிரி இருக்க நீ... இனிமேலாவது யதார்த்தத்தைப் புரிஞ்சி நடந்துக்கோ..." என்று அவன் அவளைக் கடிய...

அதில் கண்ணில் அடிப்பட்ட வலியுடன் அவனை ஏறிட்டவள், "நான் எதுக்கு உண்மையை உணரணும்...? உணர்ந்து அவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லுறியா...? என் உடலை வேணும்ன்னா அவன் ஜெயிச்சிருக்கலாம்... ஆனா என் உள்ளத்தை ஜெயிச்சது நீ தான்.... இப்போ சொல்லு... நான் எந்த உண்மையை உணரணும்...? உடல் சொல்ற உண்மையவா...? இல்லை உள்ளம் சொல்ற உண்மையவா...?"

அவள் வார்த்தையில் இருந்த சத்தியம் அவனை வாயடைக்கச் செய்தது... ஆனாலும் நடவாத காரியத்தைப்

பற்றி மேலே பேசுவதால் எந்தப் பலனும் இல்லை என்பதை உணர்ந்தவனாய்,

"இங்கே பார்... எனக்குக் கல்யாணம் முடிஞ்சிருச்சு... இனி என் வழி வேறு... உன் வழி வேறு... முதல்ல அதைப் புரிஞ்சிக்கோ..."

"புரிஞ்சதால தான் நான் உன்னை விட்டு விலகி வந்துட்டேன்... இப்போ நான் உன் கிட்ட வந்து கெஞ்சினேனா எனக்கு வாழ்க்கை கொடுன்னு...? அது மாதிரி உன் பிரெண்டுக்குச் சப்போர்ட் பண்ணியும் என் கிட்ட பேசாதே..." என்றாள் முடிவாய்...

அதைக் கேட்டு அவளை உறுத்து விழித்தவன்,

"ஓகே... நீ சொல்றபடி நான் கேட்கிறேன்... இனி இது போல் எனக்கு ஃபோன் பண்ணாதே... இனி யஷூ வந்தா நீயே தைரியமா சமாளிச்சு அனுப்பு..." என்றான் சிறு எரிச்சலுடன்...

அதற்குப் பதில் பேச முடியாது அவள் திகைப்புடன் நின்றிருக்க... அதைக் கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது...

"நீ ஏன் அவனைக் கண்டு இவ்வளவு பதறுகிறாய் ஸ்ருதி...? உனக்கு மனதில் எந்தவொரு உறுத்தலும் இல்லைன்னா நீ ஏன் அவனைக் கண்டு பயப்படுற...? தவறு இரண்டு பக்கமும் இருக்கு... உன் மேல் இன்னமும் அதிகமாய்..."

அழுத்தம் திருத்தமாய்க் கூறியவனை அதிர்ச்சி விலகாது பார்த்தாள் அவள்... ஜீவா கூறுவது முற்றிலும் உண்மை தானே... நடந்த தவறுக்கு யஷ்வந்த் மட்டுமா காரணம்... அவளும் தானே...? முகம் வேதனையில் கசங்க நின்றிருந்தவளை கண்டு பரிதாபம் எழுந்த போதும் அதை வெளிக்காட்டாது,

"இனி இது உன்னுடைய பிரச்சினை... இனிமேல் இதில் என்னை இழுக்காதே... எனக்கு என்று என் குடும்பம் இருக்கு... அது போல் உன் குடும்பத்தை நீ பார்த்துக் கொள்வது உனக்கு நல்லது... இனியாவது நிதர்சனத்தைப் புரிந்து ஏற்றுக் கொள்..." என்ற ஜீவா அவளின் பதிலை எதிர்பாராது வெளியில் வந்துவிட்டான்...

அவனின் வார்த்தையில் அதிர்ச்சி மாறாது நின்றிருந்த ஸ்மிருதி அப்படியே தொப்பென்று சோபாவில் அமர்ந்தாள்... யாரை குற்றம் சொல்வது என்று தனித்துக் கூற முடியாதபடி அந்தக் கடவுள் அவளது வாழ்க்கையில் தன் விளையாட்டை அரங்கேற்றிவிட்டான் வெற்றிகரமாக... அதில் அவள் தான் தோற்று போய் நிற்கிறாள் பரிதாபமாக...

ஜீவா சொல்வது போல் யஷ்வந்த்தை அவளால் ஏற்றுக் கொள்ள முடியுமா...??? அது அவளுக்கே தெரியவில்லை...

காதல் ஒருவனிடத்தில்... காமம் ஒருவனிடத்தில்... உடல் ஒருவனது வசம்... உள்ளம் வேறொருவன் வசம்... காதலை காமம் வென்றுவிட்டது... உள்ளத்தை உடல் வென்றுவிட்டது... இனி வாழ்நாள் முழுவதும் காதலில்லா உள்ளத்துடன் காமத்துக்காக மட்டுமே உடல் இரண்டும் சேர்ந்து வாழ வேண்டுமா...???

மனதில் தகிப்பாய் பல கேள்விகள்... அந்தத் தகிப்பில் தான் உயிரோடு பொசுங்கி இறந்துவிட மாட்டோமா என்றிருந்தது அவளுக்கு... ஆனால் அம்ருவுக்காக வாழ வேண்டியிருக்கிறதே... அம்ருவே அந்த யஷூ அளித்த பாவத்தின் பரிசு அல்லவா... அவன் காதலாய் அளித்திருந்தால் ஒருவேளை இனித்திருக்குமோ... காமமாய் அளித்ததால் கசக்கிறதோ...?

'இல்லை அம்ரு என்றுமே எனக்குக் கசந்தது இல்லை... அவள் இல்லை என்றால் நான் என்றோ இறந்திருப்பேன்...' என்று நினைத்தவளுக்கு முதன்முறையாக மகளின்

எதிர்காலம் கண்முன் அச்சுறுத்த தன் முகத்தை மூடி கொண்டு கதறி அழுதாள்...

தவறு செய்யும் ஆண் தண்டனையில் இருந்து தப்பிவிடுகிறான்... ஆனால் பெண்ணிற்கு மட்டும் ஏன் இந்தத் தண்டனை...? தான் பெண்ணாய் பிறந்ததே பாவம் என்றே அவளுக்குத் தோன்றியது... தன்னைப் போலவே ஒரு பெண்ணைப் பெற்றெடுத்ததில் முதன்முறையாக அவளுக்குத் தன் மீதே கோபம் வந்தது... மகள் மீது இரக்கம் சுரந்தது...

*************************

"அத்தை... நீயும் என் கூட வா... உன்னை மாதிரி அம்மா பாட்டு பாடி சாப்பாடு ஊட்ட மாட்டேங்கிறாங்க... தூங்க வைக்க மாட்டேங்கிறாங்க... எனக்கு நீ தான் வேணும் அத்தை..." என்று வினீதா சுபிக்ஷாவின் கழுத்தை கட்டி கொண்டு அழுதாள்...

எல்லோரும் ஊருக்கு கிளம்பி கொண்டு இருந்தனர்... இனி அத்தை கூட இருக்க முடியாது என்றெண்ணி சின்னவள் அழுது கரைந்தாள்... மருமகளின் அழுகை கண்டு சுபிக்ஷாவிற்கும் வருத்தம் இருந்த போதும் அதற்கு அவளால் என்ன செய்ய முடியும்...

"இங்கே பாரு வினீ செல்லம்... அத்தை கூடிய சீக்கிரம் உன்னைப் பார்க்க வருகிறேன் கண்ணா..." என்று மருமகளை முத்தமிட்டு கொஞ்சி சமாதானப்படுத்தினாள் அவள்...

இருவரையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருந்தான் ஜீவா... உறவுகளைப் பிரியும் மனைவியின் துக்கம் அவனுக்குப் புரியாமல் இல்லை...

ஒருவழியாய் வினீதாவை சமாதானப்படுத்திக் கண்ணீர் மல்க விடை கொடுத்து வழியனுப்பியவளை கண்டு

அவனுக்கு இரக்கமாய் இருந்தது... அதிலும் மனைவியின் முகத்தில் கவிழ்ந்த சோகத்தினைக் காணும் போது உடனே அதைக் களைய சொல்லி அவனின் மனம் பிடிவாதம் பிடித்தது...

கண்ணீர் நிரம்பிய விழிகளும், வருத்தம் தேங்கிய முகமுமாய் அறைக்குள் நுழைந்த மனைவியைத் தனது கையணைப்பிற்குள் கொண்டு வந்தவன் குனிந்து அவள் முகத்தை உற்று நோக்கினான்...

கணவனது செய்கையில் தனது கண்ணீரை மறைத்து புன்னகையுடன் அவனைப் பார்த்தாள் சுபிக்ஷா...

மனதின் வருத்தத்தைத் தன் பொருட்டு வெளிக்காட்டி கொள்ளாது மறைக்கும் மனைவியைக் கண்டு அவனுள் நேசம் பல்கி பெருக அவளை இறுக்கி அணைத்து பல பரிசுகளை வாரியிறைத்தான் அவளது அன்பிற்கு அன்பளிப்பாக...

ஆனால் இந்தப் பரிசுகள் மட்டும் அதற்குப் போதாது என்று அவனுக்குத் தோன்றியது... அதனால் மனதில் ஒரு முடிவு எடுத்தவனாய்,

"நாம சென்னையில் போய்ச் செட்டிலாகி விடலாமா சுபி பேபி...?"

அதுவரை கணவனது முத்தத்தில் மனம் லயித்துச் சுகமாய்க் கண் மூடியிருந்தவள் அவனது வார்த்தையில் பட்டென்று கண்களைத் திறந்தவள் இன்ப அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்...

என்றும் போல் விழிகளை அகலத் திறந்து தன்னை நோக்கிய மனையாளின் விழி வீச்சில் இன்றும் மனம் மயங்கியவனாய் அதன் மேல் அழுத்தமாய் முத்தமிட்டான் அவன்... அச்சம், சோகம், திகைப்பு, வியப்பு, மகிழ்ச்சி, நேசம்

எனப் பல பரிமாணங்களை எடுத்து காட்டும் அவளது கண்கள் அவனை அடியோடு வீழ்த்தி சாய்த்திருந்தது...

"நீ பாட்டுப் பாடுவதற்குப் பதிலாக டான்ஸ் கத்து இருந்திருக்கலாம்... கண்கள் பேசும்ன்னு உன்னைப் பார்த்து தான் சொல்லியிருப்பாங்க போல..." என்றவன் மீண்டும் அவளது விழிகளின் மீது தனது இதழை பதிக்க...

அவளோ அவன் பேசியது காதில் விழாதவளாய் ஆச்சிரியமாய், "உண்மையாவா சொல்றீங்க...?" என்றவளின் முகத்தில் மகிழ்ச்சி அப்பட்டமாய்த் தெரிந்தது...

"உண்மையா தான்ங்க..." என்றவன் தன்னவளின் மகிழ்ச்சி கண்டு தானும் மகிழ்ந்தான்...

இல்லாளின் சந்தோசத்திற்காக இந்த உலகத்தையே அவளது காலடியில் சமர்ப்பிக்க விழைந்தது அவனது மனம்...

கணவனது வார்த்தையில் அடுத்த நொடி அவனை இறுக அணைத்து அவனது கன்னத்தில் முத்தமிட்டாள் சுபிக்ஷா... அத்தனை சந்தோசம் அவளுக்கு... இருக்காதா பின்னே இங்கே வந்தபின் குடும்பத்தின் அன்பை இழந்ததை எண்ணி எந்தளவுக்கு மனதுக்குள் தவித்திருக்கிறாள் அவள்... அந்தத் தவிப்பை எல்லாம் ஒன்றும் இல்லாததாய் ஆக்கிவிட்ட கணவனைக் கண்டு அவள் மனதில் நேசம் பல்கி பெருகியது என்னவோ உண்மை...

அவளது செயலில் பிரமித்துப் போய் அவன் நின்றான் அசையாது... தானாக முன்வந்து அவள் கொடுக்கும் முத்தம் அவனது அடிநெஞ்சு வரை சென்று தித்தித்தது...

பெண்ணின் மனம் தானாகக் கனிந்து வர வேண்டும் என்று ஏன் சொல்கிறார்கள் என்பது அவளது சிறு செயலில் புரிந்தது... எத்தனையோ முறை அவன் அவளை முத்தமிட்ட

போது வராத சந்தோசம் அவளது முத்தத்தில் மனதில் தோன்றியதை அவன் உணர்ந்தான்...

அவனும் அவளை இறுக அணைத்துக் கொண்டான்...

"எப்போ போறோம்...?" ஆர்வத்துடன் கேட்டவளை ஏமாற்ற மனமில்லாது போனது அவனுக்கு...

"வேணும்ன்னா ஒண்ணு செய்... முதலில் நீ போ... நான் இங்கே உள்ள வேலைகளை முடிச்சிட்டு பிறகு வர்றேன்..." அவளின் மனமறிந்து அவன் கூறினான்...

அவனில்லாமல் அவள் மட்டுமா...? அது முடியுமா...? நிச்சயம் முடியவே முடியாது என்றே அவளுக்குத் தோன்றியது...

"ம்ஹூம்... உங்களை விட்டு என்னால் இருக்க முடியாது... நீங்க உங்க வேலைகளை முடிச்ச பிறகு நாம இரண்டு பேரும் சேர்ந்து போகலாம்..."

மேலும் மேலும் அன்பை பொழிந்து அவனைத் திக்குமுக்காட செய்தாள் அவன் மனைவியவள்... இது தானே அவனுக்கும் வேண்டும்... போதும் அவனது வாழ்க்கை முழுவதும் இந்த அன்பு ஒன்று போதும் என்றே அவனுக்குத் தோன்றியது...

உடல் சார்ந்த வாழ்க்கையை விட மனம் சார்ந்த வாழ்க்கையைத் துணைவியோடு வாழ எண்ணினான் ஜீவா...

*********************

வெகு வருடங்களுக்குப் பின் யஷ்வந் தனது வீட்டிற்கு இன்று தான் வருகிறான்... மாளிகை போன்ற வீட்டில் தன்னவளுக்கு இடமில்லை என்பதை எப்போது அறிந்தானோ அன்றிலிருந்து அவனது வீடு அவனுக்கு அந்நியமாகி போனது... இப்போதும் அதற்குச் சொந்தம்

கொண்டாட அவன் வரவில்லை... அவனது செல்லத் தங்கையைப் பார்த்துவிட்டுப் போகத்தான் அங்கு வந்திருந்தான்...

உள்ளே நுழைந்ததும் அவனது கண்ணில் முதலில் பட்டது அவனது அண்ணி தீபிகா தான்... எப்போதும் உடல் முழுவதும் மூடி கொண்டிருக்கும் புடவையில் பாந்தமாய் இருக்கும் அண்ணி இன்று இப்படி நாகரீக உடையில் சற்றும் பொருத்தமில்லாமல் இருப்பதைக் கண்டு அவனது மனம் மிகவும் வருந்தியது... அதே சமயம் அண்ணனை நினைத்து கோபமும் வந்தது...

அவனைக் கண்டதும் முதலில் திகைத்த தீபிகா பின் சுதாரித்துக் கொண்டு, "வாங்க தம்பி..." என்று அன்போடு வரவேற்றாள்...

அவளது உடை தான் மாறியிருக்கிறது... அவளது மனம் மாறவில்லை என்பதற்குச் சாட்சி அவளது இந்த அன்பு தான்... அவனது மனம் இளகியது...

"நல்லாயிருக்கீங்களா தம்பி...?"

"நல்லாயிருக்கேன் அண்ணி... நீங்க...?" என்று கேட்ட கொழுந்தன் முகம் பார்க்க முடியாது தலை குனிந்தவள்,

"எனக்கு என்ன குறை தம்பி... நான் நல்லாயிருக்கேன்..." என்றவளின் குரலிலேயே தெரிந்தது அவ்வளவு வருத்தம்...

"அண்ணி... உங்களுக்கு அறிவுரை கூறும் வயது எனக்கில்லை... இருந்தாலும் மனதில் பட்டதைச் சொல்கிறேன்... தப்பா எடுத்துக்காதீங்க... அண்ணா தவறு செஞ்சார்ங்கிறதுக்காக நீங்களும் தவறு செய்யாதீங்க அண்ணி... தவறு செய்றதை வாழ்க்கையா வச்சிக்கிறவங்களுக்கு அந்தத் தவறுகள் அவங்களுக்குப் பெருசா தோணாது... ஆனா நம்மளை மாதிரி ஆளுங்க தெரியாம ஒரு தவறை செஞ்சிட்டுக் காலம் முழுவதும்

வருத்தப்படுவோம்... அனுபவிக்கிறவன் சொல்றேன் அண்ணி... பிறகு நீங்களும் என்னைப் போல் வருத்தபடாதீங்க..."

"பிறகு என்ன வருத்தப்படுவது தம்பி... இப்பவே வருத்தப்படத்தான் செய்றேன்... ஆனா மனசு ஆற மாட்டேங்குதே தம்பி... பெண் மனசு உங்களை மாதிரி ஆண்களுக்குப் புரியாது..."

ஸ்மிருதி கூறிய அதே வார்த்தைகள்... அண்ணியின் மனவலி அவனுக்குமே புரிந்தது... வேதனையாய் இருந்தது அவனுக்கு... எதையும் மாற்ற அவனால் இயலாதே...

"வாடா நல்லவனே... இப்பத்தான் உனக்கு இங்கே வருவதற்கு வழி தெரிஞ்சதா..." கேலியாய் கேட்டுக் கொண்டே அங்கு வந்தான் ரிஷ்வந்த்...

கணவனைக் கண்டதும் அவனைச் சிறிதும் கண்டு கொள்ளாமல் அங்கிருந்து விலகி சென்றாள் தீபிகா... அதைக் கண்டு ரிஷ்வந்த்தின் முகம் கோபத்தில் கடுகடுத்தது...

"இனியாவது தத்துபித்துன்னு உளறாம நம்ம தொழிலை கவனிக்கும் வழியைப் பார்... தனியா ஒத்தை ஆளா கிடந்து நான் மட்டும் கஷ்டப்பட வேண்டியிருக்கு..." அலுத்துக் கொண்டே சொன்னான் ரிஷ்வந்த்...

"இதுக்குத் தானே அன்று அத்தனை வேலைகளைச் செய்தாய்... இப்போ எதுக்குக் கஷ்டமாயிருக்கு..." வெறுப்புடன் வந்தது யஷ்வந்த்தின் வார்த்தைகள்...

"அது..." என்று மேலே ஏதோ சொல்லப் போனவன் தங்கை வருவதைக் கண்டு அமைதியாக இருந்தான்...

ஹர்ஷிதாவை கண்டதும் முகம் மலர்ந்த யஷ்வந்த், "ஹர்ஷி... எப்படி இருக்கம்மா...?" என்று பாசத்துடன் கேட்க...

"ரொம்பச் சந்தோசமா இருக்கேன் போதுமா..." என்று வெடுக்கென்று கூறியவள், "நீ பண்ணிய வேலையால் என் நிம்மதி பறி போய் இப்போ சந்தோசமா இருக்கேன்... ரொம்ப ரொம்பச் சந்தோசமா இருக்கேன்..." ஆத்திரமும், வேதனையும் கலந்து கூறியவள் அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை...

எல்லாம் இவன் செய்த வேலையால் தான் அவள் தன் காதலை இழந்து தவிக்கிறாள்...

"இங்கே பார் ஹர்ஷி... ஜீவா நீ நினைப்பது போலில்லை... அவன் நட்பிற்குள் காதலை கொண்டு வர மாட்டான்... நீ தான் தேவையில்லாமல் உன்னையும் குழப்பி என்னையும் சேர்த்து குழப்பிட்ட..." என்றவனைத் துயரத்துடன் பார்த்தவள்,

"கடைசியில் உங்களுக்கு எல்லாம் நான் கெட்டவளாகி போயிட்டேன் இல்லையா...?" என்றவளை கண்டு பதறி போனவனாய்,

"அப்படி இல்லை ஹர்ஷி..."

"நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்..." ஏறக்குறைய கத்தியவள் அவனின் முகத்தைப் பார்க்க பிடிக்காது அங்கிருந்து வெளியேறினாள்...

"யஷூ..." ஆறுதல் சொல்ல வந்த சகோதரனை முறைத்து பார்த்துவிட்டு தானும் வெளியேறினான் யஷ்வந்த்...

'எப்படியிருந்த குடும்பம் இப்படி ஆளுக்கு ஒரு மூலையாய் சிதறி போய்விட்டோமே...' வேதனையுடன் நினைத்தான் ரிஷ்வந்த்...

அவனால் வேதனை மட்டும் தான் பட முடியும்... அதற்குத் தீர்வு காண அவனால் முடியாது... ஏனெனில் அவனின் வாழ்க்கை பிரச்சினையைத் தீர்க்கவே அவனுக்கு வழி

தெரியவில்லை... இதில் அவன் எங்கே குடும்பப் பிரச்சினையைத் தீர்ப்பது...

*********************

புகழ் பெற்ற அந்த நட்சத்திர விடுதியில் ஜீவாவும், யஷ்வந்த்தும் நேரெதிர் இருக்கையில் அமர்ந்திருந்தார்கள்... வெகு வருடங்களுக்குப் பின் சந்தித்த நண்பர்களுக்கு இடையில் பேசுவதற்கா விசயங்கள் இல்லை... ஆனாலும் பேசுவதற்கு வார்த்தைகளற்று போய் அங்குச் சங்கடமான மௌனம் நிலவ இருவரும் அமைதியாய் அமர்ந்திருந்தனர்...

கடந்த காலங்கள் அந்தளவுக்கு இருவருக்கும் இடையில் பெரிய இடைவெளியை ஏற்படுத்தி இருந்தது...

"யஷூ..." ஜீவா தான் அந்த அமைதியை கலைத்தான்...

ஸ்மிருதி விசயத்தில் அவன் வருத்தப்படுவதற்கோ, துன்பப்படுவதற்கோ எதுவும் இல்லை... மாறாக நண்பன் இப்படி ஓடி ஒளிந்தது அவனுக்கு மிகவும் கோபத்தைக் கொடுத்தது என்னவோ உண்மை...

"இன்னும் ஸ்ருதி மனசு மாறும்ன்னு இப்படியே காத்திட்டு இருக்கப் போறியா...? அப்படியே அவள் மனசு மாறலைன்னா என்ன செய்றதா உத்தேசம்... கொஞ்சமாவது அம்ருவை நினைச்சு பார்த்தியா...?"

மகளை முன்னிருத்தி ஜீவா பேசினான்... காதலி, மனைவி என்ற உறவை விட மகள் என்கிற உறவு பெரிதல்லவா... ஆனால் அவன் நினைத்ததற்கு நேர்மாறாய்ப் பேசினான் யஷ்வந்த்...

"அவளுக்குத் தான் தகப்பனா நீ இருக்கியே ஜீவா... பிறகு எனக்கு என்ன கவலை...?"

நண்பனின் பேச்சில் சற்றுத் துணுக்குற்றான் ஜீவா...

"நீ என்னைக் கிண்டல் பண்றியா...? இல்லை சந்தேகப்படுறியா...?" என்றவனை எழுந்து வந்து உள்ளத்து அன்போடு கட்டி கொண்ட யஷ்வந்த்,

"முட்டாளத்தனமா உளறாதே ஜீவா... உன்னைப் போய் நான் சந்தேகப்படுவேனா... ஸிமியோட இக்கட்டான பல நிலைமைகளில் நீ அவளுக்குப் பண்ணிய உதவியை அவள் மறந்தால் கூட நான் மறக்க மாட்டேன்டா... அம்ருவுக்கு நான் தந்தை தான், அது இல்லை என்பதற்கு இல்லை... ஆனால் தந்தை என்ற சொல்லுக்கு முழு அர்த்தத்துடன் வாழ்பவன் நீ தான்டா... உன்னை நினைச்சு நான் பெருமைத்தான் படுறேன்..."

"யஷூ..." நெகிழ்ச்சியுடன் தோழனை பார்த்தான் ஜீவா...

"நான் பண்ணிய தவறுக்கு நீ எவ்வளவு அவப்பெயர் சுமந்துக்கிட்டு இருக்கேன்னு எனக்குத் தெரியும்டா... எனக்குத் தெரியும்..." யஷ்வந்த் சொல்லும் போதே அவனது கண்கள் கலங்கியது...

"அப்புறம் இன்னும் ஏன் தயங்குற யஷூ...?"

"அம்ருவோட அப்பா நான் தான்னு ஸிமி என்னைப் பார்த்து ஊரறிய சொல்வாளா ஜீவா...?" என்று கேட்ட யஷ்வந்த் முகத்தில், தன் காதலி அப்படிச் சொல்லிவிட மாட்டாளா என்ற ஏக்கமும், அப்படிச் சொல்ல மாட்டாள் என்ற ஏமாற்றம் கலந்த தவிப்பும் அப்பட்டமாய்த் தெரிந்தது...

எந்தவொரு ஆணுக்கும் அவமானகரமான நிலை இது... தான் பெற்ற மகவுக்குத் தான் தந்தை இல்லை என்று சொல்லி அதன் தாய் மறுப்பது...

"எனக்கு முதலில் ஸிமி என் காதலியாக, மனைவியாக வேண்டும்... அதுக்கு அப்புறம் அவள் அம்ருவிடம் என்னைப்

பார்த்து 'இவர் தான் உன் அப்பா' என்று கைக் காட்ட வேண்டும்... அந்த நாளுக்காகத் தான் நான் காத்துக் கொண்டு இருக்கிறேன்..." ஆசையும், நிராசையும் குரலில் போட்டி போட சொன்னவனைக் கண்டு,

"ம்ப்ச்... யஷூ நடக்கும் காரியத்தைப் பற்றிப் பேசு..." என்றான் ஸ்மிருதியின் மனநிலையை அறிந்தவனாய் ஜீவா...

"உனக்குத் தெரியாது ஜீவா... இது என்னோட மனதின் வலி... நாம் விரும்பும் பெண்ணின் மனதில் வேறொருவன் இருப்பது தெரிந்தும் 'அவள் தான் எனக்கு வேண்டும்'ன்னு அடம்பிடிக்கும் மனதின் வலி இது ஜீவா... இதை அனுபவித்தால் தான் உனக்குப் புரியும்..."

இதைக் கேட்டதும் ஜீவாவின் முகம் கறுத்துப் போனது... ஆனாலும் முகத்தை மாற்றிக் கொண்டு தன் உணர்வினை காட்டாது தனது நண்பனை பார்த்துக் கொண்டிருந்தான்...

யஷ்வந்த்தோ தன் மனதின் வலிக்கான ரிஷிமூலத்தை எண்ணி பார்த்துக் கொண்டு இருந்தான் வேதனையோடு...

'ஐ லவ் யூ ஜீவா...' அன்று தன்னை மறந்த நிலையில் அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு காதோரம் கிசுகிசுத்த ஸ்மிருதியின் குரல் இன்றும் அவன் காதில் ஒலித்து அவனை உயிரோடு கொன்றது... தன்னவள் மனதில் தன் நண்பன் எந்தளவுக்கு ஆழப்பதிந்து இருக்கிறான் என்பதை அவன் அறிந்து கொண்டது அன்று தான்...

அவனது இறுமாப்பு அழிந்ததும் அன்று தான்... 'நான்' என்கிற அகங்காரம் அழிந்ததும் அன்று தான்... அன்று செய்யக்கூடாத தவறை செய்துவிட்டு இன்றுவரை துடித்துக் கொண்டு இருக்கிறான் தரையில் தவறி விழுந்த மீனை போல்... ஸ்மிருதி அதற்குப் பரிசாக அவனுக்கு மோட்சம் கொடுப்பாளா இல்லை நரகத்தைக் காண்பிப்பாளா... எது என்பது அவள் கையில் தான் இருக்கிறது...

"எதுவாக இருந்தாலும் யோசித்து முடிவு செய் யஷூ... அம்ருவுக்காகக் கொஞ்சம் யோசித்துப் பார்..." என்ற ஜீவாவை பார்த்து விரக்தியுடன் புன்னகை சிந்தினான் யஷ்வந்த்... பின் தன் மனதை தேற்றிக் கொண்டு,

"இனி ஸ்மிருதி, அம்ரு பத்தி நீ கவலைப்படாதே... அவங்களை நான் பார்த்துக்கிறேன்... இனிமேல் நீ உன் மனைவி, உன் குடும்பம்ன்னு வாழும் வழியைப் பார்..." என்றவன்,

"ரொம்பத் தேங்க்ஸ்டா... எல்லாவற்றிற்கும்... என் மகளுக்கு என் அம்மாவின் பெயரை வைத்ததற்கு ரொம்ப நன்றி ஜீவா..." என்ற யஷ்வந்த்தின் முகமும், மனமும் நெகிழ்ந்திருந்தது...

"உனக்காக இது கூட நான் பண்ண மாட்டேனா..." என்ற ஜீவா, "பைடா..." என்றபடி நண்பனிடத்தில் விடைப்பெற்றுக் கிளம்பினான்...

வீட்டிற்கு வந்ததும் முதலில் ஜீவா தேடியது தனது மனைவியைத் தான்... தன்னைக் கண்டதும் பரபரப்புடன் வந்தவளை அழைத்துக் கொண்டு அறைக்கு வந்தவன் அவளைக் கட்டிலில் அமர்த்திவிட்டு தானும் அவளருகில் அமர்ந்து அவளைக் குறுகுறுவென்று பார்த்தான் இமைக்காது...

கணவனது பார்வையின் தீட்சண்யம் தாங்காது தலை குனிந்தவளை முகவாய் தொட்டு நிமிர்த்தியவன்,

"பேபி... அன்னைக்குப் பாடிய அந்தப் பாட்டைப் பாடேன்..." என்றான் ஒருவித தவிப்போடு...

"எந்தப் பாட்டு...? என்னைக்குப் பாடியது...?" கணவனின் தவிப்பு புரியாது கேட்டாள் அவன் மனைவி சுபிக்ஷா...

"அன்னைக்கு வினீ பேபியை உன்னிடம் கொண்டு வந்து விட்டேனே... ஏதோ சரணடைந்தேன்னு வருமே அந்தப் பாட்டு..."

கணவனது வார்த்தையில் புரியாது யோசித்தவள் பின்பு புரிந்தவளாய் முகம் பளிச்சிட,

"நின்னைச் சரணடைந்தேன்... பாரதியார் பாட்டு... அதைச் சொல்றீங்களா..."

"ஆமாம்... அதே தான்... எனக்காகப் பாடேன் ப்ளீஸ்..." கெஞ்சும் குரலில் கூறியவனின் கையைப் பிடித்துக் கொண்டவள்,

"பாடுன்னு சொன்னால் பாட போறேன்... இதுக்கு எதுக்கு ப்ளீஸ் எல்லாம்...?" செல்லமாய் அவனை அதட்டியவள் அந்தப் பாடலை பாட துவங்கினாள் கணீரென்ற குரலில்...

"நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா

நின்னைச் சரணடைந்தேன்

பொன்னை, உயர்வை, புகழை விரும்பிடும்

என்னைக் கவலைகள் தின்ன தகாதென..

நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா

நின்னைச் சரணடைந்தேன்"

மனைவியின் தித்திக்கும் தேன் குரலில் மனதை பறி கொடுத்தவனாய் அமர்ந்திருந்த ஜீவா மனதில் ஏதேதோ உணர்வின் தாக்கங்கள் எழுந்து அவனை அலைப்புறச் செய்தது... அடுத்த நொடி அந்தத் தாக்கத்தைத் தாங்க மாட்டாதவனாய் அவன் தன் மனைவியின் மடியினை நோக்கி சரண் புகுந்திருந்தான்...

கணவனின் திடீர் செயலில் திகைப்புற்றவள் பாடுவதை நிறுத்திவிட்டு குனிந்து அவனைப் பார்த்தாள்...

அவனோ அவளின் திகைப்பை உணராதவனாய் அவளது வயிற்றில் ஆழ முகம் புதைத்தவனாய்,

"பேபி... என்னை உனக்குப் பிடிக்குமா...?" என்றவனின் குரலில் அப்படியொரு தவிப்பு இருந்தது...

அவனது வார்த்தையில், செயலில் சுபிக்ஷா மனதில் தாய்மை உணர்வு குடியேற அவளது கை அவனது தலையை ஆறுதலாய் கோதி கொடுத்தது...

பின் அவனது காதோரம் குனிந்து, "இந்த உலகத்திலேயே எனக்கு ரொம்பப் பிடிச்சவர் நீங்க ஒருத்தர் மட்டும் தான்..." என்றாள் காதலாக...

அவளது வார்த்தையில் உணர்ந்த காதலில் அவன் படுத்திருந்த வாக்கில் அப்படியே தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான்...

முதன்முறையாக அவளது விழிகளில் தனக்கான காதலை தேடி கண்டறிந்தவன் மனதிலோ எதையோ சாதித்த ஒரு உணர்வு, எதையோ வெற்றிப்பெற்ற ஒரு பெருமிதம் எல்லாம் ஒருங்கே தோன்றி அவனைக் கர்வம் கொள்ளச் செய்தது...

அந்தக் கர்வத்தையும் தாண்டி அவனது மனதில் ஒருவித நிம்மதி, நிறைவு எழுந்தது என்றால் அது மிகையில்லை...

இந்தக் காதலை அடைவதற்குத் தான் எத்தனை போராட்டங்கள்...!!!

அத்தனை போராட்டங்களிலும் வெற்றிப் பெற்றவன் அவன் மட்டுமே என்ற அகந்தை அவன் மனதில் எழுந்து அவனை அத்துணைக் கர்வம் கொள்ளச் செய்தது...

'என் வழியில் யார் குறுக்கே வந்தாலும் வெட்டி வீழ்த்திவிட்டு சென்று கொண்டே இருப்பேன்... நான் ஜீவா...

ஜெயிப்பதற்கு மட்டுமே பிறந்தவன்... தொழிலில் மட்டுமல்ல வாழ்க்கையிலும்...'

தன்னகங்காரம் அவன் மனதில் எழ அடுத்த நொடி மனைவியவளின் இதழை சிறை செய்தான் தனது வெற்றிக்களிப்பினை கொண்டாடுவதற்காக...

கணவனின் மனதினை அறியாத சுபிக்ஷாவோ காதலோடு அவனின் செயலுக்கு இசைந்து கொடுத்தாள் விருப்பத்துடன்...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 18

"அம்ரு டாலி... அம்மா கடைக்குப் போயிட்டு வரும் வரை சமத்தா டிவி பார்த்துட்டு இரு... இல்லை போர் அடிச்சா டாய்ஸ் எடுத்து விளையாடிட்டு இரு... நான் சீக்கிரம் வந்திருவேன்..."

மகளிடம் சொல்லிக் கொண்டே ஸ்மிருதி கடைவீதி செல்ல வெளியில் கிளம்பினாள்... இப்போது அவளைக் கண்காணிக்க மெய்க்காப்பாளர்கள் கிடையாது... அவள் செல்லும் இடமெல்லாம் காவல் என்ற பேரில் யாராவது உடன் வந்து தொல்லை செய்வது கிடையாது...

இந்தத் தொல்லைகள் எல்லாம் இல்லாமல் போனதற்குக் காரணம் யஷ்வந் தான் என்று பாவம் அவள் அறியவில்லை... அவன் தான் தன் சகோதரனிடம் மிரட்டிவிட்டு வந்திருக்கிறான்...

"இனிமேல் ஸிமி, அம்ரு இருவரும் என் பாதுகாப்பில் தான் இருப்பாங்க... என்னை மீறி அவங்களை ஏதாவது பண்ணணும்ன்னு நினைச்சேன்னா முதல்ல நீ உயிரோடு இருக்க மாட்ட... எனக்குக் கூடப்பிறந்த உன்னை விட என் மனைவி, மகள் தான் முக்கியம்..."

"யஷூ... அவளை மாதிரி சாதாரணக் குடும்பத்துப் பெண் இந்த வீட்டு மருமகளாக முடியாது... நமக்கு என்று ஒரு குடும்பப் பாரம்பரியம் இருக்கு... அதை மாற்ற முயலாதே... அப்படி அவள் தான் உனக்கு வேண்டும்ன்னு நீ பிடிவாதம் பிடிச்சால் முதலில் உன்னைத் தான் நான் அழிப்பேன்..."

ரிஷ்வந் தான் அவனுக்கும் அண்ணன் என்பதை வார்த்தையில் நிரூபித்தான்... அவனைச் சொல்லி குற்றமில்லை... அவன் இரத்தத்தில் ஊறிய ராஜ வம்சத்தின் பழம் பெருமை அவனை அப்படிப் பேச

வைத்தது... எல்லாவற்றையும் துச்சமாக எண்ண வைத்தது...

"அதையும் பார்க்கலாம்... அண்ணா உன் உடம்பில் ஓடும் இரத்தம் தான் என் உடம்பிலும் ஓடுது... நீ இதைச் செய்யும் முன் நான் உன்னை ஒன்றுமில்லாமல் செய்து விடுவேன்..."

அண்ணனிடம் யஷ்வந்த்தும் திமிராகத் தான் பேசிவிட்டு வந்தான்...

இதை எல்லாம் ஸ்மிருதி அறியவில்லை... அதனால் இப்போது தான் அவள் தன்னை ஒரு சுதந்திர பறவையாக உணர்ந்தாள்... ஜீவா இங்கு வருவது இல்லை என்ற வருத்தம் தவிர இப்போது அவள் மிகவும் சந்தோசமாகத் தான் இருக்கிறாள்...

அவளுக்கு இன்னமும் வேலை கிடைக்கவில்லை தான்... ஆனால் பெற்றோரின் சேமிப்பு வங்கியில் பத்திரமாக இருக்கிறது... அதன் வட்டி அவர்கள் இருவருக்கும் தேவைக்கும் அதிகமாகவே இருந்தது... இருந்தாலும் மனம் செல்லரித்து விடாமல் தடுப்பதற்காக வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியத்தை உணர்ந்தே இருந்தாள் அவள்...

யோசித்துக் கொண்டே கதவை திறந்தவள் அங்கு நின்றிருந்தவனைக் கண்டு அதிர்ந்தாள்... இவன் எப்படி இங்கே...? அவள் திகைத்து விழிக்கும் போதே அதற்காகத் தான் தான் காத்திருந்தது போல் யஷ்வந்த் அவளை இடித்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான்...

அதைக் கண்டு கோபமாய் அவன் பின்னே வந்தவள், "இது என் வீடு... இங்கே வருவதற்கு முன் என் அனுமதி வாங்கணும்..." என்று கத்தினாள் கோபத்தோடு...

"இது என்னோட வீடுன்னு நானும் சொல்லலையே..." சுவாதீனமாக அவள் புறம் திரும்பி உரைத்தவன், "இது நம்

வீடு ஸிமி..." என்றவன் பார்வையில் அவ்வளவு காதல் இருந்தது...

"முதல்ல வெளியே போடா..." அவனின் கழுத்தை பிடித்துத் தள்ளும் வகையறியாது அவளால் சத்தம் மட்டுமே போட முடிந்தது...

பொம்மை வைத்து விளையாடி கொண்டிருந்த அம்ரிதா இருவரும் சத்தம் போட்டு பேசுவது கண்டு பயத்துடன் எழுந்து வந்தாள்...

"ம்மா..." என்று அச்சத்துடன் தாயின் ஸ்கர்ட்டை பிடித்து இழுத்தவளை அப்போது தான் கவனித்தனர் இருவரும்...

யஷ்வந்த் இப்போது தான் முதன்முறையாகத் தனது மகளை நேரில் பார்க்கிறான்... அச்சு அசல் அவனைப் போலவே இருக்கும் அவனது மகளைக் கண்டதும் அவனுள் பாசம் பொங்கியது... கூடவே குற்றவுணர்வும்... பெண் குழந்தைக்குத் தந்தையான பின்பு தான் தான் செய்த தவறின் அளவு அவனுக்குத் தெளிவாய் புரிவதாய்...

மகளை அள்ளி அணைத்து தூக்கி கொஞ்ச வேண்டும் என்று அவனது கைகள் பரபரத்தது... ஆனால் அவனவள் அவனைத் தான் யார் என்று மகளுக்கு அடையாளம் காட்டாமல் அவனால் அந்தச் செயலை செய்ய முடியவில்லை... மிகவும் தயக்கமாய் உணர்ந்தான் அவன்...

"ஸிமி... இவளை தினமும் பார்க்கும் போது கூடவா உனக்கு என் நியாபகம் வரவில்லை..." அவனது வார்த்தையில் அத்தனை வேதனை இருந்தது...

"நியாபகம் வந்ததால் தானே ஜீவாவிடம் கெஞ்சினேன் என்னை மணம் செய்து கொள்ளச் சொல்லி... இவளை பார்க்கும் போது எல்லாம் உன் நியாபகம் தான் வந்தது... அது இல்லை என்பதற்கில்லை... அத்தோடு உன்னோட

கேடு கெட்ட செயலும் சேர்ந்து தானே என் நியாபகத்தில் வந்து தொலைக்கிறது..."

மனம் குமுறியபடி கூறியவளை கண்டு அவனின் மனம் வருந்திய போதும் அவள் நினைவில் தான் இருக்கிறோம் என்பது சற்று ஆறுதலாக இருந்தது... அது கெட்டவனாக இருந்த போதும் அதற்காக அவன் வருந்தவில்லை...

"ம்மா... இந்த அங்கிள் யார்ம்மா...?" அம்ரிதாவின் கேள்வியில் யஷ்வந்த் உள்ளுக்குள் செத்து தான் போனான்...

ஆனால் அதற்கான பதில் ஸ்மிருதியிடம் அல்லவா இருக்கிறது... அதனால் அவளைப் பார்த்தான் 'மகள் கேட்கிறாள் இல்லையா பதில் சொல்...' என்பது போல்...

"அவர் அங்..." 'அங்கிள்' என்று ஸ்மிருதி சொல்லிவிடும் முன் பதறி போய் அவன் மகளிடம் திரும்பி அவள் புறம் மண்டியிட்டு அமர்ந்து,

"நான் உன் அம்மவோட ஹஸ்பெண்ட்... அப்போ உனக்கு நான் யார்...?" என்று கேட்க...

அதைக் கேட்டு சின்னவள் குழம்பி போய் நிற்க, பெரியவளோ எரிமலையாய் குமுறிக் கொண்டு அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்...

"தெரியலை..." உதட்டை பிதுக்கினாள் மகள்...

அவளது அந்தச் செயலில் மனம் கொள்ளை கொள்ள அவளது கன்னத்தில் முத்தமிட்டவன், "உனக்குப் புரியற மாதிரி சொல்றேன்... உன் பிரெண்ட்ஸோட அம்மாவோட ஹஸ்பெண்ட்டை உன் பிரெண்ட்ஸ் எல்லாம் எப்படிக் கூப்பிடுவாங்க..."

மகள் வாயால் 'அப்பா' என்ற சொல்லை கேட்க அவன் அத்தனை பிரயத்தனப்பட்டான்...

அதில் மகளின் முகம் பிரகாசமாக, "அப்பா..." என்றவள் பின் யோசனையாய், "அப்போ ஜீவா டாடி..." என்று அன்னையைப் பார்த்தாள் புரியாமல்...

அதைக் கண்டு அவன் ஸ்மிருதியை முறைத்து விட்டு, "ஜீவா உன்னோட டாடி தான்... அதில் எந்த மாற்றமும் இல்லை... அதே போல் நான் உன்னோட அப்பா... அதிலும் எந்த மாற்றமும் இல்லை... ஜீவா உங்கம்மாவோட பிரெண்ட்... ஆனால் நான் உங்கம்மாவோட ஹஸ்பெண்ட்..." அவனின் பேச்சுப் புரிந்தார் போன்று அம்ரிதா மகிழ்ச்சியோடு தலையாட்டினாள்...

அவன் கொடுத்த விளக்கத்தைக் கண்டு உதட்டை சுளித்தாள் ஸ்மிருதி...

"விளங்கிரும்..." என்று வேறு முணுமுணுத்து கொண்டாள்...

அவளின் எதிர்ப்பில்லாத இந்த முணுமுணுப்பே அவனுக்குப் போதுமானதாய் இருந்தது... இப்போதைக்கு இது போதுமல்லவா...

"எங்கேயோ கிளம்பிட்டு இருந்த போல... நீ போயிட்டு வா... நான் அம்ரு கூட இருக்கிறேன்..." அவன் அக்கறையாகச் சொல்ல...

"ஒண்ணும் வேண்டாம்..." அவள் கடுகடுக்க...

"அப்படின்னா... அந்தப் பையை என்னிடம் கொடு... தேவையானதை நான் வாங்கிட்டு வர்றேன்..." அவளிடம் கை நீட்டி வாங்க அவன் முற்பட... அவள் தன்னிச்சையாய் தன் கையைப் பின்னால் இழுத்து கொண்டாள்...

அதில் அவனது கண்களில் அடிபட்டார் போன்று ஒரு வலி தோன்றியது...

"உன் விருப்பமில்லாமல் எதுவும் நடக்காது... என்னை நம்பு ஸிமி..." என்றவனது குரல் கரகரத்து ஒலித்தது...

அதில் அவள் திகைப்பாய் அவனைப் பார்க்க, அவனோ அதைக் கவனியாது அவள் கையிலிருந்த பையையும், வாங்க வேண்டிய பொருட்கள் அடங்கிய பட்டியலையும் எடுத்துக் கொண்டு வெளியில் செல்ல முற்பட...

"அப்பா... நானும் வரவா..." என்று ஆர்வத்துடன் கேட்ட மகளை அப்படியே வாரியணைத்து கொண்டவன்,

"நீயில்லாமலா... வாடா செல்லம்..." என்று மகளையும் அழைத்துக் கொண்டு சென்றான்...

சட்டென்று மகள் தந்தையிடத்தில் ஒட்டி கொண்டதை ஆச்சிரியத்துடன் பார்த்தவள் மேலே ஒன்றும் யோசிக்க முடியாமல் அப்படியே அமர்ந்திருந்தாள்...

சுமார் ஒரு மணி நேரம் கழித்துத் தந்தையும், மகளும் வீட்டிற்கு வந்தனர்... கை நிறையச் சாக்லேட், ஐஸ்கீரீமை கையில் வைத்துக் கொண்டிருந்த மகளை ஒரு கையில் தூக்கி கொண்டு மறுகையில் பொருட்களைப் பிடித்துக் கொண்டு நின்ற யஷ்வந்த் முதன்முறையாய் அவளின் கண்களுக்கு வித்தியாசமாய்த் தெரிந்தான்...

அவனின் நடவடிக்கை மட்டுமா வித்தியாசமாக இருக்கிறது... தோற்றமும் தான்... முன்பு எல்லாம் தலையைக் கலரிங் செய்து கொண்டு, காதில் கடுக்கன், கையில் விதவிதமான கலர் பாண்ட்டுகள் என்று பந்தாவோடு அலட்சியமாய்ச் சுற்றி திரிந்த யஷ்வந்த் இவனில்லை... இப்போது முடியை ஒட்ட வெட்டி, பாந்தமாக உடை அணிந்து கொண்டு ஒரு குழந்தைக்குத் தந்தை போல் பக்குவப்பட்டு இருந்தது அவனது தோற்றம்...

உண்மையில் இவன் மாறிவிட்டானோ என்று நினைத்தவள் மனதில் 'முன்பும் அவன் ஒன்றும் கெட்டவனில்லையே... என்னைத் தப்பாக ஒரு பார்வை பார்த்தது கிடையாதே' என்ற நினைவும் சேர்ந்து எழுந்தது...

"ஸிமி..." அவனின் அழைப்பு அவளை நடப்புக்கு அழைத்து வர அடுத்த நொடி அவளது முகம் சிடுசிடுவென மாறியது...

அதை அவனும் கண்டு கொண்டவனாய் அமைதியாய்க் கையிலிருந்த பொருட்களை அவளிடத்தில் நீட்டினான்... அவளும் ஒன்றும் பேசாது அதை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றாள்... அதை அவள் தூக்கி வீசி எறியாததைக் கண்டு அவன் நிம்மதியுற்றவனாய் மகளுடன் பேச ஆரம்பித்தான்...

திடீரென்று முளைத்த தந்தை என்ற சொந்தம் கண்டு அம்ரிதாவிற்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... மிகவும் மகிழ்ச்சியுடன் அவனுடன் விளையாட ஆரம்பித்துவிட்டாள்...

அப்பா என்ற ஒரு வார்த்தையைக் கேட்டு தன்னுடன் ஐக்கியமாகி விட்ட தன் இரத்தத்தைக் கண்டு யஷ்வந்த்தின் மனம் விம்மி தணிந்தது பூரிப்பில்... இதை வேண்டித்தானே அவனும் தவம் இருந்தது...

சமையலறையில் மகளுக்குப் பிடித்த பூரியும், கிழங்கு குருமாவும் செய்து கொண்டிருந்த ஸ்மிருதியின் மனதில் பெரும் புயல் மையம் கொண்டு இருந்தது... யஷ்வந்த்தை ஏற்றுக் கொள்ளவும் அவளால் முடியவில்லை... அதே சமயம் அவனை மறுக்கவும் வழியில்லை...

சமைத்து முடித்த பதார்த்தங்களை உணவு மேசையில் கொண்டு வைத்தவளின் கண்ணில் வரவேற்பறையில் சிரித்து விளையாடி கொண்டிருந்த தந்தையும், மகளும் விழுந்தனர்... இருவரையும் பார்க்கும் போது அத்தனை பாந்தமாய் இருந்தது... அந்தளவுக்கு ஒருவரோடு ஒருவர் பொருத்தமாய்ப் பொருந்தியிருந்தனர்...

ஜீவாவும், அம்ரிதாவும் இப்படி விளையாண்டோ, சிரித்தோ அவள் பார்த்தது இல்லை... அவன் தான் வீட்டினுள் வரவே யோசிப்பானே...

'ச்சே எங்கே சுற்றினாலும் கடைசியில் இந்த ஜீவாவிடம் தான் மனசு போய் நிற்கிறது...' என்று தன் மனதை கடிந்தவள் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி அவர்கள் இருவரையும் பார்க்கலானாள்... மனதில் சொல்லத் தெரியாத ஒரு நிறைவு எழுவதை அவளால் தடுக்க முடியவில்லை...

நேரம் கடந்து செல்ல மகள் தான் தன் வயிற்று பசியை உணர்ந்து தந்தையை அழைத்துக் கொண்டு உணவு உண்ண வந்தாள்...

மகளுடன் அவனும் அங்கு உடன் வருவதை உணர்ந்து பார்த்தும் பாராதது போல் அமர்ந்து கொண்ட ஸ்மிருதி மகளுக்கு மட்டும் உணவு பரிமாறினாள்... அவனும் அதை அவளிடத்தில் எதிர்பார்க்கவில்லை போலும்... அமைதியாக மகள் அருகில் அமர்ந்திருந்தான்...

"அப்பாவுக்கு..." மகள் தாயின் முகத்தைத் தயக்கத்துடன் பார்த்தாள்...

"அப்பாவுக்கு எல்லாம் சாப்பாடு இல்லை... நீ மட்டும் சாப்பிடு..." என்றாள் அதட்டலாய் மகளிடம்...

அதைக் கேட்டு அவன் சிரித்தபடி, "நீ சாப்பிடு அம்ரு... நான் பிறகு சாப்பிடறேன்..." என்று அவன் மகளுக்கு ஊட்டிவிட ஆரம்பித்தான்...

யஷ்வந்த் பசி தாங்க மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும்... அவன் இன்னமும் உண்ணவில்லை என்றதும் அவளுக்கு மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது... அவள் மனதில் இருந்த இயல்பான தாய்மை உணர்வு விழித்தெழ

அவன் புறம் ஒரு தட்டை நகர்த்தினாள் அவன் முகம் பாராது...

அவன் ஆச்சிரியமாய் அவளைப் பார்த்தான்... அவள் மாறவே இல்லை... அவளது அன்பும் மாறவில்லை... தான் தான் தேவையில்லாமல் அவளது வாழ்க்கையைக் குலைத்துவிட்டதாய் மனதுக்குள் குமைந்து கூனிக் குறுகி போனான்...

ஜீவா போல் தன்னால் ஏன் நட்பிற்குள் காதலை கொண்டு வராமல் இருக்க முடியவில்லை... பல தடவை அவனுள் எழும் கேள்வி இப்போதும் அவனுள் எழுந்தது...

அவள் உணவு பரிமாற அவளது அன்பில் உள்ளம் கசிய அதை எடுத்து உண்டவனின் விழிகளும் சேர்ந்து கசிந்தது...

"தேங்க்ஸ்..." என்றான் மனமார...

"உன்னோட தேங்க்ஸ் ஒண்ணும் இங்கே தேவையில்லை... ஒரு பிச்சைக்காரனுக்குச் சாப்பாடு போடுறதா நினைச்சிக்கிறேன்..."

அவளின் வார்த்தைகள் அவனது தன்மானத்தைச் சீண்டி பார்த்து அவனது நெஞ்சில் சூட்டுக்கோலால் சூடு போட்டது போல் வலிக்கத்தான் செய்தது... தான் அவளுக்கு வலிக்கச் செய்ததை விடவா அவள் தனக்கு வலிக்கச் செய்துவிட்டாள் என்று எண்ணி அமைதியாக உண்டு முடித்தான்...

உணவு முடிந்து அம்ரிதா தொலைக்காட்சி பார்க்க சென்றுவிட அவன் அங்கேயே தேங்கி நின்றான்...

ஸ்மிருதி அவனைக் கண்டு கொள்ளாது பாத்திரங்களை எடுத்து வைக்கலானாள்... அவள் பின்னேயே சமையலறைக்குள் சென்றவன் அவள் பாத்திரங்களைக் கழுவ போட்டு விட்டு திரும்பும் போது அவளின் வழியை மறித்தவாறு நின்றான்...

அப்போதும் அவள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை... மௌனமாகக் கையைக் கட்டி கொண்டு நின்றிருந்தாள்...

"இப்போ சாப்பாட்டைப் பிச்சை போட்டது போல் என்றாவது ஒரு நாள் நீ எனக்கு வாழ்க்கை பிச்சை போடுவங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு ஸிமி..."

அவனது வார்த்தையில் அவள் அதிர்ந்து போய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்... இந்தியாவில் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்குச் செல்வம் கொண்ட பணக்கார வீட்டின் வாரிசு அவள் முன் யாசித்து நிற்பதா...? அவளின் கண்களில் அப்படியொரு திகைப்புத் தெரிந்தது...

அவளது விழி வழியே அவளது மனதை படித்தானோ...!!!

"காதலை யாசித்து நிற்பதில் தப்பில்லை ஸிமி..." அதில் இன்னமும் அவள் திகைத்து தான் போனாள்...

"காதலா...?" அவளது திகைப்பு இப்போது அருவருப்பாய் மாறியது...

"உன் மனதில் ஜீவா இருப்பது எனக்குத் தெரியும்... அது போல் என் மனதில் யார் இருக்காங்கன்னு உனக்குத் தெரியுமா...?" என்றான் கேள்வியாய்...

அதற்கு அவள் விழித்தாள்...

"நீ தான் ஸிமி..."

அவனது வார்த்தையில் அவளுக்கு உலகமே சுழன்றது... ஆனாலும் தன்னைச் சுதாரித்துக் கொண்டு,

"அன்னைக்கு நடந்த ஒரு நாள் கூத்திற்காகக் காதல்ன்னு பொய்யாய் நாடகமாட தேவையில்லை யஷூ... அம்ருவுக்காக நீ இப்படி நடந்துக்கவும் தேவையில்லை... வேணும்ன்னா அம்ருவை உன் கூடக் கூட்டிட்டு போ...

எனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லை..." மனம் கசந்து போனது பெண்ணவளுக்கு...

"யார் சொன்னது அம்ருவுக்காகத் தான் நான் உன் பின்னாடி சுத்தறேன்னு... அப்படி அம்ரு மட்டும் தான் வேணும்ன்னு நினைச்சிருந்தா எப்போதோ அவளைக் கூட்டிட்டுப் போயிருப்பேன்... ஆனா எனக்கு வேண்டியது உன் காதல் மட்டும் தான்..." என்றவனை அவள் புரியாது பார்க்க...

"இன்னமும் உனக்குப் புரியவில்லை இல்லையா... முதலில் இருந்து சொல்கிறேன் கேள்... ஹர்ஷிக்காகத் தான் நான் உன்னைக் காதலிக்கலாம்ன்னு நினைச்சேன்... ஆனா போகப் போக என்னையும் அறியாமல் நீ என் மனசுக்குள்ள புகுந்துட்ட... உன் மனசில் ஜீவா இருந்தாலும், ஜீவாவுக்கு அப்படி ஒரு நினைப்புக் கிடையாது... அதனால் உன் மனசை ஈசியா நான் மாத்திரலாம்ன்னு நினைச்சேன்... அன்னைக்கு நடந்ததைக் காமமா, உடல் சுகத்தைத் தீர்த்துக்கிறதுக்காக நடந்த அசிங்கம்ன்னு நீ நினைக்கலாம்... ஆனா எனக்கு அது மனதின் காதலை கட்டுப்படுத்த முடியாமல் நடந்த புனிதமான தாம்பத்திய உறவு..."

அவன் தன்னைக் காதலித்தான் என்பது அவளுக்குப் புதிய செய்தி... அதைக் கேட்டு அவனை ஆச்சிரியமாகப் பார்த்தாள்...

"தாலி கட்டினால் தான் கணவன், மனைவி இல்லை... மனசில் காதல் இருந்தாலும் கணவன், மனைவி தான்..."

சொல்லிக் கொண்டே வந்தவன் தலை தானாகக் கவிழ்ந்தது...

"அன்னைக்கு உன்னை என்னவளாக்கிக்கிட்ட சந்தோசத்தில் நான் உனக்கு முத்தமிட்ட போது நீ 'ஐ லவ் யூ ஜீவா...'ன்னு சொன்னதைக் கேட்டு அந்த நொடி நான்

செத்துப் போயிட்டேன் ஸிமி... எந்தக் காதலனுக்கும் என் நிலை வரவே கூடாது..."

கண்கள் கலங்க கூறியவனைக் கண்டு அவளுக்கும் வருத்தமாகத் தான் இருந்தது... ஆனால் அவள் மனதில் ஜீவா ஆழப்பதிந்து போனதை யாராலும் மாற்ற முடியாதே... அவன் தன்னை நாசம் செய்தவன் என்பது கூட மறந்து அவனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருந்தாள் அவள்...

"அதுக்கு அப்புறமும் உன்னை விட்டு விட மனமில்லாமல் தான் என் தவறை உன் கிட்ட ஒத்துக்கிட்டேன்... நீயோ என்னை வெறுத்த... அதுக்கு அப்புறம் தான் நீ உன் உறவுகளை இழந்தது... அப்போ நீ இருந்த நிலையில் உன்னைத் தொந்திரவு பண்ண எனக்கு மனம் வரலை... நான் விலகி வெளிநாட்டுக்குப் போயிட்டேன்... எனக்குத் தெரியும் என்னைப் போல் ஜீவா உன்னைக் கைவிட்டுட மாட்டான்னு... நான் நினைச்சது போல் அவன் உன்னைப் பார்த்துக்கிட்டான்..." என்று எதையோ சொல்ல வந்தவன் திடுமென நிறுத்திவிட்டுப் பின் வாயை இறுக மூடி கொண்டான்...

"இப்போ மட்டும் எதுக்கு வந்த...?" அவளின் குரல் சற்று கோபத்தோடு ஒலித்தது... அப்போது விட்டு விட்டு போனவன் இப்போது எதற்கு வர வேண்டும் என்கிற ஆதங்கமோ...

"ஏன்னா..." என்று தயங்கியவன் பின் நிதானித்து, "உன் மனசில் ஜீவா தான் இருக்கிறான்... ஒருவேளை அவனுக்கும் விருப்பம் இருந்து உன்னை விரும்பி கல்யாணம் பண்ணிக்கிட்டால்...? நான் ஏன் தடையா இருக்கணும்ன்னு தான் விலகி போனேன்... என் அண்ணனை பத்தி நல்லா தெரிஞ்சிருந்தும் நான் விலகி போனது தப்பு தான்... இப்போ அது எனக்குப் புரியுது..."

அவனின் குரலில் குற்றவுணர்வு அப்பட்டமாய்த் தெரிந்தது...

"இப்போ உனக்கு ஒரு சான்ஸ் கிடைக்குமான்னு பார்க்க வந்திருக்கியா...? இப்பவும் சான்ஸ் கிடைக்கலான்னா அப்போ மாதிரி அம்போன்னு விட்டுட்டு போயிருவியா... அப்போ உனக்கு என்னோட உடல் தான் வேணுமா... என் மனசு தேவையில்லையா..."

அவளுக்குக் கோபம் வந்த அதே நேரம் அழுகையும் சேர்ந்து வந்தது...

"என்ன ஸிமி இப்படிப் பேசுற... உன் மனசு வேணும்ன்னு தானே நீ அடிச்சா கூடத் தாங்கிட்டு உன் முன்னாடி நிற்கிறேன்... என்னைப் பத்தி உனக்கு நல்லா தெரியும்... இப்போ என்னோட மாற்றம் எதுவும் உன் கண்ணுக்கு தெரியலையா...?"

"ஏன்டா என் உடலை என் சம்மதம் கேட்டா எடுத்த... இப்போ மட்டும் என் சம்மதம் வேணுமா உனக்கு..." அழுகை முட்டி கொண்டு வர உதட்டை பிதுக்கியபடி அவனது நெஞ்சில் சராமாரியாகக் குத்த துவங்கினாள் அவள்...

அவளது வார்த்தையில் இருந்த பொருளை புரிந்தவன் முகம் மலர தன்னை அடித்துக் கொண்டிருந்த அவளது கைகளை இழுத்து பிடித்து அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்...

"வேண்டாம்... என்னைத் தொடாதே..." என்று அவனது அணைப்பில் இருந்து அவள் திமிற முற்பட... அவனோ அவளை இன்னமும் இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்...

அவள் மனம் போகும் பாதை புரிந்ததும் அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

"இந்த மக்குக்கு இது புரிய இத்தனை நாளாகிருச்சு ஸிமி, சாரிம்மா..." என்று அவன் அவளைச் சமாதானப்படுத்தினான்...

யஷ்வந்த்தின் அணைப்பில் மெதுவே அடங்கியவளின் அழுகை கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்தது...

நேற்று வரை ஜீவா, ஜீவா என்று கூவி கொண்டிருந்த மனம் இன்று யஷ்வந்த்தின் அணைப்பில் அமைதியுறுவதைக் கண்டு திகைப்பாய் நின்றிருந்தாள் ஸ்மிருதி... அவளின் மனதில் என்ன இருக்கிறது என்பது அவளுக்குப் புரியவில்லை...

ஆனால் ஒன்று மட்டுமே உண்மை... குடும்பத்தினரின் அன்பில் திளைத்து இருந்தவள் இத்தனை நாள் அது கிடைக்காது வறண்ட பாலை நிலமாக இருந்த அவளது மனம் ஜீவா எனும் கலைந்து போகும் மேகத்தைக் கண்டு தாகத்துடன் காத்திருந்தது... ஆனால் அது உண்மையல்ல...

இதோ இப்போது தனது அன்பால் அவளது மனதை நனைக்கிறானே யஷ்வந்த் இவன் தான் அவளது மழை மேகம்... அவள் மேல் அன்பை பொழியும் மழை மேகம்... இருந்தாலும் அவனை ஏற்றுக் கொள்ள முடியாமல் அவள் மனதுக்குள் ஏதோ ஒரு தடுமாற்றம்...

அதனால் அவள் அவனை விட்டு விலகி நிற்க முயன்றாள்... அவனோ தனது பிடியை தளர்த்தாது அவளைக் குனிந்து பார்த்தான்...

"ப்ளீஸ் யஷூ..."

அவளின் கண்களின் மல்கிய கண்ணீரை கண்டு அவனது கைகள் தானாகத் தளர்ந்தது... அவனை ஏறிட்டு பார்க்க முடியாமல் அவள் சமையல் மேடை முன் திரும்பி நின்று கொண்டாள்... அவளுக்குப் பின்னால் நெருங்கி வந்து நின்றவன்,

"ஸிமி... ஐம் ரியலி சாரி... மன்னிப்பு என்ற வார்த்தையில் அடக்கி விட முடியாது என் தவறை... ஆனாலும் மன்னிப்பு

தவிர என்னிடம் வேறு வார்த்தையில்லை... இனி உன்னைப் புரிந்து கொண்டு நடக்க முயற்சிக்கிறேன்..."

அதற்குப் பதில் சொல்லாது அவள், "என்னைக் காதலித்ததை நீ ஏன் என் கிட்ட சொல்லலை...?"

"நீ தான் என் கிட்ட பேசவே மாட்டேன்னு சொல்லிட்டியே... பேசினால் தானே என் பக்க நியாயத்தை, என் காதலை விளக்கி சொல்ல முடியும்..."

அவனின் மனம் புரிந்து அவள் அமைதியாக இருந்தாள்...

"ஸிமி... என் மனதை நான் தெளிவா சொல்லிட்டேன்... இனி முடிவு எடுக்க வேண்டியது நீ தான்... உனக்கு விருப்பம் இருந்தா நாம மூணு பேரும் ஒரு குடும்பமா ஒண்ணா வாழ்வோம்... உனக்கு விருப்பம் இல்லைன்னா உங்க ரெண்டு பேருக்கும் காவலா ஒரு நாயை போல் இங்கே இருந்துட்டு போறேன்... இரண்டுமே எனக்குச் சம்மதம் தான்..."

அவனின் வார்த்தையில் பெண்ணவளுக்கு அழுகை தான் வந்தது...

"ப்ளீஸ் யஷூ... வார்த்தையால் என்னைக் கொல்லாதே... எனக்கு மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு... இவ்வளவு நாள் ஜீவா, ஜீவான்னு இருந்துட்டு இப்போ ஜீவா இல்லைங்கிறதுக்காக உன் கூட வாழணும்ன்னு நினைக்கிறேனோன்னு எனக்கு என்னை நினைச்சே அசிங்கமா இருக்கு..."

அவளின் வார்த்தையில் அவளது மனதை படித்தவனாய் அவன் அவளைப் பின்னால் இருந்து அணைத்துக் கொள்ள, அவளும் அவனுள் பாந்தமாய் அடங்கி நின்றாள் விசும்பியபடி...

"நீ ஜீவா மேல் வச்சியிருக்கிற அன்புக்கு பேர் காதல் இல்லைடா ஸிமி... அந்த வயசில் தோன்றுகிற ஒருவித ஈர்ப்பு..."

"அது ஏன் எனக்கு உன் மேல் தோணாம போச்சு...?" சிணுங்கலாய் வந்தது அவளது வார்த்தைகள்...

"அவனை மாதிரி நானும் சினிமாவில் நடிச்சிருந்தேனா உனக்குத் தோணியிருக்குமோ என்னவோ... இப்பவும் ஒண்ணும் கெட்டு போகலை நான் வேண்ணா சினிமாவில் நடிக்க முயற்சி பண்ணவா...?"

"வேண்டாம்... வேண்டாம்..." அவசரமாய்ச் சொன்னவளை கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

அவன் சிரிப்பதை நின்றவாக்கில் பின்னால் திரும்பி பார்த்தவள் அப்படியே அசையாது பார்த்திருந்தாள்...

'நேற்று இவனைத் திட்டி விரட்டி விட்டது என்ன...? இப்போது இவனின் அணைப்பில் அடங்கி இவனை ரசிப்பது என்ன...? உண்மையில் எனக்கு என்ன தான் வேணும்...?' அவளுக்கே அது தெரியவில்லை...

அவளின் குழப்ப முகம் பார்த்து யஷ்வந்த், "யார் யாரை வேண்டும்ன்னாலும் காதலிக்கலாம்... ஆனால் கல்யாணத்தில் மட்டும் தான் ஒருவருடன் உடலாலும், மனதாலும் வாழ முடியும்... நமக்குக் கல்யாணம் நடந்துவிட்டதுன்னு நினைச்சிக்கோ... இனிமேல் காதலிப்பது எப்படின்னு மெதுவா பாடம் படிக்கலாம்... என்ன ஓகேவா...?"

அவ்வாறு கேட்டவனுக்கு அவளால் பதிலுக்கு வெறுமனே தலையசைக்கத் தான் முடிந்தது...

"ஸிமி... பெரியவங்க ஏன் இந்தத் தாலி, சடங்குகளுக்கு எல்லாம் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறாங்கன்னு

இப்பத்தான் புரியுது..." என்றவனைப் புரியாது அவள் பார்க்க,

"நாம கல்யாணம் பண்ணிக்கலாமா ஸிமி...?" ஏக்கத்துடன் கேட்டவனைத் திகைத்துப் போய்ப் பார்த்தவளை கண்டு,

"கல்யாணத்துக்கு அப்புறம் காதலிக்கலாம்... தப்பில்லை..." என்றான் புன்னகையுடன் மென்மையாய்...

அதற்குள் அம்ரிதா 'அப்பா' என்று அங்கு ஓடி வந்தவள் தன்னைத் தூக்கச் சொல்லி தந்தையிடத்தில் கேட்க, அவனும் சிரித்தபடி மகளைத் தன் கையில் தூக்கி கொண்டான்...

"அப்பா... தூக்கம் வருது... வாங்க..." என்று அவள் தந்தையை அழைக்க...

"ஓ... போகலாமே..." என்றபடி அவன் மகளுடன் அவளின் அறைக்குச் சென்றான்...

அதைச் சமையலறை வாயிலில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த ஸ்மிருதி சொல்ல முடியாத ஒரு உணர்வில் சிக்கித் தவித்தாள்... எத்தனையோ முறை அம்ரிதா ஜீவாவை உள்ளே அழைத்திருப்பாள்... ஆனால் அவன் ஒரு முறை கூட உள்ளே வந்து அவளைத் தூங்கச் செய்தது கிடையாது...

அதே சமயம் யஷ்வந்த்தின் இந்தச் செயலையும் எண்ணி பார்த்தாள்... அவனது இந்த உரிமையான செயலில் அவளுக்கான உரிமையான உறவு யாரிடத்தில் இருக்கிறது என்பது தெள்ளத்தெளிவாகப் புரிந்தது அவளுக்கு...

இன்னமும் எதிர்காலம் அவளுக்கு வாழ்க்கை என்றால் என்ன என்பதை இதை விட நன்கு புரிய வைக்கும்... கீழே விழுந்து அடிப்பட்டு அழுது கதறிவிட்டு மீண்டும் அதைக்

கண்டு கொள்ளாது எழுந்து ஓடும் சிறு குழந்தையின் மனநிலையில் அவள் இருந்தாள்...

குழந்தை மனம் கொண்ட ஸ்மிருதியையும் ஆறுதலாய் அரவணைத்துக் கொள்ள அவளுக்காக அவளது யஷ்வந்த் இருக்கிறான்...காலமெல்லாம் அவளை அவன் பார்த்து கொள்வான் தன் கண்ணின் மணி போல்...

*********************

"இன்னமும் ஜீவா வரலையாம்மா...?"

சுபிக்ஷா வாசலை பார்த்துக் கொண்டு தவிப்புடன் அமர்ந்திருப்பதைக் கண்டு ராம்குமார் அவளிடம் கேட்டார்...

"இல்லை தாத்தா..."

"ஃபோன் பண்ணி பார்த்தியாம்மா...?"

"ம்... எடுக்க மாட்டேங்கிறாரு..." தவிப்புடனே வந்தது அவளது வார்த்தைகள்...

"அவன் எப்போதும் இப்படித்தான்ம்மா... கவலைப்படாதே, வந்துவிடுவான்... நீ போய்ப் படு..." என்றபடி அவர் உறங்க சென்றுவிட்டார்...

ஜீவா இப்படி இரவு தாமதமாக வருவது அன்றாடம் நடக்கும் ஒன்று என்பதால் பெரியவர் கவலைப்படாமல் படுக்கச் சென்றுவிட்டார்... ஆனால் அவளுக்குத் தான் உறக்கம் வரவில்லை... அவள் வந்ததில் இருந்து இதுவரை அவன் இப்படித் தாமதமாய் வந்தது இல்லை... அதனால் கணவனுக்கு என்னானதோ, ஏதானதோ என்று குழம்பித் தவித்தது அவளது காதல் மனம்...

வெகு நேரம் அவனுக்காகக் காத்திருந்தவள் அப்படியே சோபாவில் கண்ணயர்ந்து போனாள் தன்னையும்

அறியாமல்... அவனோ அதிகாலையில் இரண்டு மணிக்கு மிகவும் களைத்து போய் வீட்டிற்குள் நுழைந்தான்... ஏற்றுமதி செய்ய வேண்டிய பொருளில் சிறு குளறுபடி நேர்ந்துவிட அதை இரவு முழுவதும் முழித்திருந்து சரி செய்துவிட்டு இப்போது தான் வீடு வந்து சேர்ந்தான்...

வீட்டிற்குள் நுழைந்தவனின் கண்ணில் முதலில் தெரிந்தது சோபாவில் அயர்ந்து உறங்கி கொண்டிருந்த காதல் மனையாளின் அழகு தரிசனம் தான்... மெல்ல அடி மேல் அடி எடுத்து வைத்து அவள் அருகில் வந்தவன் அவள் அழகை மனதார ரசித்தான் விருப்பமாய்... அவளைக் கண்டதும் அவனது உடல் சோர்வெல்லாம் பறந்து போனது ஒரு நொடியில்...

மாநிறம் அழகில்லை என்று எந்த மடையன் சொன்னது... இதோ மாநிறமாய் இருந்தாலும் அவனின் மனதை கவர்ந்தவளின் சுடர்மிகு அழகு அவனைச் சுண்டி இழுத்து ஈர்த்தது அவள் பால்...

அவள் புறம் குனிந்து அமர்ந்தவன் அவளது மதி முகத்தைக் கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்... இமை மூடியிருந்தாலும் அவளது விழிகள் அவனை ஈர்க்கத்தான் செய்தது... மென்மையாய் அவளது விழிகளின் மீது முத்தமிட்டு எழுந்தவன் மனையாளை ஒரு பூப்பந்து போல் அலுங்காமல் தனது கைகளில் ஏந்தி கொண்டு அறையை நோக்கி சென்றான்...

அவன் அறைக்குள் நுழைந்து அவளைப் படுக்கையில் படுக்க வைக்கும் போது அந்தச் சிறு அசைவில் கண் விழித்த சுபிக்ஷா தன் கண் முன்னே இருந்த கணவனின் முகத்தைக் கண்டதும் அடுத்த நொடி தாமதிக்காது அவனை இறுக அணைத்து கொண்டாள்...

அவளது செயலில் முதலில் திகைத்தவன் பின் விருப்பத்தோடு அவளது கையில் அடங்கினான்...

இத்தனை நேரம் கணவனைக் காணாது அவள் காத்திருந்த காத்திருப்பு, அவனுக்கு என்னவானதோ என்று மனதுக்குள் அச்சம் கொண்டு அவள் தவித்திருந்த தவிப்பு எல்லாவற்றையும் அந்த ஒற்றை அணைப்பில் உணர்த்திட எண்ணினாள் அவள் அவனிடத்தில்...

அதை உணர்ந்தவனாய் அவனது அணைப்பும் இறுகியது மெல்ல, மெல்ல... அவனது அணைப்பில் அவளது மனம் ஆறுதலடைய மெல்ல தலை சாய்ந்தாள் அவனது நெஞ்சில்...

அதைப் புரிந்தவனாய் அவனும் அவளது தலையை வருடி கொடுத்தான் மென்மையாக... இருவருமே மற்றவரின் அருகாமையில் அமைதியாய் அமர்ந்திருந்தனர்...

"பேபி... ஒரே கசகசன்னு வியர்வையாய் இருக்கு... நான் போய்க் குளிச்சிட்டு வரவா...?" மனைவியிடத்தில் அவன் அனுமதி வேண்டி நிற்க...

அவளோ அவனை விட்டு இம்மியளவும் அசையாது இன்னமும் அவன் நெஞ்சில் ஆழ முகம் புதைத்து 'வேண்டாம்' என்பது போல் தலையசைத்தாள்...

"குளிக்கலைன்னா எனக்குத் தூக்கம் வராது பேபி..." என்று அவன் அவளிடத்தில் கெஞ்ச...

அதில் முகம் விலகி அவனை ஏறிட்டு பார்த்தவளின் விழிவீச்சில் அவன் வியப்பும், திகைப்புமாய் அவளை இமைக்க மறந்து பார்த்திருந்தான்...

விழிகளில் அப்பட்டமாய் அவனுக்கான தேடலின் தவிப்பு தெரிய, அதனால் விழியிரண்டும் லேசாகக் கலங்கியிருக்க, செப்பு இதழ்கள் இரண்டும் துயரத்தில் துடிக்க அவனை அவள் பார்த்த பார்வையில் அவன் இதயம் தடம் புரண்டு அவள் வசமானது விரும்பியே...

இதைத் தான் அவளிடத்தில் அவன் எதிர்பார்த்தது... அவனில்லாமல் அவளில்லை என்பதை அவள் உணர வேண்டும் என்று... அதே போல் உணர்ந்தவள் அவனையும் அவ்வாறு உணரச் செய்துவிட்டாள் தனது காதலால்...

அவளின் தேடல், இந்தத் தவிப்பு, கண்ணீர் எல்லாம் அவனுக்கானது அல்லவா... அவளே அவனுக்கானவள் என்பதை மிக அழகாக உணர்த்திவிட்டாள் இந்த அழகான தருணத்தில்...

"ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாய் என்னை மயக்குற பேபி..." என்றவன் அவளின் செப்பு இதழ்களின் துயரத்தை துடைக்க எண்ணி அதை ஆறுதலாக அணைத்தான் தனது இதழ்கள் கொண்டு...

அடுத்து மனைவியின் மனதின் தவிப்பை போக்க எண்ணி அவனது கைகள் அவளை மென்மையாக அணைத்தது... எந்தக் கணத்தில் மனதின் தவிப்பு மெல்ல மெல்ல உடலின் தவிப்பாய் மாறிப் போனது என்பதை அறியாது தங்களது தனி உலகத்தில் சஞ்சரித்தனர் அந்தக் காதல் தம்பதியினர்...

அவன் இயல்பிலேயே முரட்டுக் குணம் உடையவன் தான்... எதையும் வன்முறையாய் கையாளும் வன்மையாளன் தான்... அதே போல் எதையுமே அதிரடியாய்ச் செய்து பழக்கப்பட்ட அதிரடிக்காரன் தான்... ஆனாலும் மெல்லிய மேனி கொண்ட மனையாளின் மென்மையை உணர்ந்தோ என்னமோ அவனின் தேடல் மிகவும் மென்மையாய் இருந்தது...

ஆனால் அந்தத் தேடல் கொடுத்த இதமோ அவனது மனதில் மிகவும் வலிமையாய் தனது தடத்தைப் பதித்தது... அதன் பின் அவன் அவளை விட்டு விலகவே இல்லை... விலகவும் அவனுக்கு மனமில்லை...

சூறாவளி காற்றாய் சுழன்றடித்து வீசுபவன் மனைவியின் மலர் மனதை உணர்ந்தோ என்னமோ தென்றல் காற்றாய் குளிர்ந்து வீசி அவளுக்கு இதத்தை அளித்தான்...

ஒரு பூ மலர்வது போல் அங்குத் தாம்பத்தியம் அழகாய் மலர்ந்து மணம் பரப்பியது இனிமையாய், சுகமாய்...

இசையாகும்...!!!

# ஸ்வரம் : 19

"வாடா..." என்று உற்சாகமாக வரவேற்றான் யஷ்வந் தன் நண்பன் ஜீவாவை...

இருவரின் திருமணச் செய்தி கேட்டு தான் ஜீவா அவசரமாய் இங்கே கிளம்பி வந்தது... அவனுக்குமே இருவரின் முடிவு அப்படி ஒரு சந்தோசத்தைக் கொடுத்தது... எத்தனை நாள் கவலை இது... அது எல்லாம் இன்று ஒரு நொடியில் தீர்ந்தது போல் அவன் மனதிற்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

"நல்ல முடிவு யஷூ..." என்றபடி தோழனை தழுவி கொண்டான் அவன்...

அங்கே நின்றிருந்த ஸ்மிருதி ஜீவாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாமல் சங்கடத்துடன் தலை குனிந்திருந்தாள்... முன்பு ஜீவாவின் மனதை மயக்க என்று அவள் செய்த செயல் எல்லாம் இப்போது அவள் கண்முன் தோன்றி அவளுக்குப் பெரும் அவமானமாக இருந்தது... தன்னைக் குறித்து அத்தனை கேவலமாக, அசிங்கமாக இருந்தது அவளுக்கு... அதனாலேயே அவன் முகத்தை ஏறிட்டு பார்க்க அவளால் முடியவில்லை...

அந்த மாதிரி உணர்வுகள் எதுவும் அவனுக்கு இல்லை போலும்...

"வாழ்த்துக்கள் ஸ்ருதி..." என்றான் மகிழ்ச்சியாக...

அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவள், "தேங்க்ஸ்..." என்றபடி மீண்டும் தலை குனிந்து கொண்டாள்...

ஆண்கள் இருவரும் அவளது மனநிலையைக் கவனிக்கவில்லை... தங்களுக்குள் பேசியபடி இருந்தனர்...

"ஸிமி... ஜீவாவுக்கு ஏதாவது ஸ்வீட் செஞ்சு கொண்டு வா..." என்று யஷ்வந்த் சொல்ல...

"ஏன் நண்பா நான் நல்லா இருப்பது உனக்குப் பிடிக்கலையா...?" என்று நண்பனை கேலி செய்து சிரித்த இந்த ஜீவா அவளுக்கு அதிசயமாகத் தெரிந்தான்...

"ஜீவா... ஸிமி நல்லா சமைக்கிறாள்... உனக்கு அது தெரியாதா..."

"அது எனக்குத் தெரியவே வேண்டாம்... வீண் விசப்பரீட்சையில் இறங்க நான் தயாராக இல்லை..." என்று நமட்டுச் சிரிப்புடன் அவன் கூற...

அதைக் கேட்டு ஸ்மிருதிக்கு அப்படி ஒரு கோபம் வந்தது...

"யஷூ... அதைச் சாப்பிட்டு பார்த்து சொல்லச் சொல்லு..." என்று ஜீவாவை பார்த்து முறைத்துக் கொண்டு சொன்னவள் சிறுபிள்ளையின் கோபத்துடன் உள்ளே சென்றாள்...

அவள் செல்வதைச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த யஷ்வந்த், "இன்னும் ஸிமி மாறலை... என்ன ஜீவா...?"

அதை ஆமோதித்துச் சிரித்த ஜீவா, "அப்படி மாறினால் அது ஸ்ருதி இல்லையே..." என்றான் கேலியாக...

"நான் உனக்கு ரொம்பத் தொந்திரவு கொடுத்துட்டேன்... இல்லையா ஜீவா...?"

"இல்லைன்னு எல்லாம் சொல்ல மாட்டேன்..." சிறு கோபத்துடன் சொன்ன ஜீவா,

"அவளோட குழந்தைக்கு நீ தான் காரணம், அவள் இப்படி உறவுகளை இழந்து தனியா நிக்கிறதுக்கும் நீ தான் காரணம்... எல்லாத் தப்பும் உன் மேல் வச்சிக்கிட்டு இப்படி

அவளை அம்போன்னு விட்டுட்டு போனா எப்படி...? அந்தக் கோபம் எனக்கு இப்பவும் இருக்கு... அவளை உன் காதலியா பார்க்க வேண்டாம்... ஆனால் அவள் நம்ம நண்பனோட தங்கை... அந்த எண்ணத்திலாவது நீ அவளுக்குத் துணையா இருந்திருக்கணும் யஷ்ஃ... நீ பண்ணியது மன்னிக்க முடியாத தப்பு..."

அத்தனை நாள் கோபத்தை அவன் தனது வார்த்தைகளில் கொட்டினான்... அதைக் கேட்டு யஷ்வந்த்தின் தலை தானாகக் கவிழ்ந்தது...

"என்னை என்னடா பண்ண சொல்ற... அவள் என் முகத்தைப் பார்க்க கூட மாட்டேங்கிறாள்... கேட்டால் உன்னைத் தான் காதலிக்கிறேன்... உன்னைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்றா... அதைக் கேட்டு எனக்குச் செத்துடலாம் போலிருந்தது... அதான் ஊரை விட்டுப் போயிட்டேன்... ஸிமியை பார்க்க, பார்க்க அவள் தான் வேணும்ன்னு மனசு ஏங்குது... அதைத் தவிர்க்கத்தான் அப்படிச் செஞ்சேன்... ஒருவேளை நூத்துல ஒரு வாய்ப்பா நீ அவளை ஏத்துக்கிட்டா...? சரி ஸிமியாவது அவள் மனசுக்கு பிடிச்சவனைக் கல்யாணம் பண்ணிக்கட்டும்ன்னு விலகி போனேன்..."

யஷ்வந்த் சொன்னதைக் கேட்டு ஜீவா அவனை முறைத்தான்...

"உன் பக்க நியாயம் எல்லாம் சரி தான்... ஆனா உன் அண்ணனை நினைச்சு பார்த்தியா...? ஸ்ருதியையும், அம்ருவையும் இல்லாம ஆக்கணும்ன்னு கங்கணம் கட்டிட்டி அலையறான்... அவன் கிட்ட இருந்து இவங்களைப் பாதுகாக்கிறதே பெரிய வேலையா இருக்கு..."

நண்பனின் பொறுப்பற்றத் தன்மையை நினைத்து ஜீவாவுக்குக் கோபம் தான் வந்தது...

"வாழ்வோ, சாவோ நீ இவங்க கூட இருந்திருக்கணும் யஷூ... பெரிய தப்பு பண்ணிட்ட..."

"இனிமேல் இப்படி ஒரு தவறு நடக்காது ஜீவா..." என்ற யஷ்வந்த்தின் குரல் சற்று தாழ்ந்து ஒலித்தது... அவனது வருத்தத்தை உணர்ந்து கொண்டவனாய் ஜீவா,

"நடந்து முடிந்ததை விடு... இனியாவது ஒழுங்கா இரு..." என்று திட்டிய நண்பனை ஆச்சிரியமாகப் பார்த்தான் யஷ்வந்த்...

"என்ன பார்க்கிற...?"

"இது நீ தானான்னு பார்க்கிறேன்..."

"பொதுவா நான் இந்த மாதிரி சென்ட்டிமெண்ட்டுக்குள்ள சிக்கிக்க விரும்ப மாட்டேன்... ஆனா வருணுக்காகத் தான் இதைச் செய்தேன்..."

இலகுவான குரலில் ஜீவா சொன்னாலும் அதில் அவனது நட்பின் ஆழம் தெரிந்தது...

வருணின் நினைவில் யஷ்வந்த்தின் கண்கள் கலங்கியது... தன்னால் தான் எல்லாம் என்ற குற்றவுணர்வு தலைத்தூக்க அமைதியாய் அமர்ந்திருந்தான்...

"நீ வருணுக்கு நியாயம் செய்யவில்லை யஷூ..." அப்பட்டமான குற்றச்சாட்டு ஜீவாவின் குரலில் தெரிந்தது...

"நான் யாருக்குமே நியாயம் செய்யலை ஜீவா..."

இப்படிப் பேசுபவனை என்ன சொல்லி திட்டுவது என்று தெரியாமல் அமர்ந்திருந்தான் ஜீவா... ஏன் தன்னைப் போல் யஷ்வந்திற்கு அவனது சகோதரன் மீது கோபம் வரவில்லை என்று இவனுக்குக் கோபம் வந்தது...

"ஸ்ருதியை காதலிக்கிறேன்னு சொல்லுற... ஆனா உன் அண்ணனை ஒண்ணும் பண்ண மாட்டேங்கிற... எனக்குத் தான் அவனைப் பார்த்தாலே பத்திக்கிட்டு வருது..."

"ஜீவா... நீ நினைப்பது போல் ரிஷி கிடையாது... அவன் நல்லவன் தான்... ஆனால்...?"

நண்பனின் தயக்கத்தை எள்ளலாய் ஏறிட்ட ஜீவா, "ஆமாம், ஆமாம்... ரொம்ப நல்லவன் தான்... உயிர் நண்பனை கொன்னவன், உன் மனைவி, மகளைக் கொல்ல பார்க்கிறவன் எல்லாம் உன் பாசையில் ரொம்ப ரொம்ப நல்லவன் தான்..." கேலிக்குரலில் கூறியவன் எரிச்சலுடன் யஷ்வந்த்தை பார்த்தான்...

"அதுக்கு எல்லாம் காரணம் ஜஸ்வந் தான்டா..." என்றவனைத் திகைப்புடன் பார்த்தான் ஜீவா...

ரிஷ்வந்த், யஷ்வந்த்தின் மூத்த சகோதரன் தான் இந்த ஜஸ்வந்த்...

"அவன் தான்டா வெளியில் நல்லவன் மாதிரி வேசம் போட்டு இப்படி எல்லாம் செய்தது... அதுக்கு ரிஷியை பாசம் காட்டி பகடைக்காயா பயன்படுத்திக்கிட்டான்..."

தனது மூத்த சகோதரனை நினைத்து அத்தனை அருவருப்பாக இருந்தது யஷ்வந்த்திற்கு... அது மட்டுமா ஜஸ்வந்த் செய்தது... இன்னும் நிறைய அயோக்கியத்தனங்கள் இருக்கிறது... ஆனால் அதற்கு எல்லாம் பலியாடாய் மாட்டி கொண்டு முழிப்பது ரிஷ்வந் தான்...

அன்று தீபிகா போதையில் ஜீவாவிடம் கூறியது இப்போது அவனது நியாபகத்தில் வந்தது... குடி போதையில் தள்ளாடியவளை அவன் தனது பண்ணை வீட்டிற்கு அழைத்துச் சென்ற போது அவன் மனதில் அவளை எதுவும் செய்யும் கள்ளத்தனம் ஏதுமில்லை... சும்மா ரிஷ்வந்த்தை

மிரட்டுவதற்காகத் தான் அவளை அவனிடத்திற்கு அழைத்து வந்தது...

வீட்டினுள் அழைத்துச் சென்று அவன் அமர வைத்த போது தான் தீபிகா அந்தக் காரியத்தைச் செய்தாள்...

"ஏய்... டோன்ட் டச் மீ..." அவளைக் கைத்தாங்கலாக அழைத்து வந்த அவனைப் பார்த்து கத்தினாள்...

அதில் அவனே சிறிது அரண்டு தான் போய்விட்டான்... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"நீ நினைக்கிற மாதிரி எதுவும் நடக்காது தீபி... ஐ ப்ராமிஸ் யூ..." என்றவனை நம்பாது பார்த்தவளை பார்த்து,

"சும்மா ரிஷியை மிரட்டத்தான் உன்னைக் கூட்டிட்டு வந்தேன்... அவன் ஸ்ருதிக்கு ரொம்ப டார்ச்சர் கொடுக்கிறான்... அதுக்குப் பதிலடி கொடுக்கத்தான்... வேறு எந்தத் தப்பான எண்ணமும் எனக்கில்லை... யஷ்வோட அண்ணி எனக்கும் அண்ணி போல் தான்..."

முதலில் பேசிய அவனது வார்த்தையை நம்பாது பார்த்தவள் கடைசியில் யஷ்வந்த் பற்றிப் பேசியதும் நம்பி சிறிது அமைதியடைந்தாள்...

பின் என்ன நினைத்தாளோ அவனைப் பார்த்து தன் மனதிலுள்ள வேதனையை எல்லாம் சொல்லி புலம்ப ஆரம்பித்தாள்...

"உனக்குத் தெரியுமா ஜீவா, நான் ரிஷியை எந்தளவுக்குக் காதலிக்கிறேன்னு... ஆனா அவன் என்னை... என்னை..." எதையோ நினைத்து தனக்குள் அழுதவள் பின் கண்களைத் துடைத்துக் கொண்டு,

"இதுக்கு எல்லாம் அந்த ஜஸ்வந் தான் காரணம்... அவன் மட்டும் உயிரோடு இருந்திருந்தா என் கையால் அவனைக்

கொன்னு போட்டிருப்பேன்... நல்லவேளை செத்து போயிட்டான்... படுபாவி..." என்று அத்தனை கோபமாய்ப் பல்லை கடித்தவளை கண்டு ஜீவா பயம் தான் கொண்டான்...

"ஜீவா... நான் இப்படிக் குடிக்கிறதாலயோ இல்லை ஊர் சுத்துறதாலயோ நான் ஒண்ணும் கெட்டவள் கிடையாது... என் மனசுக்குள் உள்ள வேதனையை மறக்கத்தான் நான் குடிக்கிறேன்... அந்த வேதனை என்னைக் கொன்னு திங்குது ஜீவா..." என்று அரற்றியவள்,

"அதுக்காக என் கிட்ட யாராவது அத்துமீறி நடந்துக்க முயற்சி பண்ணினா அவங்களைக் கொன்னுருவேன் கொன்னு... என் ரிஷியால் மட்டும் தான் என்னைத் தொட முடியும்... அவனை வெறுப்பேத்த தான் நான் உன் கூட வந்தது... அதுக்காக என்னை நீ சீஃப்பா நினைச்சிக்காதே..."

அவள் சொல்லாமல் சொன்னாள் தன் மனதின் துயரை... அன்று ரிஷ்வந்த்திடம் வேண்டுமென்றே தான் தீபிகாவை பற்றித் தவறாகப் பேசவிட்டு வந்தான் அவன்... ஏனெனில் ஸ்மிருதியை பத்தி இனி அவன் நினைத்து கூடப் பார்க்க கூடாது என்பதற்காகத் தான்...

"உன் அண்ணியும் ஜஸ்வந்த்தை தான் சொன்னாங்க... அவன் ஆளு பார்க்க பக்கா சாமியார் மாதிரி நல்லவனா தானே இருந்தான்... அவன் அப்படி என்ன தான்டா செஞ்சான்...?"

"சில விசயங்களை வெளியில் சொல்ல முடியாது ஜீவா... அது மாதிரி தான் இதுவும்... இந்தக் கேவலத்தையும் என்னால் வெளியில் சொல்ல முடியாது..." என்ற யஷ்வந்த்தை பார்த்து அமைதியாக இருந்த ஜீவா,

"அதுக்காக ரிஷியை ரொம்ப நல்லவன்னு நீ சொல்லாதே... அம்ருவை கடத்த பார்த்தான்... நல்லவேளை ஹர்ஷி

இடையில் புகுந்து காப்பாத்தினாள்..."

"நீ மட்டும் அண்ணி கூட ஊர் சுத்திட்டு வரலையா...?" என்ற யஷ்வந்த்தை பார்க்க முடியாமல் தலை குனிந்தான் ஜீவா...

"அது தவறா எண்ணத்தில் இல்லைடா... ஸ்ருதிக்காகத் தான் இப்படிப் பண்ணினேன்..."

"அது போல் தான் அவனும் தன் மனைவிக்காக அப்படிப் பண்ணியிருக்கலாம் இல்லையா... ரிஷி பக்கமும் நியாயம் இருக்கு... உன் தொழில் போட்டியை குடும்பத்துக்குள் கொண்டு வராதே ஜீவா... நீ எனக்கு நல்ல நண்பன்... அது போல் அவன் ஒரு நல்ல அண்ணன்... எனக்கு நீங்க இரண்டு பேருமே வேண்டும்... இனி அவன் உன் விசயத்தில் தலையிட மாட்டான்... அவனை நான் பார்த்துக்கிறேன்..." என்ற யஷ்வந்த் நண்பனை கண்டு,

"நீ நல்லவன்னு எனக்குத் தெரியும்டா... கொஞ்சம் நிமிர்ந்து என்னைப் பாருடா நல்லவனே..." என்று கிண்டல் செய்ய... அதில் மனம் இளக்கமடைந்த ஜீவா நிமிர்ந்து யஷ்வந்த்தை பார்த்தான்...

"சாரிடா யஷூ..." என்ற ஜீவாவை கட்டித் தழுவி கொண்ட யஷ்வந்த்,

"உன்னை நம்பாமல் வேறு யாரை நான் நம்பப் போகிறேன்... இதுக்காக நீ மன்னிப்பு கேட்கத் தேவையில்லை..."

அந்நேரம் கையில் இனிப்போடு ஸ்மிருதி அங்கு வர நண்பர்களின் பேச்சுத் தடைப்பட்டது... அவள் செய்த கேசரியை கையில் எடுத்த ஜீவா அவளைப் பார்த்து,

"நம்பி சாப்பிடலாம் இல்லையா...?" என்று வம்பாய் கேட்க...

அதில் விழித்து முழித்த ஸ்மிருதி பின், "என்னை நம்பி வீட்டுக்குள்ள கூட வர மாட்ட... இப்ப இனிப்பு மட்டும் எப்படிச் சாப்பிடுவ...? நீ ஒண்ணும் சாப்பிட வேண்டாம்..." என்றாள் கோபமாய் முகத்தில் அடித்தார் போன்று...

"ஸிமி..." யஷ்வந்த் அவளை அதட்டினான்...

"விடு யஷூ..." நண்பனை பார்த்து சொன்ன ஜீவா அவள் புறம் திரும்பி, "இப்பத்தான் என் நண்பன் வந்துட்டானே... அதனால் பயமில்லாமல் சாப்பிடலாம்... ஏன்னா அவனுக்காக நீ எப்படியும் நல்லாத்தான் செஞ்சிருப்ப..."

இரண்டிற்கும் சேர்த்துப் பதில் கொடுத்தவன் இனிப்பை விரும்பி உண்டான்...

"ம்... பரவாயில்லை யஷூ... நீ தப்பித்தாய்..." என்று அவளின் சமையலை பாராட்டி சான்றிதழ் வேறு கொடுத்தான்...

"நீங்க பேசிக்கிட்டு இருங்க... நான் போய் அம்ருவை கூட்டிட்டு வர்றேன்..." என்றபடி ஸ்மிருதி மகளை அழைத்து வருவதற்காக எழுந்தாள்...

"நீ இரு... நான் போய்க் கூட்டிட்டு வர்றேன்..." என்றபடி ஜீவா எழுந்தான்...

"நீங்க ரெண்டு பேரும் வேண்டாம்... நானே போய் என் மகளைக் கூட்டிட்டு வர்றேன்..." என்ற யஷ்வந்த் மகளை அழைக்கச் சென்றுவிட்டான்...

இப்போது ஜீவாவும், ஸ்மிருதியும் மட்டுமே தனித்திருந்தனர்... அவள் என்ன பேசுவது என்று தெரியாது அமைதியாய் இருந்தாள்...

"யஷூ மாதிரி ஒருவன் கணவனா கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும் ஸ்ருதி..." ஜீவா தான் ஆரம்பித்தான்...

"இனி உன் வாழ்க்கை சந்தோசமா இருக்கும்... கவலைப்படாதே... யஷூ உன்னையும், அம்ருவையும் நல்லா பார்த்துக்குவான்..."

அவனது பேச்சில் அவளது முகத்தில் புன்னகை அரும்பியது...

"ம்... நம்பிக்கை இருக்கு..." என்றாள் சந்தோசமாய்...

அன்று திருமணம் செய்து கொள்ளலாமா என்று யஷ்வந்த் கேட்ட போது அமைதியாகத் தான் இருந்தாள்... ஆனால் அடுத்தடுத்து வந்த நாட்களில் அவன் தன் மீதும், மகள் மீதும் காட்டிய அன்பில் அவள் சற்று கரைந்து தான் போனாள்... அவன் சொல்வது போல் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து தான் பார்க்கலாமே என்ற எண்ணம் அவளுள் தோன்றியது... அதை அவனிடம் சொல்லவும் மறக்கவில்லை... அதற்கடுத்து அவன் தாமதியாமல் உடனே திருமணத்திற்கு நாள் குறித்து விட்டான்...

"சாரி ஜீவி..." சிறிது சங்கடத்துடன் மன்னிப்பு கேட்டாள் அவள்...

"நீ சாரி கேட்க தேவையில்லை ஸ்ருதி... வருணின் கடமை எனக்கும் இருக்கிறது... நான் உன்னைத் தவறாக நினைக்கவில்லை..."

வருண் அவளது அண்ணன்... ஜீவா, யஷ்வந்த், வருண் மூவரும் உயிர் நண்பர்கள்... பள்ளியில் படிக்கும் காலத்தில் இருந்து... 'வருணின் கடமை' என்று ஜீவா சொன்னதுமே அவளுக்குப் புரிந்து போனது... அவன் தன்னை எந்த மாதிரி உறவாக எண்ணி பார்த்திருக்கிறான் என்று...

அவனது அன்பில் சகோதரத்துவம், தாய்மை, நட்பு என்று எல்லாவற்றையும் கண்டவள் காதலை மட்டும் காணாதது ஏன் என்று இப்போது புரிந்தது...

அதற்குள் யஷ்வந்த் மகளை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான்... அங்கு ஜீவாவை கண்டதும் அம்ரிதா தந்தையின் கைகளை விடுவித்துக் கொண்டு அவனிடத்தில் ஓடி வந்து,

"டாடி..." என்று கட்டி கொண்டாள்...

அவனும், "அம்ரு பேபி..." முகம் எல்லாம் பூரிப்புடன் அவளை அணைத்துக் கொண்டான்...

அன்று பள்ளியில் நடந்ததை எல்லாம் எப்போதும் போல் அவள் சுவாரஸ்யத்துடன் அவனிடம் கூறத் துவங்க, அவனும் ஆர்வமாய்க் கேட்கலானான்... இருவரும் தங்களது தனி உலகில் சஞ்சரித்தனர்... மீதமிருந்த இருவரையும் அவர்கள் கண்டு கொள்ளவில்லை...

அதைக் கண்கள் கலங்க பார்த்துக் கொண்டிருந்த யஷ்வந்த் மெல்ல அங்கிருந்து அகன்று பால்கனி பக்கம் சென்றான்... அவனைத் தொடர்ந்து ஸ்மிருதியும் சென்றாள்...

"யஷூ..." அவனின் முகத்தில் தெரிந்த வேதனையைக் கண்டு அவனது தோளில் ஆறுதலாய் அவள் கை வைத்தாள்...

"நான் வாழ்க்கையில் நிறைய மிஸ் பண்ணிட்டேன் இல்லையா ஸிமி... அப்பாங்கிற உறவு வெறும் வார்த்தையில்லை... அது ஒரு உணர்வு என்பதை இவர்கள் இருவரது உறவும் நமக்கு எடுத்து காட்டுது... அந்த உணர்வை நான் இழந்துட்டேன் ஸிமி..."

அவனின் வருத்தம் புரிந்தோ என்னமோ அவள், "ஆனால் எனக்குக் கணவன் என்கிற உணர்வை நீ மட்டும் தான் கொடுக்க முடியும் யஷூ..." என்றாள் மனமார...

அதில் அவனது கண்கள் பளிச்சிட்டது...

"நிஜமா ஸிமி...?"

ஆம் என்பது போல் தலையாட்டியவள் அவனின் தோளில் சாய்ந்து கொண்டாள்... அவன் ஒன்றும் கெட்டவனில்லை... சந்தர்ப்பம் சூழ்நிலையும், அவளும் சேர்ந்து தானே அவனைத் தவறு செய்யத் தூண்டிவிட்டது... அதில் அவன் மட்டும் குற்றவாளி இல்லையே... முதல் குற்றவாளி அவள் தானே... அப்படிப்பட்ட அவளையே மன்னித்து அவன் ஏற்றுக் கொள்ளும் போது, அவள் அவனை ஏற்றுக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது...

அதை உணர்ந்தார் போன்று அவனும் அவளை அணைத்துக் கொண்டான்...

அப்போது அங்கே அம்ரிதாவுடன் வந்த ஜீவா, "பேபி... நம்ம ரெண்டு பேரையும் தனியா விட்டுட்டு இவங்க ரெண்டு பேரும் இங்கே டூயட் பாடுறாங்க பாரு... இந்த அநியாயத்தை என்னன்னு கேளு பேபி...?" சிரித்துக் கொண்டே இருவரையும் மகளிடம் போட்டுக் கொடுத்தான் அவன்...

"டேய் உன்னை..." யஷ்வந்த் அவனை விளையாட்டாய் அடிக்க வர... அவனோ அம்ரிதாவை கையில் தூக்கி கொண்டு வீட்டினுள் ஓடினான்...

வெகு வருடங்களுக்குப் பின் சிரிப்பும் கும்மாளமுமாய் உயிர்ப்புடன் இருந்த வீட்டை பார்த்துக் கொண்டிருந்த ஸ்மிருதியின் உள்ளம் நிறைந்திருந்தது...

************************

அன்று ஒரு விருந்துக்காக மனைவியை அழைத்துக் கொண்டு வந்திருந்தான் ஜீவா... அங்கு எதிர்பாராத விதமாக ஹர்ஷிதாவை சந்திக்க நேரிடும் என்று அவன் நினைத்தும் பார்க்கவில்லை... ஆனாலும் சாதாரணமாய்க் காட்டி கொண்டு அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்...

ஹர்ஷிதாவும் அவனைப் பார்த்து புன்னகைத்தவள் சுபிக்ஷாவிடம், "வாழ்த்துக்கள்..." என்று அவர்களது திருமணத்திற்கு வாழ்த்தினாள்...

தனது மனதின் ஏமாற்றத்தினைச் சிறிதும் சுபிக்ஷாவிடம் அவள் காட்டி கொள்ளவில்லை... முடிந்து போன அத்தியாயத்தைப் புரட்டி பார்க்க அவள் விரும்பவில்லை... இப்போது ஜீவாவின் மனைவி சுபிக்ஷா... அதை மாற்ற யாராலும் முடியாது... அதனால் நடப்பை அப்படியே ஏற்றுக் கொள்ளப் பழகியிருந்தாள்...

அவள் தங்களை விட்டு விலகி சென்றதும் தான் ஜீவா நிம்மதி பெருமூச்சு விட்டான்... ஸ்மிருதி மாதிரி குழந்தைத்தனமாய் நடந்து கொள்கிறவள் ஹர்ஷிதா கிடையாது... அதே போல் அவனுக்கும் அவளிடத்தில் எந்தப் பயமும் இல்லை... ஆனால் அவனுக்குத் தன் மனைவியை நினைத்து தான் சற்றுப் பயமாக இருந்தது...

ஹர்ஷிதா தன்னைக் காதலித்ததை அவள் அறிந்து கொண்டால் தவறாக எண்ணி விடுவாளோ என்று... நல்லவேளை அந்த மாதிரி அசட்டுத்தனமாய் எதுவும் உளறவில்லை ஹர்ஷிதா...

சுபிக்ஷாவிடம் உணவு அடங்கிய தட்டை கொடுத்து அருகில் இருந்த மேசையில் சென்று உண்ண சொன்ன ஜீவா அங்கிருந்த தெரிந்தவருடன் பேசி கொண்டு இருந்தான்... அவளுக்கும் அங்கு யாரையும் தெரியாததால் அமைதியாக உண்ண சென்றுவிட்டாள்...

அந்தச் சமயம் ஹர்ஷிதா ஜீவாவின் அருகில் வர அவனுடன் பேசி கொண்டிருந்தவர் நாகரீகமாக விலகி சென்றார்... மற்ற நேரமாக இருந்தால் அவனும் விலகி சென்றிருப்பான்... ஆனால் அவனுக்குமே அவளிடம் சற்று பேச வேண்டியிருந்தது... அதனால் அங்கு நின்றிருந்தான்...

"கடைசியில் என் கிட்ட இருந்து தப்பிச்சிட்டீங்க இல்லையா...?" புன்னகையுடன் பேச ஆரம்பித்தவளை கண்டு அவனுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை...

ஸ்மிருதி போல் அவள் கோபமாய்ப் பேசினாலாவது பதிலுக்குக் கோபப்பட்டுப் பேசலாம்... இப்படிப் பேசுபவளை என்ன செய்வது...

"அப்படி என்ன அந்தப் பெண்ணிடத்தில் இருக்குன்னு அவளைப் போய்க் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க ஜீவா..."

ஸ்மிருதி கேட்டது போலவே இவளும் கேட்டாள்... எல்லாப் பெண்களும் இந்த விசயத்தில் ஒரே மாதிரியாகத் தான் நினைக்கிறார்கள் என்று கசப்பாக எண்ணியவன் தன் மனைவியை நோக்கி கண்களைத் திருப்பினான்...

தன்னவளை கண்ட நொடி அவன் மனதில் தோன்றியது இது தான்...

'என்ன இல்லை இவளிடத்தில்...!!!'

"உங்களுக்குச் சற்றும் பொருத்தமில்லையே ஜீவா... அப்புறம் எப்படி...? குடும்பத்துக்காக என்றாலும்... இந்த மாதிரி சாதாரண அழகுடைய பெண்ணைப் போய்..." மேலே பேச முடியாது துக்கம் தொண்டையை அடைத்தது அவளுக்கு...

ஒரு சாதாரணப் பெண்ணிடம் தான் தோற்று போனதை ஹர்ஷிதாவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை...

"அழகு என்பது எது ஹர்ஷி...?" கூர்மையாய் ஆழ்ந்து ஒலித்தது அவனது குரல்...

அதில் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள் அவள்... அவனோ கண்களில் காதலுடன் தன்னவளை பார்த்துக் கொண்டு இருந்தான்...

"சுபியோட விழிகள் இரண்டும் பேசும் மொழி எத்தனை அழகு தெரியுமா...? நாள் முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கும்... எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கும் அவளது உதடுகள் அழகில்லையா...? அவள் முகத்தைப் பார்த்தாலே மனசில் ஒரு நிம்மதி வருகிறதே அந்தச் சாந்தமான முகம் அழகில்லையா...? எல்லாவற்றையும் விட அவளது இனிமையான குரல்வளம்... உண்ண, உறங்க மறந்து நாள் முழுவதும் பாடச் சொல்லி கேட்டுக் கொண்டு இருக்கலாம் போலிருக்கும்... இவளை விடவா வேறு பெண் உலகில் அழகாக இருந்துவிட முடியும்... நிச்சயம் இருக்க முடியாது... என்னைப் பொருத்தவரை என் மனைவி தான் எனக்குச் சிறந்த அழகி..."

அவன் சொல்ல சொல்ல சுபிக்ஷாவை பார்த்த ஹர்ஷிதாவிற்குமே ஏதோ ஒருவிதத்தில் அவள் தன்னை ஈர்ப்பது போல் தான் தோன்றியது...

நீண்ட கூந்தலின் நுனி பகுதி சுருள் சுருளாய் சுருண்டு அலைப்பாய்ந்து கொண்டிருக்க, முட்டிக்கால் கீழ் வரை நீண்ட வெள்ளை கவுன் அணிந்து, அதே நிறத்தில் குதிகால் உயர செருப்பு அணிந்து, காதில் பெரிய வைர காதணி, வலக்கையில் அது போல் பெரிய ஒற்றை வைர வளையல், இடது கையில் விலையுயர்ந்த கைக்கடிகாரம் அணிந்து நாகரீகமாக அமர்ந்திருந்தவளின் மாநிறம் கூட அவளது இதழ்கள் சிந்திய புன்னகையில் மட்டுப்பட்டுப் போய் அவள் பார்க்க பேரழகியாகத் தான் தெரிந்தாள்...

"என்னைச் சுற்றி வந்த எத்தனையோ பெண்களில் என் மனதை ஈர்த்தவள் என் மனைவி மட்டும் தான்..." சற்று கர்வத்துடன் ஒலித்தது அவனது குரல்...

நிச்சயம் ஜீவா போன்ற ஒருவனை ஈர்த்து இருக்கிறாள் என்றால் இந்தச் சுபிக்ஷா பேரழகி தான் என்று ஹர்ஷிதாவிற்குமே இப்போது தோன்றியது...

"உண்மையில் அவள் அதிர்ஷ்டசாலி தான்..." என்றாள் ஹர்ஷிதா மனதின் ஏமாற்றத்தினை மறைத்துக் கொண்டு...

"இல்லை நான் தான் அதிர்ஷ்டசாலி..." என்றான் அவன் பெருமிதத்துடன்...

அந்நேரம் தன் கணவனைப் பார்த்த சுபிக்ஷா அவனைப் பார்த்து புன்னகைக்க, அவனும் முகம் மலர, கண்கள் மின்ன புன்னகைப்பதை பார்த்த ஹர்ஷிதாவிற்கு ஏதோ ஒன்று மரித்தது அவளுள்ளே...

அதைக் காண இயலாது விலகி சென்றவளை, "ஒரு நிமிசம்..." என்று தடுத்து நிறுத்தினான் அவன்...

"நீ ஏன் யஷூ கூடப் பேசுவதில்லை... அவன் ரொம்ப வருத்தப்பட்டான்... அவன் கல்யாணத்திற்கு நீ வரணும்ன்னு ஆசைப்படறான்..."

அதற்கு ஒன்றும் பேசாது நின்றிருந்தாள் அவள்... யஷ்வந்த் செய்த வேலையால் தான் ஜீவா தன்னை ஏற்கவில்லை என்கிற எண்ணம் அவளுள் ஆழமாய்...

அதை உணர்ந்தார் போல் அவனும் பேசினான்...

"யஷூ அப்படிச் செய்யவில்லை என்றாலும் உனக்கு என் பதில் 'நோ' தான்... இதை நீ புரிந்து கொள்ள வேண்டும்... நட்புக்குள் காதலை கொண்டு வர எனக்கு மனமில்லை ஹர்ஷி... நீயும், ஸ்ருதியும் எனக்கு ஒண்ணு தான்... என் நண்பனின் தங்கைகள் எனக்கும் தங்கைகள் தான்..." என்று சொல்லி அவளது நொந்த நெஞ்சில் வேலை பாய்ச்சினான் அவன்...

"என் தங்கைக்கே நான் கட்டுப்பட்டு அடங்கியவன் இல்லை... ஆனால் இப்போது உங்க இரண்டு பேரிடமும் பொறுமையா பேசுகிறேன் என்றால் அதற்குக் காரணம்

நட்பு மட்டும் தான்... அதை நீ நல்லா புரிந்து கொள்ளணும்... எதார்த்தத்தை ஏற்றுக் கொள்வதாய் இருந்தால் உன் அண்ணன் கல்யாணத்துக்கு வா..."

அவன் தன்னை மறந்து விடு என்றோ இல்லை வேறு நல்ல வாழ்க்கை அமைத்து கொள் என்றோ அவளிடத்தில் கூறவில்லை... ஆனால் தன் நிலையை மட்டும் அவளிடத்தில் தெளிவாக எடுத்துரைத்து விட்டு வந்துவிட்டான்...

இனி அவள் தான் யோசிக்க வேண்டும்...

**********************

ரிஷ்வந் தனது அறையில் அமர்ந்து அலுவலக வேலைகளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்... அறை வாயிலில் யாரோ வந்து நிற்பது போல் தோன்ற நிமிர்ந்து பார்த்தான் அவன்... அவனது மனைவி தீபிகா தான் நின்றிருந்தாள்...

எப்போதும் அணியும் நாகரீக உடைகளைத் தவிர்த்து அவர்களது ராஜ வம்சத்திற்கு ஏற்றவாறு புடவை அணிந்து ஒரு மகாராணி போல் கம்பீரமாக நின்றிருந்தாள்... அவளும் ஒரு ராஜ வம்சத்தின் இளவரசி தான்...

மனைவியின் தோற்ற மாற்றம் கண்டு திருப்தி அடைந்தவன் அவள் தன்னை நாடி வந்திருப்பதைக் கண்டு சந்தோசப்பட்டவனாய்,

"தீபி வா... வா... ஏன் அங்கேயே நிற்கிறாய்..." என்று அவன் முகம் மலர அவளை வரவேற்க...

அவளோ ஒருவித இறுக்கத்துடன் உள்ளே நுழைந்தவள், "உரிமையுடன் வர வேண்டிய நான் இப்படிக் குற்றவுணர்ச்சியுடன் வரும் நிலைக்குத் தள்ளியது யாரு...

நீங்க தானே...?" குமுறிக் கொண்டு வந்தது அவளது வார்த்தைகள்...

"ச்சு... என்ன தீபி...? நடந்து முடிந்ததை நீ மறக்க மாட்டியா...? மறதி தான் மனக்காயத்திற்கு நல்ல மருந்து..."

"எதை மறக்க சொல்லுறீங்க...? உங்க அண்ணன் என்னைப் பலவந்தப்படுத்தியதையா...?" சொல்லும் போதே அவளின் கண்களில் கண்ணீர் வழிந்தது...

அதில் அவன் கல் போல் இறுகி அசையாது நின்றிருந்தான்... மனமும் கல்லாய் இறுகி போய்க் கனத்தது... சகோதரன் என்று பாசம் காட்டிய காமூகன் தனது மனைவியைப் பெண்டாள நினைப்பான் என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை...

அவன் காலால் இட்ட பணிகளைத் தலையால் செய்து முடித்த தம்பிக்கு அவன் எப்படிப்பட்ட துரோகம் செய்துவிட்டான்... இராமன், லட்சுமணன் போல் தாங்கள் ஒற்றுமையான சகோதரர்கள் என்று நினைத்திருந்த இறுமாப்பில் பெரும் நெருப்பை அல்லவா அள்ளி போட்டுவிட்டான்...

இப்போது நினைத்துப் பார்த்தாலும் அவனது மனம் ஆறவில்லை...

ஜஸ்வந்த் அவனது மூத்த சகோதரன்... முப்பத்தைந்து வயது வரை திருமணம் செய்யாமல் தனியே வாழ்ந்து வந்தான்... ஏனோ அவனுக்குத் திருமணத்தில் நாட்டமில்லை... அதனால் தனது தம்பி ரிஷ்வந்த்திற்குத் தீபிகாவை மணம் முடித்து வைத்தான்... அவர்களது திருமண வாழ்க்கையும் நல்லபடியாகச் சந்தோசமாகத் தான் சென்று கொண்டிருந்தது...

அடுத்தச் சில வருடங்களில் அவர்களுக்குக் குழந்தை பிறப்பு தாமதமாகவும் மருத்துவரை சென்று பார்த்தனர்

இருவரும்... அப்போது தான் தெரிந்தது ரிஷ்வந்த்திற்குத் தந்தையாகும் பாக்கியம் இல்லை என்று... அதில் மனம் நொந்து இருந்தவனை அவள் தான் தேற்றினாள்...

'உனக்கு நான் குழந்தை... எனக்கு நீ குழந்தை...' என்று...

ஆனாலும் அவன் மனதை அவ்வளவு எளிதில் சமாதானப்படுத்த முடியவில்லை... அவன் படும் அவஸ்தையைக் காண சகிக்காது அவள் தான் சோதனைக் குழாய் மூலம் கருத்தரிக்கும் முறையைப் பற்றிக் கூறினாள்... அதற்கு அவனும் சரியென்று சம்மதித்தான்...

எல்லாம் நன்றாகத் தான் சென்று கொண்டிருந்தது அதை அவன் ஜஸ்வந்த்திடம் சொல்லும் வரை... அதைக் கேள்விப்பட்டு அவன் ராஜ வம்ச கௌரவம் என்னவாவது என்று ரிஷ்வந்த்தை பார்த்துச் சத்தம் போட்டான்...

என்ன செய்வது என்று யோசித்த போது தான் அவர்களது குடும்ப மருத்துவ நண்பர் அதே ராஜ வம்சத்தின் விந்தணு மூலம் கருத்தரிக்கச் செய்து விடலாம் என்று கூறி அவனைத் தேற்ற, அதைக் கேட்டு அவன் சரணாகதி அடைந்தது அவன் சகோதரனிடத்தில்...

இதைப் பற்றி இளையவனான யஷ்வந்த்திடம் பேச முடியாது... அதனால் அண்ணனிடம் பேசினான்... அவனும் ஒத்துக் கொண்டான்... இதை எல்லாம் ரிஷ்வந் தீபிகாவிடம் சொல்லாமல் மறைத்து விட்டான்... ஏனெனில் ஒரு வீட்டில் இருப்பதால் சகோதரனை பார்க்கும் போது அவளுக்குச் சங்கடமாக இருக்கும் என்று.. அது தான் அவன் செய்த தவறு...

அதன் விளைவு செயற்கை முறையில் தீபிகா கருத்தரித்தாள்... அழகான ஆண் குழந்தையும் பிறந்தது... அது அப்படியே ஜஸ்வந்த் போலவே இருந்தது ஜாடையில்... அதைத் தீபிகாவும், ரிஷ்வந்த்தும் கவனிக்கத் தவறினர்...

ஆனால் ஜஸ்வந்த் அதைக் கவனித்தான்... அந்தக் குழந்தையைத் தன் குழந்தையாக எண்ண ஆரம்பித்தவன் மனம் மெல்ல மெல்ல அதைப் பெற்றவளையும் தன்னவளாக எண்ணத் துவங்கியது... அந்தச் சமயத்தில் தான் யஷ்வந்த் ஸ்மிருதியை காதலித்து வீட்டில் பிரச்சினை ஏற்படுத்தி இருந்த நேரம்... அதில் ரிஷ்வந்த்தின் மனதை திசை திருப்பிய ஜஸ்வந் தன் மனதின் இச்சையைத் தீபிகாவிடம் தீர்க்க நாள் பார்த்து காத்துக் கொண்டு இருந்தான்...

அதற்கும் ஒரு நாள் சீக்கிரத்தில் தானாக அமைந்தது... பாலில் மயக்க மருந்தை கலக்கி தீபிகாவிடம் கொடுத்த ஜஸ்வந்த் அவள் மயங்கிய பின் தனது உடல் இச்சையைத் தீர்த்துக் கொண்டான்... மயக்கம் தெளிந்து அழுது கரைந்தவளிடம் அவளது குழந்தையைப் பற்றிக் கூறி, 'இனி நான் தான் உன் கணவன்' என்று அவன் கூறிய போது பேதையவள் பத்ரகாளியாக மாறி போனாள்...

கையில் கிடைத்ததை எல்லாம் எடுத்து அவள் அவன் மீது வீசியெறிய அவனோ தப்பித்து வெளியில் வந்தவன் தம்பியிடம் அவளைப் பற்றித் தவறாகப் போட்டுக் கொடுத்தான்... அதில் ரிஷ்வந்த் மனைவியைக் கண்டிக்க மனம் வெறுத்து போனாள் அவள்...

அன்றிலிருந்து தான் பெற்ற குழந்தையைக் கூடக் கவனிக்க மறந்தாள்... அதற்குப் பாலூட்டும் போது கூட அந்தக் காமுகனின் முகம் தான் அவள் நினைவில் எழுந்தது... அதில் ஆர்ப்பாட்டம் செய்து குழந்தையைத் தூக்கி எறிந்தாள்... மனநிலை பாதிக்கப்பட்டவள் போல் நடந்து கொண்டவளை அணைத்து ஆறுதல் சொல்லி தேற்றத்தான் யாரும் இல்லாமல் போயினர்... அவளது கணவன் உட்பட...

இதைத் தனக்குச் சாதகமாக்கி கொண்டு அவளை மீண்டும் நெருங்க முயன்ற ஜஸ்வந்த்தை எல்லோர் முன்னும் அவள் அசிங்கப்படுத்த அதிலிருந்து அவள் வழியில் அவன்

குறுக்கே வரவில்லை... ஏனெனில் அவன் பெற்றிருக்கும் நற்பெயரை காப்பாற்ற வேண்டாமா... அதனால் தான்...

அதன் பின் தான் அவள் தன் வேதனையை மறக்க மதுவை நாடத் துவங்கியது... அது இன்று வரை தொடர்கிறது...

ஒரு நாள் அந்த அரக்கன் இறந்து போனான்... ஆனாலும் அவன் ஏற்படுத்திய காயம் அவள் மனதில் வடுவாய் இன்னமும் இருக்கிறது... தன்னைப் புரிந்து கொள்ளாத கணவனைக் கண்டு ஆத்திரம் வந்தது... அதனால் தான் ஜஸ்வந்த்தை ஒன்றும் செய்ய முடியாத ஆத்திரத்தை எல்லாம் கணவனிடத்தில் காட்டினாள்... இன்றும் காட்டி கொண்டு இருக்கிறாள் அவள்...

கட்டிய கணவனையும், பெற்ற மகனையும் சொந்தம் கொண்டாட முடியாமல் பாவையவள் தனித்தீவில் தனித்து வாழ்ந்து வருகிறாள் மனத்தவிப்புடன்...

"உனக்கு நான் நியாயம் செய்யாமல் இருப்பேனா தீபி..." என்றவனை அவள் விழி மலர்த்திப் பார்த்தாள் ஆச்சிரியத்துடன்...

"அவனுக்கு நடந்த விபத்து எப்படி ஏற்பட்டதுன்னு உனக்குக் கொஞ்சம் கூடவா யோசிக்கத் தோணவில்லை..."

"அப்போ... நீங்க... நீங்க..." கேட்கும் போதே பெண்ணவளின் தேகமும், குரலும் நடுங்கியது...

"அன்றைக்கு அவன் உன்னிடம் தவறாக நடக்க முயற்சித்த போது நான் பார்த்துவிட்டேன்..." என்று வேதனையுடன் கூறியவன்,

"நல்லவேளை நான் வரும் முன் நீயே உன்னைக் காப்பாத்திக்கிட்ட இல்லைன்னா...?" அதை நினைக்கும் போதே அவனது நெஞ்சு பதறியது...

"அப்பவே அவனுக்கு நாள் குறிச்சிட்டேன்... அன்னையில் இருந்து மூன்றாவது நாள் அவனைப் பரலோகம் அனுப்பிட்டேன்... வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இது கொலை போல் தான் தெரியும்... ஆனால் என்னைப் பொருத்தவரையில் ஒரு அரக்கனை விபத்தின் மூலம் வதம் செய்ததாகத் தான் நான் எண்ணுகிறேன்..." என்றவன் மனைவி அருகில் வந்து அவளது கையைப் பற்றிக் கொண்டு,

"நீ சொன்னப்பவே நம்பி இருந்திருக்கணும்.. நம்பாம இருந்தது என் தவறு தான்... என்னை மன்னித்து விடு... இந்த மன்னிப்பை கேட்க தான் நான் உன்னிடம் பேச முயற்சித்தது... ஆனால் நீ என்னிடம் பேசவே விரும்பவில்லை..."

அவனது மன்னிப்பில் அவளுக்கு அழுகை வந்தது... அவன் ஒரு தவறு செய்தால், அவளும் பல தவறுகள் செய்தவள் அல்லவா...

"நானும் தவறு செய்தவள் தான்... என்னை மன்னித்துவிடுங்கள்..."

"நீ தவறு செய்தால் தானே மன்னிப்பதற்கு..." என்றவனைத் திகைத்து போய் அவள் பார்க்க...

"என் மனைவியைப் பற்றி எனக்குத் தெரியாதா தீபி... வேறொரு பெண்ணாக இருந்திருந்தால் அண்ணனிடம் இருக்கும் சொத்திற்கு அவனுக்கு உடன்பட்டு இருப்பாள்... ஆனால் நீ அவனை எதிர்த்து நின்றதிலேயே தெரியலையா நீ ஒரு கற்புக்கரசி என்று... உன்னைத் தொட என்னால் மட்டுமே முடியும்..." என்று கர்வமாய்ச் சொன்னவன்,

"என்னைப் பழிவாங்குவதாய் நினைத்துக் கொண்டு உன் பெயரையும் சேர்த்து கெடுத்துக் கொண்டு இருக்கிறாயே என்ற கவலை தான் எனக்கு அதிகம் இருந்தது... அந்தக் கோபத்தில் தான் நான் உன்னைச் சத்தம் போட்டது..."

அவனது வார்த்தைகள் இதமாக இருந்த போதும்... நெருஞ்சி முள்ளாய் பழைய நினைவு அவள் மனதை குத்தி கிழித்தது...

"எப்படி இருந்தாலும் நான் கெட்டு போனவள் தானே..." என்று தேம்பியவளை அவன் ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்...

"யார் சொன்னது...? என் மனைவி எனக்குப் புனிதமானவள் தான்..." என்றான் ரிஷ்வந்த் புரிதலோடு...

கணவனின் ஆறுதல், புரிதலை விட வேறு யாரின் ஆறுதலும், புரிதலும் வேண்டும் பெண்ணவளுக்கு... இந்தச் சிறு புரிதல் தான் பல கணவன், மனைவியை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது...

"இப்போ எதுக்கு என்னைத் தேடி வந்த...?"

பல வருடங்களாய் தங்களது அறை பக்கம் எட்டி பார்க்காத மனைவி இன்று எட்டிப்பார்த்து இருக்கிறாள் என்றால் விசயம் பெரியது என்றே நினைத்தான்...

"அது தம்பிக்கு இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணமாம்..." அதைக் கேட்டு அவனது முகம் இறுக்கமாய் மாறிப் போனது...

கணவனின் முக மாறுதல் கண்ணில் பட்ட போதும் அவள் சொல்ல வந்ததைச் சொல்லத்தான் செய்தாள்...

"அவர் கல்யாணத்துக்குப் போகணும்... அப்படியே அவரோட மனைவி, மகளை இங்கே அழைச்சிட்டு வரணும்..."

"நீ எதைக் கேட்டாலும் நான் செய்யத் தயாரா தான் இருக்கேன்... ஆனால் இது...?" அவனால் இந்த விசயத்தை ஜீரணிக்கவே முடியவில்லை...

"அவளும் ஒரு பெண் தானே... எத்தனை நாட்கள் தான் சின்னப் பெண் குழந்தையை வைச்சிக்கிட்டு கஷ்டப்படுவாள்... பாவம் அவள்..." என்று ஸ்மிருதிக்காகப் பேசியவள் கடைசி முயற்சியாகக் கணவனைக் கண்டு இறைஞ்சுதலாய்,

"ப்ளீஸ் எனக்காக..." என்று கெஞ்சி கேட்க...

இப்போது மனைவிக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தது அவனது மனது... ஆனாலும்...???

"நம்ம வாழ்க்கை தான் இப்படியாகி விட்டது... தம்பியாவது சந்தோசமா இருக்கட்டுமே..."

அதில் வேதனையுடன் அவள் முகம் பார்த்தான் அவன்... மனதுக்குப் பிடித்த மனைவி அருகில் இருந்த போதும் பாராமுகமாய் வாழ்வது என்பது எவ்வளவு கொடியது என்பதை அனுபவித்துக் கொண்டு இருப்பவன் தானே அவன்... இப்போது தம்பியின் மனநிலை அவனுக்குமே புரிவதாய்...

"எனக்கு இதில் கொஞ்சமும் விருப்பம் இல்லை... ஆனாலும் உனக்காக நான் சம்மதிக்கிறேன்..." என்ற கணவனை மகிழ்ச்சியுடன் பார்த்தாள் அவள்...

அதில் அவளையே குறுகுறுவெனப் பார்த்தவன், "உனக்குப் பிடித்ததை நான் செய்தது போல் எனக்குப் பிடித்ததை நீ எப்போது செய்யப் போகிறாய்.." சிரித்தபடி கேட்ட கணவனைக் கண்டு அவளது முகம் மாறியது...

சட்டென்று அந்த அறையை விட்டு அவள் வெளியேற முயல, அவன் அவளை எட்டிப்பிடித்தான்...

"ஏன்...?" என்றான் ஒற்றை வார்த்தையில் ஆயிரம் அர்த்தத்தைத் தேக்கி...

"ஏன்னு உங்களுக்குத் தெரியாதா...?"

"மறதி நல்ல மருந்துன்னு நான் சொன்னதா நியாபகம்..."

"இது நான் சாகும் வரை மறக்காது..." என்றவளின் கண்களில் கண்ணீர் தாரகை...

"மறக்கணும்... நான் மறக்க வைப்பேன்..." என்று உறுதியான குரலில் கூறியவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்...

*************************

மாலையில் கோவிலுக்குச் சென்று கடவுளை வழிபட்டு விட்டுக் காரில் வந்து கொண்டிருந்தாள் சுபிக்ஷா... மனம் நிறைந்த சந்தோசமான வாழ்க்கை அவளது முகத்தில் அத்தனை பூரிப்பை அளித்திருந்தது...

'பேபி, பேபி' என்று வார்த்தையால் மட்டுமல்லாது செயலாலும் தன்னைக் குழந்தையாய் பாராட்டி சீராட்டும் கணவனைக் கண்டு அவளுக்குப் பிரமிப்பாய் இருக்கும் அதே சமயம் அவனது அன்பில் முற்றிலும் கரைந்து தான் போனாள் சுகமாய்...

திகட்ட திகட்ட அவன் அளித்த நேசத்தில் அவள் திக்குமுக்காடித்தான் போனாள்...

கணவனின் நினைவில் முகத்தில் புன்னகை அரும்பச் சுற்றுப்புறம் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தவள் கண்ணில் சற்று தள்ளி நின்றிருந்த கணவனது கார் தென்பட்டது... சந்தோசமாய் அவனைப் பார்க்கும் போது அவனது தோளில் சாய்ந்திருந்த அம்ரிதாவும், அவளை மடியில் வைத்திருந்த ஸ்மிருதியும் சேர்ந்து தரிசனம் தந்தார்கள்...

அம்ரிதாவை அவள் பார்த்தது இல்லை தான்... ஆனாலும் அவள் அம்ரிதா தான் என்று சுபிக்ஷாவின் மனதில் ஒரு குரல் ஓங்கி ஒலித்தது...

ஜீவாவின் கை பரிவுடன் அம்ரிதாவின் தலையை வருடி கொடுத்துக் கொண்டிருந்தது... மூவரையும் ஒரு குடும்பமாய்ப் பார்த்தவளுக்கு அவளையும் அறியாது கண்களில் கண்ணீர் தேங்கியது...

வீட்டிற்கு வந்தும் அதே மனநிலை தான் நீடித்தது அவளுக்கு... சாப்பிட கூடப் பிடிக்காமல் அறைக்குச் சென்று படுத்து கொண்டாள்...

வெகு நேரம் கழித்து வீடு வந்த ஜீவா மனைவி இப்படிப் படுத்திருப்பதைக் கண்டு அவள் அருகில் வந்தான் பதட்டத்துடன்... இதுநாள் வரை அவள் இந்த நேரத்தில் இப்படிப் படுத்து இருந்தது இல்லை...

இப்போது தான் அம்ரிதாவிற்குக் காய்ச்சல் என்று மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று காண்பித்துவிட்டு வந்திருந்தான்... யஷ்வந்த் வேலை விசயமாக வெளியூர் சென்றிருந்ததால் அவனே அழைத்துச் சென்றான்...

இதில் மனைவி வேறு இப்படிப் படுத்திருக்கவும் சற்று பயந்து தான் போனான்...

"பேபி... என்ன செய்யுது...?" அவளது நெற்றியில் கை வைத்துப் பார்த்தான் பதற்றத்துடன்...

அதில் அவன் புறம் திரும்பியவள் அவன் எதிர்பாரா விதமாய் அவனை இறுக அணைத்து அவனது முகத்தில் வாரி வாரி தனது முத்திரைகளைப் பதித்தாள் ஆவேசமாக... தனது கைப்பொருளை இறுக பற்றிக் கொள்ளும் சிறு குழந்தையின் செயல் போலிருந்தது அவளது செயல்...

அவளது செயலில் அவள் நன்றாக இருப்பதை உணர்ந்தவன் மனதில் உல்லாசம் எழ, "ஹேய் பேபி... சாப்பிட போக வேண்டாமா..." என்று அவன் கேட்ட போதும் அவளது செயலுக்கு உடன்படத்தான் செய்தான்...

"ம்ஹூம் வேண்டாம்..." என்றவள் அவனுடன் ஒன்றியவாறு...

"எனக்கு நீங்க தான் வேண்டும்..." என்றாள் தணியாத தாபத்துடன்...

"என்னது...?" இன்ப அதிர்ச்சியுடன் பார்த்தவனின் இதழ்களின் மீது தன் இதழ்களைப் பொருத்தினாள் பெண்ணவள் மென்மையாய் பின் வன்மையாய்...

அவளது செயலில் தேனுண்ட வண்டானான் அவன்... அதன் பின் அவன் அவளை விடவே இல்லை... இன்றோடு உலகம் முடிந்து விடுவது போல் அவளும் அவனை இறுகப்பற்றிக் கொண்டு அவனுடன் உயிராய், உணர்வாய் கலந்தாள்...

அவன் தன்னை விட்டு போய்விடுவேனோ என்ற பயமே அவளை அவனுள் புதையச் சொல்லி தூண்டியது... மீண்டும் மீண்டும் தான் வேண்டும் என்று சொன்ன மனையாளின் இந்த அணுகுமுறை அவனுக்குப் புதிதாய் இருந்த போதும் அது அவனுக்குப் பிடித்த விதத்தில் இருந்ததால் அவளின் விருப்பத்திற்கு அவனும் இசைந்து கொடுத்தான்...

கூடல் முடிந்து தன்னை விட்டு விலகிய கணவனை விலக முடியாதபடி இறுக அணைத்து கொண்டாள் அவள்...

"என்னாச்சு பேபி..." என்று சிரித்தபடி அவளை அணைத்துக் கொண்டு படுத்தவன் அவளது தலையைக் கோதி கொடுத்தான் ஆறுதலாய்...

சிறிது நேரம் மௌனமாய் இருந்தவள் பின் அவனை நிமிர்ந்து பார்த்து, "ஐ லவ் யூ மாமா..." என்றாள் தனது

மனதின் ஒட்டு மொத்த காதலையும் அந்த வார்த்தைகளில் தேக்கி...

"ஹேய்... என்ன சொல்ற...?" விழிகள் இரண்டும் தெறித்து விழுந்துவிடும்படி அகல விரித்து ஆச்சிரியப்படவன் அடுத்த நொடி அவளை அள்ளி எடுத்து,

"மை ஸ்வீட் பேபி..." என்று கொஞ்சி கொஞ்சி கொண்டாடினான் தன்னவளை...

"மாமா... எனக்கு நீங்க வேண்டும்..." கணவனது காதில் கிசுகிசுப்பாய் உரைத்தவளை கண்டு அவன் கிறங்கித்தான் போனான்...

அதன் பின் மொத்தமாய் அவளைக் கொள்ளை அடித்தான் மெதுமெதுவாய்...

எல்லாம் முடிந்து அயர்ந்து உறங்கும் மனைவியைப் பார்த்த ஜீவாவிற்கு அந்த வானத்தை வசப்படுத்தியது போன்று ஒரு பரவசம்...

நாட்கள் அதன் பாட்டிற்கு நகர்ந்து சென்றது வேகமாய்... அன்று காலையில் இருந்து மிகுந்த பரபரப்பாய் காணப்பட்டான் ஜீவா... மனைவியிடம் 'இந்தப் புடவை கட்டு, இந்த நகையைப் போடு...' என்று படுத்தி எடுத்துவிட்டான்...

எதற்கு என்று புரியாவிட்டாலும் அவளும் அவன் சொன்னதை அப்படியே செய்தாள்... அலங்காரம் செய்து கொண்டு வந்தவளை திருப்தியுடன் பார்த்தவன்,

"இப்ப ஓகே... போகலாம்..." என்று அவளை அழைத்துக் கொண்டு சென்றான்...

எங்கே என்று கேட்க தோன்றிய நாவை கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தாள் அவள்... ஒரு

கோவில் முன் சென்று காரை நிறுத்தியவன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்...

அங்குப் போனதும் தான் அவளுக்கு எல்லாம் புரிந்தது...

அங்கு மணமக்களாக யஷ்வந்த், ஸ்மிருதி இருப்பதைக் கண்டு இனிமையாக அதிர்ந்தாள்... அப்போது ஜீவா அங்கிருந்தவர்களை அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்...

"இது என் நண்பன் யஷ்வந்த், அம்ருவோட அப்பா... இது அவனின் மனைவி ஸ்மிருதி... இது ஹர்ஷிதா... இவங்க இரண்டு பேரும் என் தங்கைகள்... இது தீபிகா... யஷூவோட அண்ணி... எனக்கும் அண்ணி..."

அவனுடன் பின்னி பிணைந்திருந்த புதிர்கள் ஒவ்வொன்றையும் அழகான வார்த்தைகள் மூலம் அவளுக்கு அழகாக எடுத்து சுட்டிக்காட்டி விட்டான் அவளது கணவன்...

அதில் சுபிக்ஷாவின் கண்களில் கண்ணீர் மல்கியது... மனதிற்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

சந்தோசத்துடன் கணவனை ஏறிட்டு பார்த்தவள், "தேங்க்ஸ்..." என்று முணுமுணுக்க...

"தேங்க்ஸ் இப்படிச் சொல்லக் கூடாது பேபி..." என்று அவன் கண்சிமிட்டி சிரிக்க...

கண் இமைக்கும் நேரத்தில் அவன் உயரத்திற்கு எம்பியவள் அவனது கன்னத்தில் அழுத்தமாய்த் தனது இதழை பதித்து அதே வேகத்தில் அவனை இறுக அணைத்து அவனது நெஞ்சில் முகம் புதைத்தாள் நிறைவாக, மகிழ்ச்சியாக...!!!

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 20

மனைவியின் செயலில் முதலில் திகைத்துப் பின் பிரமித்து அடுத்து உள்ளத்தில் எழுந்த பெரும் உவகையோடு அவளை மென்மையாக அணைத்துக் கொண்டான் ஜீவா... இப்படிச் சட்டென்று தனது உள்ளத்து உணர்வுகளை அவ்வளவு எளிதில் வெளிக்காட்டி விட மாட்டாள் சுபிக்ஷா... அப்படிப்பட்டவள் இப்போது இது போல் நடந்து கொள்கிறாள் என்றால் இந்த விசயம் அவளது மனதை எந்தளவுக்கு வாட்டி வதைத்திருக்க வேண்டும்...

"இப்போ உனக்குச் சந்தோசமா பேபி..." மனைவியிடம் அவன் கிசுகிசுத்தான் அவளின் மனதை அறிந்தவனாய்...

அன்று அம்ரிதா அவனை 'டாடி' என்று அழைத்ததைத் தாங்க முடியாதவள், அதன் பின் ஸ்மிருதி பற்றிப் பேசிய போது கண்ணீர் வடித்தவள் அவனது மனையாள்... அதனால் தான் அவளின் மனத்துயிரை தான் துடைத்தெறிந்ததில் அவனுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது...

அவள் அவனுக்குக் கொடுத்த ஒற்றைக் கன்னத்து இதழொற்றலுக்காக வேண்டியே அவளை இன்னமும் இன்னமும் சந்தோசமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றே அவனுக்குத் தோன்றியது...

ஜீவா தன் மனைவியுடன் வந்ததில் இருந்து யஷ்வந்த் அவனைத் தான் கவனித்துக் கொண்டு இருந்தான்... முதலில் சுபிக்ஷாவை பார்த்து அவன் அதிரத்தான் செய்தான்...

சுபிக்ஷாவின் புறத்தோற்றம் அவனைப் பெரிதும் ஏமாற்றம் அடையச் செய்தது... தன் நண்பனின் அழகிற்கு அவள் சற்றும் ஈடு இணையில்லை என்றே அவனுக்குத் தோன்றியது... அவனது அந்த எண்ணம் எல்லாம் ஜீவாவின்

மனைவி மீதான நேசத்தைக் கண்டதும் அப்படியே அழிந்துவிட்டது... நண்பனை எண்ணி அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

யஷ்வந் தன் நண்பனை நண்பனாகத் தான் பார்த்தான்... மறந்தும் அவன் ஜீவாவை தன் தங்கையுடன் இணைத்து யோசிக்கவில்லை... அது போல் சுபிக்ஷா மீது எந்தக் கோபமும் வரவில்லை...

"ஜீவா... நாங்க எல்லாம் இங்கே தான் இருக்கிறோம்..." என்று யஷ்வந்த் கிண்டலாய் குரல் கொடுக்க...

அதில் சுபிக்ஷா நாணியவளாய் கணவனை விட்டு விலகி நின்றாள்... ஆனால் அவளை மீண்டும் தன் கையணைவில் கொண்டு வந்த ஜீவா,

"என் மனைவி, என் விருப்பம்... நீ ஸ்ருதியை மட்டும் கவனி..." என்று நண்பனை பார்த்து கேலியாய் கூறியவன், "என்னம்மா ஸ்ருதி... இதை எல்லாம் நீ கவனிப்பது இல்லையா..." என்று ஸ்மிருதியிடம் வேறு கேட்டு நண்பனை போட்டுக் கொடுத்தான்...

அதைக் கேட்டு ஸ்மிருதி புன்சிரிப்புடன் யஷ்வந்த்தையும், ஜீவாவையும் பார்த்துக் கொண்டு இருந்தாள்... அவள் மனதில் இப்போது எந்தவித பொறாமையும் இல்லை... அதனால் அவளால் சுபிக்ஷாவை சாதாரணமாகப் பார்க்க முடிந்தது...

ஆனால் ஹர்ஷிதாவால் அப்படிச் சாதாரணமாக இருக்க முடியவில்லை... ஜீவா அவளைப் பார்த்துத் தங்கை என்று கூறியது கேட்டு அவளது மனம் குமுறிக் கொண்டு வந்தது... அன்றும் அந்த விருந்தில் வைத்து அப்படித்தான் சொன்னான்... இன்றும் அப்படியே சொல்கிறான்...

'எத்தனை வருடங்களாக இவனை நான் காதலிக்கிறேன்...? இப்போது வந்து 'நீ என் தங்கை மாதிரி' என்றால் நான் என்

மனதை மாற்றிக் கொள்ள முடியுமா...? அவன் மனைவி முன் பெரிய நல்லவன் மாதிரி நடிக்கிறான்... இந்த வார்த்தையை அப்போதே சொல்லியிருந்தால் நானும் என் மனதை இந்தளவுக்கு அலைப்பாய விட்டிருக்க மாட்டேனே... ஏன்டா அப்பவே சொல்லாம விட்ட...? நீ என்னை ஏமாத்திட்ட ஜீவா...' மனதுக்குள் அப்படி ஒரு துக்கம் எழுந்தது அவளுக்கு...

ஜீவா திருமணத்திற்குப் பிறகு தான் இந்த மாதிரி உறவுகளின் அருமையைப் புரிந்து கொண்டான் என்பது அவளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை...

அவன் வாழ்க்கையில் அம்ரிதா வந்த பிறகு பெண்களை மதிக்கக் கற்றிருந்தாலும், சுபிக்ஷா வந்த பிறகு தான் அவர்களின் அருமையைப் புரிந்து கொண்டு இருக்கிறான்... அது தெரியாமல் அவள் தன் மனதில் ஏதேதோ எண்ணி குழம்பி கொண்டிருந்தாள்...

"டாடி... இவங்க யாரு...?" மெதுவே ஜீவா பக்கம் வந்த அம்ரிதா சுபிக்ஷாவை கண்டு தயக்கத்துடன் கேட்டாள்...

"இவங்க உன் மம்மி..." சிறிதும் தயக்கம் இல்லாமல் கூறிய ஜீவா சின்னவளை தூக்கி வைத்துக் கொண்டான் பாசத்தோடு...

"அப்படித்தானே சுபி..." என்று மனைவியிடத்தில் கேட்க வேறு செய்தான்...

அதை ஆமோதித்துச் சிரித்த சுபிக்ஷா மனதில் எழுந்த நிம்மதியுடன் அம்ரிதா கன்னத்தில் முத்தமிட்டாள்...

"ஹேய் எனக்கு அப்பா, அம்மா, டாடி, மம்மி எல்லோரும் இருக்காங்க..." என்று சந்தோசக் கூச்சலிட்டு ஆர்ப்பரித்தாள் சின்னவள்...

வெறும் வார்த்தையால் மட்டுமே யஷ்வந்த், சுபிக்ஷாவை அம்ரிதா தனது உறவாக அங்கீகரித்தாலும், மனதால் ஜீவா,

ஸ்மிருதியை தான் அவள் தனது உணர்வுப்பூர்மான உறவாக எண்ணினாள்...

அவளாய் வளர்ந்து இந்த உறவுகளைப் புரிந்து கொள்ளும் வரை சின்னவளை வீணே குழப்ப பெரியவர்களுக்கும் மனமில்லை... எத்தனை குழந்தைகள் ஜீவாவுக்குப் பிறந்தாலும் அம்ரிதாவும் அவனது குழந்தை தான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை...

அந்த நேரம் ரிஷ்வந்த் அங்கு வந்து சேர்ந்தான்... சரியாய் முகூர்த்த நேரத்திற்கு மட்டுமே வந்தான் அவன்... ஜீவாவை அங்குக் கண்டதும் அவன் முறைத்துக் கொண்டு நின்றான்...

அடுத்தச் சில நிமிடங்களில் வட இந்தியர்கள் முறைப்படி ஸ்மிருதி கழுத்தில் கருகணி மாலை அணிந்து, நெற்றியில் குங்குமம் இட்டு, அக்னியை வலம் வந்து தன்னில் பாதியாய், தன்னுயிராய் அவளை ஏற்றுக் கொண்டான் யஷ்வந்த்... ஸ்மிருதியும் மனமகிழ்வுடன் அவனைத் தனது பதியாக ஏற்றுக் கொண்டாள்...

திருமணம் முடிந்து கோவிலை விட்டு வெளியில் வரும் போது தீபிகாவை பார்த்த ஜீவா சங்கடத்துடன் புன்னகைக்க...

"உன் மேல் எந்தத் தவறும் இல்லை ஜீவா... இவரை வெறுப்பேற்றத்தான் நான் உன்னிடம் பழகத் துடித்தேன்... தவறு எல்லாம் என் மேல் தான்..." என்றாள் வருத்தத்துடன்...

அதைக் கேட்டுக் கொண்டிருந்த ரிஷ்வந்த் ஜீவாவை பார்த்து அலட்சியமாய், "நீ என் மனைவி கூடச் சேர்ந்து வந்தால் நான் அவளைத் தப்பா நினைச்சிருவேனா...? என் தீபியை பத்தி எனக்கு நல்லா தெரியும்..." என்றான் சிறு கோபத்துடன்...

ஜீவா ரிஷ்வந்த்திற்குப் பதில் சொல்லவில்லை என்றாலும் அவன் பேசியது கேட்டு இவனுக்குச் சிறு எரிச்சல் எட்டிப்பார்த்தது என்னவோ உண்மை... இருவருமே இன்னமும் தொழிலில் எதிரிகள் தான்... அதனால் இருவருக்குமே மனதுக்குள் கோபம் கனன்றாலும் வெளியில் அதைக் காட்டிக் கொள்ளவில்லை...

அவர்கள் பேசியது அனைத்தும் இந்தியில் இருந்ததால் சுபிக்ஷாவிற்கு அதன் விபரம் முழுமையாகத் தெரியவில்லை... ஆனாலும் கணவனைத் தவறாக நினைத்து பார்க்க தோன்றவில்லை... அதனால் அவன் கரம் கோர்த்து புன்னகையுடன் நின்றிருந்தாள்...

ரிஷ்வந்த், தீபிகா விலகி சென்றதும் ஹர்ஷிதா இவர்களை நோக்கி வந்தாள்... அடக்கப்பட்ட அழுகையில் அவளது முகம் ஜிவுஜிவெனச் சிவந்திருந்தது... வந்தவள் ஜீவாவை கண்டு படபடவென ஆங்கிலத்தில் பொரிய துவங்கினாள்... ஒருவேளை சுபிக்ஷாவிற்குப் புரிய வேண்டும் என்று எண்ணினாளோ...

"இப்போ தான் நான் உனக்குத் தங்கை மாதிரி தெரிகிறேனா ஜீவா... இது ஏன் முதலில் உனக்குத் தோணாம போச்சு...? இப்போ கல்யாணமானதும் என் கிட்ட இப்படிச் சொல்லுற... எத்தனை வருச காதல் என்னது தெரியுமா...? அத்தனையும் தங்கைங்கிற ஒரு வார்த்தையில் கொன்னுட்ட... என்னை நம்ப வச்சு கழுத்தறுத்துட்ட... யூ ஆர் ச்சீட்டர்... யூ ஆர் லயர்..."

ஆத்திரத்தில் அவள் சற்று அறிவிழந்து தான் போனாள்... பொதுவாக அவள் அப்படிப் பேசுபவள் கிடையாது... ஆனால் காத்திருந்ததன் வலி அவளை அப்படிப் பேச வைத்துவிட்டது...

அடக்கப்பட்ட குரலில் பொரிந்து தள்ளியவள் தனது காரிலேறி கிளம்பிச் சென்றுவிட்டாள்... புதுமணத்

தம்பதிகளான தனது சகோதரனையும், அவனது மனைவியையும் அவள் சிறிதும் கண்டு கொள்ளவில்லை...

ஜீவாவிற்கு ஹர்ஷிதா பேசியது எல்லாம் பெரிதாகத் தோன்றவில்லை... இவ்வளவு ஏன் அவளின் ஒரு வார்த்தை கூட அவனின் மனதை பாதிக்கவில்லை... ஏனெனில் அவனைப் பொருத்தவரை ஹர்ஷிதாவிற்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவம் அவ்வளவு தான் என்றே நினைத்தான்...

ஆனால் அவனின் பயமெல்லாம் தன் மனைவியை நினைத்து தான்... ஹர்ஷிதா சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்த சுபிக்ஷாவின் தோள் தொட்டு தன் புறம் திருப்பியவன்,

"பேபி... அவள் ஏதோ புரியாம பேசுகிறாள்..." தயக்கத்துடன் கூறியவனைக் கண்டு சட்டென்று புன்னகைத்தவள்,

"உங்களை விரும்பாம யாராவது இருக்க முடியுமா...? ஆனால் இந்த லக்கி ப்ரைஸ் அடித்தது எனக்கு மட்டும் தான்..."

தன் சுட்டு விரலை கணவனை நோக்கி நீட்டியபடி அவனைப் போல் கண்சிமிட்டி தலைசாய்த்து புன்னகைத்தாள் பாவையவள் மந்தகாசமாய்... அதில் அவன் மனதில் பெரும் நிம்மதி எழுந்தது...

"ஆனால் உன்னைப் போல் பரந்த மனப்பான்மை எல்லாம் எனக்குக் கிடையாது பேபி... உன்னை எவனாவது சும்மா பார்த்தால் கூட அவனைக் கொன்னுருவேன் கொன்னு..."

மையலுடன் மனைவியைப் பார்த்தபடி கூறியவனின் கண்களில் அத்தனை தீவிரம் இருந்தது... அவனது வார்த்தையில் அத்தனை உரிமையுணர்வு இருந்தது...

"ச்சு... போங்க மாமா... என்னைப் போய் யார் பார்க்க போறா...? சும்மா எதாவது பேசணும்ன்னு பேசிக்கிட்டு..."

அறியாமையுடன் பேசிய மனைவியைப் பார்த்த ஜீவாவிடம் நிச்சயம் அறியாமை இல்லை... பெரும் யோசனையே குடியிருந்தது அவனது முகத்தில்...

அதற்குள் யஷ்வந்த், ஸ்மிருதி அங்கு வர அவர்களது பேச்சுத் தடைப்பட்டது... பிறகு மணமக்களை அழைத்துக் கொண்டு ரிஷ்வந்த் வீட்டிற்குச் சென்றனர் எல்லோரும்...

இரவு வரை அங்கே இருந்து விட்டு தான் திரும்பினர் ஜீவாவும், சுபிக்ஷாவும்... இருவரும் தங்களைச் சுத்தப்படுத்திக் கொண்டு வந்து படுக்க ஆயத்தமானார்கள்... எப்போதும் தன்னை நாடும் கணவன் இன்று பேசாது அணைத்துக் கொண்டு படுத்திருப்பதைக் கண்டு அவனைக் கேள்வியாய் ஏறிட்டு பார்த்தாள் சுபிக்ஷா...

அவள் தன்னைப் பார்ப்பது உணர்ந்து அவளை நோக்கி குனிந்த ஜீவா, "அன்னைக்கு நீ முத்த மழை பொழிஞ்சதுக்கும், அபார ஒத்துழைப்பு கொடுத்ததுக்கும் என்ன காரணம் பேபி...? பொதுவா நீ அப்படி நடந்துக்கிற ஆள் கிடையாது... ஆனா இன்னைக்கு நடந்ததைப் பார்க்கும் போது அன்றும் உன் மனதை ஏதோ பாதித்து இருக்கிறது இல்லையா...?"

அவன் கேட்டதும் தயங்கி, தயங்கி அவள் அன்று பார்த்ததை அப்படியே அவனிடத்தில் உரைத்தாள்... அதைக் கேட்டு வாய்விட்டு சிரித்தவன்,

"என் வாழ்க்கையில் வந்த முதல் பெண்ணும் நீ தான்... கடைசிப் பெண்ணும் நீயாகத் தான் இருப்ப... இந்த ஜீவா உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் ஏறெடுத்து பார்க்க மாட்டான்..." என்றவன் அவளது நெற்றியில் இதழ் பதித்தான் ஆசையாக...

"ம்... ம்... இப்ப புரியுது..." என்றாள் அவள் புரிதலுடன்...

"நான், யஷூ, ஸ்மிருதி அண்ணன் வருண் மூணு பேரும் ஸ்கூலில் இருந்தே நல்ல பிரெண்ட்ஸ்... அப்போ நான் சென்னையில் இருந்து மும்பை வந்த புதுசு..."

அவன் அதைச் சொல்லும் போதே இருவருக்கும் அன்று நடந்த சம்பவத்தின் தாக்கம் மனதில் எதிரொலிக்க அமைதியாய் இருந்தனர்... பின் இருவருமே சொல்லி வைத்தார் போன்று ஒருவரை ஒருவர் பார்த்தனர்...

அந்த அறியாத வயதில் 'மாமா' என்று அழைத்ததற்காக அவன் அளித்த தண்டனையை அனுபவித்தவளுக்கு அன்று வலித்தது உடலில்... இன்றும் வலித்தது அவளது மனதில்...

அதை உணர்ந்தார் போன்று அவனது கண்களும் அவளது உதட்டினை தான் பார்த்துக் கொண்டு இருந்தது... அன்று அவள் இதழ்களிலிருந்து ஆறாய் பெருகிய இரத்தம் இன்றும் அவன் கண்முன் நிழலாடியது...

"அன்னைக்கு நிறைய இரத்தம் வந்தது இல்லையா பேபி... நான் ரொம்பப் பயந்துட்டேன் தெரியுமா...? ரொம்ப வலிச்சதா பேபி..."

அவளது இதழ்களை மென்மையாய் வருடியபடி கேட்டவனின் வார்த்தைகள் அவள் மனதில் ஏறவில்லை மாறாக அவனது செயல் அவளின் மனதை தொட்டு அவளை உருகச் செய்தது அவன் பால்...

உள்ளம் அவன் பால் சரணடைந்த ரகசியத்தை விழி வழியே பிரதிபலித்தவளை கண்ணிமைக்காது ஒரு நொடி பார்த்தவன் அடுத்த நொடி அவளது இதழை சிறை செய்தான் தாபத்தோடு...

வெகுநேரம் கழித்து அவளை விட்டு விலகியவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் அவள் நாணி தலை குனிய

அவனோ சிரித்தபடி அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டான்... அதன் பின்னர்த் தங்களது நட்பினை பற்றிச் சொல்லத் துவங்கினான்...

"புது இடத்தில் யார் கூடவும் ஒன்ற முடியாம விலகியே இருந்த என்னிடம் முதலில் நட்பானது யஷ்வ் தான்... பிறகு அவனது நண்பன் வருண்... ஆனால் அதுக்கு அப்புறம் மூணு பேருமே நல்ல நண்பர்களாகிட்டோம்... ஸ்கூல், காலேஜ்ன்னு எல்லாத்திலேயும் ஒண்ணா சேர்ந்து தான் படிச்சோம்... எல்லோருக்குமே சொந்த தொழில் இருந்ததால் மூணு பேருமே பிசினஸ் மேனேஜ்மெண்ட் தான் எடுத்து படிச்சோம்... கவலையில்லாம நிம்மதியா சுற்றித் திரிந்த நாட்கள் அவை..."

சிறிது நேரம் அதில் மூழ்கி அமைதியாய் இருந்தவன், "வெளிநாட்டில் படிப்பு முடிந்து இந்தியா வரும் வரை எல்லாம் நல்லா தான் போய்க்கிட்டு இருந்தது... இந்த நட்பில் முதலில் காதலை விதைத்தவள் ஹர்ஷி தான்... அப்போ நான் அதைப் பெரிதாகக் கண்டு கொண்டது இல்லை... பொதுவா எனக்குப் பெண்களைக் கண்டு பெரிய விருப்பம் இருந்தது கிடையாது..." என்று சொல்லியவன்,

"ஆனால் இப்போ இந்தப் பெண்ணிடத்தில் எனக்கு வானளவு விருப்பம் உண்டு..." என்றபடி மனைவியை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்... அதில் அவனது மனைவியும் சுகமாய் அவனுள் அடங்கிக் கொண்டாள்...

"அப்போ நான் ஒரு படத்தில் நடிச்ச புதுசு... அதைப் பார்த்துட்டு ஸ்ருதி என் மேல் க்ரேசாகி என் பின்னாடி சுத்த ஆரம்பிச்சா... அது வயது கோளாறுன்னு நினைச்சு நான் அவளை அவாய்ட் பண்ணினேன்... அப்போ அவள் ரொம்பச் சின்னப் பொண்ணு வேற... ஸ்கூல் தான் படிச்சிட்டு இருந்தாள்... இது எதுவும் யஷ்வ்க்கோ இல்லை வருணுக்கோ தெரியாது... நானும் சொல்லலை... ஆனால் ஹர்ஷி இதை யஷ்வ் கிட்ட சொல்லி புலம்பி அழுதிருக்கிறாள்... சாதாரணமா அவள் என்னைக்

காதலிக்கிறதா சொல்லியிருந்தா பிரச்சினை வேறு மாதிரி போயிருந்திருக்கும்... ஆனால் அவள் ஸ்ருதியை தனக்குப் போட்டியா நினைச்சிக்கிட்டு அவன் கிட்ட போட்டு கொடுத்துட்டா..."

மீண்டும் பழைய நினைவுகள் அவன் மனதில் எழ அவன் அமைதியானான்... அவனின் மனம் புரிந்து அவளும் அமைதியாய் இருந்தாள்...

அதே நேரம் மகளை உறங்க வைத்து விட்டு நிமிர்ந்த ஸ்மிருதி தன்னையே பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டு கண்களால் 'என்ன?' என்று கேட்க...

யஷ்வந்த் அவள் அருகில் வந்தமர்ந்து அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு அமைதியாய் இருந்தான்...

"என்ன யஷூ...?"

"நான் உன்னைக் காதலுடன் தான் தொட்டேன்னு நீ நம்பறியா ஸிமி..." அவனது முகத்தில் அத்தனை வேதனை இருந்தது...

"இப்போ எதுக்கு இந்தப் பேச்சு யஷூ... விடு..."

"இல்லை ஸிமி... இன்று ஒரு நாள் மட்டும் தான்... அதுக்கு அப்புறம் இதைப் பத்தி நான் பேச மாட்டேன்..." என்றவன் தன் மனக்கதவை மனைவியிடத்தில் திறக்க ஆரம்பித்தான்...

"நீயும் ஜீவாவை காதலிப்பதாய் ஹர்ஷி வந்து அழுத போது எனக்கு என்ன பண்றதுன்னு புரியலை... எதுக்குமே அழாத செல்ல தங்கச்சி அழுததும் அவளோட கஷ்டத்தைப் போக்கணும்ன்னு தான் நினைச்சேனே தவிர உன்னைக் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலை..." என்றவனது துயரம் அவளுக்கும் புரிந்தது... ஆனாலும் அதை விட அவள்

அடைந்த துயரம் அதிகம் அல்லவா... அதனால் அமைதியாக இருந்தாள்...

"முதலில் உன் மனசை என் பக்கம் திரும்ப வைக்கத்தான் நான் உன்னை லவ் பண்ற மாதிரி நடிக்கலாம்ன்னு முடிவு பண்ணினேன்... ஆனா நீ அதைக் கூட உணராம கள்ளம் கபடமில்லாம என் கிட்ட சிரிச்சு சிரிச்சுப் பேசினதில் நான் உண்மையாவே உன்னை லவ் பண்ண ஆரம்பிச்சேன்... நீ ஜீவா பின்னாடி சுத்திக்கிட்டு இருக்கன்னு எனக்கு நல்லா தெரியும்... ஆனால் ஜீவா மனசுல அந்த மாதிரி எண்ணம் எதுவும் இல்லைன்னும் எனக்கு நல்லா தெரியும்... அதனால் உன்னை இன்னும் தைரியமா காதலிக்க ஆரம்பிச்சேன்... ஜீவாவை விட எனக்கு என்ன குறைச்சல்ங்கிற ஒரு எண்ணமும் கூட..."

அவன் பேசும் போது குறுக்கிட்ட ஸ்மிருதி, "அவனை விட நீ கொஞ்சம் இல்லை நிறையவே குறைச்சல் தான்... இன்னைக்கு அவன் போட்டு வந்த சட்டையைப் பார்த்தியா... அது அவனுக்கு எவ்வளவு ஹேண்ட்சம் லுக் கொடுத்தது... அது மாதிரி உனக்குச் செலக்ட் பண்ண தெரியலை யஷூ... அவனை மாதிரி மாறுவதற்கு நீ முதல்ல உன் சட்டையை மாத்து..."

உதட்டை சுளித்துக் கொண்டு சொன்ன மனையாளை ஆசையோடு பார்த்தவன், "நீ இன்னும் மாறவே இல்லை ஸிமி..." என்று சிரிப்புடன் சொன்ன யஷ்வந்த் அவளைச் சிறிதும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கவில்லை...

அப்போது தான் தன் தவறு புரிய நாக்கை கடித்தவள், "சாரி யஷூ..." என்றாள் பாவனையோடு...

அதில் அவளது தலையில் கை வைத்து செல்லமாய் ஆட்டி சிரித்தவன், "இனிமே என் ட்ரெஸ் எல்லாம் நீயே செலக்ட் பண்ணு... ஓகேவா... உனக்குப் பிடிச்ச மாதிரி என்னை நான் மாத்திக்கிறேன்..." என்றவனைக் கண்டு அவளுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது...

கண்கள் மின்ன சந்தோசமாய்த் தலையாட்டினாள் அவள்...

"அப்போ தான் அந்தப் பார்ட்டி வந்தது..." என்றவனது குரல் வருத்தத்துடன் ஒலித்தது...

அதைக் கேட்டு அவளது உடலும் விறைத்தது... சற்று முன்பு இருந்த சந்தோசம் அவளிடத்தில் இருந்து காணாமல் போயிருந்தது...

அந்தப் பிறந்தநாள் விருந்து அவளுக்கு நன்றாக நியாபகம் இருந்தது... அப்போது அவள் கல்லூரி சேர்ந்திருந்த புதிது... அவளுடைய தோழிக்கு பிறந்தநாள் என்று அவள் நட்சத்திர விடுதிக்கு சென்றிருந்தாள்... வயதின் துடுக்குத்தனம் காரணமாகத் தோழிகளிடம் பந்தயம் கட்டி மது அருந்தியவளுக்குப் போதை உச்சத்திற்கு ஏறியிருந்தது... முதல் முறை என்பதால் அவளால் ஒரு நிலையில் இருக்க முடியவில்லை...

தள்ளாடி கொண்டு வெளியில் வந்தவளை யஷ்வந்த் பார்த்துவிட்டு அவளைத் தனியே காரில் அனுப்ப பயந்து அவனே காரை ஓட்டி கொண்டு வந்து அவளை வீட்டில் விட்டான்... அவனது கெட்ட நேரமோ என்னவோ அவளது வீட்டில் அவளது பெற்றோரும், சகோதரனும் இல்லை... வருண் வியாபார சம்பந்தமாக வெளியூர் சென்றிருக்க, அவளது பெற்றோர் ஒரு திருமணத்திற்காகச் சொந்த ஊர் சென்றிருந்தனர்...

அப்போதும் அவன் கண்ணியத்துடன் அவளை அவளது அறையில் விட்டு விட்டு தான் கிளம்ப எண்ணினான்... போதையில் தடுமாறியவள் அவனையும் சேர்த்து இழுத்துக் கொண்டு கட்டிலில் விழ, அவன் பதற்றத்துடன் எழ முயற்சித்தான்...

ஆனால் பெண்ணவள் அவனை விடவில்லை... போதையும், இளமை உணர்வும் சேர்ந்து அவளை ஆட்டுவிக்க அவளது கரங்கள் வளைத்தது அவனை ஆசையுடன்... மனம்

விரும்பியவள் அருகாமையில் மனம் தடுமாறி கொண்டிருந்தவன் அவளது அந்த அழைப்பில் அப்படியே தன்வசம் இழந்தான்...

தவறு என்று அவன் மனம் சொன்ன போதும் அவனது இளமையோ அவனிடத்தில் சரி என்று வாதிட்டது... மனதை உணர்வு வென்றுவிட அடுத்த நொடி தன்னவள் முகம் நோக்கி குனிந்தவன் அடுத்தச் சில மணித்துளிகளில் ஓருயிராய் அவளுடன் கலந்திருந்தான்...

மனம் விரும்பிய காதலியுடன் விரும்பி கூடிய கூடல் மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்க அவன் சந்தோசத்துடன் அவளை அணைத்து முத்தமிட்ட போது அவள் அவனை இறுக அணைத்துக் கொண்டு,

"ஐ லவ் யூ ஜீவா..." என்றாள் கிறக்கமாய்ப் போதையுடன்...

அதில் தீச்சுட்டார் போன்று அவன் அவளிடத்தில் இருந்து விலகினான்... தான் செய்த தவறின் அளவு அப்போது தான் அவனது மூளையில் உறைத்தது... என்ன செய்வது என்று தெரியாமல் தலையில் அடித்துக் கொண்டான்...

அவன் நினைத்திருந்தால் தான் செய்த தவறை அப்படியே யாருக்கும் தெரியாமல் மறைத்திருக்க முடியும்... ஆனாலும் அவன் அப்படிச் செய்ய மனமில்லாமல் அவள் எழுவதற்காகக் காத்திருந்தான்...

போதை தெளிந்து எழுந்தவள் அவன் கூறியதை நம்பவில்லை... அவன் பொய் சொல்வதாய்க் குற்றம் சாட்டினாள்... இதைச் செய்தது ஜீவா என்றே நம்பினாள்... அவன் பல தடவை கெஞ்சிய போதும் அவள் அவனை ஏற்கவில்லை... அதற்குப் பதிலாக ஜீவாவை பிடித்துத் தொந்திரவு செய்தாள் நாம் திருமணம் செய்து கொள்ளலாம் என்று சொல்லி...

அப்போது தான் ஜீவா தனது பாட்டியிடம் திருமணத்திற்காகச் சண்டை போட்டுக் கொண்டு வந்த நேரம் அது... அந்த எரிச்சலில் இருந்தவன் அவளைப் பிடித்துத் திட்டிவிட்டான்... அதில் அவள் மனம் தளர்ந்து போனாலும் அவனை எளிதில் மறக்கவில்லை...

இது எதையும் அவள் வருணிடமும், பெற்றோரிடமும் சொல்லவில்லை... அதனால் அவர்களுக்கு இந்த விசயம் தெரியாமல் போனது... யஷ்வந்த் சொல்லாமல் இதைத் தான் சொல்லக் கூடாது என்று எண்ணி ஜீவாவும் வாயை இறுக மூடி கொண்டான்...

யஷ்வந்த் ஸ்மிருதி பின்னால் அலைவதை கண்டு ஜஸ்வந்த் கோபம் கொண்டான்... அவளை மாதிரி சாதாரணப் பெண்ணின் பின்னால் சகோதரன் அலைவது தங்களது ராஜ பரம்பரைக்கே இழுக்கு என்று எண்ணினான்... அதனால் ரிஷ்வந்த்திடம் அவளைத் தீர்த்து கட்ட சொல்ல, அவனோ தயங்கினான்... ஏனெனில் அவள் யஷ்வந்த்தின் உயிர் நண்பனின் தங்கை...

இது தொழிலில் முடிவு எடுப்பது போல் அதிரடி முடிவு எடுக்க வேண்டிய விசயமில்லையே... அதனால் யஷ்வந்த்திற்கு அறிவுரை கூறி புரிய வைக்க முயன்றான்... ரிஷ்வந்த் பேச்சை யஷ்வந்த்தும் கேட்கவில்லை... ஜஸ்வந்த்தும் கேட்கவில்லை...

ஸ்மிருதியை பழிவாங்குவதற்காக ஜஸ்வந்த் அவர்களது தொழிலில் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தினான் யாரும் அறியாமல்... அதனால் ஸ்மிருதி குடும்பம் பொருளாதர நிலையில் மிகவும் கீழிறங்கி கொண்டிருந்தது... அதன் தீவிரத்தை யஸ்வந்த்தும் மற்றவர்களும் அறியாமல் போனது தான் பரிதாபம்...

இந்நிலையில் ஜஸ்வந்த் ஸ்மிருதிக்கு இறுதியாக வைத்த குறியில் அவளது முழுக்குடும்பமும் பலியானது... இறுதி நேரத்தில் தன்னுடன் இருந்த நண்பன் ஜீவாவிடம்

தங்கையின் பொறுப்பை ஒப்படைத்த வருணின் உயிர் அடுத்த நொடி பிரிந்து சென்றது...

அது விபத்து என்றே எல்லோரும் எண்ணினர்... பிறகு தான் தெரிந்தது கொலை முயற்சி என்பது...

நண்பனுக்காக அவனது தங்கையைப் பார்த்துக் கொண்டான் ஜீவா... ஆனால் அவள் கர்ப்பம் தரித்து அதற்குத் தான் தான் தந்தை என்று குற்றம் சாட்டிய போது திகைத்து தான் போனான்... அதில் அவனுக்கு அவ்வளவு கோபம் வந்தது...

ஆனால் யஷ்வந்த் அவனிடம் வந்து உண்மையை ஒப்புக் கொண்டதும் ஜீவாவின் கோபம் அவள் மீதிருந்து நண்பனிடத்திற்குத் திரும்பியது... ஆனால் ஸ்மிருதி யஷ்வந்த்தை ஏற்றுக் கொள்ள மறுத்தாள்... நடப்பை புரிந்து கொள்ள மறுத்தாள்... ஜீவா தான் வேண்டும் என்று உறுதியாக நின்றாள்... அவள் மனம் அவனைத் தானே விரும்பியது... அதனால் அவள் அதிலேயே நின்றாள்...

ஜீவாவுக்கு அவளின் பேச்சுக் கோபத்தை ஏற்படுத்திய போதும் அவளைப் பாதுகாப்பாய் பார்ப்பதில் எந்தக் குறையும் வைக்கவில்லை... யஷ்வந்த்திற்கு அவளைத் தன்னருகில் வைத்து பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அத்தனை ஆசை... ஆனால் அவனால் அவளது நிழலை கூடத் தொட முடியவில்லை... அவனது எல்லா முயற்சியும் பரிதாபமாய்த் தோற்றுப் போனது...

கடைசியில் அவள் மனம் மாறாததை உணர்ந்து அவன் மனம் வெறுத்து வெளிநாட்டுக்கு சென்றுவிட்டான்... ஜீவா மனதில் ஸ்மிருதி மேல் காதல் இல்லை என்று அவனுக்கு நன்றாகத் தெரியும்... அதே போல் ஸ்மிருதி மனதும் நன்கு தெரியும்... ஒருவேளை ஜீவா ஸ்மிருதியை கண்டு பரிதாபப்பட்டு அவளை ஏற்றுக் கொண்டால்...? அதற்குத் தான் இடைஞ்சலாக இருக்க வேண்டாம் என்று எண்ணித்தான் அவன் விலகி சென்றது...

இத்தனை வருடங்களில் அவன் எண்ணி சென்றது எதுவும் நடக்கவில்லை...

அடுத்து மாதங்கள் வேகமாய்க் கடந்து செல்ல, ஸ்மிருதிக்கு பிரசவ நாள் நெருங்கி கொண்டிருந்தது... அன்றைய நாள் என்றும் போல் அழகாக விடிந்தது... அந்த நாள் தான் ஜீவாவின் மனதை அடியோடு மாற்றிய நாள்... அம்ரிதா பிறந்த நாள் அது...

எப்போதும் விளையாட்டுத்தனமாய் இருக்கும் ஸ்மிருதி பிரசவ வலியை சற்று அசட்டையாக எண்ணிவிட்டாள்... நேரம் செல்ல செல்ல அது பெரும் வலியாக மாறியது... ஒரு அடி எடுத்து வைக்க முடியாமல் திணறியவள் ஜீவாவிற்கு அழைத்துச் சொல்ல அவனோ அங்கு வரும் வழியறியாது திகைத்தான்...

அவளோ அழுது கரைய வேறுவழியின்றி ஜீவா அவளைக் காண ஓடி வந்தான்... வலியில் அழுது கொண்டு பேசிய ஸ்மிருதியின் குரல் அவனின் மனதை ஏதோ செய்தது என்னவோ உண்மை... இதுவரை கேட்டுணராத வேதனையை, வலியை அவளது குரலில் அவன் உணர்ந்தான்... அதனால் தான் அவன் அங்கு ஓடி வந்தது...

அவன் அங்கு வந்து சேர்ந்த போது அவள் உச்சக்கட்ட வலியை அடைந்திருந்தாள்... அதைக் கண்டு என்ன செய்வது என்று அறியாது திகைத்த ஜீவா அவளை எப்போதும் பரிசோதிக்கும் மருத்துவருக்கு அழைத்து விபரம் கேட்க, அவரோ அவளை இங்கு அழைத்து வருவதைக் காட்டிலும் வீட்டிலேயே பிரசவம் பார்ப்பது தான் சரி என்று கூறினார்...

உடனே ஜீவா கீழ் வீட்டில் வசிக்கும் முதிய பெண்மணியை அழைத்து வந்தான் உதவிக்காக... நல்லவேளையாக அவருக்கு இதில் நல்ல அனுபவம் இருந்தது... ஆனாலும் அவரின் முதுமை காரணமாகப் பெரும்பாலான

உதவிகளை அவன் தான் அருகில் இருந்து செய்ய வேண்டியதாய் போயிற்று...

ஒரு பெண் பிரசவிக்கும் வேதனையை அன்று தான் அவன் நேரில் பார்க்கிறான்... அவன் பெண்களைச் சிறிதும் சட்டை செய்யாதவன் தான்... அதே நேரம் முற்றும் துறந்த முனிவனும் கிடையாது... எல்லோரையும் போல் சிறு ஈர்ப்புப் பெண்களிடத்தில் இருக்கத்தான் செய்தது அவனுக்கு...

அந்தச் சிறு ஈர்ப்பு கூடச் சிதறிப் போனது ஸ்மிருதியின் வேதனையான அலறலில்... சில நிமிடங்களில் அம்ரிதா பிறந்தாள்... அவளைக் கைகளில் ஏந்திய ஜீவாவின் மனதில் தந்தை ஆகாமலேயே தந்தையான ஒரு உணர்வு...

"பூக்குவியல் போல் அவளைக் கையில் ஏந்திய அந்த நொடியை மறக்க முடியாது சுபி..." கண்களை மூடி அந்த நினைவில் மனம் லயித்தபடி சொன்ன கணவனை அதிசயமாகப் பார்த்தாள் சுபிக்ஷா...

"அதனால் தான் விபரம் தெரிஞ்சு அம்ரு என்னை டாடின்னு சொன்னப்போ மறுக்கத் தோணலை எனக்கு... ஆனா அதையும் தப்பா நினைச்சிக்கிட்டு ஸ்ருதி பிடிவாதம் பிடிச்சாள் அவளைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி... எத்தனையோ ஆண் மருத்துவர்கள் பிரசவம் பார்க்கிறது இல்லையா... அது போல் என்னை நினைச்சிக்க முடியாம அவள் எல்லாத்தையும் போட்டு குழப்பி எல்லோரையும் குழப்பிட்டாள்... அதைப் பத்திரிக்கைக்காரங்க பெரிய நியூசா போட்டாங்க... மறுத்து பேச பேச பிரச்சினை இன்னும் பூதாகரம் ஆகும்ன்னு நான் வாயை திறக்கலை... இப்படித்தான் எல்லா விசயங்களிலும் நடந்தது..." என்றவன் பின் கண்ணைச் சிமிட்டி கொண்டு,

"ஆனால் இதனால் ஐயாவோட புகழ் சும்மா கடகடன்னு அதிகரிச்சிக்கிட்டு போச்சு... நிறையப் பொண்ணுங்களோட கிசுகிசு... எதையும் மறுக்கத் தோணலை... எப்படியோ

மக்கள் என்னை மறக்காம இருந்தா சரி தான்னு விட்டுட்டேன்..."

அதைக் கேட்டு அவனை முறைக்க முயன்று தோற்று, "மாமா..." என்ற செல்லச் சிணுங்கலோடு அவன் நெஞ்சில் ஒன்றினாள் அவள்...

"இந்த மாமாவுக்கு நீ மட்டும் தான்டி... கவலைப்படாதே பேபி..." சிரிப்புடன் தன்னவளை அணைத்துக் கொண்டான் அவன்...

கணவனை நினைத்து பெருமையாகவும், பிரமிப்பாகவும் இருந்தது அவளுக்கு...

அதே நேரம் ஸ்மிருதி தன் கணவனிடத்தில், "அம்ருவை பார்க்கும் போது தான் தெரிந்தது அவள் உன்னோட வாரிசுன்னு... அப்பவும் என் மனசு அதை ஏற்றுக் கொள்ள முடியாம தவித்தது... அப்போ தான் ஜீவா டிஎன்ஏ டெஸ்ட் பண்ணி அம்ருவுக்கும், அவனுக்கும் எந்தச் சம்பந்தம் இல்லைன்னு சொன்னான்... அதைப் பார்க்கும் வரை நான் நம்பலை... ஆனால் அதுக்கு அப்புறம் தான் என்னோட ஏமாற்றத்தின் வலி தாங்க முடியாம ஜீவாவை போட்டு படுத்தி எடுத்தேன்... பொய் சொல்வதாய்... அதனால் என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி... உன் பிரெண்ட் ரொம்ப நல்லவன்... அம்ருவுக்காக என்னோட டார்ச்சரை சகிச்சிக்கிட்டான்... அதனால் என்னோட பிடிவாதம் தான் அதிகரிச்சிக்கிட்டே போனது... கடைசியில் அவனுக்குக் கல்யாணம் ஆனதும் தான் நிதர்சனம் மூளையில் உறைச்சது... அன்னைக்கு அவன் மனைவி முன்னாடி என்னை அவமானப்படுத்திப் பேசிய போது தான் என் இடம் என்னன்னு எனக்குப் புரிஞ்சது..."

அதை நினைத்து அவளது முகம் வேதனையில் கசங்கியது... அதைக் கண்டு ஆறுதலாக அணைத்துக் கொண்டான் யஷ்வந்த்...

"அவனும் எத்தனை நாள் தான் நண்பர்களுக்காக வாழ்றது ஸிமி... அவனுடைய வாழ்க்கையையும் அவன் வாழ வேண்டாமா... இத்தனை வருசம் கல்யாணம் வேண்டாம்ன்னு இருந்தவன் இப்போ தான் கல்யாணம் பண்ணியிருக்கிறான்... இப்ப போய் நீ தொந்திரவு கொடுத்தால் எப்படி...? அது கேள்விப்பட்டுத் தான் நான் உடனே உன்னைப் பார்க்க ஓடி வந்தேன்..."

கணவனின் வார்த்தையில் அவளுக்கான ஆறுதல், பாதுகாப்பு, நேசம், காதல் என்று அனைத்தும் இருந்ததை உணர்ந்தவளாய் அவள் அவன் தோள் சாய்ந்து கொண்டாள்...

மன்னிக்கும் மனமும், மறக்கும் மனமும் இருக்கும் வரை வாழ்க்கையில் எந்தத் துன்பம் இல்லை...

************************

"சுட்டும் விழிச் சுடர் தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ
வட்டக் கரிய விழி கண்ணம்மா வானக்கருமை கொலோ
பட்டுக் கருநீலப் புடவை பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில் தெரியும் நட்சத்திரங்களடீ

சோலை மலரொளியோ நினது சுந்தரப் புன்னகை தான்
நீலக் கடலலையே நினது நெஞ்சின் அலைகளடீ
கோலக் குயிலோசை உனது குரலின் இனிமையடீ
வாலைக் குமரியடீ கண்ணம்மா மருவக்காதல் கொண்டேன்

சாத்திரம் பேசுகிறாய் கண்ணம்மா சாத்திரம் ஏதுக்கடீ
ஆத்திரம் கொண்டவர்க்கே கண்ணம்மா சாத்திரமுண்டோடீ
மூத்தவர் சம்மதியில் வதுவை முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப்பேனோடீ இது பார் கன்னத்து முத்தமொன்று"

தனது மடியில் படுத்திருந்த கணவனை விழிகளில் காதல் பொங்க பார்த்தபடி பாடி கொண்டிருந்தாள் சுபிக்ஷா... எப்போதும் போல் அவளது காதலிலும், பாடலிலும் மனதை பறி கொடுத்தவனாய் தன்னை மறந்து அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான் ஜீவா...

அவள் பாடி முடித்ததும் அவளது விழிகளில் முத்தமிட்டவன், "சூப்பர் பேபி..." என்றான் பாராட்டாய்...

"அது என்ன எப்போ பார்த்தாலும் கண்ணுலேயே முத்தம் கொடுக்கறீங்க...?" அவள் செல்லமாய்ச் சிணுங்க...

அதைக் கேட்டு அவன் சீரியசாய், "நீ சொல்றதும் சரி தான் பேபி... எப்பவும் உன் கண் மட்டும் தான் பேசும்... இன்னைக்கு உன் கண்ணோடு சேர்த்து வாயும் பாட்டு பாடிச்சு இல்லையா..." என்றவன் அடுத்த நொடி தாமதிக்காமல் அவளது இதழை சிறை செய்தான் தன் இதழ் கொண்டு...

சிறிது நேரம் கழித்து அவளை விடுவித்தவன், "இப்போ உனக்குக் குறையில்லையே..." என்றான் கண்சிமிட்டி நமட்டுச் சிரிப்பு சிரித்தபடி...

"மாமா..." என்று சிணுங்கியவள் அவனிடமே சரணடைந்தாள்... அவனும் சிரித்தபடி அவளை அணைத்துக் கொண்டான்...

"மாமா..."

"சொல்லு பேபி..."

"நான் வீட்டுக்கு ஃபோன் பண்ணினேன்..."

"ம்... சரி... அதுக்கென்ன...?"

"அம்ரு விசயம் கேள்விப்பட்டு அத்தை, மாமா ரொம்பச் சந்தோசப்பட்டாங்க..." அவள் சொன்னதும் ஒன்றும் பேசாது அமைதியாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்...

அவனின் அமைதியை கண்டு, "உங்களுக்குச் சந்தோசமா இல்லையா...?" என்று அவள் கேட்க...

"ம்ப்ச்... வேறு பேசு பேபி... உன்னைப் பத்தி, என்னைப் பத்தி மட்டும்..." என்று கூறி அவன் முடித்துவிட்டான்...

"அப்புறம்..." என்று அவள் கேள்வியாய் இழுக்க...

"அப்புறம் என்ன மேடம் சொல்லுங்க...?" என்று அவளோடு இழைந்தபடி அவன் கேட்க...

"அங்கே லீவ் முடிஞ்சு காலேஜ் திறந்துட்டாங்களாம்... நான் மேலே படிக்கப் போகவா...?"

"இது என்ன கேள்வி பேபி... என்ன படிக்கணுமோ படி..."

"ரொம்பத் தேங்க்ஸ் மாமா...." என்றவள் தனது நன்றியை அவன் கன்னத்தில் முத்தமிட்டு சொல்ல...

"இப்போ தான் பேபி நீ குட் கேர்ள்..." என்று அவளைப் பாராட்டினான் அவன்...

"அப்போ நான் சென்னைக்குப் போகவா...?"

"இங்கே இல்லாத கோர்ஸா...? இப்போ நீ இங்கேயே படி... நாம சென்னைக்குப் போகும் போது அதைப் பத்தி யோசிக்கலாம்..." என்றான் அவன் புரியாமல்...

"நான் படிப்பது கர்னாடிக் மியூசிக் படிப்பு ..." என்று அவள் இழுக்க...

அதைக் கேட்டு அவனது முகம் நொடியில் மாறிப் போனது... அவளை விட்டு விலகி அமர்ந்தான் அவன்... அவளோ புரியாது கணவனைப் பார்த்தாள்...!!!

இசையாகும்...!!!

# ஸ்வரம் : 21

கணவனது விலகலும், முகமாறுதலும் மனதிற்கு ஏதோ வித்தியாசமாகத் தோன்ற அவனது முகத்தைக் குழப்பத்துடன் ஏறிட்ட சுபிக்ஷா,

"என்னாச்சுங்க...?"

அவளின் பேச்சில் அவளைத் திரும்பி பார்த்த ஜீவா, "எனக்குன்னு ஒரு ஸ்டேட்டஸ் இருக்கு சுபி... அதை நீ புரிஞ்சிக்கணும்..." என்றவனைப் புரியாமல் பார்த்தாள் அவள்...

"அதுக்கும், நான் பாடுவதற்கும் என்ன சம்பந்தம்...?"

கணவன் என்ன சொல்ல வருகிறான் என்பது சத்தியமாக அவளுக்குப் புரியவில்லை...

"நிறையச் சம்பந்தம் இருக்கு... நீ இப்படி அஞ்சுக்கும், பத்துக்கும் பாடுவது எனக்குப் பிடிக்கலை...?"

ஆத்மார்த்தமாய் மனதின் நிம்மதிக்காக அவள் மேடையில் பாடுவதை எவ்வளவு கேவலமாகச் சொல்லிவிட்டான் அவளது கணவன்...? எல்லாவற்றையும் பணத்தை அளவுகோலாகக் கொண்டு பார்க்க முடியுமா...? சில விசயங்கள் பணத்துக்கும் அப்பாற்பட்டது என்று தன் கணவனுக்கு ஏன் புரியவில்லை...?

கணவனது பேச்சு அவளின் மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது...

அவளின் சுணங்கிய முகம் அவனையும் பாதித்ததோ என்னவோ... அவள் அருகில் வந்தவன்,

"இங்கே பார் பேபி... இந்தச் சங்கீதம் எல்லாம் கொஞ்ச நாள் தான்... நீ புகழின் உச்சத்தில் இருக்கிற வரை தான் அது உன் கூட வரும்... அதுக்கு அப்புறம் இந்த உலகம் உன்னைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாது... எத்தனையோ இசை கலைஞர்கள் நிலையை நீ பார்த்தது இல்லையா...? நான் உன் திறமையை முடக்கி வீட்டோடு அடைஞ்சு இருன்னு சொல்லலை... மியூசிக் படிக்கிறதுக்குப் பதிலா பிசினஸ் சம்பந்தப்பட்ட படிப்பு படி... நம்ம பிசினசை என் கூட வந்து பார்த்துக்கோன்னு தான் சொல்றேன்... உன்னை அடக்கி ஆளணும்ன்னு நான் நினைக்கலை... நான் சொல்ல வர்றதை நீ கொஞ்சம் சரியா புரிஞ்சிக்க முயற்சி பண்ணு..."

அவனது பேச்சு அவளுக்குப் புரியாமல் இல்லை... எல்லாவற்றையும் தொழில் ரீதியாய் அணுகியவனுக்கு அவளது இசை வேண்டாத ஒன்றாகத் தெரிந்தது... ஆனால் அது அவளுக்கு உயிர் மூச்சு என்பதை அவன் ஏன் அறியாமல் போனான்...?

வரும் கணவன் அவளது இலட்சியத்திற்கு இப்படி முட்டுக்கட்டை போடுவான் என்று எண்ணி தானே அவள் திருமணத்தை வெறுத்து ஒதுக்கியது... அதை இப்போது நினைத்து பார்த்தவள் மனம் வருத்தத்தில் உழன்றது... அவள் நினைத்தது போலவே அவளது கணவனும் பேசுகிறான்...

ஆனாலும் தனக்காகப் பார்த்து பார்த்து நடந்து கொள்ளும், தன் விருப்பத்தைப் பெருமளவு மதிக்கும் கணவனது குணத்தை அறிந்தவளாய் சிறு நம்பிக்கையுடன் அவனைப் பார்த்தாள் அவள்...

"மாமா... நான் சொல்வதைக் கொஞ்சம் புரிஞ்சுக்கோங்களேன்... நீங்க எந்தளவுக்கு என்னோட உயிரோ... அது போல் இசையும் என்னோட உயிர்... அதை எப்படி மறக்க சொல்றீங்க...? ரொம்பக் கஷ்டமாயிருக்கு மாமா..." சொல்லும் போதே அவளது மனதின் வருத்தத்தை முகமும் பிரதிபலித்தது...

கணவனது கையை எடுத்து தனது கைகளுக்குள் வைத்து கொண்டவள், "மற்ற பெண்களை மாதிரி கணவனை எதிர்த்துட்டு போகணும்ன்னு நான் நினைக்கலை... அப்படி நான் அதைச் செய்றதுக்கு ஒரு நொடி ஆகாது... ஆனா என்னால் அப்படிச் செய்ய முடியலை மாமா... எனக்கு இசை எவ்வளவு முக்கியமோ, அது மாதிரி நீங்களும் முக்கியம்..." என்றவள் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டு,

"ஐ லவ் யூ மாமா..." என்றவள் அவனை அண்ணாந்து பார்த்து 'என்னைப் புரிந்து கொள்ளேன்...' என்பது போல் பாவமாய்ப் பார்த்தாள்...

அவளது அந்தப் பாவத்தில் அவன் கரைந்து தான் போனான்... அவளது நெற்றியில் தன் இதழை அழுத்தமாய்ப் பதித்தவன்,

"உன்னைப் புரிந்து கொள்ளாமல் இல்லை பேபி... உனக்கு எந்தளவுக்கு இசை பிடிக்கும்ன்னு எனக்குத் தெரியும்... அதே சமயம் நீ எதார்த்தத்தைப் புரிஞ்சிக்கணும்..." என்றவன்,

"உன்னோட உயிர் நான் தானே..." என்று அவளைப் பார்த்து அவன் கேட்க...

"ம்..." என்று வேகமாய்த் தலையாட்டியவளை கண்டு அவனது உதட்டில் புன்னகை வந்தமர்ந்தது...

"என் உயிருக்கு ஏதாவது ஆபத்து வந்து நான் இறந்துவிட்டால்... நீ என்ன பண்ணுவ..."

அவன் சொல்லி முடிக்கும் முன் அவனது வாயை கையால் மூடியவள் கண்கள் கலங்க, "நானும் உங்களோடு சேர்ந்து செத்துருவேன்..." என்றாள் மிகுந்த காதலோடு, வலியோடு...

அதை அவனும் உணர்ந்தவனாய் அவளது கையை எடுத்து அதில் முத்தமிட்டவன், "ம்ப்ச்... நீ இந்த மாதிரி பேசுறது தான் ரொம்பக் கஷ்டமாயிருக்கு பேபி... நான் இறந்து போனாலும் உனக்குன்னு ஒரு தனிப்பட்ட வாழ்க்கை இருக்கு... நீ தான் நம்ம பிசினசை பார்த்துக்கணும்... நம்ம குழந்தைகளையும் சேர்த்து தான்... இதுக்கு நீ தொழிலுக்கு வந்தே ஆகணும்... நீ சாதாரணச் சுபிக்ஷா இல்லை... உலகம் முழுவதும் தொழில் செய்யும் தொழிலதிபர் ஜீவாவோட மனைவி... அதுக்கு ஏத்த மாதிரி நீ இரும்பு மனுசியா இருக்கணும்... தேவையில்லாத சென்ட்டிமென்ட்டை தூக்கி போட்டுட்டு பிராக்டிக்கலா யோசிச்சு பார்... உனக்கே அது புரியும்... அதுக்குத் தான் நான் சொல்றேன்... கடைசி வரை உன் கூட வர போறது நம்ம தொழிலும், இந்த அந்தஸ்தும் தான்... இதைத் தக்க வச்சிக்கத்தான் நானும், நீயும் போராடணும்... நான் சொல்றதை சொல்லிட்டேன்... இனி தேர்ந்தெடுக்க வேண்டியது நீ தான்... இசையைத் தேர்ந்து எடுக்கணும்ன்னு நீ நினைச்சாலும் நான் ஒண்ணும் சொல்லப் போறதில்லை... ஆனால் மனசுக்குள்ள சின்ன வருத்தம் இருக்கும்..."

அவன் நீளமாய்ப் பேசி முடித்த போது அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை... அவனில்லாத வாழ்வு அவளுக்கு இனிக்காது என்பது அவனுக்கு ஏன் தோணவில்லை... அவனுக்கு ஏதாவது ஒன்று என்றால் உடனே இறந்துவிடத் துடிக்கும் அவளது துடிப்பு போல் அவனுக்கு ஏன் தோன்றாமல் போனது... அதை அவள் அப்படியே அவனிடத்தில் கேட்கவும் செய்தாள்...

"ஒருவேளை நான் இறந்து போயிட்டா என்ன பண்ணுவீங்க மாமா...?"

அந்த நொடி அவனது அணைப்பு சற்று இறுகியது... அவளது கழுத்தில் முகம் புதைத்தவன் சற்று நேரம் பேசவில்லை... அமைதியாக இருந்தான்... பின்பு மெல்ல அவளிடம்,

"ரொம்பக் கஷ்டமாயிருக்கும் பேபி... உன்னை இழப்பது என்பது வேதனையான விசயம் தான்... ஆனாலும் நான் சொன்ன மாதிரி என்னை நம்பியிருக்கும் நம் குழந்தைகளுக்காக, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்காக நான் உயிர் வாழ்ந்து தானாவேன்... இது தான் நிதர்சனம் பேபி..." என்றவனை அவள் ஆயாசத்துடன் பார்த்தாள்...

'நான் செத்தால் உன் உயிரையும் சேர்த்து என்னோடு கூட்டிட்டு போயிருவேன்', 'அதே போல் நீ செத்தால் அடுத்த நொடி நானும் உன் கூடவே செத்து போயிருவேன்...' இந்த மாதிரி வார்த்தைகளைத் தான் அவள் கணவனிடத்தில் எதிர்பார்த்தாள்...

இவ்வளவு ஏன் அவள் மனதிலும் இந்த வார்த்தைகள் தான் ஓடி கொண்டிருக்கிறது... ஆனால் இதை ஏன் அவனால் அவளிடத்தில் சொல்ல முடியவில்லை... அதற்கான பதில் மாதிரி வேறு ஒன்றை அவன் சொன்னான்... அதன் அர்த்தம் தான் அவளுக்குப் புரிந்ததா என்று தெரியவில்லை...

"ஆனா கடைசி வரை உன் நினைவால் நான் வாழ்ந்து செத்து போயிருவேன் பேபி... என் வாழ்க்கையில் உனக்கு மட்டும் தான் இடம்..." என்றவன் மேலும் அவளை அணைத்துக் கொண்டான்...

ஒரு இயல்பான ஆண் இப்படித்தான் நடந்து கொள்வான்... அது போல் தான் அவனும் நடந்து கொண்டான்... அதிலும் அவன் எதார்த்தவாதி... நடைமுறை வாழ்க்கை என்ன என்பதை உணர்ந்தவன்... அவனது உலகம் காதலுக்கும், அன்புக்கும் அப்பாற்பட்ட தொழில் உலகம்... அதனால் என்னவோ அவனது அன்பு கூட அதை ஒட்டியே இருந்தது... அது அவளுக்குத் தான் புரியவில்லை போலும்...

அதன் பிறகு அவன் எந்தவிதத்திலும் அவளை வற்புறுத்தவில்லை... 'சாய்ஸ் இஸ் யுவர்ஸ்' என்பது போல் அவளின் விருப்பத்திற்கே விட்டு விட்டான்... அவள்

இசையைத் தேர்ந்தெடுத்தாலும் அவன் ஒன்றும் சொல்லப் போவதில்லை... சிறிது வருத்தம் இருக்கும் அவ்வளவே...

சுபிக்ஷாவிற்குத் தான் மனம் ஒரு நிலையில் இல்லை... ஒரு புறம் உயிரான இசை மீதான அவளது விருப்பம், மறுபுறம் அவளது உயிருக்கு உயிரான கணவனது விருப்பம்... இரண்டுக்கும் இடையில் ஊஞ்சலாடிய அவளது மனம் சிறிது சிறிதாகக் கணவன் பக்கமே சாய்ந்தது...

'நான் சொல்வதை நீ கேட்டுத்தான் ஆகவேண்டும்' என்று அவன் பிடிவாதமாய்க் கூறியிருந்தால் ஒருவேளை அவளும் அதை எதிர்த்திருப்பாளோ என்னவோ... ஆனால் இப்போது அவளை முன்னிறுத்தி அவன் கூறிய விசயம் அவளது மனதை சிறிது சமாதானப்படுத்தியது...

அவளது வளர்ப்பும் அதற்கு உறுதுணை செய்தது... பாட்டி, அம்மா, அத்தை இவ்வளவு ஏன் அண்ணி பூஜா கூடத் தங்களது கணவனின் பாதையைப் பின்பற்றி நடப்பவர்கள் தானே... அதனால் கணவனது சொல்லுக்குச் செவிசாய்க்க விருப்பம் கொண்டாள்...

'என் நல்லதுக்குத் தானே சொல்றாங்க... கொஞ்ச நாள் அவங்க கூட இருந்து தொழிலை கவனித்தால் தான் என்ன...?' என்று அவளுக்கும் தோன்ற அதைக் கணவனிடத்தில் மறைக்காது சொல்லவும் செய்தாள்...

அன்று முழுவதும் அவன் அடைந்த சந்தோசத்திற்கு அளவே இல்லை... அந்தளவுக்கு அவளைக் கொண்டாடி கொண்டாடி மகிழ்ந்தான்... ஏனெனில் அவளது மனம் அவனுக்கும் தெரியும்... ஆனாலும் தனக்காகத் தன் மனதை மாற்றிக் கொண்ட மனைவியை அவனுக்கு அத்தனை பிடித்துப் போனது...

இந்த விசயத்தைக் கேள்விப்பட்ட அவளது பெற்றோர்கள் அவள் செய்தது சரியே என்று கூறி சந்தோசப்பட்டனர்... கணவன் எவ்வழியோ அதுவே மனைவியின் வழி என்பதில்

செல்வா, ரம்யாவுக்கு மாற்று கருத்து இல்லை... அதிலும் இப்போது எல்லாம் ஜீவாவை தவறான கண்ணோட்டத்தில் பார்க்க முடியவில்லை...

பூஜாவுமே அண்ணனை தவறாக எண்ணவில்லை... அவன் ஒன்றும் பத்தாம்பசலித்தனமாய் மனைவியை அடக்கி ஒரேடியாய் வீட்டில் உட்கார வைக்க முற்படவில்லையே... அவளைத் தனக்கு நிகராகத் தொழிலில் பயிற்சி பெறத்தானே அழைக்கிறான்... அதனால் அவளும் இந்த விசயத்தைக் கேட்டுச் சந்தோசம் தான் அடைந்தாள்...

"வேணும்ன்னே உன் அண்ணன் இதைச் செய்றானோ பூஜா... சுபிக்கு பிடிச்சதை அவள் செய்றதுக்கு இவன் ஏன் தடை போடுறான்... எனக்கு என்னமோ சரியாப்படலை..." கிருஷ்ணாவிற்கு இன்னமும் ஜீவா மேல் இருக்கும் சந்தேகம் போகவில்லை போலும்... அதனால் அவன் அப்படி நினைத்தான்...

அதே மாதிரி தான் ஜெகனும், ருத்ரஸ்ரீயும் நினைத்தனர்...

"ஜில்லு... ஜீவா பண்றது ஒரு விதத்தில் சரின்னாலும்... சுபியோட உணர்வுகளை மதிக்காம இவன் இப்படித் தன்னிச்சையா முடிவு எடுக்கிறது தவறுன்னே எனக்குத் தோணுது..."

அதை ஆமோதித்த ருத்ரஸ்ரீ, "நீங்க சொல்றதும் சரி தான்ங்க... அவளுக்குப் பிடிச்சதை செய்ய அவன் விருப்பம் தெரிவிக்காமல் அவனோட விருப்பத்தை அவள் மேல் திணிக்கிறது கொஞ்சமும் சரியில்லை..." என்றவள்,

"சுபி ஒத்துக்கிட்ட பிறகு நாம பேசி என்ன பண்ண முடியும்...? ஏதோ ரெண்டு பேரும் ஒத்துமையா இருந்தா சரி தான்..." என்றதோடு முடித்துக் கொண்டாள்...

இந்த விசயம் அபிமன்யு காது வரை சென்றது... அதைக் கேட்டு அவனுக்குமே வருத்தம் தான்... சுபிக்ஷாவின் இசை

ஆர்வத்தைப் பற்றி அவனுக்குமே தெரியுமாதலால் மிகுந்த கவலையாக இருந்தது அவனுக்கு...

'மியூசிக்கில் பிஎச்டி பண்ணணும், மியூசிக்கில் பெருசா ஏதாவது சாதிக்கணும்' என்று அன்று கண்களில் கனவு மின்ன சுபிக்ஷா தன்னிடம் கூறியது அவனுக்கு நியாபகம் வந்தது... அவனது மனதில் வேதனை எழுந்து அவனை அரித்தது...

காலம் முழுவதும் அவளது லட்சியத்திற்குத் தான் தோள் கொடுக்க வேண்டும் என்று அவன் எத்தனை ஆசைப்பட்டான்... அத்தனையும் நிராசையாகப் போனதை நினைத்து இப்போதும் அவனது மனம் துடித்தது... அதற்குக் காரணமான ஜீவா மீது அப்போது எல்லாம் வராத கோபம் இப்போது தோன்றியது அவனுக்கு...

தன் திருமணத்தை நிறுத்தி தனக்கு உயிரானவளை ஜீவா தட்டி பறித்த போது கூடத் தன்னவளின் வாழ்வின் நன்மையைக் கருத்தில் கொண்டு உண்மையை மறைத்து தான் வில்லனாகி ஜீவாவை நாயகனாக்கி விட்டு வந்தவன் அவன்...

இப்போது அவன் மீது கோபம் வருகிறது என்றால் அதற்குக் காரணம் சுபிக்ஷாவின் மனதை புரிந்து கொள்ளாமல் ஜீவா செய்யும் இந்தச் செயல் தான்... அன்றும் சுபிக்ஷாவிற்காகத் தான் பொறுமை காத்தான்... இன்றும் அவளுக்காகத் தான் கோபமும் கொள்கிறான்...

அந்தளவுக்கு அவள் அவன் மனதில் நிறைந்திருந்தாள்... மாற்றான் மனைவி தான் என்றாலும் அவள் மீது அவன் வைத்த அன்பு உண்மையானதே... காதலை தான் மாற்றான் மனைவி மீது காண்பிக்கக் கூடாது... தூய்மையான அன்பை யாரிடமும் காண்பிக்கலாம் அல்லவா... அப்படியொரு மனநிலையில் தான் அவனது மனநிலை இருந்தது...

ஜீவா தான் விரும்பியது போல் சுபிக்ஷாவை தன்னுடன் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றான்... அவனது அத்தனை தொழில்கள் எல்லாவற்றிற்கும் சேர்த்துத் தலைமை அலுவலகம் நகரத்தின் மையத்தில் பத்து மாடி கொண்ட கட்டிடத்தில் அமைந்திருந்தது... அங்கே தான் அவன் அவளை அழைத்துச் சென்றது...

அதைக் கண்டு அவள் பிரமித்துப் போய் நின்றாள்... இதுநாள் வரை அவள் தொழில் சார்ந்த இடங்களுக்கு எல்லாம் சென்றது இல்லை... தொழில் செய்யும் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அதில் நாட்டம் இல்லாததால் யாரும் அவளை வற்புறுத்தியது இல்லை... இதுநாள் வரை அவள் வாழ்ந்த உலகம் வேறு...

"சுபிக்ஷா... ஆபிஸ் வந்துவிட்டால் எப்போதும் அலர்ட்டா இருக்கணும்... இப்படி ஆவென வேடிக்கை பார்த்துக்கிட்டு நிற்க கூடாது..." சிறு அதட்டலோடு அவளைக் கடிந்தபடி உள்ளே அழைத்துச் சென்றான் ஜீவா...

"மாமா..." சிறு சுணக்கத்துடன் இழுத்தவளை கண்டு முறைத்தவன்,

"இங்கே இப்படிப் பட்டிக்காடு போல் மாமான்னு ராகம் போட்டு கூப்பிடக் கூடாது... கால் மீ ஜீவா..." என்று வெடுவெடுத்தபடி நடந்தவன் நேரே தனது அறைக்கு அழைத்துச் சென்றான்...

முன்பு போல் இறுக்கத்துடன் இருந்த கணவனைக் கண்டவள் அதற்குப் பிறகு எங்கும் மறந்தும் வேடிக்கை பார்க்கவில்லை... அதே போல் தேவையில்லாத பேச்சும் பேசவில்லை... பேசி அவனிடத்தில் வாங்கிக் கட்டி கொள்ள அவள் விரும்பவில்லை...

அவளையும் அறியாது அவள் மனதில் சிறு அச்சம் தோன்றியது என்னவோ உண்மை...!!!

அவனது அலுவலக அறை நட்சத்திர விடுதியின் அறையை ஒத்திருந்தது... அந்தளவுக்கு அலங்காரத்துடன், ஆடம்பரமாக அது இருந்தது... அவள் அங்கு வருகிறாள் என்பதை அறிந்தோ என்னவோ முன்கூட்டியே அவனது அறையில் அவளுக்கு என்று தனியே மேசை, நாற்காலி போடப்பட்டு இருந்தது...

வழக்கம் போல் தன் கண்களை அகல திறந்து பிரமிக்கப் போனவள் மனதில் கணவனது கடுமை நியாபகம் வர, சட்டென்று தன்னைச் சுதாரித்துக் கொண்டு அமைதியாகப் பார்த்தாள்... அவளது முகபாவனையை அவதானித்தபடி அவளைப் பார்த்து கொண்டிருந்தவன் ஒன்றும் பேசாது,

"போய் உட்காரு..." என்றான் மனைவியை நோக்கி சற்று அதிகாரமாக...

அலுவலகம் வந்ததும் அவனது உடல்மொழி மட்டுமல்ல அவனது குரல் மொழி கூடச் சற்று மாறியிருந்தது சிறு கண்டிப்புடன்... அதனால் என்னவோ அடுத்த நொடி அவன் சொன்னதை அப்படியே செய்தாள் அவள் சமத்தாய்...

அவள் நாற்காலியில் அமர்ந்ததும் அவளுக்கு எதிரே வந்து நின்றவன், "பதினோரு மணிக்கு நம்மிடம் வேலை செய்பவர்களை நாம் சந்திக்கப் போகணும்... அதனால் அங்கே வரும் போது ஒரு எம்டி போல் கொஞ்சம் பந்தாவா நடந்துக்கணும்... என்ன புரிந்ததா...?" என்று குரலில் கடுமையேற கேட்டவனைக் கண்டு பயத்துடன் 'புரிந்தது' என்பது போல் தலையாட்டினாள் அவள்...

அதைக் கண்டு என்ன நினைத்தானோ, "கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கோ... எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு..." என்றபடி தனது இருக்கைக்குச் சென்று அமர்ந்தவன் வேலையைப் பார்க்கலானான்...

வேலையில் மூழ்கியவனோ மறந்தும் அவளைத் திரும்பி பார்க்கவில்லை... வேலையில் ஆழ்ந்து போய்விட்டான்...

அவளுக்குத் தான் என்ன செய்வது என்று தெரியாது அறையில் இருந்த பொருட்கள் ஒவ்வொன்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள்... இன்னும் இரண்டு மணி நேரத்தை ஓட்ட வேண்டுமே... எவ்வளவு நேரம் தான் அவைகளைப் பார்க்க முடியும்... அதுவும் ஒரு முடிவுக்கு வர கடைசியில் அவள் பார்த்து ரசிக்காத ஒரே ஒரு பொருள் அவளது கணவன் மட்டுமே...

அவளையும் அறியாது அவளது கண்கள் அவனை நோக்கி சென்றது... கறுப்பு நிற பேண்ட், அதே நிறத்தில் கோட், வெள்ளை முழுக்கை சட்டை, கழுத்தில் கறுப்பு நிறத்தில் சாய்வாக வெள்ளை கோடுகள் போட்ட டை அணிந்து ஒரு ராஜகுமாரனை போல் அமர்ந்திருந்தவனைக் கண்டு மனம் மயங்கியவளுக்கு அதில் மூச்சடைத்தது...

திருமணமாகி இத்தனை நாளில் இது போல் எல்லாம் அவள் கணவனை ரசித்துப் பார்த்தது இல்லை... அவள் மனதில் இன்னமும் ஜீவா என்றால் பதினைந்து வயது ஜீவா தான் அழுத்தமாய்ப் பதிந்திருந்தான்... அதற்குப் பின் வந்த ஆண்டுகளில் அவனை அவள் ஏறெடுத்தும் பார்த்தது இல்லை... அப்படியே பார்த்தாலும் அவனது உருவம் அவள் மனதில் பதிந்தது இல்லை...

திருமணம் முடிந்த பின்பு இத்தனை நாள் வாழ்க்கையில் ஒரு நாள் கூட அவள் இது போல் அவனை ரசித்துப் பார்த்தில்லை... அவனது அழகு அவளது இதயத்தை அப்படியே தடம் புரளச் செய்தது...

'ஆனாலும் இவங்க இப்படி ஊட்டி ஆப்பிள் போல் இத்தனை சிவப்பா இருக்கக் கூடாது... அப்படி என்னத்தான் சாப்பிடுவாங்களோ... நமக்கு மட்டும் ஏன் இந்தக் கலர் வர மாட்டேங்குது...?' தனது மாநிற கையை ஏக்கத்துடன் பார்த்து பெருமூச்சு விட்டு கொண்டாள்...

மீண்டும் அவளது கண்கள் தன்னவனிடத்தில் வந்து நின்றது... அலைப்பாயும் முடி நெற்றியில் புரண்டு விழுந்து

அவனுக்குத் தனிக்கவர்ச்சி கொடுத்தது... ஆளை கொல்லும் லேசர் பார்வை பார்க்கும் மயக்கும் அவனது விழிகள், கூர் நாசி, அட ஆணுக்கு கூட உதடுகள் இத்தனை சிவப்பாக இருக்கக் கூடுமா...? அத்தனை சிவப்பாக இருந்தது அவனது உதடுகள்... எப்போதும் கடினத்துடன் இறுகி காணப்படும் அவனது தாடைகள்...

இத்தனையும் தனித்தனியாக ரசித்துக் கொண்டு வந்தவளுக்கு அவனிடத்தில் எதுவோ குறைவது போல் தோன்றியது... அது என்ன என்று வெகுநேரம் யோசித்துப் பின் அதைக் கண்டுபிடிக்க முடியாத காரணத்தால் அதைத் தள்ளி வைத்தவள் மீண்டும் அவனிடத்தில் மூழ்கி போனாள்...

ஒரு கையில் கோப்பை புரட்டி கொண்டே மறுகையில் அலைப்பேசியில் பேசிக் கொண்டிருந்தவனின் கம்பீரத்தில் அவளது இதயம் மீண்டும் மீண்டும் நழுவிச் சென்று விரும்பியே அவன் வசமானது...

'எப்படி ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளைப் பார்க்கிறாங்க...?' தனக்குள் ஆச்சிரியப்பட்டவளுக்குத் தெரியவில்லை கணவன் மூன்றாவது வேலையாக அவளையும் சேர்த்துக் கவனித்துக் கொண்டிருப்பது...

சரியாய் பத்து ஐம்பத்தைந்துக்கு நாற்காலியில் இருந்து எழுந்த ஜீவா மனைவியின் புறம் திரும்பி, "போகலாமா...?" என்று கேட்க...

அப்போது தான் கனவில் இருந்து விழித்தெழுபவள் போல் மலங்க மலங்க விழித்தபடி நாற்காலியில் இருந்து எழுந்தாள் அவள்...

"உன் கிட்ட என்ன சொன்னேன்...?" அவன் சிறு முறைப்புடன் கேட்க...

அதில் பயத்துடன் அவனைப் பார்த்தவளுக்கு அவன் சொன்னது எல்லாம் நியாபகமாகவே வர உடனே தனது முகபாவனையை மாற்றிக் கொண்டு,

"இப்ப ஓகேவா...?" அதையும் அவள் கலக்கத்துடன் கேட்க...

"முதலில் இருந்ததுக்கு இது ஓகே..." என்று போனால் போகிறது என்பது போல் சொன்னவனைக் கண்டு அயர்ந்து போனாள் அவள்...

அடுத்த அரை மணி நேரம் அலுவலக ஊழியர்களைச் சந்திப்பதில் சென்றது... ஒருவழியாய் அந்த வேலையை வெற்றிகரமாக முடித்துவிட்டு வந்தவளுக்கு அலுவலக வேலை அத்தனை வெற்றியை தரவில்லை என்பதே நிஜம்...

கணவன் கொடுத்த கோப்புகளைப் புரட்டி பார்த்தவளுக்கு அதில் இருந்த எழுத்துக்களுக்குப் பதிலாக 'ச, ரி, க, ம, ப, த, நி' என்று சப்த ஸ்வரங்கள் தான் கண்ணில் தெரிந்தது...

அந்த ஸ்வரங்களை வைத்துப் புதுப் புது ராகங்களை அவளை உருவாக்க சொன்னால் கூட உருவாக்கி விடுவாள் போலும்... ஆனால் இந்தத் தொழில் அவளுக்குப் புதிராய் அமைந்து கண்ணாமூச்சி ஆட்டம் ஆடியதோடு மட்டுமில்லாமல் பூச்சாண்டியாய் மாறி அவளைப் பெரிதாய்ப் பயமுறுத்தியது...

அதனால் சிறு குழந்தை போல் அதைத் தப்பும் தவறுமாய்ச் செய்து கணவனிடத்தில் வாங்கி வேறு கட்டி கொண்டாள்...

"சுபிக்ஷா..." என்று அவன் பல்லை கடித்ததில் அவள் கடுப்பாகி போனாள்...

"என் பெயர் சுபிக்ஷாங்கிறது இப்பத்தான் தெரியுமா...? முழுநீளத்துக்கு நீட்டி முழக்கிட்டு... வீட்டுக்கு வந்து பேபி, சுபின்னு கொஞ்சுங்க... என்ன செய்வேன்னு எனக்கே

தெரியாது..." என்று அவள் வாய்க்குள் முணுமுணுக்க... அவன்,

"என்ன...?" என்று சத்தமாய் அவன் கேட்டான் சற்று சந்தேகமாய்...

"ஒண்ணுமில்லை..." கண்களை அகல விரித்து வேகமாய்த் தலையை இடமும் வலமுமாய் ஆட்டியவளை கண்டு ஒன்றும் பேசாது 'போய் உட்கார்' என்பது போல் சைகை செய்தான் அவள் கணவன்...

மதிய உணவு நேரம் வரை மட்டுமே அவளால் தாக்கு பிடிக்க முடிந்தது... மதியம் மூன்று மணியாகியும் உண்ணும் யோசனையற்று வேலையில் மூழ்கியிருந்தவனைக் கண்டு அவளுக்கு எரிச்சல் வர நேரே அவன் முன் வந்து நின்றவள்,

"மாமா..." என்றாள் அழுத்தமாய்...

"ச்சு... எத்தனை தடவை சொல்றது..." என்று அலுத்தபடி தலை நிமிர்த்தியவனைக் கண்டு,

"ஆபிஸ் டைம் முடிஞ்சு போச்சு மாமா... இப்ப லன்ச்சுக்கு கூட்டிட்டு போறீங்களா இல்லையா மாமா... எனக்கு ரொம்பப் பசிக்குது மாமா..." என்று தன் கைக்கடிகாரத்தைக் காட்டியபடி மீண்டும் மீண்டும் வரிக்கு வரி ஒரு 'மாமா' போட்டவளை அழுத்தமாய்ப் பார்த்தவன்,

"டிரைவர் கிட்ட சொல்லுறேன்... நீ கிளம்பி வீட்டுக்கு போ..." என்றான்...

"நீங்க வரலையா...?"

"வேலை இருக்கு..."

அவன் அப்படிச் சொன்னதும் அவள் ஒன்றும் பேசாது இருக்கையில் போய் அமர, அவனோ...

"உன்னைப் போகச் சொன்னதாய் எனக்கு நியாபகம்..."

"நீங்க சாப்பிடாத போது எனக்கும் வேண்டாம்..." என்றாள் வெறுமையான குரலில்...

அவளது செயல் பாதித்ததா இல்லை குரல் பாதித்ததா ஏதோ ஒன்றில் மனம் பாதித்தவனாய் தனது வேலையை மூடி வைத்துவிட்டு எழுந்தவன்,

"இப்போ வீட்டுக்குக் கிளம்பலாம் இல்லையா..."

அவனது செயலில் மனம் மகிழ்ந்தவளாய் அவனுடன் சென்றாள் அவள்...

வீட்டிற்கு வந்து உணவு அருந்தும் போதும் ஒன்றும் பேசாது உண்டவன் அவள் அறைக்குச் செல்லும் போது தானும் உடன் வந்தான்...

"வேலையிருக்குன்னு சொன்னீங்க..."

"ஃபைல் எடுக்கணும்..." என்றவன் மேலே ஒன்றும் பேசவில்லை...

அறைக்கதவை திறந்து அவள் படுக்கையறைக்குச் செல்ல அவனும் பின்தொடர்ந்தான் தன் மனையாளை...

"ஃபைல் எடுக்க..." அவள் பேசும் முன்னே அவளை இறுக அணைத்து அவளது இதழில் தன் இதழை பதித்தான் வேகமாய்...

"விடுங்க என்னை..." என்று அவள் கோபமாய் அவனிடம் இருந்து திமிறி தன்னை விடுவித்துக் கொள்ள...

"கோபமா...?" என்றான் தணிவாக...

"ஆமாம்..." என்றவளை பார்த்து,

"ஆபிசில் வச்சு என்னை ரசிச்சு பார்த்ததைப் பார்த்தா கோபப்பட்ட மாதிரி தெரியலையே..." மோவாயை தடவி கொண்டு அவளை மேலும் கீழும் ஆராய்ச்சியாய் பார்த்தபடி கூறியவனைக் கண்டு வெட்கம் கொண்டு திணறித்தான் போனாள் அவள்...

"அப்படியே கடிச்சு தின்பது போல் ஒரு பார்வை பார்த்தியே... அந்தப் பார்வையில் எனக்கு உன்னைக் கடிச்சு திங்கணும் போலிருந்தது... அப்புறம் என்ன சொன்ன பேபின்னு சொல்லி கொஞ்சினால் என்னவோ செய்வேன்னு சொன்னியே... அப்படி என்னம்மா செய்வாய் என்னை...?"

கண்சிமிட்டி குறும்பு சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு நாணியவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள் வெட்கத்துடன்...

"போங்க மாமா... கொஞ்சினா ஒரேடியா கொஞ்சுறது... இல்லைன்னா ஒரேடியா முறைச்சிக்கிறது..." என்று அவள் சிணுங்க...

"ஹேய் பேபி... அது ஆபிஸ், அங்கே அப்படித்தான் நடந்துக்கணும்... இது பெட்ரூம், இங்கே இப்படித்தான் இருக்கணும்... இரண்டும் மாத்தி செஞ்சா தான் தப்பு..." என்றவன்,

"ரொம்பப்படுத்தி எடுத்துட்டேனோ... என்னோட நேச்சர் அது... சாரி பேபி..." என்க...

"நமக்குள் மன்னிப்பு தேவையில்லைன்னு சொன்னதா நியாபகம்..." என்றவளை பார்த்து,

"அப்படி என்றால் நம் பாசையில் மன்னிக்கலாமா..." என்று அவன் கேட்க...

"எப்படி...?" என்று புரியாமல் அவள் பார்க்க...

"இப்படி..." என்றவன் அடுத்தக் கணம் அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டான்...

"ஐயோ..." என்று அலறியவள் பின் அவனது செயலில் கவரப்பட்டவளாய் அவனோடு ஒன்றியவள் அவனது கழுத்தில் தன் கைகளை மாலையாகக் கோர்த்துக் கொண்டு,

"உங்களுக்கு வேலை இருக்குமே..." அவனது காதில் கிசுகிசுப்பாய் உரைக்க...

"காலையில் இருந்து இப்படிப் பாவமாய்ப் பார்த்து பார்த்து மனுசனை உசுப்பேத்தி விட்டு இப்போ இப்படிக் கேட்கிறியா பேபி...? உன்னை...?" என்று அவளது நெற்றியில் விளையாட்டாய் முட்டியவன்,

"முதலில் நீ... அப்புறம் தான் வேலை..." என்றவன் தனது காரியத்தில் கண்ணாயிருக்க...

அவளோ அவனது மனம் புரிந்தவளாய் நல்ல மனைவியாய் மாறி போனாள் மஞ்சத்தின் மீது...

அடுத்து வந்த நாட்களில் அலுவலகத்தில் எந்தளவுக்கு அவளிடத்தில் கடுமை காட்டினானோ, அந்தளவுக்கு வீட்டில் அவள் மீது அன்பை பொழிந்தான்... அதனால் அவனது அந்தக் கடுமை கூட அவளைப் பெரிதாய் பாதிக்கவில்லை... அவள் மொத்தமாய்க் கரைந்து தான் போனாள் அவனது அன்பில்...

நாட்கள் அது பாட்டிற்குச் சென்றது அமைதியாக... அதற்கு உலை வைப்பது போல் அந்த டெல்லி பயணம் அமைந்தது... திருமணமான இத்தனை நாட்களில் ஜீவா அவளை விட்டு விட்டு தனியே எங்கும் சென்றது கிடையாது... டெல்லி செல்லும் இந்தப் பயணத்தைத் தவிர்க்க முடியாததால் அவன் அங்குச் செல்ல வேண்டியிருந்தது...

அதைக் கேட்டு அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ள...

"மூணு நாள் தானே... அட்ஜஸ்ட் பண்ணிக்கோ பேபி..." என்று அவன் சிரித்தபடி சொல்ல...

அப்போது கோபத்துடன் நிமிர்ந்தவள் அவன் கன்னம் இரண்டையும் பிடித்து ஆட்டியபடி, "மூணு நாள் தானா... மூ... ணு... நா... ள்..." என்று நீட்டி முழக்கி சொன்னவள் கை விரல்களை ஒவ்வொன்றாய் எண்ணி காட்டினாள் அவன் கண் முன்னே...

"ரொம்பத்தான் தைரியம் உனக்கு... என் கன்னத்தைப் பிடிச்சு இழுக்கிற..." என்று கோபமாய்ச் சொல்வது போல் அவன் சொன்னாலும் அவனது கண்கள் சிரித்து அவனைக் காட்டி கொடுத்தது அவளிடத்தில்...

அப்போது தான் அவளுக்கு அது உறைத்தது... அன்று எதுவோ குறைவது போல் அவனிடத்தில் தோன்றிய குறை இப்போது அவளது மூளையில் பளிச்சிட்டது...

"நீங்க மீசை வச்சிருந்தா அதைப் பிடிச்சு நல்லா இழுத்து இருப்பேன்... இதை விட அது நல்லா வலிச்சிருக்கும்..." என்றவள் தனது மனதின் ஆசையை அவனிடத்தில் கோடிட்டு காட்டினாள்...

அவளை இழுத்து தன் மடியில் அமர்த்தியபடி, "உனக்கு மீசை வச்சாத்தான் பிடிக்குமா...?" என்று கேள்வி கேட்டவனை அற்பமாய்ப் பார்த்தவள்,

"இது என்ன கேள்வி...? தமிழ்நாட்டுல பிறந்துட்டு மீசை பிடிக்காம இருக்குமா...? நம்ம வீட்டு ஆம்பிள்ளைங்க எல்லோரும் மீசை வச்சியிருக்காங்களே... நீங்க பார்த்தது இல்லையா..."

"ஐயோ அந்த மாதிரியா... மாமன் தாங்க மாட்டேன் பேபி..." என்று தன் கைகள் கொண்டு மூக்கோடு வாயையும் சேர்த்து பொத்தி கொண்டான் அவன் போலி பயத்துடன்...

அதைக் கண்டு அவளுக்கு மனத்தாங்கலாய் இருந்தது போலும்... அமைதியாக இருந்தாள் அவள்...

"இங்கே எல்லாம் பெண்களுக்கு ஆண்கள் மீசை வச்சா பிடிக்காது பேபி... அதனால் தான் வைக்கலை..."

"ஆனா இந்த மறத்தமிழச்சிக்கு மீசை வச்சா தான் ரொம்பப் பிடிக்கும்..." என்றாள் வெடுக்கென்று கோபமாய்...

"ஓஹோ..." என்று அவன் ராகம் இழுக்க...

"ஆமாம் அப்படித்தான்..." என்றாள் அவளும் பதிலுக்கு ராகம் போட்டு...

"ஓகே... என் மறத்தமிழச்சி... உனக்காக இந்த மறத்தமிழன் இன்னையில் இருந்து மீசை வளர்க்கிறான்... ஓகேவா..." மேலுதட்டின் மேல் கை கொண்டு தடவியபடி அவன் சொல்ல...

அதில் சந்தோசம் அடைந்தவளாய், "டபுள் ஓகே மாமா..." என்றவள் தனது சந்தோசத்தினை அவனுக்குப் பரிசுகளாய் வாரியிறைத்து வெளிப்படுத்தி அவனையும் சந்தோசப்படுத்தினாள்...

அதில் அவள் டெல்லி பயணத்தை மறந்தும் போனாள்... ஆனால் அவன் அதை மறக்கவில்லை... அவளுக்கும் சேர்த்து விமானச் சீட்டுப் பதிவு செய்தவன் கிளம்பும் முதல் நாள் அவளிடத்தில் சொல்லி அவளை ஆச்சிரியப்படுத்தியவன் அதற்கும் சேர்த்து அவளிடம் இருந்து பல பரிசுகளைப் பெறவும் தவறவில்லை...

அங்கு அபிமன்யுவை சந்திக்கப் போகிறோம் என்பதை முன்பே அறிந்திருந்தால் ஜீவா மனைவியை விட்டு விட்டு வந்திருப்பானோ என்னவோ... ஆனால் விதி அவனுக்கு எதிராய் சதி செய்து சிரித்தது...

அந்தத் தொழிலதிபர் மாநாட்டிற்கு அபிமன்யுவும் டெல்லி வந்திருந்தான்... அத்தோடு இவர்கள் தங்கியிருந்த விடுதியில் தான் அவனும் தங்கியிருந்தான்... இரவு உணவின் போது தான் அபிமன்யுவை இருவரும் பார்த்தனர்...

வெகுநாட்கள் கழித்துச் சுபிக்ஷாவை பார்த்த அபிமன்யுவின் முகமும், மனமும் ஒரு சேர மலர்ந்தது... தான் அவளை வேண்டாம் என்று சொன்னது, அவள் தன்னை வெறுத்தது என்று இடைப்பட்ட நிகழ்வுகளை மறந்தவனாய் அவன் மகிழ்ச்சியாய் நின்றிருந்தான் அவளைப் பார்த்தபடி...

கணவனின் தோள் சாய்ந்து அவள் பேசி கொண்டிருந்ததில் தான் அவன் நிகழ்காலத்திற்கு வந்தான்... அவளது கணவனாக அவனைப் பழிவாங்கிய ஜீவாவை கண்டதும் நீரூற்று போல் அவன் மனதில் பழைய நினைவுகளின் தாக்கம்... முகம் அவமானத்தில் கறுத்துப் போனது...

அந்த நேரம் தான் சுபிக்ஷா அபிமன்யுவை கண்டாள்... அவளது முகத்தில் முதலில் கோபமும் பின்பு வெறுப்பும் எழுந்தது... அவனைப் பார்க்கப் பிடிக்காதவள் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

அதில் அபிமன்யுவின் நேசம் கொண்ட நெஞ்சம் இரண்டாகப் பிளந்து உடைந்தது...

மனைவியின் பார்வையை உணர்ந்து திரும்பி பார்த்த ஜீவா அங்கு அபிமன்யுவை கண்டதும் ரௌத்திரமானான்... ஆனாலும் மனைவியைக் கருத்தில் கொண்டு முயன்று தனது ஆத்திரத்தை அடக்கி கொண்டான்...

இருவரின் நிலையையும் கண்ட அபிமன்யுவால் அதற்கு மேல் அங்கிருக்க முடியவில்லை... பேசாமல் அங்கிருந்து அகன்றுவிட்டான்...

ஜீவா, சுபிக்ஷா இருவருக்குள்ளும் பெருத்த அமைதி நிலவியது... இருவருமே மற்றவர் அமைதியை குலைக்க விரும்பவில்லை... அப்படிக் குலைத்தால் குலைக்கப்படுவது தங்களது நிம்மதி தான் என்பதை உணர்ந்து அமைதி காத்தனர்...

மீண்டும் அறைக்குள் வந்து முடங்கும் வரை இந்த அமைதி நீடித்தது... என்றுமில்லாத வழக்கமாய்ச் சுபிக்ஷா ஏதோ நினைவில் படுக்கையில் சென்று படுத்து கொண்டாள்... பழைய நினைவுகள் அவள் மனதை போட்டு அலைக்கழித்ததில் கணவனை மறந்து போனாள்...

அப்படி அவளைப் போல் அவனால் அவளை மறக்க முடியவில்லை போலும்... அபிமன்யுவின் வருகை அவன் மனதில் பழைய நினைவுகளைப் புரட்டி போட்டு அவனையும் மொத்தமாய்ப் புரட்டி போட்டிருந்தது...

"பேபி..." கணவனது அழைப்பில் திடுக்கிட்டு திரும்பி பார்த்தவள் அவனது நிலை கண்டு திகைத்து தான் போனாள்...

ஆதரவற்ற சிறுவன் போல் ஏக்கத்துடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டதும் தனது நினைவுகளைத் தள்ளி வைத்தவள்,

"மாமா..." என்று பாய்ந்து வந்து அவனைக் கட்டி கொண்டாள் இறுக்கமாய்...

அவன் அவளை அதிகம் தேடினானா இல்லை அவள் அவனை அதிகம் தேடினாளா என்று இனம் பிரிக்க முடியாதபடி இருந்தது இருவரின் தேடல்களும்... ஒருவருள்

ஒருவர் கரைந்து போய்விடவே அந்நேரம் இருவரும் விரும்பினர்...

அந்தளவுக்குப் பழைய நினைவுகளின் தாக்கம் இருவரையுமே பாதித்திருந்தது... ஆனால் வேறு வேறு விதத்தில்...

காலையில் எழுந்து தொழிலதிபர் கூட்டத்திற்குக் கிளம்பி கொண்டு இருந்த ஜீவாவின் முகத்தில் திருப்தியான, சந்தோசமான புன்னகை வந்தமர்ந்தது, படுக்கையில் ஆழ்ந்து உறங்கி கொண்டிருக்கும் மனைவியைக் கண்டு...

இரவின் தொடர் இளமை தேடல்களினால் எழுந்த அயர்வில் உடல் சோர்ந்து போய்ப் படுத்திருந்தாலும் அவளது முகத்தில் இருந்த இளம்புன்னகை அவன் மனதில் இதத்தைப் பரப்ப அவள் அருகில் சென்றமர்ந்தான்...

"குட்மார்னிங் பேபி..." அவளது நெற்றியில் இதழ் பதித்துச் சொன்னவனின் இடுப்பில் கை போட்டு அணைத்துக் கொண்டு அவனது மடியில் சுகமாய்த் தலை சாய்த்தவள்,

"குட்மார்னிங் மாமா..." என்றபடி விட்ட தூக்கத்தைத் தொடர...

அதைக் கண்டு சிரித்தபடி அவளது தலையைக் கோதி கொடுத்தவன், "இப்படித் தூங்குகிறவளுக்கு எதுக்குக் குட்மார்னிங்... உனக்குக் குட்நைட் தான் பேபி... இந்தக் குட்நைட்டை நான் வந்த பிறகும் தொடரலாம்... என்ன சரியா..." குறும்பாய்க் கேட்டாலும் அவனது குரலில் தாபமே நிரம்பி வழிந்தது...

அதில் அலறி அடித்துக் கொண்டு அவனை விட்டு விலகியவள், "ஐயோ இதுக்கு மேல் என்னால் முடியாது மாமா..." கோபமாய்ச் சொல்ல முயன்று சிணுங்கலாய் முடித்தாள் அவள்...

"சரி... சரி... சின்னப் பொண்ணு போனா போகுதுன்னு விடுறேன்..." என்றவனைப் பார்த்து,

"யார் சின்னப் பொண்ணு..." என்று ஏதோ கோபமாய்ப் பேச வந்தவள் அவன் பேசியதன் அர்த்தம் புரிந்து கப்பென்று வாயை இறுக மூடி கொள்ள... அதைக் கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"நிச்சயம் நீ பெரிய பெண் தான்... அதில் சந்தேகமே இல்லை..." என்றவனது விழிகள் மனைவியை ரசனையுடன் மொய்த்தது...

அவனது பார்வையில் பெண்ணவள் வெட்கம் கொண்டு முகத்தைப் போர்வைக்குள் மூடி மறைத்துக் கொள்ள, அதைக் கண்டு மேலும் பலமாய்ச் சிரித்தவன் பின் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி,

"எனக்கு நேரமாச்சு பேபி... நீ சாப்பிட்டு ரெஸ்ட் எடு... ஒரு ஒன் அவர் தான் நான் திரும்ப வந்திருவேன்... அதுக்கு அப்புறம் ரெண்டு பேரும் ஸ்பெசல் அவுட்டிங் போகிறோம்..."

"ஸ்பெசல் அவுட்டிங்கா... எங்கே... எங்கே...?" என்று ஆர்வமாய்க் கேட்ட மனையாட்டியின் முகத்தை ஆசையுடன் பார்த்தவன்,

"அது சர்ப்ரைஸ்..." என்றான் கண்ணைச் சிமிட்டி கொண்டு...

"ம்... ம்..." என்று சிணுங்கியவளை மென்மையாய் அணைத்து விடுவித்தவன்,

"உனக்கும் ரொம்பப் பிடிக்கும்... ஆனால் இப்போ சொல்ல மாட்டேன்..." என்றவன் அவளிடம் இருந்து விடைப்பெற்று அறையை விட்டு வெளியில் வந்தான்...

கணவன் கூறியது என்னவாக இருக்கும் என்று தலையைப் போட்டு உடைத்து கொண்டவளுக்கு எதுவும் தோன்றாததால்,

"சுபி பேபி... உன்னோட மாமன் அளவுக்கு உனக்கு மூளை இல்லை... அதனால் ரொம்ப யோசிக்காதே பேபி..."

கணவனைப் போல் தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள் புன்னகையுடன் குளியலறைக்குள் புகுந்தாள்...

கூட்டம் வெற்றிகரமாக முடிந்து வெளியில் வந்தவனைப் பாதியில் பிடித்து நிறுத்தினான் அபிமன்யு... அது விடுதியின் 'மீட்டிங் ஹால்' இலிருந்து அறைக்குச் செல்லும் தோட்டப் பகுதி...

அன்று அபிமன்யு ஜீவாவின் திசைக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு சென்றவன் தான்... ஆனால் நேற்று சுபிக்ஷா அவனைப் பார்த்த வெறுப்பான பார்வையில் அவனது காதல் மனம் குமுறிக் கொண்டு தவித்தது... அந்தத் தவிப்பின் தகிப்பை தாங்க முடியாது ஜீவாவிடத்தில் கொட்டிவிடத் துடித்தான் அவன்... ஆனாலும் அந்த நிலையிலும் தன் மனதினை மறைத்துக் கொண்டு தன்னவளுக்காகத் தான் ஜீவாவிடம் வந்து பேசினான்...

"ஜீவா... என்னைப் பழிவாங்கியது பத்தாதுன்னு இப்போ சுபியையும் சேர்த்து பழிவாங்கிறியே இது நியாயமா...?" அபிமன்யுவின் வார்த்தையில் ஜீவாவின் முகம் இரத்த நிறம் கொண்டதாய் மாறிப் போனது கோபத்தில்...

"என்ன உளர்ற...?" கடுப்புடன் கேட்டான் அவன்...

"சுபிக்கு சங்கீதம்ன்னா உயிர்ன்னு தெரிஞ்சு இருந்தும் நீ இப்படி அவளைப் பாடக் கூடாதுன்னு சொல்லியிருக்கக் கூடாது ஜீவா... உனக்குப் பழிவாங்கணும்ன்னா என்னைப்

பழிவாங்கு... அதை விட்டு விட்டு அவளைப் போய்... பாவம் அவள்..."

தன் மனைவியைப் பார்த்து தன் கண் முன்னாடியே வேறு ஒருவன் 'பாவம்' என்று சொல்வதைக் கேட்டு ஜீவாவிற்கு ஆத்திரம் வந்தது... ஆனாலும் சுற்றுப்புறத்தை கருத்தில் கொண்டு சற்று அமைதி காத்தவன்,

"அவள் என் மனைவி... அவளுக்கு எது நல்லது, எது கெட்டதுன்னு எனக்குத் தெரியும்... நீ உன் வேலையைப் பார்த்துக்கிட்டு போ..." என்று அடக்கப்பட்ட கோபத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவன்,

"அவள் வந்து உன் கிட்ட அழுதாளா... நான் அவளைப் பழிவாங்குகிறேன்னு... போடா உன் வேலையைப் பார்த்துக்கிட்டு..."

ஜீவாவின் இந்த அலட்சியம் அபிமன்யுவின் தன்மானத்தைச் சீண்டிவிட்டது போலும்...

"நீ அவளுக்குச் செய்த நல்லது தான் எனக்குத் தெரியுமே... அவளை நேசிச்ச என்னைக் கடத்தி கொண்டு போய்க் கல்யாணத்தை நிறுத்தி, என்னைப் பழிவாங்க அவளைக் கல்யாணம் முடித்து, இப்போ அவளையும் சேர்த்து பழிவாங்கிட்டு இருக்கியே..."

அவன் சொன்னதைக் கேட்டு நக்கலாய் அவனைப் பார்த்து சிரித்த ஜீவா, "கதை ரொம்ப நல்லாயிருக்கு... இந்தக் கதை சொல்லித்தானே என் மாம்மை உன் கைக்குள் போட்டுக்கிட்ட... அப்படியிருந்தும் உன்னை ஜெயிக்க விட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கேன்னா அதுக்கு ஒரே காரணம் என் மாம் தான்... அவங்க சொல்லிக் கொடுத்தது தோற்றுப் போய்விடக் கூடாதேங்கிற ஒரே காரணம் தான் நீ இவ்வளவு நாள் ஜெயிச்சிக்கிட்டு இருக்கிறதுக்கு... அவங்க சொல்லி கொடுத்து தான் நீ ஜெயிக்கிற... ஆனால் அவங்க

இரத்தத்தில் பிறந்த எனக்கு அதை முறியடிக்கவா தெரியாது..." என்று எகத்தாளமாய்ச் சொன்னவன்,

"நம்ம இரண்டு பேர் நடுவில் என் மாம்மை கொண்டு வந்து நிறுத்தியதால் இப்போதைக்கு நீ தப்பிச்ச... ஆனால் எப்போதும் இந்த நிலை தொடரும்ன்னு நீ நினைக்காதே..." என்று அவனை எச்சரித்தான் ஜீவா...

"சரி, நமக்கு இடையில் பெரியம்மாவை வர சொல்லலை... ஆனால் நான் ஒண்ணே ஒண்ணு உன்னைக் கேட்டுக்கவா... " என்றவனைப் புரியாமல் பார்த்தான் ஜீவா...

"நீ முதல்ல மாதிரி என் கிட்ட மோதிக்கோ... என் அப்பா செஞ்ச தவறுக்காக நான் உன் கிட்ட சந்தோசமா தோத்து போறேன்... ஆனால் எனக்கு என் லட்டும்மாவை திருப்பிக் கொடுக்க உன்னால் முடியுமா...?"

அபிமன்யுவின் வார்த்தையில் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தான் ஜீவா...

"நேத்து அவள் கண்ணில் வெறுப்பைப் பார்த்ததும் நான் செத்துப் போயிட்டேன் ஜீவா... அன்பும், கனிவுமாய் என்னைப் பார்க்கும் அவளது கண்கள் இப்போ வெறுப்புடன் பார்க்கிறதுன்னா அதுக்குக் காரணம் நீ தான்... ப்ளீஸ் ஜீவா... அவளை என்னிடம் கொடுத்துடு... என்னால் அவளை மறக்க முடியலை..."

அபிமன்யு சொல்லி முடிக்கும் அவனது சட்டையைப் பிடித்திருந்தான் ஜீவா...

"இப்போ அவள் என் மனைவி... என்னிடமே வந்து அவளைக் கேட்க உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்...?" என்று ஆவேசமாய்க் கர்ஜித்தவன் அதே ஆத்திரத்துடன்,

"இது தான்டா எனக்கு வேண்டும்... நீ காலம் முழுவதும் அவளை நினைச்சு வருந்தணும்... அதைப் பார்த்து நான் சந்தோசப்படணும்... இதுக்காகத் தான்டா நான் உன் கையெழுத்து மாதிரி ஒரு லெட்டர் எழுதி வச்சி எல்லோரையும் நம்ப வச்சு, உன்னைக் கடத்திட்டுப் போய்க் கல்யாணத்தை நிறுத்தி அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்..."

ஜீவா அபிமன்யுவிடம் இதைக் கூறும் போதே அவனது மனைவி அங்கு வந்து சேர்ந்தது அவனது தூரதிர்ஷ்டமே... வந்தவள் அவன் பேசுவது எல்லாவற்றையும் கேட்டு அதிர்ந்து போய் நின்றாள்...

கணவனை இன்னமும் காணவில்லையே என்றெண்ணி அவனைத் தேடி வந்தவள் மனதில் அவளது கணவன் மின்னாமல் முழங்காமல் இடியை இறக்கி கொண்டிருந்தான் ஒவ்வொன்றாய்... அதில் அவளது மென்மையான இதயம் சுக்கு நூறாய் உடைந்து சிதறியது...

"இப்போ தெரியுதாடா வலின்னா என்னன்னு... ஏன்னா உன் அப்பனால் நான் அனுபவிச்ச வலி அந்த மாதிரி... உன் அப்பனால் நான் எவ்வளவு கேவலப்பட்டேன்னு எனக்கு மட்டும் தான் தெரியும்... என்னைக் காதலிச்ச பொண்ணு கிட்ட கூட நான் பதிலுக்குக் காதலை சொல்ல முடியாம தலை குனிஞ்சு இருந்தது எனக்குத் தான்டா தெரியும்... எத்தனை பணம் இருந்தும், வசதி இருந்தும், எல்லாம் இருந்தும் 'உன் அம்மா முதல் கணவனை விட்டு ஓடி வந்து இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டவ தானே'ன்னு இந்தச் சமுதாயம் என் முகத்தில் காறி துப்பியப்போ எனக்கும் இப்படித்தான்டா வலிச்சது..."

ஜீவா மேலே கூறிய வார்த்தைகள் அனைத்தும் அன்று ஹர்ஷிதா அவனைக் காதலிப்பதை தெரிந்து கொண்டு ரிஷ்வந்த் அவனைப் பார்த்துக் கேவலமாய்ப் பேசிய வார்த்தைகள் தான் இது எல்லாம்... சும்மாவே ராஜ வம்சம் என்று கௌரவம் பார்க்கும் ரிஷ்வந்த் ருத்ரஸ்ரீ விசயம்

கேள்விப்பட்டால் சும்மா விடுவானா... ஜீவாவை வார்த்தையால் குத்தி கிழித்துக் காயப்படுத்திவிட்டான்...

பதினைந்து வயதிற்குப் பிறகு இத்தனை வருடங்கள் கழித்து அவன் மனதளவில் மிகவும் காயப்பட்ட நேரமது...

அப்போது ஹர்ஷிதா மேல் அவனுக்கும் சிறு ஈர்ப்பு இருந்தது என்னவோ உண்மை தான்... ஆனால் அதைக் காதல் என்ற வரையறைக்குள் அடக்க அவன் விரும்பவில்லை... அதற்கு மேல் அதைப் பற்றி யோசிக்கவும் அவன் விரும்பவில்லை... ஆனால் அவளது காதல் அவனின் மனதினை தொந்திரவு செய்தது என்னவோ உண்மை... அதே சமயம் ரிஷ்வந்த் வார்த்தைகள் அவனைத் தவிக்க வைத்தது என்னவோ உண்மை...

அதனால் தான் ரிஷ்வந்த் அவனை மிரட்டிய போது பேசாமல் ஹர்ஷிதாவை காதலித்து இவனது மூக்கை உடைத்தால் என்ன என்று ஒரு ஆவேசம் அப்போது அவனுள் எழத்தான் செய்தது... ஆனால் அதை எல்லாம் அடியோடு மாற்றியது அம்ரிதாவின் பிறப்பு...

அதன் பின் பெண்களை மதிக்கக் கற்றிருந்த ஜீவா ஹர்ஷிதாவை விட்டு விலகியது போல் சுபிக்ஷாவை விட்டு விலகாமல் போனது அபிமன்யுவின் தூரதிர்ஷ்டமே...

அந்தச் சமயம் தான் அபிமன்யு தொழிலை கையில் எடுத்திருந்தான்... அது ஜீவாவிற்கு இன்னமும் வசதியாய் போயிற்று... அவனது கோபத்தை எல்லாம் அபிமன்யுவிடம் காண்பிக்க ஆரம்பித்தான்... அபிமன்யுவை தான் ஜெயிக்க, ஜெயிக்க அவனது மனதில் சொல்லொண்ணா ஆறுதல் ஏற்பட அதுவே பிறகு தொடர்கதையாகி போனது...

"ஆமாம்டா... நான் தான் உன்னைக் கடத்தினேன்... அதுக்கு இப்ப என்ன செய்யணும்ன்னு நினைக்கிற...? போய்ச் சுபிக்கிட்ட சொல்ல போறியா...? தாராளமா சொல்லிக்கோ...

எனக்கு எந்தக் கவலையும் இல்லை..." எள்ளலாய் சிரித்தான் ஜீவா...

"நீ யாரை பத்தி தான் கவலைப்பட்ட ஜீவா..." விரக்தியுடன் வந்தது அபிமன்யுவின் வார்த்தைகள்...

அவனுக்குத் தெரியும் ஜீவாவிற்குச் சுபிக்ஷாவை பிடிக்காது என்று... தன்னுடைய சுயநலத்திற்காக ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழ் பண்ணிய ஜீவாவை கண்டு அத்தனை வெறுப்பாய் இருந்தது அபிமன்யுவிற்கு...

"ஆனால் என்னைக்காவது சந்தர்ப்பம் அமைந்தால் இதைக் கட்டாயம் சுபி கிட்ட சொல்லுவேன் ஜீவா... நீ என்னைக் கடத்தியதுக்கான ஆதாரம் என் கிட்ட இருக்கு..."

அதில் ஜீவாவின் கண்கள் அவனைக் கூர்மையாய்ப் பார்த்தது...

"நீ மட்டும் தான் தொழில் பண்றேன்னு நினைக்காதே... நானும் இதே தொழிலில் தான் இருக்கிறேன்... இரண்டே நாளில் உன் வண்டவாளத்தை நான் கண்டுபிடிச்சிட்டேன்... அதுவரை கணிப்பாகத் தான் உன்னை நான் நினைச்சேன்... அன்னைக்கு உன் வீட்டில் நான் ஏதாவது பேசிடுவேனோன்னு நீ முந்திக்கிட்டு வந்து என் சட்டையைப் பிடிச்ச பாரு... அப்போ லைட்டா கன்பார்மாச்சு... அதுக்கு அப்புறம் ஏதேச்சையா என்னைக் கடத்தியவங்க பேசியதை வச்சு அவங்களோட பெயரை தெரிஞ்சுக்கிட்டு அவங்களைத் தேடி கண்டுபிடிச்சேன்... அவங்க மூலமா நீ பண்ணிய தில்லாலங்கடி வேலை எல்லாத்தையும் தெரிஞ்சிக்கிட்டேன்... அப்பவே உன்னைக் காட்டி கொடுத்திருப்பேன்... ஆனா இதனால் சுபியோட வாழ்க்கை பாழாகிறதுல எனக்கு விருப்பமில்லை... பெரியம்மா மனசு நோகடிக்கவும் எனக்கு மனசில்லை... நான் உன்னைப் பத்தி சுபி கிட்ட சொன்னால் அவள் உன்னைத் திரும்பி கூடப் பார்க்க மாட்டாள்... அதை நீ நல்லா புரிஞ்சிக்கோ..."

அபிமன்யுவின் பேச்சு ஜீவாவினுள் பெரும் கோபத்தைக் கிளப்பியது...

"போய்ச் சொல்லித்தான் பாரேன்... அப்படியே நீ சொன்னாலும் இதை அவள் நம்பப் போவதில்லை..."

மனைவியின் காதல் மீது கர்வம் கொண்ட கணவனின் வார்த்தையாக வந்தது ஜீவாவின் வார்த்தைகள்...

"குரங்காட்டி கையிலாடும் குரங்கு போல் தான் அவளும்... அதன் கழுத்தில் இருக்கும் கயிறு போல் தான் நான் சுபி கழுத்தில் கட்டியிருக்கும் தாலி கயிறு... அதை மீறி அவள் நீ சொல்வதை நம்ப மாட்டாள்..." அவன் என்னவோ இதைப் பெருமையாகத் தான் சொன்னான்...

ஆனால் கேட்பவர்களுக்கோ அது ஆணவத்தை, அகங்காரத்தைப் பறைச்சாற்றுவதாய் இருக்கும் என்பதை ஏனோ அவன் மறந்து போனான்...

"வேண்டாம் ஜீவா... எல்லாவற்றையும் நீ தொழில் ரீதியாகவே பார்க்கிறாய்... பெண்ணின் மனது இதற்கு எல்லாம் அப்பாற்பட்டது... கடைசியில் நீ மன்னிப்பு கேட்டு கெஞ்சினாலும் அது உன்னை மன்னிக்காது..."

அபிமன்யுவின் வார்த்தையை அலட்சியமாய்ப் புறந்தள்ளியவனாய், "அதுக்குத் தான் எங்களுக்கு இடையில் மன்னிப்பு என்கிற வார்த்தைக்கு இடமே இல்லை..." சற்று இறுமாப்புடனே வந்தது ஜீவாவின் வார்த்தைகள்...

"ச்சே... நீ மனுசனே இல்லை ஜீவா..." வெறுப்புடன் கூறிய அபிமன்யு அவனை விட்டு விலகி போனவன் அங்குச் சற்று தள்ளி நின்றிருந்த சுபிக்ஷாவை கண்டதும்,

"லட்டும்மா..." என்றபடி திகைத்து நின்றான்...

அதைக் கேட்டு அதிர்ந்தவனாய் ஜீவாவும் திரும்பி பார்த்தான்... கண்களில் கண்ணீர் வழிய நின்றிருந்த மனையாளை கண்டதும் அவனுக்குப் புரிந்து போனது... தான் பேசியது எல்லாவற்றையும் அவள் கேட்டுவிட்டாள் என்று...

அவளது கண்ணீரிலேயே அவளது மனம் பாதிக்கப்பட்டதை உணர்ந்து கொண்டவனாய் வேக எட்டுக்கள் வைத்து அவள் புறம் சென்றான் அவன்... ஆனாலும் மனைவியின் காதல் மீது அவனுக்கு நம்பிக்கை இருந்தது அவள் தன்னைப் புரிந்து கொள்வாள் என்று...

அபிமன்யுவும் தன்னுணர்வு அடைந்து ஜீவாவை பின்தொடர்ந்தான்...

தன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியைக் கண்டு ஜீவா பரிதவித்துத் தான் போனான்...

"பேபி... அது வந்து..." அவன் மேலே கூறும் முன் கை நீட்டி தடுத்தாள் அவள்...

'என் வாழ்க்கையில் வந்த முதல் பெண்ணும் நீ தான்... கடைசிப் பெண்ணும் நீயாகத் தான் இருப்ப...'

'இவங்க ரெண்டு பேரும் என் தங்கைகள்...'

'இப்போ தான் நான் உனக்குத் தங்கை மாதிரி தெரிகிறேனா ஜீவா... இது ஏன் முதலில் உனக்குத் தோணாம போச்சு...? இப்போ கல்யாணமானதும் என் கிட்ட இப்படிச் சொல்லுற... எத்தனை வருச காதல் என்னது தெரியுமா...? அத்தனையும் தங்கைங்கிற ஒரு வார்த்தையில் கொன்னுட்ட... என்னை நம்ப வச்சு கழுத்தறுத்துட்ட... யூ ஆர் ச்சீட்டர்... யூ ஆர் லயர்...'

கணவன் பேசிய வார்த்தைகள் மற்றும் ஹர்ஷிதா பேசிய வார்த்தைகள் மட்டுமே சுபிக்ஷா காதில் மீண்டும் மீண்டும்

ஒலித்து அவளை நிலைக்குலைய செய்யப் போதுமானதாக இருந்தது...

அவன் அபிமன்யுவை பழிவாங்கவே தன்னை மணம் முடித்தான் என்பது கூட அவள் மனதில் பின்னுக்குத் தள்ளப்பட்டது... கணவன் மனதில் வேறு ஒரு பெண் இருந்தாள் என்ற நினைவே அவளை வதைத்து உயிரோடு கொன்றது...

'எவ்வளவு பெரிய ஏமாற்றுத்தனம்... காதலித்த பெண்ணைப் பார்த்துத் தங்கை என்று அறிமுகப்படுத்தி வைப்பதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்...?' அவள் மனம் குமைந்தது அவனிடம் தான் ஏமாந்து போனதை நினைத்து...

'உங்களை விரும்பாம யாராவது இருக்க முடியுமா...? ஆனால் இந்த லக்கி ப்ரைஸ் அடித்தது எனக்கு மட்டும் தான்...'

அன்று தான் பதிலுக்குப் பேசி சிரித்ததை நினைத்து இப்போது பாவையவள் மனமும், உடலும் கூசி போனது அவமானத்தில்...

"பேபி..." மீண்டும் ஆரம்பித்த கணவனைக் கண்டு உக்கிரமாக முறைத்தவள்,

"போதும் நீங்க பேசி இவ்வளவு நாள் நான் கேட்டது எல்லாம் போதும்... இப்போதும் நீங்க பேசியதை என் காது குளிர நான் கேட்டாச்சு... என் காது போல் என் மனசும் ரொம்பக் குளிர்ந்து போச்சு..."

என்று விரக்தி புன்னகையுடன் சொன்னவள் அழுத விழிகளை அழுந்த துடைத்துக் கொண்டு கணவனை நேருக்கு நேராய் நிமிர்ந்து பார்த்து அவனது கண்களை உற்று நோக்கியபடி அவனது வலக்கையை எடுத்து தன் தலை மீது வைத்து,

"அத்தை கிட்ட பேசின அன்னைக்குப் பொய் சொன்னது போல் இல்லாமல் இப்போ உண்மையை மட்டும் சொல்லுங்க... நீங்க இவங்க கிட்ட பேசிக்கிட்டு இருந்தது எல்லாம் உண்மையா...? என் மேல் சத்தியமா உண்மையை மட்டும் சொல்லுங்க..."

அதை அவனிடத்தில் கேட்கும் போதே அவளது மனம் அத்தனை கலக்கமடைந்து இருந்தது... ஆனாலும் அவளது கண்களோ 'பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்' என்று பிடிவாதமாய் உறுதியோடு கணவனைப் பார்த்திருந்தது...

எப்போதும் அவளது விழிவீச்சில் கரைந்து போகிறவன் இன்றும் அது போல் அதன் வீச்சில் முற்றிலும் கரைந்து தான் போனான்... அத்தோடு அதில் தெரிந்த உறுதியில் மனமுடைந்தும் போனான் அவன்...

அவளது கண்ணில் தெரிந்த வெறுமையில், அன்னியத் தன்மையில் அவனது செயலுக்கான இறுதி தீர்ப்பை முன் கூட்டியே படித்தறிந்தான் அவளின் மனதை படிக்கத் தெரிந்த காதல் கணவனாய்...

பொய் கூறினால் அவள் பாதிப்படைவாள்... மெய் கூறினால் அவன் பாதிப்படைவான்... வேறு என்ன கூறி இருவரின் வாழ்வையும் மீட்டெடுப்பது என்று தெரியாமல் விழித்து நின்றான் உலகம் முழுவதும் வெற்றிகரமாகத் தொழில் செய்யும் அந்தப் புகழ் பெற்ற தொழிலதிபன்...

ஆனாலும் அவளிடத்தில் பொய்யிரைக்க மனம் இல்லாதவனாய் ‘ஆம்’ என்பது போல் மெதுவே தலையசைத்தான் அவன்... தான் பாதிப்படைந்தாலும் பரவாயில்லை மனைவி பாதிப்படைய கூடாது என்றெண்ணி தான் யாரிடமும் ஒத்து கொள்ளாத உண்மையை அவன் அவளிடத்தில் ஒத்துக் கொண்டான் நேர்மையாக...

அதைக் கண்ட அடுத்த நொடி அவள் உயிரற்ற பிணமாகி போனாள்...

“முடிந்தது... எல்லாம் முடிந்தது...” மெதுவே முணுமுணுத்தது அவளது உதடுகள்...

அதைக் கேட்டு உள்ளம் துடிக்க நின்றிருந்தான் ஜீவா மனைவியைத் தேற்றும் வகையறியாது... அதே சமயம் அவனது தவறு அவனது மனதை வாள் கொண்டு அறுத்து அவனை உயிருடன் துடிக்கச் செய்தது...

அவளின் உயிர்த்துடிப்பை அவன் அறிந்தான்... அவனின் உயிர்த்துடிப்பை அவள் அறியவில்லை...!!!

"என் கரத்தை உரிமையுடன் பிடிக்கும் உனக்குத் தெரியவில்லையா...?

அந்த உரிமை எதனால் வந்தது என்று...?

பொய் வேண்டாம் என் மீதாணை என்றாய்,

எந்த நம்பிக்கையில் ஆணையிட்டாய் பெண்ணே...?

எந்த நம்பிக்கையில் உன் மீதாணையால்

நான் பொய் கூற மாட்டேன் என்று நம்பினாய்...?

அந்த உரிமையையும், நம்பிக்கையையும் கொஞ்சம் கேட்டுப்பார்

அது சொல்லும் உன் மீதான என் காதலை...

அது சொல்லும் நாம் வாழ்ந்த நம் காதல் வாழ்க்கையை...

தொடர்கதை என்றெண்ணிய நம் காதல் கதையை

சிறுகதையாக்கிட உனக்கு எப்படி மனம் வந்ததடி பெண்ணே...!!!

வார்த்தை தவறிவிட்டாய் பெண்ணே...!!!

நம் வாழ்க்கையும் தவறி போனதடி பெண்ணே...!!!

உன் வார்த்தையாலா அல்லது என் வார்த்தையாலா...?

எதில் தவறியது நம் வாழ்க்கை...?
பதில் சொல்லடி என் கண்ணே...!!!"

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 22

ஜீவா இப்போதும் மனைவியைக் காதலிக்கிறானா என்று கேட்டால் அதற்கு அவனுக்கு விடை தெரியாது... அவளுக்காகத் தன்னுடைய உயிரையும் கொடுப்பானா... அதற்கும் அவனுக்கு விடை தெரியாது...

ஆனால் அவளை அவனுக்கு மிகவும் பிடிக்கும்... பணத்தைத் தேடி வெறிக் கொண்டு ஓடி கொண்டிருக்கும் அவனுக்கு இந்த உலகத்தில் அவளால் மட்டுமே நிம்மதி தர முடியும் என்று எண்ணினான்... அதனால் தான் அவளின் முகம் பார்த்து அவளின் மனதை படித்து அதற்கு ஏற்றார் போல் வாழ்ந்தான்... அது காதல் தானா என்று இப்போதும் அவனால் கூற முடியவில்லை...

அவளுக்காக உயிரையும் கொடுக்க வேண்டும் என்று அவன் நினைக்க மாட்டான்... ஆனால் அவளது உயிரை எப்பாடு பட்டாவது தன்னுடன் தக்க வைத்துக் கொள்ள வேண்டி அவன் கண்டிப்பாய்ப் போராடுவான்...

இதோ இப்போதும் மனம் கலங்க நின்றிருந்த மனையாளை கண்டு அவன் கலங்கி போய்த்தான் நின்றிருந்தான்... எப்படி அவளைச் சமாதானப்படுத்துவது என்று தெரியாமல்...

"சுபி..." என்றழைத்தபடி அவளை அணைத்துக் கொள்ள அவன் முயல... அதில் அவனை நிமிர்ந்து தீப்பார்வை பார்த்தவள்,

"ச்சீ..." வெறுப்பும், அருவருப்புமாய் ஒற்றைச் சொல்லோடு அவனைக் கடந்து சென்றாள்...

அதில் ஜீவா திகைத்து தான் போனான்... ஆவலோடும், ஆர்வத்தோடும், எதிர்பார்ப்போடும், மகிழ்வோடும் கண்கள் மின்ன தன் முகத்தைப் பார்க்கும் மனையாள் இவள்

இல்லை என்பதை உணர்ந்தவனுக்கு மனம் கனத்துப் போனது...

சுபிக்ஷா கோபத்தோடு செல்வதைக் கண்டு அபிமன்யு அவள் பின்னால் ஓடி சென்றவன் அவளைப் போக விடாமல் வழி மறைத்து நின்றான்...

"சுபி... சொன்னால் கேளு... ஜீவாவும், நானும் சும்மா தான் பேசிக்கிட்டு இருந்தோம்... நீ நினைக்கிறது மாதிரி எதுவும் இல்லை..." அவளிடத்தில் கூறியவன் சற்று தள்ளி நின்ற ஜீவாவை பார்த்து,

"அப்படித்தானே ஜீவா..." என்று ஜீவாவை பார்த்து கேட்க...

அதைக் கண்டு ஜீவா பல்லை கடித்தான் கோபத்துடன்... 'செய்வது எல்லாம் செய்துவிட்டு இப்போது ஒன்றும் தெரியாதது போல் கேட்பதை பார்...'

"உங்க கிட்ட பேசுறதுக்கு எனக்கு ஒண்ணும் இல்லை..." என்று முகத்தில் அடித்தார் போன்று கூறியவள் அவனைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் தனது பாதையில் செல்ல...

இப்போது அபிமன்யு செய்வதறியாது திகைத்து நின்றான்...

அபிமன்யுவை உதாசீனப்படுத்திய மனைவியின் செயலை கண்டு அவளைக் கட்டி அணைத்து முத்தம் கொடுக்க வேண்டும் போலிருந்தது ஜீவாவுக்கு... அத்தனை சந்தோசமாய் இருந்தது அவனுக்கு...

ஆனாலும் அபிமன்யுவை கண்டு எரிச்சல் வரத்தான் செய்தது... அவன் அருகில் வந்த ஜீவா,

"நீ வந்த வேலை சிறப்பா முடிந்தது அல்லவா... இப்போ நீ போகலாம்..." என்றான் வெறுப்புடன்...

"ஜீவா... நான் அந்த அர்த்தத்தில் பேசலை..."

"நீ எந்த அர்த்தத்தில் பேசவில்லை என்றாலும் நீ சொன்னதன் அர்த்தம் ஒன்றே ஒன்று தான்... நீ என் மனைவியை என் கிட்ட இருந்து கேட்டது தப்பு... அது தப்பான அர்த்தம் கொண்ட வார்த்தைகள்..."

ஜீவாவின் உஷ்ணமான வார்த்தையில் அபிமன்யுவின் தலை தானாகக் கவிழ்ந்தது...

"நான் ஒன்றும் வில்லன் இல்லை ஜீவா... இரண்டு மாதம் அவளுடன் வாழ்ந்த உனக்கே அவளைப் பிரிவது இத்தனை துன்பம் கொடுக்கிறது என்றால், சின்ன வயசில் இருந்து அவளைக் காதலிச்ச எனக்கு அவளைப் பிரிவது எத்தனை வலியை கொடுக்கும்..."

காதல் தோல்வியின் வலி அவனின் வார்த்தையில் பிரதிபலித்தது...

"ஆயிரம் பேரை நாம் காதலிக்கலாம்... ஆனால் எல்லோரையும் நாம் கல்யாணம் பண்ணிக்க முடியாது... அவள் உன் காதலியா இருந்தாலும் இப்போது அவள் என் மனைவி... என் மனைவியைப் பத்தி இனிமேல் என்னிடம் இப்படிப் பேசாதே..." கண்டிப்புடன் வந்தது ஜீவாவின் வார்த்தைகள்...

"சுபி..." அபிமன்யு தயங்கி நிற்க...

"இப்போது தான் சொன்னேன் அவள் என் மனைவி என்று... அவளைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும்..." என்ற ஜீவா நேரே தனது அறைக்குச் சென்றான்...

அவன் நினைத்தபடி அவனது மனையாள் அங்கே தான் இருந்தாள்... பெட்டியில் உடைகளை எடுத்து அடுக்கி கொண்டு இருந்தவள் மறந்தும் கணவனை நிமிர்ந்து

பார்க்கவில்லை... அத்தனை கோபம் அவன் மீது கனன்றது அவளது மனதில்...

தனது உடைகளோடு சேர்த்து கணவனது உடைகளையும் பெட்டியில் அடுக்கியது அவளது கைகள் தன்னிச்சையாக... அவளுக்கு இருந்த கோபத்தில் அவள் அதைக் கவனிக்கவில்லை... ஆனால் அவன் அதைக் கவனித்தவனாய் கட்டிலில் வந்தமர்ந்தவன் புன்னகையுடன் அவளைப் பார்த்தான்...

முதலில் கணவனது புன்னகைக்கான அர்த்தம் புரியாமல் அதற்கும் அவளுக்குக் கோபம் வந்தது... பின் அவனது பார்வை சென்ற இடத்தைக் கண்டதும் அவளுக்கு அது புரிந்து போகப் பெட்டியில் இருந்த அனைத்து உடைகளையும் தூக்கி கட்டிலில் போட்டாள் கோபத்துடன்...

அவளது இந்தச் சிறுபிள்ளைத்தனமான செயலை கண்டு அவனது புன்னகை இன்னமும் விரிந்தது... தவறு செய்த கணவனை ஒன்றும் செய்ய முடியாதபடி இருக்கும் தன் நிலையை அறவே வெறுத்தவளாய் கட்டிலில் அமர்ந்தவளின் மனம் ஆத்திரத்தில் படபடத்துக் கொண்டிருந்தது...

"இப்போ எதுக்கு இவ்வளவு கோபம் பேபி... எதுவாக இருந்தாலும் பேசி தீர்த்துக்கலாம்..."

"ஏன் என் கோபம் எதுக்குன்னு உங்களுக்குத் தெரியாதா...?" என்று அவனை உறுத்து விழித்தவள்,

"பேசி தீர்க்கும் அளவுக்கு நம்மிடையே எதுவுமில்லை...? எந்த உறவும் இல்லை..." என்றாள் கோபத்தோடு வெடுக்கென்று...

"உறவு இல்லையா..." என்றவன் அவள் புறமாய்க் குனிந்து சட்டென்று அவளது புடவைக்குள் ஒளிந்து கொண்டிருந்த தாலி சங்கிலியை எடுத்து அதில் பவளமணிகளோடு

கோர்த்திருந்த பொன்தாலியை எடுத்து அவள் கண்முன் ஆட்டியபடி,

"இந்த உறவு ஒன்று போதாதா..."

அவனது செயலில் தன்னிச்சையாய் அச்சத்துடன் பின்னால் நகர்ந்தவள், அவனது வார்த்தையில் வேகம் கொண்டு அந்தத் தாலியை வெடுக்கென்று அவனது கையில் இருந்து பறித்தபடி,

"இது தானே உங்களை நீங்க குரங்காட்டியாய் நினைத்துக் கொண்டு என்னைக் குரங்காய் ஆட்டுவிப்பதற்கான காரணம்..."

அதைக் கேட்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது போலும்... சற்றுப் பலமாய்ச் சிரித்துவிட்டான்... இந்தளவுக்கு அவனுடன் பேசி கொண்டு இருப்பவளின் மனதை வெகு எளிதாக மாற்றிவிடலாம் என்று தப்புக்கணக்கு போட்டு சற்று இலகுவான மனநிலையில் அவன் இருந்தான்...

"சரி நான் குரங்காட்டி இல்லை... நீ குரங்காட்டியாய் இரு... நான் குரங்காய் மாறிப் போகிறேன்... நீ என்ன சொல்லுகிறாயோ அதை நான் அப்படியே கேட்கிறேன்... ஓகேவா பேபி..." சன்னச் சிரிப்புடன் கூறியவன் அவளை அணைக்க வர, அதைக் கை நீட்டி தடுத்தவள்,

"உண்மை தான் நீங்க என்னை ஆட்டிவிப்பதற்கு ஏத்த மாதிரி நானும் மதியிழந்து போய் ஆடி கொண்டு இருந்தேன் இல்லையா... அது தான் நான் செய்த மிகப்பெரிய தவறு..." என்றவளின் மனதில் தனக்கு உயிருக்கு உயிரான இசையை அவனுக்காகத் துறந்தது நியாபகத்தில் வந்து பெரும் வேதனையில் ஆழ்த்தியது அவளை...

"பேபி..." அவளது வேதனை அவனையும் வருத்தியதோ மிக வருத்தமாய் வந்தது அவனது குரல்...

"இனியும் அந்தத் தவறை நான் செய்வதாய் இல்லை..." என்றவள் அதே கோபத்தோடு அந்தத் தாலி சங்கிலியை கழட்ட போனாள்...

அதைக் கண்டு அத்தனை நேரமிருந்த அவனது இலகுத்தன்மை அப்படியே மாறிப் போனது...

"சுபிக்ஷா..." என்று அவனது குரல் கோபமாய் அவளை அதட்டியது...

முகம் சிவக்க இறுக்கமாய் நின்றிருந்த கணவனைக் கண்டு அவள் மனதில் பயம் எழுந்த போதும் அதை மறைத்துக் கொண்டு அவனது கோபப்பார்வையைச் சளைக்காது எதிர் கொண்டாள் தைரியத்துடன்...

"நான் இறந்த பிறகு தான் இதை நீ கழட்டணும்..." அவனது இந்த வார்த்தையில் அத்தனை கோபம், அத்தனை அழுத்தம் இருந்தது...

அதைக் கேட்டு அவளுக்கும் கோபம் வந்தது... செய்வது எல்லாம் தவறு... இதில் இத்தனை அதிகாரம் தேவை தானா...? என்று...

"அப்படி என்றால் இது என் கழுத்தில் இருப்பதும் ஒண்ணு தான்... இல்லாமல் இருப்பதும் ஒண்ணு தான்..."

அதாவது அவன் இருப்பதும் ஒன்று தான்... இல்லாமல் இருப்பதும் ஒன்று தான் என்ற அர்த்தத்தில் அவள் எடுத்தெறிந்து கூறினாள்...

அவளின் மனதை சிறிதும் புரிந்து கொள்ளாமல் அதைத் துடிக்கத் துடிக்கக் கொன்ற கணவனை மன்னிக்க அவள் தயாராக இல்லை...

வேறு ஒருத்தியை மனதால் காதலித்து விட்டுப் பின் பழிவாங்க என்று தன்னைத் திருமணம் செய்து தன்

வாழ்க்கையைக் கணவன் பாழாக்கி விட்டதாகவே அவள் முடிவு செய்துவிட்டாள்... திருமணத்திற்குப் பின் அவன் அவளுடன் வாழ்ந்த ஆத்மார்த்தமான வாழ்க்கையை அவள் மறந்து போனாள் தனக்கு வசதியாக...

மனைவியின் வார்த்தைகளில் அவனது இதயத்தில் ஆயிரக்கணக்கான ஊசிகள் ஒன்று சேர்ந்து குத்தினது போல் தாங்க முடியாத வலி ஒன்று தோன்றியது... அவன் ஒரு எதார்த்தவாதி தான் ஆனாலும் மனைவியின் இந்த வார்த்தைகள் அவனைப் பெரிதும் பாதித்தது...

ஆனாலும் மனதை தேற்றிக் கொண்டு அவளைப் பார்த்து, "லூசு மாதிரி உளறாதே பேபி..." என்று அவளைப் பார்த்துக் கடிந்தான்...

"ஆமாம் நான் லூசு தான்... அவங்க இரண்டு பேரை மாதிரி தப்பிக்க வழி தெரியாமல் உங்க கிட்ட மாட்டிக்கிட்டு முழிக்கிறேன்ல்ல நான் லூசு தான்..." என்றவள் தன் கோபத்தைக் காட்டும் வழியறியாது புடவையின் முந்தானையின் நுனியை பிடித்துத் திருகி முறுக்கி கொண்டு இருந்தாள் எரிச்சலோடு...

அவளது அந்தச் செயலில் மனம் மயங்கியவன் அவளின் அழகில் சித்தம் தடுமாறித்தான் போனான்...

அந்த ஆகாய வண்ண ஷிபான் புடவை அவளது உடலை பாந்தமாய்த் தழுவியிருந்தது அத்தனை அழகாய் இருந்தது... பொய்யோ எனும் இடையாளாய் அமர்ந்திருந்த மனையாளின் அழுத முகம் கூட அவனுள் தாபத்தைக் கிளப்ப அவளைப் பார்வையால் பருகியபடி அவன் நின்றிருந்தான்...

எதையோ வாய்க்குள் முணுமுணுத்தபடி நிமிர்ந்தவள் கணவனது உரிமை பார்வையைக் கண்டு அவனைக் கோபமாய் முறைத்து பார்த்தாள்... அவளைப் பார்க்கும் போது சின்னப்பிள்ளை ஒன்று அடம்பிடிப்பது

போலிருந்தது அவனுக்கு... அதில் அவனது மனம் சிறிது லேசானது...

உண்மையில் அவளும் சின்னப்பெண் தான்... தன்னை விடப் பத்து வயது இளையவள் அவள் என்பது அப்போது தான் அவனது புத்தியில் உறைக்க அவளை நிதானமாகப் பார்த்தவன் பின் மென்மையான குரலில்,

"சரி உன் பிரச்சினை தான் என்னன்னு சொல்லு...?"

"ம்... என் பிரச்சினையே நீங்க தான்... நீங்க மட்டும் தான்... செய்றது எல்லாம் தப்பு... இதில் புத்தர் மாதிரி ஒண்ணுமே தெரியாத நல்லவர் மாதிரி உங்களால எப்படி இப்படி நடிக்க முடியுது...? ஆங்... உங்களுக்கு எல்லாம் நடிக்கச் சொல்லியா கொடுக்கணும்... அது தான் கை வந்த கலையாச்சே... இப்படி நடிச்சு நடிச்சு தானே என்னைக் கவுத்தீங்க..." கோபமும், அழுகையுமாய் அவள் வெடிக்க...

"இங்கே பார்... என்னை என்ன வேணா திட்டு... நான் செஞ்சது தப்பு தான் ஒத்துக்கிறேன்... அதுக்காக நான் உன் கூட வாழ்ந்தது பொய், நடிப்புன்னு சொல்லாதே..."

அவளது பேச்சு கேட்டு அவனுக்கும் கோபம் வந்தது...

"நீங்க நடிக்கலைன்னு பொய் சொல்லாதீங்க... கல்யாணத்துக்கு முந்தின நாள் வரை என்னைப் பிடிக்காம இருந்தீங்க... கல்யாணத்துக்கு அப்புறம் என்னை உங்களுக்குப் பிடிச்சு போச்சுன்னா எந்தக் கேனச்சியும் நம்ப மாட்டாள்..."

அதைக் கேட்டு இப்போது அவனுக்குச் சிரிப்பு வந்தது... ஒரு சமயம் நெருப்பாய் தகிக்கச் செய்கிறாள்... மறு சமயம் பனிச்சாரலாய் மனதை குளிர்விக்கிறாள் அவனது மனைவி... இப்போது தான் அவன் நடிக்கிறாள் என்று குற்றம் சாட்டினாள்... அடுத்த நொடி அவனுக்கு அவளைப் பிடித்திருப்பதாய் சொல்கிறாள்...

"இந்தக் கேனச்சி நம்புவாள்..." என்றான் புன்னகையுடன்...

"ஆமாம்... ஆமாம்... அதனால் தான் நீங்க என்னை நல்லா ஏமாத்திட்டீங்க..."

அதற்குப் பதில் சொல்லாது அவள் அருகில் அவன் வர...

"எதுவா இருந்தாலும் தள்ளி நின்னு பேசுங்க... இப்படிக் கிட்டே வர வேண்டாம்..." என்று அவள் எச்சரிக்க...

"நீ தான் நான் நடிக்கிறேன்னு சொல்றியே... அதான் நடிப்பா இல்லை உண்மையான்னு உனக்கு உணர்த்தலாம்ன்னு இருக்கேன்..." என்றவன் அடுத்த நொடி அவளை ஆரத்தழுவி இருந்தான்...

அவனது இந்த அணைப்பில் நிச்சயம் காமம் இல்லை... தேடல் இல்லை... தாபம் இல்லை... ஆனால் அதில் ஆதரவு இருந்தது, அரவணைப்பு இருந்தது, ஆறுதல் இருந்தது...

அதை அவளும் உணர்ந்தாளோ என்னவோ... அவனது அணைப்பை கண்டு முதலில் திமிறி விலக முயன்றவள் பின் மெதுமெதுவாய் அவனுள் புதைந்தாள் மனதின் வேதனையைத் தாங்க முடியாது...

அதை உணர்ந்தவனாய் அவனும் அவளை ஆறுதல்படுத்தினான் அவளின் தலையை மென்மையாய் வருடி கொடுத்து...

பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தவள் கோபத்தோடு அவனைத் தள்ளிவிட்டாள்... திடீரென்ற அவளது இந்தச் செயலில் அவளைப் புரியாது பார்த்தான் அவன்...

"இந்தப் பொருத்தம் மட்டும் தான் நமக்குள் இருக்கு... வேறு எந்தப் பொருத்தமும் இல்லை..." என்றாள் இருவரது உடலையும் சுட்டிக்காட்டி...

அதைக் கேட்டு அவனுக்கு மனம் வெறுத்துப் போனது... அவனும் எத்தனை நேரம் தான் பொறுமையாய்ப் பேசுவான்... அவன் இத்தனை பொறுமையாய் பேசியது இவளிடத்தில் மட்டும் தான்... இப்படித் தழைந்து போவது இவளிடத்தில் மட்டும் தான்...

"ஆமாம்டி... ஊர் உலகத்துல பொண்ணுங்களே இல்லைன்னு உன்னைத் தேடி வந்து கல்யாணம் பண்ணிக்கிட்டு என் உடல் பசியைத் தீர்த்துக்கிட்டேன் போதுமா..."

அதற்கு மேல் கோபமாய் அசிங்கமாய் வார்த்தைகளை உதிர்க்க போனவன் சட்டென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்...

"இப்போ உனக்கு என்ன தான்டி வேணும்...?" எரிச்சலுடன் வந்தது அவனது வார்த்தைகள்... அவனது பொறுமை எல்லையைக் கடந்து அதற்கும் அப்பால் வெகுதூரம் சென்றிருந்தது...

"உங்க கிட்ட இருந்து எனக்கு விடுதலை வேணும்... அதை உங்களால் கொடுக்க முடியுமா...?" அழுகையோடு கோபமாய் வெடித்தவளை கண்டு அவன் ஒரு நொடி ஸ்தம்பித்து நின்றான்...

இதை அவன் அவளிடத்தில் இருந்து சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை...

"கொடுக்க முடியாதுன்னா என்ன செய்வ...?"

அவனைப் பொருத்தவரை திருமணம் என்பது வாழ்வில் ஒரு முறை மட்டும் தான்... அது அவளோடு நடந்து முடிந்துவிட்டது... அதிலிருந்து பின்வாங்க அவனுக்கு விருப்பமில்லை... அவளையும் பின்வாங்க விட மாட்டான்...

"உங்களை மாதிரி ஒரு பொய்க்காரனோடு என்னால் வாழ முடியாது..." அத்தனை நேரமிருந்த அழுகை மறைந்து ஆவேச குரலில் கத்தியவள்,

"ஆரம்பத்தில் இருந்தே பொய், பித்தலாட்டம் இதைத் தவிர உங்களுக்கு என்ன தெரியும்... உங்களுக்கும், அபி மாமாவுக்கும்..." என்று அவள் சொல்லும் போதே...

"அவன் உனக்கு மாமா என்றால் அப்போ நான் யார் உனக்கு...?" உஷ்ணத்துடன் மனைவியை முறைத்தான் ஜீவா...

"இந்த வார்த்தையைச் சொன்னதுக்காகத் தான் அன்னைக்கு என்னைக் கீழே தள்ளிவிட்டீங்க... அது உங்களுக்கு நியாபகம் இல்லையா..."

அதில் அவனது முகம் கறுத்துப் போனது அந்நாள் நினைவில்...

"அது அப்போ... இப்போ நீ மாமான்னு கூப்பிடறது தனிக் கிக்கா இருக்குன்னு நான் சொன்னது உனக்கு மறந்து போச்சா..."

அதைக் கேட்டு அவள் சற்றுத் திணறித்தான் போனாள் அவன் மீது கொண்ட காதலில்...

'எந்த நேரத்தில் எதைப் பேசுறாங்க...?' மனதில் முணுமுணுத்தவள்,

"பேச்சை மாத்தாதீங்க..." என்றாள் சற்று காட்டத்துடன் தன் மனதை மறைத்துக் கொண்டு...

"அதே போல் நீயும் ரூட் மாத்தாமல் நேரே விசயத்துக்கு வா..."

அதைக் கேட்டு அருவருப்பில் முகத்தைச் சுளித்தவள், "இந்த ரூட் மாத்துற புத்தி எல்லாம் உங்களுக்குத் தான் உண்டு... எனக்கு இல்லை..." என்றவள்,

"உங்களுக்கும், அவங்களுக்கும் இடையில் பிரச்சினை இருந்தா நீங்க ரெண்டு பேரும் நேரடியா மோதியிருக்கணும்... இடையில் என் வாழ்க்கையை ஏன் பாழாக்கினீங்க...?"

"சும்மா இதையே சொல்லாதே சுபி... இப்போ உன் வாழ்க்கை என்ன பாழாகி போச்சு... நாம சந்தோசமாகத் தானே வாழ்ந்துட்டு இருக்கோம்..."

கணவனுக்கு எப்படிப் பெண் மனதை புரிய வைப்பது என்று அவளுக்குத் தெரியவில்லை...

"இன்னும் என்ன பாழாக இருக்கு...? அதான் நீங்க ஒருத்தியை மனசில் நினைச்சிக்கிட்டு என் கூட வாழ்ந்துட்டு இருக்கீங்களே... இதை விட நீங்க என்னைக் கேவலப்படுத்த முடியாது..."

"ஹேய் லூசா நீ... ஹர்ஷி தான் என்னைக் காதலிச்சா... நானில்லை போதுமா...? ஏதாவது பேசுணும்ன்னு சும்மா உளற கூடாது..."

"அப்போ அவங்க கிட்ட அதான் அபி கிட்ட சொன்னீங்களே... பதிலுக்கு என் காதலை சொல்ல முடியாம தலை குனிஞ்சது எனக்குத் தான் தெரியும்ன்னு இதுக்கு என்ன அர்த்தம்..."

அதுக்கு இப்படி ஒரு அர்த்தம் இருக்கிறதா என்று அவனுக்கு அத்தனை ஆயாசமாக இருந்தது...

"அது அப்படி இல்லை பேபி..." அவளுக்குப் புரிய வைத்திடும் நோக்கில் அருகில் வந்தவனைக் கண்டு,

"எதுவாக இருந்தாலும் அங்கேயே நின்னு பேசுங்க..." என்றாள் அழுத்தமான குரலில்...

அந்தக் குரலே சொல்லியது 'நீ எனக்குப் பதில் சொல்லித்தானாக வேண்டும்' என்று... இத்தனை நாள் பழக்கத்தில் அவளைப் பற்றி அவனுக்குத் தெரியாதா... அதனால் அங்கேயே நின்றான்...

"இங்கே பார் உன் பின்னாடி ஒரு பையன் சுத்தி சுத்தி வந்தால் உன்னையும் அறியாமல் ஒருவித ஈர்ப்பு வருமா இல்லையா...?"

"நிச்சயம் வராது... அந்தளவுக்கு என் மனதை அலைப்பாய விட்டுக்கிட்டு நான் இருக்க மாட்டேன்..." என்றாள் வெடுக்கென்று கோபத்தோடு...

அதைக் கேட்டு அவனது இதழ்களில் புன்னகை அரும்பியது...

"உன் அளவுக்கு எனக்குத் தெளிவு இல்லை பேபி... அந்த இடத்தில் நான் கொஞ்சம் சறுக்கித்தான் போனேன்... தப்பு தான்... ஆனா அவளோட அண்ணன் பேசிய பேச்சுக்கு அந்த ஈர்ப்பு கூடக் குறைஞ்சு போய் அவளைக் காதலிச்சு அவனைப் பழிவாங்க தான் எனக்குத் தோணுச்சு..."

"அப்படி நீங்க செஞ்சியிருந்தா நான் தப்பிச்சிருப்பேன்..." என்றாள் எரிச்சலோடு...

"நீயே சொல்லு காதலிச்ச பொண்ணை யாராவது பழிவாங்க நினைப்பாங்களா...?"

"நீங்க நினைப்பீங்க... ஏன்னா கல்யாணம் பண்ணி என்னை நீங்க பழிவாங்க நினைக்கலை..."

"ச்சு... திரும்பத் திரும்பப் புரிஞ்சிக்காம பேசாதே... அப்படி நான் அவளைக் காதலிச்சிருந்தா அவளைக் கல்யாணம்

பண்ணிக்கிறதுக்கு எனக்கு எந்தத் தடையும் இல்லை... என் மனம் விரும்பிய வாழ்க்கையை நான் வாழ யாரும் தடை போட முடியாது..."

உறுதியான குரலில் கூறியவனின் வார்த்தைகள் அது உண்மை என்றே கூறியது...

"இப்பவும் எப்பவும் என் வாழ்க்கையில் வேறு பெண் யாரும் கிடையாது பேபி... இந்த நொடி என் வாழ்க்கையில் நீ மட்டும் தான்..."

அவனது அந்த வார்த்தையில் அவளது கண்களில் கண்ணீர் உடைப்பெடுத்துக் கொண்டு வழிந்தோடியது... அதை உணர்ந்தவனாய் அவனது குரலும் மென்மையுடன் ஒலித்தது...

"என்னைச் சுத்தி எத்தனை பெண்கள் வந்தாலும் என் வாழ்க்கை உன்னோடு மட்டும் தான் பேபி..." என்றவன்,

"அம்ரு பிறப்புக்கு பின்பு ஹர்ஷி மேலிருந்த பழிவாங்குகிற குணம் எல்லாம் மாறி போச்சு... அவள் இருக்கும் திசை பக்கம் தலை வச்சுப் படுத்தது கூடக் கிடையாது... இவ்வளவு பொசசிவ்வா இருக்கிற நீ எப்படி ஸ்ருதி, அம்ரு உறவை ஏத்துக்கிட்ட...?"

அவனது கேள்வி அவளது மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது... அவன் கூறுவது சரி தானே... அன்று பெரியவர்களுக்காகத் தான் திருமணம் செய்தாலும் அந்த விசயத்தைப் பெரிதாக எண்ணி அவள் சண்டை போடவில்லை... அது இறந்தகாலம் என்று அமைதியாக அதை ஏற்றுக் கொண்டாள்... ஆனால் இப்போது ஹர்ஷிதா விசயத்தை ஏன் அவ்வாறு அப்படி நினைக்க முடியவில்லை...

அது தன் மனதில் எழுந்த காதலாலா இல்லை கணவன் மனதில் தன்னைத் தவிர வேறு பெண் இருக்கக் கூடாது

என்கிற உரிமை உணர்வாலா...? எதுவென்று அவளுக்கு இனம் பிரிக்கத் தெரியவில்லை... ஆனால் அதைக் கேட்ட நொடி அவள் மனதுக்குள் பெரிதும் உடைந்து போனது என்னவோ உண்மை...

"பேச்சை மாத்தாதீங்க..." என்று பேச வகையற்றுக் கணவனிடம் எரிந்து விழுந்தாள்...

"இனி பேச ஒண்ணுமில்லை... எல்லாத்தையும் உன் கிட்ட சொல்லிட்டேன்... நீ தான் முடிவு பண்ணணும்..." என்றான் தோளை குலுக்கியபடி...

"அப்போ நீங்க பழிவாங்குவதற்காக என் கல்யாணத்தை நிறுத்தி அதை யாருக்கும் தெரியாமல் மறைத்து ஏதோ தியாகம் பண்ற மாதிரி என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது சரின்னு சொல்ல வர்றீங்களா...?" அழுத்தமாய் வந்து விழுந்த அவளது வார்த்தைகளைக் கண்டு அவன் திகைத்து தான் விழித்தான்...

இப்போது தான் ஒரு பிரச்சினையைப் பேசி தீர்த்தான்... அதற்குள் இன்னொரு பிரச்சினையா...?

"இப்போ உனக்கு என்ன தான் பிரச்சினை...? ஒண்ணு மாத்தி ஒண்ணு கேள்வி கேட்டுட்டு இருந்தால் எப்படி...?"

"இரண்டுக்கும் சம்பந்தம் இருக்கு... நீங்க பதில் சொல்லுங்க..."

"சரி, தப்புன்னு நான் சொல்ல வரலை... நடந்து முடிந்ததை மறந்துவிடு... இனிமேல் இந்த மாதிரி தவறு நடக்காம நான் பார்த்துக்கிறேன்... இப்போ உன்னைப் பார்த்துக்கிற மாதிரி எப்போதும் உன்னை நான் பத்திரமா பார்த்துக்கிறேன்... ஐ ப்ராமிஸ் யூ..."

கணவனாய் அவனால் மனைவிக்கு அந்த உத்தரவாதத்தைத் தான் அளிக்க முடிந்தது...

"எவ்வளவு ஈசியா சொல்லிட்டீங்க நடந்ததை மறந்துடுன்னு... என்னோட மனசில் என்ன இருந்ததுன்னு தெரியாம முதல் நாள் ராத்திரி என் கல்யாணத்தை நிறுத்தியிருக்கீங்க... மறுநாள் திடீர்ன்னு எனக்கு மணமகனா நீங்க வந்து என் கழுத்தில் தாலி கட்டுனீங்க... ஒரு நாள் ராத்திரியில் என் ஒட்டு மொத்த வாழ்க்கையையும் அப்படியே புரட்டி போட்டது போல் எல்லாத்தையும் மாத்திட்டீங்க... கல்யாணம் நிக்கிறதுக்கு ஒரு நிமிசத்துக்கு முன்னாடி வரை அபியை என் கணவனா நினைச்சு என் மனசிலும் சின்னச் சலனம் வந்ததைப் பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா... அந்தச் சலனம் ஏற்பட்ட அடுத்த நிமிசம் அது கனவா கலைந்து போனதோட வலி என்னன்னு உங்களுக்குத் தெரியுமா...?"

பெண்ணின் நுண்ணிய உணர்வுகளை மனைவியின் வாயிலாக அறிந்து கொண்டிருந்தவன் திகைத்து போய் நின்றிருந்தான்...

"உங்களுக்கு என்னோட மனசை பத்தி எந்தக் கவலையும் இல்லை... உங்களுக்கு நீங்க நினைச்சது சாதிக்கணும்ன்னு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க... நான் மத்த பொண்ணுங்களை மாதிரி அவங்களை உயிருக்கு உயிரா காதலிச்சு இருந்தால் நம்ம ரெண்டு பேரோட நிலைமை என்னவாகி இருக்கும்... முக்கியமா என்னோட நிலைமை... ஒருத்தங்களை மனசில் நினைச்சிக்கிட்டு இன்னொருத்தங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழுற கொடுமையை நான் அனுபவிச்சிருக்கணும்... இப்போ சொல்லுங்க என் மனசில் அபி இருந்தால் நீங்க என்ன பண்ணியிருப்பீங்க..."

அதைக் கேட்டு அவன் அவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருக்க...

"இப்போ உங்க மனசுக்குக் கஷ்டமாயிருக்கு இல்லையா... அது போல் தான் எனக்கும் உங்க மனசுல ஹர்ஷிதா இருக்கிறாள்ன்னு தெரிஞ்சதும் கஷ்டமாயிருந்தது... காதல்,

கல்யாணம்ங்கிறது நீங்க நினைக்கிற மாதிரி அவ்வளவு லேசில்லை... அது இரண்டு மனசு சம்பந்தப்பட்டது..."

"அதைத் தான் நானும் சொல்றேன்... இது நம்ம ரெண்டு பேர் சம்பந்தப்பட்டதுன்னு... உனக்கு என்னைப் பிடிக்கும்... எனக்கு உன்னைப் பிடிக்கும்... இதுக்கு மேல என்ன வேணும்... அப்படியே உன் மனசில் அபி இருந்தாலும் உன் மனசை என் பக்கம் எப்படித் திருப்புவதுன்னு எனக்குத் தெரியும்... அவனை விட எல்லா விதத்திலும் நான் உனக்குப் பெட்டர் சாய்ஸ் தான்..."

கர்வமாய்ச் சொன்னவனின் வார்த்தையில் அவளது மனம் பொடி பொடியாய் உடைந்து உதிர்ந்து கொண்டு இருந்தது...

அந்தளவுக்குக் கர்வமாய் அவனிடத்தில் பேசுவதற்கு அவனைப் போல் அவளிடம் அழகோ, அந்தஸ்தோ இல்லையே... அந்தக் கழிவிரக்கம் அவள் மனதை தாக்க,

"ச்சீ... நீங்க மனுசனே இல்லை... ராட்சசன்..." வெடித்துக் கதறினாள் அவள்...

அதைக் கேட்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"ஆமாம் நான் ராட்சசன் தான்... அந்த ராமனை கடத்திட்டு போய் இந்தச் சீதா தேவியைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட இராவணன் தான்... ஆனா மனசளவில் நான் அந்த இராமனுக்குச் சற்றும் குறைந்தவன் இல்லை... அதை நீ நியாபகத்தில் வச்சிக்கோ..."

'இவங்களோட இந்தக் கர்வம் அடங்கவே அடங்காதா...? செய்த தவறை உணரவே மாட்டாங்களா...?' ஆதங்கத்தோடு நினைத்தவளுக்குக் கோபம் மட்டுமே மிஞ்சியிருந்தது...

"உனக்கு வேறுவழியில்லை பேபி... இந்த ஜென்மத்தில் நான் தான் உன் கணவன்... நீ என் கூடத்தான் வாழ்ந்தாகணும்..." என்றான் புன்னகையுடன்...

நொடிக்கு நொடி தளர்ந்து போகும் மனையாளின் மனநிலையை அவனுக்குச் சாதகமாக எண்ணி கொண்டான் போலும்...

"என்னை என்ன உங்களைப் போல் கேவலமான பிறவின்னு நினைச்சீங்களா...? உங்களை மாதிரி கேவலமான மனிதருடன் என்னால் வாழ முடியாது... சீட்டுக்கட்டு மாளிகை போல் பொய்யின் அடிப்படையில் திருமணம் செஞ்சு கொண்ட நம்ம வாழ்க்கை என்றுமே நிலைக்கப் போவதில்லை... நம்ம கல்யாணமே பொய்... நீங்க பொய்... நீங்க காட்டிய அன்பு பொய்... நம்ம வாழ்க்கை பொய்... மொத்ததில் எல்லாமே பொய்..."

நேற்றிரவு ஈருடல் ஓருயிராய் தன்னுடன் வாழ்ந்துவிட்டு இன்று இப்படிப் பேசும் மனையாளை உணர்விலாது பார்த்தான் அவன்...

"இதுக்கு மேலே நானும் ஒண்ணும் விளக்கம் கொடுக்கப் போவதில்லை... எல்லாவற்றையும் யோசிச்சு பார் உனக்கே எல்லாம் புரியும்..."

கெஞ்சுகிறானா இல்லை மிஞ்சுகிறானா என்று ஆராய்ந்து பார்க்க முடியாத குரலில் கூறிய கணவனை வெறித்துப் பார்த்தவள்,

"எனக்கு எதுவும் புரிய வேண்டாம்... புரிந்த வரை எல்லாம் போதும்... அடிப்படை அன்பில்லாமல் இனியும் முதுகெலும்பு இழந்து உங்களைச் சார்ந்து வாழ என்னால் முடியாது..." என்றபடி கிளம்ப ஆயத்தமானவளை கண்டு அவனது உள்ளம் துடித்தது...

உண்மையில் அவள் தன்னை விட்டு நீங்கி சென்றுவிடுவாளோ என்கிற எண்ணம் அவனது மனதை பிசைய அவள் அருகில் வந்து அவளது கையைப் பிடித்துக் கொண்டு,

"ப்ளீஸ் பேபி... இனி இந்தத் தவறு நடக்காது... நான் பண்ணியது தப்பு தான்... என்னை மன்னிக்கக் கூடாதா..."

மன்னிப்பு கேட்டவனின் விழிகள் இரண்டும் தன்னவளை ஆர்வமும், ஆவலுமாய்ப் பார்த்தது... அவளோ அவனிடம் 'மன்னிப்பு தேவையில்லை' என்று கூறவும் இல்லை, அவர்களது 'பாசையில்' அவனை மன்னிக்கவும் இல்லை...

மாறாக அவனது கையை உதறிவிட்டு சென்றாள் தனது பொருட்களை எடுத்து வைப்பதற்காக... அவளது மனம் அந்தளவுக்குக் கல்லாய் இறுகி போயிருந்தது கணவனது துரோகத்தை நினைத்து...

அவள் சென்னை செல்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் தானே செய்வதாக அவன் கூறிய போதும் அவள் தடுத்து விட்டாள்...

"அந்தளவுக்குத் தைரியமில்லாத கோழை நானில்லை..." என்றவள் அங்கிருந்தபடி விமானச்சீட்டை பதிவு செய்தாள்... அது உறுதியாக ஒரு அரை மணி நேரமாகும் என்றதும் அவள் அறையில் இருக்கப் பிடிக்காமல் பால்கனியில் வந்தமர்ந்து கொண்டாள்...

அங்கு இருந்தால் கணவனிடம் எதையாவது பேச வேண்டும்... அவளுக்கு இருக்கும் மனநிலையில் அவனுடன் பேச பிடிக்கவில்லை...

கிடைத்த நேரத்தில் ஜீவா அவளுக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தான் அவள் அறியாமல்...

அவன் செய்த ஏற்பாட்டில் அவளுக்கு விமானச்சீட்டு முதல் கார் வரை எல்லாம் விடுதிக்கே தேடி வந்தது... அவளுக்கு இருந்த மனக்குழப்பத்தில் அது எதையும் யோசிக்கவில்லை... இங்கிருந்து சென்றால் போதும் என்றே நினைத்தாள்...

அவளுக்கே தன் மனநிலை புதிராக இருந்தது... அவளது காதல் மனம் கணவன் வேண்டும் என்று வாதிட்டது... மறு மனமோ 'அந்தக் காதலை கொன்றவனே அவன் தானே அவன் உனக்குத் தேவையா...?' என்று வாதிட்டது...

மொத்தத்தில் எதுவுமே வேண்டாம் என்று வாழ்க்கையில் தோற்றுப் போய்ப் புறமுதுகிட்டு ஓடி போகிறாள் அவள்... தான் ஏமாந்து போனதை நினைத்து அவளுக்கு அழுகையாக வந்தது...

விமானத்தில் முதல் வகுப்பில் ஏறியமர்ந்தவளுக்குத் திருமணம் முடிந்து தான் முதன்முறையாக மும்பைக்கு வந்த தனிவிமானப் பயணம் நியாபகத்தில் வந்தது... அத்தோடு கணவனின் நினைவுகளும் சேர்த்து... அதில் அவளையும் அறியாது விழிகளில் விழிநீர் வழிந்தோடியது...

எத்தனை அழகாய் ஆரம்பித்த திருமண வாழ்க்கை எந்தப் புள்ளியில் இப்படி அலங்கோலமாய் மாறிப் போனது... அது அவளுக்குத் தெரியவில்லை...

"ச்சு... என்ன பேபி இது... இப்படி அழுதுக்கிட்டு...?" அன்பாய் கடியும் கணவனது வார்த்தைகள் அவளது காதில் ஒலிக்க...

'இந்தளவுக்கு என்னைப் பாடு படுத்தியும் அவங்களோட நினைவுகளை என்னால் மறக்க முடியலையே...' என்று வேதனையாய் நினைத்தவள் அந்தக் குரலை புறம்தள்ளியவளாய் மீண்டும் கண்ணீர் வடித்தாள் அசோகவனத்து சீதையாய் சோகமாய்...

"சொல் பேச்சு கேட்பதாய் இல்லை..." என்ற குரலை தொடர்ந்து கணவனது வலிமையான கரங்கள் அவளது கண்ணீரை துடைக்க... அதில் திகைத்துப் போய்த் திரும்பி பார்த்தவள் பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்த கணவனைக் கண்டு அதிர்ந்து தான் போனாள்...

விமானம் கிளம்புவதற்கு ஐந்து நிமிடத்திற்கு முன் தான் அவன் வந்து சேர்ந்தான்... விமானம் கிளம்பி மேலே பறந்து பத்து நிமிடங்களாகியும் சுற்றுப்புறம் உணராமல் கண்ணீர் வடித்த மனைவியின் கண்ணீர் நிற்காத காரணத்தால் தான் அவன் அவளை அப்படிக் கடிந்து கொண்டது...

"இப்பவாவது ஒத்துக்கோ பேபி... நான் உன் மனசை பாதிக்கிறேன்னு..." கண்சிமிட்டி குறும்பாய் அவன் சிரிக்க...

அதைக் கண்டு அவள் கோபத்துடன் இருக்கையில் இருந்து எழப் போக, அவளது கைப்பிடித்து வலுக்கட்டாயமாய் மீண்டும் அவளை அமர வைத்தவன்,

"இது என்ன உங்க ஊர் பஸ்சுன்னு நினைச்சியா...? பேசாம உட்காரு..." என்றவன் அவளைக் கிண்டலடித்தபடி அதட்ட...

தான் இத்தனை வேதனை படும் போதும் அவன் இப்படிச் சாதாரணமாக இருப்பது கண்டு அவளுக்குத் துக்கமாக இருந்த அதே சமயம் கோபமும் எழுந்தது அவன் மீது...

"உங்க பக்கத்தில் உட்கார்றதுக்கு இங்கே இருந்து குதிச்சு தற்கொலை பண்ணிக்கலாம்..." அடக்கப்பட்ட குரலில் கோபமாய் அவனிடத்தில் சீறினாள் அவள்...

அதைக் கேட்டு அவனது கண்ணில் அடிப்பட்ட வலி தோன்றியது... 'உன்னோடு வாழ்வது எனக்குத் தற்கொலைக்குச் சமம்...' என்று கூறும் மனையாளுக்குத் தன் மனதினை எப்படிப் புரிய வைப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை...

"என்னைப் புரிஞ்சிக்கவே மாட்டியா பேபி... நான் உனக்குக் கெடுதல் நினைப்பேனா...?"

"சரி உங்க பேச்சுக்கே நான் வர்றேன்... நீங்க எனக்குக் கெடுதல் நினைக்கலை ஓகே..." என்றவளை அவன் கண்கள் மின்ன எதிர்பார்ப்புடன் பார்க்க...

"அதே போல் என்னைக் காதலிக்கவும் இல்லை தானே... நீங்க என்ன என்னைக் காதலிச்சா கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க...?"

அவளது கேள்வியில் அவன் வாயடைத்துப் போனான்... அவள் கூறுவதும் உண்மை தானே... அவனது முகத்தில் தெரிந்த உணர்வில் அவளது மனம் வெறுத்துப் போனது இருவருக்கும் இடையில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை நினைத்து...

"என்ன பேச முடியவில்லையா...? இது தான் உண்மை... சும்மா வாய்க்கு வந்ததைப் பேச கூடாது..."

"அதில்லை பேபி..."

"கல்யாணத்துக்கு முந்தின நாள் வரை உங்களுக்கு என்னைப் பிடிக்காது... கல்யாணத்துக்கு அப்புறம் என்னைப் பிடிச்சு போச்சுன்னு சொன்னால் அதை நான் நம்பணுமா...?" என்றவள்,

"கல்யாணத்துக்கு முந்தி நீங்க என்னை விரும்புனீங்களா இல்லையான்னு எனக்குச் சத்தியம் பண்ணி சொல்லுங்க..." அவன் முன் தன் கையை நீட்டினாள் அவள்...

இந்த நொடி அவளைக் காதலிக்கிறானா என்று கேட்டால் கூட அவனுக்குப் பதில் தெரியாது... இந்த லட்சணத்தில் அவள் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டால் எப்படிப் பதில் சொல்வது...

அவளை மிகவும் பிடித்திருக்கிறது... அவளது சந்தோசத்திற்காக எதையும் செய்யத் துடிக்கிறான்... ஆனால் இந்தப் பாழாய் போன காதல் இருக்கிறதா என்று அவனுக்குச் சத்தியமாய்த் தெரியவில்லை...

அந்த முட்டாளுக்கு அந்த நேரம் தெரியவில்லை இது தான் காதல் என்று... இன்னும் அவன் அதை உணரவில்லை...

"ப்ச்... ஏற்கெனவே ஒரு சத்தியம் பண்ணிட்டு நான் படும் அவஸ்தை போதாதா...? இதில் இன்னொரு சத்தியம் வேறா...? வேறு ஏதாவது பேசு பேபி...?" சலிப்புடன் கூறியவன் அடுத்து அமைதியாகி விட்டான்...

அவனின் இந்த அமைதி அவள் மனதை வாள் கொண்டு அறுத்தது...

ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை 'உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்...' என்று கணவன் சொல்லிவிட மாட்டானா என்று அந்தப் பேதை உள்ளம் ஆசை கொண்டது... எல்லாப் பெண்களும் ஆசைப்படுவது இதைத் தானே...

அமைதியாக இருக்கையில் சாய்ந்தபடி கண்களை மூடி கொண்டு அமர்ந்திருந்தவனைக் கண்டவளுக்கு அத்தனை வேதனையாய் இருந்தது...

"இதைத் தவிர நம்மிடையே பேச வேறு எதுவுமில்லை..." மரத்துப் போன குரலில் கூறியவள் தானும் கண்களை மூடி இருக்கையில் சாய்ந்து கொண்டாள்...

இருவரின் மனதிலும் கடந்து வந்த திருமண வாழ்க்கையின் நினைவுச் சுவடுகள்...

அந்நேரம் அங்கு வந்த விமானப் பணிப்பெண் அவர்களுக்குத் தேவையான உணவு வகைகளை வழங்கிவிட்டு ஜீவாவை பார்த்ததும் அடையாளம் கண்டு அவனிடத்தில் கொஞ்சம் வழிந்து கொண்டு பேச... அதை எந்தவித உணர்வும் இல்லாமல் பார்த்து கொண்டிருந்தாள் சுபிக்ஷா...

அந்தப் பெண் சுபிக்ஷாவை ஏதோ வேற்றுக்கிரகவாசியைப் போல் பார்த்து வைத்ததைத் தான் அவளால் பொறுக்க முடியவில்லை...

"இது தான் உங்களுக்கும் எனக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம்... எந்த அடிப்படையில் நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க...? விருப்பமா, காதலா இல்லை கடமையா இதில் எதைக் காரணம் காட்ட போறீங்க...? நிச்சயம் நல்லாவே தெரிகிறது நீங்க அபியை பழிவாங்க தான் என்னைப் பகடைக் காயாக உபயோகிப்படுத்திக்கிட்டீங்கன்னு..." மனம் குமுறியவளை கண்டு அவனுக்கு அத்தனை வேதனையாய் இருந்தது...

பிறகு என்ன நினைத்தானோ மனைவி தோள் மீது கை போட்டு அவளை அணைத்துக் கொண்டான் இதமாக... அவனது அந்தத் திடீர் செயலில் அதிர்ந்தது சுபிக்ஷா மட்டுமல்ல அந்த விமானப் பணிப்பெண்ணும் தான்...

அதைக் கண்டு கொள்ளாதவனாய், "இவள் என்னுடைய மனைவி... என் மேல் சிறிது கோபம் அவளுக்கு... அதனால் கொஞ்சம் ஹாட்டாக இருக்கிறாள்... கூல்லா ஏதாவது கொண்டு வர முடியுமா...?"

தெளிவான ஆங்கிலத்தில் புன்னகையுடன் கேட்டவனை ஆச்சிரியமாய்ப் பார்த்த அந்தப் பணிப்பெண்,

"ஷ்யூர் சார்..." என்றபடி அங்கிருந்து நகர்ந்து செல்ல...

அவள் சென்றதும் கணவனது கையைத் தட்டி விட்டு விட்டு அவனை முறைத்த மனையாளை கண்டு அவன் கூல்லாக,

"நிச்சயம் பழிவாங்கத் தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... அதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம் பேபி..." என்று தோளை குலுக்கியபடி அசால்ட்டாய் பதில் சொன்னான் அவள் சற்று முன் கேட்ட கேள்விக்குப் பதிலாய்...

அதில் அவள் விழி விரித்துத் திகைத்து அவனைப் பார்க்கும் போதே குளிர்பானம் வந்து சேர... அதை வாங்கி அவளிடத்தில் நீட்டியவன்,

"குடி..." என்றான் தன்மையாக...

அதை மறுத்து பேச அவளால் முடியவில்லை... ஏனெனில் அவனிடம் பேசி பேசி அவளது தொண்டைத் தண்ணி எல்லாம் வற்றிப் போயிருந்தது...

அதற்குள் விமானம் சென்னை வந்தடைய வீடு வரும் வரை இருவருக்கும் இடையில் எந்தப் பேச்சு வார்த்தையும் இல்லை... இருவரிடையே ஒருவித கனத்த மௌனம் நிலவியது...

அவர்கள் வீடு வந்து சேர்ந்த நேரம் தாத்தா, பாட்டி, ரம்யா தவிர வேறு யாரும் வீட்டில் இல்லை... அன்னையைக் கண்டதும் சுபிக்ஷாவிற்கு அழுகை பொங்கி கொண்டு வந்தது... ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்டு அழுதுவிட்டாள்...

"சுபி... என்னம்மா இது... மாப்பிள்ளையை வரவேற்க முடியாமல் நீ இப்படி அழுதால் எப்படி...?" ரம்யா மகளைக் கடிந்தபடி ஜீவாவை நோக்கி சங்கடத்துடன்,

"வாங்க மாப்பிள்ளை..." என்று வரவேற்க... அவனும் சிரித்தபடி உள்ளே வந்தான்... அதைக் கண்டு சுபிக்ஷாவிற்குத் தான் கோபம் கோபமாய் வந்தது...

மனதில் எத்தனை கோபம் இருந்த போதும், அழுது கரைந்த போதும் அவனைப் பற்றி இன்னமும் அன்னையிடத்தில் அவள் எதுவும் சொல்லவில்லை...

அந்நேரம் அங்கு வந்த அகிலாண்டம் இருவரையும் கண்டு சந்தோசப்பட்டவர், "ராசாத்தி ஒரு சுத்து குண்டாகிட்ட மாதிரி இருக்கியே... ராசா உன்னை நல்லா கவனிக்கிறான் போலிருக்கே..." என்று பேத்தியை கிண்டலடிக்க அதைக் கேட்டு ஜீவா தன் சட்டைக் காலரை தூக்கி விட்டுக் கொண்டான் மிதப்பாய்...

"அம்மாச்சி..." சுபிக்ஷா பல்லை கடிக்க... அதைப் புறம் தள்ளிய அகிலாண்டம் பேரனிடத்தில்,

"ஆனா ராசா... நீ கொஞ்சம் மெலிஞ்ச மாதிரி இருக்கியே... பேத்தி உன்னைச் சரியா கவனிக்கிறது இல்லையோ...?"

"ஆமாம் க்ரனி... உங்க பேத்தி என்னைக் கவனிக்கிறதே இல்லை..." என்றான் வேண்டுமென்றே சோகமாய்...

அதைக் கேட்டுக் கோபம் கொண்ட சுபிக்ஷா, "கவனிக்கிறது தானே... ரொம்ப நல்லா கவனிச்சிட்டா போச்சு... அம்மா சமையலறையில் இருந்து அந்தப் பூரிக்கட்டையை எடுங்க..." என்று கணவனைப் பார்த்தபடி எரிச்சலுடன் உரைக்க...

அதைக் கேட்டு அகிலாண்டம் மோவாயில் கை வைத்து, "ஆத்தாடி ஆத்தா... கல்யாணத்துக்கு அப்புறம் உனக்கு ரொம்பத்தான் வாய் கூடி போச்சு... முதல்ல இருந்த பிள்ளைப்பூச்சியா நீயி..." என்று பேத்தியை கண்டு அங்கலாய்த்தவர்,

"ராசா... உன் பொண்டாட்டிக்கு ரொம்பத்தான் நீ செல்லம் கொடுத்து கெடுத்து வச்சியிருக்க... அதான் எட்டூருக்கு அவளுக்கு வாய் கிழியுது... இது நல்லதுக்கு இல்ல சொல்லிட்டேன்..."

சிறியவர்கள் மனநிலை அறியாமல் அவர் பாட்டிற்குக் கேலி பேசி கொண்டிருக்க அதைக் கேட்டு அவன் ஒன்றும் பேசாது சிரித்தபடி தன் மனைவியைப் பார்த்தான்...

அவளோ இன்னமும் கோபம் குறையாது அவனை முறைத்துக் கொண்டு இருந்தாள்... அதைக் கண்டு அவனது முகம் யோசனையில் ஆழ்ந்தது...

ஆனாலும் எதையும் வெளிக்காட்டி கொள்ளாமல் மனைவியைப் போன்று அமைதியாய் இருந்தான்... சிறிது

நேரம் அங்கிருந்து விட்டு அவன் வேலையாய் வெளியில் சென்றுவிட்டான்... தனது வீட்டில் மனைவி இருப்பதே அவனுக்குச் சிறு நிம்மதியை கொடுக்கத் தனது அலுவலை பார்க்க சென்றுவிட்டான்...

இரவு வீடு திரும்பிய ஜீவா சிறிது அச்சத்துடன் தான் வீட்டினுள் காலடி எடுத்து வைத்தான்... இந்நேரம் அவனது விசயம் வீட்டில் இருக்கும் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்... ஆளாளுக்குக் கேள்வி கேட்டுத் தன்னைக் குடைவார்கள் என்று எண்ணி வந்தவனுக்கு அப்படி யாரும் கேள்வி கேட்டு குடையவில்லை... மாறாகப் பாசத்தோடு வரவேற்று அவனுக்கு 'மாப்பிள்ளை மரியாதை' அளித்தனர்...

'என்னடா நடக்குது இங்கே...?' முழித்தபடி அவன் தனது மனையாளை பார்க்க அவளோ யாருக்கு வந்த விருந்தோ என்று நின்றிருந்தாலும் அவளது கைகள் அவனுக்குத் தேவையான உணவை பரிமாறிக் கொண்டு இருந்தது தன்னிச்சையாக...

அதிலேயே புரிந்து போனது அவள் தங்களது விசயம் எதையும் வீட்டினரிடத்தில் சொல்லவில்லை என்று...

முதன்முறையாய் ஜீவா மனதுக்குள் கூட்டுக் குடும்பத்தை ஆதரித்தான்... சொந்தபந்தங்களின் அருமை இப்போது அவனுக்கு நன்கு புரிந்தது...

இரவில் அவர்களது அறைக்கு வரும் வரை அவனது இனிமையான இந்த உணர்வு தொடர்ந்தது... அறைக்குள் நுழைந்து கதவை சாத்தி தாழ் போட்டுவிட்டு வந்த மனையாளை கண்டதும் அவன் ஒன்றும் ஒரேடியாய் மகிழ்ந்து போய் விடவில்லை...

அடுத்த என்ன வில்லங்கம் செய்யக் காத்திருக்கிறாளோ என்று யோசித்தவனாய் அவளை ஆராய்ச்சியாய் பார்த்தவாறு நின்றிருந்தான்...

அதே போல் தான் சுபிக்ஷாவும் தன் அடுத்தக் குண்டை அலுங்காமல், நலுங்காமல் அவன் மீது போட்டாள் சத்தமின்றி...

"எப்படி உங்களை நல்லவங்களாக்கி என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களோ... அது மாதிரி உங்களை நீங்களே கெட்டவங்களாக்கிக்கிட்டு என்னை விட்டு விலகி போயிருங்க..."

காலையில் இருந்த அழுகை ,கோபம் எதுவும் இப்போது அவளிடத்தில் இல்லை... மாறாக ஆழ்கடலின் அமைதியை போல் ஒருவித அழுத்தமான அமைதி அவளிடத்தில் குடியேறி இருந்தது...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 23

"இது தான் உன் முடிவா...?"

மனைவியின் வார்த்தைகளைக் கேட்டு ஜீவா ஒன்றும் பெரிதாக அலட்டி கொள்ளவில்லை... அவளின் இயல்பு தெரிந்தே அவனும் அது போலவே கேட்டான்... அவனது குரலும் மிகச் சாதாரணமாகவே ஒலித்தது...

"ஆமாம்..." என்றாள் அவளும் ஒருவித அழுத்தத்துடன்...

அன்று அவன் அன்னையிடம் பேசிய போதும் இது போல் தான் சுபிக்ஷா அவனை விட்டு விலகி போனாள்... இன்றும் அவனை விட்டு அப்படி விலகி போகத்தான் முடிவு எடுத்திருக்கிறாள்... என்ன ஒன்று இப்போது அவனாய் தானாக அவளை விட்டு விலகி போகச் சொல்கிறாள் அவ்வளவே...

அன்றும் இன்றும் அவளது அழுத்தம் மட்டும் மாறவே இல்லை...

"ம்ஹூம்... நான் பழகிய பெண்களில் உன்னைப் போல் அழுத்தமான ஒரு பெண்ணை நான் இதுவரை பார்த்ததில்லை..."

"ஓஹோ... அந்தளவுக்கு நிறையப் பெண்களோடு பழக்கம் இருக்கோ..." நக்கலாய் ஒலித்த அவளது குரலில் அவனது முகத்தில் புன்னகை தவழ்ந்தது...

"எல்லோர் கண்ணிலும் விரலை விட்டு ஆட்டுவிப்பவன் நான்... ஆனால் என் கண்ணில் விரலை விட்டு இப்படி ஆட்டுறியே பேபி... ம்... இந்த ஜீவாவுக்கு ஏத்த பொருத்தமான ஜோடி தான் நீ... சரியாகத் தான் உன்னைத் தேடி பிடித்துக் கல்யாணம் பண்ணியிருக்கிறேன்..." என்று

மெச்சுதலாய் சொன்னவனின் புன்னகை இன்னமும் அதிகமாய் விரிந்தது...

அவனது பேச்சில் அவளுக்கு எரிச்சல் வந்தது...

"தேவையில்லாதது பத்தி பேச தேவையில்லை... நான் சொன்னதுக்கு மட்டும் பதில் சொன்னால் போதும்..." சற்று விறைப்பாகவே வந்தது அவளது வார்த்தைகள்...

அதில் அவனும் தனது விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டு விட்டு தனது முழு உயரத்திற்கு நிமிர்ந்து நின்றவன் தனது இரு கைகளையும் கட்டி கொண்டு அவளை விட அழுத்தமாய் அவளைப் பார்த்தான்...

"வெல்... பழிவாங்க உன்னைக் கல்யாணம் பண்ணின நான் கெட்டவன்னே முடிவு பண்ணிட்ட அப்படித்தானே...?"

அவனது கேள்விக்குப் பதில் சொல்ல விருப்பம் இல்லாது அமைதி காத்தாள் அவள்...

"நீ ஒண்ணும் சின்னப் பெண் இல்லை சுபி... அதனால் இப்போ நான் சொல்லப் போறது உனக்கு நல்லா புரியும்ன்னு நினைக்கிறேன்... ஒரு ஆண் நினைச்சா பெண்ணை எப்படி வேணும்ன்னாலும் பழிவாங்க முடியும்... கல்யாணத்துக்கு அப்புறம் அவள் சம்மதம் இல்லாம அவளோடு குடும்பம் நடத்த முடியும்... குடிச்சிட்டு வந்து அவளைப் போட்டு அடிக்க முடியும்... அவள் கண் முன்னாடி வேறு பெண்களோடு வாழ்ந்து அவளைப் பழிவாங்க முடியும்... சிகரெட்டால் அவள் உடல் முழுவதும் சூடு போட முடியும்..."

அவன் சொல்லிக் கொண்டு வரும் போதே தனது இரு காதுகளையும் பொத்தி கொண்ட சுபிக்ஷா, "போதும்... போதும்... நிறுத்துங்க... ஏன் இது மாதிரி எல்லாம் செய்யணும்ன்னு உங்களுக்கும் ஆசையிருந்ததா என்ன...? ஆனால் அதை விடப் பெரியது நீங்க செய்த செயல்...

துரோகம், பச்சை துரோகம்..." கொஞ்சம் கோபம், கொஞ்சம் வேதனை இரண்டும் கலந்த ஒரு பார்வையை வீசினாள் தனது கணவனை நோக்கி...

அவளது 'துரோகம்' என்ற வார்த்தையைப் புறம் தள்ளியவன், "இதுக்கே நீ இப்படிச் சொன்னால் எப்படி...? இன்னமும் அச்சிலேற்ற முடியாத வார்த்தைகள் கொண்ட கொடுமைகளும் நிறைய இருக்கு... ஓகே உன்னோட மனசு புரிஞ்சு அதை நான் சொல்லலை..." லேசாக இரு கைகளையும் தூக்கி அவளைப் பார்த்து சிரித்தபடி சொன்னவன்,

"இந்த மாதிரி நான் உன்னைக் கொடுமைப்படுத்தி இருக்கிறேனா... சொல்லு... அப்படின்னா நான் கெட்டவன் தான்... கல்யாணமாகி பல நாட்களாகியும் உன்னிடம் இருந்து நான் விலகி தான் இருந்தேன்... நீயா என்னை ஏத்துக்கிட்டு என் கிட்ட வரணும்ன்னு உன் மனசை புரிஞ்சிக்கிட்டு நான் விலகி இருந்தேன்... உன் மனசை புரிஞ்சு நடந்துக்கிட்ட நான் கெட்டவனா...?"

அவனது வார்த்தையில் அன்று அவள் தானாய் கணவனை நெருங்கிய நிகழ்வு மனதில் தோன்றி அவளைச் சற்று திணற வைத்தது... அது அவன் மீதுள்ள அவள் காதலை மீண்டும் அவளுக்கு நினைவூட்டியது... ஆனால் அவனுக்கு ஏன் இந்தக் காதல் இல்லாமல் போனது... அந்த நினைவே அவளுக்குக் கசக்க,

"இப்படிப் பேசி நீங்க பண்ணின தப்பை மறைக்கப் பார்க்காதீங்க..." என்றாள் சற்று கோபத்தோடு...

"ஓகே... நான் எதையும் மறைக்கலை... எல்லாத்தையும் சொல்லிவிடுகிறேன்..." என்றவன் அடுத்து போட்டான் ஒரு அணுகுண்டை...

"ஆக்சுவலா அபியை கடத்துவதற்கு முந்தி நான் உன்னைக் கடத்துவதாகத் தான் இருந்தேன்..."

"என்னது...?" கணவனது வார்த்தைகளில் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள் அவள்...

அவளது அதிர்ச்சியை உணர்ந்தவனாய், "பேச்சுன்னு வந்துவிட்டால் எல்லாத்தையும் பேசிவிடுவது நல்லது இல்லையா...?" என்றான் நல்ல பிள்ளையாய்...

"இன்னும் என்னென்ன கேட்க வேண்டியிருக்கோ எல்லாத்தையும் கேட்டுத் தொலைக்கிறேன்... சொல்லித் தொலைங்க..." அவனது வார்த்தையில் எழுந்த வெறுப்பில் அவள் பல்லை கடித்தாள்...

"உன்னைக் கடத்தி கல்யாணம் பண்ணணும்ன்னு தான் இருந்தேன்... ஆனா அன்னைக்கு நான் பரிசா கொடுத்த நகையைத் திருப்பிக் கொடுத்துட்டு உங்க பணம் வேண்டாம் உங்க உறவு மட்டும் போதும்ன்னு நீ சொன்னியே அப்போ தான் நான் எடுத்த முடிவை பத்தி கொஞ்சம் யோசிக்க ஆரம்பிச்சேன்..."

அதைக் கேட்டு அவள் திகைத்து போய் நின்றிருந்தாள்... கணவன் தன்னை ஆழம் பார்க்கவே அந்தப் பரிசை கொடுத்தான் என்ற நினைவே அவளுக்கு வேப்பங்காயாய்க் கசந்தது...

அவளது எண்ணத்தைப் புரிந்தோ என்னவோ, "ச்சேச்சே... ஏற்கெனவே உன்னைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... அதான் அன்னைக்கு என் காரிலேற மாட்டேன்னு சொன்னியே... அப்பவே நான் உன்னைப் புரிஞ்சிக்கிட்டேன்... நான் பரிசு கொடுத்தது அதுக்காக இல்லை... நீ என் கூடப் பேசாம ஒதுங்கி இருந்தியா அது கொஞ்சம் எனக்கு ஒரு மாதிரி கஷ்டமா இருந்தது... உன்னைக் கொஞ்சம் சந்தோசப்படுத்தலாம்ன்னு நினைச்சு தான் அதை உன் கிட்ட கொடுத்தேன்...ஏன்னா நாளைக்கு நாம கல்யாணம் பண்ணிக்கப் போறவங்க... நீ இப்படி மூஞ்சை தூக்கி வச்சிக்கிட்டு இருந்தா அது நம்ம

வாழ்க்கைக்குச் சரிவராதுன்னு நினைச்சு தான் நான் அந்தப் பரிசை கொடுக்க நினைச்சது..."

அவன் சொல்ல சொல்ல 'அடப்பாவி' என்கிற ரீதியில் அவனைப் பார்த்திருந்தாள் அவன் மனைவியாள்...

"ஆனா நீ உங்க உறவு போதும்ன்னு சொல்லிட்ட... உனக்குப் பிடிச்ச இந்த உறவுகளைப் பகைச்சிட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் எனக்கும் விருப்பமில்லை... அதனால் தான் உன்னைக் கடத்துகிற முடிவை கைவிட்டுட்டு அபியை கடத்த முடிவு பண்ணினேன்... அதுக்கு அப்புறம் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்..."

"எல்லாமே பக்கா ப்ளான் இல்லையா...?" வெறுப்பில் குளித்து வந்தது அவளது வார்த்தைகள்...

"நான் ஒரு பக்கா பிசினஸ்மேன்... அதனால் என்னோட எல்லாச் செயலும் பக்கா ப்ளானாகத் தான் இருக்கும்..." சற்று கர்வத்துடன் கூறியவன்,

"ஆனா நான் எப்படிப்பட்டவனா இருந்தாலும் நம்ம திருமணப் பந்தத்தை மதித்தேன்... என் மனைவியான உன்னை மதித்தேன்... உன் உணர்வுகளை மதித்தேன்... ஆனா நீ கணவனான என் உணர்வுகளைக் கொஞ்சமும் மதிக்கலை..."

இதைச் சொல்லும் போது அவனது குரலில் இருந்த கம்பீரம் சற்று குறைந்து தான் போனது...

"உனக்கே தெரியும் என் மாம் வாழ்க்கையில் நடந்த வேண்டாத நிகழ்வுகள் எல்லாம்... அதனால் என்னவோ விவரம் புரிஞ்ச வயசில் இருந்து எனக்கு வர போகிற மனைவியை நல்லா பார்த்துக்கணும் என்கிற ஒரு எண்ணம் எனக்குள் வலுவாய் இருந்தது... இப்பவும் அது இருக்கு... உனக்குத் தான் அது புரியலை... இந்தத்

திருமணம் தோத்து போறதை நான் விரும்பலை... ஆனால் நீ அதைத் தான் விரும்புற..."

அவனுக்கே அடுத்து தான் என்ன செய்வது என்று புரியவில்லையோ என்னவோ வலக்கை விரல்களால் நெற்றியை நீவி விட்டுக் கொண்டான்...

"உங்க பக்கம் நீங்க சரியா தான் யோசிச்சு இருக்கீங்க... ஆனா நீங்க பண்ணியது தப்பில்லையா... ஒரு கல்யாணத்தை நிறுத்துறது என்பது எவ்வளவு பெரிய பாவம்... ஒரு பெண்ணோட மானம், மரியாதை எல்லாம் அதில் தான் அடங்கியிருக்கு... அது ஏன் உங்களுக்குக் கொஞ்சமும் புரிய மாட்டேங்குது..."

திருமணம் பற்றிக் கணவன் பேசிய வார்த்தைகளில் அவளது மனம் சற்று நெகிழ்ந்திருந்தது... அவன் கூறுவதும் சரி தான்... நிச்சயம் அவன் இந்தத் திருமணப் பந்தத்தை மதித்தான் தான்... அதை இல்லை என்பதற்கு இல்லை...

"அதனால் தானே மணமேடையில் நிறுத்தாமல் கல்யாணத்துக்கு முந்தின நாள் நிறுத்தினேன்... உன்னோட பெயர் எந்தவிதத்திலும் கெட்டுப் போய்விடக் கூடாது என்பதற்காகத் தான் நான் இதைச் செய்தேன்... மாப்பிள்ளை மாறியது தவிர வேறு என்ன குறை உனக்கு... அப்படிக் குறை கூறுமளவுக்கு நான் ஒன்றும் அபியை விடக் குறைந்து போய்விடவில்லையே... அன்னைக்கு யாராவது ஒரு வார்த்தை உன்னைத் தப்பா பேசியிருப்பாங்களா... நான் எல்லாத்தையும் கவனமா யோசித்து யோசித்துத் தான் செய்தேன்..."

திரும்பவும் தன் நிலையில் உறுதியாய் நின்ற கணவனை எண்ணி வருத்தமாக இருந்தது அவளுக்கு... ஆனாலும் அவனின் ஆணவத்தை உடைக்காவிட்டால் அவள் அவனது மனைவி இல்லையே...

"என்ன ஒரு ஆணவம்... ஒருத்தனை பழிவாங்க கடத்திட்டு போய் அவனுக்குப் பார்த்திருந்த பெண்ணைக் கல்யாணம் பண்ண வில்லன் மாதிரி திட்டம் போட்டுட்டு எல்லாத்தையும் செஞ்சிட்டு உனக்கு என்ன குறைன்னு கேட்கறீங்களே... நீங்களே எனக்குக் குறை தான்..."

மனைவி பேச்சில் அவன் அதிர்ந்து தான் போனான்... ஆனாலும் மனதுக்குள் நம்பிக்கை இருந்தது அவளுக்குத் தன்னை மிகவும் பிடிக்கும் என்று... அதனால் சற்று தெனாவெட்டாகத் தான் பார்த்தான் அவளை...

"அப்படி என்ன குறை எனக்கு...?" மிதப்பாய் வந்தது அவனது வார்த்தைகள்...

"உங்களுக்கு என்னை எப்போதுமே பிடிக்காது... எனக்குமே உங்களைக் கண்டால் பயம்... நம் திருமணத்தில் இதுவே பெரிய குறை தான்... அப்படி இருக்கும் போது நான் இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்காமல் இருந்திருந்தால் உங்களது திட்டம் என்னவாகி இருக்கும்...?"

இதற்கு எல்லாம் அசருகிறவனா இந்த ஜீவா... அவன் அழுத்தமான காலடிகளுடன் அவளை நோக்கி நெருங்கி வந்தான்... அதில் விழிகள் விரிய அவனை நோக்கியவள் பின்னால் நகரப் போனாள்... அந்தோ பரிதாபம் அதற்குள் அவன் அருகில் வந்து அவளது தோள்களை இறுக பற்றியிருந்தான் அவள் மேலே நகர முடியாதபடி...

"அன்னைக்கு மாடிப்படியில் வச்சு இந்த மாதிரி தான் பார்த்த உனக்கு நியாபகம் இருக்கா...?"

அவன் கேட்டதில் அவளுக்கு அந்த நாள் நிகழ்வு நியாபகத்தில் வந்தது... வினீதாவிற்கு முத்தம் கொடுத்த அவனை அதிசயமாகத் தான் பார்த்தது அவளுக்கு நினைவு வந்தது...

"உன்னைச் சந்திச்ச ஒன்றிரெண்டு தடவையும் நீ எப்பவும் பயத்தோடு தான் என்னைப் பார்ப்ப... ஆனா அன்னைக்கு உன் கண்கள் என்னைப் பார்த்த பார்வையில் எனக்கான தேடல் இருந்தது பேபி..."

இதைச் சொல்லும் போது ஜீவாவின் குரல் அத்தனை குழைந்திருந்தது... அவனது குரலின் குழைவும், அவனது பார்வையும் அவளின் மனதையும் குழையச் செய்தது... முயன்று தன்னைக் கடினமாக்கி கொண்டு,

"ஆமாம்... ரொம்பத்தான் கண்டீங்க... நீங்க எதிரில் வந்தால் கூடப் பயந்து விலகி ஓடுகிறவள் நான்... நான் உங்களை நினைச்சு தேடினேனா... ரொம்ப நல்ல கதை தான்..." என்றாள் வெடுக்கென்று...

அதைக் கேட்டு அவனது இதழ்களில் புன்னகை தோன்றியது...

"அதுக்கு முன்பும் என்னை அப்படித்தான் பார்த்தாய்... ஆனால் நான் அதைச் சொன்னால் நீ என்னை அடிக்க வருவாய்..."

"அந்தக் கதையையும் சொல்லுங்க... கேட்டு தொலைக்கிறேன்..." வேண்டா வெறுப்பாய் சொன்னவளை கண்டு,

"அன்னைக்கு நிச்சியதார்த்த விழாவில் நீ அபிக்கு மோதிரம் போடும் போது..." குறும்பு சிரிப்புடன் ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி சொன்னவனைக் கண்டு எரிச்சல் எரிச்சலாக வந்தது அவளுக்கு...

"கற்பனை ரொம்ப நல்லாயிருக்கு..."

"கற்பனையும் இல்லை... கதையும் இல்லை... உன் அடிமனசை கேட்டு பார்... அது சொல்லும்... நான் உன்னைக் கல்யாணம் பண்ணலைன்னா என்னைக்காவது உன் மனசு

உனக்குப் புரிஞ்சு குற்றவுணர்ச்சியாய்ப் போயிருந்திருக்கும்... அதில் இருந்து காப்பாத்தியதற்கு நீ தான் எனக்கு நன்றி சொல்லணும்..."

"இப்போ என்ன சொல்ல வர்றீங்க... நீங்க பண்ணியது சரி... தப்பு எல்லாம் எங்க பேரில்... அதாவது என் பேரிலும், அபி பேரிலும் அதைத் தானே சொல்ல வர்றீங்க..."

"இப்போ அவனை எதுக்கு உன் கூடக் கூட்டு சேர்க்கிற..." கடுப்பாய் வந்து விழுந்தது அவனது வார்த்தைகள்...

"பழிவாங்க கல்யாணம் பண்ணிக்கிட்டு அது தப்பு இல்லைன்னு வாதாட உங்களால் மட்டும் தான் முடியும்... ஒருவேளை மாப்பிள்ளையா உங்களைத் தேர்ந்தெடுக்காம வேற யாரையாவது தேர்ந்தெடுத்து இருந்தா என்ன பண்ணியிருப்பீங்க..."

பழிவாங்க நினைக்கும் ஜீவா திருமணத்தை நிறுத்தி அபிமன்யுவை பழிவாங்கியிருக்க முடியும்... அதை மட்டும் செய்யாமல் பிடிக்காத தன்னை ஏன் அவன் திருமணம் செய்ய வேண்டும் என்று அவள் யோசிக்கவில்லை போலும்...

"அவனையும் தூக்கியிருப்பேன்..." என்றான் ஜீவா இறுகிய குரலில்...

"என்ன சொன்னீங்க...?"

விழிகள் இரண்டும் தெறித்து விடுவது போல் தன்னைப் பார்த்த மனையாளின் அழகு அவனைத் தன்வசமிழக்க செய்ய... என்ன முயன்றும் தன்னைக் கட்டுப்படுத்த இயலாமல் அவளது விழிகள் மீது தனது இதழை பதித்தான் அழுத்தமாய்...

"என்ன பண்றீங்க...?" என்றபடி அவனை விலக்கி தள்ளியவளிடம் இருந்து தள்ளி நின்றவன் முகத்தில்

அத்தனை புன்னகை...

"ஏன் இப்படிச் சொன்னீங்க...?" அவளின் திகைப்பு இன்னமும் மாறவில்லை...

அவளது கேள்வியில் அவனது புன்னகை மறைந்தது...

"உனக்கும் எனக்கும் இடையில் எவன் வந்திருந்தாலும் தூக்கியிருப்பேன்னு சொன்னேன்..."

கணவனது வார்த்தைகள் கேட்டு அவளது மனதில் மகிழ்ச்சி வெள்ளம்... அப்படி என்றால் அவனுக்குத் தன்னைப் பிடித்துத் தான் திருமணம் செய்தானா... அந்த நொடி ஓடி சென்று கணவனது நெஞ்சில் தஞ்சம் கொள்ள அவளது மனம் துடித்தது...

அதை அவள் செயல்படுத்தும் முன் அவன் மேலே பேசினான்...

"ஆமாம்... உன்னை யாருக்கும் விட்டு கொடுக்க எனக்கு மனமில்லை... ஏன்னா அந்தளவுக்கு உன்னோட குரல் என்னை வசீகரித்தது... எனக்கு நிம்மதியை கொடுத்தது... அந்தக் குரலை இழக்க எப்படி எனக்கு மனசு வரும்... காலம் முழுவதும் நீ என் கூட இருக்கணும்... காலம் முழுவதும் உன்னைப் பாட சொல்லி நான் கேட்கணும்... இது சாதாரண ஆசை இல்லை... வெறின்னே சொல்லலாம்..." என்றவன்,

"அந்தளவுக்கு உன் குரல் என்னை மயக்குது பேபி..." என்றவனது குரலிலும் முகத்திலும் அந்த மயக்கம் அப்பட்டமாய்த் தெரிந்தது...

சுபிக்ஷாவிற்குத் தனது குரல் மீது அத்தனை கர்வம் உண்டு... எந்தக் கலைஞனுக்கும் உள்ள கர்வம் தான் அது... ஆனால் இன்று அந்தக் கர்வம் கணவனது வார்த்தையில் சுக்கு நூறாய் உடைந்து சிதறியது...

முதன்முறையாகத் தனது குரல் மீது அவளுக்கு அப்படியொரு வெறுப்பு வந்தது... தனது குரல்வளையை இறுக்கி குரலை போக்கிவிட்டால் தான் என்ன என்று தாங்க முடியாத வேதனை எழுந்தது அவளது மனதில்...

தன்னைத் தனக்காக நேசிக்காமல் தனது குரல்வளத்திற்காக நேசிக்கும் கணவனை என்ன செய்வது என்று புரியாது நின்று கொண்டிருந்தாள்...

புற அழகை பார்த்து காதலிப்பவர்களுக்கும், கணவன் தன் குரலை நேசிப்பதற்கும் பெரிய வித்தியாசமில்லை என்றே தோன்றியது அவளுக்கு... அவள் இந்தக் குரலை இழந்துவிட்டால் அவன் தன்னை வெறுத்து ஒதுக்கி வைத்து விடுவானோ என்ற அச்சம் கூடவே எழுந்தது அவளது மனதில்...

அந்த நொடி அவளுக்குத் தோன்றியது ஒன்றே ஒன்று தான்... வேண்டாம் இந்தத் திருமணப் பந்தம் என்பதே... எந்தவிதத்திலும் பொருத்தமில்லாத இந்தத் திருமணப் பந்தம் முறிந்து போவதே நல்லது என்றே அவளுக்குத் தோன்றியது...

"இப்போ சொல்லு நான் கெட்டவனா...? உன்னைக் கல்யாணம் பண்ணிய விதம் வேணும்ன்னா தப்பா இருக்கலாம்... ஆனா நம்ம கல்யாணமோ, நாம வாழ்ந்த வாழ்க்கையோ பொய் கிடையாது... அது உண்மை... நீயும், நானும் மறுக்க முடியாத உண்மை..."

"அதே சமயம் காதலில்லாமல் வாழவும் முடியாது..." அவளது வார்த்தைகள் ஆணித்தரமாய் அழுத்தமாய் வந்தது...

"ச்சு... என்ன பேபி இது... காதல், காதல்ன்னு சொல்லிக்கிட்டு... அந்தக் காதல் எப்படி இருக்கும்ன்னு கொஞ்சம் சொல்லு... நானும் அதை முயற்சி பண்ணி பார்க்கிறேன்..."

இப்படிச் சொல்பவனை என்ன செய்தால் தகும்...!!! வேதனை, வருத்தம் போய் இப்போது அவனைக் கண்டு கோபம் தோன்றியது அவளுள்...

"காதல் என்ன கடைச்சரக்கா...? கடையில் போய் வாங்கிக் கொள்வதற்கு... இது ஒரு உணர்வு... உங்களை மாதிரியானவங்களுக்குச் சம்பந்தம் இல்லாத உணர்வு..."

"சரி... எனக்குச் சம்பந்தம் இல்லைன்னே வச்சுக்குவோம்... முடிவா நீ என்ன தான் சொல்ல வர்ற...?"

"நான் தான் ஏற்கெனவே சொல்லிவிட்டேனே என் முடிவை..."

"ஓ..." என்றபடி தாடையைத் தடவி கொண்டவன்,

"இதை நீயே வீட்டில் உள்ளவங்க கிட்ட சொன்னால் என்ன பேபி... எப்படியும் நான் கெட்டவனாகத் தான் போகிறேன்... அதனால் நீ சொன்னால் என்ன...? நான் சொன்னால் என்ன...? இரண்டும் ஒன்று தான்..."

அப்படிச் சொன்னவனைக் கண்டு கண்ணீர் மல்க பார்த்தாள் அவள்... அவளால் சொல்ல முடிந்தால் சொல்லியிருக்க மாட்டாளா... ஆனால் அவளால் அவனை அப்படிக் குற்றம் சாட்ட முடியாமல் தானே அதை அவன் வசம் ஒப்படைக்கிறாள்...

என்ன தான் அவன் மீது கோபம் இருந்த போதும் அவன் மீதுள்ள காதல் அவளது அத்தனை கோபத்திற்கும் முட்டுக்கட்டை போடுகிறதே... அவளால் அதைச் செயலாற்ற முடியுமா...?

"இல்லை என்னால் முடியாது... முடியவே முடியாது..." முகத்தை மூடி கொண்டு அழுதாள் அவள்...

அழும் மனைவியைப் பார்த்துக் கொண்டு இருந்த ஜீவாவிற்கு அவளின் இத்தனை பிடிவாதம் எதற்கு என்று சுத்தமாய்ப் புரியவில்லை... ஒரு கணவனாய் அவன் எல்லாவற்றையும் அவளுக்காகப் பார்த்து பார்த்துச் செய்கிறான்... இதை விட வேறு என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரியவில்லை...

அதே சமயம் இதோ இப்போது அழும் மனைவியின் மனதிலுள்ள காதலும் புரியாமல் இல்லை...

வேகமாய் அவள் அருகில் வந்தவன் வலுக்கட்டாயமாய் அவளது கரங்களை முகத்தில் இருந்து பிரித்தெடுத்து,

"உன்னால் வார்த்தையால் கூட என்னைக் குற்றம் சொல்ல முடியலை இல்லையா..." என்றவனை அழுத விழிகளோடு திகைத்து போய் ஏறிட்டு பார்த்தவளை கண்டு அவனது முகம் மென்மையானது...

"இத்தனை காதலை வச்சிக்கிட்டு நீ என்னைப் பிரிந்து இருந்துவிடுவாயா பேபி... உன்னால் அது முடியுமா...?"

கணவன் கேட்ட கேள்வி அவளை அசைக்கத்தான் செய்தது... ஆனாலும் அடிப்படை அன்பு கூட இல்லாத இந்தத் திருமணப் பந்தம் எத்தனை நாளைக்குத் தாக்கு பிடிக்கும் என்ற விரக்தியும் கூடவே சேர்ந்து அவள் மனதில் எழுகிறதே...

பொய்யான அன்பில் எந்நேரம் வாழ்க்கை பறி போகுமோ என்று அச்சம் கொண்டு வாழ்வதற்கு இந்தப் பிரிவு பரவாயில்லை அல்லவா... அதை அவனிடத்தில் சொல்லவும் செய்தாள்...

"அப்படி எல்லாம் நடக்க விட மாட்டேன் பேபி... ஏற்கெனவே நான் சொல்லியிருக்கேனே... உனக்கு என்னோட மாம்மோட நிலை வர விட மாட்டேன்னு..."

'அப்படி எல்லாம் உன்னை விட்டு விடுவேனா' என்ற சொல்லைத்தான் அவள் அவனின் வாயில் இருந்து எதிர்பார்த்தாள்... அந்த அடிப்படை அன்பு அவனிடத்தில் காணவில்லையே... அதனால் முயன்று மனதை தேற்றிக் கொண்டு,

"ப்ளீஸ்... வேறு எந்தப் பேச்சும் வேண்டாம்... நான் சொன்னதைச் செஞ்சிருங்க..."

மீண்டும் பழைய நிலையில் பிடிவாதமாய் நின்றிருந்தவளை அவனாலும் மேலே ஒன்றும் சொல்ல முடியாமல் போனது... அதே சமயம் அவளைப் பிரிவதும் அவனுக்கும் கஷ்டம் தான்... அதைச் சொன்னால் அவள் புரிந்து கொள்ளவும் மாட்டாள்... காதலில்லை என்று சொல்வாள்...

'யாருடா கண்டுபிடித்தது இந்தக் கர்மம் பிடித்த காதலை...? அதற்கான வரையறை தான் என்ன...?' அவனுள் சிறிது கோபம் எட்டிப்பார்த்தது... அவன் படித்த தொழில் சார்ந்த படிப்பில் கூடக் காதலுக்கான விளக்கம் இருந்தது இல்லை...

"சரி உன் விருப்பத்தை நான் நிறைவேற்றுகிறேன்..."

கணவனது வார்த்தையில் அவளது உடலும், மனதும் பெரிதாக அதிர்ந்தது... முடிந்தது அவனுக்கும், அவளுக்குமான உறவு... அதை நினைக்கும் போதே உள்ளத்தில் துக்கம் பொங்கி வழிய அவளது கண்களிலும் கண்ணீர் பொங்கி வழிந்தது...

"நான் ஒரு பக்கா பிசினஸ்மேன்... எதிலும் லாபம் இல்லாமல் இறங்க மாட்டேன்... நான் இதைச் செய்தால் எனக்கு என்ன லாபம் கிடைக்கும்...?" ஒற்றைப் புருவத்தைத் தூக்கி வினவியபடி கேட்டவனின் முகம் உணர்வினை தொலைத்திருந்தது...

"என் கிட்ட கொடுப்பதற்கு ஒண்ணும் இல்லையே..." அவதியாய் முணுமுணுத்தது அவளது இதழ்கள்...

"ஏன் இல்லை...? நீ இல்லையா...?"

உரிமையுள்ள கணவன் கேட்கும் கேள்வியின் லட்சணத்தைத் தாங்க முடியாது மனவலியோடு கண்களை இறுக மூடி கொண்டாள் அவள்... அவளது நிலை கண்டு அவனது மனமும் தாங்க முடியாது துடித்ததை அவள் அறியவில்லை...

அவளை விட்டு பிரிவது என்று முடிவாயிற்று... அவளைப் பிரிவது அவனுக்குமே துக்கம் தான்... மீதமிருக்கும் வாழ்நாளை அவன் நிம்மதியுடன் கழிப்பதற்கு இப்போது அவள் அவனுக்குத் தேவை... அவளால் மட்டும் தான் அவனை உயிர்ப்புடன் வைத்திருக்க முடியும்... அதை உணர்ந்தவனாய் அவளையே பார்த்திருந்தான் அவன்...

அவள் கண்களைத் திறக்கும் வழி தெரியாததால் அவன், "ப்ளீஸ் பேபி... கடைசியாய் ஒரு முறை..."

கணவனது கெஞ்சல் மொழி அவளது மனதையும் கரைத்ததோ... இல்லை அவளுக்குமே அவன் தேவைப்பட்டானோ... விழிகளை மூடியிருந்த நிலையிலேயே அவள் சம்மதமாய்த் தலையசைத்தாள்...

அடுத்த நொடி காற்றும் புகாதபடி அவளை இறுக அணைத்திருந்தான் அவளது கணவன்... அவனது அணைப்பில் அவளது உடலும், உள்ளுமும் நெகிழ துவங்கியது அவளையும் மீறி...

அணைத்த வாக்கில் அவளை அழைத்து வந்து கட்டிலில் அமர வைத்தவன், "அந்தப் பாட்டைப் பாடேன் பேபி... ப்ளீஸ்..."

இறைஞ்சுதலாய் கேட்ட கணவனைக் கண்டு அவளுக்குத் தொண்டைக்குள் முள் சிக்கி கொண்டது போல் ஒரு உணர்வு... அவள் இருக்கும் மனநிலையில் இப்போது பாட முடியும் என்றே தோன்றவில்லை அவளுக்கு...

"என்னால் பாட முடியலை..." கண்ணீர் மல்க மறுத்தவளின் முகத்தைத் தனது கரங்களில் ஏந்தியவன்,

"கடைசியாய் ஒரு தடவை ப்ளீஸ்..." என்று சொன்னவனின் உதடுகளைக் கை கொண்டு மூடியவள் அவனுக்குப் பிடித்த அந்தப் பாடலை பாடினாள்...

"நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா

நின்னைச் சரணடைந்தேன்

பொன்னை, உயர்வை, புகழை விரும்பிடும்

என்னைக் கவலைகள் தின்ன தகாதென..

நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா

நின்னைச் சரணடைந்தேன்"

அடுத்த நொடி அவளது மடியில் சரண் புகுந்த ஜீவா, "அன்னைக்கு நீ இந்தப் பாட்டைப் பாடி கேட்ட போது அப்படி ஒரு நிம்மதி என் மனதில்... அந்த நொடி தோணுச்சு இந்த நிம்மதியை நான் என்றும் இழக்கக் கூடாதுன்னு... என் கூடவே தக்க வச்சுக்கணும்ன்னு..."

இதைக் கணவன் காதலாய் அவளுக்காக என்று சொல்லியிருந்தால் அவளும் சந்தோசப்பட்டு இருப்பாள்... ஆனால் அவனோ காதலிப்பது அவளது குரலை அல்லவா... அப்போது அங்கே சுபிக்ஷா என்ற பெண்ணின் மனதிற்கு இடமில்லையா... மனதில் துக்கம் பொங்க அழுகை அழுகையாய் வந்தது அவளுக்கு...

"ஆனா இப்போது அது நிலைக்கவில்லை..." அவன் சொல்லும் போதே அவனது வேதனையைச்

சுட்டிக்காட்டுவது போல் அவளது கண்ணீர் துளிகள் அவனது முகத்தின் மீது விழுந்து தெறித்தது...

எப்போதும் அவளது கண்ணீரை கண்டு பதறுபவன் இப்போதும் பதறி போய் எழுந்தான்...

"ச்சு... என்ன பேபி இது... நீயா எடுத்துக்கிட்ட முடிவு தான் இது... இப்பவும் ஒண்ணும் கெட்டு போயிடலை... நாளைக்கே நாம நம்ம வீட்டுக்குப் போயிரலாம்... அங்கே போய் நிதானமா பேசலாம்..."

"பேசி...?"

"ஒரு முடிவுக்கு வரலாம்..."

"என்ன முடிவு...?"

"ப்ச்... இதுக்கு மேல் நான் உனக்குப் புரிய வைக்க முடியாது..." என்றவன் அடுத்தக் கணம் மனைவியின் முகத்தைத் தன்னருகே இழுத்து அவளது இதழோடு தன் இதழை பொருத்தினான் அழுத்தமாய்...

அவளது மனவேதனைக்கு அவனது இதழ் முத்தம் பெருத்த ஆறுதலாய் இருந்தது போலும் அவனை விட அவள் தான் அதிகமாய் அவனுடன் ஒன்றினாள்...

அதை உணர்ந்தவன் மனதிலோ அத்தனை சந்தோசம்... அதையும் மீறி அவளது பிடிவாதத்தை நினைத்து கூடவே வருத்தமும் எழுந்தது...

இருவரின் மனதின் தவிப்பு அன்றைய கூடலில் அப்படியே பிரதிபலித்தது... விடியவே கூடாது என்று தான் அந்த இரு நெஞ்சமும் வேண்டி கொண்டது...

ஆனால் காலதேவன் கடமை தவறாதவர் போலும் தன் கடமையைச் செவ்வனே செய்தார்... மறுநாள் பொழுது

அழகாய் விடிந்தது...

தூக்கத்திலும் பிடிவாதமாய்த் தன்னை அணைத்துக் கொண்டு தூங்கும் கணவனைக் கண்டு சந்தோசப்படுவதா இல்லை துக்கப்படுவதா என்ற பரிதாப நிலையுடன் அன்றைய நாள் சுபிக்ஷாவிற்கு விடிந்தது...

குளித்து முடித்து உடை மாற்ற வந்தவள் சுடிதார் எடுக்க நினைத்துப் பின் புடவையை எடுத்து கட்டினாள்... அதற்கு என்ன காரணம் என்று அவளுக்குத் தெரியாதா என்ன...? காரணத்தை நினைத்து மனம் கனத்துப் போனது...

அதற்குள் வினீதாவின் அழுகை ஒலி அவளது காதில் விழ அவசரமாய் அறைக் கதவை திறந்து கொண்டு வெளியில் வந்தாள்...

"சாரி சுபி... நேத்து ரத்திரியில் இருந்து ஒரே அடம்... உன் கிட்ட வரணும்ன்னு... இப்போ விடிஞ்சதும் உடனே பார்க்கணும்ன்னு ஓடி வந்துட்டாள்..." சங்கடத்துடன் சொன்ன பூஜாவை பார்த்து புன்னகையுடன்,

"இருக்கட்டும் அண்ணி... வினீயை நான் பார்த்துக்கிறேன்..." என்று அண்ணன் மகளை அவள் தனது கைகளில் தூக்கி கொண்டாள்...

உள்ளே வந்த வினீதா உறங்கி கொண்டிருந்த மாமனை கண்டதும் அத்தையிடம் இருந்து இறங்கி கட்டிலை நோக்கி ஓடியது...

"மாமா..." என்றபடி அவன் மேல் விழுந்து கட்டி கொள்ள...

அதில் உறக்கம் கலைந்தவன், "ஹேய் வினீ பேபி..." என்றபடி அவளை அணைத்துக் கொண்டான்...

மாமனும் மருமகளும் கொஞ்சுவதைப் பார்த்தபடி சுபிக்ஷா அறையை விட்டு வெளியில் வந்தாள்... சமையலறைக்கு

வந்து காபி கலந்தவளுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது... கணவன் சொல்வதைக் கேட்டு வீட்டினர் எப்படி எதிரொலிப்பார்கள் என்று சற்று பயமாகவும் இருந்தது... அதே சமயம் சொல்லாமல் மறைக்க இது சின்ன விசயமும் கிடையாது...

அந்த யோசனையுடன் காபி எடுத்துக் கொண்டு அறைக்கு வந்தவள் வினீதாவிடம் பால் கோப்பையைக் கொடுத்துக் குடிக்கச் செய்தவள் கணவனிடம்,

"காபி..." என்று அவன் முகம் பார்க்காமல் கோப்பையை நீட்ட...

"வேண்டாம்..." என்று ஒற்றைச் சொல்லோடு விலகி சென்ற கணவனைக் கண்டு அவள் திகைத்து போய் நிமிர்ந்து பார்க்க, அங்கே அவன் இல்லை... குளியலறைக்குள் சென்று கதவை சாத்தியிருந்தான் அவன்...

இந்தக் காபியை வெறுத்தது போல் தன்னையும் வெறுத்து விடுவானோ... அவளையும் அறியாமல் அவள் மனதில் பயம் எழுந்தது...

சிறிது நேரத்தில் குளித்துவிட்டு வந்த கணவனை ஓரக்கண்ணால் பார்த்தபடி சுபிக்ஷா வினீதாவோடு விளையாடி கொண்டிருந்தாள்...

உடை மாற்றிக் கொண்டு கிளம்பியவனைக் கண்டு அவளது இதயம் வேகமாய் அடித்துக் கொண்டது... இன்னும் சிறிது நேரத்தில் அவனுக்கும், அவளுக்குமான பிரிவு நேர போகிறது... இதை எப்படி அவள் தாங்க போகிறாள்...

இது அவள் விரும்பியது தான் என்றாலும்... இந்தக் கணம் அவளால் இதைத் தாங்க முடியவில்லை... மனதின் கலக்கத்தை அவளின் முகம் அவனிடத்தில் காட்டி கொடுத்தது...

"வினீயை பூஜா கிட்ட விட்டுட்டு வா... நான் உன் கிட்ட கொஞ்சம் பேசணும்..." அவளின் முகத்தைப் பார்த்தபடி அவன் கூற...

அவளோ அவன் முகம் பார்க்க தைரியமற்று பேசாது எழுந்தவள் அடுத்தச் சில நிமிடங்களில் அவன் சொன்னதைச் செய்துவிட்டு வந்தாள்... வந்தவள் கணவன் முகம் பார்க்க முடியாது அவனது கால்களைப் பார்த்துக் கொண்டு தலைகுனிந்து நின்றாள்...

"பேபி..." கணவனது உருக்கமான அழைப்பில் நெஞ்சு துடிக்க நிமிர்ந்தவள் கண்ணில் இரு கரங்களையும் அகல விரித்து வைத்து கண்களால் அவளை 'வா'வென அழைத்தபடி நின்றிருந்தவனைக் கண்டதும் அடுத்த நொடி சிறிதும் யோசனையின்றி வேகமாய் அவனது கைகளில் சரண் புகுந்தாள்...

அவளின் மனநிலையைப் புரிந்தவனாய் அவனும் அவளை இறுக அணைத்திருந்தான்... நேரம் மெல்ல கடந்து சென்று கொண்டிருந்தது...

அவன் தான் முதலில் மௌனத்தைக் கலைத்தது...

"இப்பவும் உன் முடிவு இதே தானா...?" என்றவனின் வார்த்தையில் அவனை அண்ணாந்து பார்த்தவள் மறுப்பாய் தலையசைக்க அதில் அவன் கண்கள் மின்னியது சந்தோசத்தில்...

"அப்போ என் கூட வர்றியா...?"

அதற்கும் 'இல்லை' என்பது போல் தலையசைத்து மறுத்தவள், "யாருக்கும் எந்த விளக்கமும் சொல்லாமல் நாம பிரிஞ்சிடலாம்..."

தனது கையணைவில் இருந்து கொண்டு, வீட்டார் முன் தன்னைக் கெட்டவனாக உருவகப்படுத்த முடியாமல்

தவிக்கும் தன் மனைவி பிரிவை பற்றிப் பேசுவதைக் கண்டு அவனுக்கு விசித்திரமாக இருந்தது...

அந்த நிலையிலும் அவளது காதல் அவனைச் சுகமாய்த் தாலாட்டத் தான் செய்தது... எந்த நிலையிலும் கட்டுப்பாடற்ற அன்பை அள்ளி அள்ளி கொடுக்கும் மனையாளை கண்டு மனம் பெருமிதத்தில் விம்மியது...

அடுத்த நொடி அவளது அன்புக்கு பரிசாகத் தனது முத்திரைகளைப் பதித்தான் அடுத்தடுத்து வேக வேகமாக... அதில் அவள் சற்றுத் திணறித்தான் போனாள் சுகமாக...

வெகுநேரம் கழித்தே மனைவியவளை விடுவித்தான் ஜீவா... அவன் கொடுத்த முத்தத்தின் மயக்கம் அவளுக்கு இன்னமும் தீரவில்லை போலும்... நிற்க முடியாது கால்கள் தள்ளாட சட்டென்று கட்டிலில் அமர்ந்தாள்... உடல் முழுவதும் இனிமையான உணர்வு ஒன்று ஓடி அவளைப் பரவசப்படுத்தியது...

"ஓகே பிரிவதுன்னு முடிவு பண்ணியாச்சு இல்லையா..."

அவளது இனிமையான கனவை கலைப்பது போல் அவனது குரல் அபஸ்வரமாய் ஒலித்தது... அதற்கு அவன் மட்டும் காரணம் இல்லையே... அவளும் ஒரு காரணம் அல்லவா... கலக்கத்துடன் கணவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள்...

"இனி இதிலிருந்து நீ பின்வாங்க கூடாது... முடிவு பண்ணினால் பண்ணியது தான்..." அவனது குரலில் இருந்த இறுக்கம் அவளுள் குளிரை பரப்பியது... அவனின் இறுக்கம் அவளது வயிற்றில் புளியை கரைத்தது...

"உனக்கு நான் வெறும் ஜீவா... உன் கழுத்தில் தாலி கட்டிய கணவன்... ஆனால் எனக்கு என்று இந்தச் சமுதாயத்தில் தனி அந்தஸ்து, கௌரவம் இருக்கு... காலம் முழுவதும் என்னோடு வருவாய் என்கிற நம்பிக்கையில் தான் நான்

உன்னைக் கல்யாணம் பண்ணியது... இப்போ நீ இப்படி ஒரு முடிவு எடுத்திருப்பது எனக்குக் கொஞ்சம் அதிர்ச்சி தான்... ஆனால் எனக்குப் புரியுது உன் மனம் சில விசயங்களை ஏத்துக்க மறுக்குது... என்னைப் பொருத்தவரை நான் செய்தது தப்புன்னு சொல்ல மாட்டேன்... அப்படியே அது தப்பு என்றாலும் அதை நானே சரி செய்துவிட்டேன் என்று தான் நினைக்கிறேன்..." என்றவன்,

"இப்போ எதுக்கு இந்த வேண்டாத விளக்கம் எல்லாம்... நீ நினைப்பது போல் இந்த ஜீவா அத்தனை எளிதல்ல சுபி... நீ வேண்டாம்ன்னா உடனே விலகி போகவும், வேணும்ன்னா உடனே வந்து ஒட்டி கொள்வதற்கும்... இப்போ போன்னு சொல்லிட்டா இது நிரந்தரமான பிரிவு தான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை... இனி நானா உன்னைத் தேடி வர மாட்டேன்... அது போல் தான் நீயும்ன்னு நினைக்கிறேன்... அப்படியே நீ என்னைத் தேடி வந்தாலும்..." என்று நிறுத்தியவன்,

"எனக்கு நீ வேண்டாம்..." என்றான் உறுதியான குரலில்...

அப்படிச் சொன்னவனை அதிர்ந்து போய்ப் பார்த்தாள் சுபிக்ஷா... சற்று முன் அவளைக் கொஞ்சிய கணவன் ஜீவா இவனில்லை... இவன் தொழிலதிபன் ஜீவா...

அவளது அதிர்ந்த பார்வையை உணர்ந்தவனாய்,

"எனக்குன்னு ஒரு இமேஜ் இருக்கு... அதைத் தகர்க்க நான் விரும்பலை... விரும்பியோ விரும்பாமலோ அந்தப் பிம்பத்துக்குள் தான் நான் வாழ்ந்தாக வேண்டும்... எந்தச் சூழ்நிலையிலும் அதை விட்டு கொடுக்க என்னால் முடியாது..."

அந்த நிலையிலும் அவன் அப்படிப் பேசுவதைக் கண்டு அவளது மனம் வேதனைப்பட்டது...

"அப்படி நான் வர மாட்டேன்... நீங்க சந்தோசமா போங்க..." என்று அழுகையில் வெடித்தாள்...

அவளது அழுகை கண்டு அவனுள் இளக்கம் வந்தது...

"இது நீயா உண்டாக்கி கொண்டது சுபி... இப்பவும் ஒண்ணும் கெட்டு போகலை... இப்பவே கிளம்பி என்னோடு வா... எல்லாம் மறந்துட்டு புதுசா நாம வாழலாம்..."

அவனோட நிலையில் இருந்து யோசித்தவனைக் கண்டு என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை...

"நீங்க இப்படித்தான்னு தெரிஞ்சு தான் கல்யாணம் பண்ணினேன்... அதனால் இது ஒண்ணும் எனக்கு ஏமாற்றத்தை கொடுக்கலை..." மனதின் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு வெளியில் அப்படிச் சொன்னாள்...

அதைக் கண்டு அவனுக்குப் பெருத்த ஏமாற்றமாய் இருந்தது... ஓரளவிற்கு மேல் அவளிடத்தில் இறங்கி செல்ல அவனது தன்மானம் இடம் கொடுக்கவில்லை... அப்போது அவனுக்குத் தெரியவில்லை... மனதில் காதல் இருந்தால் இந்த அந்தஸ்து, கௌரவம், தன்மானம் இது எல்லாவற்றையும் துறந்து காதலியின் காலில் தஞ்சம் விழுந்து விடத் தோன்றும் என்று...

அவன் இன்னமும் காதலை உணரவில்லையா...? இல்லை காதலிக்கவே ஆரம்பிக்கவில்லையா...?

யாரிடமும் விளக்கம் கேட்காத அவள் அவனிடத்தில் விளக்கம் கேட்டாள்... யாருக்கும் விளக்கம் கொடுக்காத அவனும் அவளிடத்தில் விளக்கம் கொடுத்தான்... இதுவே உணர்த்தியது அவர்களுக்கு இடையில் இருக்கும் காதலை... அதை உணரத்தான் இருவரும் தவறிவிட்டனர்...

அதற்கு மேல் இருவரும் பேசி கொள்ளவில்லை... கீழே வந்தவனை அவள் சாப்பிட அழைக்க அவளை வெற்று

பார்வை பார்த்தவன்,

"வேண்டாம்..." என்று மறுத்துவிட்டுச் சென்றான்...

அந்நேரம் எல்லோருமே வரவேற்பறையில் தான் கூடியிருந்தனர்... அதனால் அவனுக்கு அது வசதியாகப் போனது... இதுவே சொல்லிவிட நல்ல தருணம் என்றே நினைத்தான்... ஆனாலும் மனதுக்குள் சிறிது கலக்கமாய் இருந்தது... அதே போல் தான் அவளுக்கும்...

"எல்லோர் கிட்டேயும் ஒரு விசயம் பேசணும்..." அவனின் கம்பீரமான குரலில் எல்லோரும் அவனைத் திரும்பி பார்த்தனர்...

சுபிக்ஷா திடுக்கிடும் மனதோடு நின்றிருந்தாள்...

ஜீவாவுக்கு மனதில் கலக்கம் இருந்தாலும் உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டான்... தொழிலில் இது போல் எத்தனை இக்கட்டான சூழ்நிலையை அவன் கையாண்டு இருப்பான்... அதனால் கடகடவெனத் தான் செய்ததை ஒன்று விடாமல் கூறி முடித்தவன்,

"என்னைப் பொருத்தவரைக்கும் நான் தப்பு பண்ணலை... ஆனால் சுபியை பொருத்தவரை நான் தப்பு பண்ணியவன்... அதனால் நான் உங்க எல்லோர் கிட்டேயும் மன்னிப்பு கேட்டுக்கிறேன்..."

வாழ்க்கையில் தவறு என்றாலும் தலை நிமிர்ந்து செய்தவன் மனைவிக்காக மற்றவரிடத்தில் மன்னிப்பு வேண்டி நின்றான்... இதுவும் காதலால் தான் என்பதை அவன் உணரவில்லை... அவனைக் காதலிக்கும் அவன் மனைவியவளும் உணரவில்லை...

இதைக் கேட்டு ஜெகன் மனம் கலங்க அப்படியே திக்பிரம்மை பிடித்து அமர்ந்திருந்தான்... ருத்ரஸ்ரீக்கு இது முன்பே தெரியுமாதலால் மகனின் பேச்சுப் பெரிதாக

அவளைத் தாக்கவில்லை... ஆனாலும் மகனின் மீது வெறுப்பு எழுந்தது உண்மை... பேச்சற்று அமர்ந்திருந்தாள் அவள்...

இவர்கள் நிலையே இப்படி என்றால் மற்றவர்கள் நிலைமையைச் சொல்லவே வேண்டாம்... நிலைக்குலைந்து போயிருந்தனர்... கிருஷ்ணா கோபத்துடன் ஜீவாவை அடிக்கப் பாய்ந்துவிட்டான்...

"அண்ணா..." சுபிக்ஷாவின் அலறிய அலறலில் கிருஷ்ணா ஓங்கிய தன் கையைக் கீழிறக்கினான்...

"அவங்க தான் மன்னிப்பு கேட்டாங்க இல்லையா... முடிஞ்சா மன்னிங்க... இல்லைன்னா விட்டிருங்க... அதை விட்டுட்டு அவங்களை அடிக்க எல்லாம் கை ஓங்க வேண்டாம்..."

சற்று அதட்டலாகவே சொன்னவளை கண்டு ஜீவாவின் முகத்தில் புன்னகை தோன்றியது...

கிருஷ்ணா மட்டுமல்ல இப்போது எல்லோருமே சுபிக்ஷாவை ஆச்சிரியமாய்ப் பார்த்தனர்...

"அப்படின்னா... நீ இவனை மன்னிச்சு ஏத்துக்க வேண்டியது தானே..." கிருஷ்ணா கோபத்துடன் தங்கையிடம் பாய்ந்தான்...

அதைக் கேட்டு சுபிக்ஷாவின் மனதில் அத்தனை வேதனை எழுந்தது... அதை அவளது முகமும் அப்படியே பிரதிபலித்தது...

"எங்களுக்குள் மன்னிப்பு தேவையில்லை அண்ணா..." என்றாள் கண்களை மூடி தனது வேதனையை அடக்கியபடி...

அதில் ஜீவாவின் கண்கள் பளபளத்தது...

"அப்போ எதுக்கு இவனைப் பிரிஞ்சிருக்க நீ முடிவு செஞ்ச...?" கிருஷ்ணாவிற்கு இன்னமும் கோபம் குறையவில்லை...

"இது எனக்கும், அவங்களுக்கும் இடையிலுள்ள தனிப்பட்ட விசயம்... நீங்க தலையிட வேண்டாம்..." என்று உறுதியான குரலில் மறுத்தவள் ஜீவாவிடம் திரும்பி,

"தவறை ஒத்துக்கிட்டு நீங்க மன்னிப்பும் கேட்டாச்சு... இதுக்கு மேல் மன்னிக்கிறதும், மன்னிக்காததும் இவங்களோட விருப்பம்... இதுக்காக நீங்க ஒண்ணும் தலைக்குனிஞ்சு நிக்க வேண்டாம்... நீங்க கிளம்புங்க..."

அவளது அந்த வார்த்தைகளில் அவள் புறம் வேகமாய் வந்த ஜீவா அவளது கையைப் பற்றி, "தேங்க்ஸ் பேபி..." என்றவன் பின் சிரிப்புடன்,

"தேங்க்ஸ் இப்படிச் சொல்லக் கூடாது இல்லையா..." என்றபடி அவளது கன்னத்தில் அழுத்தமாய்த் தன் இதழ் பதித்து,

"கடைசி முறையாய் ஒரு தடவை..." அவளது காதருகில் கிசுகிசுத்தவன் அடுத்த நொடி அவளை எலும்புகள் நொறுங்க இறுக அணைத்துக் கொண்டான்...

சுபிக்ஷா அவனது செயலில் சிறிது சங்கடத்துடன் அவஸ்தையாய் நெளிந்தபடி நின்றிருக்க, அவளது கணவனோ அங்கிருந்த யாரையும் கண்டு கொள்ளவில்லை... அவனது மனதில், நினைவில் இருந்தது எல்லாம் அவனது மனையாள் மட்டுமே...

"பை பேபி... இது நிரந்தரம் அதை நீ மறந்துவிடாதே..." என்று வேதனை சிரிப்போடு அவளது கன்னம் தட்டி கூறியவன் மறுகணம் அங்கிருந்து வேகமாய் வெளியேறி இருந்தான்...

உலகம் என்னும் நாடக மேடையில் பொய்யாய் நடிப்பதற்காக விரைந்து செல்லும் கணவனைக் கண்டு அது போல் பொய்யாய் நடிக்கத் தெரியாத அவள் உயிர்ப்பிழந்து, ஜீவனிழந்து வேரற்ற மரமாய் நின்றிருந்தாள்...

காதல் கணவன் தான் என்றாலும் காதலில்லா கணவனோடு வாழ அவளது தன்மானம் இடம் கொடுக்கவில்லை...

அந்தக் கணம் உயிர் பிரியும் வேதனையை அனுபவித்தாள் அந்தத் தன்மான தமிழச்சி...!!!

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 24

திருமணமாகி இரண்டு மாதங்களில் தனது திருமண வாழ்க்கை இப்படி அவசரகதியில் முடிந்துவிடும் என்று சுபிக்ஷா கனவிலும் நினைத்து பார்க்கவில்லை... அதை நம்ப முடியாமல் அப்படியே திக்பிரம்மை பிடித்து நின்றாள் அவள்...

அவள் அப்படி என்ன கேட்டாள் தன் கணவனிடத்தில்... எல்லாப் பெண்களையும் போல் கணவன் தன்னைக் காதலிக்க வேண்டும் என்று தானே கேட்டாள்...

திருமணம் எந்தச் சூழ்நிலையில், எப்படி நடந்திருந்தாலும் அதன் பின் வாழும் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை அன்பு கூட இல்லாமல் வெறும் உடல்கள் மட்டும் கூடுவது தான் வாழ்க்கையா...? இல்லையே அங்கே இரு மனதும் ஒரு மனதாய் சங்கமித்துக் காதலோடு அல்லவா வாழ வேண்டும்...

இதை ஏன் அவளது கணவன் புரிந்து கொள்ளவில்லை...? அது தான் அவளுக்குப் புரியவில்லை... ஒருவேளை அவளுக்குத் தான் அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லையோ... மனதிற்குள் குழம்பி கொண்டு இருந்தவளுக்கு அப்போது தான் சுற்றுப்புறம் உறைத்தது...

தன்னைச் சுற்றியிருந்தவர்களை அப்போது தான் கவனித்தாள்... மகளின் திருமண வாழ்க்கை பறி போன அந்த நிலையிலும் அவளது தந்தை செல்வாவின் பார்வை மகளைத் துயரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாலும் செல்வாவின் கரங்கள் துக்கம் தாங்க முடியாது அழும் தனது மனைவி ரம்யாவை தான் ஆறுதலாய் அணைத்து இருந்தது...

அதே போல் தான் அவளது மாமா ஜெகனின் கையை அவளது அத்தை ருத்ரஸ்ரீ ஆறுதலாய் பிடித்துக்

கொண்டிருந்தாள்... அவளது அண்ணன் கிருஷ்ணா அவளை இரக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்க, அவனது தோளில் ஆறுதலாய் கை வைத்து அவளது அண்ணி பூஜா ஏதோ கூறி கொண்டிருந்தாள்...

இவ்வளவு ஏன் அந்தத் தள்ளாத வயதிலும் அவளது தாத்தா காளிமுத்து அழும் பாட்டி அகிலாண்டத்தைச் செல்லமாய்க் கடிந்து கொண்டாலும் அதில் ஆறுதல் இருந்ததை அவளால் உணர முடிந்தது...

இதோ அவளைச் சுற்றியிருக்கும் சொந்தங்கள் வாழும் இந்த அந்நியோன்யமான காதலை தானே அவள் கணவனிடம் எதிர்பார்த்தது... அவள் என்ன அவனது சொத்து, சுகத்தையா எதிர்பார்த்தாள்... காதலை தானே...?

ஏனோ தன்னைச் சுற்றி இத்தனை பேர் இருந்த போதும் தான் மட்டும் தனித்து அநாதையாகி விட்டதைப் போல் ஒரு தோற்றம் அவளுள்... அந்தக் கணம் கணவனது விரிந்த நெஞ்சில் ஆறுதலாய் அடைக்கலம் புக அவளது மனம் துடித்தது... இனி அது நடவாத காரியம் என்ற துக்கத்தில் மனதுக்குள் கழிவிரக்கம் தோன்ற அழுகை வெடித்துக் கொண்டு கிளம்பியது அவளிடமிருந்து...

அத்தனை நேர மயான அமைதியை அவளது அழுகை ஒலி கலைக்க, எல்லோரும் பதறி போய் அவள் அருகே ஓடி வந்தனர்...

"சுபி அழாதே...", "சுபிம்மா... உனக்கு நாங்க இருக்கோம்டா..." என்று ஆறுதல் வார்த்தை கூறி அவளைத் தேற்றியது அத்தனை சொந்தங்களும்...

அதில் அவளது அழுகை சிறிது சிறிதாக அடங்கிக் கடைசியில் தேம்பலில் வந்து முடிந்தது...

"இதுக்குத் தான் அன்னைக்கே சொன்னேன்ப்பா... அவனுக்குச் சுபியை கல்யாணம் பண்ணி

வைக்காதீங்கன்னு... கடைசியில் எங்கே கொண்டு வந்து விட்டிருக்குன்னு பார்த்தீங்களா...? கொஞ்சம் கூட மனசாட்சி இல்லாதவன்... கட்டிய மனைவியை வச்சு வாழத் தெரியாத இவனெல்லாம் பெரிய பிசினஸ் மேக்னெட்டுன்னு வெளியில் பெத்த பேரு வேறு..." என்று கோபமாய்ப் படபடத்தான் கிருஷ்ணா...

அவனின் செல்லத் தங்கை அவனை என்ன சொல்லியிருந்த போதும் அவனது பாசம் இல்லை என்றாகி விடுமா... ஒரே தங்கையின் வாழ்க்கை இப்படியானது குறித்து அவனுக்கு அத்தனை கோபம்...

"அண்ணா... அவர் ஒண்ணும் என்னை விட்டுட்டு போகலை... நான் தான் வர மாட்டேன்னு சொன்னேன்..." அந்த நிலையிலும் அவள் தன் கணவனை விட்டு கொடுக்கவில்லை தன் சகோதரனிடத்தில்...

"மானமுள்ள எந்தப் பொண்ணும் உன்னை மாதிரி தான்டா முடிவு எடுப்பாங்க... உனக்கு நாங்க இருக்கோம் சுபி..." அப்போதும் கிருஷ்ணா தங்கையை விட்டு கொடுக்கவில்லை...

"அண்ணா..." அவனது அன்பில் உள்ளம் நெகிழ அழைத்தவளின் கண்களில் கண்ணீர் தாரகை...

அவளது அழுகையில் அவள் அருகே வந்த கிருஷ்ணா ஆறுதலாய் அவளது தலை கோதி கொடுத்தான்...

"என்னை மன்னிச்சிடுடா மாப்ள..." மருமகளின் வாழ்க்கை இப்படியானதில் ஜெகனின் மனம் மிகுந்த வருத்தத்தில் இருந்தது... அதனால் நண்பனிடத்தில் மன்னிப்பு கேட்டான்...

"மாமா... நீங்க ஒண்ணும் அப்பா கிட்ட மன்னிப்பு கேட்க வேண்டாம்... இது நானா விருப்பப்பட்டு எடுத்த முடிவு..."

தாய்மாமனையும் விட்டு கொடுக்க முடியாமல் சுபிக்ஷா பேச, எந்தச் சூழ்நிலையிலும் உணர்ச்சிவசப்படாத ருத்ரஸ்ரீ சுபிக்ஷாவின் பேச்சில் உணர்ச்சிவசப்பட்டு அவளை அன்போடு அணைத்து கொண்டாள்... தன் கணவனை விட்டு கொடுக்காத மருமகளிடத்தில் தனிப் பாசம் ஏற்பட்டது அவளுக்கு ...

"உன்னை மாதிரி ஒருத்தியோட அன்பை புரிஞ்சிக்கத் தெரியாத முட்டாள் அவன்..." மகனை நினைத்து பல்லைக் கடித்தாள் அவள்...

இப்போதும் மகன் மீது கோபம் கொண்டு அவனைப் புறக்கணித்தாள் அவள்...

மகளின் நிலை கண்டு மனம் கனத்து ஆறுதல் மொழியின்றித் துன்பத்துடன் அங்கிருந்து நகர்ந்தான் செல்வா... சில சமயம் துன்பம் அதிகமாகும் போது வாய் மொழியற்று போய்விடும்... அப்படி ஒரு நிலையில் இருந்தது அவனது மனம்...

மகன் பிறந்து பதினான்கு வருடம் கழித்துத் தவமாய்த் தவமிருந்து பெற்றெடுத்த செல்ல மகள் சுபிக்ஷா... கிருஷ்ணா பிறந்த பிறகு அடுத்தடுத்த ஆண்டுகளில் அவர்களுக்குக் குழந்தைகள் இல்லாததால் ரம்யா கூட அடுத்தக் குழந்தை வேண்டாம் என்ற போது, அவன் தான் பெண் குழந்தை வேண்டும் என்றெண்ணி ஆசை ஆசையாய் பெண் மகவை வேண்டி அவளைப் பெற்றது...

அப்படிப்பட்ட மகள் இதோ இன்று கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறாள்... அவளுக்கு என்ன வார்த்தை சொல்லி ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் தவித்துப் போய் நிற்கிறான் அவன் கையாலாகாதவனாய்...

"மாப்ள..." அவனின் பின்னாடி வந்த ஜெகன் அவனின் தோளில் ஆறுதலாய் கை வைக்க...

அதில் கண்களில் நீர் தளும்பத் திரும்பி பார்த்த செல்வா, "இனி என் மகள் வாழ்க்கை என்னவாகுமோ மச்சி... ரொம்பப் பயமாயிருக்கு..." என்று ஜெகனின் கையைப் பயத்துடன் பற்றிக் கொண்டான்...

பெண்ணைப் பெற்ற எந்தத் தகப்பனுக்கும் வரும் நியாயமான கவலை அவனது...

இதுவரை எதற்காகவும் கலங்காத நண்பன் கலங்கியதில் ஜெகனும் மனம் கலங்கி போனான்... பொதுவாக ஜெகன் தான் இப்படி அடிக்கடி மனம் கலங்குவது... அப்போது எல்லாம் அவனுக்குத் தைரியம் சொல்லி தேற்றுவது செல்வா தான்... ஆனால் இப்போது அந்தச் செல்வாவே கலங்கி போயிருப்பதைக் கண்டு ஜெகன் தானும் கலங்கி போனான்...

நண்பனின் கலக்கம் செல்வாவின் மனதை பாதித்ததோ என்னவோ... தனது கண்களைத் துடைத்துக் கொண்டு நண்பனை பார்த்து,

"எவ்வளவோ பார்த்துட்டோம் மச்சி... இந்தச் சின்னப் பிரச்சினையைச் சமாளிக்க மாட்டோமா என்ன... நம்மால் முடியும் மச்சி..." என்று ஆறுதலாய் ஜெகனை அணைத்துக் கொண்டான்...

தனது துக்கத்தை மறைத்துக் கொண்டு தோழனுக்குத் தோள் கொடுக்கும் நட்பு அமைவது அபூர்வம்... அன்றும் தனக்காகத் தான் அவனது மகளை ஜீவாவுக்கு மணம் முடிக்கச் சம்மதித்தான் செல்வா... இதோ இப்போதும் தனக்காக அவனது துயரத்தை தேற்றிக் கொண்டு தனக்கு ஆறுதல் கூறுகிறான்...

"மச்சி... நீ கவலைப்படாதேடா... நீ நினைக்கிற மாதிரி மாப்ள கிடையாது... மனசுக்கு பிடிச்சவளை அடுத்தவனுக்கு விட்டு கொடுக்காம கடத்திட்டு போயாவது தாலி கட்டணும்ன்னு நினைச்சான் பாரு... அங்கே

நிக்கிறான்ய்யா என் மாப்ள ஜீவா... வீரத்தமிழன்டா என் மாப்ள..."

மீசையை நீவி கொண்டு பெருமையாய் சொன்ன செல்வாவை ஒரு மாதிரியாய் பார்த்தான் ஜெகன்...

"டேய் இந்த மாதிரி நேரத்தில் இப்படி ஒரு காமெடி ரொம்ப அவசியம் தானா...?" நொந்து போய் வந்தது அவனது வார்த்தைகள்...

"அட பார்றா... ரெண்டு தடவை தோத்து போய் மூணாவது தடவை அதிரடியா கல்யாணம் பண்ணி வாழ்க்கையில் வெற்றி அடைஞ்ச என் மச்சி பேசுற வார்த்தையை... கஜினி முகம்மது மாதிரி விடாம படையெடுத்துத் தங்கச்சி மனசை ஜெயிச்ச நீயாடா இப்படிப் பேசுறது...?"

நண்பனின் பேச்சில் ஜெகனின் முகத்திலும் சிரிப்பு வந்தது மனைவியின் பிடிவாத குணத்தை நினைத்து...

"அப்படிப்பட்ட என் தங்கச்சிக்கு பிறந்த என் மாப்ள மட்டும் எப்படி இருப்பான்...? அவனும் அப்படித்தான் இருப்பான்... ஆனா கல்யாண வாழ்க்கை அந்தளவுக்கு லேசானது இல்லைன்னு அவனுக்கு நாம புரிய வைக்கணும் மச்சி... அப்போ தான் அவனுக்குப் புத்தியில் நல்லா உறைக்கும்... மனைவிங்கிறவள் அவ்வளவு சாதாரணமான பந்தம் இல்லைன்னு அவனுக்கு நாம புரிய வைக்க வேண்டாமா... அதை விட்டுட்டு இப்படி வருத்தப்பட்டுக்கிட்டு இருந்தா எப்படி...?"

தனக்காக உற்சாகமாய்க் காட்டி கொண்டு பேசிய நண்பனை கலக்கத்தோடு பார்த்த ஜெகன், "எப்படி மாப்ள...?" என்றான் பாவமாக...

அதைக் கேட்டு செல்வாவும் திகைத்து தான் போனான்... ஜீவாவை மாற்றுவது என்பது அவ்வளவு எளிதன்று என்பது அவனுக்கும் புரிந்து தான் இருந்தது...

நண்பனது திகைத்த முகத்தைப் பார்த்த ஜெகன் தன்னைத் தேற்றிக் கொண்டு, "பார்த்துக்கலாம் மாப்ள... ஜீவா ஸ்ரீ மாதிரி இருந்தாலும் அவன் என் பையனும் கூட... என்னை மாதிரி காதலிப்பது, அவனது இரத்தத்தில் ஊறி இருக்காதா என்ன...? என்ன அந்த ஹார்மோன் கொஞ்சம் குறைவாயிருக்கும் போலிருக்கு... அது தான் இங்கே பிரச்சினை... அதை அதிகப்படுத்திட்டா போச்சு..."

விளையாட்டாய் சொல்வது போலிருந்தாலும் ஜெகன் தீவிரமாய்த் தான் அதைச் சொன்னான்...

"எப்படி மச்சி...?"

"எப்படி என்றாலும் இதை நாம் செஞ்சித்தான் ஆகணும் மாப்ள... நம்ம பிள்ளைங்க நன்மைக்காக நாம செஞ்சித்தான் ஆகணும்..." உறுதியான குரலில் கூறிய நண்பனை கண்டு,

"கண்டிப்பா..." என்று ஆதரவாகக் கூறினான் செல்வா...

இந்த இறுகிய பிணைப்பு இருக்கும் வரை அவர்களின் நட்பு எதையும் சாதிக்கும்...

எல்லோரின் ஆறுதல் வார்த்தைகள், அழுகை என்று எல்லாவற்றையும் சமாளித்துவிட்டுச் சுபிக்ஷா தனது அறைக்குச் செல்ல வேண்டி மாடிப்படி ஏறினாள்... அப்படி ஏறும் போதே அவளது கண்கள் அவளையும் அறியாமல் அங்குப் புகைப்படமாய்த் தொங்கி கொண்டிருக்கும் தன்னவனின் பிம்பத்தின் மீது சென்றது...

ஆறு வருடங்களுக்கு முன் விக்ரமிற்கு மொட்டை போடுவதற்காக ஜீவா வந்த போது எடுத்த புகைப்படம் அது... ஆளை மயக்கும் புன்னகையுடன் வசீகரமாய் இருந்தவனைக் காண காண அவளுக்கு வேதனையாய் இருக்க, அப்படியே கண்களை மூடியபடி மாடிப்படி கைப்பிடியில் சாய்ந்து நின்றாள்...

அவளது கண்ணுக்குள்ளும் கணவனது பிம்பமே அதே மயக்கும் புன்னகையுடன் அவளை வசீகரித்தபடி... அப்போது தான் அவள் புத்தியில் அது உறைத்தது... அது அந்தப் புகைப்படத்தில் ஜீவா அணிந்திருந்த சட்டை நிறம் முதற்கொண்டு, அந்தச் சட்டைப்பையில் அவன் வைத்திருந்த தங்கநிற பேனாவின் வடிவமைப்பு வரை எல்லாமே அவளது நியாபகத்தில் இருந்தது கண்டு விதிர்த்து போனாள் மனதிற்குள்...

திகைத்து போனவளாய் கண்களைத் திறந்தவள் மீண்டும் அந்தப் புகைப்படத்தைப் பார்க்க அவள் மனக்கண்ணில் தோன்றியவை எல்லாம் அதில் அப்படியே ஒன்று மாறாமல் காட்சியளித்தது... அதில் மனம் அரண்டு போனவளாய் தனது அறையை நோக்கி ஓடிச் சென்றாள் படபடக்கும் இதயத்துடன்...

'இது எப்படிச் சாத்தியம்...?' அறைக்கதவை சாத்திவிட்டுக் கட்டிலில் அமர்ந்தவளின் மனது விசித்திரமான மனநிலையில் இருந்தது...

ஒருவனை மனதில் வெறுத்துக் கொண்டே இந்தளவுக்கு அவனை நினைவில் வைத்திருக்க முடியுமா...? அவளுக்குச் சற்று ஆச்சிரியமாக இருந்தது தன்னைக் குறித்து...

அவள் அறிந்த வரை அவனைக் கண்டாலே அவளுக்குப் பயம் தான்... அவனால் மனதில் ஏற்பட்ட காயம் மட்டும் தான் அவள் நினைவில் இருந்தது... அதனால் தான் அவனின் நிழல் கூடத் தன் மீது படக்கூடாது என்றெண்ணி அவனது நிழல் படத்தைக் கூட விட்டு விலகி போனாள்...

அப்படி அவனைக் கண்டு பயந்து, பயந்து தினமும் அவன் நினைவில் தான் அவள் வாழ்ந்து இருக்கிறாள் போலும்...

விருப்புக்கும், வெறுப்புக்கும் இடையில் நூலளவு இடைவெளி என்பது போல், இங்கு விருப்புக்கும்,

வெறுப்புக்கும் இடையில் பயம் தான் இடைவெளி போலும்...

அந்தப் பயம் கூட ஜீவா அவளது கணவனாக மாறிய பின்பு மறைந்து போய்க் கணவன் என்கிற சொந்தம் மட்டுமே அவளது மனதில் நிறைந்து அவனை நேசிக்கத் தூண்டியிருக்கிறது...

ஆம்... அவன் என்றுமே அவளுக்குச் சொந்தம் தானே... மாமன் மகன் தானே... அதனால் தான் அவனைப் பல ஆண்டுகளாகப் பாராமல் இருந்த போதும் அவனது விருப்பு, வெறுப்பு என்று எல்லாவற்றையும் அவளால் மறக்காமல் நினைவில் வைத்திருக்க முடிந்தது... அதுவும் பதினாறு வயதில் அவள் மனதில் ஆறா காயத்தை ஏற்படுத்திச் சென்றவன் மீது...

அவளது பாட்டி, அத்தை என்று எல்லோருமே எப்போதும் அவனைப் பற்றிப் பேசி பேசி அவள் மனதில் அவன் ஆழப்பதிந்து விட்டான் போலும்... அதனால் தான் திருமணத்திற்குப் பின் அவனை யாரோ என்றெண்ணி ஒதுங்கி போகாமல் சொந்தமாய் அவனிடத்தில் பேச முடிந்தது...

"உன் கண்கள் என்னைப் பார்த்த பார்வையில் எனக்காகத் தேடல் இருந்தது பேபி..."

அந்நேரம் கணவனது வார்த்தைகள் அவளது காதில் ஒலித்தது... அதை உணர்ந்தவள் முகத்தில் வெட்கத்தின் சாயல்...

'என்னைப் பற்றி எனக்கே தெரியாத போது உங்களுக்கு மட்டும் எல்லாம் தெரிந்துவிட்டதாக்கும்... நான் உங்களைத் தேடினேனா...?' மனதினுள் கணவனிடத்தில் செல்லச் சண்டை போட்டவளுக்குத் தன் மனம் போகும் பாதை புரியவில்லை... ஆனால் மனதிற்கு ரொம்பச் சந்தோசமாக இருந்தது...

எது எப்படி இருந்தாலும் ஒன்று மட்டும் உண்மை... யாரிடத்திலும் மனம் விட்டு பேசாதவள் கணவனிடத்தில் மட்டும் மனம் விட்டு பேசியிருக்கிறாள்... தான் இந்தளவுக்கு அவனிடம் பேசியது குறித்து அவளுக்கே சற்று ஆச்சிரியம் தான்...

கணவன் என்ற உரிமையா, அவன் மீது கொண்ட நேசமா இல்லை அவன் சொன்னது போல் தன் ஆழ்மனது அவனைத் தேடியிருக்கிறதா எதுவென்று தெரியவில்லை... இந்தக் கணம் அவளுக்கு எல்லாமும் மாறிப் போயிருந்தான் அவளது காதல் கணவன்...

எல்லாவற்றையும் தனக்காகப் பார்த்து பார்த்து செய்தவன், தனக்காக யோசித்தவன் தன் மனதை மட்டும் ஏன் புரிந்து கொள்ளவில்லை... அவளுக்கு அத்தனை வருத்தமாக இருந்தது...

மீண்டும் ஆரம்பப் புள்ளியில் வந்து நின்ற மனம் அப்படியே துவண்டு போனது...

அந்நேரம் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தாள் அவளது அன்னை ரம்யா... அவளது கையில் உணவு அடங்கிய தட்டு இருந்தது...

"மனசை போட்டு வருத்திக்காதே சுபி... எல்லாம் சரியாகும்..." என்று மகளுக்கு ஆறுதல் சொன்னவள்,

"ஒரு வாய் சாப்பிடும்மா.." என்று தோசையைப் பிட்டு அவளது வாய் அருகில் கொண்டு செல்ல...

காலையில் கணவன் காபி கூடக் குடிக்காமல் வெறும் வயிற்றுடன் போனதை நினைத்து சுபிக்ஷாவிற்கு மனம் கனத்தது... அந்தக் கணம் நாசி உணர்ந்த உணவின் நறுமணம் கூட அவளுக்கு ரசிக்கவில்லை...

"வேண்டாம்மா..." என்று சொன்னவளை பார்த்து,

"இப்படிச் சாப்பிடாம இருக்கிறதால எதுவும் மாறப் போறதில்லை சுபி... எதையும் தைரியமா எதிர்கொள்ள மனசில் மட்டுமில்லை உடலிலும் வலு வேண்டாமா..."

"மாமா சாப்பிடலையேம்மா..."

மகளின் வார்த்தையில் திகைத்து போன ரம்யா அடுத்த நொடி அவளை வாரியணைத்து கொண்டாள்... மகளின் மனம் புரிந்து அத்தனை துன்பமாய் இருந்தது அந்தத் தாயுள்ளத்திற்கு...

அன்னையின் அரவணைப்பில் அத்தனை நேரம் நின்றிருந்த அவளது கண்ணீர் மீண்டும் பொங்கி வர துவங்கியது மனதின் வேதனை தாங்க முடியாமல்...

அத்தனை துயரத்திலும் அவளது மனம் கணவனை எண்ணித்தான் வேதனை கொண்டது... தனக்காவது பார்த்துக் கொள்வதற்கு இத்தனை சொந்தங்கள் அருகில் இருக்கிறது... ஆனால் கணவனைப் பார்த்துக் கொள்ள அங்கே யார் இருக்கிறார்கள்...

இருபத்தினான்கு மணி நேரமும் வேலை வேலை என்று பரபரப்புடன் ஓடிக் கொண்டு இருப்பவன் அவளது கணவன்... உறங்கும் நேரம் கூடக் குறைவு தான்... இதில் ஓய்வு என்பது சுத்தமாய்க் கிடையாது... அப்படிப்பட்டவன் பல நேரம் உண்ண மறந்துவிடுவான்... அதைக் கூட அவள் தான் நியாபகப்படுத்த வேண்டும்...

இப்போதும் 'அவன் உண்டு இருப்பானா' என்று எண்ணி அவளது மனம் தாய்மை உணர்வோடு பரிதவித்தது...

மகளைச் சாப்பிட வைக்கப் போராடிய ரம்யா அது முடியாமல் போகவும் தட்டை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டாள்... அன்னை சென்றதும் சுபிக்ஷா மனதில் மீண்டும் கணவனின் எண்ண ஊர்வலம்...

திருமணமானதில் இருந்து இன்று வரை நினைத்து பார்த்தவளுக்கு ஒன்று மட்டும் புரிந்தது... இருவருமே எல்லா விசயத்திலும் எதிர் எதிர் துருவம் என்று...

உணவில் இருந்து ரசனை வரை எல்லாவற்றிலும் இருவரும் வேறுபட்ட மனநிலை கொண்டவர்கள்...

அவளுக்குக் கடல் அலையின் மௌனமான ஆர்ப்பரிப்பில் அந்தப் பௌர்ணமி நிலவை அமைதியாய் ரசிக்கப் பிடிக்கும்... அவனுக்கோ அதற்கு நேரம் கூட இருக்காது... ஓய்வில்லாமல் ஓடி கொண்டிருப்பவனுக்கு ரசிப்பதற்கு மனமில்லை என்பதை விட நேரமில்லை என்பதே சாலப் பொருந்தும்...

ஆனாலும் அவளுக்காக அவன் அதைச் செய்யத்தான் செய்தான்... ஒரு நாள் பௌர்ணமி இரவில் பன்னிரெண்டு மணிக்கு கடற்கரைக்கு அவளை அழைத்துச் சென்று அவளுக்கு ஆச்சிரியம் அளித்தவன் அவள் அந்த இயற்கை அழகை ரசிப்பதை கண்டு மௌனமாய் அவளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்...

அன்று ஆளில்லா அந்தக் கடற்கரையில் அவன் நின்றிருந்த கோலம் இன்றும் அவளது மனக்கண்ணில் பசுமையாய்... இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி, காற்றில் முன்னுச்சி முடி அலைப்பாய, இவளை பார்த்து புன்சிரிப்புடன் நின்றிருந்தவனின் தோற்றம் அந்தப் பௌர்ணமி வெளிச்சத்தில் அத்தனை அழகாய் இருந்தது...

மனதை மயக்கிய மன்னவனின் நெஞ்சத்தில் விருப்பமாய்த் தலைசாய்ந்து கொண்டாள் அவள் அன்று... அதன் பின் இயற்கை அழகு கூட மங்கி மறைந்து போய் அவனது அருகாமையில் மயங்கி போனது அவளது மனம்..

அவளுக்கு அசைவ உணவு பிடிக்கும்... அவனோ சைவ பட்சி... இங்கு வந்து அவனுக்காக உணவுமுறையை மாற்றிக் கொண்டவளை கண்டு அவன் வீட்டில் சமைக்கும்

உணவு வகைகளை மாற்றியிருந்தான் அவளுக்குப் பிடித்த விதத்தில்... அது அவனுக்குப் பிடிக்காததாய் இருந்த போதும்...

அது போல் தான் அவளுக்குத் தமிழ் திரைப்படங்கள் மட்டுமே பார்க்க பிடிக்கும்... அவன் திரைப்படம் பார்ப்பதே அபூர்வம்... அப்படியே பார்த்தாலும் அவன் பார்ப்பது அனைத்தும் ஆங்கிலத் திரைப்படங்கள் மட்டும் தான்...

ஆனாலும் அவளுக்காகச் சில சமயங்களில் அவன் தமிழ் படங்களும் பார்ப்பது உண்டு... அப்படிப் பார்த்த படங்களில் ஒன்று தான் தி. ஜானகிராமனின் 'மோகமுள்' என்ற புதினத்தின் திரைப்படம்...

"என்ன பேபி... படம் ரொம்ப ஸ்லோவா போகுது..." என்று சலிப்பாய் கொட்டாவி விட்ட அவள் கணவன் பின்,

"ஆனா படத்தோட தீம் செம..." குறும்பாய் கண்ணைச்சிமிட்டி அவன் சிரித்த விதத்தில் அவளுக்கு அது எதனால் என்று புரிந்துவிடக் கோபம் போல் அவன் தோளில் அடித்தவளின் கையைச் சிரித்தபடி பிடித்துத் தடுத்தவன் அடுத்து அவள் அடிக்க முடியாதபடி கையைப் பிடித்ததோடு மட்டுமல்லாமல், பேச முடியாதபடி தனது இதழ்களால் அவளது இதழ்களைச் சிறை செய்திருந்தான்...

அன்று அவன் கொடுத்த இதழ் முத்தத்தை இப்போதும் உணர்ந்தவளாய் அவளது நாசி மூச்சுக்காற்றுக்குத் திணறியது... அவனது அருகாமையை உணர்ந்தார் போன்று அவளுக்கு மூச்சு முட்டியது இப்போதும்...

அந்த நொடி அவள் உணர்ந்தாள் அவனைப் பிரிந்து இருப்பது என்பது அத்தனை எளிதல்ல என்று... அவன் கூறுவது போல் அவன் என்ன அவளைக் கொடுமையா செய்தான்...? இல்லை துன்புறுத்தினானா...? இப்படி எதுவும் இல்லையே...

பின் எதற்கு இப்படி வறட்டுக் கௌரவம் பிடித்துக் கொண்டு...? மீண்டும் அவனிடமே சென்றுவிடத் துடித்தது அவளது காதல் நெஞ்சம்...

ஆனாலும்...??? இந்த வார்த்தைக்குப் பின் வரும் அவளின் எதிர்பார்ப்பினை அவனால் பூர்த்திச் செய்ய முடியாதே... நேசம் இல்லாத வாழ்வு இனிக்காது என்பது அவனுக்கு ஏன் புரியவில்லை...?

'ஏன் இப்படிச் செஞ்சீங்க மாமா...?' மானசீகமாய்க் கணவனிடம் கேட்டவளின் மனக்கண்ணில் அவளது தலையில் சத்தியம் செய்து 'ஆம்' என்று தான் செய்த தவறை ஒத்துக் கொண்ட கணவனது முகமே தோன்றி வதைத்தது...

அந்த மனம் வெறுத்த நிலையிலும் அவன் தன் மீது சத்தியம் செய்தால் உண்மையை மட்டும் தான் கூறுவான் என்று அவள் எப்படி நம்பினாள்...

'அதில் எல்லாம் அவங்க நல்லவங்க தான்...' என்று அவளது மனம் கணவனுக்காக அவளிடத்தில் வக்காலத்து வாங்கியது...

எந்த நிலையிலும் கணவனை அவளால் விட்டு கொடுக்க முடியாது என்றே அவளுக்குத் தோன்றியது...

இப்படி மொத்தமாய் விட்டுக் கொடுத்தப்பின் இனி விட்டுக் கொடுத்தால் என்ன...? கொடுக்காவிட்டால் தான் என்ன...? என்று அவள் மனம் விரக்தியாய் நினைத்த போதும்...

'ம்ஹூம்... எந்தச் சூழ்நிலையிலும் மாமா இந்தச் சுபியோட கணவனாகத் தான் இருப்பாங்க...' என்று உறுதியாய் நம்பினாள் அவள்...

அந்தளவுக்குக் கணவன் மீது அவளுக்கு நம்பிக்கை... ஆனால் வெறும் நம்பிக்கை மட்டும் வாழ்க்கையாகி

விடாதே... மீண்டும் அழுகை முட்டி கொண்டு வந்தது அவளுக்கு...

திருமணத்திற்கு முன் காதல் தோன்றாவிட்டாலும் அதற்குப் பின் வாழும் வாழ்க்கையில் காதல் மெல்ல மெல்ல அடி எடுத்து வைத்திருக்க வேண்டாமோ... அது தான் அவளது வாதமாக, பிடிவாதமாக இருந்தது...

அதே நேரம் ஜீவாவும் தன் மனைவியைத் தான் நினைத்துக் கொண்டிருந்தான்...

சென்னையில் இருந்து கிளம்பி வந்தவன் நேரே தனது அலுவலகத்திற்குத் தான் வந்தான்... எத்தனை பிரச்சினை இருந்த போதும் அது தனது வேலைகளைப் பாதிப்பதை அவன் எப்போதும் விரும்ப மாட்டான்... நேற்றுவரை அப்படித்தான் அவன் இருந்தான்... ஆனால் இன்று அப்படியிருக்க அவனால் முடியவில்லை...

கோப்பை கையில் எடுத்து பிரித்தால் அதில் மனைவியின் கண்ணீர் முகமே தோன்றி அவனைப் பெரிதும் இம்சித்தது... முயன்று மனதை மாற்றிக் கொண்டு கவனத்தை வேலையில் பதித்தாலும் அதில் மனம் ஒன்ற மறுத்தது...

'ச்சே... என்னடா இது...?' என்று கோப்பையும், பேனாவையும் தூக்கி தூர போட்டவன் இருக்கையில் கண்மூடி சாய்ந்துவிட்டான்...

"ப்ளீஸ்... நான் சொன்னதை மட்டும் செஞ்சிருங்க..." மனையாளின் அழுத முகமும், கண்ணீர் நிரம்பிய விழிகளும் கண்ணுக்குள் தோன்றி அவனைப் பெரிதும் வருத்தியது...

'எதற்கடி இத்தனை துன்பம்...? பேசாமல் என்னுடன் வருவதற்கு என்ன...?' மனதுக்குள் புலம்பினான் அவன்...

அவன் அவளை நேசிக்கிறானா என்று அவனுக்குத் தெரியாது... ஆனால் மனைவியின் நேசத்தை அவன் உணர்கிறான்...

காலையில் குடும்பத்தார் முன் அவன் உண்மையை ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்ட போது அந்த நிலையிலும் அவனை விட்டு கொடுக்காது அவன் பக்கம் நின்ற மனைவியை நினைத்து அவனுக்கு அத்தனை பெருமிதமாக இருந்தது...

அவனது அன்னை கூட அவனை இந்தளவுக்குப் புரிந்து வைத்தது கிடையாது... ஆனால் மனைவி அவனைப் பற்றி அந்தளவுக்குப் புரிந்து வைத்திருந்தாள்... திருமணமாகி இரண்டு மாதம் தான் ஆனது என்றால் அவனால் நம்பவே முடியவில்லை...

ஏதோ ஜென்ம ஜென்மாய் அவளுடன் வாழ்ந்தது போல் ஒரு உணர்வு அவனுள்... அத்தகைய ஒரு உணர்வினை அவள் அவனுக்கு அளித்திருந்தாள் தனது கட்டுப்பாடற்ற அன்பினால்...

எத்தனை புரிதல் அவளது செயலிலும், வார்த்தையிலும்... அத்தனையும் அனுபவித்தவனுக்கு இந்தக் கணம் தன்னவள் தன் அருகில் வேண்டுமென்று அத்தனை தாபமாய் இருந்தது மனதினுள்...

அவனது வேலையைப் பற்றித் தெரிந்தோ என்னவோ ஒரு போதும் அவள் அவனைத் தொந்திரவு செய்தது கிடையாது... அலைப்பேசியில் சும்மா ‘நை நை’ என்று அழைத்துத் தொல்லை செய்தது கிடையாது... வெளியில் கூட்டி கொண்டு போகச் சொல்லியோ, அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டோ அடம்பிடித்தது கிடையாது...

இப்படி நிறைய விசயங்கள் அவனுக்காக அவள் விட்டு கொடுத்து இருக்கிறாள்... அந்த விதத்தில் அவன்

கொடுத்து வைத்தவன் தான் இப்படி ஒரு மனைவி அமைவதற்கு...

கிருஷ்ணா கூறியது போல் சுபிக்ஷாவை மனைவியாய் பெற அவன் போன ஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்...

எப்போது அவளை நினைத்தாலும் அவனது மனதில் நிம்மதி மட்டும் தான் தோன்றுகிறது...

ஆறு வருடங்கள் கழித்து அவளை முதன்முதலில் பார்த்ததில் இருந்து இன்று வரை நினைத்து பார்த்தவன் மனதில் சந்தோசத்தின் சாயல் மட்டுமே... அதில் எங்கும் துயரமோ, வேதனையின் நிழலோ கிடையாது...

ஆனால் இந்த நொடி அவளைப் பிரிந்து அத்தகைய துன்பத்தை அவன் அனுபவித்துக் கொண்டு இருக்கிறான்...

'முடியலைடி பேபி...' மனதுக்குள் தவித்தான் காதலை உணராத அந்தக் காதல் கணவன்...

மனதில் இத்தனை நேசத்தை வைத்துக் கொண்டு தன்னைப் பிரிய அவள் எடுத்த முடிவு அவன் எதிர்பாராத ஒன்று... ஆனாலும் அவளின் குணத்திற்கு அவள் அப்படி ஒரு முடிவு எடுக்காவிட்டால் தான் அதிசயம்...

பயந்த சுபாவம் கொண்ட பெண்ணாய் அவள் இருந்தாலும் அவளிடம் இருக்கும் ஒருவித அழுத்தம், பிடிவாதம், தன்மானம், நிமிர்வு எல்லாம் எந்தப் பெண்ணிடத்திலும் அவன் இதுவரை காணாதது...

'அன்னைக்கு உரிமை இல்லாமல் காரிலேற மாட்டேன்னு சொன்னவளாயிற்றே...' அன்றைய நாளின் நினைவில் அவனது முகத்தில் புன்னகையின் சாயல்...

'ஆனா இப்போ உரிமையுள்ளவளா இருந்திருந்தும் நீ ஏன் என்னை விட்டு விலகி போன பேபி...' அவனது மனம் வேதனையாய் நினைத்தது...

இந்த உரிமையைத் தான் அவள் அவனிடத்தில் எதிர்பார்க்கிறாள் என்பது அந்த அறிவாளிக்கு அந்தக் கணம் புரியவில்லை... அந்த உரிமை கொடுக்கும் உணர்வுக்குப் பெயர் தான் காதல் என்பதையும் அவன் அப்போது உணரவில்லை...

இன்னும் சில நாட்களில் ஊடகங்கள் அவனது அந்தரங்க விசயத்தைக் கூவி கூவி முழு உலகத்துக்கே கேட்கும்படி உரக்க கத்தி சொல்லப் போகிறது...

'இவனிடம் என்ன குறையோ...', 'இவனை மாதிரி ஒருத்தன் கூட வாழ முடியாமல் தான் அவள் பிரிந்து போய்விட்டாள்...', 'வெளியில் சும்மா பந்தா காட்டுகிற இவன் ஆண்மை இல்லாதவன், ஒரு பெண்ணைத் திருப்திப்படுத்த முடியாதவன்...', 'என்ன கொடுமைப்படுத்தினானோ பாவம் அந்தப் பெண்...', 'இத்தனை பெண்களோடு ஊர் சுத்தினால் எந்தப் பெண் தான் பொறுப்பாள்...'

நாக்கில் நரம்பு இல்லாமல் இப்படிப் பல தரப்பட்ட கிசுகிசுக்கள் அவனைப் பற்றி வெளிவரும்... அவனைப் பற்றி இப்படி அவதூறு பேசுவதற்கு அவனது மனைவி இடம் கொடுத்துவிட்டாளே என்று அவனுக்கு அத்தனை கஷ்டமாக இருந்தது...

இதற்காகத் தான் அவன் அவளிடத்தில் அப்படிச் சொன்னது... ஒரு முறை விலகி போய்விட்டால் இனி மறுமுறை என்ற பேச்சிற்கே இடமில்லை என்று...

அவனது உள்மனதிற்குத் தெரியும் அவள் எந்த விதத்திலும் தன்னைக் கேவலப்படுத்தவில்லை என்று... ஆனால் வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அது தெரியாதே... அப்படி இருக்கும் போது தன்னை இப்படிக்

கேவலப்படுத்தியவளோடு மீண்டும் இணைந்து வாழ்வது என்பது வெளி உலகத்தைப் பொருத்தவரை கேலிக்குரியது... அவனளவில் அது பெரும் இழுக்கு... அவனது தன்மானத்திற்கு மிகுந்த அவமானம்...

ஆண் என்கிற அகங்காரத்தை இந்த உலகத்திற்காக அவன் கட்டி காக்க வேண்டும்... இல்லை என்றால் அவனது இமேஜ் டேமேஜாகி கடகடவெனக் கீழே சரிந்துவிடும்...

'மனைவியைப் பிரிந்தாலும் ஜீவா, ஜீவா தான்...' என்ற பெயரை, கெத்தை அவன் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்... அது தான் அவனுக்கு முக்கியம்...

இனி செய்வதற்கு ஒன்றுமில்லை... மாற்றுவதற்கும் ஒன்றுமில்லை என்றே அவனுக்குத் தோன்றியது...

அந்த நிலையிலும் அவன் தன்னைத் தான் குறைத்து மதிப்பிட்டானே ஒழிய, அவனது மனம் மனைவியைக் குறைவாக எண்ணவும் இல்லை... அவளைப் பற்றித் தவறாகச் சிந்திக்கவும் இல்லை... அவளுக்குச் சாதகமாகத் தான் எல்லாவற்றையும் யோசித்தது... அவளை நல்லவிதமாகத் தான் எண்ணியது...

முக்கியமாக அவளது சாதாரண அழகோ, அந்தஸ்தோ அவனது கண்ணையோ, மனதையோ கொஞ்சமும் உறுத்தவில்லை இப்போது... அவளின் அன்பின் முன்னால் இது அனைத்தும் அடிப்பட்டுப் போனது அவனிடத்தில்...

அவனது மனதில் வியாபித்து இருந்தது எல்லாம் மனைவியின் நேசம் மட்டுமே...

மனைவி கண்ணில் தான் தேடிய காதலை தான், அவள் தன் கண்ணில் தேடுகிறாள் என்பதை அவன் உணரத் தவறியது அந்தோ பரிதாபம்...

அடுத்த வந்த ஒரு வார காலமும் மந்த கதியில் கழிந்தது சுபிக்ஷாவிற்கும், ஜீவாவிற்கும்... ஏதோ உண்டு, உறங்கி என்று பெயருக்கு உடலளவில் வாழ்ந்து வந்தனர்.... மனமோ மனம் கவர்ந்தவரிடம் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது...

அவளது உயிரான இசையைக் கூட மறந்து போய் அவள் அவன் நினைவில் மூழ்கியிருந்தாள்... அவனோ தனது உயிர்மூச்சான தொழிலை கூட மறந்து போய் அவள் நினைவில் ஆழ்ந்திருந்தான்... ஆக மொத்தத்தில் அவனாக அவள், அவளாக அவன்... அப்படித்தான் இருந்தார்கள் இருவரும் சித்த பிரம்மை பிடித்தது போல்...

பெண்ணவள் அதை அப்பட்டமாய் வெளிக்காட்டி கொண்டாள்... ஆனால் ஆண் மகனான அவன் அப்படி அதை வெளிக்காட்டவில்லை...

பேரனின் நிலையை அவனாகச் சொல்லாவிட்டாலும் ருத்ரஸ்ரீ மூலம் ராம்குமாருக்குத் தெரிந்துவிட்டது... ஆனாலும் அவனிடம் என்னவென்று அவரால் கேட்க முடியவில்லை...

ஏனெனில் மனைவியைப் பிரிந்து அப்படி ஒன்றும் அவன் சந்தோசமாக இல்லையே... அவன் முகத்திலிருந்த கவலை அவர் இதுவரை பார்த்தறியாதது... அதனால் அமைதி காத்தார்...

அன்று சுபிக்ஷா அறையில் இருந்த போது ரம்யா பணிப்பெண்ணோடு உள்ளே நுழைந்தாள்... மகள் தன்னைக் கேள்வியாகப் பார்ப்பதை உணர்ந்து அவள்,

"உன்னோட திங்க்ஸ் எல்லாத்தையும் ஜீவா அனுப்பியிருக்கான்..." என்று வரிசையாகப் பெட்டிகளைக் கொண்டு வந்து உள்ளே அடுக்கினாள் ரம்யா...

அதைக் கண்டதும் அவளது இதயம் அதிர்ந்தது... அவளது பொருட்களை ஒழித்து அனுப்பியது போல் அவளையும் ஒட்டு மொத்தமாக ஒழித்துக் கட்டி விட்டானோ தன் கணவன்... மனம் கலங்க அதை வெறித்துப் பார்த்தாள்...

"நீயே அடுக்கி வைக்கிறியா...? இல்லை நான் அடுக்கி வைக்கவா...?"

"நீங்களே செய்ங்கம்மா..." இப்போது இருக்கும் மனநிலையில் தன்னால் அது முடியாத காரியம் என்பதால் அன்னையிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டாள்...

மகள் சொன்னதும் ரம்யா அவளது அலமாரியை திறந்தாள்... அதன் உள்ளே ஓரமாய் உறங்கி கொண்டிருந்த மகளின் முகூர்த்த புடவையைக் கண்டதும் மனம் பாரமாக அதைக் கையில் எடுத்தாள் அவள்...

மாப்பிள்ளை மாறியது தவிர மற்றபடி ஊர் மெச்சும்படி கோலாகலமாக நடந்த மகளது திருமணம் நினைவிலாட அவளது கண்களில் நீர் கோர்த்தது...

"அம்மா... உங்களைக் கூப்பிட்டுட்டே இருக்கேன் காதில் விழாம அங்கே என்ன செய்றீங்க..." மகளின் அழைப்பில் திரும்பி பார்த்த ரம்யா,

"உன்னோட முகூர்த்தப்புடவையைப் பார்த்துக்கிட்டு இருந்தேன்..."

அன்னை சொன்னதும் சுபிக்ஷா அதைக் காண ஆர்வமாய் முன்வந்தாள்... ஏனெனில் அன்று அவள் இருந்த மனநிலையில் அதைக் கவனிக்கத் தவறியிருந்தாள்... அது போல் மும்பை போகும் போதும் அதை அவள் கொண்டு செல்ல மறந்து விட்டாள்...

மனம் அதிர, கைகள் நடுங்க பட்டுப் புடவையைத் தன் கரத்தில் வாங்கியவள் அதை உற்று நோக்கிய போது

இனிமையாக அதிர்ந்தாள்... ஏனெனில் அது அன்று அவள் தேர்வு செய்த அதே முகூர்த்தப்பட்டு...

அழகான அரக்கு நிறத்தில் உடல் முழுவதும் கொடி போல் தங்க சரிகை இழையோட, விளிம்பில் மட்டும் பச்சை கரையிட்ட அந்தப் பட்டுப்புடவையில் மேலும் அழகு சேர்க்க பல வண்ணக் கற்கள் பதிக்கப்பட்டு இருந்தது அழகுற...

'எப்படி இது சாத்தியம்...?' மனதில் கேள்வி முளைக்க அடுத்த நொடி அவள் மனம் பரபரபக்க மும்பையில் இருந்து வந்திருந்த தனது உடைமைகளில் நகைகள் அடங்கிய பெட்டியை தேடி தனது கண்களை ஓட்டினாள்...

அந்தச் சிறு பெட்டியை கண்டதும் மனதில் சந்தோசம் கொப்பளிக்க ஓடி சென்று அதைத் திறக்க போனாள்... அப்போது தான் அது 'நம்பர் லாக்' செய்யப்பட்டு இருப்பது மூளையில் உறைக்க, கணவன் அதைத் திறக்க சொல்லி கொடுத்த எண்ணை உபயோகித்து அதைத் திறந்தவள் மனதில் அந்த எண்ணுக்கான ரகசியமும் சேர்ந்து திறந்தது...

ஜீவா அதற்கான எண்ணை கூறிய போது அவள் மிகவும் குழம்பி போனாள்...

"இது என்ன நம்பர்...? உங்க பேர்த்டே டேட்டும் இல்லை... என்னோட பேர்த்டே டேட்டும் இல்லை... நம்ம வெட்டிங் டேட்டும் இல்லை... இது என்ன புதுசா...?" மூக்கை சுருக்கி கொண்டு கேட்டவளின் தலையில் செல்லமாய்த் தட்டியவன்,

"லாக் எடுப்பதற்கு ஏதோ ஒரு எண் உனக்கு வேணும்... அதை விட்டுட்டு வீணா அதைப் பத்தி ஆராய்ச்சி பண்ணக்கூடாது..." என்று அவன் புன்னகைக்க...

"ஒருவேளை நான் மறந்துட்டா... அதான் ஏதாவது நிகழ்வு சம்பந்தப்பட்டதோன்னு கேட்டேன்..."

"உனக்கு மறந்தாலும் அது எனக்கு மறக்காது..." என்றவனின் பார்வை மாறிப் போனது கணவனாக...

அதன்பின் அவளும் அதை மறந்து போனாள்... ஆனால் அது இன்று அவளது நியாபகத்தில் வந்தது... இந்த எண் அவளுக்கும் அபிமன்யுவிற்கும் நிச்சயம் நடந்த நாளின் எண்...

அதே சமயம் ஜீவா அவளது குரலில் தனது மனதினை பறிகொடுத்த நாள்... அவனுக்கு நிம்மதியை மீட்டெடுத்த நாள்...

அப்போது அவன் இதைச் சொன்ன போது அவளுக்குக் கோபம் வந்தது... ஆனால் இப்போது அவளுக்கு அதை நினைத்துச் சந்தோசம் தான் மனதில் நிறைந்தது...

அவசரமாய்ப் பெட்டியை திறந்தவள் அதில் இருந்த நகைப்பெட்டிகளில் கணவன் கொடுத்த பரிசினை தேடி எடுத்தாள்... ஏதோ புதையல் கிடைத்தது போல் அத்தனை சந்தோசத்துடன் அதைக் கையில் எடுத்தவள் வேகமாய் அதைத் திறந்து பார்க்க...

அவள் நினைத்தது போல் அதிலிருந்த நகை அன்று அவள் விரும்பி எடுத்ததே தான்... அதைக் காதலோடு தடவி கொடுத்தவளின் இதழ்களில் புன்னகை பூத்தது... விழிகளில் வைர மணிகளாய் விழிநீர் கோர்த்தது...

வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அது வெறும் புடவை, நகை மட்டும் தான்... ஆனால் அவளைப் பொருத்தவரையில் அவை இரண்டும் அவளது கணவனின் காதல் மனது அல்லவா... மனதில் எழுந்த மகிழ்ச்சியோடு அந்தப் புடவையையும், நகையையும் தன் நெஞ்சோடு அணைத்து கொண்டாள் அவள்...

இதுநாள் வரை சப்தமில்லா ஸ்வரங்களாய், மௌனமாய் அன்பை உணர்த்திய கணவனின் காதல் இப்போது அவள்

மனதில் இன்னிசையாய் ரீங்காரமிட்டது...!!!

அதே நேரம் அபிமன்யு ஜீவாவிடம் அலைப்பேசியில் உரையாடி கொண்டிருந்தான்...

"இந்தச் சந்தர்ப்பத்திற்காகத் தான் நான் இத்தனை நாளாய்க் காத்திருந்தேன் ஜீவா... இனியும் சுபியை இழக்க நான் ஒண்ணும் முட்டாளில்லை... இனி சுபி எனக்குத் தான்... எனக்கு மட்டும் தான்..."

அழுத்தம் திருத்தமாய்ச் சொன்ன அபிமன்யுவின் குரலில் அத்தனை தீவிரம் இருந்தது...!!!

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 25

அபிமன்யு சொன்னதைக் கேட்டு மறுமுனையில் நொடிக்கும் குறைவான மௌனம் எழுந்தது… அடுத்த நொடி ஜீவாவின் சரளமான, பிசிறில்லாத குரல் அழுத்தமாய்த் தான் சொல்ல வந்ததைத் தெளிவாக உரைத்தது…

"ம்… அப்படியா…? ரொம்பச் சந்தோசம்… ஆல் த பெஸ்ட்…"

ஜீவாவின் குரலில் இருந்தது கோபமா, அலட்சியமா என்று பிரித்துணர முடியவில்லை அபிமன்யுவால்… அதில் அவன் ஒரு நொடி திகைத்து தான் போனான்…

"ரொம்பப் பெருந்தன்மை தான் ஜீவா உனக்கு…?" என்றான் நக்கல் குரலில் அபிமன்யு…

"இதில் என்ன பெருந்தன்மை இருக்கு… பிடிக்கவில்லை என்று ஒதுங்கிவிட்ட பிறகு நான் அவளது வாழ்வின் வழியை அடைத்துக் கொண்டு இருப்பதில் கொஞ்சமும் நியாயம் இல்லையே…"

"இப்போதாவது தெரிந்ததா…? சுபிக்கு உன்னைப் பிடிக்காது என்று…?"

இதற்கு ஜீவா பதில் சொல்லவில்லை… தன் மனதில் இருப்பதை அபிமன்யுவிடத்தில் உரைக்க அவனுக்கு மனமில்லை…

"இப்போ உனக்குப் புரிஞ்சிருக்கும்… எல்லா நேரமும் ஜெயிக்க முடியாதுன்னு…" விடாமல் நக்கலடித்த அபிமன்யுவை கண்டு ஜீவாவினுள் சுறுசுறுவெனக் கோபம் ஏறியது…

"இப்போதும் நான் தான் ஜெயித்தேன்… நீ தான் தோல்வியைத் தழுவியிருக்கிறாய்…" என்றவனின் குரலில்

ஒருவித அகம்பாவமே ஓங்கி இருந்தது...

அதைக் கேட்டு அபிமன்யுவின் முகம் குழப்பத்தைத் தத்தெடுத்தது...

"என்ன சொல்ற...?"

"எனக்குச் சுபி வேண்டும் என்றால் அவளது நிழலை கூட உன்னால் தீண்ட முடியாது... அந்தளவுக்கு நான் அவளைப் பாதுகாப்பேன்... ஆனால் அவளை விட்டு விலகி வரும் இந்த முடிவு நான் விரும்பி எடுத்தது... அதனால் தான் விலகியிருக்கிறேன்... இப்போதும் நான் அவளை உனக்கு விட்டுக் கொடுத்தால் தான் நீ அவளை அடைய முடியும்... இல்லை என்றால் உன்னைக் கடத்தி அவளைக் கல்யாணம் பண்ணின நான், இப்போது என் மனைவி எனக்கு வேண்டுவதாக இருந்தால் என்னிடம் இப்படிப் பேசிய உன்னைக் கொன்றுவிட எனக்கு ரொம்ப நேரமாகாது..." என்று தீவிரமான குரலில் கூறியவன்,

"எதுவுமே இந்த ஜீவாவாக விட்டுக் கொடுத்தால் தான் உனக்கு எல்லாமே கிடைக்கும்... அது தொழிலாக இருந்தாலும் சரி, வாழ்க்கையாக இருந்தாலும் சரி..."

அமர்த்தலான குரலில் பேசிய ஜீவா அபிமன்யுவின் பதிலை எதிர்பாராது அழைப்பை துண்டித்து இருந்தான்...

அபிமன்யுவோ எதுவுமே பேச தோன்றாதவனாக அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருந்தான் திக்பிரம்மை பிடித்து...

"அபி..." ஜெகன் அவனின் தோளில் கை வைக்க... அதில் ஜெகனை ஏறிட்டவன்,

"பெரியப்பா... தேவையில்லாம சிங்கத்தைச் சொறிஞ்சு விட்டுட்டீங்களோ...?" என்றான் பரிதாபமாக...

"ஜீவா இப்படிப் பேசுவான்னு யார் கண்டது அபி...? நீ இப்படிப் பேசினா அவன் கோபப்பட்டுச் சுபி கூடச் சேர்வான்னு பார்த்தால் இவன் இப்படிப் பேசுகிறானே..." என்ற ஜெகன் மகனை நினைத்து கவலை கொண்டான்...

ஜெகனும், செல்வாவும் சேர்ந்து தான் இப்படி ஒரு திட்டம் தீட்டியது... ஆனால் இது இந்தளவுக்குச் சொதப்பும் என்று அவர்கள் அறியாது போனது தான் பரிதாபம்...

காதலில் முக்கியப் பங்கு வகிப்பது பொறாமை அல்லவா... தன்னவளை யாரிடத்திலும் விட்டு கொடுக்காது, யாருடனும் இணைத்து பேச முடியாது 'அவள் எனக்கு மட்டுமே சொந்தம்' என்கிற உரிமையுணர்வில் எழும் பொறாமை உணர்வு உலகிலுள்ள எல்லாக் காதலர்களுக்கும் பொருந்தும் இல்லையா...?

ஆனால் இந்த ஜீவா மட்டும் ஏன் இந்த விசயத்தில் இப்படி விதிவிலக்காக இருக்கின்றான்...?

"மச்சி... உன் மகன் தானே அதான் இப்படிச் சொதப்புகிறான்... என் பொண்ணு வீரத்தமிழச்சிடா... நம்ம அடுத்த ஃபிட்டை சுபி கிட்ட போட்டு பார்ப்போம்..." செல்வா சிறிது கேலியோடு சொன்னாலும் அவனின் வார்த்தைகளில் அத்தனை கவலை தெரிந்தது...

"ஆமாம் பெரியப்பா... ஜீவா மாதிரி சுபி கிடையாது... அவள் எதையும் யோசிச்சு தான் முடிவு எடுப்பாள்..."

அபிமன்யுவும் அதை ஆமோதிக்க வேறுவழியின்றி ஜெகன் அதை ஏற்றுக் கொண்டான்...

"ஆனாலும் பெண்பிள்ளை மனது ரொம்பக் கஷ்டப்பட்டுப் போகுமே மாப்ள..." மருமகளை நினைத்து அவனுக்கு அத்தனை கவலையாக இருந்தது...

"வலிக்குது என்பதற்காக நோய்க்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளாமல் இருக்க முடியுமா... நோய் குணமாகணுமா வேண்டாமா மச்சி...?"

செல்வா கேட்டதும் ஜெகன் அமைதியாகிவிட்டான்...

"சரி பெரியப்பா, மாமா நான் கிளம்புகிறேன்..." என்றபடி எழுந்த அபிமன்யு பின்பு நின்று ஜெகனிடம் வந்து,

"அன்னைக்கு நான் அப்படிப் பேசியதுக்குச் சாரி பெரியப்பா..." என்றவனின் முகத்தில் அத்தனை வருத்தம் இருந்தது...

"நான் தான் உன்னைப் புரிஞ்சிக்காம திட்டிட்டேன் அபி..." என்ற ஜெகன் எழுந்து வந்து தான் பெறாத மகனை பாசத்தோடு அணைத்துக் கொண்டான்...

"என்னை நீ தான் மன்னிக்கணும் அபி..."

"எதுக்கு இவ்வளவு பெரிய வார்த்தைகள் எல்லாம் பெரியப்பா... அந்த நொடி எனக்குத் தோணியது எல்லாம் ஜீவா, சுபி வாழ்க்கை நல்லாயிருக்கணும் என்பது மட்டும்... அதனால் தான் அப்படிப் பேசிட்டேன்... இதோ இப்போதும் நான் இதைச் செய்வதற்குக் காரணம், என்னால் பிரிந்த அவர்கள் இருவரும் என்னால் ஒன்று சேர வேண்டும் என்பதற்காகத் தான்..." என்றவனின் குரல் துன்பத்துடன் ஒலித்தது...

அவன் ஏதோ உணர்ச்சிவசப்பட்டு ஜீவாவிடம் பேச போக அது இப்படி அவர்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை...

"அபி... சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோப்பா..." என்று ஜெகன் கூறியதை கேட்டு அபிமன்யுவின் முகத்தில் விரக்தி புன்னகை எழுந்தது... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு பெருமூச்சு ஒன்றை விட்டபடி,

"பண்ணிக்கணும்... அப்படிப் பண்ணாமல் தனியே காலத்தைத் தள்ள அம்மாவும் விட மாட்டாங்க..." வேதனை குரலில் கூறியவனை மீண்டும் அணைத்துக் கொண்ட ஜெகனின் மனம் அவன் பால் உருகி போனது அந்த நொடி...

அபிமன்யுவின் இதே வேதனையை ஒரு காலத்தில் அவனும் அனுபவித்தவன் தானே... கார்த்திக்கிடம் தன்னவளை பறிகொடுத்து விட்டு அவன் மனதுக்குள் வெம்பி தவித்தது அவனுக்கு மட்டும் தானே தெரியும்... 'துன்பம்' என்ற ஒற்றை வார்த்தையில் அடக்கி விடக் கூடிய வலியா அது... இல்லையே...

இப்போது தன்னைப் போல் ஒரு ஜீவனைக் கண்டதும் அவனது மனம் அன்றைய நாள் துன்பத்தில் துடித்தது போல் இன்றும் துடித்தது அந்தத் துன்பத்தை உணர்ந்தார் போன்று...

கார்த்திக் அன்று இவனுக்கு ஏற்படுத்திய துன்பத்தை இன்று இவனது மகன் கார்த்திக்கின் மகனுக்கு ஏற்படுத்தியதை நினைத்து ஜெகனால் பழிவாங்கிய உணர்வில் சந்தோசப்பட முடியவில்லை... மாறாக மனம் வேதனை அடைந்தது தனது மகனது செயலை நினைத்து...

இது தான் ஜெகன்... எல்லோருக்கும் நல்லதை மட்டும் நினைப்பதற்கு, செய்வதற்கு அவனால் மட்டுமே முடியும்...

அங்கே அலைப்பேசியை அணைத்து வைத்த ஜீவாவின் முகம் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது... பிறகு அதை ஒதுக்கி வைத்தவனாய் தனது வேலையில் ஆழ்ந்து போனான்... ஆனாலும் மனதுக்குள் முணுமுணுக்கென்று ஏதோ ஒன்று உறுத்தி கொண்டே இருந்தது அவனுக்கு...

சுபிக்ஷாவின் விழிகளில் இருந்து விடாமல் பெருகிய கண்ணீர் அவள் கையில் வைத்திருந்த புடவையையும், நகையையும் ஒருசேர நனைத்தது...

கணவனது மனதை உணராது தான் செய்த தவறை எண்ணி வருந்தி தனது கண்ணீரால் அந்தப் பரிசு பொருட்களைக் கழுவி தனது பாவத்தைப் போக்கி கொண்டிருந்தாள் அந்தப் பேதை...

மகள் திடுமென இப்படிக் குலுங்கி குலுங்கி அழுவது கண்டு பதறி போய் அவள் அருகில் வந்த ரம்யா,

"சுபி... என்னம்மா ஆச்சு...?" என்று பதற்றத்துடன் அவளது தோள் பற்றிக் கேட்க...

அவளோ எதையும் பேசும் நிலையில் இல்லை... இப்போது அவளுக்கு வேண்டியது எல்லாம் தனிமை...

அதனால் கையிலிருந்த பொருட்களோடு, "அம்மா... நான் அவரோட ரூமுக்கு போறேன்..." என்றவள் அன்னையின் பதிலை எதிர்பாராது சென்றுவிட்டாள்...

ரம்யா கவலையாக மகளைப் பார்த்திருந்தாள்...

கணவனது அறையை நோக்கி நடந்தவளுக்கு மனதில் அத்தனை சந்தோசம்... அதையும் மீறி சிறிது வேதனை... எல்லாம் கலந்த கலவையான மனநிலையுடன் அறைக்கதவை திறந்தவள் மனதில் கணவனது நியாபகங்கள் குபீரென்று நீரூற்று போல் எழுந்தது...

ஒரு வாரம் முன்பு அவனுடன் இங்கு வாழ்ந்த ஒரு நாள் இரவு நினைவில் எழுந்து 'இது எங்களுடைய அறை' என்கிற சொந்தம் மனதில் எழுந்து அந்த அறையைப் புதிதாய்ப் பார்ப்பது போல் பார்த்தாள்... பின்பு நேரே கட்டில் அருகே வந்தவள் அதன் மீது கையிலிருந்த பொருட்களை வைத்து விட்டு அதன் அருகே மண்டியிட்டு அமர்ந்தாள்...

மெல்ல படுக்கை விரிப்பை வருடி கொடுத்தவள் மனதில் அன்றிரவு கணவனுடன் கூடிய கூடல் நியாபகம் வந்தது... விடியவே விடியக் கூடாது என்பது போல், அந்த ஒரு நாள்

இரவோடு உலகம் முழுவதும் அழிந்துவிடுவது போல் பின்னி பிணைந்த அவர்களின் ஆத்மார்த்தமான உறவின் நினைவலைகள் மனதில் எழுந்து அவளது முகத்தில் நாணப் புன்னகையைத் தருவித்தது...

'ஐ மிஸ் யூ பேபி', 'நீ இல்லாமல் நான் எப்படி இருப்பேன் பேபி' என்று புலம்பிய கணவனின் பிதற்றலை எல்லாக் கணவன்களையும் போல் இரவு நேர உளறல் என்று நினைத்தவளுக்கு அதில் ஒளிந்திருந்த கணவனின் நேசம் இப்போது தான் புரிந்தது...

ஒவ்வொரு தடவையும் இந்த வார்த்தைகளைக் கூறி கூறி தன்னுள் புதைந்தவனின் தொடுகையை இப்போதும் உணர்ந்தவளாய் அவளது மேனி சிலிர்த்தது வெட்கத்தில்...

'என்னை அவ்வளவு பிடிக்குமா மாமா...?' மானசீகமாகத் தன்னவனிடம் கேட்டவள் கண்முன் சாட்சியாய் அவனது பரிசுகள் இருந்தது...

பட்டுப்புடவையைக் கையில் எடுத்தவள் என்னவோ தன்னவனைத் தொடுவது போல் மென்மையாக வருடி கொடுத்தாள் அதை...

அன்று இந்தப் புடவையை அவள் எடுத்த போது அவன் அப்போது தான் வீட்டினுள் நுழைந்திருந்தான்... அப்படி என்றால் அவளது ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டு தான் உள்ளே நுழைந்திருப்பானோ...

அடுத்து நகையைப் பார்த்தவளுக்கு அதை அவள் தேர்வு செய்த நிமிடங்கள் மனதில் எழுந்தது... அதை அவள் தேர்வு செய்த போது ஜீவா வினீதாவுடன் அல்லவா பேசி கொண்டிருந்தான்... எப்படி அவளைக் கவனித்தான்...

'ஆனாலும் நீங்க கள்ளன் தான் மாமா... எப்படி உங்களால் மட்டும் ஒரே நேரத்தில் இத்தனை விசயங்களைக் கவனிக்க முடிகிறது...'

என்று நினைத்தவளுக்கு அன்று அலுவலகத்தில் வேலையைப் பார்த்துக் கொண்டே தான் அவனை உற்று பார்ப்பதை கவனித்த கணவனின் செயல் நியாபகம் வந்தது... அத்தோடு அன்று மதியம் நிகழ்ந்த நிகழ்வுகளும் சேர்ந்து நியாபகம் வர கையிலிருந்த புடவை கொண்டு முகத்தை மூடி கொண்டாள் வெட்கத்தில்...

அப்போது தான் அவளுக்கு அது நியாபகத்தில் வந்தது... கணவன் மட்டுமா கள்ளன் அவளும் தானே... அன்று அருகிலிருந்த அபிமன்யுவை கூடக் கவனிக்காமல் அவள் ஜீவாவை தானே கவனித்திருக்கிறாள்...

ஒருவேளை ஜீவா சொன்னது போல் அவளது அடிமனது அவனைத் தேடியிருக்கிறதோ...? அப்படித்தான் இருக்க வேண்டும்... அன்றே மாமன் மகன் தனது மனதில் ஆழப்பதிந்து இருக்கிறான் என்ற எண்ணமே இப்போது அவளது அடி நெஞ்சு வரை தித்தித்தது...

'நீங்க சொன்னது சரி தான் மாமா... இது மட்டும் எனக்கு லேட்டா தெரிஞ்சிருந்தா ரொம்பக் குற்றவுணர்ச்சியா போயிருந்திருக்கும்... சாரி மாமா உங்களை நான் புரிஞ்சிக்கவே இல்லை...'

கணவனிடத்தில் மானசீகமாக மன்னிப்பு கேட்டவள் மனதில் கணவன் தன்னை மன்னிக்கும் விதம் நினைவில் எழுந்து அந்த நொடி அவளது மனதும், உடலும் ஒன்று போல் தன்னவனைத் தேடியது தாபத்தில்...

இனி கணவன் தன்னைத் தேடி வர மாட்டான்... தான் தான் அவனைத் தேடி போக வேண்டும்...

'நீ என்னைத் தேடி வந்தாலும் எனக்கு நீ வேண்டாம்...' கணவனது உறுதியான குரல் அவளது காதில் இப்போது ஒலித்து அவளைப் பெரிதும் கலக்கமடையச் செய்தது...

ஆனாலும் அவன் தன் மீது கொண்ட நேசத்தின் மீது அவளுக்குப் பெருமளவு நம்பிக்கை இருந்தது... அப்படி ஒன்றும் அவன் அவளது கழுத்தை பிடித்து வீட்டை விட்டு வெளியில் தள்ளவிடப் போவதில்லை... என்ன மாறாக அவளிடம் பேசாமல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருப்பான் கோபமாக...

மனைவிக்குத் தெரியாதா கணவனின் கோபத்தை எப்படி மறக்கடிக்க வேண்டும் என்று... அதை நினைக்கும் போதே அவளது மனதில் வெட்கத்தின் சாயல்...

"உண்மையைச் சொன்னால் நேசிப்பாயா...

மஞ்சத்தின் மேல் மன்னிப்பாயா..."

என்று உற்சாகமாகப் பாடியவளுக்கு என்றுமில்லாத அளவுக்கு மகிழ்ச்சியாக இருந்த அதே சமயம் தனது குரலையும் அத்தனை பிடித்துப் போனது... ஏனெனில் அவளது கணவனுக்கு அவளிடத்தில் பிடித்த விசயம் அதுவல்லவா...

ஜீவா அவளிடம் பாட சொல்லி விரும்பி கேட்கும் பாடல் 'நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா'... தினமும் ஒரு தடவையாவது அவனுக்கு அந்தப் பாடலை அவளைப் பாட வைத்து கேட்க வேண்டும்... அந்த நொடி அவன் கண்ணில் அப்படி ஒரு தேடல் இருக்கும்...

தான் என்கிற அகங்காரத்தை மறந்து அவன் அவளில் சரணடையும் அந்த மணித்துளிகளை நினைத்து பார்த்தவள் கண்ணில் கண்ணீர் துளிகள்...

ஒவ்வொரு விசயத்திலும் கணவன் சரியாகத்தான் இருந்திருக்கிறான்... அவள் தான் தேவையில்லாததை நினைத்துக் கொண்டு அவனையும் வருத்தி தன்னையும் வருத்தி கொண்டிருக்கிறாள்... அது எதனால் என்பதும் அவளுக்குப் புரிந்தது...

கணவனது அத்தனை அன்பும் அவன் அபிமன்யுவை கடத்தி சென்று தன்னைத் திருமணம் முடித்ததில் அப்படியே அடிப்பட்டுப் போனது அவளுக்கு...

எல்லோரும் எல்லோருக்கும் நூறு சதவீதம் நல்லவர்களாக இருக்க முடியாது... அதில் பத்துச் சதவீதம் யாருக்காவது அவர்கள் கெட்டவர்களாகத் தான் இருக்க முடியும்...

ஆனால் யாரும் தனது துணைக்குக் கெட்டவர்களாக இருக்கக் கூடாது... அப்படி இருந்தால் வாழும் வாழ்க்கை நரகமாகி விடும்...

அதனால் தான் ஜீவா மற்றவர்களைப் பொருத்தவரை எப்படியிருந்த போதும் தனக்கு மட்டுமாவது அவன் நல்லவனாக இருக்க வேண்டும் என்று அவள் எண்ணினாள்... அதைத் தான் அவள் அவனிடத்தில் கேட்டது காதலாக...

அந்தக் காதலை வானளவு மனதில் வைத்திருந்தவனுக்கு அதைச் சொல்லும் வழி தான் தெரியவில்லை போலும்... அதனால் தான் எல்லாவற்றையும் இப்படிச் சொதப்பி எடுத்துவிட்டான்... ஆனாலும் எதையும் சொல்லாமல் தனது செயல்களால் அவளுக்குப் பிடித்ததை எல்லாம் செய்து அவள் மனம் அறிந்து நடந்து கொண்டு அவளது மனதினை குளிர்வித்து விட்டான் தனது நேசத்தினால்...

நிச்சயம் அவன் பழிவாங்க அவளைத் திருமணம் செய்யவில்லை... அவளைப் பிடித்திருந்ததால் தான் திருமணம் செய்திருக்கிறான்... அதை அவன் உணரவுமில்லை... ஒத்து கொள்ளவுமில்லை...

' மாமா உங்க கர்வம் இருக்கே அது யாருக்கும் வராது... ஆனாலும் இந்தக் கர்வம் தான் மாமா உங்க கிட்ட எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு...'

அறையில் பெரிதாக மாட்டப்பட்டு இருந்த அவர்களின் திருமணப் புகைப்படத்தைப் பார்த்து அதிலிருந்த கணவனின் நிழல் உருவத்திடம் சொன்னவள் எழுந்து அதன் அருகே சென்றாள்...

தான் பயத்துடன் கலக்கத்துடன் நின்றிருக்க அவனோ நிமிர்வாய், கம்பீரமாய் எதையோ சாதித்தது போல் அவளது தோளில் கை போட்டு வளை அணைத்துக் கொண்டு புகைப்படத்திற்குக் காட்சி கொடுத்திருந்தான்...

மாநிறமான தன்னுடன் நின்றிருந்த கணவனின் அழகு அவளது மனதினை சுகராகமாய்க் கொள்ளை கொண்டது...

'ஆப்பிளே தான் மாமா நீங்க... எத்தனை சிவப்பா இருக்கீங்க...' ஆச்சிரியமும், சந்தோசமுமாய் அவனை வருடினாள் பார்வையால், தனது கரத்தால்...

இன்றே அவனிடம் போய்விடத் துடித்த மனதினை பெரும்பாடு பட்டு அடக்கினாள் அவள்... வீட்டில் இருப்பவர்களிடம் முதலில் சொல்லிவிட்டு நாளை தான் கிளம்ப வேண்டும் என்று...

கணவனுக்கு அழைத்துச் சொல்லலாமா என்று மனம் ஆசை கொண்ட போதும், 'வேண்டாம்' என்று அந்த ஆசையைப் புறம் தள்ளினாள் அவனுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க எண்ணி...

மதிய உணவிற்குத் தெளிவான முகத்துடன் வந்தமர்ந்த மகளைக் கண்டு மனம் நிறைந்தவளாய்ச் சந்தோசமாக அவளுக்குப் பரிமாறினாள் ரம்யா...

"உனக்குப் பிடிச்ச மீன் குழம்பு தான்... நல்லா சாப்பிடு சுபி..." என்று அன்னை சோற்றின் மீது புளிப்பும் உரப்புமாய் மீன் குழம்பை ஊற்ற... வெகுநாட்கள் கழித்துப் பசியை உணர்ந்த சுபிக்ஷாவின் நாவில் எச்சில் ஊறியது...

மீன் குழம்பின் வாசம் அவளது நாசியைத் தீண்டி சுவை அரும்புகளைத் தூண்டிவிட்டது பசியோடு... அத்தோடு சேர்த்து கணவனின் நினைவுகளையும்... எந்த அசைவ உணவு அவள் சாப்பிட்டாலும் முகத்தைச் சுளிக்காத ஜீவா அவள் மீன் உண்டால் மட்டும் முகத்தை அப்படி அஷ்டகோணலாக்கி சுளிப்பான்...

அன்று மட்டும், "முதல்ல ஃபிரஷ் பண்ணு... மவுத் வாஷ் யூஸ் பண்ணு..." என்று அவளைப் படுத்தி எடுத்துவிடுவான்...

"மீன் சாப்பிட்டது நான்... என்னமோ நீங்க சாப்பிட்ட மாதிரி ரொம்பத்தான் அலட்டிக்கிறீங்க...?" அவனைப் பார்த்து போலியாய் அவள் முறைக்கும் போது,

"நீ சாப்பிட்டாலும் நான் சாப்பிட்டாலும் ஒண்ணு தான் பேபி..."

அவளது தேனூறும் இதழ்களைக் கிறக்கமாய்ப் பார்த்தபடி ஒலிக்கும் அவனது தாபக்குரலில் அவள் தான் பேச்சற்று போய்விடுவாள்... அதிலிருந்து மீன் சாப்பிடுவதை விட்டு விட்டாள் அவள்...

இப்போது மீண்டும் மீனை பார்த்ததும் மீண்டும் தன் மன்னவனின் நியாபகம்...

"மீன் வேண்டாம்மா..." என்றபடி அதை ஒதுக்கி வைத்து விட்டு வேறு தட்டை எடுத்து அதில் சோறு வைத்து வெறும் தயிரை ஊற்றினாள் சுபிக்ஷா...

"உனக்கு மீன் பிடிக்குமே சுபி..."

"மாமாவுக்கு மீன் பிடிக்காதேம்மா..." நாளை சந்திக்கப் போகும் கணவனுக்காக இன்றே விரதம் காத்தாள் அந்தப் பத்தினி பெண்...

மகள் வருத்தமாய்ச் சொல்லுகிறாளோ என்று கவலையுடன் அவளைப் பார்த்த ரம்யா அவளது முகத்திலிருந்த சந்தோசத்தைக் கண்டு குழம்பி போனாள்...

அந்நேரம் அங்கு உணவு அருந்த எல்லோரும் வர பேச்சை தவிர்த்துப் பரிமாறுவதில் கவனமானாள் ரம்யா...

தயிர் சாதத்தை ஒரு வாய் எடுத்து வாயில் வைத்த சுபிக்ஷாவிற்கு உமட்டி கொண்டு வர வாஷ்பேசினை நோக்கி ஓடினாள்... எல்லோரும் திகைத்து போய் அவளைப் பார்க்க அகிலாண்டம் மகிழ்வோடு மகளிடம்,

"ரம்யா... சந்தோசமான விசயமா இருக்கப் போகுது... ராசாத்தி கிட்ட போய் என்னன்னு கேளும்மா..." என்று சொல்ல...

அதைக் கேட்டு முகம் மலர்ந்த ரம்யா மகளைத் தேடி போனாள்...

"என்னங்க... சுபி வாமிட் பண்றதை பார்த்து சந்தோசமான விசயம்ன்னு அத்தை சொல்றாங்க... முதல்ல டாக்டர்க்கு ஃபோன் பண்ணுங்க..."

ருத்ரஸ்ரீ கணவனின் காதை கடித்தாள்... அதைக் கேட்டு ஜெகன் அவளை ஒரு மாதிரியாய் பார்த்தான்...

"என்ன...?"

"ம்ஹூம்... நானும் உன்னைப் பிஎச்டி வாங்க வைக்கணும்ன்னு நினைக்கிறேன்... முடியலையே ஜில்லு..." சோகமாய்ச் சொன்னவனைப் புரியாமல் பார்த்தவள் பின்பு அதன் அர்த்தம் புரிந்து கோபமாய் முறைத்தவள்,

"பேரன், பேத்தி எடுத்த பிறகும் இந்த லொள்ளு பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை... நான் பிஎச்டி பட்டம்

வாங்காததால ஐயா எதுல குறைஞ்சு போயிட்டாராம்..." என்று அவள் கோபமாய் நொடித்துக் கொள்ள...

"அதைத் தான்டி நானும் சொல்லுறேன் என் ஜில்லு... பேரன் பேத்தி எடுத்த பிறகும் வயசுப் பொண்ணு வாமிட் பண்றதுக்கு அர்த்தம் தெரியாம இருக்கியே என் மக்கு ஜில்லு..." என்று மனைவியின் மக்குத்தனத்தை அவன் அவளைக் கொஞ்சியபடி சுட்டிக்காட்ட... அதைக் கேட்டு ருத்ரஸ்ரீ தான் அசடு வழிய வேண்டியதாய் போயிற்று...

"அப்படியாங்க...?"

"அப்படியே தான்ங்க..." என்றவனின் முகத்தில் சந்தோசத்தையும் மீறி லேசாகக் கவலை படர்ந்தது...

"என்னங்க... எதுவும் பிரச்சினையா...?"

மனைவி கேட்டதும் முகத்தை நொடியில் சரி செய்து கொண்ட ஜெகன், "உன் மகன் உன்னை மாதிரியே இருக்கிறான்... இந்த விசயத்தில் அவன் ரொம்பவே மக்கு... அப்பன் என்னைப் போல் புத்திசாலியாய் இல்லை..."

கேலி போல் கூறினாலும் கணவனது வார்த்தையில் இருந்த வருத்தம் அவளையும் வருத்தம் கொள்ளச் செய்தது...

"எனக்கு வர்ற கோபத்துக்கு அவனை நாலு அடி போட்டு இழுத்துட்டு வரலாம் போலிருக்கு...?" எரிச்சலுடன் அவள் முணுமுணுக்க...

"காரியத்தைக் கெடுத்துடாதே ஜில்லு... அவனை நான் பார்த்துக்கிறேன்..." என்று மனைவியைச் சமாதானப்படுத்திக் கொண்டு இருக்கும் போதே ரம்யா சந்தோசமாய் அங்கு விரைந்து வந்தாள்...

அவள் பின்னே முகமெல்லாம் வெட்கத்தில் பூரிக்கச் சந்தோசமாய் வந்தாள் சுபிக்ஷா...

விக்ரம், வினீதாவிற்குக் கொடுப்பதற்காக வீட்டில் எப்போதும் சாக்லெட் இருக்கும்... அதை எடுத்து எல்லோரிடமும் நீட்டிய ரம்யா,

"ஆண்டவன் கண்ணைத் திறந்துட்டான்... இனி நம்ம பிள்ளைங்க பிரச்சினை சரியாகி விடும்.." என்று சந்தோசத்துடன் கூற...

சுபிக்ஷா குழந்தை உண்டாகி இருப்பதை உணர்ந்து மொத்த குடும்பமும் மகிழ்ச்சியில் திளைத்தது... ஆளாளுக்கு அவளுக்கு வாழ்த்து கூறினர்... ஆனால் ஜெகன், செல்வா முகங்கள் மட்டும் தெளிவில்லாமல் இருந்தது எதையோ யோசித்தபடி...

"எதுக்கும் ஹாஸ்பிட்டல் போய்ச் செக்கப் பண்ணிட்டு வந்திடலாம் ரம்யா..." ருத்ரஸ்ரீ சொன்னதும் அதை ஆமோதித்த ரம்யா மகளை மருத்துவமனைக்குக் கிளம்பி வர சொன்னாள்...

உடை மாற்ற அறைக்கு வந்த சுபிக்ஷா கணவனிடத்தில் அந்தச் சந்தோசமான விசயத்தைக் கூற ஆவல் கொண்டாள்... ஏனெனில் அம்ரிதாவை கண்டே அந்தளவுக்குச் சந்தோசப்படுகிறவன் தனக்கு என்று ஒரு குழந்தை வருவது தெரிந்தால் எத்தனை சந்தோப்படுவான் என்று நினைத்தவளுக்கு உடனே அவனை அழைத்துப் பேச வேண்டும் என்று மனமும், கைகளும் பரபரத்தது...

பின் வேண்டாம் என்று முடிவு செய்தாள்... நாளை நேரில் சென்று அவனைப் பார்த்து அவனது கையை எடுத்து தனது வயிற்றில் வைத்து இந்தச் சந்தோசமான விசயத்தைச் சொல்ல வேண்டும்... அப்போது சந்தோசத்தில் முகம் மலரும் அவனது ஆப்பிள் நிற முகத்தைப் பார்த்து ரசிக்க

வேண்டும் என்று எண்ணியவள் மனதில் மகிழ்ச்சி ஆரவார மழை...

மருத்துவமனையில் பரிசோதனை செய்த போது அவளது உடல் மிகவும் பலவீனமாக இருப்பதால் முதல் ஐந்து மாதம் வரை ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லி மருத்துவர் கூறியதும் மூன்று பேருமே பயந்து போய்விட்டனர்... கவனமாக இருந்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று மருத்துவர் சொல்லவும் தான் நிம்மதி வந்தது எல்லோரிடமும்... இப்போது ஒன்றரை மாதக்கரு அவளது வயிற்றில்...

சரி என்று கேட்டு விட்டு தேவையான மருந்துகளை எழுதி வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தனர் மூன்று பெண்களும்...

அவர்கள் வீட்டிற்கு வந்த நேரம் கிருஷ்ணா கோபத்தில் கத்தி கொண்டிருந்தவன் தங்கையைக் கண்டதும் அமைதியாகிவிட்டான்... அங்கு அமர்ந்திருந்த ஜெகன், செல்வா முகத்தில் ஈயாடவில்லை... பூஜா என்ன செய்வது என்று தெரியாமல் தவிப்புடன் நின்றிருந்தாள்... நால்வரின் முகத்தைப் பார்த்ததும் ஏதோ சரியில்லை என்று மட்டும் புரிந்தது...

"என்ன அண்ணா...?" அண்ணன் கோபப்படுகிறான் என்றால் விசயம் தன் கணவன் சம்பந்தப்பட்டதோ என்ற பரிதவிப்பில் நேரே தன் சகோதரன் அருகே வந்தாள் சுபிக்ஷா...

"ஒண்ணும் இல்லை சுபி..." கிருஷ்ணா அவள் முகம் பார்க்க மறுத்து வேறு எங்கோ பார்த்தான்...

"ஏன் கிருஷ் மறைக்கிற...? என்றாவது ஒரு நாள் அவளுக்குத் தெரிய வேண்டிய விசயம் தானே... சொல்லுப்பா..." என்று செல்வாவின் மரத்து போன குரல் மகனை பார்த்து கேட்டது...

"இப்போ இது எதுக்குப்பா...?" என்று வருத்தத்தோடு கூறிய கிருஷ்ணா தங்கையிடம்,

"நீ உன் ரூமுக்கு போம்மா..." என்றான் தன்மையாக...

"என்னன்னு இப்போ சொல்லப் போறீங்களா இல்லையா...?" சுபிக்ஷா தன்னை மறந்து கத்த...

"பிள்ளைத்தாய்ச்சி பொண்ணு அமைதியாயிரு சுபி..." ரம்யா மகளை அதட்ட...

"உன் புருசன் கொடுத்த ஸ்டேட்மெண்ட்டை நீயே பார்..." என்றபடி செல்வா மகள் முன் அலைப்பேசியை நீட்ட...

அதை வாங்கிப் பார்த்தவள் அதிர்ந்து தான் போனாள்...

சற்று முன் திரைப்பட விழா ஒன்றில் பங்கெடுத்து இருந்த ஜீவா கொடுத்திருந்த பேட்டி தான் இது...
வலைத்தளங்களில் 'வைரலாக'ப் பரவி கொண்டிருந்த அந்தக் காணொளியை கிருஷ்ணாவின் நண்பன் ஒருவன் அவனிடம் பகிர்ந்திருந்தான்...

"உங்களுக்கும், உங்க மனைவிக்கும் ஏதோ பிரச்சினை... அதனால் தான் பிரிந்திருக்கிறீங்கன்னு..." ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு அவன் நினைத்திருந்தால் இல்லை என்று ஒரேடியாய் மறுத்திருக்க முடியும்...

ஒரு வார காலத்தில் எதையும் வெறும் யூகங்களின் அடிப்படையில் திரித்துக் கூற முடியாது அல்லவா... ஆனால் அவளது கணவனோ கூல்லாக,

"எங்கள் பிரிவு உண்மை தான்..." என்றான் ஆணித்தரமாக...

அவன் கூறிய வார்த்தைகள் அவளது இதயத்தை இரண்டாகப் பிளப்பது போல் அத்தனை வலிக்கச்

செய்தது... திரையில் தெரிந்த கணவனது முகத்தை வெறித்துப் பார்த்தாள் அவள்...

"இனி உங்கள் வாழ்க்கையில் வேறு பெண்களுக்கு இடம் உண்டா..."

"பெண் இல்லாமல் உலகம் இல்லை எனும் போது நான் மட்டும் விதிவிலக்கா என்ன...?" சிரித்தபடி கூறிய கணவனைக் கண்டு கலக்கம் மறைந்து அவளது முகத்தில் அத்தனை சந்தோசம் வந்தமர்ந்தது...

"ப்ராடு..." அவளது உதடுகள் முணுமுணுத்தது சந்தோசமாக... அதற்கு நேர்மாறாக அவளது விழிகளில் நீர்த்துளிகள்... அதுவும் மகிழ்ச்சியினால் விளைந்ததே...

'நீங்க சொல்றதை எல்லாம் நம்ப நான் என்ன இந்த முட்டாள் உலகமா மாமா...? நான் மிஸஸ். ஜீவாவாக்கும்...' பெருமையாய் மனதுக்குள் சொல்லிக் கொண்டவள் மனதில் அத்தனை மகிழ்ச்சி...

கணவன் பிரிவு என்றதும் வலி கொண்ட அவளது மனது அவன் அடுத்து கூறிய வார்த்தையில் மகிழ்ச்சி கொண்டது அவனது குணத்தைப் பற்றி ஏற்கெனவே தெரிந்திருந்ததால்...

கோபம் கொள்வாள், அழுது கரைவாள் என்று நினைத்த சுபிக்ஷா முகத்தில் சந்தோசத்தைக் கண்ட மூன்று ஆண்களும் தங்களுக்குள் குழம்பி போயினர்...

அவளோ யாரை பற்றியும் எந்தவித உணர்வும் இல்லாது கணவனது நினைவில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள் சுகமாய்...

'எதையும் மறுக்கத் தோணலை... இதனால் ஐயாவோட இமேஜ் கடகடன்னு உயர்ந்திருச்சு...' கண்சிமிட்டி சிரித்த

கணவனது குறும்பு முகமே அவளது நெஞ்சில் வியாபித்திருந்தது முழுதாய்...

பின் மனதில் எழுந்த தெளிவுடன், "அப்பா... நாளைக்கு நான் மும்பை கிளம்பணும்... ஃப்ளைட் டிக்கெட் புக் பண்ணிடுங்க..." என்றாள்...

"சுபி... ஜீவா ஏதாவது சொல்லிவிடப் போகிறான்..." மகனின் குணத்தை நினைத்து ஜெகன் பயப்பட...

"அப்படி என்னை எதுவும் சொல்வதற்கு முதல்ல உங்க மகனுக்குத் தைரியமிருக்கா மாமா..." என்றாள் நிமிர்வாய்...

மருமகளது வார்த்தையில் முதலில் திகைத்த ஜெகன் பின்பு புரிந்தவனாய் புன்னகை பூத்தான்...

சுபிக்ஷாவின் இந்தத் தெளிவு, நிமிர்வு எல்லாம் நல்ல புரிதல் கொண்ட கணவன் மனைவி இடையில் மட்டுமே வரும் புரிதல்... இனி மருமகள் பார்த்து கொள்வாள்... இருவரை பற்றியும் கவலை இல்லை என்றே அவனுக்குத் தோன்றியது...

"மாப்ள... உண்மையில் உன் பொண்ணு வீரத்தமிழச்சி தான்டா..." நண்பனை சந்தோசத்தோடு கட்டி கொண்டான் அவன்...

இவர்கள் பேசுவதைக் கண்டு புரியாது விழித்த ருத்ரஸ்ரீ, ரம்யா பிறகு புரிந்ததும் ஒரு பக்கம் சுபிக்ஷாவை கண்டு சந்தோசப்பட்டாலும், இன்னொரு பக்கம் ஜீவாவை கண்டு பயமாகத் தான் இருந்தது...

இந்த மகிழ்ச்சியில் ஜெகன், செல்வா அபிமன்யு ஜீவாவிடத்தில் பேசியதை சுபிக்ஷாவிடம் சொல்ல மறந்து போயிருந்தனர்...

அன்றிரவு ருத்ரஸ்ரீ கணவனிடம், "எனக்கு என்னவோ ஜீவாவை நினைத்து பயமாயிருக்குங்க..." என்றாள் சிறிது அச்சத்துடன்... மகனின் கோணங்கித்தனமான குணம் அவள் அறியாததா என்ன...

"என்னைக் கண்டு கூடப் பயப்படாத என் தைரியசாலி ராணி மங்கம்மா மகனை கண்டு பயப்படுறாங்களா... ஆச்சிரியமாயிருக்கே..."

அந்த நிலையிலும் தன்னைக் கேலி செய்த கணவனைக் கண்டு செல்லக் கோபத்துடன், "நீங்க வேற மேக்... அவன் வேற மேக்... என் பயமே அதனால் தான்..."

"என் மருமகப் பொண்ணுக்கு இருக்கிற தைரியம் உனக்கு இல்லையே ஜில்லு... எவ்வளவு அழகா சொன்னா பார்த்தியா... நிச்சயம் அவங்களுக்கு இடையில் நல்ல புரிதல் இருக்கணும்..."

"சுபி பத்தி எனக்கு நல்லா தெரியும்... ஆனா இந்த ஜீவா..." அவளது முகத்தில் இன்னமும் கவலை தீரவில்லை...

"நீயும் இப்படித்தான் முரண்டு பண்ணினே... நான் உன்னைச் சரி பண்ணலையா...? அது போல் மருமகள் பார்த்து கொள்வாள்... அதுவும் என்னைப் போல்..." என்று குறும்பாய் கண்ணைச்சிமிட்டி சிரித்த கணவனைக் கண்டு குழப்பத்துடன் பார்த்த ருத்ரஸ்ரீ,

"உங்களை மாதிரியா...?"

"ஆமாம்... நீ எடக்குமடக்கா பேசும் போது எல்லாம் உன் வாயை அடைக்க நான் என்ன பண்ணுவேன்...?" கேள்வியாய் கேட்ட கணவனைக் கண்டு அந்த வயதிலும் அவள் அழகாய் வெட்கப்பட்டாள்...

தானும் தன் மகனை போல் எடுத்தெறிந்து பேசியவள் தானே... காதல் என்ற மூன்றெழுத்து மந்திரத்தால் தனது

வாழ்க்கையை வண்ணமயமாய் மாற்றிய கணவனைக் காதலோடு பார்த்தாள் அவள்...

அவள் விழிகளில் இருந்த கலக்கம் மறைந்து காதல் தோன்றுவதை உணர்ந்து நிம்மதி கொண்ட அந்தக் காதல் கணவன்,

"நான் இருக்கும் போது நீ எதையும் யோசிக்கக் கூடாது... என் ஜில்லு எப்பவும் சிரிச்சிக்கிட்டு சந்தோசமா இருக்கணும்..." என்று மனைவியை அணைத்துக் கொண்டான் நல்ல புரிதல் கொண்ட அந்தக் காதல் கணவன்...

கணவன் எதையும் சமாளிப்பான் என்ற நினைவில் அவனது நெஞ்சில் நிம்மதியாய் சாய்ந்தாள் அவள்...

மறுநாள் மும்பை கிளம்பி போகும் முன் சுபிக்ஷா எல்லோரிடமும், "மாமா கிட்ட நான் வர்றதை பத்தியோ, குழந்தை உண்டாகி இருப்பதைப் பத்தியோ யாரும் சொல்லக் கூடாது... நானே அங்கே போய்ச் சொல்லிக்கிறேன்..." என்று உறுதியாய் கூறிவிட்டாள்...

அதனால் அவளது மும்பை பயணம் ஜீவாவிற்குத் தெரியாமல் போய்விட்டது...

எல்லோருக்கும் மனதுக்குள் கலக்கம் இருந்த போதும் சுபிக்ஷாவின் தைரியமான முடிவால் சிறிது நிம்மதியுற்றனர்... அவள் தனது வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்வாள் என்றெண்ணி...

மும்பை வந்திறங்கியவளை ராம்குமார் தான் கார் அனுப்பி வீட்டிற்கு அழைத்து வந்தார்... வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தவளுக்குத் திருமணம் முடிந்து கணவனுடன் முதன்முறையாய் வந்த நினைவு எழுந்தது...

அன்று கணவனின் இணக்கமான பேச்சு, செயல் மூலம் மனதில் பெருமளவு பயம் அகன்று, சிறு நம்பிக்கை தோன்ற அவனின் அணைப்பில் அடங்கி வீட்டினுள் நுழைந்த அழகிய தருணம் மிக இனிமையாக அவள் மனதில் எழுந்து இப்போதும் அவளைச் சந்தோசப்படுத்தியது...

ராம்குமாரை கண்டதும் அவளையும் அறியாது ஒரு குற்றவுணர்ச்சி... இப்படி அவரிடம் சொல்லாமல் கொள்ளாமல் தான் சென்றுவிட்டதை உணர்ந்து...

அவர் அது எதையும் கண்டு கொள்ளாமல், "நல்லாயிருக்கியாம்மா..." என்று பாசத்தோடு கேட்க... அதில் அவளது குற்றவுணர்வு மறைந்து அன்போடு பதில் கூறினாள்...

அவளை ஓய்வெடுக்கப் பணித்தவர் தனது அறைக்குச் செல்ல... அவளது கண்ணில் அங்கு இருந்த பூஜையறை தென்பட்டது... விரைந்து அங்குச் சென்றவள் தங்களது வாழ்வு சிறப்பதற்காகக் கண்களை மூடி கடவுளை வேண்டி கொண்டாள்...

கண்களைத் திறந்தவளுக்கு மீண்டும் அன்றைய நாள் நினைவுகள்... அன்று கணவனிடத்தில் 'ஆயிரம் குழந்தைகள் போதுமா' என்று துணிச்சலோடு குறும்பாய் தான் கேட்டது நியாபகத்தில் வந்தது...

'ஆனாலும் சுபி உனக்கு ரொம்பத்தான் துணிச்சல்...' என்று தனக்குள் அழகாய் வெட்கப்பட்டுக் கொண்டவளின் கைகள் தனது மணி வயிற்றைத் தடவி பார்த்துக் கொண்டது சந்தோசத்துடன்...

மேலே இருந்த தங்களது அறைக்கு வந்தவளுக்கு மீண்டும் மீண்டும் கணவனது நியாபக ஊர்வலங்களே... 'உன்னோட ரூமுக்கு வா...' அவனது அறையைக் கூட அவளுடையதாய் கூறியவன் முற்றிலும் அவளுக்குரியவன் தான் என்பதை

அவள் எப்படி மறந்து போனாள்... இப்போது அதை நினைத்து பார்த்து தன்னைத்தானே கடிந்து கொண்டாள் மனதினுள்...

கணவன் எப்போது வீட்டிற்கு வருவான் என்று ஏங்கியது அவளது காதல் மனம்...

இப்போது மதிய நேரம் தான் ஆகியிருக்கிறது... இனி இரவு தான் கணவன் வீடு திரும்புவான் என்று எண்ணியவளுக்குப் பெருமூச்சு எழுந்தது...

சிறிது நேரம் கணவனைப் பற்றி யோசித்துக் கொண்டு இருந்தவள் தன்னையும் அறியாது உறங்கி போனாள் உடல் அசதியில்...

மாலை மங்கி இரவும் கவிழ்ந்தது இனிமையாக... ஒருவிதமான படபடக்கும் மனதுடன் வரவேற்பறையில் கணவனுக்காகக் காத்திருந்தாள் சுபிக்ஷா... புதிதாகக் கணவனைச் சந்திப்பது போல் ஒரு படபடப்பு அவள் மனதில்...

அவன் வந்ததும் என்ன பேச வேண்டும் என்று மனதுக்குள் பல முறை ஒத்திகை பார்த்து கொண்டாள்... திருமணத்திற்கு முன் காதலை கற்று அறியாதவளுக்கு இந்த அனுபவம் புதுவித அனுபவமாக இருந்தது...

நேரம் சென்று கொண்டே இருந்ததே ஒழிய அவள் கணவன் வீடு வந்து சேரும் வழி தான் தெரியவில்லை... பேசாமல் தானே அவனை அழைத்துத் தான் வந்திருக்கும் விசயத்தைக் கூறிவிடுவோமா என்று நினைத்தவள் பின் அதைக் கை விட்டு விட்டு அவனுக்காகக் காத்திருந்தாள்...

அதே நேரம் அவளது கணவன் அந்த நட்சத்திர விடுதியில் இருந்த பாரில் அமர்ந்திருந்தான் தன் முன்னிருந்த மது கோப்பையை வெறித்துப் பார்த்துக் கொண்டு...

சுமார் இரண்டு மணி நேரமாக அதை அவன் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறான்... ஆனால் அதை எடுத்து ஒரு மடக்கு கூடக் குடிக்க அவனுக்கு மனம் வரவில்லை...

"நீங்க ட்ரிங்க்ஸ், சிகரெட் எல்லாம் யூஸ் பண்ண மாட்டீங்களா...?" விழிகளை அகல விரித்து ஆச்சிரியத்துடன் தன்னை நோக்கிய மனையாளின் அழகு நயனங்கள் இப்போதும் அவனது நினைவில் நின்று அவனைப் பெரிதும் இம்சித்தது...

அவளது மயக்கும் விழிகளை விடவா இந்த மது அவனுக்குப் போதை அளித்துவிடப் போகிறது என்று வெறுப்பாய் நினைத்தவன் சட்டென்று அங்கிருந்து எழுந்து வெளியில் வந்துவிட்டான்... காரிலேறியவன் மணியைப் பார்த்தான் அதிகாலை ஒரு மணியாகி இருந்தது... இதற்கு மேல் வேறு எங்கும் செல்ல முடியாது என்பதை உணர்ந்து வீட்டிற்குச் செல்ல உத்தரவிட்டான் ஓட்டுநரிடத்தில்...

வீடு வந்ததும் காரிலிருந்து இறங்கி உள்ளே வந்தவன் அங்குச் சோபாவில் அமர்ந்திருந்த மனையாளை கண்டதும் தனது விழிகளை விரித்தான் நம்ப முடியாது... ஒருவேளை தனது மனப்பிரம்மையோ என்று நினைத்துக் கண்ணைச் சிமிட்டி கொண்டு மீண்டும் அவளைப் பார்க்க...

மெய் என்பது போல் சுபிக்ஷா சோபாவில் இருந்து எழுந்து அவனை நோக்கி நடந்து வந்தாள்...

அருகில் வந்துவிட்ட மனைவியின் வதனத்தைத் தலையில் இருந்து கால் வரை அவசரமாய் அவன் அலசி ஆராய, அது போல் அவளும் கணவனைக் கண்களால் அலசி ஆராய்ந்து தன்னுள் பொக்கிசமாய் அவனது உருவத்தைப் பதித்துக் கொண்டாள் காதலோடு...

அவளைக் கண்டதும் முதலில் சந்தோசம் கொண்டவன் பின் ஆராய்ச்சியாய் அவளைப் பார்த்தான் முகத்தைக் கடினமாக்கி கொண்டு... அவளோ அதை உணராது

காதலோடு அவனைப் பார்வையால் பருகி கொண்டிருந்தாள்...

"இங்கே எங்கே வந்தாய்...?" என்று கோபத்தோடு அவன் கேட்க...

கணவனது கேள்வியில் முதலில் புரியாது திகைத்தவள் பின் புரிந்ததும் முகத்தைக் கடினமாக வைத்துக் கொண்டு குரலில் சற்று கடுமையேற்றி விழிகளால் அவனை உறுத்து விழித்தபடி,

"இங்கே யாருக்கோ பேய் பிடித்து ஆட்டுகிறதாம்... அதான் அவங்க நடு மண்டையில் நச்சுன்னு ஆணி அடித்துப் பேயோட்ட வந்திருக்கிறேன்..." என்றாள் எரிச்சலோடு கோபமாய்...

மனையாள் கூறிய வார்த்தைகளின் பொருள் புரியாமல் 'ஙே' என்று விழித்தான் அந்த உலகப் புகழ் பெற்ற தொழிலதிபன்...!!!

இசையாகும்...!!!

# ஸ்வரம் : 26

"வாட்...?" என்று விழி விரிய திகைத்து நின்ற கணவனின் அழகு கண்டு மனம் சொக்கினாலும் அவன் கேட்ட கேள்வி சுபிக்ஷாவின் மனதை உலைக்களமாகக் கொதிக்கச் செய்ய எரிச்சலுடன்,

"ம்... சோத்துக்கு உப்பில்லையாம்... சுரைக்காய்க்கு பருப்பில்லையாம்..." என்று அவள் வாய்க்குள் முணுமுணுக்க...

"ஃபார்டன் (pardon)...?" கண்களைச் சுருக்கி கொண்டு தன்னைப் பார்த்தவனைக் கண்டு அவளின் கோபம் கூடிக் கொண்டே போக,

"ஆளு பார்க்க வெள்ளைக்காரத்துரை மாதிரி இருந்தா எப்பவும் இங்கிலீஷ் தான் பேசணும்ன்னு சட்டமிருக்கா...? நீங்க காளிமுத்து தாத்தாவோட பேரன், ஜெகன் மாமாவோட மகன்... நாம மீன் பிடிக்கிற மீனவ பரம்பரை... அதை எப்பவும் நியாபகத்தில் வச்சுக்கோங்க... எப்பப்பாரு தஸ்புஸ்ன்னு இங்கிலீஷில் பேசிக்கிட்டு...?"

"இதைச் சொல்லத்தான் சென்னையில் இருந்து கிளம்பி வந்தியா...?" என்று சலித்த குரலில் கூறிய ஜீவா கழுத்தில் கட்டியிருந்த டையைத் தளர்த்தியபடி அவளைத் தாண்டி சென்றான்...

தன்னைக் கண்டு கொள்ளாது சென்ற கணவனைப் பின்னால் இருந்து வெறித்துப் பார்த்த சுபிக்ஷா,

"நான் உங்க கிட்ட பேசணும்...?"

"பேசு..." என்றபடி அவளை நோக்கி அவன் திரும்ப...

"எல்லாத்தையும் ஹாலில் வச்சு தான் பேசணுமா...? ரூமுக்குப் போய்ப் பேசலாமா...?" என்றவளை வெறித்துப் பார்த்தவன் பின் ஒன்றும் கூறாது மாடிப்படியேறினான் தனது அறைக்குச் செல்ல வேண்டி...

சிறிதும் தன்னைக் கண்டு கொள்ளாமல் செல்லும் கணவனைக் கண்டு திகைத்தவளாய் அவள் நின்றிருந்தாள்... உண்மையில் கணவன் தன்னை வெறுத்துவிட்டானோ என்று அவள் மனம் கலங்கித்தான் போனாள்...

'இப்போது என்ன செய்வது...? நாய்க்குட்டி மாதிரி இவங்க பின்னாடி போகணுமா...?' மனதின் தன்மானம் குரல் கொடுத்த போதும்,

'நாய்க்கு வாழ்க்கைப்பட்டால் நாய்க்குட்டியாகத் தான் மாற வேண்டும்...' என்று அவனை நாயாக உருவகப்படுத்திக் கொண்டவளுக்கு இப்போது மனம் சற்றுத் திருப்தியடைந்தது...

"என்ன நின்னுக்கிட்டே தூக்கமா...?" மனைவி அருகில் வந்து அவள் முகத்தின் முன் சொடக்கு போட்டபடி ஜீவா கேட்க...

'படியேறிக்கிட்டு இருந்தவங்க எப்போ இங்கே வந்தாங்க...?' தன் முன் நிற்கும் கணவனைக் கண்டு அவள் முழித்துக் கொண்டிருக்க...

"வா..." இப்போதைக்கு அவள் அசைய மாட்டாள் என்பதை உணர்ந்தவனாய் அவன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான்...

அதில் மனம் ஆனந்தத்தில் துள்ள அவனோடு உடன் நடந்தாள் அவள்...

'மாமா கொஞ்சமே கொஞ்சம் நல்லவங்க தான்...' மனதுக்குள் கணவனைச் செல்லமாய்க் கொஞ்சி கொண்டு சென்றாள் அவள்...

அறைக்குள் நுழைந்ததும் கதவை தாளிட்டவன் கதவின் மீது சாய்ந்து நின்றபடி, "இப்போ சொல்லு... இங்கே எதுக்கு வந்த...?"

இத்தனை நேர இணக்கம் மறைந்து அவளுள் சுறுசுறுவெனக் கோபம் எழுந்தது... அடுத்த நொடி அவனது சட்டையை இறுக பற்றியிருந்தாள் ஆத்திரத்தோடு...

அவளது எதிர்பாராத இந்தச் செயலில் அவனின் கழுத்து வளைந்து முகம் தானாகக் குனிந்தது அவளது முகம் நோக்கி...

கண்கள் கலங்க, உதடுகள் துடிக்கத் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த மனையாளை அணைத்துச் சமாதானப்படுத்த முயன்ற கைகளை அடக்கும் வகையறியாது ஜீவா தனது கரங்களைப் பேண்ட் பையில் விட்டுக் கொண்டு அமைதியாக நின்றான்... அவனது மனதிலோ பெரும் போராட்டம் எழுந்தது...

அவளுமே அவனை மாதிரியான ஒரு மனநிலையில் தான் இருந்தாள்... ஆனாலும் வெகு அருகில் இருந்த கணவனது முகம் அவளது கோபத்தைச் சற்றுக் குறைத்தது என்றால் மிகையில்லை...

அடர் அரக்கு நிறத்தில் சட்டையும், பழுப்பு வண்ண பேண்ட், அதே நிற டை அணிந்து கம்பீரமாக இருந்த கணவனது அழகு அவளை மயக்கத்தான் செய்தது... அந்த நொடி அவனது நெஞ்சில் சாய்ந்து மனதின் துக்கம் தீர ஓவென்று அழத் துடித்தது அவளது காதல் மனம்...

அவளது துயரத்தை அவன் உணர்ந்தானோ என்னவோ... அதில் மனம் வருத்தம் கொண்டு தனது சட்டையைப்

பிடித்திருந்த மனையாளின் கையை மெல்ல விடுவித்தவன்,

"நான் உன்னிடம் சொல்லியிருக்கிறேன்... முடிவு எடுத்த பின்னாடி எதுவும் மாற்ற இயலாதுன்னு..."

அவனது வார்த்தையில் மனமும், முகமும் வேதனையில் கசங்க அவள் நின்றிருக்க, அதைக் காண சகிக்காது அவன் அங்கிருந்த சோபாவில் சென்று அமர்ந்தான்...

"ஓஹோ... எப்படா இவள் போவாள்... நீங்க உங்க இஷ்டத்துக்கு இருக்கலாம்ன்னு காத்திட்டு இருந்தீங்களோ...?"

அதைக் கேட்டு அவனது உதடுகளில் புன்னகை வந்தமர்ந்தது...

அதிலும் அவள் கூறிய, 'இங்கே யாருக்கோ பேய் பிடிச்சிருக்காம்... அதான் பேயோட்ட வந்தேன்' என்ற வார்த்தைகள் நினைவில் எழுந்து அவனது மனதை லேசாக்கியது...

'எனக்குப் பேயா பிடித்திருக்கிறது... ஆம் மயக்கும் மோகினி பேய் தான் என்னைப் பிடித்திருக்கிறது...' நினைத்தபடி மனைவியைப் பார்த்தவன் பார்வை கணவன் பார்வையாக மாற முயல முயன்று மனதை கட்டுப்படுத்தியவன்,

"இது நீயா விதிச்சிக்கிட்டது... நான் என்ன பண்ண முடியும்...?" அசால்ட்டாகத் தோளை குலுக்கினான்... அதைக் கண்டு அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"இன்னும் நம் திருமணப் பந்தம் முறிவு அடையலைங்கிறது நினைவு இருக்கட்டும்..."

"பந்தத்தை முறிச்சிக்கிட்டா போச்சு..."

மிக எளிதாகக் கூறியவனை வெறித்துப் பார்த்தவள், "உங்களுக்கு எல்லாமே ரொம்ப லேசா போயிருச்சு இல்லையா...?"

"உனக்கு என்ன குறை...? இந்தத் திருமணம் முறிந்தால் என்ன...? உனக்கு வாழ்க்கை கொடுக்கத்தான் அங்கே ஒருத்தன் காத்துக்கிட்டு இருக்கானே..."

"யாரை சொல்லுறீங்க...?"

கணவனது வார்த்தையில் மனம் அதிர்ந்தவளின் குரலும் சேர்ந்து நடுங்கியது... என்ன வார்த்தை கூறிவிட்டான் என்று...

"வேறு யார் அபியை தான் சொல்கிறேன்..." எந்தவித உணர்வும் இல்லாமல் கூறியவனைக் கண்டு ஆத்திரம் எழுந்தது அவளுள்...

ஆனால் அதை வெளிக்காட்ட வேண்டிய சந்தர்ப்பம் இதுவல்ல என்பதை உணர்ந்தவளாய் குமுறும் மனதுடன் அவனை வெறித்துப் பார்த்தாள்...

"அவன் தான் சொன்னான் அவன் உனக்காகக் காத்திட்டு இருப்பதாய்..."

அவளுக்கு அபிமன்யு என்ன சொன்னான் என்பதைப் பற்றிக் கவலையில்லை... ஆனால் அதற்குக் காதல் கணவன் என்ன பதில் கூறினான் என்பதை அவள் அறிய வேண்டியிருந்தது...

"அதுக்கு நீங்க என்ன பதில் சொன்னீங்க...?..."

கோபமும் இல்லாமல், துன்பமும் இல்லாமல் இரண்டு கெட்டானாய் ஒலித்தது அவளது குரல்... அவனது வார்த்தைகளைக் கேட்டு அவள் உள்ளுக்குள் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செத்துக் கொண்டு இருந்தாள்...

"நான் என்ன பதில் சொல்வேன்... ரொம்பச் சந்தோசம், ஆல் தி பெஸ்ட்ன்னு வாழ்த்து சொன்னேன்... நான் விட்டுக் கொடுத்தால் தான் நீ அவளை அடைய முடியும்... அதனால் சும்மா சீன் போடாதே... எப்போதும் நீ என்னை ஜெயிக்க முடியாதுன்னு சொன்னேன்..."

அவளிடத்தில் பொய்யுரைக்க அவனுக்கு மனம் வரவில்லை... அந்நேரம் தனது அகந்தையை எண்ணி மனம் வெறுத்துப் போனான் அவன்... ஏன் அபிமன்யுவிடத்தில் அப்படிக் கூறினோம் என்று இப்போது மனம் வருந்தினான்... ஆனாலும் அவனது அகம்பாவம் நல்ல விசயத்திற்கு உபயோகப்படுவதை எண்ணி மனதின் ஓரத்தில் சின்ன ஆறுதல் எழுந்தது அவனிடத்தில்...

சர்வ சாதாரணமாக உரைத்தவனைக் கண்டு உடலில் ஜீவன் அற்றுப் போய் அப்படியே தரையில் மடங்கி அமர்ந்தாள் அவள்... முதல் முறையாய் அவனது கர்வத்தை முற்றிலுமாய் வெறுத்தாள் அவள்...

"பேபி..." என்று பதறி போய் எழுந்தவனின் பதற்றம் கூட அவளது மூளையில் உறைக்கவில்லை... அந்தளவுக்கு அவளது மனம் மரத்துப் போயிருந்தது...

"சோபாவில் வந்து உட்காரு..." மனைவியின் தோள் பற்றி அவன் எழுப்பவும் தான் அவளுக்கு உணர்வு வந்தது...

"ச்சீ என்னைத் தொடாதீங்க..." என்று அவள் சீறினாள்...

என்றுமில்லாத வண்ணம் அவள் அப்படிக் கோபம் கொண்டதும் அவன் அப்படியே பின்னடைந்தான்... இந்த வார்த்தைகளைக் கூறிவிட்டு அவன் ஒன்றும் சந்தோசமாக இல்லையே... அவனும் அவளை விட அதிக வேதனை அனுபவிக்கிறான் என்பதை அவளிடத்தில் சொல்ல முடியாமல் தவிப்பது அவனுக்கு மட்டும் தானே தெரியும்...

சுபிக்ஷாவின் மனதிலோ பெரும் போராட்டம்... அவள் மனதில் இருந்த காதல் எந்த நிலையிலும் கணவனை ஏற்றுக் கொள்ளத் தூண்டியது... எப்படியிருந்தாலும் அவன் தனக்கு வேண்டும் என்று தன்மானத்தை இழந்து கதறியது...

ஆனால் தன்மான தமிழச்சியின் மனமோ காதலை விடத் தன்மானம் பெரிதல்லவா என்று வாதிட்டது... முதுகெலும்பான தன்மானத்தை விட்டு விட்டு ஒரு கோழை போல் அவனிடம் வாழ்க்கைப் பிச்சை கேட்டு நிற்கா விட்டால் தான் என்ன...? மனம் கூக்குரலிட்டுக் கேள்வி எழுப்பி அவளது தன்மானத்தைச் சீண்டிவிட்டது...

அன்று அவனது அன்னையிடம் 'பிடிக்காத மனைவியுடன் வாழ வேண்டிய தலையெழுத்து எனக்கு' என்று கூறி அவளது மனதை உடைத்தான்... அதன் பிறகு அன்று அபிமன்யுவிடம் 'குரங்காட்டி போல் அவளை ஆட்டுவிப்பதாய்'க் கூறினான்... 'இதோ இப்போதும் என் மனதின் உணர்வுகளை மதிக்காமல் என் காதலை உணராமல் என்னை வேறு ஒருவனிடத்தில் தாரை வார்த்துக் கொடுக்கத் தயாராகிவிட்டான்...'

அவளது மனம் உடைந்து தான் போனது கணவனது வார்த்தைகளில்... இரண்டு முறை மனதை புண்படுத்திய கணவனை மறக்க இயலாது தவித்த தனது காதல் மனதை இதோ மூன்றாவது தடவையும் துடிக்கத் துடிக்க உயிரோடு கொன்றுவிட்டான்...

"இப்படி என்னைக் கொஞ்சம் கொஞ்சமா கொல்வதற்கு ஒரேடியாய் கொன்னுடுங்களேன்... உங்க மனைவியை அடுத்தவனுக்குத் தாரை வார்த்து கொடுக்க உங்களுக்கு எப்படி மனசு வந்தது...? ச்சீ நீங்க எல்லாம் மனுசன் தானா...?"

கண்களில் கண்ணீர் வழிய ஆத்திரமும், ஆதங்கமும் கலந்து உரைத்தவளை கண்டு அப்படியொரு வேதனை

எழுந்தது அவனது மனதினுள்...

"உன்னோட நல்லதுக்காகத் தான் சொல்றேன்..." வேதனையோடு சொன்னவனின் வேதனையை அவள் கொஞ்சமும் உணரவில்லை... ஏனெனில் அதை விட அதிக வேதனையை அவள் அனுபவித்துக் கொண்டிருக்கிறாளே...

"ஒருவேளை நீ எதிர்பார்க்கும் காதல் அபியிடத்தில் இருந்தால்...?" தயங்கி தயங்கி கூறிய கணவனைக் கண்டு முதலில் புரியாது பார்த்தவள் பின் புரிந்ததும் என்ன மாதிரி உணர்ந்தாள் என்றால் அவளுக்கே தெரியவில்லை...

ஆனால் அந்தக் கணம் மிக மிக அதிகமாகச் சந்தோசமாக உணர்ந்தாள்... உயிர் மூச்சுக்கு ஏங்கி தவித்துக் கொண்டிருந்தவளுக்கு அந்த உயிரையே திருப்பிக் கொடுத்தவனைக் கண்டு அவளது மனம் காதலில் கசிந்துருகியது...

'முட்டாள் சுபி... உன் மாமா குணம் தெரிஞ்சிருந்தும் இப்படிக் கொஞ்ச நேரத்தில் அரண்டு போயிட்டியே... இங்கே கிளம்பி வந்தப்போ இருந்த தெளிவு இப்போ ஏன் உன் கிட்ட இல்லாம போச்சு...? பாரு இப்ப கூட உனக்காக யோசிச்சு பேசிட்டு என்னமோ காதல்ன்னா கிலோ என்ன விலைன்னு கேட்குது பாரு உன் லூசு மாமா...'

அவளது மனசாட்சி கண்டபடி அவளைத் திட்டியது அத்தோடு அவளது கணவனையும் சேர்த்து கேலி பேசியது...

அபிமன்யுவிடம் அவன் பேசிய வார்த்தைகள் வேண்டுமானால் தவறாக இருக்கலாம்... ஆனால் அதன் நோக்கம் அவளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பது மட்டும் தானே... கட்டிய மனைவிக்கு நல்லது நினைக்கும் தன் கணவனின் காதலை உணராமல் இருந்தால் அவளைப் போல் ஒரு முட்டாள் இந்த உலகத்தில் இல்லை...

அன்று கணவன் தனது அன்னையிடம் அவளைப் பற்றித் தவறாகப் பேசிய போது அவள் அவனிடம் பேசாமல் இருந்து அவனைத் தண்டித்தாள்... அப்போதும் அவள் அவனது அன்பை புரிந்து கொள்ளவில்லை... அதற்குப் பின் டெல்லியில் அபிமன்யுவிடம் பேசியதை வைத்து அவனைத் தவறாக எண்ணி இதுவரை அவனுக்குத் தண்டனை கொடுத்து விட்டாள்...

இப்போதும் அது போல் அவனைத் தவறாகப் புரிந்து கொண்டு அவனுக்குத் தண்டனை கொடுக்க அவள் விரும்பவில்லை... கோபத்தில் கணவன் வார்த்தைகளை விட்டாலும் அதில் ஒளிந்திருந்த அவள் மீதான அவனது நேசத்தை அவள் உணர்ந்தே இருந்தாள்...

ஒவ்வொரு முறையும் தோற்றுப் போய்த் திரும்பத் திரும்ப எழுதுவதற்கு இது ஒன்றும் தேர்வு அல்ல... இது வாழ்க்கை...!!!

இரண்டு முறை தோற்றாலும் மூன்றாவது முறை வென்றே ஆகவேண்டும் என்ற உறுதியோடு களமிறங்க அவள் முடிவு செய்தாள்...

வாழ்க்கையை வெற்றிக் கொள்ள அனுபவம் தேவை... அந்த அனுபவத்தை வெற்றிக் கொள்ள அன்பு தேவை... அந்த அன்பு அவளிடத்தில் கொட்டி கிடைக்கிறது அளவுக்கு அதிகமாக அவளது காதல் கணவன் மீது...

இப்போதும் அவளது நலனுக்காக அவளையே விட்டு கொடுக்க நினைக்கும் கணவனின் இந்தச் செயலுக்குப் பின் இருப்பது காதல் இல்லாமல் வேறு எதுவாம்... நிச்சயம் அது காதலே...

இதே கணவன் தான் அன்று அபிமன்யுவிடத்தில் அவளை விட்டு கொடுக்க இயலாது அவனைக் கடத்தி சென்றாவது தன் கழுத்தில் தாலி கட்டினான்... சும்மா பேச்சுக்கு கூட அபிமன்யுவை 'மாமா' என்று அவள் அழைத்தால்

அவனுக்குப் பிடிக்காது, 'அபியும், நானும்' என்று வாய் வார்த்தையாய் அன்று அவள் சொன்னதற்கு அத்தனை ஆத்திரம் கொண்டவன் அவளது கணவன்...

'உன்னை எவனாவது சும்மா பார்த்தால் கூட அவனைக் கொன்னுருவேன் கொன்னு...' தான் உணராத காதலை தனது வன்மையான வார்த்தைகள் மூலம் அவளுக்கு நன்கு உணர்த்தியவன் அவளது கணவன்...

அப்படிப்பட்டவன் இப்போது இப்படிச் சொல்கிறான் என்றால் மனதில் எத்தனை வேதனை அடைந்திருப்பான்... எத்தனை துன்பம் கொண்டிருப்பான்... அத்தனை வேதனை, துன்பத்திற்கும் பின்னால் இருப்பது அவள் மீதான காதல் இல்லாமல் வேறு என்னவாம்...

அவள் ஒரு இசை கலைஞி... அதுவும் கர்நாடக சங்கீத பாடகி... ஆழ்கடலின் அமைதியில் கூட அழகான ஸ்வரங்கள் ஒளிந்திருப்பதை அறிந்து வைத்திருப்பவள்... அது போல் தான் அவளின் கணவனின் மௌனமான காதலும்...

அவனின் மௌனமான காதலுக்குப் பின் வலிமையான ஸ்வரங்களின் தொகுப்பு ஒளிந்திருப்பதை இன்று உணர்ந்தாள்... அதை எல்லாம் தொகுத்து இன்னிசையாய் மீட்டிட விளைந்தது அவளது காதல் இசை மனம்...

மனதில் மகிழ்ச்சியும், உறுதியும் எழ கணவனை ஏறிட்டு பார்த்தாள் அவள்... அவனது முகத்தில் தெரிந்த கலக்கத்தில் அவளது மனக்கலக்கம் அகன்று ஓடிவிட்டது...

'மாமா... அவ்வளவு நல்லவங்களா நீங்க...? இருங்க உங்களைக் கவனிக்கிற விதத்தில் கவனிச்சிக்கிறேன்...' மனதில் சந்தோசமாகக் கூறி கொண்டவள் ஒன்றும் அறியாதவள் போல் கணவனைப் பார்த்து,

"இருக்கலாம்... யார் கண்டது...?" என்று அவன் கேட்டதற்குப் பதில் கூறிவிட்டு அவனைப் போல் தோளை குலுக்கி கொண்டவள்,

"நீங்களே எனக்கு ஒரு நல்வழி காட்டியிருக்கிறப்போ... எனக்கென்ன கவலை... ரொம்பச் சந்தோசம்... நான் அதையே ஃபாலோ பண்ணுகிறேன்..."

"ஓ... முடிவே பண்ணிட்டியா...?" என்ன முயன்றும் மனதின் நிராசையைப் பிரதிபலித்தது அவனது குரல்...

"வேறுவழி நான் எப்போதுமே ஒரு ஆணை சார்ந்து வாழ பழகிட்டேன்... இப்போ நீங்க கைவிட்டு விட்ட நிலையில் எனக்கு வேறு என்ன வழி இருக்கு..."

ஏற்ற இறக்கத்துடன் சொன்னவளை கண்ணில் வலியுடன் பார்த்தவன்,

"இதுக்குத் தான் நான் எப்போதும் சொல்வது தொழிலை கற்று கொள் என்று..."

அப்போதும் அவளது நலனை எண்ணித்தான் அவன் கூறினான்...

'ஐய்யே... ரொம்பத்தான் நல்லவங்க...' மனதுக்குள் நொடித்துக் கொண்டவள்,

"அது பத்தி நீங்க ஒண்ணும் கவலைப்படத் தேவையில்லை..." என்றாள் வெடுக்கென்று...

அவன் ஒன்றும் பேசாது படுக்கையறை கதவை திறந்தவன் பின் நின்று மனைவியைப் பார்த்து,

"மணி மூணாகி விட்டது... தூங்கலையா...?"

அவனது கேள்வியில் விதிர்த்து போய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்... கணவனுடன் ஒரே கட்டிலிலா...? நினைக்கும் போதே அவளுக்குப் பயமாயிருந்தது... இப்போது அவள் எடுத்திருக்கும் முடிவுக்கு அவனுடன் சேர்ந்து படுப்பதா...? அதன்பின் தானே அவனிடம் சென்று சரணடைந்து விடுவோமே என்றெண்ணி பயந்து போனவளாய்,

"இல்லையில்லை... நான் இங்கேயே படுத்துக்கிறேன்..." அவள் அவசரமாய்ச் சோபாவை சுட்டிக்காட்ட...

அதைக் கண்டு மனதில் எழுந்த வேதனையுடன், "உனக்குப் பிடிக்காதது எதுவும் நடக்காது... நானும் கொஞ்சம் நல்லவன் தான்..." என்றான்...

'அடப்பார்றா... மாமாவே சொல்லிட்டாரு அவரு நல்லவருன்னு... ' மனதுக்குள் கேலி செய்தவள்,

'நீங்க நல்லவர் தான்... ரொம்ப ரொம்ப நல்லவர் தான்... அது தான் இங்கே பிரச்சினையே... ஆனா பாருங்க மாமா... என் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை... நீங்க இப்படி ஆப்பிள் மாதிரி இவ்வளவு அழகாயிருந்தா எந்தப் பொண்டாட்டி தான் மயங்காம இருப்பாள் சொல்லுங்க...'

மானசீகமாகக் கணவனிடம் உரையாடியவள் வெளியில் முயன்று அமைதி காக்க...

"என் மேல் நம்பிக்கை இல்லையா பேபி..."

கணவனின் மனம் வெறுத்த குரலில் அவள் மனம் பதறி போய் எழுந்தாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது அமைதியாக அவனுடன் படுக்கையறைக்குள் நுழைந்தாள்...

அதன்பின் இருவரிடத்திலும் எந்தவித பேச்சும் இல்லை... அவன் தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு மனைவிக்கு மறுபுறம் வந்து படுத்தான்...

தனக்கு முதுகு காட்டி கொண்டு படுத்திருந்த மனையாளை கண்டதும் அவன் மனதுக்குள் பலவித எண்ண ஊர்வலங்கள்... அவளுடன் கூடி களித்திருந்த நாட்கள் மனதில் எழுந்து தாபத்தை அவனுள் அதிகரித்தது... அதையும் மீறி இனியும் அவளைத் துன்பப்படுத்தக் கூடாது என்ற மன உறுதி அவனைப் பெரிதும் கட்டுப்படுத்தியது...

'ப்ளீஸ் என்னை விட்டு போயிருங்க', 'என் மேல் காதலில்லையா' என்று கேட்ட மனைவியின் கண்ணீர் முகம் அவன் மனவுணர்வுகளைப் பெரிதும் கட்டுப்படுத்தியது...

அதே போல் தான் அவளது எண்ணமும்... கை எட்டிவிடும் தூரத்தில் காதல் கணவன் இருக்கிறான்... ஆனாலும் அவனிடம் செல்ல முடியாமல் இருக்கும் தன் நிலையை அறவே வெறுத்தவளாய் அவள் இருந்தாள்...

மனதிலிருந்த ஈகோவை உதறி தள்ளிவிட்டுக் கணவனிடத்தில் 'நீ தான் எனக்கு எல்லாம்' என்று சரணடைந்து விடுவோமா என்று கூட அவளுக்குத் தோன்றியது...

ஆனால் என்றுமே அவளது உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் தன்னிச்சையாய் முடிவு எடுக்கும் கணவனுக்குத் தனது உணர்வுகளை மட்டுமல்லாது, அவனின் மனதின் காதலையும் உணர்த்த வேண்டிய கட்டாயம் அவளுக்கு இருக்கிறது... அதுவரை இந்தப் பிரிவு அவர்களுக்கு இடையில் மிகவும் அவசியமானது...

பிரிவில்லா நிரந்தர வாழ்க்கைக்கு இந்தத் தற்காலிக பிரிவு அவசியம் என்றே அவளுக்குத் தோன்றியது... இந்தப் பிரச்சினையில் அவள் கருவுற்று இருப்பதை அவனிடத்தில் சொல்ல மறந்துவிட்டாள்...

நேசம் கொண்ட இரு நெஞ்சங்களும் அருகருகே இருந்தும் அடுத்தவர் நலன் கருதி அமைதி காத்தது...

வெகுநேரம் விழித்திருந்த இருவரும் உடல் அசதியில் தன்னையும் மீறி கண்ணயர்ந்தனர்...

காலையில் எப்போதும் போல் ஜீவாவிற்கு விழிப்பு வந்தது... வழக்கம் போல் கடிகாரத்தில் பார்வை செலுத்தியவன் மணி ஏழு ஆகிவிட்டதை உணர்ந்து அவசரமாய் எழ முயல அந்தோ பரிதாபம் அவனால் அது முடியவில்லை...

அவனது மனையாள் அவனது நெஞ்சில் முகம் புதைத்து அவனை அணைத்துக் கொண்டு சுகமாய் உறங்கி கொண்டிருந்தாள்... உறக்கத்தில் தன்னை நாடி வந்திருந்த மனைவியைக் கண்டதும் அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... வரிசை கட்டி காத்திருக்கும் தனது வேலைகளை மறந்தவனாய் தன்னவளை இமைக்காது பார்த்திருந்தான்...

ஒரு வார காலம்... ஏழு நாட்கள்... நீண்ட நூற்றி அறுபத்தெட்டு மணித்துளிகள்... அவன் அவளைப் பிரிந்து வந்து... அவளைப் பிரிந்த இத்தனை நாட்களில் அவனது உடல் மட்டும் வெறும் கூடாய் இங்கிருக்க அவனது உயிர் தன்னவளின் நினைவுகளில் அவளிடமே நிலை கொண்டு சென்னையிலேயே தங்கிவிட்டது...

இன்று வீட்டில் அவளைக் கண்டதும் அவன் அடைந்த சந்சோத்திற்கு அளவே இல்லை... அவனின் எதிர்பார்ப்பை ஏமாற்றாமல் அவள் அவனிடம் வந்து சேர்ந்து விட்டாள்... அந்தச் சந்தோசத்தை இப்போதும் அனுபவித்தவனாய் அவளை இறுக அணைத்தவன் அவளது நெற்றியில் முத்தமிட்டான்...

"பேபி..." என்றபடி அவளை உச்சி முகர்ந்தபடி தன்னுள் அவளைப் பொத்தி வைத்து கொண்டவனின் இறுகிய அணைப்பில் அவளும் விழித்துக் கொண்டாள்... ஆனாலும் அதைக் காட்டி கொள்ளாது கணவனது அணைப்பில் சுகமாய் அடங்கியிருந்தாள்...

"யார் என்னைக் கைவிட்டாலும் நீ என்னைக் கைவிட மாட்டேன்னு எனக்குத் தெரியும் பேபி..." என்ற கணவனின் வார்த்தையில் அவள் திகைப்பும், சந்தோசமாய் இனிமையாய் அதிர்ந்தாள்...

"உனக்கு ஒண்ணு தெரியுமா...? பதினைஞ்சு வயசில் உன்னைக் காயப்படுத்தின அன்னைக்கு நான் பயத்தில் துடிச்சு போனது..."

அன்று அவன் அவளது இதழை வருடி கொண்டு அவளிடத்தில் வருந்தியது அவளுக்கு நினைவு வந்தது...

"அந்த வயசில் யாராவது கல்யாணத்தைப் பத்தி யோசிப்பாங்களா... அதுவும் நீ பூஜாவை விட ரொம்பச் சின்னப் பொண்ணு... உன்னைப் போய் என்னால் அப்படி நினைச்சு பார்க்க முடியுமா...? அதிலும் நீ மாமா, மாமான்னு சொன்னதைக் கேட்டு எல்லோரும் அதைச் சொல்லி கிண்டலடிக்க ஆரம்பிச்சாங்க... உன் கிட்ட சொன்னால் அது உனக்கும் புரியலை... அன்னைக்கு என் பிரெண்ட்ஸ் எல்லாம் ரொம்பக் கிண்டலடிக்கவும் தான் அந்தக் கோபத்தில் உன்னைப் பிடிச்சுத் தள்ளிவிட்டது... நான் வேணும்ன்னே அதைச் செய்யலை... ஒரு சின்னக் குழந்தையைப் பிடிச்சு ரத்தம் வர்ற மாதிரி தள்ளிவிடும் அளவுக்கு நான் ஒண்ணும் கொடூரன் இல்லை..."

அவன் கூறுவதைக் கேட்டு அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை... 'நீங்க நல்லவங்க தான் மாமா...' என்று அவளது மனம் கூக்குரலிட்டது...

"ஆனா யாருமே என்னைப் புரிஞ்சிக்கலை பேபி... யாருமே..." என்றவன் எதையோ நினைத்து தன் அணைப்பை இறுக்கினான்... அது அவளுக்கு வலிக்கத்தான் செய்தது... ஆனாலும் அவனுக்காகப் பொறுத்து கொண்டாள்... அந்தளவுக்கு அவனது மனம் வலிப்பது கண்டு அவளுக்குத் தான் மனம் வலித்தது...

"மாம் கூட என்னைப் புரிஞ்சிக்கலை... ஏதோ கொலை குற்றம் பண்ணியவன் போல் என்னை ட்ரீட் பண்ணினாங்க... என்னிடம் பேச கூட மாட்டேன்னு சொல்லிட்டாங்க... அப்பா பத்தி கேட்கவே வேண்டாம்... மாம் என்ன சொல்றாங்களோ அதைத் தான் அவர் செய்வார்... அவரும் என்னை வந்து பார்க்கலை... ஏன் இப்படிச் செஞ்சேன்னு ஒரு வார்த்தை கேட்கலை... எல்லோரும் என்னைப் புறக்கணிச்சப்போ எனக்குள்ள ஒரு குற்றவுணர்ச்சி... அதனால் தான் தாத்தா கூட இங்கே வந்திட்டேன்... அதுக்கு அப்புறம் யாரும் என் கிட்ட எதுவும் பேசலை... அவங்களுக்கு என்னைப் பிடிக்கலைன்னு நினைச்சு நானும் அவங்க கிட்ட இருந்து ஒதுங்கிட்டேன்... அதுக்கு அப்புறம் சென்னைக்குப் போகவே இல்லை... என்னை வேண்டாம்ன்னு நினைச்சவங்க எனக்கும் வேண்டாம்ன்னு முடிவு பண்ணினேன்..."

மனம் விட்டு பேசாத கணவனைக் கண்டு அவளும் அப்படித்தானே விலகி போனாள்... அதை நினைத்து இப்போது அவளுக்குக் கண்கள் கரித்தது... முயன்று கண்ணீரை அடக்கி கொண்டாள்...

"என் மாம் கூட என்னைச் சரியா புரிஞ்சிக்கலை... ஆனா நீ என்னைச் சரியா புரிஞ்சிக்கிட்ட... அன்னைக்கு மாம் கிட்ட நான் எதிர்பார்த்தது இந்த அன்பை தான்... அவங்க அதைக் கொடுக்கவே இல்லை... ஆனால் நீ அந்த அன்பை சுயநலமில்லாமல் எனக்கு அள்ளி அள்ளி கொடுக்கிற பேபி... என் மேல் அளவு கடந்த காதல் வச்சியிருக்க... இதோ இப்போ கூட நீ எனக்காகத் தான் வந்திருக்க... அதை என்னால் உணர முடிகிறது... ஆனால் நீ வச்சியிருக்கும் இந்தக் காதலுக்கு நான் உனக்குச் செஞ்சது எல்லாம் என்ன பேபி... துரோகம் மட்டும் தானே..." அதைச் சொல்லும் போதே அவனது குரல் குற்றவுணர்வில் கரகரத்து ஒலித்தது...

மனம் வருந்துகிறான் போலும்... அவனின் மனவருத்தத்தைக் களைய எண்ணிய மனதை முயன்று

அடக்கி கொண்டு பேசாது படுத்திருந்தாள் அவனது காதல் மனையாள்...

"வலுக்கட்டாயமா உன்னைக் கல்யாணம் பண்ணி உன்னை ரொம்பக் கொடுமைப்படுத்திட்டேன் இல்லையா பேபி... நீ அந்த அபியை கல்யாணம் பண்ணியிருந்தா கூட ரொம்பச் சந்தோசமா இருந்திருப்ப இல்லையா..."

இதைச் சொன்ன கணவன் மீது இப்போது அவளுக்குக் கோபம் வந்தது...

'போடா லூசு... நீயும் உன் காதலை உணர மாட்ட... அடுத்தவங்க காதலையும் உணர மாட்ட... உன்னை எல்லாம் என்ன செய்றது...?' கோபத்தில் மரியாதை பன்மை எல்லாம் காற்றில் பறந்து போனது அவளுக்கு...

"அதனால் தான் அபி என் கிட்ட உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதா சொன்னப்போ ஒரு பக்கம் கோபம் வந்தது... என் மனைவியை நீ யார்டா கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு... இன்னொரு பக்கம் இந்த நிலையிலும் உனக்கு அவன் வாழ்க்கை கொடுக்க முன் வர்றான்னா அவன் உண்மையில் உன்னைக் காதலிக்கிறான்னு தானே அர்த்தம்... ஒருவேளை நீ எதிர்பார்க்கிற காதல் அவன் கிட்ட இருந்து உனக்குக் கிடைச்சதுன்னா...? அதனால் தான் நான் அப்படிச் சொன்னேன்..."

சுபிக்ஷாவிற்கு அந்த அபிமன்யு மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது... அவன் மட்டும் குட்டையைக் குழப்பாமல் இருந்திருந்தால் எல்லாம் சுபமாக முடிந்திருக்கும்...

'எங்கே இந்த மாதிரி ஒரு மாமாவை வைத்துக் கொண்டு அவ்வளவு சீக்கிரத்தில் சுபமாக முடியுமா என் காதல் கல்யாண வாழ்க்கை...' அவளுக்கு ஆயாசமாக வந்தது...

"உனக்காகத் தான் உன்னை அவனிடத்தில் விட்டு கொடுக்க நினைச்சேன்... உன் மனசு படி நல்ல வாழ்க்கை அமையணும்ன்னு நினைச்சு தான் நான் இப்படி உன் கிட்ட பேசியது... அதுக்கு என்னை மன்னிச்சிரு பேபி... எனக்கு இந்தக் காதல், கல்யாண வாழ்க்கை எல்லாம் செட்டாகாது போலிருக்கு... கடைசிவரைக்கும் இப்படித் தனியா இருக்கணும்ன்னு என் தலையெழுத்து போலும்..." என்றவன் அவளது நெற்றியில் இதழ் பதித்து,

"உன்னோடு வாழ்ந்த இந்த இரண்டு மாத கால வாழ்க்கை போதும் என் வாழ்நாள் முழுமைக்கும்... இதை நினைத்துக் கொண்டு மீதமிருக்கும் வாழ்நாளை கழிச்சிருவேன்..."

வார்த்தைகளில் காதல் பொங்க கூறியவன் அந்தக் காதலை சிறிதும் உணரவில்லை என்பது தான் அந்தோ பரிதாபம்... அந்தக் காதலை அவனுக்கு உணர்த்தாமல் அவளும் ஓயப் போவதில்லை... அதனால் அமைதி காத்தாள் அவள்...

"ஆனாலும் இதையும் மீறி எனக்குள்ள ஒரு சின்ன நப்பாசை... அபி உன் கிட்ட கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னா நிச்சயம் அவனை நீ செருப்பைக் கழட்டி அடிக்கத்தான் செய்வன்னு எனக்குத் தெரியும்... அப்படியாவது அவனுக்கு நாலு அடி உன் கிட்ட இருந்து விழணும்ன்னு எதிர்பார்த்தேன் பேபி... ம்ஹூம்... அது நடக்கவே இல்லை..." என்று பெருமூச்சு விட்டவனைக் கண்டு அவள் மனதிற்குள்,

'நீங்க சொன்னாலும் சொல்லலைன்னாலும் அபி என் கிட்ட அடி வாங்க போறது உறுதி மாமா... அதை நீங்க கண் குளிர பார்த்து ரசிக்கலாம்...' மனதில் கோபத்துடன் சொல்லிக் கொண்டாள் அவள்...

இந்தப் பொல்லாத கணவன், மனைவி திட்டம் தெரியாத அப்பாவி அபிமன்யுவோ நல்ல நித்திரையில் இருந்தான்...

ஒரு வார காலமாக மனதை அரித்துக் கொன்ற வேதனையை மனைவியிடத்தில் இறக்கி வைத்தவனின் மன உறுத்தல் சற்றுக் குறைந்திருந்தது...

"இதுநாள் வரை உனக்குப் பிடிக்காததை நான் செஞ்சிருக்கலாம்... இனியும் அப்படிச் செய்வதற்கு என் மனசு இடம் கொடுக்கலை... எப்பவும் என்னைப் பத்தி மட்டுமே யோசிக்கும் நான் இப்போது யோசிப்பது எல்லாம் உன் வாழ்க்கையைப் பத்தி தான்... இனியாவது உன் மனசுக்கு பிடிச்சவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நீ நல்லாயிருக்கணும்... இதைச் சொல்றதுக்கு எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு... ஒரு மாதிரி வலிக்குது இங்கே..." என்று தன் நெஞ்சை நீவி விட்டுக் கொண்டு சொன்னவனைக் கண்டு அவளுக்கும் வலித்தது இதயத்தில்...

"நீ கேட்கும் காதல் நிச்சயம் அபியிடத்தில் கிடைக்கும் பேபி... அவன் உனக்காக எதையும் செய்வான்... உங்க இரண்டு பேர் வாழ்க்கையிலும் இடையில் புகுந்து குழப்பம் பண்ணிய என்னை மன்னிச்சிரு பேபி... இடையில் வந்தவன் இடையில் விலகிக்கிறது தான் நல்லது..."

அதற்கு மேல் அவனால் தாங்க முடியவில்லை போலும் கண்மூடி உறங்குவது போல் பாவனைச் செய்த அவளின் முகத்தைத் தனது கரங்களில் அள்ளி எடுத்து,

"கடைசி முறையாய் ஒரு தடவை... ப்ளீஸ் பேபி..." என்றவன் அவளது முகம் முழுவதும் அடுத்தடுத்து ஆவேசமாய் முத்தமிட்டவன் பின் அவளது இதழில் மென்மையாய் முத்தமிட்டு விலகினான் மனமில்லாது...

"இனியாவது உன் வாழ்க்கை சந்தோசமா இருக்கட்டும்..." என்று கூறியவன் தன் நெஞ்சத்தில் இருந்து அவளை மலர் போல் மெல்ல தூக்கி படுக்கையில் படுக்க வைத்து அவளது கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு எழுந்தவன் பின்

அவளைத் திரும்பியும் பார்க்காது குளியலறைக்குள் புகுந்து கதவை சாத்தி கொண்டான்...

கணவனது வார்த்தைகள், செயல்கள் எல்லாம் கண்டு பெண்ணவள் கண்களில் கண்ணீர் வழிய அப்படியே படுத்திருந்தாள்... அவனது காதல் அவளது அடி நெஞ்சு வரை தித்தித்த போதும் அவனது இந்த விலகல் அவளது இதயத்தைக் கசக்கி பிழிவது போல் அத்தனை வேதனை எழுந்தது...

'அப்பவும் என்னைப் பத்தி கவலைப்படாம என் கழுத்தில் தாலி கட்டினீங்க... இதோ இப்போதும் என் உணர்வுகளைப் புரிஞ்சிக்காம நீங்களே முடிவு எடுக்கறீங்களே மாமா... என் மனசில் நீங்க மட்டும் தான் இருக்கீங்கன்னு புரிஞ்சிருந்தும் எனக்காக என்னை விட்டு கொடுக்க உங்களுக்கு எப்படி மனசு வந்தது...? இப்படி விட்டு கொடுத்து நீங்க நல்லவன்னு பட்டம் வாங்கிறதுக்காக என் உணர்வுகளைச் சாகடிக்க உங்களுக்கு யார் ரைட்ஸ் கொடுத்தது...? உங்க உயர்மட்ட பெண்களைப் போல் ஒரு திருமணம் தோல்வி அடைஞ்சா மனசை மாத்திக்கிட்டு மறுமணம் செய்துவிட்டு போவது போல் நானும் போவேன்னு எப்படி நீங்க தப்புக்கணக்கு போடலாம்...? ஒருத்தன் கையால் தாலி வாங்கி, சாகும் வரை அவனுக்காக மட்டும் வாழ நினைக்கும் மானமுள்ள தமிழ் பெண் நான் என்பதை நீங்க ஏன் புரிஞ்சிக்கலை... நான் மறுமணம் செய்து புரட்சி பெண்ணாக மாற வேண்டும்ன்னு ஆசை எல்லாம் எனக்கு இல்லை... நீங்க எப்படியிருந்தாலும் உங்க கூட வாழணும்ன்னு நினைக்கிற சாதாரணப் பெண் நான்...'

பலவாறு சிந்தித்தவளுக்கு அப்போது தான் தான் கருவுற்று இருப்பது நியாபகத்தில் வந்தது... பேசாமல் கணவனிடத்தில் தான் கருவுற்று இருப்பதைக் கூறிவிடலாமா என்று கூட நினைத்தாள்...

'ம்ஹூம்... இவங்க குழந்தைக்காக ஒண்ணும் என்னை ஏத்துக்க வேண்டாம்... என்னை எனக்காக ஏத்துக்க

வேண்டும்...' என்று வீம்பாக நினைத்தாள் அந்தத் தன்மானப் பெண்...

அதற்குள் கணவன் வரும் அரவம் கேட்க மீண்டும் கண்களை மூடி கொண்டு படுத்துவிட்டாள் அவசரமாய்... அவள் உறங்குவதைப் பார்த்துக் கொண்டே உடை மாற்றி அலுவலகத்திற்குக் கிளம்பியவன் அறையை விட்டுச் செல்லும் முன் அவளை எழுப்ப எண்ணி அருகில் வந்தான்...

அசந்து உறங்கும் அவளை எழுப்ப மனமில்லாது அவளது தலையை வருடி கொடுத்தவன் அவளது நெற்றியில் முத்தமிட்டுப் பின் விலகி சென்றான்...

கணவன் சென்ற பிறகே சுபிக்ஷா படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தாள்... முகத்தைக் கழுவி கொண்டு வந்தவள் முதல் வேலையாக அபிமன்யுவை அழைத்தாள்...

அப்போது தான் எழுந்து வேலைக்குக் கிளம்பி கொண்டிருந்தான் அபிமன்யு... சுபிக்ஷாவின் அழைப்பை கண்டு ஆச்சிரியமுற்றவனாய் அதை எடுத்தான்...

"சொல்லு சுபி... எப்படி இருக்க...?"

"நீங்க பண்ணிய வேலைக்கு நான் எப்படி நல்லாயிருக்க முடியும்...?" என்று மறுமுனையில் வெடித்தாள் அவள்...

அதில் அவன் திகைத்து தான் போனான்...

"நான் என்ன செஞ்சேன்...?"

"நீங்க என்ன செய்யலை..." என்று கோபமாய் உரைத்தவள் கணவனிடம் அவன் பேசியதை எல்லாம் கூறிவிட்டு,

"நான் உங்க கிட்ட வந்து சொன்னேனா எனக்கு வாழ்க்கை கொடுங்கன்னு... எதுக்குத் தேவையில்லாம மாமா கிட்ட

இப்படிப் பேசினீங்க... நான் அடுத்தவங்க மனைவின்னு தெரிஞ்ச பிறகும் எப்படி இப்படி உங்களால பேச முடிந்தது..." அருவருப்பாய், எரிச்சலாய் சொன்னவளின் வார்த்தைகள் அவனை வேதனையுடன் தாக்கியது...

"இது நானா வேணும்ன்னு செய்யலை சுபி... பெரியப்பா, மாமா தான் செய்யச் சொன்னாங்க..."

"என்னது அப்பாவும், மாமாவுமா...?" என்று திகைத்தாள் அவள்...

"ஆமாம்..." என்றவன் ஜெகன், செல்வா திட்டத்தை அவளிடத்தில் கூறியவன்,

"ஒண்ணு மட்டும் புரிஞ்சிக்கோ சுபி... நீயும், ஜீவாவும் சேர்ந்து வாழ்ந்தா சந்தோசப்படுற முதல் ஆள் நான் தான்... அதுக்காக எத்தனை கெட்டப் பெயர், பழி விழுந்தாலும் நான் ஏற்றுக் கொள்வேன்..."

அபிமன்யுவின் களங்கமற்ற அன்பை எண்ணி இப்போது அவள் வாயடைத்து போனாள்...

"சாரி..." மனதார மன்னிப்பு கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"ஏன் அங்கே அடி பலமோ...?" என்று கேட்டான் சிறு சிரிப்புடன்...

"ம்... ரொம்பப் பலம் தான்... நீங்க நினைச்ச மாதிரி இல்லாம... வேறு மாதிரி..." என்றவள் கணவன் தன்னை விட்டு விலகி நிற்கும் முடிவு எடுத்திருப்பது பற்றிக் கூறினாள்...

"நீங்க எனக்கு ஒரு உதவி செய்வீங்களா..." அவள் அப்படிக் கேட்டதும் சிறிதும் யோசிக்காமல் அபிமன்யு,

"எதுவாக இருந்தாலும் சொல்லு... நான் செய்கிறேன்..." என்க...

மறுமுனையில் அவள் சொன்னதைக் கேட்டு அபிமன்யு தன் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு பரிதாபமாக,

"ஆக மொத்தம் கணவன், மனைவி இரண்டு பேரும் எனக்கு அடி வாங்கிக் கொடுப்பதாய் கங்கணம் கட்டி கொண்டு அலையறீங்க என்ன...? நான் பாவம் சுபி..." போலி வருத்தத்துடன் கூற...

"எனக்கு வேறவழி தெரியலை..." என்றவளது குரல் சற்று இறங்கித் தான் போனது... ஏனெனில் இதில் சம்பந்தப்பட்டவன் அபிமன்யு... அதனால் தான் அவள் அவனிடத்தில் உதவி கேட்டது...

அவளது சோர்வான குரல் கேட்டு, "கவலையை விடு சுபி... எத்தனையோ அடிகளைத் தாங்கி கொண்ட வைரம் பாய்ஞ்ச கட்டைம்மா என் உடம்பு... உன் கணவன் கொடுக்கும் அடிகளையா தாங்க முடியாது... உங்க ரெண்டு பேருக்காக அதை நான் சந்தோசமாக வாங்கிக் கொள்கிறேன்..."

தனது வருத்தத்தை மறைத்துக் கொண்டு அபிமன்யு கலகலப்பாய் பதிலுரைத்தவன் அவளையும் கலகலப்பாக்கினான்...

அபிமன்யுவிடம் பேசிவிட்டு அலைப்பேசியை அணைத்த சுபிக்ஷாவிற்கு அப்படி ஒரு நிம்மதி மனதில்...

"விட்டு கொடுத்து விலகியா போறீங்க மாமா... அந்தளவுக்கு உங்களை நல்லவனாக விடக் கூடாதே... நான் போட போற நாடகத்தில் உங்களுக்குள் இருக்கும் கெட்டவன் வெளிவரணும்... இல்லை நான் வெளிவர வைப்பேன்..."

அங்கிருந்த கணவனது புகைப்படத்தைப் பார்த்து சூளுரைத்த சுபிக்ஷா மனம் சந்தோசத்தில் விண்ணில் பறந்தது... ஆனால் அடுத்த நொடி இதை எப்படிச் செயல்படுத்துவது என்று தெரியாமல் குழப்பத்துடன் யோசித்தாள்...

அதன் விளைவு அன்றிரவு தனது கணவனிடத்தில் குழந்தை விசயத்தைச் சொல்லிவிட முடிவு செய்தாள்... குழந்தையை வைத்து அவனைத் தக்க வைத்து கொள்வதற்காக அல்ல... அதைக் காரணம் காட்டி அவனை விட்டு விலகுவதற்காக...

இரவு அவன் வந்ததும், "உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்...?" முகத்தில் எந்தவித உணர்வும் இல்லாது சொன்னவளை கண்டு அவன் புரியாது அவளைப் பார்த்தான்...

"பேசு..."

"என்னை உங்களை விட்டு விலகி போகச் சொல்லிட்டீங்க... அதே மாதிரி நானும் விலகி போகிற முடிவை எடுத்துட்டேன்..." என்றவளை கண்ணில் அடிப்பட்ட வலியுடன் பார்த்தான் ஜீவா...

'வலிக்குதா... ? நல்லா வலிக்கட்டும்... இப்படித்தானே எனக்கும் வலிக்குது...' மனதில் கறுவியபடி அவனைப் பார்த்தவள்,

"உங்க கிட்ட என்னோட எந்தப் பொருளும் இல்லை... எல்லாவற்றையும் நீங்க திருப்பி அனுப்பிட்டீங்க... அது மாதிரி உங்க பொருள் எல்லாவற்றையும் நானும் திருப்பிக் கொடுக்கணும் இல்லையா...?"

அவள் கேட்டது அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை...

"அப்படித் திருப்பிக் கொடுக்கும் அளவிற்கு என்னோட பொருள் உன் கிட்ட என்னயிருக்கு..." என்று கேட்டபடி

நெற்றியை சுருக்கி யோசித்தான்...

"உங்க குழந்தை..."

இதைச் சொல்லும் போது அவள் அத்தனை வேதனையடைந்தாள்... கணவனின் கைப்பிடித்துத் தனது வயிற்றின் மீது வைத்து காதல் பொங்க 'நம் குழந்தை' என்று மகிழ்வோடு கூற வேண்டும் என்று நினைத்ததை எண்ணி அத்தனை வலி எழுந்தது அவளுள்...

எங்கே தன்னை மறந்து கண்ணீர் விட்டு விடுவோமோ என்றெண்ணி கண்களை மூடி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தாள்...

ஆனால் அவளது எதிர்பார்ப்பை ஏமாற்றாமல் அவளது கணவன் வேகமாய் அவள் காலடியருகே மண்டியிட்டு அமர்ந்து அவளது புடவையை விலக்கி மென்மையாய் தனது கையை அவள் வயிற்றின் மீது பதித்து,

"உண்மையாவா சொல்ற பேபி..." ஆசையும், ஆர்வமுமாய் ஆவல் கொண்ட முகத்தோடு மனையாளை ஏறிட்டுப் பார்த்தான் அவன்...

அவனது அந்தப் பார்வையில் அவள் உள்ளுக்குள் கரைந்து தான் போனாள் முழுவதுமாய்... ஆம் என்பது போல் தலையசைத்து பதிலளித்தாள் அவனது கேள்விக்கு...

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு பேபி..." என்றவன் அவளது வயிற்றின் மீது தனது இதழை பதித்து அவளது இடையோடு அணைத்துக் கொண்டான்...

பதிலுக்கு அவனையும் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொள்ளப் பரபரத்தது அவளது கைகள் இரண்டும்... முயன்று படுக்கையை இறுக பற்றிக் கொண்டு அதைக் கவனமாய்த் தவிர்த்தாள் மனதில் தவிப்புடன்...

"நாம இரண்டு பேரும் பிரிவதுன்னு முடிவாகிவிட்டது... அப்போ இந்தக் குழந்தையை என்ன செய்யலாம்ன்னு நீங்களே சொல்லுங்க..."

இனிய கனவினை கலைப்பது போல் அவளது குரல் கணீரென்று ஒலித்ததில் அவன் உடலும், மனமும் அதிர அவளிடம் இருந்து விலகினான்... மண்டியிட முடியாமல் உடல் சோர்ந்து போய் அங்கேயே தரையில் அமர்ந்தவன் கட்டில் மீது சாய்ந்து கண்களை மூடி கொண்டான்...

குழந்தையைப் பற்றி அவன் நினைத்தும் பார்க்கவில்லை... இப்போது என்ன செய்வது என்று தெரியாது குழம்பி போனான்...

வெளி உலகில் பெரிய தொழிலதிபன் என்ற அந்தஸ்தோடு உடையின் மடிப்பு அலுங்கிடாது வலம் வரும் கணவன், இப்படிக் கீழே உட்காருவது கூடக் கௌரவக் குறைச்சல் என்று எண்ணுபவன் இப்போது அதை எல்லாம் மறந்து செயலற்ற போனவனாய், தன்னை மறந்தவனாய் வேதனையுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு பெண்ணவள் மனம் இரக்கம் கொண்டது...

'ரொம்பவும் படுத்தி எடுக்கிறேனோ...' என்று...

"மாமா..." அதனால் என்னவோ அவளையும் மீறி ஆறுதலாய் தனது கையை எடுத்து அவன் தோள் மீது வைத்தாள்...

அதில் தன்னுணர்வு பெற்றவன் பின் முடிவு எடுத்தவனாய் அவளைப் பார்த்து, "என் பொருளை என்னிடம் ஒப்படைத்துவிட்டு நீ போகலாம்..." என்றான் உணர்ச்சி துடைத்த குரலில்...

அதில் அவளுக்கு உள்ளுக்குள் வலித்தது... இருந்தாலும் அதை வெளிக்காட்டி கொள்ளவில்லை...

'நீங்க எவ்வளவு தூரம் தான் போறீங்கன்னு நானும் பார்க்கிறேன் மாமா...' என்று அழுத்தமாய் அவனைப் பார்த்திருந்தாள்... அவனது குழந்தை ஆசை பற்றி அவளுக்குத் தெரியாதா என்ன...?

"நாளைக்கு ஹாஸ்பிட்டல் போகலாம்... ரெடியாயிரு..." தன் முகம் பார்க்காமல் கூறியவனைக் கண்டு,

"அங்கே காட்டிட்டு தான் வந்தேன்..."

"இது என் மனதிருப்திக்கு..." என்றவனை மேலும் வேதனைப்படுத்த அவளுக்கும் மனமில்லை...

இரவு மனைவி உறங்கியதும் அவளை அணைத்துக் கொண்டு படுத்த ஜீவாவிற்குத் தான் எடுத்த முடிவு தவறோ என்ற எண்ணம் தோன்றியது... ஆனால் அடுத்தக் கணம் மனையவளின் மனதை எண்ணியவன் அதைச் சரியென்றே நினைத்தான்...

அவனின் அணைப்பை உணர்ந்த அவளோ அதில் நிம்மதியுற்றவளாய் உறங்கி போனாள்... ஆனால் அவன் தான் உறக்கத்தைத் தொலைத்துத் தவித்திருந்தான் வெகுநேரம்...

மறுநாள் மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்தனர்... சென்னையில் சொன்னது போல் இங்கும் அதே தான் சொன்னார் மருத்துவர்... அவளது உடல் மிகவும் பலகீனமாய் இருப்பதாய்... அதைக் கேட்டு அவன் பயந்து தான் போனான்...

அவளை விட அவனைத் தேற்றத்தான் மருத்துவர் பெரும்பாடு பட வேண்டியதாய் போயிற்று... அவனின் வேதனை அவளுக்குச் சந்தோசத்தைக் கொடுக்கச் சிறு புன்னகையுடன் கணவனது அக்கறையைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்...

வீட்டிற்கு வந்ததும் அவளைப் பார்த்துச் சத்தம் போட்டான் ஜீவா...

"இந்த மாதிரி நிலையில் உன்னை எப்படித் தனியா அனுப்பிச்சாங்க... மாம்க்கு கூடவா அறிவில்லை..." என்று கத்தியவன்,

"உனக்கு எங்கே அறிவு போச்சு... நீ என்ன சின்னப் பிள்ளையா..." என்று அவளையும் கடிய தவறில்லை...

எல்லோரும் இதைக் காரணம் காட்டி அவளது பயணத்தைத் தடுத்த போதும் அவள் தான் பிடிவாதம் பிடித்து அவனைக் காண வந்தாள்... எத்தனை பேர் அவளைச் சுற்றியிருந்த போதும் அவளது மனம் தன்னவனை மட்டுமே நாடியதை அவன் அறிவானா... அவனால் மட்டுமே அவளை உயிர்ப்புடன் வைத்திருக்க முடியும் என்பதை அவன் அறிவானா...

"எத்தனை பேர் இருந்தாலும் அவங்க எல்லாம் உங்களைப் போல் வராது மாமா..." தன் மனதினை மறையாது அவனிடத்தில் உரைத்தாள் அவள்...

அதில் திகைத்து போய் அவளைப் பார்த்தவன் அவளது அன்பில் மனம் நெகிழ்ந்து அடுத்த நொடி அவளை இறுக அணைத்துக் கொண்டான்... சிறிது நேரம் மௌனமாய் இருந்தான் அவளை அணைத்தபடி... அவளுக்கும் அவனது அணைப்பு தேவையாய் இருந்ததோ என்னமோ அமைதியாக அவனுள் அடங்கி நின்றாள்...

"பேசாம நீ என் கூடவே இருந்து விடேன் பேபி..." தழுதழுத்து வந்தது அவனது குரல்...

கணவன் இப்படிச் சொல்வது குழந்தைக்காகவா இல்லை தனக்காகவா என்று தெரிய வேண்டியிருந்தது அந்தக் காதல் மனைவிக்கு...

"குழந்தைக்காகச் சொல்றீங்களா மாமா...?" கசப்புடன் கேட்ட மனைவியின் குரலில் அவன் நடப்புக்கு வந்தான்...

கடவுளே ஒரு நொடியில் மனம் நெகிழ்ந்து போய் என்ன காரியம் செய்யவிருந்தான் அவன்... அவளுக்கு நல்வாழ்வு அமைத்து கொடுக்க வேண்டியவன் அவள் வாழ்க்கையைத் தொலைப்பதற்குக் காரணமாய் இருப்பதா...? மனம் கசங்க அவளை விட்டு விலகி நின்றான்...

'எனக்காகன்னு சொல்லுங்களேன் மாமா...' என்று வேண்டியபடி கணவன் சொல்லும் ஒற்றை வார்த்தைக்காகப் படபடக்கும் நெஞ்சத்துடன் அவள் அவனை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றிருந்தாள்...

"குழந்தைக்காகத் தான்..." என்று கூறியவனின் முகத்தில் இருந்த அளவு கடந்த வேதனையை அவதானித்துக் கொண்டு இருந்த மனைவியவளுக்கும் அதே அளவு வேதனை இருந்த போதும் சிறிதும் அவனிடத்தில் கோபம் வரவில்லை... மாறாக அவனிடத்தில் இரக்கம் சுரந்தது தாய்மை உள்ளத்தோடு...

"குழந்தையை என்னிடம் கொடுத்துவிட்டு நீ விலகி போயிரு..." என்றவன் அவளது முகத்தைப் பார்க்க முடியாது வெளியில் சென்றுவிட்டான்...

புரிந்து கொள்ளாமல் செல்லும் கணவனை நினைத்து அவள் மனதில் சோர்வு எழுந்தது... அதே சமயம் அவன் தன் மீது வைத்திருக்கும் காதல் மீது பெருமளவு நம்பிக்கை இருந்தது...

அவள் ஒன்றும் அவளின் காதலின் அடிப்படையில் அவனிடம் போராடவில்லையே... அவனின் காதலை அடிப்படையாகக் கொண்டு தானே நம்பிக்கையுடன் போராடுகிறாள்...

அந்த உறுதியோடு இனி வரும் வாழ்க்கையைத் தைரியத்துடன் சந்திக்கத் தயாரானாள் திருமதி. ஜீவா...!!!

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 27

அலுவலகத்தில் வேலை அதிகம் இருந்த போதும் மனைவியின் உடல்நலன் மீது அக்கறை கொண்ட கணவனாய் ஜீவா இரவு நேரம் சிறிது நேரத்துடனே கிளம்பி வீட்டிற்கு வந்தான்... களைப்புடன் வீட்டினுள் நுழைந்தவன் அங்குத் தனக்காகக் காத்துக் கொண்டிருந்த மனைவியைக் கண்டதும் அவனது களைப்பு எல்லாம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி போக அவனது முகம் பளிச்சென்று மலர்ந்தது...

அவனுக்குக் கொஞ்சமும் குறைவில்லாமல் சுபிக்ஷாவின் முகமும் மலர்ந்தது அவனைக் கண்டதும்...

"ஃபைவ் மினிட்ஸ் பேபி... குளிச்சிட்டு வந்திர்றேன்..." என்றபடி வேகமாய் அறையை நோக்கி சென்ற கணவனின் முதுகை பார்த்துக் கொண்டு அப்படியே நின்றிருந்தாள் அவள்...

'என்னை விட்டு போய்விடு' என்று சொன்ன கணவன் இன்னமும் அவளைக் கிளம்பி போகச் சொல்லவில்லை... அது போல் போய் விடுவதாகக் கூறிய அவளும் இன்னமும் கிளம்பிச் செல்ல மனமில்லாமல் இங்குத் தான் இருக்கிறாள்...

அது எதனால் என்ற கேள்விக்கு விடை தெரிந்தும் தெரியாதது போல் இருவரும் மௌனமாய் வளைய வந்தனர்... அவள் இங்கு வந்து ஒரு வார காலமாகி விட்டது...

ஜீவா குளித்துவிட்டு வந்த போது சுபிக்ஷா உணவை அறைக்கு வரவழைத்து இருந்தாள்... அங்கிருந்த சோபாவின் முன்னிருந்த மேசை மீது பரத்தியிருந்த உணவு பாத்திரங்களைக் கண்டதும் அவனது முகத்தில் புன்சிரிப்புப் படர்ந்தது...

"என்ன சாப்பாட்டை ரூமுக்குக் கொண்டு வந்துட்ட...?"

"ரொம்ப டையர்டா இருந்தீங்களா... அதான் எடுத்துட்டு வந்தேன்..."

அவனது வார்த்தையில் இருந்த கேலியை உணர்ந்தும் உணராதது போல் பதிலளித்தவள் உணவை தட்டில் வைத்து அவன் புறம் நீட்டினாள்... அவள் அருகில் அமர்ந்து சிரித்தபடி அதைத் தன் கையில் வாங்கியவன் அதிலிருந்த தோசையைப் பிட்டுக் காரசாரமான தக்காளி சட்னியில் தொய்த்து எடுத்துக் கொண்டு நிமிர்ந்தவன் கண்ணில் தன் முகத்தை ஆர்வமும், ஏக்கமும் கலந்து பார்க்கும் மனையாளின் மதி முகம் விழுந்ததும் புன்னகை விரிய அதை அவளுக்கு ஊட்டிவிட்டான்...

அவனது செயலில் முகம் மலர்ந்தவள் சந்தோசமாய் அதை வாங்கிக் கொண்டாள்...

"இப்படி ஊட்டுறதுக்காகத் தானே நீ சாப்பாட்டை இங்கே கொண்டு வந்த..."

மனைவியின் கள்ளத்தனத்தைக் கண்டுபிடித்து அவன் கேலி போல் கேட்க... கண்டு கொண்டானே என்று முழித்தவளின் முகத்தில் சிறிது வெட்கத்தின் சாயல் எட்டிப்பார்த்தது...

அவனுக்கு எத்தனை வேலை இருந்த போதும் மூன்று வேளை உணவை மட்டும் அவள் ஒழுங்கா உண்டாளா என்பதை அறிவதற்காக அவனும் அவளுடன் தான் உண்பான்... காலை, மதியம் தானே உண்பவள் இரவு நேரம் மட்டும் அவனை ஊட்டிவிடச் சொல்லுவாள்... இதை அவன் தான் ஆரம்பித்து வைத்தது... மசக்கை காரணமாக வாந்தி எடுப்பவளுக்கு அவன் வலுக்கட்டாயமாக உணவை ஊட்டி விட ஆரம்பிக்க அதுவே அடுத்து வந்த நாட்களில் பழக்கமாகி போனது...

ஆனால் அதை அவள் வாய்விட்டு அவனிடத்தில் சொல்ல மாட்டாள்... இப்படித்தான் பார்வையால் தனது ஆசையை வெளிப்படுத்துவாள்... மனையாளின் மனதை மிகச் சரியாகப் படித்து விடுவான் அந்தக் காதல் கணவன்...

"ம்... ம்..." என்று மெதுவே முனங்கியவள் அவனது சட்டை பொத்தானை பிடித்துத் திருகினாள் வெட்கத்தில்...

அவளது அந்தச் செயலில் அவனது மனம் மயங்கித்தான் போனது...

தட்டிலிருந்த கடைசி வாய் உணவினை வாயில் வைக்கும் முன் அவளுக்கு உமட்டி கொண்டு வர அவள் குளியலறையை நோக்கி ஓடினாள் வாய் மீது கை வைத்து அடக்கியபடி...

அதைக் கண்டு அவனும் அவள் பின்னே சென்றான் மனம் பதறியபடி... உண்டது அனைத்தையும் அப்படியே வாந்தி போட்டவளை கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது...

"இந்தப் பேபி உன்னை ரொம்பப்படுத்துது பேபி..." சற்று கவலையுடன் சொன்ன கணவனின் நேசத்தை உணர்ந்தவளாய் அவனைப் பார்த்து சோர்வுடன் புன்னகைத்தாள்...

ஆனால் மனதுக்குள், 'அப்பா நீங்களே இந்தப் பாடு படுத்தினா உங்க பிள்ளை படுத்தாம இருக்குமா...? அப்பாவுக்குத் தப்பாத பிள்ளை...' சொல்லிக் கொண்டவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்...

"நீங்க போங்க... நான் குளிச்சிட்டு வர்றேன்..." என்று அவனைக் குளியலறையில் இருந்து வெளியில் போகச் சொல்ல...

"நீயும் என்னுடன் வா..." என்று அவள் கைப்பிடித்து அழைத்தவன்,

"வாமிட் பண்ணும் போது எல்லாம் குளிக்கணும்ன்னு நினைச்சா நீ ஒரு நாளைக்கு இருபது தடவையாவது குளிக்க வேண்டி வரும்... அதனால் பேசாம வா..." என்று அதட்டினான் மனைவியை...

"நீங்க அருவருப்பு படுவீங்களே..."

"இனி எல்லாத்தையும் பழகிக்கிறேன்... இப்போ நீ... அடுத்து நம்ம குழந்தை..."

"நீங்க... பழகிக்கிற ஆளு...? ட்ரெஸ் லேசா கசங்கினா கூட அதைக் கழட்டி போட்டுட்டு வேற போடுற ஆளு நீங்க..." சுத்தத்தை நேசிக்கும் கணவனின் குணத்தை அவள் கேலி செய்ய...

"அதை நீயும் பார்க்கத்தானே போற... நம்ம குழந்தையோட நான் எப்படி விளையாடுகிறேன்னு..."

கணவன் சொன்னதைக் கேட்டு அவளது கண்ணில் கனவு விரிந்து மனதில் காட்சி தோன்றியது... தங்கள் குழந்தையோடு குழந்தையாக மண்ணில் புரண்டு விளையாடும் கணவனைக் கற்பனை செய்தவள் அடக்க மாட்டாமல் சிரித்து விட்டாள்...

புரியாது என்ன என்று கேட்டவனிடம் அவள் தனது கற்பனையைச் சொல்ல...

"ரொம்பக் கேவலமா இருந்தேனோ...?" பரிதாபமாய் விழித்த கணவனை அப்படியே கட்டி கொள்ள வேண்டும் போலிருந்தது அவளுக்கு...

"அப்படி எல்லாம் இல்லை... அப்பவும் என் மாமா அழகாத்தான் இருந்தீங்க..." அவனது தாடை பற்றிச் செல்லம் கொஞ்சியவள்,

"ப்ளீஸ் மாமா... நைட் மட்டும் குளிச்சிக்கிறேன்..." என்று கெஞ்சியவளை கண்டு வேறுவழியின்றி அவனும் சம்மதமாய்த் தலையசைத்தான்...

அவள் குளித்து விட்டு வந்த போது ஜீவா சோபாவில் சாய்ந்தமர்ந்தபடி விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"நீங்க சாப்பிடலையா...?" என்று கேட்டபடி அவள் அவன் அருகே அமர...

"நீ வரட்டும்ன்னு இருந்தேன்..." என்றவனிடம் அவனுக்கு வேண்டிய சப்பாத்தி, குருமாவை தட்டில் வைத்து அவள் கொடுக்க... அவன் அதை வாங்கி உண்ண ஆரம்பித்தான்...

"மாமா..."

"என்ன...?" என்று நிமிர்ந்தவனிடம்,

"அம்ருவை போய்ப் பார்த்தீங்களா...?"

"முன்பு மாதிரி எல்லாம் இப்போ அடிக்கடி போய்ப் பார்க்கிறது இல்லை... அவள் யஷூ கூடச் சேரணும் இல்லையா... அதனால் தான்... முன்பு அடிக்கடி ஃபோன் பண்ணி ஏன் வரலைன்னு கேட்டுட்டு இருப்பாள்... இப்போ அது மாதிரி கேட்கிறது கொஞ்சம் குறைஞ்சியிருக்கு... யஷூவை ஏத்துக்க ஆரம்பிச்சிட்டாள்ன்னு நினைக்கிறேன்... இனி அது தான் அவங்க குடும்பம்... அதில் நான் தலையிடறது சரியில்லை தானே பேபி..."

கணவன் சொன்னதைக் கேட்டு அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்... அவளது மனதில் பலவித எண்ணங்களின் தாக்கம்... மனதில் உள்ளதை அவனிடம் எடுத்துரைக்கும் வழியறியாது அமர்ந்திருந்தாள்...

அதை அறியாத அவனோ உண்டு முடித்து விட்டு வேலை செய்பவர்களை அழைத்து எல்லாவற்றையும் எடுத்துப் போகச் சொல்லிவிட்டு மனைவி புறம் திரும்பினான்... அதுவரை அவளும் தனது யோசனையில் மூழ்கியிருந்தாள்...

"பேபி... அப்படி என்ன தீவிரமான யோசனை...? படுக்கப் போகலாமா...?"

அதில் கணவனை ஏறிட்டு பார்த்தவள், "பிரெண்ட்டோட மனைவியைக் கூட அப்படி நல்லா கவனிச்சிக்கிட்டீங்களே மாமா... ஆனா என்னை மட்டும் ஏன் விலகி போகச் சொல்றீங்க...?"

உதடுகள் துடிக்கத் துயரத்துடன் அவள் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனின் மனதை வேதனையில் துடிக்க வைத்தது...

"கடைசியில் அத்தையோட நிலையில் என்னைக் கொண்டு வந்து நிறுத்திட்டீங்க இல்லையா...?" மனம் வெறுத்த குரலில் கூறியவளின் வார்த்தைகள் அவனைச் சாட்டையடியாய்த் தாக்கியது...

மனைவி கூறுவது அனைத்தும் உண்மை தானே... செயலற்று போனவனாய் அவன் நின்றிருந்தான்... அவனது கலக்கம் உணர்ந்ததும் தான் தான் கூறிய வார்த்தைகளின் வீரியத்தை உணர்ந்து நாக்கை கடித்துக் கொண்டாள் சுபிக்ஷா...

"நான் ஏதோ தெரியாம பேசிட்டேன்..." என்றவளை கண்டு தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"பரவாயில்லை விடு..." என்றவன் அவளை உறங்க அழைத்துச் சென்றான்...

அவனது மனதிலோ உணர்வு பிரவாகங்கள் சூறாவளி காற்றாய் சுழன்றடித்துத் தாக்கி கொண்டிருந்தது...

கட்டிலில் மனைவியை அமர்த்தித் தானும் அமர்ந்தவன், "நாளைக்குக் காலையில் சென்னைக்குக் கிளம்பணும்... தயாராயிரு..." என்றான் மொட்டையாக...

அதில் அவள் விதிர்த்து போனவளாய், "ம்ஹூம் நான் போக மாட்டேன்..." என்று பிடிவாதமாய் மறுத்தாள்...

"ஹேய் பேபி... நான் உன் மேல் கோபப்பட்டு இதைச் சொல்லலை... இங்கே என்னால் உன்னைச் சரியா பார்த்துக்க முடியலையோன்னு கவலையா இருக்கு... உனக்கே தெரியும் என் வேலைகள் அப்படின்னு... அங்கேன்னா வீட்டில் எல்லோரும் இருக்காங்க... உன்னைக் கண்ணும் கருத்துமா பார்த்துப்பாங்க..."

கணவன் தன் மீது கொண்ட அக்கறையில் தான் அப்படிச் சொல்கிறான் என்று எண்ணி நிம்மதி பெருமூச்சு விட்டாள் சுபிக்ஷா...

"ஆமாம்... நீங்க தான் அவங்களை மெச்சிக்கணும்..." என்று நொடித்துக் கொண்ட மனையாளின் அழகு அவனைப் பெரிதும் கவர்ந்தது...

"என் பேபிக்கு எதுக்கு இத்தனை கோபம் எல்லோர் மீதும்..." அவளது கையைப் பிடித்துக் கொண்டு அதை மென்மையாக வருடியபடி கேட்டான்...

அதில் மனம் உருகியவள், "அன்னைக்கு அப்படித்தான் நீங்க என்னை விட்டுட்டு போனப்போ, நான் அழுதுக்கிட்டு இருக்கேன் யாருமே என்னைக் கண்டுக்கலை... உங்க மாமனாரு தன் பொண்ணைப் பத்தி கவலைப்படாம அவரு பொண்டாட்டியை பத்தி மட்டும் கவலைப்படுறாரு... என்னோட மாமியாருக்கு எப்போதும் அவங்களோட புருசன் மட்டும் தான் கண்ணுக்கு தெரியும்... உங்க தங்கச்சி

கேட்கவே வேண்டாம்... விட்டா என் அண்ணனை தூக்கி இடுப்பில் வச்சுக்குவாங்க... இது எல்லாத்தையும் விட அந்தக் கிழடு இரண்டும் இந்த வயசிலும் என் சாக்கை வச்சு ரொமான்ஸ் ஃபிலிம் ஓட்டுதுங்க... அதுவும் என் கண்ணு முன்னாடி... எனக்கு எப்படி இருந்திருக்கும்...?"

ஆற்றாமையில் மூக்கை விடைத்துக் கொண்டு நீட்டி முழக்கிய மனைவியின் பாவனையில் அவனுக்குச் சிரிப்பு வந்த போதும் அவளது உள்மனது எந்தளவுக்குத் தனிமையில் தவித்திருக்கும் என்பதை உணர்ந்தவனாய் அவனது கைப்பிடி இறுகியது...

"இப்படிப்பட்டவங்க என்னை எங்கே கவனிக்கப் போறாங்க... ம்ஹூம்..." என்று உதட்டை பிதுக்கியவள்,

"நான் சென்னைக்குப் போக மாட்டேன்..." என்று முடிவாய் மறுத்தாள் தன் திட்டத்தைக் கூட மறந்து...

அவள் தலையைச் சிலுப்பிய சிலுப்பில் முன்னுச்சி முடி தானாக முன்னால் வந்து அவளது முகத்தில் விழுந்தது... அதை எடுத்து அவளது காதோரமாகப் பரிவுடன் சுருட்டி விட்டவன்,

"உன்னைச் சரியா பார்த்துக்க முடியாதோன்னு எனக்குப் பயமாயிருக்கு பேபி..."

அவனின் மனத்தவிப்பை அவளது காதை வருடி கொண்டிருந்த அவனது கை விரல்களின் மெல்லிய நடுக்கத்தில் அவள் உணர்ந்தாள்...

"நீங்க இல்லாம என்னால் இருக்க முடியாது..." என்று அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டு மறுத்தாள் அவள்...

'விலகி கொள்கிறேன்' என்று சொன்னவளால் அந்தக் கணம் அதைச் செயலாற்ற முடியவில்லை... இதில் மற்ற

திட்டங்களை அவள் எப்படிச் செயலாற்ற போகிறாள்... அது அவளுக்கே தெரியவில்லை...

"நீ மட்டும் தனியா போகப் போறேன்னு யார் சொன்னது...? நானும் தான் உன் கூட வர்றேன்..."

'விலகி போய்விடு' என்று கூறியவனால் ஒரு நொடி கூட அவளைப் பிரிந்திருக்க முடியும் என்று தோணவில்லை... அதனால் தான் அவன் இந்த முடிவை எடுத்திருந்தான்...

கணவன் சொன்னதைக் கேட்டு விழிகள் மின்ன அவனை ஏறிட்டு பார்த்தவள், "தேங்க்ஸ்..." என்று உரைத்தவள் பின் எம்பி அவனது கன்னத்தில் அழுத்தமாய்த் தனது இதழை பதித்தாள்...

அதில் மனம் நெகிழ்ந்து போனவன் அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான்... அதன் பின்னும் அவன் தனது அணைப்பை விலக்கி கொள்ளவில்லை... அவளும் அவனை விட்டு விலக விரும்பவில்லை...

கணவனது அணைப்பின் சுகமும், தாய்மையின் அசதியும் சேர்த்து அவளை ஆழ்ந்த நித்திரையில் ஆழ்த்தியது...

தன் நெஞ்சில் சாய்ந்து சுகமாய் உறங்கும் மனைவியைப் பார்த்து கொண்டிருந்தவனுக்குத் தூக்கம் தூரப் போனது... அவள் கேட்ட கேள்விகளே அவன் மனதில் நிலையாய் நின்று அவனைப் பெரிதும் வதைத்துக் கொன்றது...

அவள் கூறுவது முற்றிலும் உண்மை தானே... நண்பனின் காதலியை காப்பாற்றி அவனிடத்தில் ஒப்படைப்பதற்காக அவன் எந்தளவுக்குப் பாடுபட்டான் என்பது அவனுக்குத் தானே தெரியும்... அப்படிப்பட்டவன் இன்று ஏன் மனைவியைப் பாதுகாப்பதில் கோட்டை விட்டு விட்டான்...?

ரிஷி அளவிற்கு அபிமன்யு கொடுமைக்காரன் இல்லை என்பதினாலா...?

அன்னையின் நிலை மனைவிக்கு வந்துவிடக் கூடாது என்று எண்ணியவன், தன் மனைவியை இறுதி வரை கைவிடக் கூடாது என்று உறுதியாய் நினைத்தவன், இதோ இன்று அவள் மீது கொண்ட அக்கறையினால் அவனது கொள்கையை அவனே உடைத்து விட்டானே...

இப்போது அன்னையின் இடத்தில் மனைவியை வைத்து பார்த்தவனுக்கு ஒன்று மட்டும் நன்கு புரிந்தது... அதில் தனக்கு எந்த இடம்...? அபிமன்யுவிற்கு எந்த இடம்...? என்று... அதை நினைத்து மனம் கனத்துப் போனது அவனுக்கு...

'நான் அந்தக் கார்த்திக் அளவிற்குக் கெட்டவனா...? இல்லை இல்லை... நான் கெட்டவனில்லை... எனக்கு என் மனைவியை ரொம்ப ரொம்பப் பிடிக்கும்... அவளின் சந்தோசத்திற்காகத் தான் நான் இதைச் செய்ய நினைக்கிறேன்...' கூக்குரலிட்டு அலறியது அவனது நேசம் கொண்ட நெஞ்சம்...

அவனது கைகளோ மனையாளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டது யாருக்கும் அவளை விட்டு கொடுக்க மாட்டேன் என்பது போல்... கைகள் உணர்ந்த விசயத்தை அவனது மனம் ஏன் தான் உணர்ந்து கொள்ளவில்லையோ...?

மறுநாள் அவர்கள் இருவரும் சென்னை கிளம்பினர்... ராம்குமார் அவர்களுடன் கிளம்பி வர மறுத்துவிட்டார்... தனிமையில் வாழ்ந்து பழகிவிட்ட காரணத்தால் அதுவே அவருக்குப் பழக்கமாகி விட்டது போலும்...

"சுபியோட டெலிவரி வரை தான் தாத்தா... அதன் பிறகு நான் இங்கே வந்திருவேன்..." என்று சொன்ன கணவனைக் கண்டு சுபிக்ஷா வயிற்றில் புளி கரைத்தது...

பேரன் மனைவி மேலுள்ள அக்கறையில் தொழிலை கவனிக்க முடியாமல் திண்டாடுவதை ஏற்கெனவே

உணர்ந்து இருந்த ராம்குமார் சந்தோசமாய் அவர்களை வழியனுப்பி வைத்தார்...

"என்ன யோசனை...?" காரில் வரும் போது ஜீவா கேட்க...

மனதின் கலக்கத்தைக் கூறி இப்போது இருக்கும் இணக்கத்தைக் கலைக்க அவளுக்கு விருப்பமில்லை...

"அங்கே வந்துட்டா இங்கே உள்ள உங்க வேலைகள்...?"

அதைக் கேட்டு சிரித்தவன், "ஏற்கெனவே சென்னைக்குக் கிளம்புவதற்காகச் சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தது தான்... இந்த ஒரு வார காலமாகத் தான் எதையும் யோசிக்க முடியாம இருந்தேன்... ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை... சமாளிச்சிக்கலாம்..."

அவன் கூறியதை கேட்டு மீண்டும் கலக்கம் எழுந்தது அவளுள்...

சென்னையில் நிரந்தரமாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்தவன் இப்போது தாத்தாவிடம் இப்படிக் கூறியிருக்கிறான் என்றால்...? அதற்குக் காரணம் அவர்களிடையே நிகழ்ந்த இந்த ஒரு வார பிரிவு தானே... இந்தப் பிரிவு நிரந்தரமாகி விடுமோ...? ஏனோ அதை நினைத்து மனம் கனத்துப் போனது அவளுக்கு...

"ரொம்ப யோசிக்காதே பேபி... இப்போ இந்த நொடி சந்தோசமா இருக்கிறோமா... அதை மட்டும் யோசி..." என்றவன் அவளது தோளில் கை போட்டு ஆதரவாக அணைத்துக் கொண்டான்... அதை அவளுக்குச் சொன்னானா இல்லை தனக்குத் தானே சொல்லி கொண்டானோ யாருக்கு தெரியும்...?

அந்த ஆறுதல் அவளுக்கும் தேவையாய் இருந்தது போலும் இன்னமும் அதிகமாய் அவனுடன் ஒன்றி கொண்டாள்...

திருமணமாகி மனைவியை அழைத்து வருவதற்கே அந்தத் தடபுடல் செய்தவன் ஜீவா... இப்போது மனைவியோடு, தன் குழந்தையையும் சேர்த்து பாதுகாக்க வேண்டியிருப்பதால் ஒரு மலரை போல் அவளைப் பாதுகாத்து சென்னைக்கு அழைத்துச் சென்றான்...

"இதெல்லாம் கொஞ்சம் ஓவர் தான் மாமா..." மனைவி கூட அவன் பண்ணிய அலம்பல்களைத் தாங்க முடியாது அங்கலாய்த்து கொண்டாள்...

"இது கொஞ்சம் தான்டி என் மக்கு மனைவியே... இன்னும் நிறைய இருக்கு... இந்த ஜீவாவோட குழந்தைன்னா சும்மாவா..." அவனது வார்த்தையில் அவளது முகம் கூம்பி போனது...

"என்னோட குழந்தையைச் சுமந்துக்கிட்டு இருக்கும் அவங்க அம்மாவுக்கும் சேர்த்து தான் இந்தக் கவனிப்பு..." என்று அடுத்த நொடி அவன் அவளை அணைத்துக் கொள்ள...

'சுபி உனக்கும் சேர்த்து தான் என்பதை எப்படிச் சுத்தி வளைச்சு சொல்றாங்க பாரு... ஆனாலும் மாமோய் நீங்க இவ்வளவு அறிவு ஜீவியா இருக்கக் கூடாது...' மனதுக்குள் கணவனைச் சிலாகித்துப் பழிப்பு காட்டினாள் அவள்...

வீட்டிற்கு வந்தவர்களுக்கு அனைவரும் ஆரத்தி கரைத்து வரவேற்பு கொடுக்க, ஜீவா முகம் கொள்ளா புன்னகையுடன் மனைவியை அணைத்தபடி வீட்டினுள் வந்தான்...

'ம்... நான் என்னமோ மாமா மனசை ஜெயிச்சு கூட்டிட்டு வந்த மாதிரி இவங்க எல்லாம் இப்படிப் பில்டப் கொடுக்கிறாங்களே... என்னோட உண்மை நிலை தெரிஞ்சா இவங்களோட முகம் எப்படி மாறி போகும்...'

மனதுக்குள் கிண்டலாய் நினைத்தாலும் சுபிக்ஷா மனதில் பெருமளவு கவலை வந்தமர்ந்தது...

சந்தோசத்துடன் உள்ளே வந்த ஜீவா அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த அபிமன்யுவை கண்டதும் அவனது சந்தோசம் எல்லாம் அப்படியே வடிய திகைத்து போனவனின் கை தானாக இறங்கியது மனைவியின் தோள் மீதிருந்து... ஆனாலும் சுதாரித்துக் கொண்டு மனைவியை இறுக பிடித்துக் கொண்டான்...

அவனது முகம் இறுகி போனது கல்லாய்... அவனது முக மாறுதலை கவனித்துக் கொண்டிருந்த சுபிக்ஷாவிற்குப் பெரும் கொண்டாட்டமாக இருந்தது...

'மாமோய் உங்களுக்குக் கற்பூர புத்தி தான்... கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி அறிவில்லைன்னு சொன்னதுக்குச் சாரி...'

இனி கணவன் அவனது மனதினை வெகுவிரைவில் புரிந்து கொள்வான் என்ற நம்பிக்கை எழுந்தது அவளுக்கு...

"வாங்க... நல்லாயிருக்கீங்களா...?" என்று சுபிக்ஷா அபிமன்யுவிடம் நலம் விசாரிக்க...

'உன் புருசன் பார்க்கிற பார்வையில் நான் எங்கே நல்லாயிருக்கிறது...?' மனதுக்குள் கூறிக் கொண்டே வெளியில்,

"நல்லாயிருக்கேன் சுபி..." என்று இருவருக்கும் பொதுவாய் சிரித்து வைத்தான் அபிமன்யு...

அதைக் கண்டு ஜீவாவின் கோபத்தின் அளவு கூடியதை சொல்லவே வேண்டாம்... அவனின் கோபத்தை அவனது மனையாள் பொருட்படுத்தினால் தானே... அவளோ அபிமன்யுவிடம் சுவாரஸ்யமாகப் பேச ஆரம்பித்து விட்டாள்... அதுவும் சங்கீதத்தைப் பற்றி...

வேறு எதுவாக இருந்தாலும் அவன் இடையில் புகுந்து அபிமன்யுவை நன்றாகக் கலாய்த்து இருப்பான்... ஆனால் இந்தச் சங்கீதம் அவனுக்குச் சுட்டுப் போட்டாலும் வராது... இதில் அவன் எங்கே போய்க் கலாய்ப்பது...?

அவனுக்கு வந்த எரிச்சலில் தலைவலியே வந்துவிட்டது... கோபமாய் எழுந்தவன் மனைவியிடத்தில்,

"எனக்குத் தலைவலிக்குது பேபி... கொஞ்சம் காபி போட்டு எடுத்துட்டு வா... நான் ரூமுக்கு போகிறேன்..." என்க...

கணவனை ஏறிட்டு பார்த்த சுபிக்ஷாவிற்கு அவனைக் கண்டு பாவமாக இருந்தது... தாய் மற்ற குழந்தைகளிடம் அன்பு காட்டினால் கோபம் கொள்ளும் சிறு குழந்தையைப் போல் அவளை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது அந்த வளர்ந்த முரட்டு குழந்தை...

அன்பிற்காக அவன் ஏங்கியதை அவள் உறங்கும் போது கூறிய கணவனது வார்த்தைகள் நியாபகத்தில் வந்து அவளுக்கு வேதனையை அளித்தது... இது ஆரம்பம் தான்... இனியும் நிறைய வேதனைகளைச் சந்திக்க வேண்டி வரும் என்று எண்ணியவளாய் மனதை கட்டுப்படுத்திக் கொண்டு,

"அம்மா... மாமாவுக்குக் காபி போட்டு கொடுங்க..." என்று தனது அன்னையிடத்தில் உரைத்தவள் மீண்டும் அபிமன்யுவிடம் பேச ஆரம்பித்தாள்...

அதைக் கண்டு ஜீவாவின் எரிச்சல் அதிகரிக்க இயலாத கோபத்தில் வலதுகாலை தரையில் ஓங்கி உதைத்தவன் விறுவிறுவெனத் தனது அறையை நோக்கி சென்றான்... கணவன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த சுபிக்ஷாவை கண்டு அபிமன்யு,

"இது தேவை தானா சுபி...? அவனைப் பார்த்தால் ரொம்பப் பாவமாயிருக்கு..." என்றவனிடம் பேச்சை மாற்ற வேண்டி,

"உங்களுக்கு எப்படி நாங்க வர்றது தெரியும்...?"

"நீ சொல்லைலன்னா எனக்குத் தெரியாதா என்ன...?" பெருமையாய் சட்டைக் காலரை தூக்கி விட்டு கொண்டவன்,

"நடிக்கிறதுன்னு முடிவு பண்ணிய பிறகு போடுற வேசத்தை ஒழுங்கா போடணும் இல்லையா...? பெரியம்மா சொன்னதும் அடுத்த நொடி இங்கே வந்துட்டேன்..." என்று சிரித்தபடி கூறியவனைக் கண்டு அவளது குற்றவுணர்ச்சி அதிகரித்தது...

"உங்களுக்கு எங்க மேல் கோபம் வரலையா...?"

அவனுக்கு வருத்தம் இருக்கிறது தான்... அதற்காகக் கோபம் கொண்டு பழிவாங்க இது ஒன்றும் திரைப்படமோ, கதையோ இல்லை அல்லவா...

"ச்சேச்சே... அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை... ஜீவா யாரு என்னோட அண்ணா தானே..." பெருந்தன்மையாய் விட்டுக் கொடுப்பது போல் சொன்னாலும் அவனது மனதில் காதல் தோல்வியின் வலி இருக்கத்தான் செய்தது...

"நீங்க சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோங்க..." அவனது முகத்தைப் பார்க்க சங்கடப்பட்டுக் கைவிரல்களை ஆராய்ந்தவாறு அவள் கூற...

"நிச்சயம் பண்ணிக்குவேன்... பின்னே உன்னையவே நினைச்சிக்கிட்டு மீதி வாழ்க்கையைக் கழிக்க நான் என்ன ஜீவாவா...?"

தன் நிலையைக் கம்பீரமாக அவன் எடுத்துரைத்த போதும் அந்த நிலையிலும் அவன் ஜீவாவை விட்டு கொடுக்கவில்லை...

அதில் திடுக்கிட்டு நிமிர்ந்தவள் பின் புரிந்தவளாய் அவனைப் பார்த்து புன்னகைத்தவள், "நீங்க பேசிக்கிட்டு இருங்க... நான் அவங்களுக்குக் காபி கொடுத்துட்டு வர்றேன்..."

கணவன் மீது வருத்தம் இருந்த போதும் அவனுக்காகத் துடித்துக் கொண்டு ஓடும் அவளது அன்பை பார்த்தவாறு அபிமன்யு அமர்ந்திருந்தான்... இந்த அன்பிற்காகத் தானே அவன் அவளைத் திருமணம் செய்ய நினைத்தது...

'ச்சு... என்ன இது வேண்டாத நினைவு...? சுபி இப்போது என்னோட அண்ணி...' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டவனுக்கு 'அண்ணி' என்கிற அந்தச் சொற்பதம் அவன் மனதிலிருந்த அவள் மீதான சிறு காதலையும் முற்றிலும் ஒழித்துக் கட்டி விட்டது...

அண்ணியும் அன்னையைப் போன்றவள் அல்லவா... அவளைத் தவறாக நினைப்பது பாவமல்லவா... அதை அவன் நன்கு உணர்ந்து கொண்டான் அந்தக் கணம்...

அன்னை கொடுத்த காபியை வேண்டாம் என்று மறுத்தவள், "இதை நீங்க உங்க புருசனுக்குப் போய்க் கொடுங்க... நான் என் புருசனுக்கு வேற காபி போட்டுக்கிறேன்..." என்ற மகளை அதிசயமாகப் பார்த்த ரம்யா,

"உனக்கு ரொம்பத்தான் வாய் கூடியிருச்சு சுபி..." என்று புலம்ப...

"எல்லாம் என் மாமா கொடுத்த தைரியம் தான்..." இல்லாத காலரை தூக்கி விட்டுக் கொள்வது போல் அவள் பாவனைச் செய்ய...

மகளின் முகத்தில் தெரிந்த சந்தோசத்தைக் கண்டு மனம் பூரித்த ரம்யா மகளை நெட்டி முறித்து, "என் செல்லம்... இப்போ தான்டி ரொம்பச் சந்தோசமாயிருக்கு... மாப்பிள்ளை கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும்

அட்ஜஸ்ட் பண்ணிக்கோ..." அதில் அவளுக்கு அப்படியொரு கோபம் வந்தது...

"உங்க புருசன் மாதிரி எல்லாம் அவர் ஒண்ணும் குடிக்க மாட்டார்... சிகரெட் பிடிக்க மாட்டார்... அவரையே நீங்க அட்ஜஸ்ட் பண்ணி வாழும் போது... என் மாமா எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாத சொக்கத் தங்கமாக்கும்... அவங்களை நீங்க எப்படி 'அப்படி இப்படி'ன்னு ஒரு மாதிரியா சொல்லலாம்..." என்று சண்டைக்கு வந்தாள் மகள் அன்னையிடம்...

"ஏம்மா சுபி... உனக்கு உன் புருசன் நல்லவனா இருந்தா அது உன்னோட வச்சுக்கோ... அதுக்காக என் குடும்பத்தில் ஏன் தாயி இப்படிக் கும்மி அடிக்கிற...?”

அந்நேரம் அங்கு வந்த செல்வா மகளிடம் கிண்டலடிக்க...

"நீங்க ஒழுங்கா இருந்தா நேத்து முளைச்ச காளான் எல்லாம் என்னை இப்படிப் பேசுமா...?" ரம்யா மூக்கை சிந்த... அதில் பதறி போனவனாய் செல்வா,

"ரம்ஸ்... அப்படி எல்லாம் இல்லைடா..." என்று மனைவியைத் தாஜா செய்ய ஆரம்பிக்க...

அதைக் கண்டு சிரித்தபடி காபியை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள் சுபிக்ஷா...

அறைக்குள் நுழைந்ததும் அங்குக் கட்டிலில் கண்மூடி சாய்ந்திருந்த கணவனைக் கண்டதும் அவளது சிரிப்பு மறைந்தது... எதுவும் கோபமாய்ப் பேசிவிடுவானோ என்ற பயத்துடன் அவனருகில் சென்றாள்...

"காபி..." என்று அவள் சொன்னதும் கண் திறந்து பார்த்தவன்,

"வேண்டாம்..." என்றான் ஒற்றைச் சொல்லாக...

மாமியார் கையால் காபி கலந்து கொடுப்பதற்காகவா அவன் மனைவியிடத்தில் கேட்டது...

"நான் போட்ட காபியா இருந்தாலும் வேண்டாமா..."

அவளது வார்த்தையில் கண்கள் மின்ன எழுந்தமர்ந்தவன், "வேணும்... வேணும்..." என்றபடி ஆர்வத்துடன் ஒரு கையில் காபி கோப்பையை வாங்கியவன், மறுகையால் ஆசையுடன் மனைவியை இழுத்து தன்னுடன் அணைத்துக் கொண்டான்...

மனதில் எழுந்த சந்தோசத்தில் அவனுக்குக் காபி கூட மிகவும் ருசியாக இருந்தது...

"தேங்க்ஸ் பேபி..." சந்தோசத்துடன் அவளது கன்னத்தில் முத்தமிட்டு சொன்னவனின் முகத்தை ஆழ்ந்து பார்த்து கொண்டிருந்தாள் சுபிக்ஷா...

சிறிது நேரத்திற்கு முன் கணவன் முகத்தில் இருந்த கோபம் என்ன... இப்போது இருக்கும் சந்தோசம் என்ன...? இந்த இரண்டிற்கும் காரணம் அவன் தன் மேல் வைத்திருக்கும் காதல் தான் என்பதை அவள் உணரத்தான் செய்தாள்...

அடுத்த நொடி அவனை இறுக அணைத்து கொண்டாள்... அவனைப் படுத்தி எடுக்க வேண்டும் என்று அவள் போட்ட திட்டம் தான் என்ன...? இப்போது அது எதையும் செயல்படுத்த முடியாமல் கணவனது தவிப்பை கண்டு தான் தவிப்பது என்ன...?

'என்னைப் புரிந்து கொள்ளுங்களேன் மாமா...' மனதுக்குள் வருத்தமாய் முனங்கினாள் அவள்...

அவளது அணைப்பில் அடங்கியவன், "பேபி... உண்மையில் தலைவலிக்குது... கொஞ்சம் தலை பிடிச்சு விடுறியா...?"

அவன் கேட்டு அவளால் எதையும் மறுக்க முடியாதே...

"ம்..." என்றவள் மடியில் படுத்த கணவனுக்குத் தலையைப் பிடித்துவிட ஆரம்பித்தாள் இதமாக...

அந்த இதத்தில் தன்னை மறந்து இருந்தவன் மனதில் மனைவியை யாருக்கும் விட்டு கொடுக்க முடியாது என்கிற எண்ணம் வலு பெறத் துவங்கியது...

கணவன் கண்ணயர்ந்ததும் மெல்ல அறையை விட்டு வெளியில் வந்தவள் நேரே தனது மாமா, அத்தையிடம் தான் சென்றாள்...

"அத்தை... நீங்க கொஞ்சமும் உங்க மகனை புரிஞ்சிக்கலை..." என்று ருத்ரஸ்ரீயிடம் கூறியவள், ஜெகனிடம்,

"மாமா நீங்களும் தான்..."

அவள் கூறியதை கேட்டு அவர்கள் இருவரும் மட்டுமல்ல, கூடியிருந்த மற்றவர்களும் திகைத்து தான் போயினர்...

"ஏன்ம்மா அப்படிச் சொல்ற...?" ஜெகனின் குரல் பரிதவிப்புடன் ஒலித்தது...

தன்னிடம் ஜீவா கூறியதை எல்லாம் சொன்னவள், "அன்புக்கு ஏங்கினவங்களை நீங்க எல்லாம் சேர்ந்து இப்படி ஒதுக்கி வச்சுட்டீங்களே..." என்று வருத்தமான குரலில் அவள் கேட்க...

அதைக் கேட்டு ஜெகனின் தலை தாழ்ந்தது... அருகில் அமர்ந்திருந்த தனது தந்தையிடம், "உன்னை மாதிரி நான் ஒரு நல்ல அப்பாவா நடந்துக்கலை நைனா..." வேதனைக் குரலில் கூறியவன் அந்த வேதனை தாங்க முடியாது தந்தையின் தோளில் சாய்ந்தான்... இன்னமும் அவனுக்குத் தோள் சாயத் தந்தை தேவைப்பட்டார்...

"கண்ணப்பா... அப்படி எல்லாம் இல்லை... ஜீவாவும் உன் கிட்ட மனசு விட்டு பேசியிருக்கணும் இல்லையா... அவன் பக்கமும் தப்பிருக்கு..." என்று காளிமுத்து மகனை சமாதானப்படுத்தினார்...

அவரின் கண்ணப்பா வேதனைப்படுவதைக் கண்டு அவருக்கும் வேதனையாய் இருந்தது...

"அம்மாச்சி... இப்போ எதுக்கு உன் புருசன் இப்படி ஒத்து ஊதுறாரு... உண்மையை ஒத்துக்கச் சொல்லு..."

பேத்தி பாட்டியின் காதை கடிக்க... அவளை அதிசயமாய்ப் பார்த்த அகிலாண்டம்,

"ஆனாலும் உனக்கு ரொம்பத்தான் கொழுப்பு கூடி போச்சு..."

"க்கும்... உன் புருசன் போட்ட சோத்துல கொழுப்பே இல்லை... ஆனா பாரு என் புருசன் போட்ட சோத்துல அத்தனை கொழுப்பு இருந்துச்சு... அதான் கொழுப்பு கூடி போச்சு..." பாட்டியை திருப்பிக் கிண்டலடித்தாள் சுபிக்ஷா...

சந்தோசமாய்ச் சொன்ன பேத்தியை கண்டு அவருக்கும் சந்தோசமாய் இருந்தது...

"இது தான்டி எனக்கு வேணும்... ராசாவும் நீயும் சந்தோசமா இருந்தா அதுவே போதும்..."

அன்றைய பொழுது இனிமையாய்க் கழிந்தது இருவருக்கும்... இரவு வந்ததும் தனது கைகளில் அடைக்கலமான மனைவியை அணைத்துக் கொண்டு உறங்க வைத்த ஜீவாவின் மனதில் ஏதேதோ எண்ணங்கள்...

மனைவியின் மனதிற்காக அவளை விட்டு கொடுக்க அவன் முன் வந்த போதும் அதைச் செயல்படுத்த அவனால்

முடியாது என்பதை இங்கு வந்த முதல் நாளிலேயே அவன் தெரிந்து கொண்டான்...

இன்று காலையில் அபிமன்யுவை பார்த்ததும் அவனது மனதில் ஒரு வலி எழுந்ததை அவன் உணர்ந்தே இருந்தான்...

'இந்த வலியை இதற்கு முன் எங்கேயோ அனுபவித்து இருக்கிறேனே...' என்று யோசித்தவனுக்கு அப்போது தான் அந்த நினைவு பளிச்சிட்டது...

'நாம் விரும்பும் பெண்ணின் மனதில் வேறொருவன் இருப்பது தெரிந்தும் அவள் தான் வேண்டும்ன்னு அடம்பிடிக்கும் மனதின் வலி இது ஜீவா...' அன்று யஷ்வந்த் கூறிய வார்த்தைகள் அவனது காதில் இப்போதும் ஒலித்தது...

அன்று அவனும் அந்த வலியை உணர்ந்தானே... அடுத்த நொடி மனைவியைத் தேடி ஓடியவன் அவளது மடியில் தன்னகங்காரத்தை மறந்து சரணடைந்தானே...

'பேபி... என்னை உனக்குப் பிடிக்குமா...?' தான் தவிப்புடன் மனைவியிடத்தில் கேட்டது அவனுக்கு இன்னமும் நியாபகத்தில் இருந்தது...

அவள் தான் வேண்டும் என்று அவள் திருமணத்தை நிறுத்தி அவளது கழுத்தில் தாலி கட்டிய அந்த அதிரடியான ஜீவா இன்று எங்கே போனான்...?

அப்போது உணர்ந்த வலியை இப்போதும் உணர்ந்தும் செயலாற்ற முடியாமல் அமைதியாய் கையைக் கட்டி கொண்டு கலங்கி நிற்கும் இந்த ஜீவாவை அவனே வெறுத்தான் மனதார...

அன்றும் அவளுக்காகத் தான் அப்படிச் செய்தான்... இன்றும் அவளுக்காகத் தான் ஒதுங்கி நிற்க முடிவு

செய்திருக்கிறான்... ஆனால் அது முடியுமா...? அது தான் இங்கு எழும் மிகப் பெரிய கேள்வி...

மனைவியின் பூ முகத்தைப் பார்த்தவன் மனதில் அவளை என்றுமே விட்டு கொடுக்க முடியாது என்ற எண்ணம் இப்போது உறுதியாய் வலுப்பெற்றது...

'அவளது முழு அன்பும் எனக்கு மட்டுமே வேண்டும்...' என்று அவனது மனம் சுயநலமாய்ப் பேராசை கொண்டது...

பொறாமை, சுயநலம் இதில்லா காதல் உலகத்தில் இல்லை என்பது அந்த அறிவு ஜீவிக்கு அந்நேரம் தெரியவில்லை...

அவனது கை அவளது தலையை வருடி கொடுத்தது மென்மையாக...

"எனக்குக் காதல் எப்படி இருக்கும்ன்னு தெரியாது... ஆனால் உன் மனசு கோணாம நடந்துக்க எனக்குத் தெரியும்... உன்னை என் கண்ணுக்குள் வச்சு பார்த்துக்க எனக்குத் தெரியும்... முடிஞ்சளவு உனக்குப் பிடிச்ச மாதிரி நடந்துக்க முயற்சிக்கிறேன்... ப்ளீஸ் பேபி... நீ என்னை விட்டு போயிடாதே..."

கலங்கிய குரலில் சொன்னவனுக்கு அப்போது தான் அது உறைத்தது... அவள் மீண்டும் தன்னைத் தேடி வந்தது தனக்காகத் தான்... தான் தான் அவளைப் புரிந்து கொள்ளவில்லை என்று... இனி அவளைப் புரிந்து கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று உறுதியாய் எண்ணி கொண்டான்...

'அதற்கு முதலில் அந்த அபியை ஓரம் கட்ட வேண்டும்...' அபிமன்யுவை நினைத்து அவனது மனதில் எரிச்சல் வந்தது...

மறுநாள் காலையில் வழக்கம் போல் சுபிக்ஷா எழுந்து குளித்துவிட்டுப் பூஜையறை சென்று விளக்கேற்றி வைத்து

விட்டுச் சுப்ரபாதம் பாடியபடி கடவுளிடம் ஆழ்ந்து போனாள்... மனதுக்குள் தனது வாழ்வு சீராக வேண்டும் என்ற வேண்டுதல் இடைவிடாது ஓடி கொண்டிருந்தது...

கடவுள் துதி பாடி வணங்கி எழுந்தவள் தன் முன் நின்றிருந்த கணவனைக் கண்டு விழிகளை அகல திறந்தாள் ஆச்சிரியத்தில்... பின்னே இந்த அதிகாலை வேளையில் குளித்து முடித்துப் பக்தி பழம் போல் கணவன் அங்கு வந்து நின்றால் அவள் வேறு என்ன தான் நினைப்பது...

"இங்கே வச்சு இப்படிப் பார்க்கிறியே பேபி... இதே இது நம்ம ரூம்மா இருந்திருந்தால்...?" பெருமூச்சு விட்டபடி கூறியவனைக் கண்டு அவளது முகத்தில் வெட்கம் தோன்றியது...

அவளது வெட்கத்தை ரசித்தவனாய் தானே அவளது கைப்பிடித்துக் கற்பூரத்தட்டில் இருந்த திருநீற்றை அவளது விரல்களால் எடுத்து தனது நெற்றியில் பூசி கொண்டான் அவன்... அவனது அந்தச் செயலில் மேலும் நாணமுற்றவள் கற்பூரத் தட்டை கீழே வைத்து விட்டு பூஜையறையை விட்டு வெளியில் ஓடி வந்தாள்...

"எங்கே ஓடுற...?" என்றபடி அவளின் பின்னே சென்றான் ஜீவா...

நேரே சமையலறைக்குச் சென்று அவள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள, 'அப்படி எல்லாம் உன்னை எளிதில் விட்டு விடுவேனா' என்பது போல் அவன் அவள் பின்னே வந்து நின்றான்... கணவனைக் கண்டு கொள்ளாது பாலை கிண்ணத்தில் ஊற்றி அடுப்பில் சுட வைத்தாள் அவள்...

"என்ன செய்ற...?" என்றபடி அவள் பின்னால் இருந்து எட்டிப்பார்த்தவனின் மனம் அவளது கூந்தலில்

சொருகியிருந்த ஒற்றை அடுக்கு மல்லி பூவின் வாசத்தில் மயங்கியது...

"என்ன ஷாம்பூ யூஸ் பண்ற...?"

மெல்ல அவனது நாசி அவளது தலையில் இருந்து கீழே இறங்கியது... அதில் மனம் கிறங்க, உடல் நடுங்க அவள் நின்றிருந்தாள் சமையல் மேடையைப் பற்றிக்கோலாய் பிடித்தபடி...

அவளது கழுத்து வளைவில் முகம் பதித்தவன் ஆழ்ந்து சுவாசித்தபடி, "என்ன சோப் யூஸ் பண்ற பேபி...? வாசம் ஆளை தூக்குது..."

அவனது செயலில் முற்றிலும் தன்னிலை மறந்து உணர்ச்சி பெருக்கில் அவன் மீதே சாய்ந்து விட்டாள் அவள்... தன் மீது சாய்ந்த மனையாளை அள்ளி எடுத்து தன்னுள் பொத்தி வைத்து கொண்டவன் கண்ணில் பால் பொங்குவது தெரிய,

"பேபி... பால் பொங்குது..." என்று அவன் அலற...

அதில் மயக்கம் தெளிந்தவள் வேகமாய் அடுப்பை அணைத்தாள்...

"எங்கே வந்து என்ன செஞ்சிக்கிட்டு இருக்கீங்க...?" போலியாகக் கணவனை முறைத்தவள்,

"இரண்டு மாசமா தெரியலையா... நான் என்ன ஷாம்பூ, சோப் யூஸ் பண்றேன்னு... இப்போ என்ன திடீர்ன்னு இந்த ஆராய்ச்சி..."

"அப்போ தோணாத விசயம் எல்லாம் இப்போ தோணுதே பேபி..." நெஞ்சை தடவியபடி சொன்னவன்,

"எல்லாமே புதுசா தெரியுது... நீயும் புதுசா தெரியற..." என்ற கணவனின் வசிய குரலில் திடுக்கிட்டு அவனை ஏறிட்டு பார்த்தவள் அவனது கண்ணில் தெரிந்த அளவில்லாத காதலில் அப்படியே பிரமித்துப் போய் நின்றாள்...

"நாம ஹனிமூன் போகலாமா பேபி..."

அவன் அப்படிக் கேட்டதும் அவளுக்குச் சிரிப்பு வர அதை மறைத்துக் கொண்டு, "இன்னும் இரண்டு பிள்ளைங்க வந்ததுக்கு அப்புறம் போகலாமே..." என்றாள் கிண்டலாய்...

"பார்த்தியா நீயும் என்னைக் கிண்டல் பண்ற..."

"உண்மையை உரக்க சொன்னா உங்க ஊருல கிண்டல் பண்றதா...?"

"ம்... பண்ணிக்கோ... பண்ணிக்கோ... உனக்கு இல்லாத உரிமையா...?" என்று தன்னை அவளிடத்தில் விட்டு கொடுத்தவன் காபி கலக்கும் அவளின் பின்னால் இருந்து அவளை அணைத்தபடி அவளது கைகளைத் தான் பிடித்துக் கொண்டு அவளுடன் சேர்ந்து அவனும் காபி கலக்கினான்...

"ஐயோ மாமா... இப்படி எல்லாம் பண்ணினீங்கன்னா உங்களுக்குக் காபி கிடையாது..." என்று அவள் சிணுங்க...

"காபி எல்லாம் எதுக்குப் பேபி... உன்னோட..." என்றவன் வார்த்தையாய்க் கூறாமல் அடுத்த நொடி அதைத் தனது செயலில் காண்பித்திருந்தான்...

வெகுநேரம் கழித்துத் தன்னை விடுவித்தவனைக் கண்டு முகத்தில் நாணமேற அவனைப் பார்க்க முடியாது அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள் அவள்... அதைக் கண்டு சிரித்தபடி சந்தோசத்துடன் அவளை அணைத்துக் கொண்டான் அவன்...

அந்நேரம் அங்கு வந்த ஜெகன், மகன் மற்றும் மருமகள் நிலை கண்டு தனக்குள் சிரித்தபடி சத்தமில்லாமல் அங்கிருந்து வெளியேற... அப்போது அங்கு ரம்யா வந்தாள்...

"இருங்கண்ணா... காபி கலந்து தர்றேன்..." என்று அவள் சமையலறைக்குச் செல்ல முயல, தங்கையைத் தடுத்து நிறுத்திய ஜெகன்,

"அங்கே ஜீவாவும், சுபியும் இருக்காங்க..."

முதலில் அண்ணன் கூறியது புரியாது விழித்த ரம்யா புரிந்ததும் சிரிப்பை அடக்கியபடி அங்கிருந்து அகன்றுவிட்டாள்...

இது அறியாத அவர்கள் இருவரும் தங்களது தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டு இருந்தனர்... ஜீவா சமையல் மேடையில் ஏறியமர்ந்திருக்க, அவன் பக்கத்தில் நின்று காபி பருகியபடி சுபிக்ஷா கண்ணிமைக்காமல் அவன் பார்த்தபடி, அவன் பேசுவதை ஆசையாய் கேட்டுக் கொண்டு இருந்தாள்...

மனம் விட்டு பேசும் கணவனிடத்தில் தனி மயக்கம் வந்தது அவளுக்கு... இந்தச் சந்தோசம் போதும் வாழ்நாள் முழுவதும் என்றே அந்தக் கணம் அவளுக்குத் தோன்றியது...

காலையில் வெளியில் செல்ல கிளம்பி வந்த ஜீவா அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த அபிமன்யுவை கண்டதும் அவனுள் இருந்த அத்தனை நேர இதம் மறைந்து அந்த இடத்தைக் கோபம் வந்து ஆக்கிரமித்துக் கொண்டது...

நேற்றாவது அபிமன்யு திட்டமிட்டு வந்தான்... ஆனால் இன்று அவன் வந்தது தொழில் தணிக்கை சம்பந்தமாய் ருத்ரஸ்ரீயை பார்த்துக் கலந்தாலோசிக்கத் தான் அங்கு

வந்திருந்தான்... அதை அறியாத ஜீவா அவனை முறைத்துக் கொண்டு அங்கு வந்தமர்ந்தான்...

அவன் பின்னே வந்த மனையாளோ அபிமன்யுவை வரவேற்று, "அத்தை வீட்டில் இருக்காங்களா...? ஸ்கூல் பத்தி அவங்க கிட்ட கொஞ்சம் பேசணும்..."

அதைக் கேட்டு ஜீவாவுக்கு மனைவியிடத்தில் எரிச்சல் வந்தது... சித்தாராவை பார்க்க இவள் வீடு தேடி போகாவிட்டால் தான் என்ன என்று...

"அம்மா வீட்டில் தான் இருக்காங்க... இப்ப நான் வீட்டுக்கு தான் போறேன்... வேணும்ன்னா என்னோட வர்றியா...?"

இருவருமே எந்தவித திட்டமிடலும் இல்லாமல் சாதாரணமாகத் தான் பேசி கொண்டார்கள்... அதுவே ஜீவா காதில் புகையைக் கிளப்பியது...

"சுபி... கொஞ்சம் காபி எடுத்துட்டு வர்றியா..."

'இப்போ தானே காபி குடிச்சாங்க... அதுக்குள்ள இன்னொரு காபியா...?' என்று அவள் மனதுக்குள் வியந்தபடி,

"ரொம்பக் காபி குடிக்கிறது நல்லதில்லை மாமா..."

"ப்ளீஸ் பேபி..." என்று அவன் சொன்னதும் வேறுவழியின்றி அவள் உள்ளே செல்ல...

இப்போது ஜீவா அபிமன்யுவை பார்த்து நேரிடையாய் முறைத்தான்...

"இப்போ எதுக்கு நீ சுபி பின்னாடி சுத்திக்கிட்டு இருக்க...?"

தன் கேள்விக்கு அபிமன்யு பதில் சொல்லும் முன் தானே முந்தி கொண்டு பேசினான் அவன்...

"நீ நினைப்பது எதுவும் நடக்காது அபி... நான் சொன்னதை நல்லா யோசிச்சு பார்... நான் விட்டுக் கொடுத்தால் மட்டுமே நீ அவளை அடைய முடியும்ன்னு நான் சொன்னதை நல்லா நியாபகப்படுத்திப் பார்... நான் இன்னும் அவளை விட்டு கொடுக்கவே இல்லை... அதற்குள் நீ இப்படி முந்தி கொண்டு வந்தால் எப்படி...?" என்று கடுமையான குரலில் சினந்தவன்,

"அதை எல்லாம் உணர்வதற்கு நீ இன்னும் வளரணும் அமுல் பேபி..." என்று முடித்தான் கேலி குரலில்...

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல் தன் மனைவியைத் தான் யாருக்கும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்பதைக் கூட அவனது பாணியில் சற்றுக் கெத்தாகத் தான் எடுத்துரைத்தான் மனைவி மேல் கொள்ளை காதலை வைத்திருக்கும் தி கிரேட் ஜீவா...!!!

[இந்த ஜீவாவிற்கு மீசை இல்லை என்பது வேறு விசயம்... ;) ]

இசையாகும்...!!!

# ஸ்வரம் : 28

"ஹா... ஹா... ஹா..." என்று புரண்டு புரண்டு சிரிக்காத குறையாகச் சிரித்தான் அபிமன்யு...

ஜீவா அவனிடத்தில் பேசியதை இப்போதும் நினைத்து பார்த்தவனுக்கு அத்தனை சிரிப்பு வந்தது... அதைச் சுபிக்ஷாவிற்கு அழைத்துச் சொன்னவன் தான் இப்படிச் சிரித்துக் கொண்டு இருந்தான்...

சுபிக்ஷாவிற்கும் அதைக் கேட்டு அத்தனை சந்தோசமாக இருந்தது... கணவன் தன்னை யாருக்கும் விட்டு கொடுக்க மாட்டேன் என்று சொன்னதே தன் மீதான அதீத காதலால் தான் என்பதை உணர்ந்தவளுக்கு ஆனந்தத்தில் கண்ணீர் சுரந்தது...

அவனைக் காதலை உணரச் செய்ய வேண்டும் என்று நினைத்தவள் இப்போது அவனது காதலை சுகமாய் உணர்ந்து கொண்டிருந்தாள்...

வார்த்தையால் ஒலி வடிவம் கொடுத்தால் தான் காதலா...? இதோ தனது செயல்களால் அந்தக் காதலை நிரூபிக்கும் கணவனின் அன்பு காதல் இல்லாமல் வேறு ஏது...

'விட்டு விலகி போய்விடு' என்று சொன்னவன் இப்போது 'விட்டுவிட மாட்டேன்' என்று சொன்னதை விடவா வேறு வார்த்தைகள் வேண்டும், காதலை இத்தனை அழகாய் புரிய செய்வதற்கு...?

"சுபி இருக்கிறியா...?"

"சொல்லுங்க அபி..."

"அப்போ ஜீவா பார்த்தான் பாரு ஒரு டெரர் லுக்... நான் அப்படியே ஜெர்க் ஆகிட்டேன்... எங்கே

அடிச்சிடுவானோன்னு... நல்லவேளை பெரியப்பா அங்கே வரவும் பேசாம எழுந்திருச்சு போயிட்டான்..."

அப்போது தான் இருந்த நிலையை நினைத்து இப்போதும் அபிமன்யுவிற்குச் சிரிப்பு வந்தது...

"சுபி... நாம நாடகம் எல்லாம் போட வேண்டிய அவசியமே இல்லை... அவனே உன்னை நல்லா புரிந்து வைத்திருக்கிறான்... அத்தோடு உன் மீது உயிரையும் வைத்திருக்கிறான்... சில ஆண்களுக்கு மனதில் உள்ளதை வெளிப்படையாய் சொல்ல தெரியாது... அது போல் தான் ஜீவாவும்... ஆனால் அவன் மனசெல்லாம் நீ தான் நிறைஞ்சிருக்க..."

அபிமன்யுவிடம் தான் பேசி பழகினால் ஜீவா பொறாமை கொண்டு அவனது மனதை, காதலை உணர்ந்து கொள்வான் என்று எண்ணித்தான் இருவரும் சேர்ந்து திட்டம் போட்டது... அப்படி நினைத்தவளுக்கு அதைச் செயலாற்ற தான் பெரிதும் துன்பமாக இருந்தது... ஆனால் அதற்கு அவசியம் இல்லாது செய்துவிட்டான் அவளது கணவன்...

"தெரியும் அபி... என் மேலுள்ள காதலுக்காக என்னையே விட்டு கொடுக்க அவங்க முடிவு செஞ்சது தான் கொஞ்சம் கஷ்டமாயிருந்தது... ஆனா அந்தக் கஷ்டமும் இப்போ இல்லை... இனி எப்போதும் என்னை விட்டு கொடுக்கணும்ன்னு நினைக்கக் கூட மாட்டாங்க..."

"ஆம் சுபி..." என்று ஆமோதித்த அபிமன்யு பெருமூச்சை விட்டபடி,

"நல்லவேளை நான் பெருத்த அடியில் இருந்து தப்பித்தேன்... இல்லை என்னை ஒருவழி பண்ணியிருப்பான் இந்த ஜீவா... பையனுக்கு அத்தனை காண்டு என் மேல்... சுபி, அவன் நல்ல மூடில் இருக்கும் போது என்னைப் பத்தி அவன் கிட்ட கொஞ்சம் எடுத்து

சொல்லும்மா... அவன் என் மேல் கொலைவெறியில் இருக்கிறான்... அநியாயமா ஒரு அறியா சிறுவனைக் கொன்ன பாவம் அவனுக்கு வேண்டாம்... நான் அனுபவிக்க வேண்டியது இன்னும் நிறைய இருக்கு..."

அபிமன்யு சொன்ன விதத்தில் அவளுக்குச் சிரிப்பு வந்தது...

"கட்டாயம் சொல்கிறேன்... அவங்க அப்படி எல்லாம் செய்ய மாட்டாங்க... அதுக்கு நான் கியாரண்ட்டி தர்றேன்..."

"'ப்ரீத்திக்கு நான் கியாரண்ட்டி' மாதிரி, எனக்கு நீ தான் கியாரண்ட்டி... உன்னை நம்பித்தான் இருக்கேன்..." என்று சிரித்தபடி சொன்னவன் அழைப்பை துண்டித்தான்...

அபிமன்யு பேசியதில் இருந்து கணவனைக் காண வேண்டும் என்று அத்தனை ஆவலாக, பரபரப்பாக இருந்தது அவளுக்கு...

'இவ்வளவு காதலை வச்சிக்கிட்டு ஒண்ணும் தெரியாத பாப்பா மாதிரி எனக்குக் காதல் வரலைன்னு சொல்லிக்கிட்டு திரியறீங்களா மாமா... உங்களை என்ன செய்யலாம்...?' செல்லக் கோபத்துடன் அவனை மனதுக்குள் கடிந்தவள்,

'உங்களை அந்தக் காதலால் தான் தண்டிக்கணும்...' என்று வெட்கம் கொண்டு முகத்தை மூடி கொண்டாள்...

ஏனோ கணவனை அழைத்துப் பேச வேண்டும் என்று மனம் ஆவல் கொள்ள ஆசையுடன் அவனுக்கு அழைத்தாள்...

அவளது மனதினை உணர்ந்தார் போன்று ஜீவா மனைவியின் அழைப்பை உடனே எடுத்தான்...

"பேபி... என்ன செய்யுது...? எதுவும் பிரச்சினையா...?" அவனது குரலில் அத்தனை பதட்டம் தெரிந்தது...

அவனது வேலை தெரியுமாதலால் பெரும்பாலும் அவள் அவனைத் தொந்திரவு செய்வதில்லை... உடல் மிகவும் முடியாமல் படுத்தினால் மட்டுமே அவனுக்கு அழைத்துத் தனது துன்பத்தைக் கூறுவாள்...

வீட்டில் அத்தனை பேர் இருந்த போதும் அவள் தனக்கு அழைத்துப் பேசுவதன் காரணம் அவனும் அறிவானே... அதனால் எத்தனை வேலை அவனை அழுத்திய போதும் மனைவியின் அழைப்பை ஒரு போதும் புறக்கணிக்க மாட்டான்... அது போல் நினைத்து இன்றும் எடுத்தவன் பதறிப் போனான்...

"அப்படி எல்லாம் இல்லை மாமா... நான் நல்லாயிருக்கேன்..."

அவள் தனது நலத்தைக் கூறியதும் தான் அவன் நிம்மதியடைந்தான்... மனதின் கவலை அகன்றதும் சுழல் நாற்காலியில் சாய்ந்தமர்ந்து லேசாகச் சுழன்றபடி,

"அப்போ வேறு எதுக்கு ஃகால் பண்ணினாங்களாம் என் பேபி..." என்று கேட்டவனின் குரல் சரசத்துடன் ஒலித்தது...

"இல்லை சும்மா தான்..." என்று இழுத்தவளின் குரலில் இருந்த தேடலை உணராமல் இருந்தால் அவன் நல்ல கணவன் என்பதில் அர்த்தம் இல்லையே...

ப்ளூ டூத்தை ஆன் செய்து காதில் மாட்டியபடி அலுவலக அறையை விட்டு வெளியில் வந்தான் வேகமாய்...

"இப்போ தான் வீட்டில் இருந்து வந்தேன்... அதுக்குள்ள மேடம் ஃகால் பண்ணியிருக்கீங்கன்னா ஏதோ சம்திங், சம்திங் இருக்கு..." என்று குறும்பு குரலில் மனைவியிடம் கேட்டபடி முகம் கொள்ளா புன்னகையுடன் அவன் நடந்து செல்வதைக் கண்டு அலுவலகமே அதிசயமாய்ப் பார்த்தது... மயக்கம் வராத குறை தான் அவர்களுக்கு...

பின்னே எப்போதும் கடுமையான முகத்துடன் இருக்கும் முதலாளி இன்று அதிசயமாகச் சிரித்துப் பேசியபடி சென்றால் அவர்களுக்கு மயக்கம் வராதா என்ன...

ஜீவா யாரையும் கண்டு கொள்ளும் மனநிலையில் இல்லை... மனைவியிடம் பேசுவது ஒன்றே தன் குறிக்கோள் என்பது போல் பேசி கொண்டே காரிலேறியவன் அதை வேகமாகக் கிளப்பிச் சென்றான்...

மறுமுனையில் திக்கித் திணறி தயங்கி பேசும் மனையாளின் வெட்கத்தை இந்த முனையில் அவன் உணர்ந்தான் அவளது முகத்தைப் பார்க்காமலே... மனையவளின் மதி முகத்தைக் காணும் ஆவலில் அவனுமே இருந்தான்...

அடுத்த அரை மணி நேரத்தில் வீட்டில் இருந்தான் அவன்... தன்னுடன் பேசியபடி அறைக்கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்த கணவனைக் கண்டு திகைத்துப் பின் மகிழ்ச்சியில் கண்களை அகல விரித்து இமைக்காது அவனைப் பார்த்திருந்தாள் அவள்... இந்நேரம் இங்கு அவனை எதிர்பாராமல் கண்டதும் அத்தனை பரவசம் அவள் மனதினுள்...

அகன்று இருந்த அவளது விழிகள் எப்போதும் போல் அவனை ஈர்க்க வேகமாய் அவள் அருகில் வந்தவன் அடுத்த நொடி அவளது விழிகள் மேல் முத்தமிட்டான்... அதில் அவள் மெய்மறந்து நின்றிருக்க, அவனோ,

"என்னைத் தேடினியா பேபி...?" மனைவியின் முகத்தோடு முகம் வைத்து தனக்கான அவளது தேடலை அவளது விழிகளுக்குள் தேடினான் அவன்...

அவன் கேட்டதும் தான் அவளுக்குமே நியாபகம் வந்தது தான் எதற்காகக் கணவனைத் தேடினோம் என்று... அடுத்தக் கணம் அவனது முகத்தைத் தனது கைகளில் தாங்கி அவள் முத்தமழை பொழிய அவனோ அதில்

சுகமாய் நனைந்தபடி கண்களை மூடி ரசித்துக் கொண்டிருந்தான் மனைவியின் நேசத்தை...

முத்த மழை பொழிந்தவள் ஒரு கட்டத்தில் ஓய்ந்து போய் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்...

"ம்... அவசரமாய்க் கிளம்பி வந்ததுக்கு நல்ல பரிசு தான் கிடைச்சிருக்கு..." அவன் குறும்பாய், குதூகலமாய் உரைக்க...

அவன் சொன்னதைக் கூட அவள் உணரவில்லை... அவள் மனதில் இருந்தது எல்லாம் கணவனது நேசம் மட்டுமே...

"திடீர்ன்னு என்னாச்சு உனக்கு...?" அவள் இன்னமும் தன்னை அணைத்துக் கொண்டு இருப்பதைக் கண்டு அவன் கேட்க...

அதில் அவனை ஏறிட்டு பார்த்தவள் கண்சிமிட்டியபடி, "ஏதேதோ ஆச்சு..." என்று கூறி சிரிக்க...

அதைக் கண்டு அவனும் சிரித்தான்... சிறிது நேரம் அவனுடன் பேசி கொண்டு இருந்தவளுக்கு உலகமே வண்ணமயமானது போல் இருந்தது...

அடுத்த ஒரு மணி நேரம் கழித்து அவன் அலுவலகம் கிளம்பி போகும் போது, "போயிட்டு வரவா பேபி..." என்று ஆயிரம் முறை அவளிடம் சம்மதம் கேட்டு உறுதிப்படுத்தி விட்டே கிளம்பி சென்றான்...

அன்றிரவு உணவு முடிந்ததும் கணவனை அழைத்துக் கொண்டு தோட்டத்தில் வந்தமர்ந்தாள் சுபிக்ஷா... அங்கிருந்த கல்மேடையில் மனைவியவளை அணைத்தபடி அமர்ந்த ஜீவா,

"வானத்தில் நிலா கூடத் தெரியலையே... இப்போ எதுக்கு இங்கே வந்து உட்கார்ந்திருக்க..." மனைவியின் நிலா நேசம்

தெரியுமாதலால் அவன் அப்படிக் கேட்டது...

கணவனின் நேசத்தை உணர்ந்தவளுக்கோ அந்த நிலாவை விட அவன் அருகில் இருப்பது தான் மிகவும் பிடித்திருந்தது...

"இன்னைக்கு அமாவாசை என் மக்கு மாமா..." என்றாள் கேலி குரலில்...

"அமாவாசையா...?" அசடு வழிந்தான் கணவன்...

"ஐய்யே ரொம்ப வழியுது துடைச்சுக்கோங்க..." மறுபடியும் அவள் கிண்டலடிக்க...

"அப்படியா...?" என்று கேட்டபடி அவளது புடவை மாராப்பில் அவன் முகத்தைத் துடைக்க வர... அதில் திகைத்து போனவளாய் அவனை விட்டு அவள் விலக... அதைக் கண்டு வாய்விட்டு சிரித்தவன்,

"நான் எல்லாம் எப்போடா சான்ஸ் கிடைக்கும்ன்னு இருக்கிறவன்... அந்தச் சான்சை நீயே ஏற்படுத்திக் கொடுத்தா விட்டு விடுவேனா..." என்று புருவத்தை உயர்த்தியபடி கேட்க...

அதைக் கண்டு போலியாக அவனை முறைத்தவள், "அதுக்காக இப்படியா பப்ளிக் ப்ளேசில்...?" சொல்லும் போதே அவளது முகம் நாணத்தில் நனைந்தது...

"ஓ... நம்ம ரூம்மா இருந்தா உனக்கு ஓகேவா...?"

அவனது குறும்பு பேச்சை தடுக்க முடியாமல் அவஸ்தையில் நெளிந்தவள், "மாமா... அந்த வானத்தைப் பாருங்களேன்..."

"அதுக்கு நீ இங்கே வரணும்..." என்றவன் அவளை அள்ளி எடுத்து தன் மீது சாய்த்துக் கொண்டு வானத்தைப் பார்த்தான்...

நட்சத்திரங்கள் கூட இல்லாமல் கரிய நிறத்தில் காட்சியளித்த வானம் அப்படி ஒன்றும் அவனைப் பெரிதாக ஈர்க்கவில்லை... மாறாக அவனது மனதில் வெறுமை தான் எழுந்தது...

"ப்ச்... ஒண்ணுமே தெரியலை..." என்றான் சலிப்புடன்...

"கறுப்பான வானத்தைப் பார்க்கும் போது மனசுக்கு அமைதியா தோணலையா...?"

'லூசா நீ' என்ற ரீதியில் மனைவியைப் பார்த்தவன், "வானத்துக்கு அழகே வட்ட வடிவ நிலா தான்... நீ என்னமோ புதுசா சொல்றியே...?"

"உங்க கண்ணை மூடுங்களேன்..."

"முதல்ல வானத்தைப் பார்க்க சொன்ன... இப்போ கண்ணை மூட சொல்றியா...? என்னை ஒருவழி ஆக்கணும்ன்னு இருக்க..." என்று அவன் அலுத்தாலும் அவள் சொன்னதைத் தட்டாமல் செய்தான்...

"இப்போ உங்க கண்ணுக்குள் என்ன தெரியுது...?" அவள் ஆவலாகக் கேட்க...

"என்னோட பேபியோட அழகான முகம் தெரியுது..." காதல் பொங்க அவன் கூற... அதைக் கேட்டு அவளது மனம் தன்வசம் இழந்தது...

மெல்ல அவனது தலையை வருடி விட்டவள், "இப்போ என்ன தோணுது...?"

"ம்... உண்ட மயக்கத்தில் நல்லா உறக்கம் வருது..."

"தூக்கம் வருது ஓகே... இப்போ கண்ணுக்குள்ள என்ன தெரியுது..."

"ஒரே இருட்டா கறுப்பா இருக்கு..."

"இப்போ சொல்லுங்க... கறுப்பு மனசுக்கு அமைதி, நிம்மதியை தருதா, இல்லையா...?"

மனைவி இப்படிக் கேட்டதும் பட்டென்று கண்களைத் திறந்தவன் அவளைப் பார்த்து ஆச்சிரியத்துடன்,

"ஆமாம் பேபி... நீ சொல்ற லாஜிக்கும் சரி தான்..."

"சிலருக்குக் கருமை வெறுமையான உணர்வு தரும்... ஆனால் அது தான் நமக்கு ஆழ்ந்த, நிம்மதியான தூக்கத்தைத் தரும்ங்கிறதை யாருமே உணர்றது இல்லை... ஏனோ கறுப்பை வெறுக்கிறாங்க... எனக்கு நிலாவோட இருக்கிற வானம் எந்தளவுக்குப் பிடிக்குமோ அது போல் அமாவாசை வானமும் ரொம்பப் பிடிக்கும்... மனசுக்கு கஷ்டமா இருந்தா அந்த இருளை கொஞ்ச நேரம் பார்த்துக்கிட்டு இருந்தா போதும் நம்மையும் அறியாமல் நம்ம கஷ்டத்தை மறந்து அந்த இருளில் மூழ்கி போவோம்..."

அவள் சொன்னது அவனுக்கு எந்தளவுக்குப் புரிந்ததோ... ஆனால் கறுமை வெறுக்கக் கூடிய நிறமில்லை என்பதை உணர்ந்து கொண்டான்...

"உண்மை தான் பேபி... நீ எனக்குக் கொடுக்கிற நிம்மதி போல் யாரும் கொடுத்தது இல்லை..." என்று கூறி அவன் அவளை அணைத்துக் கொள்ள...

"அப்போ நான் கறுப்புன்னு நீங்க கேலி பண்றீங்களா...?" கணவன் மனம் தெரிந்தும் அவள் வேண்டுமென்றே சிணுங்க...

"ஏய் லூசு... அப்படி நான் சொன்னேனா...? எத்தனையோ நாட்டுக்குப் போயிருக்கேன்... எத்தனையோ விதமான அழகான பெண்களைப் பார்த்திருக்கேன்... நீ சொன்ன மாதிரி யாரை பார்த்தும் எனக்கு நிம்மதி ஏற்படலை... ஆனா

உன்னைப் பார்த்த கணம் என் மனசுக்குள்ள ஒரு நிம்மதி தோணுச்சு... அன்னைக்குப் பூஜை ரூமில் க்ரனி காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினியே... அப்போ நீ பட்டு புடவை கட்டி, தலை நிறையப் பூ வச்சு அப்படியே தேவதை மாதிரி இருந்த... அப்பவே உன்னைக் கட்டம் கட்டி தூக்கணும்ன்னு முடிவு பண்ணிட்டேன்..." என்று கூறி அவன் சிரிக்க...

தன் குரலை கேட்டு மயங்கியதாய் கூறிய கணவன் இப்போது தன்னைக் கண்டு மயங்கியதாய் கூற கேட்டவள் மனம் அந்தக் கணம் அவனிடத்தில் மயங்கி போனது விரும்பியே...

ஆனாலும் வெளியில் காட்டி கொள்ளாது, "அடிப்பாவி..." என்றாள் அவள் திகைப்புடன் வாயில் கை வைத்தபடி...

அவளது அகன்ற விழிகளில் தன்னைத் தொலைத்தவன் அதன் மீது இதழ் பதித்து நிமிர்ந்து, "அடிப்பாவி இல்லைம்மா... உன் புருசன் ஒரு அப்பாவி..." என்றபடி அவன் நமட்டுச் சிரிப்பு சிரிக்க...

"நீங்க அப்பாவியா...?" என்று அவன் தோளில் அடித்தவள், "இதைப் பிறக்க போற நம்ம பிள்ளை கூட நம்பாது..." அதைக் கேட்டு மேலும் நகைத்தவன்,

"அதுக்கு அச்சாரமா தான் அன்னைக்கு உன்னோட சேர்ந்து க்ரனி காலில் விழுந்தேன்... அது தெரியாம க்ரனியும் ஆசிர்வாதம் பண்ணிட்டாங்க..." என்றவன் எதையோ நினைத்து வாய்விட்டுச் சிரித்தான்...

அவன் சிரிக்கும் அழகை பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தாள் அவள் ஒருவித மயக்கத்துடன்...

"என்னோட திட்டம் தெரியாம இந்த க்ரனி என் கிட்ட சத்தியம் எல்லாம் கேட்கிறாங்க... அந்த நொடி எனக்கு என்ன செய்றதுன்னு தெரியலை... ஆனாலும்

அவங்களுக்கு உடம்பு சரியில்லாம போனதை நினைச்சு மனசுக்கு கஷ்டமாவும் இருந்துச்சு... அதனால் தான் சத்தியம் பண்ண அவ்வளவு தயங்கினேன்... அவங்க சும்மா கேட்டு இருந்தா கூட நான் சரின்னு தான் சொல்லியிருப்பேன்..."

அன்று அவன் தயங்கியதை கண்டு விருப்பம் இல்லாமல் தான் தயங்குகிறான் என்று அல்லவா அவள் நினைத்து கொண்டாள்...

என்ன அதிரடி பண்ணினாலும், அடாவடி செய்தாலும் அவளால் அவனை வெறுக்க முடியவில்லை... அவன் மேல் காதல் தான் அதிகரித்துக் கொண்டு போனது...

"ஐ லவ் யூ மாமா..." என்று தனது அத்தனை காதலையும் அந்த மூன்று வார்த்தைகளில் தேக்கி அவள் கூற...

அவனோ உணர்ச்சிவசப்பட்டுக் காற்று கூடப் புகாதபடி இறுக்கமாய் அவளை அணைத்துக் கொண்டான்...

'இப்ப கூட 'ஐ லவ் யூ' சொல்றாங்களா... என்ன மாமா நீங்க...?' மனதில் அலுத்து கொண்டவள்,

"மாமா... இதுக்கு நீங்க பதிலுக்கு 'ஐ லவ் யூ'ன்னு சொல்லணும்... இல்லை 'மீ டூ'ன்னு சொல்லணும்..."

அவனிடம் எதிர்பார்த்தால் எதுவும் வேலைக்காகாது என்றெண்ணி அவள் நேரிடையாகவே அவனிடத்தில் கேட்க...

"அப்படி எல்லாம் சொல்லணுமா பேபி..." என்று பரிதாபமாய் விழித்தான் அந்தத் தொழிலதிபன்...

"ஆமாம் ஒண்ணுமே தெரியாதா பாப்பா பாருங்க நீங்க... நீங்க எப்படி ரொமான்ஸ் படத்துல நடிச்சீங்க...?" நீண்ட

நாட்களாக மனதை அரித்த விசயத்தை அவள் அவனிடத்தில் கேட்க...

"நீயே சொல்லிட்ட நான் நடிச்சேன்னு... அது வெறும் நடிப்பு பேபி... டைரக்டர் சொன்னதை அப்படியே செஞ்சேன்... மத்தபடி மனசார அப்படி எல்லாம் எனக்குத் தோணியதே இல்லை... அதுவும் அந்த நடிகை பேய் மாதிரி அவ்வளவு மேக்கப் போட்டிருக்கும் போது ரொமான்சா... என்னை விட்டால் போதும்ன்னு ஓடத்தான் தோணுச்சு..." என்றவனின் உடல் அதை நினைத்து இப்போதும் அருவருப்பில் சிலிர்த்தது...

"வெளியில் சொல்லிக்காதீங்க வெட்கக்கேடு..." வெளியில் அவனைச் சீண்டினாலும் உள்ளுக்குள் அத்தனை காதலாய் உணர்ந்தாள் அவள்...

"சரி ரொம்ப நேரமாகிருச்சு வீட்டுக்குள்ள போகலாமா...?" என்றபடி அவன் எழ... அவளும் உடன் சேர்ந்து எழுந்தாள்...

வீட்டினுள் நுழையும் போது அலுவல் அறையில் விளக்கு எரிவதை கண்டு அவன் கேள்வியாய் அவளைப் பார்க்க...

"மாமா ஏதாவது வேலை பார்ப்பாங்களா இருக்கும்..."

"ஓ..." என்றவன் சிறிது யோசித்து விட்டு, "நீ போய்த் தூங்கு நான் அப்பா கிட்ட பேசிட்டு வர்றேன்..." என்றவனை அவள் கலக்கத்துடன் பார்க்க...

"உன்னோட மாமனாரை ஒண்ணும் பண்ண மாட்டேன்... என்னை நம்பு..." என்று அவள் தலையில் தட்டியபடி அவன் கூற...

"ம்... நம்பி போகிறேன்... நாளைக்கு ஏதாவது சேதாரம்ன்னு தெரிஞ்சது நீங்க தொலைஞ்சிங்க..." என்று அவள் மிரட்ட...

"இதைக் கேட்ட பிறகும் நான் சேதாரம் விளைவிக்க நினைப்பேனா... ம்ஹூம்... கப்சிப்..." அவன் வாய் பொத்தி பவ்யமாய் நின்று சைகை செய்ய...

அவனைக் கண்டு சிரித்தபடி 'பத்திரம்' என்பது போல் ஆள்காட்டி விரலை காட்டி எச்சரித்தபடி அவள் அறைக்குச் செல்ல, அவளைப் பார்த்தபடி நின்றவன் பின் சிரித்தபடி தந்தையைக் காண சென்றான்...

அலுவலக அறையின் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றவன் அங்குக் கண்ட காட்சியில் திகைத்து தான் போனான்... அவனது தாத்தா காளிமுத்து நாற்காலியில் அமர்ந்திருக்க அவனது தந்தை ஜெகன் கீழே அமர்ந்து பெரியவர் மடியில் தலை சாய்ந்தபடி ஏதோ பேசி கொண்டு இருந்தான்...

அந்தக் காட்சியைக் கண்டவன் மனதில் தான் எதையோ இழந்துவிட்ட வருத்தம் எழுந்தது... பத்து வயதில் தந்தை மடியில் தானும் இது போல் தலை சாய்ந்திருந்த நினைவு வந்தது அவனுள்... அதன் பிறகு தந்தை ஒன்றும் அவனை விலக்கவில்லையே... அவன் தானே தந்தையை விலக்கி வைத்தான்... மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது...

வாழ்க்கையின் வலியை இப்போது தான் அவன் உணரத் துவங்கி இருக்கிறான்...

கதவு திறக்கும் அரவத்தில் நிமிர்ந்த ஜெகன் அங்கு மகனை கண்டதும் மகிழ்ச்சியாக, "உள்ளே வா ஜீவா..." என்றான்...

இதுவரை தன் கண்களுக்குத் தெரியாது மறைந்திருந்த தந்தையின் பாசம் இப்போது ஜீவாவின் கண்களுக்குத் தெரிந்தது... மௌனமாய்த் தந்தை அருகில் வந்தவன் கீழே அமர போனான்...

"உனக்குக் கீழே உட்கார்ந்து பழக்கம் இருக்காது... நீ மேலே உட்கார்..." என்று ஜெகன் சொல்ல... அதைப் பிடிவாதமாய்

மறுத்துவிட்டு தந்தை அருகில் அமர்ந்தவன் அவரது கையைப் பிடித்துக் கொண்டு அமைதியாக இருந்தான்...

அவன் ஏதோ பேச நினைக்கிறான் என்பதை உணர்ந்த காளிமுத்து, "நான் படுக்கப் போறேன் கண்ணப்பா..." என்றபடி தந்தைக்கும் மகனுக்கும் தனிமை கொடுக்க வேண்டி எழ...

"நீங்களும் இருங்க தாத்தா..." என்று பேரனும், "நீ இரு நைனா..." என்று மகனும் ஒரே நேரத்தில் கூறினர்... தன் மீதான அவர்களது அன்பை கண்டு சிரித்தபடி காளிமுத்து மீண்டும் அமர்ந்தார்...

தந்தை அழைக்கும் 'நைனா' என்ற சொல் இப்போது அத்தனை அழகாய் இருந்தது அவனுக்கு... தன்னையும் அப்படி அழைக்கச் சொல்லி சொன்ன தந்தையைக் கண்டு தான் முகத்தைச் சுளித்ததும் நியாபகத்தில் வந்தது...

"ஐயம் ரியலி சாரிப்பா..." என்றான் மகன் நேரிடையாய்...

"எதுக்கு ஜீவா சாரி எல்லாம்..." மகனது தோளில் ஆதரவாய் கை வைத்து ஜெகன் சொல்ல...

அந்த நிலையிலும் தந்தையின் அன்பை நினைத்து ஜீவாவின் மனம் நெகிழ்ந்தது... அடுத்த நொடி ஜெகனை கட்டி தழுவி கொண்டான்... ஜெகனோ நம்ப முடியாத பிரமிப்பில் அப்படியே அமர்ந்திருந்தான்... பத்து வயதில் தன்னை விட்டு விலகிய மகன் இன்று தான் திரும்பக் கிடைத்திருக்கிறான்...

மிகவும் சந்தோசமாக இருந்தது ஜெகனுக்கு...

"அழகை பார்த்து உங்களை ஒதுக்கி வச்சது ரொம்பத் தப்புன்னு இப்போ உணர்றேன்ப்பா... எவ்வளவு பெரிய முட்டாள் நான்..." என்று வருந்தி உரைத்தவன்,

"இப்போ வாழ்க்கையில் அடிபடும் போது தான் உங்களோட நல்ல மனசு எனக்குப் புரியுது... மாம் ஏன் இப்போதும் உங்களை இந்தளவுக்குக் காதலிக்கிறாங்கன்னு இப்போ தான் எனக்குப் புரியுது... உங்க நல்ல மனசை புரிஞ்சிக்காம நான் நடந்துக்கிட்டேன்... ரியலி சாரிப்பா..."

மீண்டும் மீண்டும் மன்னிப்பு கேட்ட மகனை மேலும் அணைத்துக் கொண்ட ஜெகன், "நீ என் மகன்... என் மேல் உனக்கு இல்லாத உரிமையா ஜீவா..." என்று மகனை அன்போடு தேற்றினான்...

மருமகள் கூறியது வேறு ஜெகனுக்கு நியாபகத்தில் இருந்தது... இனியும் மகனை வருந்த செய்வதில் அவனுக்குப் பிடித்தமில்லை...

சுபிக்ஷா அதை ஜீவாவிடம் கேட்க கூடாது என்று கூறியிருந்ததால் அதை அவன் கேட்கவில்லை... கேட்டு மகனின் மனவேதனையை அதிகரிக்கச் செய்வதில் அவனுக்கு விருப்பம் இல்லை...

"நானும் உன்னைப் புரிஞ்சிக்கலை ஜீவா... நீ கோபமா இருந்தாலும் நான் உன் கிட்ட வந்து பேசியிருக்கணும்... எப்பவுமே உன்னோட விருப்பத்திற்கு மாறா எதுவும் செஞ்சு எனக்குப் பழக்கம் இல்லாததால உன்னை உன் போக்கில் விட்டது என் தப்பு தான்..."

தந்தையின் மனதை அறிந்த ஜீவாவிற்குப் பெருத்த ஆச்சரியம்... எல்லோரும் தன்னைக் கண்டு கொள்ளவில்லை என்று அவன் வருத்தப்பட, இங்குத் தந்தையோ அவனது மனதிற்கு முக்கியத்துவம் கொடுத்து விலகி இருந்திருக்கிறார்... இது தான் நாணயத்திற்கு இரண்டு பக்கம் உண்டு போலும்...

பெற்றோரால் தன்னை வெறுக்க முடியாது என்பதை அவன் உணர்ந்து கொண்டான்...

"போதும் கண்ணப்பா, ஜீவா... இப்படியே மன்னிப்பு கேட்டுட்டு இருந்தா எப்படி...?" காளிமுத்து இடையிட்டு அவர்கள் இருவரின் நினைவலைகளைக் கலைத்தார்...

அதன் பின் ஜெகன் மகனின் கையை விடாமல் பிடித்துக் கொண்டு இருந்தான்... எங்கே மீண்டும் மகனை தொலைத்து விடுவோமா என்ற பயம் அவனது பிடியில் தெரிந்தது... அதற்கு நேர்மாறாக மனம் மகிழ்ச்சியில் திளைத்திருந்தது...

"சரி கண்ணப்பா உன்னுடைய முடிவு என்ன...?" சற்று நேரத்திற்கு முன் தாங்கள் பேசி கொண்டிருந்ததைப் பற்றிக் காளிமுத்து கேட்டார் மகனிடத்தில்...

"நீயே சொல்லு நைனா..." அவரது மகனோ தனது மகனை விடச் சந்தோசமான விசயம் வேறில்லை என்பது போல் அந்தச் சந்தோசத்தைக் கொண்டாடி கொண்டிருந்தான் மனதுக்குள்...

"என்ன தாத்தா...?" என்று கேட்டான் பேரன்...

"உன் நைனா ஆசிரமத்திற்கு உதவி செய்யணும்னு சொல்றான்..."

"நல்ல விசயம் தானே தாத்தா..."

"நல்ல விசயம் தான்... ஆனால் ஆத்தில் போட்டாலும் அளந்து போடணும் இல்லையா... இவன் என்னடான்னா வருகிற வருமானத்தில் பாதியை கொடுக்கச் சொல்கிறான்..." சலித்துக் கொண்டார் பெரியவர் தனது மகனின் தாராள குணத்தை எண்ணி...

சென்னையில் உள்ள தொழில்களை ஜீவா மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தாலும் தாத்தா, தந்தைக்கு அதன் வருமனத்தில் பங்கு கொடுக்க வேண்டும்... அதில் தான் ஜெகன் நல்லது செய்ய நினைக்கிறான் போலும்...

"நிச்சயம் செய்யலாம் தாத்தா... அப்படிச் செய்துவிட்டு வருமானவரி கழிவு கூட அதற்குப் பெறலாம்... எப்படிப் பார்த்தாலும் லாபம் தான்... அதனால் கவலையில்லை..." தாத்தாவிடம் தந்தையை விட்டு கொடுக்காது பேசியவன்,

"நமக்கு வருகிற வருமானத்தில் கொஞ்சம் செய்வதில் தப்பில்லைப்பா... ஆனால் முழுவதையும் கொடுப்பது என்பது இயலாத காரியம்... உங்களுக்கு உங்கப்பா சேர்த்து கொடுத்த மாதிரி, நீங்க எனக்குக் கொடுத்த மாதிரி, நான் என் பிள்ளைங்களுக்குக் கொடுக்க வேண்டாமா...?"

அன்றொரு நாள் தானும் இதே போல் தான் மகனிடத்தில் கூறினோம் என்பதை நினைவு கூர்ந்த காளிமுத்துப் பேரனை பாராட்டுதலாய் பார்த்தார்...

"இனி எனக்குக் கவலையில்லை கண்ணப்பா... எனக்குப் பிறகு என் பேரன் இந்தத் தொழில்களைக் கட்டி காப்பாத்துவான்னு நம்பிக்கை வந்துவிட்டது..." என்று நிம்மதியுடன் சொன்னவர் பேரனிடம்,

"ஜீவா... உன் நைனா சின்னப்பையன் மாதிரி... இனி நீ தான் அவனைப் பார்த்துக்கணும்... நல்லது, கெட்டது எதுவாக இருந்தாலும் அவனுக்குச் சாய ஒரு தோள் வேண்டும்... வீட்டில் உன் அம்மா இருக்கிறாள்... வெளியில் நீ தான் பார்த்துக்கணும்..."

"நைனா... என்னை இப்படி டேமேஜ் பண்ணாதே..."

சிறு குழந்தை போல் சிணுங்கிய தந்தை இன்னமும் மனதளவில் சிறு குழந்தையே தான் என்று தோன்றியது ஜீவாவிற்கு... தாத்தா கூறியது நூற்றுக்கு நூறு உண்மை என்று எண்ணினான்...

"கட்டாயம் தாத்தா..." என்று உறுதியளித்தான் பேரன்...

அதன் பிறகு சிறிது நேரம் பேசியிருந்துவிட்டு ஜீவா தனது அறைக்குச் சென்றான்... அங்கே தனக்காகக் கவலையுடன் காத்துக் கொண்டிருந்த மனைவியைக் கண்டதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"உன் மாமனாருக்கு ஒண்ணும் ஆகலை... அவர் திவ்யமா, ஆரோக்கியமா இருக்கிறார்... போதுமா...?"

"அவர் வருத்தப்படும் படியா நீங்க பேசிவிடவில்லையே..." இன்னமும் அவளுக்குக் கவலை நீங்கவில்லை...

"இல்லை பேபி... அவர் கிட்ட மன்னிப்பு கேட்க தான் போனேன்..." என்று சொல்லி அவன் அவளுக்கு மயக்கத்தை வரவழைத்தான்...

"என்னது...?" என்று திகைத்து போய் நின்றிருந்தவளை கண்டு,

"என் அப்பாவிடம் நான் மன்னிப்பு கேட்பது உனக்கு இவ்வளவு அதிர்ச்சியா இருக்கா என்ன...?"

"இல்லையா பின்னே... யார் கிட்டேயும் தலைவணங்காத வணங்காமுடி இல்லையா நீங்க..." சந்தடி சாக்கில் அவள் அவனைக் கேலி பேச...

"இந்த வணங்காமுடி இந்தப் பெண்ணிடம் தலைவணங்கி பல நாட்களாகி விட்டது பெண்ணே... இனி யாருக்கு வேண்டுமானாலும் நான் தலை வணங்குவேன்... ஏன்னா ட்ரெயினிங் கொடுத்தது யாரு... என் பேபி இல்லையா..." என்று கண்சிமிட்டி அவன் குறும்பாகக் கேட்க...

அவள் பேச்சற்று அவனைப் பார்த்தாள்... அவள் அருகே வந்தவன்,

"சின்ன வயசில் இருந்தே அவரை அழகில்லை, ரொம்பக் கறுப்பா இருக்காரு அப்படின்னு ஒதுக்கியே வச்சிட்டேன்..."

அதைக் கேட்டு அவளது முகம் கூம்பி போனது...

"அவரை மட்டுமா... என்னையும் சேர்த்து தானே..." பழைய நினைவுகள் அவளது மனதினை தாக்க அவளுக்குப் பெரும் துன்பமாய் இருந்தது...

"இங்கே பார் பேபி... இனி ஒரு தடவை இது மாதிரி பேசாதே... அது ஏதோ தெரியாம பேசியது... பணம், அழகு எல்லாம் சேர்த்து கொடுத்த திமிர் என்னை அப்படிப் பேச வச்சது... இப்போ எல்லாத்தையும் நான் உணர்ந்துட்டேன்... வாழ்க்கைக்கு அழகை விடக் குணம் தான் முக்கியம்ன்னு..."

"திரும்பவும் நான் அழகில்லைன்னு சொல்றீங்க பார்த்தீங்களா..." பெண்ணவள் முறுக்கி கொள்ள... அவனோ தலையில் கை வைத்தான் என்ன செய்வது என்று தெரியாமல்...

அதைக் கண்டு கலகலவென்று சிரித்தவள், "மாமோய்... நீங்க என் கிட்ட தலைக்குப்புற விழுந்து கிடக்கிற நியூசை பிபிசியில் சொன்னாங்க... நீங்க பார்த்தீங்களா...?" என்று கேலியாய் கேட்க...

"கொழுப்புடி உனக்கு... கொஞ்ச நேரத்தில் மனுசனை மிரள வச்சிட்ட..." என்றவன் அடிப்பது போல் ஓங்கிய தனது கையால் அவளை அணைத்துக் கொண்டான்...

"உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும் பேபி... உனக்கு நான் சொல்ல வர்றது புரியுதா...?" தவிப்புடன் அவன் கேட்க...

'எனக்குப் புரியுது மக்கு மாமா... உங்களுக்குத் தான் அது புரியலை...' மனதுக்குள் சொல்லி கொண்டவள் வெளியில் தலையாட்டி வைத்தாள்...

மறுநாள் தந்தை மற்றும் மகனது பாசப்பிணைப்பினை கண்டு வீடே ஆச்சிரியப்பட்டது... சுபிக்ஷா அவர்கள்

இருவருக்கும் இடம் கொடுத்து ஒதுங்கி நின்று அவர்களது அன்பை வேடிக்கை பார்த்து ரசித்தாள்...

"ஜீவா... சாரிடா..." என்று ருத்ரஸ்ரீ மேலே பேசும் முன் கண்ணமர்த்தித் தடுத்து விட்டான் ஜெகன்... மருமகள் அதைப் பற்றிக் கேட்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறாள் இல்லையா...

அன்னை எதற்கு மன்னிப்பு கேட்டாள் என்று புரியாவிட்டாலும் ஜீவா சிரித்து வைத்தான்...

********************

"தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்

தெருவிலே பெண்களுக்கோயாத தொல்லை

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்

தெருவிலே பெண்களுக்கோயாத தொல்லை

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்

தெருவிலே பெண்களுக்கோயாத தொல்லை

தீராத விளையாட்டுப் பிள்ளை"

தனது இனிமையான குரலில் பாடி கொண்டிருந்தாள் சுபிக்ஷா... கிருஷ்ண ஜெயந்திக்காகப் பாட்டு கற்க வரும் குழந்தைகளுக்குக் கண்ணன் பாட்டைச் சொல்லி கொடுத்து கொண்டிருந்தாள்...

சித்தாரா நடத்தும் இசைப்பள்ளிக்கு தான் அவள் வந்திருந்தாள்... ஆரம்பத்தில் மறுத்த ஜீவா மனைவியின் சந்தோசத்திற்காகச் சரி என்றான்... ஆனால் கொண்டு வந்து விடுவது, கூட்டி செல்வது எல்லாம் தான் தான் செய்வேன் என்கிற நிபந்தனையோடு...

இதோ இப்போதும் மனைவியின் உடல்நலம் வேண்டி அத்தனை வேலைகளையும் விட்டு விட்டு அவளுக்காகக் காத்திருந்தான் ஜீவா...

கண்களை மூடி கொண்டு, வலது கையால் தொடையில் தாளம் போட்டபடி மனம் லயித்துப் பாடி கொண்டிருந்த மனையாளை காண, காண அவனின் மனதில் சொல்லொண்ணா துயரம் எழுந்தது...

தான் தொழிலை எந்தளவுக்கு நேசிக்கிறோமோ அதை விட அவள் சங்கீதத்தை உயிர்மூச்சாக எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்பதை இங்கு அவளை அழைத்துக் கொண்டு வரும் இந்த இரு மாத காலமாக அவன் கண் கூடாகக் காண்கிறான்...

அவளது ஆசையை நசித்துத் தனது ஆசையை அவளிடத்தில் திணித்து அவன் பண்ணிய காரியம் அவனைத் தலைக்குனிய செய்தது...

எல்லாக் குற்றவுணர்ச்சியும் சேர்ந்து அவனை ஆட்டுவிக்க இப்போது எல்லாம் அவன் அவளைப் பாட சொல்லி கேட்பது இல்லை...

இதோ இப்போதும் மனைவி பாடி கொண்டிருப்பதைக் காண காண அவனுக்கு அத்தனை குற்றவுணர்ச்சியாக இருந்தது...

அதே நேரம் மனதில் ஏதோ தோன்ற கண்களைத் திறந்த சுபிக்ஷா, வகுப்பின் அறைக்கதவுக்கு அப்பால் இரு கைகளையும் நெஞ்சோடு சேர்த்து கட்டியபடி சுவற்றில் சாய்ந்து நின்றிருந்த கணவனைத் திரும்பி பார்த்தாள்...

கண்ணிமைக்காது தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டு அவளது மனதில் வெட்கம் முளைவிட்டது... அவன் முகத்தில் புதிதாய் முளைத்திருந்த அடர் மீசை அவளது மனதினை மயக்கியது என்றும் போல்...

தனக்காக மீசை வளர்த்து நேசம் வளர்க்கும் கணவனைக் காண காண அவளது மனதில் காதல் அதிகரித்தது...

மேலும் இரு மாதங்கள் கடந்து சென்றது... இப்போது சுபிக்ஷாவிற்கு ஐந்து மாதம் முடிந்து ஆறாவது மாதம் நடந்து கொண்டிருந்தது... இப்போது அவளது உடலும் சற்று வலுவடைந்து குழந்தையும் நன்கு ஆரோக்கியத்துடன் இருந்தது... அவர்களின் பிள்ளையின் வளர்ச்சியைப் போல் அவர்களுக்கு இடையில் இருந்த காதலும் இன்னமும் இன்னமும் அதிகரித்துக் கொண்டு போனது...

அவள் வெளிப்படையாய் அவனிடத்தில் சொன்னாள்... அவன் சொல்லாவிட்டாலும் தன் செயலில் அதை உணர்த்தினான் அவளுக்கு...

இந்நிலையில் தான் அவளுக்குப் பிறந்தநாள் வந்தது... வெகு ஆவலோடு மனைவியின் பிறந்தநாளுக்காக ஜீவா காத்திருந்தான்...

அன்றிரவு பன்னிரெண்டு மணி வரை மனைவியிடம் ஏதேதோ பேசி கொண்டு இருந்து அவளைத் தூங்க விடாது செய்து நேரத்தை கடத்தினான் அவன்... அவளும் ஆவலே உருவாய் அவன் இன்ப அதிர்ச்சியாய் கொடுக்கப் போகும் பரிசுக்காக ஆர்வமுடன் காத்திருந்தாள்...

கணவனுடன் கொண்டாடும் முதல் பிறந்தநாள் அல்லவா... அதனால் அவளுள்ளும் ஒருவித எதிர்பார்ப்பு அதிகரித்து இருந்தது...

சரியாகப் பன்னிரெண்டு மணிக்குச் சிவப்பு ரோஜாக்கள் அடங்கிய பூங்கொத்தை கையில் வைத்துக் கொண்டு மனைவி முன் மண்டியிட்டு அமர்ந்தவன்,

"ஐ லவ் யூ..." என்க...

உணர்ச்சி பெருக்கோடு சொல்லாமல் ஏதோ செய்தி வாசிப்பது போல் கூறிய கணவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு பீறிட்டது... அடக்க மாட்டாது சிரித்துவிட்டாள்... அதைக் கண்டு பரிதாபமாய் அவளைப் பார்த்தவன்,

"ஏன் பேபி...?"

"ஐயோ மாமா... இன்னைக்கு என்னோட பிறந்தநாள்... லவ்வர்ஸ் டே இல்லை..." என்று அவள் தலையில் அடித்துக் கொள்ள...

அதைக் கேட்டு எழுந்தவன், "அது எனக்கும் தெரியும்... நீ தானே நான் காதலை சொல்லணும்னு சொன்ன... அதான் முதல்ல அதை ட்ரை பண்ணிட்டு அப்புறம் விஷ் பண்ணலாம்ன்னு நினைச்சேன்..." என்றான் பாவமாய்...

அதைக் கேட்டு சிரித்தவள் அவனது மீசையைப் பிடித்து இழுத்தபடி, "இது என் மாமாவுக்குச் செட்டாகலை..." என்க...

அவனோ, "ஆ... வலிக்குது பேபி..." என்று அலறினான்... பின்னே அவளுக்குக் காதல் அதிகரித்தால் முதலில் பலியாவது அவனது மீசை தான்... அதை அந்தப் பாடு படுத்தி எடுத்துவிடுவாள் அவனது மனையாள்...

அவனது அலறலில் ஆறுதலாய் அவனை அணைத்து கொண்டவள்,

"எப்பவும் கம்பீரமா இருக்கிற என் மாமா தான் எனக்குப் பிடிக்கும்... அன்னைக்கு நான் முதன்முதலா மும்பைக்கு வந்தப்போ இடது கையைப் பேண்ட் பாக்கெட்டில் விட்டுக்கிட்டு, வலது கையில் ரோஜா பூங்கொத்தை பிடிச்சிக்கிட்டு காலை அகல விரிச்சு அலட்சியமா, கம்பீரமா நின்றிருந்த அந்த ஜீவா மாமாவை தான் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்..."

அன்று தான் நின்றிருந்த தோற்றத்தை இம்மி பிசகாது வர்ணிக்கும் மனைவியைப் பிரமிப்பாய் பார்த்தவன், "அப்பவே என்னை நீ சைட் அடிச்சியா... உன்னை..." என்று கேலி பேச...

"என் புருசன் நான் சைட் அடிச்சேன்... உங்களுக்கு என்ன வந்தது..." வீம்பாய் கூறியவள்,

"மாமா... அது மாதிரி செய்யுங்களேன் ப்ளீஸ்..." என்று கெஞ்ச...

"அது உன் புருசன் கிட்ட தான் நீ கேட்கணும்..." குறும்பு சிரிப்புடன் அவன் கூற...

"மாமா..." என்று அவள் சிணுங்க...

"ஓகே ஓகே உனக்காக..." என்றவன் அவளை விட்டு விலகி நின்றான்...

பின் இரவு உடையின் பேண்ட் பையில் இடது கையை நுழைத்துக் கொண்டு, வலது கையில் ரோஜா பூங்கொத்தை ஏந்தியபடி கம்பீரமான நடையுடன், பார்வையில் சிறிது அலட்சியத்துடன் அவள் முன் வந்து நின்று பூங்கொத்தை அவளிடம் நீட்டியபடி,

"ஹேப்பிப் பேர்த் டே பேபி..." என்றான் தனக்கே உரிய கர்வம் கலந்த குரலில்...

"இப்போ... இப்போ தான் என் மாமா மாதிரி இருக்கு..." சந்தோசத்தில் கூவியவள்,

"தேங்க்ஸ்..." என்றபடி அவனது கன்னத்தில் முத்தமிட்டு அவனை அணைத்து கொண்டாள்...

பதிலுக்குத் தானும் அவளை அணைத்துக் கொண்டான்... கணவனின் அணைப்பில் வெகுநாட்களுக்குப் பின்

சுபிக்ஷாவின் உள்ளமும், உடலும் சேர்ந்து நெகிழத் துவங்கியது... அதை உணர்ந்தோ என்னவோ அவனது அணைப்பும் இறுகியது...

திடீரென மனைவியின் உடல்நிலை நியாபகத்தில் வர அவன் விலகப் போனான்... அதைத் தடுத்து நிறுத்திய சுபிக்ஷா வெட்கத்துடன்,

"உங்க மனைவி, குழந்தையைப் பத்திரமா பாதுகாக்க உங்களுக்குத் தெரியாதா மாமா..." என்க...

அதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டியவனோ வேறு மாதிரி எண்ணி கொண்டு இன்னமும் விலகி நின்றான்...

"நிச்சயம் பேபி... உங்க ரெண்டு பேரையும் பாதுகாப்பதை விட எனக்கு வேறு என்ன வேலை இருக்கு...?" என்று அவன் சொல்ல... அவளோ செய்வதறியாது அவனைப் பார்த்தாள்...

"நேரமாச்சு படுக்கலாம்..." என்று அவன் கூற... அவள் எரிச்சலுடன் படுக்கைக்கு வந்தாள்...

'அநியாயத்துக்கு இப்படி நல்லவங்களா இருக்கீங்களே மாமா...' மனதுக்குள் அவனை வைதபடி அவனை அணைத்துக் கொண்டு படுத்தாள்...

பெண்ணவளுக்குத் தானாகக் கணவனிடத்தில் செல்ல பெரும் தயக்கமாக இருந்தது... எப்போதுமே அவள் தான் முதலடி எடுத்து வைக்கிறாள்... இன்று அவன் எடுத்து வைக்கட்டும் என்று எண்ணினாள் போலும்...

அவனோ பெருத்த சிந்தனையில் இருந்தான்... தனக்கு இந்தப் பாழாய் போன காதல் ஒத்தே வராதா என்று அவனுக்குப் பெரும் கவலையாக இருந்தது...

'இந்த 'ஐ லவ் யூ'வை எப்படித்தான் சொல்வது...?' என்ற யோசனை அவனது மனதுக்குள் விடாமல் ஓடி கொண்டிருந்தது...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 29

அடர் பச்சை நிற புடவையின் இரு கரையிலும் தவழும் சின்னக் கண்ணன் தங்க பட்டு நூலிழையில் அழகாக நெய்யப்பட்டு இருக்க, முந்தானையில் வெண்ணெய் உண்ணும் குறும்பு கண்ணனின் அழகு திருவுருவம் கண்ணைப் பறித்து மனதையும் அழகாய் கொள்ளை கொண்டது... அந்தக் கண்ணனின் கண்ணில் தெரிந்த குறும்பு அத்தனை தத்ரூபமாக இருந்தது...

"ஐயோ... செம அழகு மாமா..."

பட்டு புடவையைக் கையில் வைத்துக் கொண்டு பார்த்திருந்த சுபிக்ஷாவின் கண்கள் அகன்றது ஆச்சிரியத்தில்... அவளது மயக்கும் விழிகள் என்றும் போல் இன்றும் அவனை மயக்க அதில் தனது இதழ்களை ஆசையாய் பதித்த ஜீவா,

"பிடிச்சியிருக்கா...?" என்று கேட்டபடி ஆர்வமாய்ப் பார்த்தான் தன் மனையாளை...

"பிடிச்சியிருக்காவா...? ரொம்ப ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்று புடவையைத் தன்னோடு சேர்த்து அணைத்து கொண்டாள்...

"புடவை மட்டும் தானா பிடிச்சியிருக்கு...? புடவையை எடுத்துட்டு வந்தவன் இல்லையா...?"

பதில் தெரிந்து கொண்டே கேள்வி கேட்கும் கணவனின் குறும்பு புரிந்தாலும், "அதை விட ரொம்ப ரொம்ப ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்று கண்ணைச் சிமிட்டியவள்,

"இந்த ஆப்பிளை பிடிக்காம போகுமா...?" என்று அவனது மீசையைப் பிடித்துக் காதலோடு சொல்ல...

அதில் "ஆ..." என்று அலறியவன்,

"எப்போ பாரு இதையே பிடிச்சு ஏன் இழுக்கிற...?" என்று கோபம் போல் கேட்டாலும் அதில் காதலே நிறைந்திருந்தது அவனது குரலில்...

"இந்தச் சிவந்த முகத்துல இந்த மீசை எவ்வளவு அழகாயிருக்கு தெரியுமா மாமா...?" என்று அவனிடம் கேட்டவளின் கண்களில் அவனுக்காக நேசம் பொங்கி வழிந்தது...

"அப்படியா சொல்ற...?" என்று அவன் அறியாமையுடன் மீசையைத் தடவி கொள்ள...

"போங்க மாமா... உங்களை மாதிரி நான் அழகா இருந்தா பெருமை பீத்தியே ஓய்ஞ்சு போயிருப்பேன்... ரொம்பத்தான் தன்னடக்கம் உங்களுக்கு..."

அதில் அவனது முகம் சுருங்கி போனது...

"இந்த அழகு, அது கொடுத்த திமிர், அதனால் நான் பட்டது எல்லாம் போதும் பேபி..."

கணவனது குரலில் தெரிந்த வருத்தத்தில் அவள் சட்டென்று பேச்சை மாற்றினாள்...

"இந்த நகையும் ரொம்ப நல்லாயிருக்கு மாமா..." அவளின் வளைகாப்புக்காகப் பட்டு புடவையோடு நகையும் சேர்த்து வாங்கி வந்திருந்தான் அவன்...

"உனக்குப் பிடிச்சியிருக்கு தானே... உன்னைக் கேட்காம எடுத்துட்டேன்னு கோபம் இல்லையே..."

ஏனோ தன்னவளின் வளைகாப்பிற்குப் பரிசு கொடுத்து அசத்த வேண்டும் என்று எண்ணி அவன் தானே இந்த வடிவமைப்பை தேர்வு செய்து இந்தப் புடவையை நெய்யச்

சொன்னது... இப்போது சுபிக்ஷாவிற்கு ஒன்பதாவது மாதம்...

"ம்ஹூம் கோபம் இல்லை... என் மாமாவுக்கு என் மனசு வருத்தப்படும் படியா நடந்துக்கத் தெரியாது... நான் நினைக்கிறதை அப்படியே செஞ்சு முடிப்பீங்க நீங்க... அது எனக்கு நல்லா தெரியும்..." என்றவள் அன்று திருமணத்திற்கு அவன் வாங்கிக் கொடுத்த நகை, புடவையைப் பற்றிச் சொன்னவள்,

"அப்பவே என் மனசை புரிஞ்சு நடந்திருக்கிறீங்க... அப்படிப்பட்ட உங்களுக்குத் தெரியாதா எனக்கு என்ன பிடிக்கும்ன்னு..."

மனைவி சொன்னதும் அன்றைய நாள் நினைவில் அவளை அணைத்துக் கொண்டான் அவன்...

"உண்மை தான் பேபி... அன்னைக்கு உனக்கு நிச்சயம் பண்ணும் போது வந்தது எதிர்பாராத ஒண்ணு தான்... ஆனால் புடவை எடுக்கும் போது வந்தது அது தெரிஞ்சே தான் வந்தேன்... வினீ கூடப் பேசிக்கிட்டு இருந்தாலும் என் கண் முழுசும் உன் மேல் தான்... உனக்குப் பிடிச்சதை அபி வேண்டாம்ன்னு சொல்லும் போது நீ பரிதாபமா முழிச்சியே அப்பவே அந்த அபியின் தலையில் நாலு தட்டு தட்டலாமான்னு கூட யோசிச்சேன்... உனக்குப் பிடிக்காததைச் செய்யச் சொல்லி ஃபோர்ஸ் பண்ண அவன் யாரு...? முட்டாள்..." என்று அவன் அபிமன்யுவை திட்ட துவங்க...

"இப்போ எதுக்குத் தேவையில்லாத பேச்சு... நம்மைப் பற்றி மட்டும் பேசுங்க..." என்று அதைப் பற்றிப் பேச விரும்பாது அவள் சொல்ல,

அவளது பேச்சில் அவளது முகத்தைக் கைகளில் தாங்கியவன், "நான் இப்படி உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது உனக்குக் கோபமா...?"

"கோபமில்லைன்னு பொய் சொல்ல மாட்டேன்... கொஞ்சம் கோபம் தான்... ஆனா இப்போ நான் சந்தோசமா இருக்கிறேன்... அது மட்டும் போதும் எனக்கு... வேறு எதைப் பத்தியும் பேச நான் விரும்பலை..."

"ஆனா எனக்கு அப்படித் தோணலை பேபி... நான் செஞ்சது சரின்னு தான் எனக்குத் தோணுது... மனசுக்கு பிடிச்சவளை கல்யாணம் பண்றதுல என்ன தப்பியிருக்கு..."

அவன் தன் நிலையில் நின்றான்...

"சரிங்க மாமா நீங்க செஞ்சது சரி தான்... சரியா...?" என்று அவனுக்கு விட்டு கொடுத்தவள்,

"அன்னைக்கு அந்தப் புடவை, நகையைப் பார்த்து தான் உங்களோட அன்பை புரிஞ்சிக்கிட்டேன்... பழிவாங்க நீங்க கல்யாணம் பண்ணலை... என்னை எனக்காகத் தான் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்கன்னு... அதனால் தான் மறுநாள் உங்களைத் தேடி வரணும்ன்னு நினைச்சேன்... ஆனா அன்னைக்கே நீங்க என்னடா அப்படி ஒரு பேட்டி கொடுக்கறீங்க... எனக்கு எப்படி இருந்திருக்கும்..." என்று சோகமாகச் சொன்னவள் அவனது மீசையைப் பிடித்திழுத்து,

"ஆனாலும் நான் நம்பலையே... என் மாமா தப்பு பண்ண மாட்டாருன்னு நம்பிக்கையோடு கிளம்பி வந்தேன்..."

இப்போது அவள் மீசை பிடித்திழுத்தது கூட அவனுக்கு வலிக்கவில்லை... மாறாக அவளது நேசம் அவனைச் சுகமாய்த் தாலாட்டியது...

"என்னை நல்லா புரிஞ்சு வச்சியிருக்கப் பேபி... உண்மையில் நான் கொடுத்து வச்சவன்..." என்று மனைவியை அணைத்து கொண்டவன்,

"அன்னைக்குக் காலையில் தான் அபி என் கிட்ட அந்த மாதிரி பேசினான்... ஒருவேளை நீ கேட்கிற காதல் அவன் கிட்ட கிடைக்குமோன்னு நினைச்சு தான் நான் அவன் கிட்ட அப்படிச் சொன்னது... ஆனாலும் மனசுக்குள்ள ஒரு சின்ன எதிர்பார்ப்பு நீ என்னைத் தேடி வருவியோன்னு... அதனால் தான் அப்படி ஒரு பேட்டி கொடுத்தேன்... எப்பவும் இந்த மாதிரி கேள்விகளுக்கு நான் பதில் சொல்றது கிடையாது..."

ஆம்... அதை அவன் சொல்லி அவள் கேட்டிருக்கிறாளே...

"ஆனா அன்னைக்கு நான் ஏன் அப்படிச் சொன்னேன் தெரியுமா...? அதைக் கேட்டுட்டு நீ என்னைத் தேடி ஓடி வரணும்ன்னு தான்... எப்பவும் ஸ்டேட்டஸ் பார்க்கிற நான் அன்னைக்கு உனக்காக என்னோட ஸ்டேட்டசை விட்டு இறங்கி வந்து அப்படி ஒரு பேட்டி கொடுத்தேன்... திருமண முறிவு என்பது எனக்குப் பெரிய தலைகுனிவை தரும்ன்னு தெரிஞ்சு இருந்தும் நான் வேணும்ன்னு தான் அப்படிப் பேசினேன்... எனக்கு என்னோட ஸ்டேட்டசை விட நீ தான் முக்கியம் பேபி..."

எதற்காகவும், யாருக்காகவும் தன்னோட கௌரவத்தை, அந்தஸ்தை விட்டு கொடுக்காத கணவன் தனக்காக அதை எல்லாம் விட்டுக் கொடுத்திருக்கிறான் என்றால் அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது அவனது காதலை எண்ணி...

"ஆமாம் அப்படிச் சொன்னவர் தான் நான் அங்கே வந்தப்போ ஏன் வந்தேன்னு கேட்டீங்களாக்கும்...?" என்று வேண்டுமென்றே அவள் முறுக்கி கொள்ள...

"பின்னே என்ன பேபி... ஒரு வாரம் உன்னைப் பார்க்க முடியாம நான் பட்ட கஷ்டம் எனக்குத் தான் தெரியும்... எங்குப் பார்த்தாலும் நீ தான் தெரிஞ்ச... ரொம்பத்தான் மனுசனை படுத்தி எடுத்திட்ட பேபி... அந்தக் கோபத்தில்

தான் அப்படிக் கேட்டேன்... ஆனால் மனசுக்குள் அப்படி ஒரு சந்தோசம் நீ வந்தது கண்டு..."

அதன்பின் அவன் விலகி போய்விடு என்று சொன்னது அவளுக்கு நியாபகத்தில் வந்து வேதனை கொள்ளச் செய்த போதும் அவள் அதை அவனிடத்தில் கேட்காது பேச்சை மாற்ற எண்ணி,

"ம்... ம்... கேட்டேன்... கேட்டேன்... நான் தூங்குறதா நினைச்சு நீங்க உளறினதை எல்லாத்தையும் நான் கேட்டேன்..."

அதைக் கேட்டதும் அந்த வலிமையான ஆண்மகன் முகத்தில் சிறு வெட்கத்தின் சாயல் படர்ந்தது... அவனது முகம் கூட லேசாகச் சிவந்து போனது...

"கேட்டுட்டியா...?"

"எல்லாத்தையும் கேட்டேன்... என் மாமாவுக்கு என்னை எந்தளவுக்குப் பிடிக்கும்ன்னும் தெரிஞ்சுகிட்டேன்..." என்று அவள் அவனை அணைத்து கொண்டாள்...

அதில் அவனும் சுகமாய் அடங்கியவன், "பேபி... பூஜாவுக்கும் புடவை, நகை வாங்கி வந்திருக்கிறேன்... நீ கொண்டு போய்க் கொடுக்கிறியா...?"

தயக்கத்துடன் சொன்னவனை ஆச்சிரியமாகப் பார்த்தவள், "அண்ணி உங்க தங்கை மாமா..."

"ம்... அவளுக்கு என் மேல் கொஞ்சம் கோபம்..." என்றவன் அவர்களது திருமணத்தின் போது தான் பேசியதை அப்படியே மனைவியிடத்தில் கூற...

"ஐயோ மாமா... நீங்க அடங்கவே மாட்டீங்களா...?" என்று அவள் தலையில் அடித்துக் கொண்டாள்... இப்படி அவன் உறவுகளைச் சிக்கலாக்கி வைத்திருப்பதைக் கண்டு...

"இப்ப அப்படி எல்லாம் இல்லை பேபி... பாரு நான் உன் கிட்ட அடங்கி எப்படிச் சமத்தா இருக்கேன்னு..." பாவம் போல் கூறியவனின் கண்களில் அத்தனை குறும்பு வழிந்தது...

"ம்..." என்று அவள் போலியாகக் கணவனை முறைக்க...

"ஐயோ பயமாயிருக்கே..." என்று அவன் அவளது புடவை முந்தானையில் ஒளிந்து கொள்ள இடம் தேட...

கம்பீரமான அந்த ஆண்மகனின் இந்தச் செயல் பெண்ணவள் மனதை மயக்கியது அழகிய கவிதையாக...

"நீங்களே அண்ணி கிட்ட கொடுங்க மாமா... அவங்களும் சந்தோசப்படுவாங்க..." என்று அவள் கூற...

"நானா...?" அவனுக்கு அத்தனை தயக்கமாய் இருந்தது...

"நீங்களே தான்... வேணும்ன்னா நான் உங்க கூடத் துணைக்கு வர்றேன்..."

"ஆஹா... ரொம்பப் பலம் வாய்ந்த துணை தான்..." என்று வாய்விட்டு சிரித்தவன்,

"சரி வா..." என்று போனால் போகிறது என்பது போல் அவன் அவளை அழைத்தான்...

"இந்த லொள்ளுக்கு ஒண்ணும் குறைச்சலில்லை..." என்று நொடித்துக் கொண்டாலும் கணவனுடன் செல்ல அவள் தயங்கவில்லை...

அண்ணனும், அண்ணியும் தன்னைத் தேடி தனது அறைக்கு வந்திருப்பதைக் கண்டு பூஜாவிற்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... கிருஷ்ணா, குழந்தைகள் எல்லோரும் அங்கு இருந்தனர்...

"மாமா..." என்று வினீதா மாமனிடம் தாவி கொண்டது...

மருமகளை அள்ளி தூக்கி கொண்டவனுக்கு என்ன பேசுவது, எப்படி ஆரம்பிப்பது என்று பெரும் தயக்கமாக இருந்தது...

"கொடுங்க மாமா..." மனைவியவள் தான் எடுத்து கொடுத்தாள்...

சுபிக்ஷாவிடம் இருந்து புடவை, நகையை வாங்கித் தங்கையிடம் கொடுத்தவன், "இது உனக்குப் பூஜா..." என்க...

அவளோ வியப்பின் உச்சிக்கே சென்றாள்...

"எதுக்கு ஜீவா இதெல்லாம்...?"

"ஏன் நான் உனக்கு எடுத்து தர கூடாதா...?"

'பார்றா... இப்போ தான் இவன் கண்ணுக்குத் தங்கச்சி தெரிஞ்சாளாமா...?' கிருஷ்ணா மனதுக்குள் கவுண்டர் கொடுத்துக் கொண்டான்...

சகோதரனின் வார்த்தையில் பூஜாவின் கண்கள் கலங்கியது... ஆனாலும் சமாளித்துக் கொண்டு,

"இப்பத்தான் நான் உன் கண்ணுக்கு தெரியறேன்னா...?" என்று கோபம் போல் கேட்டாலும் அவளின் குரலில் அப்படியொரு ஆதங்கம் இருந்தது...

அதில் வினீதாவை கட்டிலில் இறக்கிவிட்டு விட்டு, "கொஞ்சம் இங்கே இரு பேபி..." என்றவன் தங்கையிடம் வந்து,

"உன் கூடப் பிறந்திருந்தாலும் உன் அளவுக்கு அறிவு எனக்கு இல்லாம போச்சு பூஜா... நீ உன் வாழ்க்கையை

அழகா அமைச்சிக்கிட்ட... நான் தான் உன் அளவுக்கு வாழ்க்கையைப் படிக்காம போயிட்டேன்... சாரி..."

அண்ணன் மன்னிப்பு கேட்டதும் தங்கையின் கோபம் பறந்தோடி போயிற்று என்றே சொல்லலாம்...

"அண்ணி... என் வீட்டுக்காரர் செலக்சன் எப்படியிருக்குன்னு பாருங்க...?"

"அதெல்லாம் என் அண்ணா நல்லா தான் செலக்ட் பண்ணியிருப்பான்... ஏன்னா உன்னைச் செலக்ட் பண்ணியிருக்கிறான் இல்லையா..."

"அண்ணி... இதுக்கு மேலே நான் வாய் திறந்தேன்னா என்னை என்னன்னு கேளுங்க..." என்று சுபிக்ஷா வாயை மூடி கொண்டாள்...

பூஜா புடவையைப் பிரித்துப் பார்த்தவள், "ரொம்ப நல்லாயிருக்குண்ணா..." என்று பாராட்டினாள்...

"மாமா... அந்தப் புடவையை விட இது தான் அழகாயிருக்கு..." என்று மனைவி முகத்தைச் சுருக்க...

"இதே மாதிரி உனக்கும் ஒரு புடவை எடுத்து தர்றேன்... ஆனால் இது பூஜாவுக்கு மட்டும் தான்..." என்று கணவன் சொன்னதைக் கேட்டு அவளது முகம் மலர்ந்தது...

இதையெல்லாம் கிருஷ்ணா அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருந்தாலும் அவன் ஒன்றும் பேசவில்லை... ஜீவா தான் வலிய அவனிடத்தில் வந்தான்...

"சாரி கிருஷ்ணா... உன்னைத் தேவையில்லாம பேசியதுக்கு..."

அதைக் கேட்டு சற்றும் முகம் இளகாத கிருஷ்ணா, "அப்படின்னா நீ என்னை மச்சான்னு கூப்பிடணும்..."

என்க...

"மச்சானா..." வேப்பங்காயை உண்டது போல் முகத்தைச் சுளித்தான் ஜீவா...

"ஆமாம்... நீ எனக்கு மச்சான்... நான் உனக்கு மச்சான்... அதனால் நீ அப்படித்தான் கூப்பிடணும்..." என்றான் கிருஷ்ணா சிரித்தபடி...

மச்சினனின் மனமாற்றம் அவனிடத்தில் இளக்கத்தைக் கொண்டு வந்திருந்தது... இந்தச் சில மாதங்களாக ஜீவாவை அருகில் இருந்து பார்க்கிறானே... அவன் தன் தங்கையை எந்தளவுக்குக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொள்கிறான் என்று...

அத்தனை தொழில்களையும் ஒற்றை ஆளாய் சமாளித்த போதும், அத்தனை வேலைகள் வரிசை கட்டி நின்ற போதும் மனைவிக்காக எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டு அவளுக்காகத் தனியாய் நேரம் செலவழித்தான் அவன்... தான் கூட அது போல் பூஜாவிடம் நடந்து கொண்டதாய் கிருஷ்ணாவிற்கு நியாபகம் இல்லை...

எல்லாக் கணவன், மனைவிக்குள் வரும் சிறு சிறு சலசலப்பு அவர்களுக்கு இடையில் எப்போதாவது வருவது உண்டு... ஆனால் அது கூட இல்லாமல் சிறு முகச்சுளிப்பு இல்லாமல் மனைவியைத் தாங்கும் மச்சினனை கண்டு அவனுக்குப் பெருத்த ஆச்சிரியமாய்த் தான்...

அண்ணன் கூறியதை கேட்டு சுபிக்ஷா வாய் மூடி கொண்டு களுக்கென்று சிரித்தாள்...

"என் நிலைமை உனக்குச் சிரிப்பா இருக்கா...?" மனைவியைப் பார்த்துப் பரிதாபமாகக் கேட்டான் அவள் கணவன்...

"ப்ளீஸ் மாமா... எனக்காக ஒரு தடவை கூப்பிட்டு பாருங்களேன்..."

மனைவி போட்ட 'ப்ளீஸ்'சில் ஜீவாவின் மனம் பாகாய் உருக அடுத்த நொடி, "மச்சான்..." என்றழைத்தபடி கிருஷ்ணாவை கட்டி தழுவி கொண்டான் பாசத்தோடு...

"இந்தக் கண் கொள்ளா காட்சியை ஃபோட்டோ எடுத்தே ஆகணும்..." என்று கேலி செய்தபடி பூஜா தனது அலைப்பேசியில் இருவரின் அன்பை புகைப்படமாய்ப் பதிவு செய்து கொண்டாள்...

பெரியவர்கள் கொண்டாட்டத்தைக் கண்டு சிறியவர்களும் கைத்தட்டி ஆர்ப்பரிக்க அங்கே உற்சாகம் கரை புரண்டு ஓடியது...

வினீதாவை அணைத்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்த மனைவியைக் கண்ட ஜீவாவின் மனம் நிறைந்திருந்தது... இவள் இல்லை என்றால் இந்த உறவுகள் எதுவும் அவனுக்குச் சாத்தியமாகி இருக்காது...

அன்பை மட்டும் வழங்க தெரிந்தவளுக்கு அவனும் அந்த அன்பை அள்ளி வழங்க தவறவில்லை... ஆனாலும் அவன் அந்த அன்பை உணரச் செய்தவள் அவளின்றி வேறு யார்...

மனைவியைப் பார்த்தவனின் மனம் கசிந்தது நேசத்தில்...!!!

வளைகாப்பு விழாவிற்குக் கார்த்திக், சித்தாரா மற்றும் அவர்களது மருமகள் மீராவும் வந்திருந்தனர்... கொசுறாக நம்ம அபிமன்யுவும்...

அவர்களிடம் பாரா முகம் காட்டாமல் புன்னகை முகமாய் வரவேற்ற ஜீவாவை கண்டு எல்லோருக்குமே ஆச்சிரியம் தான்... கடைசியில் தயங்கி தயங்கி உள்ளே வந்த அபிமன்யுவை பார்த்து ஜீவா,

"இவ்வளவு லேட்டாவா வர்றது... உன்னைத் தான் ரொம்ப நேரமா எதிர்பார்த்துட்டு இருந்தேன்..." என்று சொன்னதும் அபிமன்யு மனதிற்குள் பக்கென்று அதிர்ந்தான்...

'அடிப்பாவி சுபி... கடைசி வரை நீ என்னைப் பத்தி சொல்லவே இல்லையா...? அப்போ நீ கொடுத்த கியாரண்ட்டி போலியா...?' மனதுக்குள் பயத்துடன் அலறினான்...

"அண்ணா..." என்று அவன் பயத்துடன் பார்த்தான் ஜீவாவை...

அவனின் பயத்தைக் கண்டு ஜீவாவிற்குச் சிரிப்பு வந்தது... சிரித்தபடி அவனின் தோளில் தட்டியவன்,

"சுபி எல்லாத்தையும் சொன்னாள்... நடிக்கத் தெரியாத நீங்க ரெண்டு பேரும் நடிக்க ட்ரை பண்ணியது தான் இங்கே செம காமெடி... அதெல்லாம் எனக்கு மட்டும் தான் வரும்..." என்றான் கெத்தாய்...

"உண்மை தான் ஜீவா... அதில் ஆஸ்கார் அவார்ட்டே உனக்குக் கொடுக்கலாம்..." ஒத்துக் கொண்டான் அபிமன்யு...

"நீ என்னைக் கேலி பண்றியா...?" ஒரு மாதிரி குரலில் அவன் வினவ...

"ச்சேச்சே அப்படி எல்லாம் இல்லை..." பதறி போய் மறுத்த அபிமன்யுவை கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது...

தான் அபிமன்யுவிடத்தில் இருந்தால் நிச்சயம் ஒரு கொலை விழுந்திருக்கும்... ஆனால் இவனைப் போல் பெருந்தன்மையாகப் போக அவனால் நிச்சயம் முடியாது...

அதை அவனிடத்தில் சொல்லவும் செய்தான்...

"உன்னளவுக்குப் பெருந்தன்மை எனக்குக் கிடையாது அபி..." என்றான் வருந்தும் குரலில்...

அதைக் கேட்டு அபிமன்யு ஒரு நொடி பேசாதிருந்தான்... பழைய நினைவுகள் அவனது மனதில் ஓடியது போலும்...

"நடந்து முடிந்த எதையும் மாற்ற முடியாது ஜீவா... என் அண்ணன் நீ, இப்போது சுபி உன் மனைவி... அப்படி என்றால் அவள் எனக்கு அண்ணி போல்... இனி இது மாதிரி பேசி கொண்டு இருக்காதே..."

கண்டிப்பும், கறாருமாய் அபிமன்யு சொன்னாலும் அதில் அவனின் பாசம் ஒளிந்திருந்தது...

அன்றும் அவன் தனக்காக அப்படிப் பேசிவிட்டு போனதை இப்போது நினைவு கூர்ந்த ஜீவா, "உண்மையில் நீ க்ரேட் தான் அபி..." என்றான் மனதார...

"சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கோ அபி..." என்று ஜீவா அண்ணனாகத் தம்பியிடம் உரிமையுடன் கூற...

"நிச்சயம் பண்ணிக்குவேன்..." என்ற அபிமன்யு, "ஜீவா... பேசாம நீயே மும்பையில் ஒரு பொண்ணைப் பாரேன்... தமிழ்நாட்டு பொண்ணுங்க பார்த்து பார்த்துச் சலித்துப் போச்சு..." என்று அவன் அலுத்துக் கொள்ள...

"மொழி தெரியாத இந்தி பொண்ணைக் கட்டிக்கிட்டு நீ என்னடா பண்ணுவ...?"

"காதலுக்கு மொழி தேவையில்லை ஜீவா..." என்று கண்ணடித்து அபிமன்யு விசமமாகக் கூற...

அதைக் கண்டு ஜீவாவுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது...

"தமிழ்நாட்டு பொண்ணாவது தாலி சென்ட்டிமென்ட்க்கு கொஞ்சம் அடங்கிப் போவாங்க... ஆனா மும்பை பெண்கள் அப்படி அடங்கிப் போவாங்களான்னு எனக்குத் தெரியலை... இருந்தாலும் நீ சொல்றதால் நான் இதைச் செய்கிறேன்... இனி உன்னை அந்த ஆண்டவன் தான் காப்பாத்தணும்..." என்று கேலி செய்த ஜீவா அபிமன்யுவை அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்றான்...

அதற்குள் சுபிக்ஷாவை அலங்காரம் செய்து மனையில் அமர்த்தியிருந்தனர்... தாய்மை கொடுத்த பூரிப்பில் பேரழகுடன் மிளிர்ந்த மனைவியைக் கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டு இருந்தான் ஜீவா... அந்த நொடி எல்லாமே வசமானது போல் உள்ளத்தில் ஒரு நிறைவு, நிம்மதி தோன்றியது அவனுள்...

எப்போதும் ஓடி கொண்டிருக்கும் அவன் இன்று தான் இளைப்பாறியது போல் ஒரு நிறைவான உணர்வு...!!!

**************************

வளைகாப்பு முடிந்த சில நாட்களில் சுபிக்ஷாவிற்குப் பிரசவ வலி வர அவளை மருத்துவமனையில் அனுமதித்தனர்... கூடவே இருந்து அவளுக்கு ஆறுதல் சொன்ன கணவனிடம் அவள் எதையோ தேடி ஏமாந்தாள்... மருத்துவர்கள் சொன்ன குறிப்பின் படி வலி தாங்கி கொண்டு அவள் செயல்பட்ட போதும் அவளது கண்கள் தன்னவனைத் தான் விடாமல் பார்த்துக் கொண்டிருந்தது...

மனைவி தன்னைப் பார்ப்பதை உணர்ந்து அவன் அவளது கையை ஆறுதலாகப் பிடித்துக் கொண்டு, "இன்னும் கொஞ்ச நேரம் தான் பேபி..." என்று தைரியமூட்டினான்...

அவளோ அவனது வாயால் 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்று சொல்வானா என்று எதிர்பார்த்தாள்... இந்த மாதிரி நேரத்தில் ஆண்கள் மனம்

மிகவும் நெகிழ்ந்திருக்கும் என்று அவள் கேள்விப்பட்டு இருக்கிறாள்...

ஆனால் இப்போதும் கணவன் அப்படி மனம் நெகிழாமல் இருப்பது கண்டு அவளுக்கு அத்தனை வேதனையாக இருந்தது...

அந்த மன வேதனையோடு, உடல் வேதனையும் சேர்ந்து கொள்ள வலியோடு தங்களது பெண்ணரசியைப் பெற்றெடுத்தாள் அவள்... குழந்தையின் அழுகை ஒலி கூட அவளது காதில் விழவில்லை...

உடல் சோர்வோடு மனச்சோர்வும் சேர்ந்து அவளை வாட்டியெடுக்க ஜீவனற்று போய் விழிகளை மூடி கொண்டாள் தன் உயிர் ஜீவனான ஜீவாவை நினைத்து...

அந்தக் கணம் அவளது வலது உள்ளங்கை ஈரத்தை உணர்ந்தது... என்ன என்று விழித்துப் பார்த்தவள் சந்தோசமாய் அதிர்ந்தாள்... அவளது கணவன் தான் அதில் முகம் புதைத்திருந்தான்... அவனது விழிகளில் இருந்து சொட்டிய கண்ணீரில் வந்தது தான் அந்த ஈரம்...

"மாமா..." காதல் அதிகரித்த உணர்ச்சி பெருக்கில் அவள் குரல் நடுங்க அவனை அழைக்க...

அதில் தலை நிமிர்ந்தவன் தன் கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டு, "ஆர் யு ஆல்ரைட் பேபி...?" என்று கேட்டான் தவிப்புடன்...

தன்னை மட்டுமே யோசித்து, தனக்காக மட்டுமே செயல்பட்டு அவனது மனதின் காதலை கூடச் சொல்ல மறந்து அவளது காதலை உயிர்ப்பிக்கப் போராடும் கணவனின் காதல் அவளது மனதில் சுகமாய் இறங்கியது...

என்றோ செய்த ஒரு தவறுக்காக இன்று வரை தனது முகமலர்ச்சிக்காகப் பாடுபடும் கணவனைக் கண்டு மனம்

காதலில் கசிந்துருக அவனை நோக்கி இரு கரத்தை நீட்டினாள்...

"என்ன பேபி இது...? இத்தனை பேர் இருக்கும் போது..." கூச்சத்தில் அவன் முகம் சிவந்தான்...

"என்னோட மாமாவை நான் கட்டி பிடிப்பேன்... என்னவும் செய்வேன்..." என்று சொல்லியபடி அவள் தனது உடல் வேதனையைக் கூட மறந்து அவனை இழுத்து அணைத்து கொண்டாள்...

சுற்றியிருந்த மருத்துவர், செவிலிப்பெண்கள் இதைக் கண்டு சிரித்தனர்...

அவளோ அதைக் கண்டு கொள்ளாது, "ஐ லவ் யூ மாமா..." என்றாள் ரகசியமாய்க் கணவன் காதில் அவனின் காதலை உணர்ந்தவளாய்...

அதை உணர்ந்தவனாய் அவனது அணைப்பும் இறுகியது... பெற்றோரின் பிணைப்பை கண்டு பொறுக்க முடியாது அவர்களது மகள் 'வீ'லென்று கத்த அதில் இருவரும் அவசரமாய் விலகினர்...

"இப்பவே என்னை என் புருசன் கிட்ட இருந்து பிரிக்கிறாள்... இனி வளர்ந்து வந்து என்னவெல்லாம் செய்வாளோ...?" அழுத மகளைக் கண்டு அவள் முணுமுணுக்க...

"எத்தனை குழந்தை வந்தாலும் என்னோட முதல் குழந்தை நீ தான் பேபி..." என்று காதலோடு மனைவியின் நெற்றியில் அவன் முத்தமிட....

"இதை இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்..." என்று குறும்பாகக் கண்ணைச் சிமிட்டிய மனையாளின் நெற்றியோடு தன் நெற்றியை விளையாட்டாய் முட்டியவன் மனதில் அப்படியொரு மகிழ்ச்சி ஆரவாரம்...

********************

"பேபி... இந்தப் பெயர் நல்லாவே இல்லை... கொஞ்சம் மாடர்ன்னா வைக்கக் கூடாதா...?" மனைவியிடம் கெஞ்சி கொண்டிருந்தான் ஜீவா...

அவள் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்து ஒரு மாதகாலமாகி விட்டது... மகளுக்குப் பெயர் வைப்பதில் தான் இருவருக்கும் பிரச்சினை...

"ஏன் சுஜீதா பெயருக்கு என்ன குறைச்சல்...?" அவளோ சீறும் பெண் புலியாய் சீற...

அதைக் கண்டு அந்த ஆண் புலி சற்று அடங்கித்தான் போனது... ஆனாலும் அவனது முகத்தில் சிறு சுணக்கம் இருந்தது...

அவனது சுணக்கத்தைக் கண்டு மனதுக்குள் சிரித்தபடி அவனுடன் இழைந்து கொண்டு அமர்ந்தவள், "ஏன் இந்தப் பெயர் வச்சேன்னு தெரியுமா மாமா...?"

அவள் சும்மா கேட்டாலே உருகுபவன் இப்படி இழைந்தபடி கேட்டால்...? அதில் இன்னமும் உருகி போனவன்,

"உனக்குப் பிடிச்சியிருந்தா சரி..." என்றான் மனதார...

அதில் மனம் நிறைய நேசத்தோடு நோக்கியவள், "இந்தப் பெயரில் உங்க பெயரோட முதல் எழுத்தும், என் பெயரோட முதல் எழுத்தும் சேர்ந்து வர்றதை நீங்க கவனிச்சீங்களா...?"

அதை அவன் சற்றும் கவனிக்கவில்லை... இதில் இப்படி ஒன்று இருக்கிறது என்பதைப் பற்றி அவன் யோசிக்கவும் இல்லை...

"இவள் நம்மளோட ப்ராடெக்ட் இல்லையா... அதான்..." என்று அவள் வேடிக்கையாய் கூற...

அதைக் கேட்டு அவன் வாய்விட்டு சிரித்தவன்,

"சங்கீதம் பாடும் பொண்ணு தொழில் பத்தி எல்லாம் பேசுது..." மனைவியின் மூக்கை பிடித்து ஆட்டி கொஞ்சி கொண்டு கேட்க...

"பிசினஸ்க்காரன் பொண்டாட்டி இப்படித்தான் பேசுவாள்..." பெருமையுடன் சொன்னவளை கட்டி பிடித்துக் கொண்டான் ஜீவா...

"நீ சொன்ன பெயரை வச்சிடலாம்..." என்று அவன் இறுதியாய் முடித்துவிட்டான்...

ஒரு நல்ல நாளில் அவர்களது மகளுக்குச் சுஜீதா என்று பெயர் சூட்டப்பட்டது...

அதற்கு அடுத்து சென்ற இரு மாதமும் வெகு வேகமாகச் சென்றது இருவருக்கும்... அவர்களது பெரும்பாலான நேரத்தை அவர்களது மகள் களவாடி கொண்டாள்...

சுபிக்ஷாவை பொருத்தவரை அன்பான கணவன், அழகான குழந்தை என்று நிறைவாக வாழ்க்கை சென்றது... ஆம் அவர்களது பெண்ணரசி அழகில் தனது தகப்பனை கொண்டிருந்தாள்...

அவனுக்கும் மகளின் ஒவ்வொரு அசைவையும் பார்த்து ரசிப்பது சந்தோசமாக இருந்தாலும்... குழந்தையோடு குழந்தையாகச் சிரித்து மகிழும் மனைவியைக் காண காண இத்தனை நாள் மறைந்திருந்த தாபம் எல்லாம் இப்போது எழுந்து அவனது மனதில் பேயாட்டம் போட்டது...

ஆனால் தானாக அவளை நெருங்க அவன் மிகவும் யோசித்தான்... 'விலகி போய்விடு' என்று சொல்லிவிட்டு இப்போது எந்த உரிமையில் உறவை யாசிப்பது என்று மனதுக்குள் தவித்துத் தான் போனான் அவன்... அது பற்றி

வெளிப்படையாய் அவளிடம் கேட்கவும் முடியாமல் அவனது மனதை குற்றவுணர்ச்சி போட்டு குடைந்து எடுத்தது...

அதனால் இப்போது எல்லாம் அவனுக்கு மிகவும் கோபம் வந்தது தனது இயலாத நிலையை நினைத்து... ஆனால் அதை மனைவியிடத்தில் வெளிப்படுத்தி விடாமல் இருக்கப் பெருமளவு முயற்சி செய்து அந்த எண்ணத்தை இப்போது வரை காப்பாற்றிக் கொண்டிருந்தான்...

அன்றும் மகள் பொக்கை வாய் திறந்து சிரிக்கும் அழகை ரசித்த சுபிக்ஷா கணவனிடத்தில், "எவ்வளவு அழகா சிரிக்கிறா பாருங்களேன்... அப்படியே சிரிக்கும் போது அச்சு அசல் நீங்களே தான்... ஆனால் இந்தக் கன்னக்குழி என்னைய மாதிரி..." என்று சந்தோசத்துடன் அவள் கூற...

"ப்ச்..." என்று எரிச்சல் பட்டபடி அவன் அங்கிருந்து நகர்ந்தான்...

முகத்தைச் சுளித்துக் கொண்டு செல்லும் கணவனைக் கண்டு திகைத்து தான் போனாள் அவள்... மேலே ஒன்றும் பேசாது குழந்தையைத் தட்டி கொடுத்து தூங்க வைத்தவள் மகளைத் தொட்டிலில் போட்டு விட்டு வந்து,

"தூங்கலையா...?" எதையோ யோசித்தபடி அறைக்குள் இங்குமங்கும் நடந்து கொண்டிருந்த கணவனிடம் கேட்க...

"தூக்கம் வரலை... கொஞ்ச நேரம் தனியா இருக்க விடுறியா..." என்று அவன் கோபம் கொண்டு கத்த...

புதிதாய் கோபம் கொள்ளும் கணவன் அவளுக்குப் புதிதாய் தெரிய குழப்பத்துடன் படுக்கைக்குச் சென்றாள்... கையைக் கண்கள் மீது வைத்து உறங்குவது போல் பாவனைச் செய்தாலும் அவளது கண்கள் லேசாகத் திறந்து கணவனைத் தான் நோட்டமிட்டது அவனுக்கு என்னவானது என்ற கவலையோடு...

தன்னைத் தவிப்புடன் பார்ப்பதும் பின்பு அதே தவிப்புடன் நடப்பதும் என்றிருந்த கணவனின் கண்களில் வழிந்த தாபத்தை அவள் கண்டு கொள்ளாவிட்டால் இத்தனை நாள் அவனுடன் வாழ்ந்ததில் அர்த்தமில்லையே... ஆனாலும் பெண்ணவளுக்குத் தானாக அவனிடத்தில் செல்ல அத்தனை தயக்கம்...

அதற்காக அப்படியே கணவனை விட்டு விடவும் மனமில்லை... வெகுவாக யோசித்தவளுக்கு அந்த எண்ணம் பளிச்சிட படுக்கையில் இருந்து எழுந்தமர்ந்தாள்...

மனைவி எழுந்தமர்ந்தை கண்டும் காணாதது போல் இருந்தான் ஜீவா... அவன் மனதில் மனைவி மீதான தேடல் தீப்பற்றிக் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது...

அவனின் தவிப்பை உணர்ந்தவளாய், அதைப் போக்கும் எண்ணம் அறிந்தவளாய் தனது இனிமையான குரலில் மெல்ல பாடத் துவங்கினாள்... மகள் எழுந்து விடுவாளோ என்கிற பரிதவிப்பும், அதே சமயம் தன்னவனின் தவிப்பை போக்க வேண்டும் என்ற உந்துதலிலும் அவளது குரல் மெல்லமாய் ஒலித்தது...

"நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா

நின்னைச் சரணடைந்தேன்

பொன்னை, உயர்வை, புகழை விரும்பிடும்

என்னைக் கவலைகள் தின்ன தகாதென..."

அவளது பாடலை கேட்டு திரும்பி பார்த்தவனின் கண்கள் பளபளத்தது... தன் மனதை புரிந்து கொண்ட மனையாளின் காதல் அவனை நெகிழ வைக்க அடுத்த நொடி தனது கோபத்தைக் கைவிட்டவனாய் அவளிடத்தில் தன்னை மறந்து சரணடைந்தான் அந்தக் காதல் கணவன்...

இசையாகும்...!!!

## ஸ்வரம் : 30

சுபிக்ஷா எந்த ஒரு கேள்வியும் கேட்காமல் ஜீவாவை ஆரத்தழுவி கொண்டாள்... அணைப்பில் அடங்கியிருந்த இருவரிடத்திலும் எந்தவித பேச்சும் இல்லை.... வெகுநாட்களுக்குப் பின் கிடைத்த அருகாமையில் தங்களின் துணையிடம் தங்களைத் தேட துவங்கினர்...

எப்போதும் மனையாளுக்காக மென்மையைக் கடைப்பிடிக்கும் அவன் இன்று மனதில் எரிந்து கொண்டிருந்த தாபத்தை அடக்கும் வழியறியாது வன்மையாளனாய் மாறிவிட, அவளும் அவனது மனம் அறிந்து தனது மென்மையைக் கைவிட்டு அவனுக்காக வலிமை மிகுந்தவளாய் மாறி போனாள்...

நீண்ட நேரம் தேடிய அவனது தேடல் ஒரு கட்டத்தில் முடிவுக்கு வர அதற்காகக் காத்திருந்தார் போன்று அவர்களது செல்ல மகள் சிணுங்க துவங்கினாள்...

மகளின் பசி அறிந்து வேகமாய் விலகி ஓடிய மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்த ஜீவாவின் மனதிலிருந்த கோபம் எல்லாம் பனியாய் விலகி ஓடி அவள் மீதான காதலே அதிகரித்தது...

குழந்தைக்குப் பசியாற்றித் தூங்க வைத்து விட்டு வந்த மனையாளை மீண்டும் தனது கைகளில் அள்ளி கொண்டவன் அப்படியே அணைத்தபடி கட்டிலில் சாய்ந்து அமர்ந்தான்...

கணவன் பேசாமல் இருப்பதைக் கண்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், "உரிமையோட பொண்டாட்டியை விட்டு கொடுக்க மாட்டேன்னு மட்டும் சொல்ல தெரியுதுல்ல... அதே மாதிரி பொண்டாட்டி கிட்ட உரிமையா எல்லாத்தையும் கேட்டு வாங்க தெரியணும் மாமா..." என்றபடி அவனின் மீசையைப் பிடித்து இழுக்க...

"ஷ்... வலிக்குதுடி..." மகளுக்காக மெதுவாகச் சொன்னவன்,

"அபி உன் கிட்ட சொன்னானா...?" என்று அவளைப் பார்த்து கேட்க...

"அதனால் தானே அபியும், நானும் சேர்ந்து போட்ட ப்ளானை பத்தி உங்க கிட்ட சொன்னேன்..."

அபிமன்யு நல்லவன் என்று தான் சொன்னதை நினைவு கூர்ந்தாள் மனைவியவள்...

"ஓ... நான் அதை யோசிக்கலை..." என்று அசடு வழிந்தான் கணவன்...

"நீங்க எதைத் தான் யோசிச்சீங்க... அன்னைக்கு என் குரலை கேட்டு மயங்கி கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு சொன்னீங்க... அதுக்கு அப்புறம் என்னைப் பார்த்து மயங்கி கல்யாணம் பண்ணியதா சொன்னீங்க..." என்றவள் அந்த இரு நிகழ்வுகளையும் அவனுக்கு நியாபகப்படுத்தினாள்...

"ஆமாம் இல்ல... என்னையும் அறியாமல் அப்பவே உன் கிட்ட விழுந்துட்டேன் போலிருக்கு..." என்று அவன் சிரிக்க...

"அப்ப மட்டுமில்லை இப்பவும், எப்பவும்..." என்று பெருமையாய் சொன்னவள், "ம்... உங்களுக்காக நானே எல்லாத்தையும் யோசிச்சு யோசிச்சு காதலை வளர்த்துக்கிட்டு இருக்கேன்..." என்று அவள் பெருமூச்சு விட...

"நான் என்ன செய்யப் பேபி... நான் எத்தனை தடவை 'ஐ லவ் யூ' சொன்னாலும் சரியா வர மாட்டேங்குதே..." என்றான் பரிதாபமாய் அந்தக் கம்பீரமான ஆண்மகன்...

"போனா போகுது விடுங்க... நமக்கு வராததை எல்லாம் நாம முயற்சி பண்ணக் கூடாது..." என்று மனைவி சொல்ல...

"அதெப்படி நீ கிடைக்க மாட்டேன்னு தெரிஞ்சும் கடைசி நிமிசத்தில் உன்னைத் தூக்கினேனா இல்லையா... முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் பேபி..."

"எதுக்குச் சொன்னதை நீங்க எதுக்குச் சொல்றீங்க..."

அவனது மனைவி தலையில் அடித்துக் கொண்டாள்... அதைக் கேட்டு அவனது சிரிப்பு அதிகமாக அதைக் கண்டு பயந்து போய் அவன் வாயை கை கொண்டு பொத்தியவள்,

"நீங்க சிரிக்கிற சத்தத்தில் அம்மு எழுந்திரிக்கப் போகிறாள்... நானே இப்பத்தான் கஷ்டப்பட்டு என் புருசனை கரெக்ட் பண்ணியிருக்கேன்..." என்றபடி அவள் அவனை அணைத்துக் கொள்ள...

"ஆமாம் பேபி... நீ மட்டும் இந்தப் பாட்டைப் பாடலைன்னா நான் உன்னை நெருங்கியிருக்கவே மாட்டேன்..." என்றவனின் குரல் குற்றவுணர்வோடு ஒலித்தது...

"மனசுக்குள்ள ஒரே குற்றவுணர்வு... உன்னை ரொம்பப் படுத்தி எடுத்துட்டேனோன்னு... உனக்குப் பிடிச்ச சங்கீதத்தைக் கூடப் படிக்க விடாம பண்ணிட்டேன் இல்லையா..." என்றவனைக் கண்கள் மின்ன பார்த்தாள் அவள்...

"நீ மீண்டும் சங்கீதம் படிக்கிறியா...?"

அதைக் கேட்டு அவள் என்ன மாதிரி உணர்ந்தாள் என்று தெரியவில்லை... சங்கீதத்தில் மேற்படிப்பு படிக்க முடியாமல் போனதை நினைத்து அவளுக்குச் சிறு வருத்தம் இருந்த போதும் கணவனது அன்பில் அதைச் சற்று மறந்து தான் இருந்தாள்... அது தான் உண்மையும் கூட...

இப்போது அவனே அவளை அதைப் படிக்கச் சொன்ன போது சந்தோசத்தில் அவளது கண்களில் இருந்து

கண்ணீர் துளிகள் வழிந்தோடியது... அதைக் கண்டு அவன் பதறித்தான் போனான்...

"பேபி..." என்று அவன் அவளது கண்ணீரை துடைக்க...

அவளோ சிரித்தபடி, "தேங்க்ஸ்..." என்றாள் அவன் கன்னத்தில் முத்தமிட்டபடி... அதைக் கண்டு அவன் மனம் சிறிது சமாதானமாகியது...

"நீ என்னைத் தேடி வந்தும் உன்னை விலகி போன்னு சொல்லி உன் மனசை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன் இல்லையா பேபி..." என்றவனைப் பார்த்து அவள்,

"ரொம்ப..." என்று கண்களை விரித்துப் பார்க்க... அதில் மனம் கவர்ந்தவனாய் அதன் மீது தன் இதழை பதித்தான் ஆசையாய்...

"இப்போதும் உன்னைப் படுத்துறேன் இல்லையா..." சற்று முன் அவளைப் படுத்தியதை நினைத்து அவன் தவிப்புடன் கேட்டான்...

"ஐய்யே... இதெல்லாம் படுத்துகிற லிஸ்ட்ல வராது மாமா..." என்று தலையில் அடித்துக் கொண்டாள் மனையாட்டி...

"மக்கு மாமா... எத்தனை தடவை ஹிண்ட் கொடுத்தேன்... நீங்க தான் என்னைப் புரிஞ்சிக்கலை..." என்றவள்,

"அன்னைக்குச் சமையலறையில் வச்சு சொன்னேனே இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகு ஹனிமூன் போகலாமேன்னு, அப்புறம்..." என்று வெட்கப்பட்டவளை அவன் உற்று பார்க்க அதில் மேலும் நாணியவள்,

"உங்க மனைவியையும், குழந்தையையும் பத்திரமா பார்த்துக்க உங்களுக்குத் தெரியாதான்னு கேட்டேனே... உங்களுக்குத் தான் புரியலை..."

"ஐயோ... அருமையான சந்தர்ப்பத்தை மிஸ் பண்ணிட்டேனே... உண்மையில் உன் மாமன் மக்கு தான்டி..." என்று கூறி சிரித்த கணவனின் கம்பீரத்தை ரசித்தவள்,

"என் மாமாவை நான் தான் மக்குன்னு சொல்லலாம்... இது என்னோட ஏகபோக உரிமை... நீங்க எல்லாம் சொல்லக்கூடாது..."

அதைக் கேட்டு அவனுக்குச் சிரிப்பு பீறிட்டது...

"ஆக மொத்தம் என்னை மக்காக்கி பார்ப்பதில் உனக்குத் தான் எத்தனை சந்தோசம்..."

"ஆமாம் பின்ன... இத்தனை ப்ளான் போட்ட என் மாமா ஒண்ணை யோசிக்காம போயிட்டீங்களே... அன்னைக்கு நீங்க சொன்ன மாதிரி எங்கண்ணன் என்னை ஒரு குப்பனுக்கோ, சுப்பனுக்கோ கட்டி கொடுத்திருந்தா என்ன பண்ணியிருப்பீங்க...?"

அவள் சிரித்தபடி கேட்டாலும் அவளது கண்ணில் அடிப்பட்ட வலி தெரிந்தது... அதைக் கண்டு அவனுக்கும் உள்ளம் வலித்தது அன்று தான் பேசிய பேச்சுக்களை நினைத்து...

"சாரி பேபி..." என்று மனதார அவன் மன்னிப்பு கேட்க...

"நமக்குள் மன்னிப்புக்கு அவசியமே இல்லை மாமா..." என்று கூறியவள்,

"ஆனா ஒண்ணே ஒண்ணு... ஒவ்வொரு தடவையும் நீங்க இந்த மாதிரி பேசும் போது எனக்கு ரொம்ப வலிச்சது மாமா..." என்று அவள் வேதனை குரலில் சொல்ல...

அவளின் வேதனை உணர்ந்தார் போன்று அவனது அணைப்பு இறுகியது... ஆனால் மௌனமாக இருந்தான்... ஏனெனில் அவனின் தவறுக்கான பரிகாரம் மன்னிப்பை

தவிர வேறு வார்த்தை அவனிடத்தில் இல்லை... ஆனால் அதைச் சொல்ல அவனின் மனைவி விட மாட்டாள்...

"நீங்க எப்படி இருந்தாலும் எனக்கு உங்களை ரொம்பப் பிடிக்கும்..." என்றவள் மாடிப்படி செல்லும் வழியில் இருக்கும் அவனது புகைப்படப் பிம்பத்தைத் தான் அப்படியே நினைவில் வைத்திருப்பதைச் சொன்னவள்,

"நீங்க சொன்னப்போ நான் நம்பலை... ஆனா இப்போ நம்பறேன்... என் மனசில் நீங்க ஆழமா பதிஞ்சு இருக்கீங்க..."

அவள் சொன்னதைக் கேட்டு அவனது மனம் மிகவும் மகிழ்ந்து போனது... இதை விட அவனுக்கு வேறு என்ன வேண்டும்...

"நீ கேட்ட கேள்விக்கு இப்ப பதில் சொல்கிறேன் கேட்டுக்கோ... உன் அண்ணன் குப்பனையோ, சுப்பனையோ தேர்ந்தெடுத்திருந்தா அடுத்த நொடி நான் அவன் காலில் விழுந்து உன்னைப் பெண் கேட்டுருப்பேன்..." என்று சிரிப்போடு அவன் சொன்னாலும் அதில் ஒருவித தீவிரம் இருந்தது...

அதைக் கேட்டு அவள் காதலாய் அவனைப் பார்க்க அதில் அவனது பார்வையும் மாறிப் போனது... சிறிது நேரம் அவளைக் கொஞ்சி கொஞ்சி மகிழ்ந்தவன்,

"ஆமாம் வலிச்சதுன்னு சொன்னியே எங்கே பேபி...?" என்று குறும்பு குரலில் கேட்டவனின் குறும்பை கவனியாது அவள்,

"இங்கே..." என்று தனது இடது நெஞ்சை சுட்டிக்காட்ட...

"இங்கேயா..." என்றபடி தனது கையை அங்கே கொண்டு சென்றவனின் கையை அவள் பட்டென்று தட்டிவிட்டாள்...

"ச்சு என்ன பேபி..." என்றவனின் கண்ணில் தெரிந்த தாபம் அவளைப் பேச்சற்றுப் போகச் செய்ய... அவளது கணவனோ தனது காரியத்தில் கண்ணாய் இருந்தான்...

இந்த முறை அவனது தேடல் மிக நிதானமாய் இருந்தது அவள் மனம் விரும்பியபடி...

ஒன்பது மாதங்கள் கழித்து...

"பேபி... இப்போ நீ எதுக்கு மும்பைக்கு வரணும்ன்னு அடம்பிடிக்கிற...?" ஜீவா மனைவியைப் பார்த்துச் சத்தம் போட முயன்று இறுதியில் கெஞ்சி கொண்டிருந்தான்...

"அம்மு பேர்த்டேக்கு அம்ருவை கூப்பிட போறிங்க தானே... அதான் நானும் கூட வரலாம்ன்னு சொன்னேன்... இது தப்பா...?"

சுஜீதாவின் முதல் பிறந்தநாளுக்கு அம்ரிதாவை அழைக்க வேண்டும் என்று ஜீவா நினைத்திருந்தான்... இப்போது வேலை சம்பந்தமாக மும்பை கிளம்புவதால் அப்படியே அவளை அழைத்து வர சொல்லலாம் என்று நினைத்திருந்தான்...

"அம்முவை எதுக்கு வீணாஅலைய வைக்க நினைக்கிற...?"

"அவள் எங்கே என் கூட இருக்கிறாள்... எப்போதும் இரண்டு பாட்டிங்க கூட இல்லைன்னா அத்தை கூடத் தான் இருக்கிறாள்... நான் அம்மாங்கிறதே அவளுக்கு மறந்து போயிருக்கும்..."

"இதுக்குத் தான் கூட்டுக் குடும்பம் வேணும்ன்னு சொல்றது... இப்போ பார் உனக்கும் எனக்கும் எந்தத் தொந்திரவு இல்லாம தனிமையை ஒதுக்கி கொடுக்கிறாங்க இல்லையா..." என்றவனின் கைகள் அவளின் மேனியில் கண்டபடி அலைப்பாய...

"முதல்ல கேட்டதுக்குப் பதில்..." என்று அவனது கையை அவள் தட்டிவிட...

"சரி பேபி... நீ சொல்லி நான் எதையாவது மறுத்து இருக்கேன்னா..." என்றவனின் குரலில் 'அது போல் நீயும் மறுக்காதே' என்கிற மறைபொருள் அடங்கியிருந்தது...

அதற்குப் பின் மறுக்க அவளுக்குத் துணிவு இருக்கிறதா என்ன... பாந்தமாய்க் கணவனின் கைகளில் அடங்கினாள்...

மும்பைக்குக் கிளம்பி யஷ்வந்த் வீடு சென்ற போது சுபிக்ஷாவிற்கு மனம் படபடவென அடித்துக் கொண்டது... ஹர்ஷிதாவிடம் பேசுவதற்காகவே அவள் இங்குக் கிளம்பி வந்திருந்தாள்...

அதற்கு நேர்மாறாக ஹர்ஷிதா முகத்தில் எதையும் காட்டி கொள்ளாது இருவரையும் புன்னகையோடு வரவேற்று பேசினாள்... அவள் முகத்தை வைத்து சுபிக்ஷாவிற்கு ஒன்றுமே கணிக்க முடியவில்லை...

ஆண்கள் தங்களுக்குள் பேசி கொண்டிருக்க மெல்ல சுபிக்ஷா ஹர்ஷிதாவிடம், "நீங்க மாமாவை தப்பா புரிஞ்சியிருக்கீங்க..." என்றாள் தெளிவான ஆங்கிலத்தில்...

அதைக் கேட்டு திகைத்து போய் அவளைப் பார்த்த ஹர்ஷிதா சிரித்தபடி, "இருக்கலாம்..." என்க...

"இல்லைங்க... உண்மையா தான் சொல்றேன்... மாமா லவ் சப்ஜெக்ட்ல கொஞ்சம் வீக்... இங்கே பாருங்க எங்களுக்குக் குழந்தை பிறந்து ஒரு வயசாகப் போகுது... இன்னமும் அவங்க என்னை லவ் பண்றாங்களா இல்லையான்னு அவங்களுக்கே தெரியாது... அந்தளவுக்கு லவ் சப்ஜெக்ட்ல சொதப்பி வைப்பாங்க... அப்படிப்பட்டவங்க எப்படி உங்க காதலை புரிஞ்சியிருப்பாங்க..."

அவள் சொன்ன விதம் ஹர்ஷிதாவை யோசிக்க வைத்தது...

"இல்லை ஜீவா உன்னை ரொம்ப விரும்புகிறான்..." என்றவள் அன்று விருந்தில் அவன் தன்னிடம் பேசியதை அப்படியே அவளிடம் கூற...

அதைக் கேட்டு சுபிக்ஷாவினுள் மெல்லிய நாணம் எட்டி பார்த்தது... தன்னவன் தன்னை இந்தளவுக்கு ரசித்திருக்கிறானா என்று...

"பார்த்தீங்களா... இது தான் அவங்க... இவ்வளவு பிரியத்தை வச்சிக்கிட்டு ஐ லவ் யூன்னு மூணு வார்த்தை ஒழுங்கா சொல்ல தெரியாது... இவங்க எப்படி உங்களை, உங்க காதலை புரிஞ்சு காதலிச்சு இருப்பாங்க... அப்படி அவங்களே வந்து உங்க கிட்ட காதலை சொல்லணும்ன்னா நீங்க ஔவையார் மாதிரி கிழவி ஆகியிருப்பீங்க..."

"அது யார் ஔவையார்...?" ஹர்ஷிதா புரியாமல் அவளைப் பார்க்க... ஔவையார் பெருமை பற்றிச் சொன்ன சுபிக்ஷா,

"அவரைப் பத்தி நமக்கு எதுக்குப் பேச்சு... இப்போ நம்ம பேச்சுக்கு வருவோம்... நம்மளை புரிஞ்சிக்காதவங்களுக்காக நாம எதுக்கு நம்ம காதலை வேஸ்ட் பண்ணணும்... அதை நம்மைக் காதலிக்கிறவங்களுக்கு நாம அள்ள அள்ள கொடுக்கலாம் இல்லையா...? கொஞ்சம் யோசிச்சு பாருங்க..." என்ற சுபிக்ஷாவை உற்று நோக்கிய ஹர்ஷிதா,

"எனக்காக இல்லைன்னாலும் உனக்காக யோசிக்கிறேன்... ஒரு பெண்ணாய் உன் மனசு நினைக்கிறது எனக்குப் புரியுது... அன்னைக்கு ஏதோ கோபத்தில் அப்படிக் கத்திட்டு வந்துட்டேன்... ஆனா இப்போ என் மனசில் எந்தக் கோபமும் இல்லை... அதே போல் எந்தக் காதலும் இல்லை..." என்று தெளிவாக உரைத்த ஹர்ஷிதாவை நன்றியுடன் பார்த்தாள் அவள்...

'சும்மாவா இவங்க இவ்வளவு பெரிய தொழிலை பார்க்கிறாங்க...' என்று ஹர்ஷிதாவை நினைத்து

பிரம்மிப்பாய் இருந்தது அவளுக்கு...

வீட்டிற்கு வந்ததும் ஜீவா மனைவியிடம் சந்தேகமாக, "நீ ஹர்ஷி கிட்ட பேசுறதுக்காகத் தான் இங்கே வந்தியா...?"

"ஆமாம் அதுக்கு என்ன...?" என்று அவள் கேட்ட தோரணையில் அவன் அப்படியே சரண்டர்...

"இல்லை சும்மா தான் கேட்டேன் பேபி..." என்றவனின் குரலில் குழைவு வந்திருந்தது...

"அது அந்தப் பயம் இருக்கணும்..." ஆள்காட்டி விரல் நீட்டி அவனைப் போலியாய் அவள் மிரட்ட...

"அப்படியே ஆகட்டுங்க மேடம்..." என்றவன் அவள் நீட்டிய கையைப் பிடித்து இழுத்தான் தன்னை நோக்கி...

அவனது நெஞ்சில் சுகமாய் விழுந்தபடி அவள் தான் ஹர்ஷிதாவிடம் பேசியதை அப்படியே கூற...

"ஆனாலும் நீ உன் புருசனை இப்படி டேமேஜ் பண்ணக் கூடாது பேபி..." என்றான் பரிதாபமாய்...

அதைக் கேட்டு அவள் சிரிக்க... "சிரிக்கவா செய்ற உன்னை..." என்றவன் அதன் பின் அவளைப் பேசுவதற்குக் கூட வாய் திறக்க விடவில்லை...

பௌர்ணமி நிலவின் ஒளியில் ஒளிர்ந்த தாஜ்மகாலை காண கண் கோடி வேண்டும்... கண்களை அகல திறந்து அதைப் பிரமித்துப் போய்ப் பார்த்துக் கொண்டு இருந்த மனையாளை காண காண ஜீவாவிற்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

மகளைக் காண்பதற்காகச் சென்னை செல்ல துடித்த மனைவியை வலுக்கட்டாயமாக இங்கே அழைத்து வந்திருந்தான் அவன்... அன்று டெல்லி வந்த போது இங்கு

அழைத்து வருவதற்குத் தான் எண்ணியிருந்தான்... இடையில் பல குழப்பம் நிகழ்ந்து அவர்களுக்குள் பிரிவு நேர்ந்துவிட்டது...

அதன் பின் வெகு நாட்களாக அவனின் மனதை உறுத்தி கொண்டே இருந்தது இந்த விசயம்... மனைவி வாயிலாக அவளது விருப்பத்தை அறிந்தவன் அதைச் செயலாற்ற முடியாமல் போனதை எண்ணி வருத்தம் கொண்டான்...

அதற்கான சந்தர்ப்பம் இந்த முறை அமையவும் அதை அப்படியே பிடித்துக் கொண்டு அவளை இங்கு அழைத்து வந்துவிட்டான்...

"மாமா... உங்களுக்குள்ள இவ்வளவு பெரிய ரசனை ஒளிஞ்சிக்கிட்டு இருக்கிறதை என்னால் நம்ப முடியலை..."

தாஜ்மகால் மீதிருந்த பார்வையை அகற்றாது அவள் உரைக்க...

"பிடிச்சியிருக்கா பேபி..." அவளது காதுக்கருகில் அவனது குரல் காதலோடு ஒலிக்க...

அதில் திடுக்கிட்டு போய் அவனைத் திரும்பி பார்த்தவள் அவனது கண்ணில் வழிந்த காதலில் பேச்சற்று போனாள்...

"பேபி..." அவன் உலுக்கவும் தன்னுணர்வு அடைந்தவள்,

"ரொம்ப ரொம்ப..." என்றுரைத்தவள்,

"தாஜ்மகால் இல்லை... என் மாமாவை..." என்று கூறியபடி அவனை அணைத்து கொண்டாள் காதலோடு...

அவளது நாடியில் கை வைத்து முகத்தை நிமிர்த்தியவன் தனக்கான அவளது காதலை அவளது கண்ணில் தேடி கண்டுபிடித்தவன்,

"நீ என் காதலை உணருகிறாயா பேபி... என் கண்ணிலும் உனக்கான காதல் தெரிகிறதா...?"

தன்னைப் போல் தானே அவளும் தன்னிடம் எதிர்பார்ப்பாள் என்ற நினைவில் அவன் மனம் பரிதவித்துப் போனான்...

இப்போதும் தனக்காக யோசித்து யோசித்துச் செயலாற்றும் கணவன் அந்தக் காதலை வாய் வார்த்தையாய் கூற முடியாமல் தடுமாறுவதை உணர்ந்தவளாய்,

"ம்... தெரியுது மாமா... அந்த வானளவுக்குப் பரந்து, விரிந்து..." என்று தன் இரு கைகளையும் அகல விரித்து அவள் கூற... அவன் சந்தோசமாய் அவளை அணைத்துக் கொண்டான்...

மனைவி தன்னைப் புரிந்து கொண்டால் போதும் என்றே அவன் நினைத்தான்...

அன்றிரவு விடுதி அறையில் ஜீவா தன் மனைவியிடம், "அன்னைக்கு இந்த ஹோட்டல் ரூமில் தான் உன்னோட காதலை தொலைத்தேன்... அப்போ எந்தளவுக்கு வேதனைப்பட்டேன் தெரியுமா..."

அன்றைய நாள் நினைவில் முகம் கசங்க அவன் நின்றிருந்தான்... அவனது வேதனையை உணர்ந்தவளாய் அவளும் மௌனமாய் அவன் நெஞ்சில் சாய்ந்து நின்றாள்...

மௌனமான அந்த அமைதி அவனின் மனக்காயத்தைச் சற்று ஆற்றியது என்னவோ உண்மை...

"எப்போதுமே ஒரு பொருளை தொலைச்ச இடத்தில் தான் தேடணும்ன்னு சொல்வாங்க..." என்றவனின் பார்வையிலேயே தெரிந்தது அவனது தேடல் எந்த மாதிரி என்று...

"மாமா... இது போங்காட்டம்... இடையில் நம்மிடையே எத்தனையோ தேடல் நடந்து முடிஞ்சிருச்சு..." என்று அவள் வாய் பொத்தி நமட்டுச் சிரிப்பு சிரிக்க...

"இந்தத் தேடல் சம்திங் ஸ்பெசல் பேபி..." என்றவன் தனது கைகளில் மனையாளை அள்ளி எடுத்துப் படுக்கையில் சரிந்து அவளுள் புதைய ஆரம்பிக்க...

"மாமா... ஒரு சந்தேகம்..."

"த்ச்சு... எந்த நேரத்தில் சந்தேகம் கேட்கிற..." என்று சலித்துக் கொண்டவன் தன் தேடலை மட்டும் நிறுத்தவில்லை...

"அன்னைக்குச் சர்ப்ரைசா எங்கேயோ கூட்டிட்டு போறேன்னு நீங்க சொன்னது இந்தத் தாஜ்மகாலை பார்க்கத்தானா...?"

"ஆமாம்டி என் மக்கு பொண்டாட்டி..." என்றவன் அதற்கு மேல் அவளைப் பேச விடவில்லை...

கணவனின் காதலை உணர்ந்தவளாய் பாவையவள் அவனுள் புதைய துவங்கினாள் சுகமாய்...

சொன்னது போல் சுஜீதா பிறந்தநாளுக்கு யஷ்வந் தனது குடும்பத்துடன் வந்திருந்தான்... கூடவே ஹர்ஷிதாவும்... அப்படியே தமிழ்நாட்டைச் சுற்றி பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்திருந்தனர் நால்வரும்...

சுஜீதா கைப்பிடித்துக் கேக் வெட்டிய ஜீவா, சுபிக்ஷா தம்பதியினரை பார்க்கும் போது அபிமன்யு, ஹர்ஷிதா இருவரின் காதல் கொண்ட நெஞ்சங்களிலும் சிறு வலி தோன்றத்தான் செய்தது அவர்களையும் அறியாமல்...

அபிமன்யு தன்னைச் சுதாரித்துக் கொண்டு பார்வையைத் திருப்பினான்... அதே நேரம் ஹர்ஷிதாவும் தனது

பார்வையைத் திருப்பினாள்... இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்... அபிமன்யுவின் முகம் அவளது மனதில் பதியவில்லை...

ஆனால் அவனுக்கு அவளது சோக முகம் மனதில் அப்படியே பதிந்தது... அவளைப் பற்றி அவனும் அறிந்திருந்தான்... தன்னைப் போல் ஒருத்தி என்று எண்ணி முதலில் அவள் மேல் பரிதாபம் வந்தது... அவனையும் அறியாது அவனது விழிகள் அவளையே சுற்றி சுற்றி வந்தது...

மீண்டும் மீண்டும் அவளைப் பார்க்க பார்க்க ஏதோ ஒருவித ஈர்ப்பு தோன்றியது அவனுள்... ஆனால் அதைத் தேவையில்லாத ஒன்று என்று புறம் தள்ளினான் அப்போதைக்கு...

அடுத்தடுத்து வந்த நாட்களில் அபிமன்யுவிற்கு ஹர்ஷிதாவின் அழகு முகத்தை மறக்க முடியவில்லை... இது வெறும் ஈர்ப்பா... இல்லை அதையும் தாண்டிய ஒன்றா என்று அவனால் யோசிக்க முடியவில்லை...

ஏனெனில் காதல் ஒரு முறை தான் வரும் என்று அவன் தன்னைப் போட்டுக் குழப்பிக் கொண்டான்... மேலும் மேலும் அதிகரித்த குழப்பத்தைத் தாங்க முடியாது அவன் ருத்ரஸ்ரீயிடம் ஆலோசனை கேட்க அதைக் கேட்டு சந்தோசப்பட்டவள்,

"எல்லாம் சரியா வரும் அபி... ஏன் அபி இரண்டாம் முறை காதல் வர கூடாதா...? காதல் என்பது வெறும் உடல் கவர்ச்சியில் மட்டும் வர்றது கிடையாது... எது நிம்மதி தருகிறதோ அது தான் காதல்... உன் நிம்மதி ஹர்ஷிதாவிடம் இருக்குமேயானால் நீ அவளைக் கல்யாணம் பண்ணிக்கிறதில் எந்தத் தப்பும் இல்லை... நீயும் எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கப் போற..."

"இது சரி வருமா பெரியம்மா...?"

"எல்லாம். சரி வரும் அபி... ஜீவா கிட்ட சொல்லி பேச சொல்கிறேன்..."

"ஜீவா கிட்டன்னா நானே பேசிக்கிறேன்..." என்ற அபிமன்யு அடுத்து பார்த்த முதல் வேலை அது தான்...

அதைக் கேட்ட ஜீவா சற்று யோசித்தான்... ஏனெனில் அந்தஸ்து பார்க்கும் ரிஷ்வந்த் இதற்கு ஒத்துக் கொள்ள வேண்டுமே என்று...

"அதெல்லாம் தீபிகா அக்காவை வச்சு அவங்களைச் சமாளிச்சிக்கலாம்..." என்ற மனையாளை முறைக்க முயன்று தோற்றுப் போனான் ஜீவா...

"சரி அபி பேசி பார்க்கிறேன்..." என்றான் அரை மனதாக...

"அபி... உங்களுக்கு இப்படி ஒரு அழகான மனைவி கிடைக்கணும்ன்னு தான் இத்தனை நாள் காத்திருந்தீங்க போல... உண்மையில் நீங்க கொடுத்து வச்சவங்க தான்..." என்று அவள் கூற...

அதைக் கேட்டு அபிமன்யு முகம் மலர்ந்தது என்றால், ஜீவாவின் முகம் கடுகடுவென்று ஆனது...

அபிமன்யு விடைப்பெற்று கிளம்பி செல்ல... சுபிக்ஷா கணவன் புறம் திரும்பி, "ஹர்ஷி நல்ல சாய்ஸ் தான் இல்லையாங்க..." என்க...

"ஹர்ஷி அழகு என்பதற்காக நீ அழகில்லைன்னு உன்னை நீயே தாழ்த்திக்குவியா...? என்ன பேசறோம்ன்னு யோசிச்சு பேச மாட்டியா..." கோபத்துடன் அவன் சீற...

அவனது அந்தக் கோபத்திலும் தன் மீதான காதலை கண்ட சுபிக்ஷாவின் கண்கள் கலங்கியது...

"உண்மை அது தானே மாமா..."

"சுபி..." என்று அவன் அவளை அதட்ட...

"நீங்க தான் நான் என்னமோ உலகத்தில் இல்லாத பொண்ணுங்கிற மாதிரி பில்டப் கொடுக்கிறீங்க... ஆனால் நிஜம் அது தானே... இதைத் தான் காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுன்னு சொல்வாங்க..."

கிண்டலாய் கூறிய மனையாளை கண்டு, "இது தான் சாக்குன்னு என்னை நீ காக்கான்னு சொல்றியா... உன்னை..." என்று அவன் அவள் காதை பிடித்துத் திருக வர...

அவளோ அவன் கையில் அகப்படாமல் ஓடினாள்...

இருவரது சிரிப்பொலியும் கேட்டு வீட்டில் இருந்தவர்கள் நிறைவாய் பார்த்திருந்தனர் இருவரையும்...

மனதில் உள்ளதை பகிர்ந்து கொள்ளத் தெரியாத சுபிக்ஷாவும், எப்போதும் கடுமையுடன் இருக்கும் ஜீவாவும் இன்று சிரிப்பும் சந்தோசமாய் இருப்பதற்கு அவர்களது காதல் தான் காரணம் என்பதை அவர்கள் உணர்ந்தே இருந்தனர்...

இனி இந்தச் சந்தோசம் அவர்களது வாழ்வில் என்றும் நிலைத்திருக்கும்...

ஜீவா சொன்னது போல் யஷ்வந்த் மூலம் அபிமன்யுவிற்காகப் பேசினான்...

"ஹர்ஷியை நல்லா புரிஞ்சிக்கிட்டவன் அவளைக் கல்யாணம் பண்ணினால் அவள் வாழ்க்கை சந்தோசமா இருக்கும்..." என்று யஷ்வந்த் கூறினாலும் முதலில் சம்மதிக்காத ரிஷ்வந்த் பிறகு எல்லோரின் வற்புறுத்தலின் பேரில் சம்மதித்தான்...

அவனைச் சம்மதிக்க வைப்பது கூடக் கஷ்டமாக இல்லை... ஆனால் ஹர்ஷிதாவை சம்மதிக்க வைப்பது தான் பெரும்பாடாக இருந்தது... திருமணமே வேண்டாம் என்று மறுத்தவளை அதட்டி, உருட்டி, மிரட்டி சம்மதிக்க வைத்தனர்...

அடுத்து வந்த ஒரு மாதத்தில் அபிமன்யு, ஹர்ஷிதா திருமணம் கோலாகலமாய் நடந்தது... மனமே இல்லாமல் மண மேடையில் அமர்ந்திருந்த அவளைக் கண்டு அபிமன்யுவிற்குப் பாவமாய் இருந்தது...

அலைக்கடலாய் கொந்தளிக்கும் அவளின் மனதை உணர்ந்தவனாய் அவளது கரத்தை அவன் ஆறுதலாய் அழுத்தி பிடிக்க... அதில் திடுக்கிட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தவள் அவனது கண்ணில் தோன்றிய ஏதோ ஒரு உணர்வில் தன் மனம் சமன்படுவதை உணர்ந்து திகைத்து தான் போனாள்...

"கவலைப்படாதே... உன்னை எந்த விதத்திலும் நான் தொந்திரவு செய்ய மாட்டேன்..." புரிதலோடு கூறியவனைக் கண்டு அவளது மனம் நிம்மதி அடைந்தது...

அந்த நிம்மதி பிற்காலத்தில் காதலாக மாறும் என்று நம்பிக்கை கொண்டான் அபிமன்யு... முதலில் தவற விட்டது போல் அவன் ஹர்ஷிதாவை தவற விட மாட்டான்... அதை உணர்த்தும் பொருட்டு அவனது கைப்பிடி இறுகியது...

என்னே அதிசயம்... அதில் அவளது காயம் கொண்ட மனம் சற்று ஆறுதல் அடைந்தது... இனி அவர்களது வாழ்க்கை நல்ல புரிதலுடன் செல்லும் என்பதில் எந்த ஐயமும் இல்லை...

அன்று கச்சேரி ஒன்றுக்கு சுபிக்ஷாவை பாட கேட்டு சபாவினர் வந்திருந்தனர்... கணவனைக் கேட்காது அவளால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை... சும்மாவே தாம்தூம் என்று குதிப்பவன் அவள் கணவன்...

நல்லவேளை அந்நேரம் அவனே அங்கு வந்தான்... என்ன என்று விவரம் விசாரித்தவன் அதற்குச் சரியென்று சம்மதிக்கச் சுபிக்ஷாவிற்கு மயக்கம் வராத குறை தான்...

"மாமா... சும்மா கலக்குறீங்க போங்க..." அறைக்குள் வந்ததும் அவனைக் கொஞ்சி கொஞ்சி கூத்தாடினாள் அவனது முடிவு கண்டு...

"நீ பாடுறதில் எனக்கு விருப்பம் இல்லாமல் இல்லை... அன்னைக்கு நீ கச்சேரிக்கு கிளம்பி போன இல்லையா... அந்தக் கச்சேரிக்கு நானும் வந்திருந்தேன்..." என்றவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தவள்,

"இன்னும் என்னவெல்லாம் எனக்குத் தெரியாம மறைச்சு வச்சியிருக்கீங்க... சொல்லுங்க... சொல்லுங்க..." என்று ஆவலுடன் கேட்க...

"அன்னைக்கு அத்தனை வேலை காத்துக்கிட்டு இருந்த போதும் எல்லாத்தையும் கேன்சல் பண்ணிட்டு உன் கச்சேரிக்கு வந்தேன்... அந்தளவுக்கு உன்னோட குரல் என்னை ஈர்த்தது..." என்றவனைக் காதலோடு அவள் பார்த்திருந்தாள்...

"அங்கே இரண்டு பசங்க..." என்றவன் முகம் கோபத்தைத் தத்தெடுத்தது... அதைக் கண்டு அவளது புருவம் சுருங்கியது யோசனையாக...

"ஒருத்தன் உன் அழகை வர்ணிச்சு உனக்காக வந்ததா சொன்னான்... எனக்கு வந்த ஆத்திரத்தில் அந்த இடத்திலேயே அவனைக் கொன்னு போட்டிருப்பேன்... இருக்கும் சூழ்நிலை உணர்ந்து அமைதியா வந்துட்டேன்..."

கணவனது காதல் மேலும் மேலும் அவளைச் சுனாமியாய்த் தாக்கியது... அதில் அவளும் சுகமாய்க் கரைந்து தான் போனாள்...

"நீ எனக்கு மட்டுமே உரியவள் பேபி... கண்டவனும் இப்படிப் பேசுவதற்கு என் மனசு இடம் கொடுக்கலை... அதனால் தான் மேடையில் பாட வேண்டாம்ன்னு சொன்னேன்..."

"அட மக்கு மாமா... என் மனசில் நீங்க மட்டும் தான் இருக்கீங்க... நீங்க எங்கே இருந்தாலும் என் மனசும், கண்ணும் உங்களை மட்டும் தான் தேடும்..." என்றவள் கணவன் மனம் புரிந்து அணைத்து கொண்டாள்...

அடுத்து வந்த மாதத்தில் கச்சேரிக்கான நாளும் வந்தது...

"நீங்க எப்போ வருவீங்க...?" சுபிக்ஷா கணவனிடத்தில் கேட்டு கொண்டிருந்தாள்...

ஜீவா மும்பை சென்றிருந்தான்... நேற்று வருவதாக இருந்தவன் இதுவரை வரவில்லை...

"நீ கச்சேரி பண்ணும் போது நான் அங்கே இருப்பேன்..." என்று அவன் அவளைச் சமாதானப்படுத்த, அரைக் குறை மனதோடு அவள் கிளம்பி சென்றாள் கச்சேரிக்கு...

பாடி கொண்டே சுபிக்ஷாவின் கண்கள் கணவனைத் தேடியது... அவனுக்கு என்று ஒதுக்கப்பட்ட இருக்கையில் அவனைக் காணாது அவளது மனம் சோர்ந்தது... ஆனாலும் அவன் வந்துவிடுவான் என்று நம்பிக்கை கொண்டு காத்திருந்தாள்...

அவளையும் அறியாது அவளது வாய் அந்தப் பாடலை பாடியது மனதின் ஏக்கத்தை மறையாது...

"அலைபாயுதே கண்ணா

என்மனம் அலைபாயுதே

ஆனந்த மோகன வேணுகானமதில்

அலைபாயுதே கண்ணா

என்மனம் அலைபாயுதே

உன் ஆனந்தமோகன வேணுகானமதில்

அலைபாயுதே கண்ணா ஆ ஆ"

அன்று அவள் இந்தப் பாடலை பாடிய போது அவளது மனதில் எந்தக் கண்ணனும் இல்லை... ஆனால் இன்று அவளது நெஞ்சில் அவளது கண்ணனே நீக்கமற நிறைந்திருந்தான்...

அவனைக் காணாது கலங்கிய விழிகளைச் சிமிட்டி சரி செய்து கொண்டு நிமிர்ந்தவள் பார்வை வட்டத்தில் அவளது மனம் கவர்கள்வன் அவளது கணவன் விழுந்தான்... அப்போது தான் வந்திருந்தான் போலும்...

வேஷ்டி, சட்டையில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கம்பீரமாகக் கால் மேல் கால் போட்டபடி அந்த மாயக்கண்ணனை போல் மயக்கும் புன்னகையுடன் அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான் அவளது கணவன்...

தன்னைக் கண்டதும் பூவாய் மலர்ந்த மனையாளின் முகத்தை அள்ளி பருகுவது போல் பார்த்திருந்தான் அவன்... எத்தனை பேர் தன் மனைவியைச் சுற்றியிருந்த போதும் அவள் தேடுவது தன்னை மட்டும் தான் என்பதை உணர்ந்தவன் மனதில் 'இவள் என்னவள்' என்ற கர்வம் தானாய் வந்து ஒட்டி கொண்டது... அவனது இந்தக் கர்வம் தானே அவனுக்கு அழகு...

கம்பீரமான அவனது கர்வத்தை ரசித்தபடி பாடி கொண்டிருந்த சுபிக்ஷாவின் மனதில் காதல் அலை அலையாய் அடித்துக் கொண்டிருந்தது சுகமாய்... இதமாய்...

மௌனமான காதல் அவனுடையது... அதில் ஒளிந்திருக்கும் அன்பை அவளால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்...

ஜீவாவின் காதல் சப்தமில்லா ஸ்வரமாய் இருந்த போதும் அதை இன்னிசையாய் மாற்றும் வித்தையை அவனது மனைவி மட்டுமே அறிந்திருந்தாள்...

சப்தமில்லா ஸ்வரங்கள் அழகிய இன்னிசையானது இங்கே...!!!

முற்றும்...!!!